# சித்த மருத்துவம்

தொகுதி - 4 : வாதம் தொடர்பான நோய்கள்
பகுதி - 2





தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னை-600 005.

# சித்த மருத்துவம்

## தொகுதி-4 : வாதம் தொடர்பான நோய்கள்

## பகுதி-2

மரு. வீ.சுப்பிரமணியன்

தமிழ் வளர்ச்சிக் கழகம்
சென்னைப் பல்கலைக்கழக வளாகம்
சென்னை - 600 005

2007

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

சென்னைப் பல்கலைக்கழக வளாகம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நிறுவனர்
திரு தி.சு. அவினாசிலிங்கம்

தலைவர்
டாக்டர் வா.செ. குழந்தைசாமி

துணைத் தலைவர்கள்
டாக்டர் நா. மகாலிங்கம்
டாக்டர் ச.ப. தியாகராஜன்
டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

செயலாளர்
டாக்டர் ப. அர. நக்கீரன்

தொகுப்பாசிரியர்
திரு மா. மதியழகன்

தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு
முதற் பதிப்பு 2007


பதிப்புரிமை உடையது


விலை ரூ. 225/-

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்
சென்னை - 600 014.

## Bibliographical Data

| | | |
|---|---|---|
| Name of the Book | : | Siddha Maruttuvam Vol.4: Vatham Totarpana Noikal, Part -2 |
| Author/Editor | : | Dr. V. Subramanian |
| Edition | : | First - 2007 |
| Copy Right | : | Tamil Valarchi Kazhagam |
| Language | : | Tamil |
| Subject | : | Siddha Medical system |
| Pages | : | xv +373 |
| Price | : | Rs. 225/- |
| Paper | : | Maplitho |
| Size | ; | Double Crown |
| Binding | : | Deluxe |
| Point | : | 10 Pt |
| Wrapper Design | : | Sivagami Printographics |
| Published by | : | Tamil Valarchi Kazhagam<br>University Building<br>Chepauk, Chennai- 600 005.<br>Ph: 25365440 |
| Printed by | : | Pavai Printers Pvt. Ltd.<br>J.J. Khan Road, Royapettah.<br>Chennai-600 014.<br>Ph. 28482441, 28482973 |

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| முகவுரை | ... | vii |
| முன்னுரை | ... | ix |
| Introduction | ... | xiii |
| 1. சூலை நோய் | ... | 1 |
| 2. குன்மம் | ... | 25 |
| 3. நீரிழிவு நோய் | ... | 87 |
| 4. வெள்ளை நோய் | ... | 163 |
| 5. நீரினை அருக்கல் நோய்கள் | ... | 257 |
| 6. பெருவயிறு நோய் | ... | 305 |
| சொல்லடைவு | ... | 343 |

# முகவுரை

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டு வரும் சித்த மருத்துவ நூல் வரிசையில் இந்நூல் வாதம் (வளி) தொடர்பான நோய்களைப் பற்றிய நான்காம் தொகுதியின் இரண்டாம் பகுதியாகும்.

மனித உடலில் உள்ள வாதத் (வளித்) தாதுவின் மாறுபாட்டால் தோன்றும் பெரிய நோய்களாக சூலை, குன்மம், நீரிழிவு, வெள்ளை, நீரினை அருக்கல், பெருவயிறு என்பன அடையாளம் காணப்பட்டு, அவற்றின் குறிகுணங்களும் அவற்றிற்கான மருந்து வகைகளும் சித்த மருத்துவ நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் தொகுத்து, வகைப்படுத்தி, எளிய முறையில் தெளிவாக இந்நூலில் தரப்பட்டுள்ளன.

அரசு சித்த மருத்துவக் கல்லூரியின் முதல்வராகவும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறையின் இணை இயக்குநராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் மரு. வீ. சுப்பிரமணியன் அவர்கள். அவர் தற்பொழுது ஸ்ரீ சாயிராம் சித்த மருத்துவக் கல்லூரியின் சிறப்பு மருத்துவத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மரு. வீ. சுப்பிரமணியன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவர். அவர் எழுதிய "சித்த மருத்துவம் தொகுதி-6: கபம் தொடர்பான நோய்கள்", "தொகுதி-4: வாதம் தொடர்பான நோய்கள், பகுதி-1" ஆகிய இரு நூல்களையும் கழகம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. தற்போது அன்னாரின் மூன்றாவது நூலான "வாதம் தொடர்பான நோய்கள், பகுதி-2" வெளி வந்துள்ளது. கழகம் அவருக்குப் பெரிதும் நன்றி பாராட்டிக்கொள்கின்றது.

இந்நூலை எழுதுவதில் ஆசிரியருக்கு உறுதுணையாக இருந்தவர் அவரது துணைவியார் மரு. க. இராஜேஸ்வரி அவர்கள். இவரும் கழகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். இவரது "சித்த மருத்துவம் தொகுதி-5: பித்தம் தொடர்பான நோய்கள்" என்னும் நூலையும் கழகம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. மரு.க. இராஜேஸ்வரி அவர்களுக்கும் கழகம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

கணினியில் நூலை வடிவாக்கம் செய்த திரு க. செல்லதுரை, அச்சிட்ட பாவை அச்சகத்தார் ஆகியோரும் நன்றிக்குரியராவர்.

மக்களிடையே மருத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளில் ஏற்கனவே கழகம் வெளியிட்ட மருத்துவ நூல்கள் பெற்ற வரவேற்பை இந்த நூலும் பெறும் என்று எதிர்பார்க்கின்றோம்.

வா. செ. குழந்தைசாமி
தலைவர்
தமிழ் வளர்ச்சிக் கழகம்

# முன்னுரை

வாதம் (வளி), பித்தம் (அழல்), கபம் (ஐயம்) என்னும் மூன்று உயிர்த்தாதுக்களின் மாறுபாட்டால் ஏற்படுவதே நோய். வாதம் பற்றிய அடிப்படைத் தத்துவம், வாதத்தின் மாறுபாட்டால் ஏற்படும் நோய்களின் வகைகள், அவைகளுக்கான பொதுவான மருத்துவ முறைகள் முதலானவை, "சித்த மருத்துவம் தொகுதி-4: வாதம் தொடர்பான நோய்கள் பகுதி-1" இல் விளக்கப்பட்டுள்ளன.

உடலின் நாடி நடையில் வாதத்தின் கூறு 4 பங்கு. அதேபோல் நோய்களின் எண்ணிக்கையும் 4 பங்காகும். அதாவது எவ்வாறு வாத,பித்த, கப நாடி நடை 4:2:1 என்ற விகிதத்தில் அமைந்துள்ளதோ, அவ்வாறே வாத, பித்த, கப நோய்களின் எண்ணிக்கையும் அதே விகிதத்தில் அதாவது 80,40,20 என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

காற்று பூதமும், ஆகாய பூதமும் கலந்த வாதம் என்னும் உயிர்த்தாது உடலில் நுண்தொழில்களைப் புரியும் தன்மை கொண்டதால், அதன் மாறுபாடு உடலில் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. எனவேதான் வாதத்தின் மாறுபாட்டால் ஏற்படும் நோய்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது. இவை பற்றிய விளக்கம் வாதம் தொடர்பான நோய்களின் முதல் பகுதியில் கூறப்பட்டாலும், வாத நாடி நடை மீறி நடக்கும்போது ஏற்படும் சில முக்கிய நோய்கள் பற்றிய விரிவான விளக்கத்தை அதில் கூற முடியவில்லை.

எனவேதான் அத்தகைய நோய்கள் பற்றிய விளக்கங்களும் அவற்றின் தனி மருத்துவ முறைகளும் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. சூலை, குன்மம், நீரிழிவு, வெள்ளை, நீரினை அருக்கல் நோய்கள், பெருவயிறு ஆகிய நோய்களின் விளக்கங்களையும், பல்வேறு நூற்களில் கூறப்பட்டுள்ள அந்நோய்களுக்கான மருத்துவ முறைகளையும் ஒரே நூலில் தெரிந்து கொள்ளுமாறு இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நோய்க்கும் தனி மூலிகை மருத்துவம் முதல் பல்வேறுபட்ட பெரிய மருந்துசெய் முறைகளும் இங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

குணபாடம் மூலிகை, குணபாடம் தாது சீவ வகுப்பு, சித்த வைத்தியத் திரட்டு போன்ற நூல்களில் கூறப்படும் மருத்துவ முறைகளைச் சித்த மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் மூன்றாம் ஆண்டு பாடமாகப் பயில்கின்றனர். அவர்கள் இறுதியாண்டில் 'சித்த மருத்துவம்-பொது' என்னும் பாடத்தில் நோய்கள் பற்றியும் நோய்க்கான சிகிச்சை முறைகள் பற்றியும் பயிலுகின்றனர். அது சமயம் அவர்கள் மூன்றாமாண்டு படித்த குணபாடம் மற்றும் மருந்து செய்முறைகளில் உள்ளவற்றை நோய்க்குத் தக்கவாறு எடுத்துக் கையாள வேண்டியது அவசியம். எனவேதான் இந்நூலில் அவையும் சேர்த்துத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவை தவிர ஆத்ம இரட்சாமிர்தம் என்னும் வைத்திய சார சங்கிரகம், சரபேந்திரர் வைத்திய முறைகள் போன்றன அக்கால மன்னர்களின் உதவியுடன் அவர்கள் காலத்தில் இருந்த வைத்தியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு எழுதப்பட்ட நூல்களாகும். அவைகளில் கூறப்பட்ட பல முக்கிய மருந்து செய் முறைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் மருத்துவ மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் பெரிதும் பயனடைவர். சித்த மருத்துவம் கற்பவரும், ஏனையோரும் ஒரு நோய்க்குக் கூறப்பட்ட பல்வேறுவகை மருந்துகளைப் பற்றிய அறிவைப் பெறமுடியும்.

நீரிழிவு நோய் தற்பொழுது இந்தியாவில் அதிகரித்து வரும் நிலையில், அதற்குண்டான மருந்துகள் பற்றிய சித்த மருத்துவக் குறிப்புகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்லாது, இங்கு கூறப்பட்டுள்ள எளிய மருத்துவக் குறிப்புகள் பொது மக்களுக்கும் பயன் உடையதாக அமையும்.

அவ்வாறே மற்ற நோய்களுக்கும் மருத்துவ முறைகள் கூறப்பட்டுள்ளன. எனவே இந்நூல் பயனுள்ள ஒரு தொகுப்பு நூலாக அமைந்து, பல்வேறுபட்ட மக்களுக்கும் பயனளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை எழுதுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும், முன்னாள் துணைவேந்தரும், கல்வியாளருமான முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களுக்கும் செயலாளர் முனைவர் ப. அர. நக்கீரன் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சித்த மருத்துவம்-பொது' என்ற இறுதியாண்டு பாடத்தை ஏறக்குறைய 30 வருட காலமாக சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் போதித்து வருபவர் என்னுடைய துணைவியார் மரு. பேராசிரியர் க. இராஜேஸ்வரி அவர்கள். அவருடைய ஆலோசனைகளும், மாணவர்களுக்காக அவர் தயாரித்த பல பாடக் குறிப்புகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அதன் பொருட்டு அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் தொகுப்பதற்கு உதவிபுரிந்த தமிழ் வளர்ச்சிக் கழகத் தொகுப்பாசிரியர் திரு மா. மதியழகன் அவர்களுக்கும், கணினியில் நூலை வடிவமைக்கத் துணைபுரிந்த திரு க. செல்லதுரை அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரு. வீ. சுப்பிரமணியன்

# Introduction

As per Siddha System of Medicine diseases are caused by the changes that occur in the normal functioning of Vatha, Pitha and Kaba (Vali, Azhal and Iyam). The nature of Vatha and its characters, the diseases caused by its abnormality and the general treatment of all Vatha diseases are explained in the 4$^{th}$ volume of "Siddha Maruthuvam-Vatham Thodarbana Noigal-Part I".

The life factors Vatha, Pitha and Kaba are felt in the pulse of the living normal human body in the proportion of 4:2:1. In the same ratio, diseases also occur in different systems of human body. The number of Vatha diseases are 80, while the Pitha diseases are 40 and the Kaba diseases are 20 in number. Thus the ratio of diseases are equal to the ratio of pulse in the human body.

Vatha is a life force formed by Vayu and Akash Bhootha or elements. The subtle functioning Vatha in the body caused more number of diseases when it gets deranged. Though all the Vatha diseases and its general treatment where dealt with in Part I of the Volume 4 "Siddha Maruthuvam-Vatham Thodarbana Noigal", some important diseases, in which Vatha Naadi is excess, are needed further

explanations in the aspect of classification, signs and symptoms and treatment of their own.

Hence in Part II of the 4th volume, the diseases, such as Soolai, Gunmam, Neerizhivu, Vellai, Neerinai Arukkal Noigal and Peruvayiru, and their treatment are explained separately in detail. In the treatment aspect, medicines mentioned in different literatures were gathered and brought under each heading. Medicines of different nature, (i.e) from single herbal drug preparation to poly herbo mineral preparations, are explained in this volume.

The subject of Gunapaadam-Mooligai, Gunapaadam-Thathu Jeeva Vaguppu and Siddha Vaidhya Thirattu are taught to the third year Students in Siddha Medical Colleges. In the final year the subject "Siddha Maruthuvam-Pothu" is being taught. In the subject of "Siddha Maruthuvam-Pothu" diseases and their treatment are dealt with. Here the medicinal preparations which they have studied in the third year of their study should also be applied. Hence in this volume all the medicines mentioned in the above literatures were also brought in.

Athma Rakshamirtham alias Vaidhya Saara Sangiraham and Sarabendirar Vaidhya Muraigal are the literatures written by the efforts of different kings with the help of Siddha Vaidhyas who lived in their periods. The important and effective preparations mentioned in those literatures are also included in this volume.

The collective form of medicines given in this volume will certainly help any person who is willing to study Siddha Medicine.

Diabetes has become an alarming problem now in India. In Siddha literatures lot of preparations are mentioned under the heading of

Neerizhivu or Mathumegam, for Diabetes Mellitus. All those important preparations which help a common man upto research scholars are given in the chapter of Neerizhivu Noi. In the same manner, medicines of different kinds are explained for other diseases also.

I am very much thankful to Dr. V.C. Kulandaiswamy, Vice-Chancellor of different universities and a great educationist, who is the president of Tamil Valarchi Kazhagam, for giving me this valuable opportunity to write this book.

My wife Dr. Prof. K. Rajeswari who is having about 30 years experience in teaching "Siddha Maruthuvam-Pothu" subject has helped me very much by providing her lecture class notes and various suggestions in writing this book. I wish to thank her for her immense help and encouragement.

I wish to offer my thanks to Dr. P.R. Nakkeeran, secretary of Tamil Valarchi Kazhagam. I also thank Thiru M. Mathialagan who helped in editing this volume and Thiru K. Selladurai who has brought it in good form with the help of computer.

**Dr. V. Subramanian**

# 1

# சூலை நோய்

**முன்னுரை**

'நெடு வாத சார்பது வின்றிச் சூலை வாராது' என்பது தேரன் வாக்கு. உணவு வகைகளில் வளித்தாதுவினைப் பெருக்கக் கூடிய உணவுகளை அளவு கடந்து நீண்ட நாட்கள் உண்பதாலும், இத் தாதுவை மிகச் செய்யும் செயல்களில் ஈடுபடுவதாலும், இத்தாதுவிற்குத் தொடர்புடைய மேல்நோக்குக் கால், கீழ்நோக்குக்கால் ஆகியவற்றின் வன்மை மிகுந்து நோயைப் பிறப்பிக்கும். உறுப்புகளில் வளி மிகுதியடையும் போது அவ்வுறுப்புகளில் குத்தல், குடைதல், வலித்தல், புரட்டல் என்னும் குறிகளை ஏற்படுத்தும்.

இந்நோயில் ஏற்படும் வலியானது சூலம் என்னும் ஆயுதத்தால் குத்துங்கால் உண்டாகும் வலியை ஒத்ததாக இருக்கும் என்பதால் இந்நோய்க்குச் சூலை எனப் பெயரிட்டனர்.

அப்பர் பெருமான் வயிற்றுச் சூலை நோயால் வருந்திய பொழுது "தோற்றதென் வயிற்றின் அகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன்" எனத் "தேவாரத்தில்" கூறியுள்ளது இந்நோயின் இயல்பைத் தெள்ளெனக் காட்டும்.

சூலை என்ற பெயரில் சில நூலோர் மூட்டு நோய்களின் வகைகளை மட்டும் விவரித்துக் கூறியுள்ளனர். அதனை 'மூட்டு வாத நோய்கள்' (கீல்வாயு) என்னும் தலைப்பில்* கண்டோம். யூகி முனிவர் "யூகி வைத்திய சிந்தாமணி 800" என்னும் நூலில் நோய்களை வகைப்படுத்திக் கூறும் பொழுது சூலை என்ற தலைப்பில்

---

*சித்த மருத்துவம் தொகுதி-4: வாதம் தொடர்பான நோய்கள்-பகுதி-1 இல் இடம் பெற்றுள்ளது.

உறுப்புகள் பலவற்றில் வரும் கடுமையான வலியுணர்வுடன் கூடிய 15 வகை நோய்களைத் தனித் தனியே கூறியுள்ளார்.

## சூலை நோய் வரும் வழி

- உணவு, செயல் மாறுபாடுகளால் இந்நோய் உண்டாகும். அவை:
- மிகுதியும் சூடான பொருள்களை உண்ணுதல்
- துவர்ப்புப் பொருட்களை அடிக்கடி உட்கொள்ளுதல்
- சிறைப்பட்டிருத்தல்
- மனச் சலிப்பு கொள்ளல்
- மிகுதியும் ஓடுதல்
- தன் வன்மைக்கு மிகுந்து சண்டையிடுதல்
- புகை பிடித்தல்
- அளவிற்கு மிஞ்சி பெண்கலவி செய்தல்

ஆகியவற்றால் இந்நோய் உண்டாகும். உடல் மட்டுமல்லாது மனம் தொடர்புடைய சில காரியங்களாலும் இந்நோய் உண்டாகும் என்று கூறப்பட்டுள்ளது. அவை வருமாறு:

- ஏழைகளுக்கு உணவிடாமல் அவர்களை அடித்து விரட்டியவர்களுக்கும்
- மிகுந்த பெண்ணாசையால் கற்புடைய மங்கையரை விரும்பியவர் களுக்கும்
- பயன்தரக்கூடிய மரங்களை வெட்டி வீழ்த்தியவருக்கும்
- பொருளிச்சையால் வழிப்பறி செய்யும் அறிவிலிகளுக்கும்
- தன் எச்சிலைத் தெரியாமல் பிறர்க்குக் கொடுப்பவர்க்கும்

இந்நோய் உண்டாகும் என நூல்களில் கூறப்பட்டுள்ளது.

## சூலைநோயின் பொதுத் தன்மை

- உந்திக்கு இரு பக்கங்களிலும், விலா என்புகளிலும், நரம்பை உள்ளே இழுத்துக் கொண்டாற் போன்று துன்பத்தை உண்டுபண்ணும்.
- முள்ளை வயிற்றினுள்ளே சொருகியது போன்று வலி ஏற்படும்.
- முதுகுப் பக்கமாகவும் வலி காணும்.
- உணவுகளைச் சரியாக உண்ண முடியாமல் அவற்றில் வெறுப்பை ஏற்படுத்தும்.

இத்தன்மையானதால் இந்நோய்க்குச் சூலை எனப் பெயரிட்டதே தகும் எனக் கூறப்படுகிறது.

## நோய் வகைகள்

1. மேகச்சூலை
2. முறிச்சூலை
3. வளிச்சூலை
4. அழல்சூலை
5. ஐயச்சூலை
6. ஆமச்சூலை
7. உக்காரச்சூலை
8. குன்மச் சூலை
9. உலர்த்துச்சூலை
10. நிதம்பச்சூலை
11. கறைச்சூலை
12. சுரச்சூலை
13. பக்கச்சூலை
14. கற்பச்சூலை
15. தூரச்சூலை

என்னும் பெயர்களில் "யூகி வைத்திய சிந்தாமணி 800" சூலை நோய்களை வகைப்படுத்தியுள்ளது. இனி அவற்றின் குறிகுணங்களைக் காணலாம்:

## 1. மேகச்சூலை

- கை,கால்கள் மிகவும் கடுத்துக் குடைந்து காணும்.
- சிறுநீரும் மலமும் கட்டுப்படும்.
- கை, கால்களில் வேர்வை உண்டாகும்.
- குளிர் ஏற்படும்.
- உடல் முழுதும் சிவந்து காணும்.
- உடலில் எரிச்சலும் உண்டாகும்.
- தேகம் மிக இளைத்துக் காணும்.

- ❖ உடல் உளைச்சலோடு சுரம் தோன்றும்.
- ❖ மிக்க தாகம் ஏற்படும்.
- ❖ மயக்கம், பிரம்மை முதலியன உண்டாகும்.

**2. முறிச்சூலை**

- ❖ ஆண் குறியின் அடியில் அழன்று நோகும்.
- ❖ இவ்வழற்சி கீழ் முதுகைப் பற்றியும், கீழ்நோக்குக்கால் மிகுந்து அடிக்குடலைப் பற்றிப் பரவியும் உப்புசம் உண்டாக்கி வலிக்கச் செய்யும்.
- ❖ நாபியினிடத்தில் தாங்க முடியாத வலியை உண்டாக்கும்.
- ❖ மிக்க கலக்கம் ஏற்படும்.
- ❖ தலைவலியும் சுரமும் தோன்றும்.
- ❖ கண்கள் சிவந்து நீர் ததும்பிக் காணும்.

**3. வளிச்சூலை**

- ❖ கால், கைகளில் உளைச்சல் ஏற்படும்.
- ❖ அவைகளில் தடிப்பு ஏற்பட்டாற்போல் திமிராகக் காணும்.
- ❖ மிகுதியான தூக்கம் உண்டாகும்.
- ❖ மிகுதியும் குளிர் உண்டாகும்.
- ❖ உடல் கனத்தும் சற்றே பளபளப்பாகவும் காணும்.
- ❖ வில்லின் நாணைப் போல உடலை இழுத்துப் பிடித்திருக்கும்.
- ❖ சிறுநீர் சிவந்து இழியும்.
- ❖ உடல் முழுதும் குடைந்து நோகும்.

**4. அழல்சூலை**

- ❖ உடல் வற்றிக் கடுப்பு உண்டாகும்.
- ❖ கை, கால் கனத்து உளையும்.
- ❖ நோய் மிகுதியால் தூக்கம் கெடும்.
- ❖ உடற்கட்டுகள் யாவும் குறைந்து, வன்மையற்றுச் செழுமைமாறிக் காணும்.
- ❖ தோலில் மினுமினுப்பு ஏற்படும்.
- ❖ அறிவு தெளிவில்லாமல் கலங்கும்.

- மயக்கத்துடன், உடல் வன்மை அற்றுக் காணப்படும்.

## 5. ஐயச்சூலை

- தொண்டையில் வலி காணும்.
- நெஞ்சில் கோழை கட்டும்.
- அடி வயிற்றில் வலி ஏற்படும்.
- உடல் முழுதும் அழன்று புண் போல நோகும்.
- உடல் முற்றும் வியர்த்துக் காணும்.
- உடல், நகக் கண் முதலியன வெளுத்து இரத்தம் இன்மையைக் காட்டும்.
- உடல் பஞ்சு போல இலேசாகும்.
- வாய் நீர் ஊறல் அடிக்கடி உண்டாகும்.

## 6. ஆமச்சூலை

அடிக்கடி அசீரணம் ஏற்படுவதாலும், தூய்மையற்ற நீரை அதிகமாகப் பருகுவதாலும், மிக்க புளிப்பு, கைப்பு, இனிப்புப் பொருட்களை மிகுதியாக உண்பதாலும், அடிக்கடி பட்டினி இருப்பதாலும், வயிற்றில் உள்ள ஆமம் (சீதம்) கூடி, மந்தத்தை ஏற்படுத்தும். அதனால் வயிற்றுடன் விலாப்பக்கங்களிலும் மிகவும் வலித்துக் கடுப்புடன் குத்தும் உண்டாகும்.

## 7. உக்காரச்சூலை

- இந்நோயில் ஒரே நேரத்தில் விலாப்பக்கம், முதுகு, நெஞ்சு, எலும்பு, உந்தி, கீழ்வாய் என்னும் இடங்களில் அதிகமான கெட்ட சதை வளர்ந்து திரண்ட கழலைகளைப் போலப் பெருத்து, நீர்த் தாரையை நெருக்கி, நீர் இறங்கும்பொழுது மிகுந்த துன்பத்தை விளைவிக்கும்.
- சிறுநீர் துன்பத்துடன் கடுத்து இறங்குவதோடு அதில் சிறுமணலைப் போல துணுக்குகள் கலந்து காணும்.
- உடல் கடுக்கும்.
- உடல் தளரும்.
- அறிவு மயங்கும்.
- அடிக்கடி மயக்கம் உண்டாகும்.

**8. குன்மச்சூலை**

- ❖ இந்நோயில் சிறுநீரும் மலமும் கட்டுப்படும்.
- ❖ வயிறு பொருமி இரைச்சலுடன் காணும்.
- ❖ மூர்ச்சை உண்டாகும்.
- ❖ வயிற்றை வலித்துப்பிடித்து, சூலத்தால் குத்துவதுபோன்று தாங்கமுடியாத குத்தலை உண்டாக்கும்.
- ❖ வாயில் நீர் ஊறல், ஏப்பம் ஆகியவை அடிக்கடி உண்டாகும்.
- ❖ உடலின் ஊன் மிகவும் வெதும்பி அழற்சியுற்றுக் காணும்.
- ❖ உடல் உலர்ந்து காணும்.
- ❖ நாவின் சுவை கேடடையும்.

**9. உலர்த்துச்சூலை**

- ❖ இந்நோயில் அழலும் கேடடைந்து அதன் வெப்பத்தால் வறட்சி ஏற்பட்டு, உடல் வலித்து மிகவும் வீங்கிக் காணும்.
- ❖ கேடுற்ற வளியின் காரணமாக குடல்வாயு தூண்டப்பட்டுக் குன்மம் என்னும் வயிற்று வலி மிகுந்து காணும்.
- ❖ உடலெங்கும் நோவை உண்டாக்கும்.
- ❖ தோல் தடித்து உலர்ந்து காணும்.

**10. நிதம்பச்சூலை**

- ❖ பெண்கள் பிள்ளையைப் பெற்ற பின் உண்டாகும் கருவாயின் கோளாறுகளால் அங்குப் புண்ணாகி, குருதி சீழ்பிடித்து, சதை வளர்ந்து அது தேங்காயின் முளை போலத் தோன்றி, கருவாயின் வாயை அடைத்து மிக்க வலியை உண்டாக்கும்.
- ❖ சிறிது அசைந்தாலும் அம்முளையிலிருந்து நீர்க் கசியும்.
- ❖ உடல் வாடி வெளுத்து, கால், கை, முகம் முதலியன வீங்கும்.

**11. கறைச்சூலை**

- ❖ தோலைப் பற்றி வளையம் போல் திரண்டு நொந்து காணும்.
- ❖ நரம்பின் வழியாகத் தங்கித்தங்கி வலியை உண்டு பண்ணும்.
- ❖ கீழ் முதுகில் வளி மீறிப் பற்றிக் கொண்டு கடுமையாக வலித்து நோயை உண்டு பண்ணும்.

- கை, கால்களிலும் மிகுந்த வலியை ஏற்படுத்தும்.
- உடல் கறுத்துக் காணும்.
- கருத்தழிந்தும் காண்பர்.

**12. சுரச்சூலை**

- இரு பக்கங்களிலும் சூலை தோன்றி நோய் உண்டாகும்.
- வாய் வழியாக இரத்தம் வெளியாகும்.
- உடலில் சுரம் தோன்றி உளைச்சலும் காணும்.
- தேகம் முழுதும் வலி உண்டாகித் துன்புறுத்தும்.
- வயிற்றிலும் வலித்து நோகும்.
- நெஞ்செரிச்சல், செரியாமை, வாய்நீரூறல் வாந்தி முதலியன தோன்றி மயக்கமும் காணும்.

**13. பக்கச்சூலை**

- தலைவலி, உடல் புண்போல் நோதல் என்னும் முற்குறிகளைக் காட்டி சுரம் காயும்.
- பின்பு மார்பின் அடிப்பக்கத்தே சூலத்தால் குத்துவது போன்று தாங்கமுடியாத வலி காணும்.
- பக்கங்களில் கனத்து, விலா இடைவெளிகள் தெரியாதபடி வீங்கிக் காணும்.
- கண் புகைதல்
- கை, கால் ஓய்தல்
- உருமாறிப் போதல்
- மூச்சுவிட முடியாமை
- திமிர் கொள்ளல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

**14. கற்பச்சூலை**

இந்நோய் மருந்தீட்டின் கேட்டாலும், வஞ்சனையாலும், சூனியத்தாலும், வெப்பம் மிகுந்து உடல் வெதும்பியதாலும், மகப்பேற்றில் குருதி சிக்குதலாலும் உண்டான குருதிப் பெருக்குச் சூலகத்தில் ஊறி, அளவில் பெருத்துச் சூல் கொண்ட பெண்ணின் வயிறு போல் பெரிதாகி வயிற்றுள் புரண்டு, கீழ்வாயில் தாங்க முடியாத வலியைத் தந்து, மயக்கத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

## 15. தூரச்சூலை

- ❖ உண்டி மறுக்கும்.
- ❖ வாய் நீர் ஊறும்.
- ❖ நெஞ்சு எரிச்சல் உண்டாகும்.
- ❖ ஈரல், பக்கம், தலை, வயிறு ஊதும் .
- ❖ வயிற்றுள் திரண்டு புரள்வுற்று அடிக்கடி ஏதோ ஒன்று வந்து அமர்ந்து ஒதுங்கி எழும்புவது போலும் அதுவே பின் கீழ்வயிற்றில் மீள்வது போலும் தோன்றி, இரத்தத்தை வெளிப்படாமல் சிக்குமாறு செய்யும்.
- ❖ அத்துடன் மலம், சிறுநீரும் வெளிப்படாமல் தடைபடும்.

## பிற நூலோர் கருத்து

இவையல்லாமல் கரபாதச் சூலை என்ற ஒரு வகை உண்டு என்றும் கூறுவர். இந்நோயில் கையிலும், காலிலும் உள்ள விரல் நுனிகளிலும், உள்ளங்கை, உள்ளங்கால் ஆகிய இடங்களிலும் எரிச்சலும் வலியும் காணும். புறத்தே உள்ள நரம்புகளிலும் அவற்றின் முனைகளிலும் ஏற்படும் வன்மைக் குறைவு, அந்நரம்புகளுக்குத் தேவையான சக்தி கிடைக்காத நிலையிலும் இத்தகைய குறிகுணங்கள் காணும். இந்நோய் வயது முதிர்ந்தவர்களுக்கும், பிற நோயினால் துன்புற்றிருப்போருக்கும், நீரிழிவு, இளைப்பு, புற்று போன்ற உடலை உருக்கச் செய்யும் நோய்களிலும், உடல் கட்டுகளைக் கேடடையச் செய்யும் பிற நோய்களிலும் ஏற்படும் வாய்ப்புண்டு.

மேகச் சூலை என்பது மேக நோயின் தொடர்பாக ஏற்படும் மூட்டு வாத நோய் என்றும் கூறுவர். இந்நோயில் முழங்கால், முழங்கை போன்ற பெரிய மூட்டுகளில் தனி மூட்டுகளிலோ அல்லது பல மூட்டுகளிலோ சிவந்து தாங்கொணா வலியுடன் வீங்கிக் காணும்.

வெள்ளை, வெட்டை ஆகிய நோய்களால் துன்புற்றுக் காணப்படுவர். சிறுநீர்த்தாரை எரிச்சல், சிறுநீருடன் வெள்ளை கலந்து வெளிப்படல், ஆண்குறி புண்பட்டிருத்தல் முதலிய குறிகுணங்களும் காணப்படும். இத்தகைய நோயாளிகளுக்குச் சூலை நோய்க்கு மட்டுமல்லாமல், முதல் நோயான மேகநோய்க்கும் சேர்த்து மருத்துவம் செய்ய வேண்டும்.

பக்கச் சூலை எனப்படும் நோய் இரு விலாப் பக்கங்களிலும் தாங்கமுடியாத வலியை ஏற்படுத்துவதால் இப் பெயர் பெற்றது. இந்நோய் பெரும்பாலும் இளைப்பு நோய் கண்டவர்களுக்கோ அல்லது அந்நோய் வருவதற்கு முன்போ, பின்போ

ஏற்படுவதுண்டு. இந்நோயில் நுரையீரலைச் சுற்றியுள்ள பரிப்புப்புச இடை வெளியில் நீர்க் கோர்த்து, அதனால் விலாப் பக்கங்களில் கனத்து வீங்கி மூச்சுத் திணறல் ஏற்படும். மூச்சு உள்வாங்கும் சமயம் கடுமையான வலியை ஏற்படுத்தும். இத்துடன் மாலை வேளைகளில் சுரம், இருமல், கோழை கக்கல், கோழையுடன் இரத்தம் வெளிப்படல் போன்ற குறிகுணங்களும் காணும் என்பர்.

உக்காரச்சூலை என்ற பிரிவு சிறுநீரகப் பாதிப்பால் ஏற்படும் இடுப்புப் பக்க வலி என்றும் கூறுவர். சிறுநீரகங்களில் ஏற்படும் அழற்சியின் காரணமாக சிறுநீர் சரியாகக் கழிக்க முடியாமல் துன்பம் ஏற்படும். சிறுநீரில் உப்புகள் அதிகமாக வெளியாகும். சில சமயம் குருதி கலந்தும் இழியும். முகத்திலும், கை, கால்களிலும் வீக்கம் ஏற்படும். சிறுநீரகப் பாதிப்பைச் சரி செய்யக் கூடிய மருத்துவத்தை இதற்குச் செய்ய வேண்டும்.

தூரச்சூலையைக் கருப்பை தொடர்பாக ஏற்படும் அடிவயிற்று வலி என்றும் கூறுவர். மாதவிடாய் காலங்களில் இரத்தம் சரியாக வெளிப்படாமல் தடைபட்டு நின்றாலோ, அல்லது வயிற்றில் கட்டி, புற்றுநோய் முதலியன ஏற்பட்டிருந்தாலோ இத்தகைய வலி காணப்படும். இச் சூலை நோயின் முதற்காரணத்தை ஆராய்ந்து மருத்துவம் செய்தல் வேண்டும்.

நிதம்பச்சூலை என்னும் நோயும் பெண்களுக்குக் கருப்பை,யோனி முதலியவற்றின் பாதிப்பால் ஏற்படும் நோய் என்றும் கூறுவர். இந்நோயில் கருப்பையின் உள்பகுதி புண்படுவதாலும், அதன் கட்டுகள் பிள்ளைப்பேற்றுக் கோளாறு போன்ற பல்வேறு காரணங்களால் யோனி வழியாக முளை போல வெளிப்பட்டுக் காணப்படும். அதன் வழியே இரத்தம், நீர் முதலியன வெளிப்பட்டு மிக்க வலி, சுரம், மயக்கம் முதலியன ஏற்படும்.

ஆமச்சூலை, குன்மச்சூலை, உலர்த்துச்சூலை ஆகிய இம்மூன்று நோய்களும் வயிற்றில் அதாவது இரைப்பை, பசதக்குடல், சிறுகுடல் ஆகிய பகுதிகளில் ஏற்படும் அழற்சி, புண் ஆகியவற்றால் உண்டாகும். இதனால் மேல்வயிறு, உந்தி ஆகியவற்றில் சூலத்தால் குத்துவதுபோன்று தாங்கொணா வலியும் காணும். இதனால் செரியாமை, வாந்தி ஏற்படும். உணவு உண்ண முடியாமை, வாய்நீர் ஊறல், ஏப்பம் முதலியன உண்டாகும். உணவு சரியாக உண்ணாதலால் உடல் வற்றி மெலிந்து, உலர்ந்து காணப்படுவர். வயிற்றில் சீதம் அல்லது ஆமம் சேர்ந்து செரியாமை, மந்தம் ஆகியவற்றுடன் ஏற்படும் சூலை ஆமச் சூலை ஆகும், வயிற்றில் புண் ஏற்பட்டுக் குன்மம் என்னும் வயிற்று நோயைத் தொடர்ந்து ஏற்படுத்தும் சூலையைக் குன்மச்சூலை என்கின்றனர். உடலில்

உணவுச் சாரம் ஒட்டாமல், குடல் பகுதிகள் புண்பட்டு ஏற்படும் சூலை நோய் உலர்த்துச் சூலை என்று வழங்கப்படுகிறது.

வளிச்சூலை நோயானது பெரும்பாலும் கை, கால் மூட்டுகளில் வளி மிகுதிப்படுவதால் ஏற்படும் என்று கூறுவர். இது பெரிய மூட்டுகளிலோ, கணுக்கால், கை, கால் விரல் மூட்டுகள், மணிக்கட்டு மூட்டு போன்ற சிறிய மூட்டுகளிலோ ஏற்படலாம். பாதிக்கப்பட்ட மூட்டுகளில் வீக்கம், சிவப்பு, வலி, விறைப்புத் தன்மை முதலியன காணும். சுரமும் அடிக்கடி தோன்றும்.

இவை தவிர "திருமூலர் நாடி" என்னும் நூலில் மேலும் 3 வகையான சூலை நோய்கள் கூறப்படுகின்றன. அவை பின்வருமாறு:

### 1. வளி அழல் சூலை

வளி, அழல் தாதுக்கள் இரண்டும் சேர்ந்து பாதிப்படைவதால் இது வளி அழல் சூலை எனப்பட்டது. இதில் கை கால் மரத்தல், உடம்பில் தோல் வெடித்துப் புண்ணாதல், அப்புண் ஆறாதிருத்தல், கை கால்களில் உள்ள மூட்டுகள் வீங்கி கரடு கட்டுதல் என்னும் குறிகுணங்கள் காணும். இவ்வசாத்திய குணங்கள் நாட்பட இருப்பின் மரணம் ஏற்படும்.

### 2. ஐய அழல் சூலை

ஐயமும் அழலும் சேர்ந்து பாதிப்படையும் இந்நோய் எலும்பில் துளைப்பது போன்ற வலியை உண்டாக்கும். சுரம் காணும். நீர்வேட்கை, இருமல் ஆகிய குறிகுணங்களும் காணும்.

### 3. ஐய வளி சூலை

ஐய, வளிக் கலப்பால் உண்டாகும் இந்நோயில் கபாலம் புடைத்து வெடிப்பது போன்ற வலி தலையில் உண்டாகும். எலும்புகள் யாவும் வன்மை கெட்டு வலியை உண்டு பண்ணும். குளிர் சுரம் நீங்காமல் நிலைத்து நிற்கும். காலில் ஆணி உண்டாகும்.

### சூலை நோயில் காணப்படும் நாடி நிலைமை

'வாத மெனும் நாடியது தோன்றில் சூலை' என்பதன் மூலம் வளி நாடியானது தன் இயற்கையளவில் மீறி நடக்கும் நிலையில் இருக்கும் என்று அறியலாம்.

"சதக நாடி"எனும் நூல் வளியுடன் ஐயநாடியும் சேர்ந்து பாதிக்கப்பட்ட நிலையில் சூலை நோய் உண்டாகும் என்கிறது. வளியுடன் அழலும் சேர்ந்து

பாதிக்கப்படும் காலத்தே பொருத்துகள் பாதித்துச் சூலை நோய் ஏற்படும் என்பது பிரிதோர் கொள்கை. அழல் தாது பாதிப்பால் ஏற்பட்ட குன்ம நோயில் வளித்தாதுவும் கூடினால் இந்நோய் உண்டாகும் என்பதை அறியலாம். அதாவது அழலைய நாடி தோன்றில் குன்மச் சூலை நோய் காணும். ஐயநாடியானது இயற்கைத் துடிப்பு இழந்து தளர்ந்து ஓடுமாயின் சூலை நோயைக் குறிக்கும். ஐய நாடியானது வளி நாடியுடன் கலந்து காணப்படில் நச்சுத் தன்மையுடன் கூடிய சூலை உள்ளது என்பதைக் குறிக்கும்.

**மருத்துவம்**

சூலை நோய்க்கு வளித் தாது பாதிப்பே முதன்மையாக இருப்பதால், அதைத் தன்னிலைப் படுத்த வேண்டும். வளித் தாதுவின் தொடர்புடைய கால்களில் மேல்நோக்குக்கால். கீழ்நோக்குக்கால், நடுக்கால் ஆகியன பாதிப்படைந் துள்ளதால் அவற்றையும் சமநிலைக்குக் கொண்டுவரவேண்டும். இதன் பொருட்டு கழிச்சலை உண்டு பண்ணுவதற்கான மருந்துகளையும் தேவைப்படின் வாந்தி செய்வதற்குமான மருந்துகளையும் வழங்கவேண்டும்.

வலி, குத்தல், குடைதல் முதலிய குறிகுணங்களினால் ஏற்படும் துன்பத்தைப் போக்குவதற்கான உள், வெளி மருத்துவம் செய்ய வேண்டும். பின் மலம், சிறுநீர் ஆகியவற்றைக் கழிப்பதில் ஏற்படும் மாறுபாடுகளைச் சரிசெய்தல் வேண்டும்.

இவை தவிர்த்து நோய்க்கு முதற்காரணமாக வேறு ஏதேனும் நோய்கள் இருப்பின் அதற்கு வேண்டிய மருத்துவத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

நோயாளி நோயினின்று குணமடைந்தபின் உடலை வன்மைப்படுத்தக் கூடியதும் பசியைத் தூண்டக் கூடியதுமான மருந்துகளை வழங்கி உடலைத் தேற்ற வேண்டும்.

உணவு முறைகளை நோய் நிலைமைக்கும், வழங்கும் மருந்துக்கும் தக்கவாறு தேர்வு செய்து வழங்கவேண்டும்.

**கழிச்சலுக்கு மாத்திரை**

காக்கட்டான் மாத்திரை
கோடாசூரி மாத்திரை
மேகநாத மாத்திரை
சஞ்சீவி மாத்திரை
அட்டபைரவ மாத்திரை

ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை, 1 மாத்திரை வெந்நீருடன் வழங்கலாம்.

**குடிநீர்**

- ❖ சிவதைவேர், சுக்கு, கடுகுரோகணி, அங்கூர் திராட்சை ஆகியவைகளைச் சம எடை கூட்டி முறைப்படி குடிநீராக்கி 1/4 ஆழாக்கு, 1 வேளை காலையில் கொடுக்க மலம் கழியும். தேவையானால் மற்றொரு பொழுதும் வழங்கலாம்.
- ❖ காட்டாமணக்கு வேர், கறுங்கொடி வேலிவேர், சிவதை வேர், வாய்விடங்கம், கடுகுரோகணி, சுக்கு, அதிமதுரம் இவை வகைக்கு 1/4 பலம் எடுத்து ஒரு படி நீரிலிட்டு எட்டில் ஒன்றாக வற்றக் காய்ச்சி வடித்துக் கொடுக்க, கழிச்சலுடன் சூலை நோயின் கடுமையும் குறையும்.
- ❖ முட்காவேளை வேர், மூக்கிரட்டைவேர், காக்கண வேர், கழற்சி வேர், காட்டாமணக்கு வேர், திரிகடுகு, திரிபலை இவை சம எடை எடுத்து 16 பங்கு தண்ணீரில் இட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து 1/2 ஆழாக்குக் குடிநீரில் சிறிது இந்துப்பு சேர்த்துக் கொடுக்கக் கழியும்.

**மெழுகு**

அகத்தியர் குழம்பு
கௌசிகர் குழம்பு
சண்டமாருதக் குழம்பு
நவாச்சாரக் குழம்பு
குமட்டிக் குழம்பு
நவஉப்பு மெழுகு

இவைகளில் ஏதேனுமொன்றைத் தக்க அளவில் காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் நோயாளியின் வன்மை, நோயின் கடுமை அறிந்து கொடுக்க, பேதியாகி நோயின் கடுமை குறையும்.

அகத்தியர் குழம்பினை அளவிட்டு ஒரு உச்சிக் கரண்டி உத்தாமணிச்சாற்றில் கரைத்துக் கொடுக்க வாந்தியும் கழிச்சலும் உண்டாகும்.

**எண்ணெய்**

கழற்சி எண்ணெய்
சித்தாதி எண்ணெய்
மேகநாத எண்ணெய்

மாந்த எண்ணெய்

வெள்ளை எண்ணெய்

வாதநாசத் தைலம்

மெருகுள்ளித் தைலம்

கருடன் கிழங்கு எண்ணெய்

இவைகளில் ஏதேனுமொன்றை, அவற்றிற்குத் தக்க அளவில் காலையில் மட்டும் 1முதல் 3 நாட்கள் தனியாகவேனும், முட்காவேளைக் குடிநீரில் கலந்தும் கொடுக்க மலம் கழியும். சூலையின் வலியும் வேதனையும் குறையும்.

**சூலைக்கு உள் மருந்துகள்**

**மாத்திரை**

- விட்ணுசக்கர மாத்திரை: 1 மாத்திரை வீதம் காலை, மாலை திரிகடுகு சூரணம், தேன், இஞ்சிச்சாறு ஆகியவற்றுடன் கலந்து கொடுக்க வேண்டும். இது பக்கச் சூலைக்கு நேர் மருந்தாகும்.
- சூலை பூபதி மாத்திரை: 1 மாத்திரை வீதம் காலையில் மட்டும் தக்க அனுபானத்தில் 3 முதல் 5 நாட்கள் வரை கொடுக்க, சூலை தீரும். நோயாளியின் வன்மைக்குத் தக்கவாறு 2 வேளையும் கூட கொடுக்கலாம்.
- நவலோகபூபதி: 1 மாத்திரை வீதம் இஞ்சிச்சாறு, தேன் இவற்றில் அனுபானித்து 3 முதல் 5 நாட்கள் கொடுக்கலாம்.
- சூலைக் குடாரம்: இதில் 1 மாத்திரை காலையில் மட்டும் இஞ்சிச்சாறு, தேன் இவற்றில் அனுபானித்து 3 முதல் 5 நாட்கள் வழங்கலாம்.
- சலமஞ்சரி: இதில் 1/2 பணவெடை வீதம் காலை, மாலை இளநீர், பழச்சாறு, வெந்நீர், கரிசாலைக் குடிநீர் இவற்றில் ஏதேனுமொன்றில் கொடுக்கலாம். இது "கண்ணுசாமியம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள சிறந்த மருந்தாகும். இது நீர்க்கட்டு உண்டாகி துன்புறுத்தும் உக்காரச் சூலைக்கு நேர் மருந்தாகும்.
- சலோதாரி மணி: இதில் ஒரு மாத்திரை தேன் அல்லது பாலில் அனுபானித்துக் காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் வழங்க மலம், நீர் கழியும். இது உக்காரச் சூலையில் பெரிதும் பயன்படும்.

## மெழுகு

- இரசக்கெந்தி மெழுகு: இம்மெழுகில் சுண்டைக்காய் அளவு காலை, மாலை பனைவெல்லத்தில் பொதிந்து 1 மண்டலம் வரை சாப்பிட்டு வரவும். இம் மெழுகைச் சாப்பிடும் முன்னர் மோர் கலந்த சோற்றை உண்ணுவது நல்லது. எல்லா வகை சூலை நோய்களுக்கும் வழங்கலாம். முக்கியமாக மேகநோய் தொடர்பான சூலைக்கு மிகவும் சிறந்தது.
- இரசமெழுகு: இதில் மிளகளவு காலை மாலை பனைவெல்லத்தில் பொதிந்து 7 நாட்கள் சாப்பிட்டு, மறுபத்தியம் 7 நாட்கள் வைக்கவும். 15-ஆம் நாள் தலைமுழுக, மேகச் சூலை நீங்கும். பால், கஞ்சி, பால் சாதம் கொடுக்கலாம். உப்பில்லா பத்தியம் அவசியம். பனை வெல்லத்தில் அனுபானித்துக் கொடுத்து, உடன் இளநீரும் கொடுத்து வர குருதி மூத்திரம் நீங்கும்.
- நந்தி மை: இதில் தேற்றான்விதை அளவு பனைவெல்லத்தில் பொதிந்து காலை, மாலை 1 மண்டலமோ அல்லது குறைந்த நாட்களோ கொடுக்க எல்லா வகை சூலை நோய்களும் நீங்கும். குன்மச் சூலைக்குச் சிறந்த மருந்தென்பர்.
- நவஉப்பு மெழுகு: இதில் மிளகளவு காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் பனைவெல்லத்தில் பொதிந்து விழுங்க, மலம் கழியும். குன்மச் சூலை, சூதகம் தொடர்பன சூலைகளுக்குச் சிறந்த மருந்தாகும்.
- நவாச்சார மெழுகு: கம்பி நவாச்சாரக் கட்டிக்குக் கீழாநெல்லி சமூலத்தை அரைத்து விரல்கனம் கவசம் செய்து அகலிலிட்டு மேலகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி, 4 அல்லது 5 எருவில் புடமிட்டெடுக்கவும். பிறகு ஆகாசத் தாமரையை அரைத்த விழுதைக் கொண்டு புடம் போட்டு எடுத்த நவாச்சாரக் கட்டிக்குக் கவசம் செய்து அகலில் இட்டு மூடிச் சீலைமண் செய்து முன்போலப் புடமிடவும். இப்படி இதில் 2 புடங்கள் போட்டெடுத்து, ஒரு அயக்கரண்டியை நன்றாய்த் துலக்கிக் கொம்புக் கள்ளிப்பால் விட்டு அதில் நவாச்சாரக் கட்டியைப் பொடித்துப் போட்டு, தணல் மேல் வைத்துக் கிளறிக் கொண்டிருக்க நார் போல வரும். அதனை எடுத்துக் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகாகும். அதனைச் சிமிழில் வழித்து வைக்க வேண்டும்.

  அளவு: இம்மெழுகில் குன்றியளவு காலையில் மட்டும் 1 வேளை, 1 முதல் 3 நாட்கள் பனைவெல்லத்தில் பொதிந்து விழுங்கச் செய்ய வேண்டும்.

சூதகச் சூலை, சூதகவாயு, சூதகக் கட்டு முதலியன குணமாகும்.

- ❖ வான்மெழுகு: இதில் உளுந்தெடை காலை, மாலை பனைவெல்லத்தில் பொதிந்து 3 அல்லது 5 நாட்கள் சாப்பிட, சூலை யாவும் நீங்கும். இம்மெழுகை விட்டு விட்டு பல முறை சாப்பிடலாம்.
- ❖ குமட்டி மெழுகு: இதில் 1 குன்றியளவு காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் பனைவெல்லத்தில் பொதிந்து விழுங்க மலம் கழியும். சூதகச் சூலை, கற்பச் சூலை, நிதம்பச் சூலை ஆகியவற்றுக்கு மிக்க பயன் தரும்.
- ❖ இடிவல்லாதி: இதில் சுண்டைக்காயளவு காலை, மாலை 1 மண்டலம் சாப்பிட, சூலை நீங்கும்.
- ❖ சேங்கொட்டை இளகம்: சுண்டையளவு காலை மாலை இருவேளை 1 மண்டலம் சாப்பிடலாம்.
- ❖ பஞ்சசூத மெழுகு: பயறளவு எடுத்து மிளகுப்பொடியில் காலை, மாலை 3 நாட்கள் கொடுக்கலாம்.

**பற்பங்கள்**

- ❖ இரசப்பற்பம் 30 முதல் 60 மிகி.
- ❖ செம்புப் பற்பம் 30 முதல் 60 மிகி.
- ❖ நண்டுக்கல் பற்பம் 120 முதல் 180 மி.கிராம் எடுத்து நீரைப் பிரிக்கும் மூலிகைச் சாறு அல்லது குடிநீரில் அனுபானித்துக் காலை மாலை கொடுத்து வர, உக்காரச் சூலை குணமாகும்.

  இத்துடன் குங்கிலியப் பற்பம், படிகாரப்பற்பம், வெங்காரச் சுண்ணம் அல்லது வெடியுப்புச் சுண்ணம், கற்பூரசிலாசத்துப் பற்பம், நன்னாரி வேர்ப்பட்டைச் சூரணம் ஆகியவற்றுள் சிலவற்றைத் தக்க அளவில் சேர்த்து இளநீரில் கொடுக்க உக்காரச் சூலை விரைவில் குணமாகும். நீர் எரிச்சல், நீர்க்கட்டு, நீரடைப்பு முதலியன நீங்கும்.
- ❖ சங்குப்பற்பம், சிலாசத்துப் பற்பம், பஞ்சலவணப் பற்பம் முதலியவற்றைத் தக்க அளவில் சேர்த்து, அட்டாதி சூரணம் கலந்து தேனில் குழப்பி காலை மாலை 2 வேளை கொடுத்துவரக் குன்மச் சூலை, ஆமச் சூலை நீங்கும்.

**செந்தூரங்கள்**

- ❖ தாமிரச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.
- ❖ அயவீரச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.

- ❖ அயக்காந்தச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.
- ❖ ஆறுமுகச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.
- ❖ சுயமாக்கினிச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.
- ❖ சண்ட மாருதச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.
- ❖ பஞ்சபாடாணச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.
- ❖ காளமேக நாராயணச் செந்தூரம் 30 முதல் 60 மிகி.

இவைகளில் ஒன்றைத் தக்க அனுபானத்துடன் வழங்க வளிச்சூலை, மேகச்சூலை, முறிச்சூலை, உலர்த்துச் சூலை யாவும் தீரும்.

- ❖ சயகுலாந்தகச் செந்தூரம், பூரண சந்திரோதயம் போன்ற மருந்துகளை 30 முதல் 60 மி.கிராம் அளவில் தேனில் அனுபானித்துக் கொடுக்க இளைப்புநோய் தொடர்பாக வரும் பக்கச் சூலை மற்றும் உடலை வற்றச் செய்யும் பிற சூலை நோய்களும் நீங்கும்.

**சூரணங்கள்**

- ❖ பஞ்ச தீபாக்கினி சூரணம்
- ❖ அட்ட சூரணம்
- ❖ திரிகடுகு சூரணம்
- ❖ கறிவேப்பிலை சூரணம்
- ❖ சீரகாதி சூரணம்
- ❖ ஏலாதி சூரணம்

இவைகளில் ஒன்றை அதனதன் அளவுப்படி காலை, மாலை தனியாகவேனும் வேறு பற்ப , செந்தூரங்களுடன் சேர்த்தேனும் தேன் விட்டுக் குழப்பிச் சாப்பிட்டு வர, சூலை மற்றும் அதன் தொடர்பான அசீரணம், உப்புசம் முதலியன நீங்கும்.

**இலேகியம்**

- ❖ குன்மக் குடோரி இலேகியம்
- ❖ கேசரி இலேகியம்
- ❖ பஞ்ச தீபாக்கினி இலேகியம்
- ❖ வில்வாதி இலேகியம்
- ❖ கண்டங்கத்தரி இலேகியம்
- ❖ சீரகாதி இலேகியம்

- ❖ நெல்லிக்காய் இலேகியம்
- ❖ இஞ்சி இலேகியம்

இவைகளில் ஒன்றை அதனதன் அளவுப்படி மற்ற பற்ப, செந்தூரங்களுடன் சேர்த்து வழங்கலாம். இதனால் அழல்சூலை, ஆமச் சூலை, குன்மச் சூலை, பக்கச் சூலை, தூரச்சூலை, உலர்த்துச் சூலை முதலியன தீரும்.

நோயின் தீவிரத் தன்மை குறைந்து குணமாகியபின் உடலைத் தேற்றுவதற்காக அமுக்கரா இலேகியம், தேற்றான் இலேகியம், வெண்பூசணி இலேகியம் முதலியவற்றைத் தக்க அளவில் வழங்கலாம்.

**வடகம்**

- ❖ தாளிசாதி வடகம்: சுண்டையளவு வடகத்தைப் பொடித்துத் தேன் கலந்து காலை, மாலை கொடுக்கப் பக்கச் சூலை. குன்மச் சூலை ஆமச்சூலை முதலியன தீரும்.
- ❖ பிரண்டை வடகம்: ஒரு உருண்டையைப் பொடித்துத் தேனில் அல்லது மோரில் அனுபானித்துக் காலை, மாலை கொடுக்க ஆமச்சூலை, குன்மச் சூலை குணமாகும். பசித்தீ மிகும். உணவு எளிதில் சீரணமாகும்.
- ❖ கடுகுரோகணி வடகம்: ஒரு உருண்டையைக் காலை, மாலை முன்போலக் கொடுக்கப் பித்தச் சூலை குணமாகும்.
- ❖ கறிவேப்பிலை வடகம். முன் போலவே வழங்க குன்மச் சூலை, ஆமச் சூலை குணமாகும்.

**சுண்ணம்**

1. நவாச்சாரச் சுண்ணம் அல்லது கட்டு: கம்பி நவாச்சாரம் 5 பலம் ஒரே கட்டியாக எடுத்துக் கொண்டு அதற்குக் கவசம் செய்ய

| | |
|---|---|
| வெடியுப்பு | 4 பலம் |
| பூநீறு | 3 பலம் |
| துருசு | 2 பலம் |
| சீனாக்காரம் | 4 பலம் |
| வெங்காரம் | 6 பலம் |
| சவ்வீரம் | 8 பலம் |
| சுத்தி செய்த அண்ட ஓடு | 7 பலம் |
| சுத்தி செய்த பேரண்ட ஓடு | 8 பலம் |

இந்த எட்டு மருந்துகளையும் தூள் செய்து ஒன்றாய் முறைப்படி கலந்து, கல்வத்தில் நன்றாய்ப் பசைபோல அரைத்து நவாச்சாரக் கட்டிக்கு அங்கி பூட்டி, சீலைமண் செய்து உலர்த்தி ஒரு குழியில் காற்றில்லாவிடத்தில் 100 வறட்டியில் புடமிட்டு ஆறவிட்டெடுக்க நவாச்சாரம் கட்டாக இருக்கும். அது சுண்ணமாகவுமிருக்கும்.

இதில் அரிசி எடை எடுத்து, திரிகடுகுத் தூளுடன் தேனும் கலந்து இரு வேளை கொடுக்க, சூலை முதலான வளி நோய்கள் தீரும்.

- கறுவங்கச் சுண்ணம்: 120 முதல் 180 மி.கிராம் வரை இருவேளை பாலுடன் வழங்க வளிச்சூலை, மேகச்சூலை போன்றன நீங்கும்.
- வெடியுப்புச் சுண்ணம்: மேற்கண்ட அளவில் பாலுடன் உண்ண, சிறுநீரைக் கட்டுப்படுத்தி உடலை வீங்கச் செய்யும் குண்டிக்காய் உறுப்பின் பாதிப்புகளைக் கொண்ட உக்காரச் சூலை நீங்கும்.

## வெளி மருந்துகள்

### தைலம் தடவி ஒற்றடமிடுதல்

வளிச் சூலை, மேகச் சூலை போன்றவற்றில் மெழுகுத் தைலம் தடவலாம். இதற்கு ஒற்றடம் தேவையில்லை. மற்றத் தைலங்களான வாதகேசரித் தைலம், அர்க்கட்சிரத் தைலம், சடாமாஞ்சில் தைலம், குக்கில் தைலம், விடமுட்டித் தைலம் ஆகியவற்றில் ஏதேனுமொன்றை வலியுள்ள இடங்களில் தடவவும் தவிடு, நொச்சியிலை, முடக்கத்தானிலை, வாதமடக்கியிலை, சிற்றாமணக்கிலை, இவற்றில் ஏதேனும் ஒன்றை ஆமணக்கெண்ணெய் தெளித்து வதக்கிப் பொட்டலம் கட்டி ஒற்றடம் இடலாம்.

### உணவு

வாயுவைப் பெருக்கக்கூடிய உருளை, சேப்பங்கிழங்கு, வாழைக்காய், மாமிசம், தட்டைப் பயறு, மொச்சை முதலாய ஆகாரங்களை நீக்கி இலகுவான உணவுகளை அருந்தவேண்டும். ஆமச்சூலை, குன்மச்சூலை போன்ற நோய்களில் கஞ்சி வடிவான ஆகாரம் கொள்ளுதல் நன்று.

## பக்கச்சூலைக்கு மருத்துவம்

### கழிச்சலுக்கு

சுரம் இருந்தால் அட்டபைரவ மாத்திரை ஒன்று அல்லது இரண்டைக் காலையில் கொடுக்கலாம். சுரம் இல்லாவிடில் மாந்த எண்ணெய் 5மிலி. காலையில் மட்டும் வழங்கலாம்.

### உள் மருந்துகள்

மாத்திரை

விட்ணுசக்கரமாத்திரையில் 1 அல்லது 2 மாத்திரையை, 1 வேளை அல்லது 2 வேளை இஞ்சிச் சாற்றில் வழங்கவும்.

பற்பம்

முத்துச்சிப்பிப் பற்பத்தை 60 மிகி. முதல் 120 மிகி. வரை பாலுடன் 3 வேளை கொடுக்கலாம்.

சூரணம்

திரிகடுகு சூரணம் அல்லது தாளிசாதி சூரணம் 300 முதல் 600 மிகி. வரை 2 வேளை தேனுடன் உண்ணலாம்.

குடிநீர்

ஆடாதோடைக்குடிநீர் அல்லது அரத்தைக் குடிநீர் 30 மிகி. முதல் 60 மிகி. வரை தேனுடன் 2 வேளை பருகலாம்.

செந்தூரம்

பூரண சந்திரோதயம் 30 முதல் 60 மிகி. சயகுலாந்தகம் 30 முதல் 60 மிகி. இலிங்கச் செந்தூரம் 60 முதல் 120 மிகி.

கருப்பு

கஸ்தூரி கருப்பு 100 முதல் 200 மிகி. தாளகக் கருப்பு 60 மிகி.

வடகம்

தாளிசாதி வடகத்தை வாயிலடக்கிக் கொள்ளவும். சுக்கு, மிளகாய்க் காம்பு, காயம், கடுகு, எள் இவற்றை நீர் அல்லது சாராயம் விட்டரைத்துப் பற்றிடவும்.

**உணவு**

குளிர்ச்சியான பொருளை நீக்கி, கஞ்சி உணவு கொள்ளலாம்.

**கரபாதச்சூலை**

கழிச்சலுக்கு

திராட்சாதிக் குடிநீர் 100 மிலி. காலையில்.

**உள் மருந்து**

பற்பம்

முத்துச்சிப்பிப் பற்பம் 60 முதல் 120 மிகி. 3 வேளை பாலுடன்.

செந்தூரம்

அயக்காந்தம், ஆறுமுகம், அன்னபேதி 120 முதல் 180 மிகி. ஏதாவதொன்று 2 வேளை தேனுடன்.

இலேகியம்

அமுக்கரா இலேகியம் 5 கி. 2 வேளை.

வெளி மருந்து: குங்கிலியத் தைலம், அருகன் தைலம், மருதோன்றி கற்கம் ஆகியவற்றை அரைத்து உள்ளங்கை, உள்ளங்காலில் தடவலாம்.

**மேகச்சூலை வளிச்சூலைக்கு**

**கழிச்சலுக்கு**

மேகநாதத் தைலம் 30 மிலி

வாதநாசத் தைலம் 30 மிலி

மெருகுள்ளித் தைலம் 15 மிலி

அகத்தியர் குழம்பு 30 மிகி

சித்தாதி எண்ணெய் 5 துளி

காக்கட்டான் மாத்திரை 1 அல்லது 2 மாத்திரை

இவற்றில் ஏதேனும் ஒன்று.

**உள் மருந்து**

**செந்தூரம்**

அயவீரச் செந்தூரம்

ஆறுமுகச் செந்தூரம்

சூலை நோய்

சண்டமாருதச் செந்தூரம்

இவற்றில் ஏதேனுமொன்று 60 முதல் 120 மிகி. அளவில்.

இரசகந்தி மெழுகு

வான்மெழுகு

இடிவல்லாதி மெழுகு

நந்தி மெழுகு

இவற்றில் ஏதேனும் ஒன்று 200 மிகி. அளவில், 2 வேளை பனைவெல்லத்துடன் வழங்க வேண்டும்.

உடலில் வீக்கமிருப்பின் நீர்முள்ளிக் குடிநீரைத் தக்க அளவில் வழங்க வேண்டும். சுரமிருப்பின் சிற்றாமுட்டிக் குடிநீர் வழங்கலாம்.

**வெளிமருந்து**

குக்கில் தைலம், வாதகேசரித் தைலம், மெழுகுத் தைலம்

போன்ற தைலங்களைத் தடவலாம். தேவைப்படின் நொச்சி அல்லது தழுதாழையைக் கொண்டு ஒற்றடமிட வேண்டும்.

உணவு

வளித் தாதுவை மிகுதிப்படுத்தும் உணவுப் பொருட்களை நீக்க வேண்டும்.

**தூரச்சூலை, கற்பச்சூலை, நிதம்பச் சூலைக்கு மருந்து**

இந்நோய்களில் கீழ்க்கண்ட மருந்துகள் நல்ல பயன் அளிக்கும்:

பட்டுக்கருப்பு

அன்னபேதி

திரிகடுகு

குன்மகுடோரி மெழுகு

குமட்டி மெழுகு

குமட்டி உப்பு

இவற்றுடன் சூலைக்கான பிற மருந்துகளான இடிவல்லாதி, இரசக்கந்தி மெழுகு முதலியனவும் வழங்கலாம்.

**உக்காரச் சூலைக்கு மருத்துவம்**

கழிச்சலுக்கு: மூலக்குடாரத்தைலம் 15 முதல் 30 மிலி. வழங்கலாம். அல்லது காக்கட்டான் மாத்திரை 1 அல்லது 2 மாத்திரை மட்டும் வழங்கலாம்.

**உள் மருந்து**

சலோதாரி மணி 1 மாத்திரை

சலமஞ்சரி 1 மாத்திரை

வெடி அன்னபேதிச் செந்தூரம்

வெடியுப்புச் சுண்ணம்

குக்கில் பற்பம்

சிலாசத்துப் பற்பம்

நண்டுக்கல் பற்பம் 120 மிகி. இவை ஏதேனுமொன்றை 3 வேளை பாலுடன் கொடுக்கலாம்.

விரால் மீன் தலைக்கல் பற்பம் 100 முதல் 200 மிகி. வழங்கலாம்.

"அகத்தியர் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000" என்னும் நூலில் கூறப்பட்ட சூலை நோய்க்கான மருத்துவ முறைகள் வருமாறு:

- ❖ பிரப்பங் கிழங்கு 3/4 பலம், திப்பிலி மூலம் 1/4 பலம், பறங்கிப்பட்டைத்தூள் 1/2 பலம். இவற்றைக் குடிநீரிட்டுக் குடிக்க உட்காரசூலை தீரும்.
- ❖ கடுகுரோகணியை இஞ்சிச் சாற்றில் அரைத்துத் தடவ சூலை, இசிவு, மார்புவலி தீரும்.
- ❖ சீதேவி செங்கழுநீர் வேரை அதன் இலைச்சாற்றால் அரைத்துக் காய்ச்சிப் பற்றிட மூட்டுவலி, பிடிப்பு, சூலை தீரும்.
- ❖ வசம்பு சுட்ட சாம்பலுடன் சுக்கு சேர்த்து முருங்கைப்பட்டைச் சாற்றால் அரைத்துக் காய்ச்சி வலிக்கும் இடங்களில் பற்றிட வலி நீங்கும்.
- ❖ நுணா, இலுப்பை, பொடுதலைச் சாறு எண்ணெய் வகைக்கு 1 படி. இவற்றைக் காய்ச்சி 1 மாகாணி தினம் குடிக்கச் சூலை தீரும்.
- ❖ சுக்கு, கறுங்கொள்ளு, சித்திரமூலம், ஆயில்பட்டை. இவற்றைக் கொண்டு குடிநீர் செய்து குடிக்க வளிச்சூலை தீரும்.
- ❖ பாலில் சுத்தி செய்த கந்தகத்திற்கு 4இல் 1 பங்கு மிளகுப் பொடி சேர்த்தரைத்து இலுப்பை இலைச்சாறு, எள்ளெண்ணெய் இவற்றுடன் சேர்த்து 1/4 பலம் தூவிக் குடிக்க வேண்டும்.

- கல்லுப்பு 10 பலம், தாளகம் 1 பலம். இவற்றைப் பொடி செய்து ஒரு குகையில் இட்டு வாய்மூடி சீலைமண் செய்து கொல்லன் உலையில் வைத்து 4 நாழிகை ஊதவேண்டும். பின் அதிலிருந்து எடுத்த மருந்தைக் குன்றியளவாக உண்ண வளிச்சூலை தீரும்.
- வெங்காரம், இந்துப்பு, வெற்றிலைச்சாறு, திப்பிலி, பூண்டுத்தைலம், விளக்கெண்ணெய், பெருங்காயம் சம அளவு சேர்த்துண்ண, வளிச் சூலை தீரும்.
- வசம்பு 1/2 பலம், சுக்கு 1/4 பலம், ஓமம் 1/4 பலம் எடுத்துக் குடிநீரிட்டுக் கொண்டு அத்துடன் 1 பலம் பெருங்காயம் சேர்த்து அருந்த தூரச் சூலை தீரும்.
- சாறணை வேரைத் தயிரில் அரைத்து இடுப்பில் பூசி அனலில் காட்ட இடுப்புவலி தீரும். இவ்வாறே சிவதை வேரையும் செய்யலாம்.

# 2

# குன்மம்

### முன்னுரை

'வாதபந்தமலாது குன்மம் வாராது' என்று தேரன் கூறியதற்கிணங்க, குன்மம் என்ற நோய் வளியின் கேட்டால் உண்டாவது என்பதை அறியலாம். வயிற்றில் காற்று கூடி உருண்டையைப் போல் திரண்டுருண்டு இங்குமங்குமாக உலாவித் துன்புறுத்தும் இயல்பு உடையதால் இந்நோய்க்குக் குன்மம் எனப் பெயரிட்டனர் போலும்.

இந்நோயில் உண்ட உணவு செரியாது. உண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் வயிற்றில் தாங்க முடியாத எரிச்சலையும் வலியையும் உண்டாக்கி, உண்ட உணவை வாந்தியெழச் செய்து, உட்சென்ற உணவைப் பயனற்றதாக்கும். அதனால் உடலின் வன்மை நாளுக்குநாள் மெலிவடைந்து கொண்டே வந்து உடல் குன்றும். குன்றிய உடலின் அளவாக மனமும் குன்றும். எனவே உடலையும் மனதையும் குன்றச் செய்யும் இயல்புடைய இந்நோய்க்குக் குன்மம் எனப் பெயரிட்டதாகவும் கூறுவர்.

### நோய் தோன்றும் காரணம்

- மிகுதியும் சூடுள்ள பொருட்களையும் வாயுப் பொருட்களையும் மண், உமி, கல், தூசு, மயிர், நெல்லின் மூக்கு ஆகியவை கலந்த பொருட்களையும் உண்ணல்
- சுனைநீர், ஓட்டமற்ற நீர், சுண்ணாம்பு கலந்த நீர் ஆகியவைகளை அருந்துதல்
- தேங்காய்ப் பால் போன்ற மந்தப் பொருள்களை மிகுதியும் கொள்ளல்
- அடிக்கடி சினம் கொள்ளல்

- ❖ பட்டினி இருத்தல்
- ❖ மனச்சலிப்பு
- ❖ துக்கம் ஆகியவற்றால் இந்நோய் உண்டாகும்.

மேற்கூறிய காரணங்களால் மாசு படிந்து கிருமிகள் உண்டாகி வயிற்றினுள் சுரக்கும் நொதிகள், அமிலங்கள் முதலியவற்றில் மாறுபாடுகளை ஏற்படுத்தி, அங்குள்ள உதானன், சமானன் ஆகிய வாயுக்களைக் கேடடையச் செய்து, வலி, எரிச்சல், சீரணக்கேடு, வாந்தி முதலியவற்றை உண்டு பண்ணும். யோகாசனம் செய்வோர் மூச்சை அடக்குவதாலும் இந்நோய் உண்டாகும் என்று கூறுவர்.

இந்நோயில் வயிற்றில் உள்ள சமாக்கினி தீட்சணாக்கினியாகவோ, மந்தாக்கினியாகவோ மேற்கண்ட காரணங்களால் மாறுபாடு அடைகின்றது. எனவே இயற்கையாகச் செயல்பட வேண்டிய செரிமானத் தொழில் பாதிப்படைவதுடன், வயிற்றில் புண் ஏற்பட்டுத் தாங்க முடியாத வலியை ஏற்படுத்தும். இதனை முதலிலேயே சரியாகக் கவனிக்கத் தவறும் பொழுது அதுவே கட்டியாகவும், புற்று நோயாகவும் மாறக் கூடிய நிலை உண்டாகும்.

**வகைகள்**

"யூகி வைத்திய சிந்தாமணி 800" என்னும் நூலில் குன்மம் எண் வகையாகக் கூறப்படுகிறது. அவையாவன:

1. வளி குன்மம்
2. அழல் குன்மம்
3. ஐயக் குன்மம்
4. சன்னி (முக்குற்றக்) குன்மம்
5. வாயு (கால்கள்) குன்மம்*
6. எரி குன்மம்
7. சத்தி (வாந்தி) குன்மம்
8. வலி குன்மம் எனப்பனவாகும்

---

* கால்கள்: உயிர்க்கால் (பிராணன்), கீழ்நோக்குக்கால் (அபானன்), மேல்நோக்குக்கால் (உதானன்), பரவுகால் (வியானன்) முதலியன.

திரிகண்ட முனிவர் எண் வகைக் குன்மங்களைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

1. வளி குன்மம்
2. அழல் குன்மம்
3. ஐயக் குன்மம்
4. வளி அழல் குன்மம்
5. வளி ஐயக் குன்மம்
6. அழல் ஐயக் குன்மம்
7. திரிதோடக் குன்மம்
8. இரத்தக் குன்மம்

இவர் இரத்தக் குன்மத்தை மேலும் இருவகையாக இரத்தவாதக் குன்மம், இரத்தவாதப் பித்தக் குன்மம் எனப் பிரிக்கிறார்.

சில நூல்களில் குன்மத்தை:

1. சாமானிய வளி குன்மம்
2. சாமானிய அழல் குன்மம்
3. சாமானிய ஐயக் குன்மம்

என மூன்று வகையாகத் தொகுத்துள்ளனர். வேறு சில நூல்களில் எண் வகைக் குன்மங்களைக் கீழ்க்கண்ட பெயரில் வழங்கியுள்ளனர்:

1. வளி குன்மம்
2. அழல் குன்மம்
3. ஐயக் குன்மம்
4. முத் தாது வேறுபாடு குன்மம்
5. பாயுறு குன்மம்
6. எரி குன்மம்
7. வாந்தி குன்மம்
8. வலி குன்மம் என்பனவாகும்.

வேறு சில நூல்களில் எண் வகைக் குன்மங்களில் சூலை குன்மம் என்பது ஒருவகையாகக் கூறப்பட்டுள்ளது. இதை வாயு குன்மத்துக்கு ஒப்பானது என்று

கூறுவர். முத்தாதுக்களின் பாதிப்பின் அடிப்படையில் குன்ம வகைகளைத் திருமூலர் கீழ்க்கண்டவாறு பிரித்துக் கூறுகிறார்:

I. வளித் தாது பாதிப்பால் பிறக்கும் குன்மம்:

1. வளி குன்மம்
2. வாயு குன்மம் (சூலை குன்மம்)
3. வலி குன்மம்

II. அழல் தாது பாதிப்பால் பிறப்பன:

1. எரி குன்மம்
2. வாந்தி குன்மம்
3. அழல் குன்மம்

III. ஐயத் தாது பாதிப்பால் பிறப்பன:

1. ஐயக் குன்மம்
2. சன்னி குன்மம்

**குறிகுணங்கள்**

யூகி முனிவர் பிரிவுப்படியான எண் வகைக் குன்ம நோய்களின் குறிகுணங்களாவன:

**1. வளி குன்மம்**

- ❖ உணவு செல்லாமை
- ❖ வயிற்றில் வலி
- ❖ உடல் வன்மை குறைதல்
- ❖ நடக்க முடியாமை
- ❖ மலம் செல்லாது கட்டுப்படல்
- ❖ உடல் முழுதும் வலித்தல்
- ❖ சோர்வு, மயக்கம், உழலை (நீர்வேட்கை) முதலியன காணல்
- ❖ நாவறட்சி
- ❖ உடல் கனத்துக் காணுதல்
- ❖ உடல் பலம் குன்றுவதால் கை, கால் ஓய்ந்து போதல்

- இந்நோய் 20 வயது முதல் 30 வயது வரையிலும் (வளிக் காலம்) உண்டாகும். இந்நோயில் உணவு உண்டபின் கொடிய வயிற்றுவலியும் வாந்தியும் உண்டாகும. வாந்திக்குப்பின் வலி சற்றுக் குறையும். வாந்தியில் சிறிது குருதியும் வெளியாகும். அக்குறுதி கறுத்திருக்கும். நாட்கள் சென்றால் ஆயுட்காலம் பூராவும் செரியாமையை உண்டாக்கும். பசியிருப்பினும் சாப்பிடப் பிரியம் இராது. சாப்பிட்டாலும் உடனே கட்டாயமாய் வாந்தி செய்விக்கத் தோன்றும்.

## 2. அழல் குன்மம்

- இந்நோயில் எழுந்த அழல் குற்ற மிகுதிக்கேற்ப வயிற்றில் எரிச்சலை உண்டாக்கி, வாய் குமட்டிக் குமட்டி வாந்தி செய்யும். வாந்தியுடன் கோழையும் பித்தமும் கலந்து காணும்.
- வாந்திக்குப் பின் மயக்கம் உண்டாகும்.
- வாந்தியாக ஆக நெஞ்சிலும் வயிற்றிலும் எரிச்சல் மிகுதியாகி, மேல் வயிறு வலிக்கும்.
- சிறுநீர் சிவந்து காணும்.
- நீர்வேட்கை அதிகமாகும்.
- தலை சுற்றும்.
- எரு கட்டுப்படும்.
- உண்ட உணவு வாந்தியாக வெளியாகி விடுவதால் உடல் வன்மை குறைந்து குருதி கேடடைந்து உடலை மஞ்சளிக்கச் செய்யும்.
- உடல் சூடாய்த் தோன்றும்.
- கை, கால் ஓய்ந்து காணும்.
- வெயிலில் செல்ல, தலை சுற்றல் காணும்.
- நோய் முதிர முதிர சாப்பிட்ட சிறிது நேரத்தில் வயிறு மிகுதியாய் வலிக்கும்.
- வயிறு கனக்கும்.
- பசித்தீ கேடடைந்து புசிப்பில் வெறுப்புண்டாகும்.
- சுவையின்மை, நாவறளல், அயர்ச்சி, சோம்பல், தலைநோய், தூக்கமின்மை, புளித்தேப்பம் முதலிய குறிகுணங்கள் தோன்றும்.

இந்நோய் முப்பது முதல் 50 வயது வரை வரக்கூடியதெனச் சிலர் கூறுவர்.

**3. ஐயக் குன்மம்**

- உணவில் வெறுப்புண்டாக்கும்.
- உடலின் ஊட்டத்தைக் கெடுத்து, உடலை இளைக்கச் செய்து வெளுப்பாக்கும்.
- தலை சுற்றும்.
- நெஞ்சு புகைக்கும்.
- நடுக்கம் ஏற்படும்.
- அடிக்கடி திடுக்கிடல் உண்டாகும்.
- ஐயக்காலமாகிய முதுமையில் இந்நோய் தோன்றுமாயின் கெடுதிகள் பல செய்யும். அவைகள்: உண்ட உணவு செரியாமல் அகட்டிலேயே தங்கிப் புளித்து, புலால் மணத்தோடு கூடி வாந்தியாக வெளியே வருமே தவிர, கீழ்நோக்கி வெளியாகாது.
- வயிறு மத்தளம் போல் உப்பி ஏப்பமுண்டாகும்.
- வயிற்றுள் நீர் நிறைந்து உடல் அசையும் போதெல்லாம் ஒலி செய்யும்.
- அடிக்கடி வெள்ளோக்காளம் வரும்.
- வயிற்றுள் தங்கிய காற்று உருண்டை போல் உலாவுவதுமுண்டு.
- மேற்சொன்ன குறிகுணங்களுடன் வயிறு இடைவிடாது வலிக்கும்.
- குருதி வாந்தி மிகுதியும் உண்டாகும்.
- நாளுக்கு நாள் உடல் மெலிவடையும்.
- இது அகட்டில் (வயிற்றில்) உள்ள புற்றுநோயோ என நினைப்பதற்கு இடம் உண்டாகும்.

**4. சன்னி (முக்குற்றக்) குன்மம்**

- உணவைச் சரியாக உண்ணமுடியாது.
- மயக்கமும், தியக்கமும், குளிரும் உண்டாகும்.
- அடி வயிறு இரைச்சலுடன் காணும்.
- வாயில் நீர் ஊறிக் கொண்டேயிருக்கும்.
- வயிறு உப்பி இரைந்து வெப்பமாக மலம் கழியும்.
- வாய் நீர் உப்புக் கரிக்கும்.
- நெஞ்சு புகைந்து காணும்.

- மூச்சு விட முடியாமல் திக்குமுக்காடும்.
- தேகம் குளிர்ந்து காணும்.

## 5. வாயு (கால்) குன்மம்

- உண்ட உணவு செரியாமல் உண்டது போலவே வாந்தியாகச் செய்யும்.
- உணவில் வெறுப்புத் தோன்றி சாப்பிட விருப்பமிராது.
- உண்ட உணவு சிறிதாயினும், வயிறு காற்றடங்கிய துருத்தி போல உப்பி உடல் வன்மை குறையும்.
- நடக்க முடியாமல் ஓய்ச்சல் உண்டாகும்.
- உடல் வியர்க்கும்.
- வயிற்றுள் காற்று மிகுந்து புரண்டு வில்லைப் போல இழுத்துப் பிடித்துக் கொண்டு தாங்க முடியாத வலியை உண்டாக்கும்.
- வளித்தாது மிகுந்து அகட்டைக் கேடடையச் செய்து, கீழ்நோக்குக்கால் தூண்டப்பட்டு, உண்ட உணவைச் செரிப்பிக்காதபடி வயிற்றை நோகச் செய்யும். அச் செரியா உணவால் நெஞ்சு குத்தல், குடலை முறுக்குவது போல் வலி உண்டாதல் என்ற குறிகளைக் காட்டும்.

## 6. எரி குன்மம்

- உணவு உட்கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் வயிற்றில் தாங்க முடியாத எரிச்சலை உண்டாக்கி, வயிற்றை முறுக்கியது போன்ற வலியைத் தரும்.
- வாய் நீர் சுரக்கும்.
- தலை வலிக்கும்.
- புளித்தேப்பம் உண்டாகும்.
- வயிறு ஊதி இரைந்து கழியும்.
- மயிர்க்கால் தோறும் வெடிக்கும்.
- வியர்வை உண்டாகும்.
- உடலெங்கும் எரிச்சல் காணும்.
- குடல் இளைக்கும்.

**7. சத்தி (வாந்தி) குன்மம்**

- உண்ட உணவு செரியாமை
- வாந்தி
- மயக்கம், திக்குமுக்காடல்
- வயிறு வலித்தல்
- வயிற்றுப் பொருமல் உண்டாகுதல்
- மலக்கட்டு காணல்
- உடலில் அனல் வீசுவதுபோல் தோன்றல்
- நடக்க முடியாமை
- சுவையின்மை
- நரம்புகளெல்லாம் புடைத்துத் திமிர் உண்டாதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

**8. வலி குன்மம்**

- வயிற்றில் சென்ற உணவு செரியாமல் அத்துடன் காற்றும் கூடி வயிறு ஊதும்.
- உடல் தோல் சுருங்கி இளைக்கும்.
- மனந்தளரல்
- தூக்கம் குறைதல்
- உணவில் வெறுப்புண்டாதல்
- வயிறு இரைந்து கழிதல்
- விலாப் பக்கத்தில் முள் செருகியது போலக் குத்தல்
- முதுகுத் தண்டும் இடுப்பும் வலித்தல்
- உடல் முழுமையும் வலித்தல்
- அடிக்கடி சுரம் உண்டாதல்
- பொய்ப்பசி காணுதல் முதலியன இதன் குறிகுணங்களாம்.

உயிர்த்தாதுக்களின் பாதிப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட எண் வகைக் குன்மங்களின் குறிகுணங்கள் 'சரபேந்திரர் வைத்திய முறை'யில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:

## 1. வளி குன்மம்

- நோய் உண்டாகும் இடமும், வலி காணும் இடமும் நிலையாக இல்லாமல் மாறிக்கொண்டே இருக்கும்.
- வாயுவும் மலமும் கட்டும்.
- தொண்டை, வாய் உலர்ந்து போகும்.
- தேக நிறமும் மலமும் செம்மை கலந்த கருமையாகும்.
- குளிர்ச்சுரம் காணும்.
- வயிறு, மார்பு, விலா,தலை, தோள்ஆகிய இடங்களில் வலியுண்டாகும்.
- உண்ட உணவு சீரணித்த பின்னர் துன்பம் அதிகப்படும்.
- மீண்டும் சாப்பிட்டவுடன் வலி குறையும்.

## 2. அழல் குன்மம்

- சுரம், தாகம் உண்டாகும்.
- முகம், உடம்பு முதலியன சிவந்து காணும்.
- உணவு சீரணிக்கும் சமயத்தில் வயிற்றில் கடுமையான வலி உண்டாகும்.
- அதி வியர்வை, எரிச்சல் உண்டாகும்.
- வயிற்றைத் தொட்டுப் பார்க்கத் தாங்கமுடியாத வலி காணும்.

## 3. ஐயக் குன்மம்

- உடல் அசைவற்றுப் போதல்
- குளிர் சுரம்
- உடல் வலுவிழத்தல்
- இதயத் துடிப்பு
- இருமல்
- குருதியின்மை
- உடல் கனத்தல்
- உடல் குளிர்ந்து போதல்
- வலி குறைவாகவே இருத்தல்
- வயிற்றில் குன்மமென்னும் கட்டிக் கடினமாகவும் உயர்ந்தும் காணுதல் என்பன தோன்றும்.

4. வளி அழல் குன்மம்
5. வளி ஐயக் குன்மம்
6. அழல் ஐயக் குன்மம்

இம் மூன்று வகைக் குன்மங்களிலும் பாதிக்கப்பட்ட தாதுக்களின் குறிகுணங்கள் கலந்து காணும்.

**7. சந்நிபாதக் குன்மம்**

- ❖ மிகக் கடுமையான வலி வயிற்றில் காணும்.
- ❖ வயிற்றில் எரிச்சல் தோன்றும்.
- ❖ குன்மக் கட்டி கல்லைப் போலக் கெட்டியாகவும் பருத்தும் இருக்கும்.
- ❖ விரைவில் அதுவே பக்குவாகி வெடிப்புக் காணும்.
- ❖ சீக்கிரத்தில் பலவீனம் உண்டாகிப் பசித் தீயும் குறைவுபடும்.
- ❖ இது அசாத்திய நோயாகும்.

**8. இரத்தக் குன்மம்**

- ❖ இது பெண்களுக்கே வரக்கூடியது.
- ❖ இருது (பூப்பு) தோடங்கள் போன்ற காரணங்களால் கர்ப்பம் போன்ற சின்னங்கள் ஏற்படும்.
- ❖ 10 மாதங்கள் கழிந்த பின்பே சிகிச்சை செய்ய வேண்டும்.

**மருத்துவம் செய்யும் முறை**

ஏற்கனவே கூறியவாறு 'வாத பந்தமலாது குன்மம் வாராது' என்பதால் இந்நோயில் முதலில் கேடடைவது வளித் தாதுவேயாகும். அத்தாது கேடடைவதால் அதன் அங்கங்களான வாயுக்கள் அல்லது கால்கள் கேடடைகின்றன. இவற்றுள் மேல்நோக்குக்கால் என்னும் உதானன் கேடடைவதால் வாந்தி, விக்கல், ஏப்பம் போன்ற துன்பங்கள் உண்டாகின்றன. கீழ்நோக்குக்கால் என்னும் அபானன் கேடடைவதால் மலக்கட்டு அல்லது கழிச்சல், வாயு வெளியாகாமல் வயிறு உப்பல், வயிறு புரட்டல் முதலிய குறிகுணங்கள் தோன்றும். வயிற்றில் உள்ள நடுக்கால் என்னும் சமானன் கேடடைவதால் அசீரணம், வயிற்றில் வலி, எரிச்சல், செரியாமை, வயிற்றுமந்தம் முதலிய குறிகுணங்கள் உண்டாகும். உண்ட உணவு சரியாகச் செரித்து உடலில் சேரவொட்டாத சூழ்நிலையில் வியானன் என்னும் பரவுகாலும் கேடடைந்து கை,

கால் சோர்வு, அழற்சி, உடல் மெலிந்து குன்றிப்போதல் போன்ற குறிகுணங்கள் உண்டாகின்றன.

வயிற்றில் உறையும் தீயின் தன்மை சாதாரண நிலையில் சமாக்கினி என்ற நிலையில் இருக்கவேண்டும். இந்நோயில் அந்நிலை மாறி மந்தாக்கினி என்ற தீயின் குறைவுபட்ட நிலையில் சில நேரங்களில் காணப்படும். அந்நிலையில் பசியின்மை, மந்தம், உணவு செரியாமை முதலியன எற்படும். எரி குன்மம் போன்ற அழல் பாதிக்கப்பட்ட குன்ம நோயில் இத்தீயின் அளவு அதிகரித்து தீட்சணாக்கினி என்னும் நிலையை அடைந்து வயிற்றில் எரிச்சல், வலி, வயிறு புண்ணாதல், உண்ட உணவு பித்தத்துடன் வாந்தியாதல், சில நேரங்களில் குருதியும் வெளியாதல் போன்ற நிலை காணப்படும்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வளி, அழல் ஆகியவற்றின் தன்மையை அறிந்து அவற்றைத் தன்னிலை படுத்துவதற்காக வாந்தி அல்லது கழிச்சல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

குன்ம நோயில் வாந்தி, கழிச்சல் போன்றன நோயின் குறிகளாகக் காணப்படின் இதைத் தவிர்த்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல மருத்துவம் செய்தல் வேண்டும். வயிற்று மந்தம், செரியாமை, புளித்தேப்பம், வாய் நீர் ஊறல் போன்ற குறிகுணங்கள் காணப்படுமாகில் அந்நிலையில் வாந்தி செய்விக்கலாம்.

### வாந்தி செய்விக்கப் பயன்படும் மருந்துகள்

1. வாந்தியை உண்டாக்குவதற்குச் சஞ்சீவி மாத்திரை ஒன்றைத் தேனிலிட்டு உரைத்துச் சிறிது இலைக்கள்ளி இலையை வரகு வைக்கோலின் அனலில் வாட்டிப் பிழிந்த சாற்றுடன் காலையில் கொடுக்க வாந்தியாகும். மலக்கட்டும் நீங்கி பேதியாகும்.

2. வசம்பைத் தட்டி முறைப்படி குடிநீராக்கியதில் ஒரு சங்கினளவு புகட்ட வாந்தியாகும்.

3. கடுகு, அழவணவேர், சுக்கு, கோஷ்டம் வகைக்கு ஓரளவாகக் கொண்டு முறைப்படி குடிநீராக்கியதை கால் முதல் அரை ஆழாக்கு வரை கொடுக்க வாந்தியாகும்.

### கழிச்சல் செய்விக்கப் பயன்படும் மருந்துகள்

வளி மீறலைத் தன்னிலைப் படுத்தவும், மலக்கட்டு, வயிறு உப்புசம், வயிறுபுரட்டல் போன்ற குறிகுணங்கள் மேலோங்கி இருக்கும் நிலையிலும் கழிச்சலுக்கு மருந்துகள் கொடுத்துச் சரிப்படுத்துவது அவசியம். அதே சமயம்

இந்நோயில் வயிறு புண்பட்ட நிலையில் காணப்படுமாகையால், அதை மேலும் பாதிக்காமல் இருக்கும்படியான எளிய பேதி மருந்துகளையே கையாளுதல் வேண்டும். அவை பின்வருமாறு:

1. சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலவேர், முப்பட்டைக் கள்ளி வேர்ப்பட்டை வகைக்குப் பலம் அரைக்காலாகக் கொண்டு ஒன்றிரண்டாக இடித்துக் குடிநீராக்கி வடித்துக் கொண்டு அதில் 1/4 முதல் 1/2 ஆழாக்களவு எடுத்து அதில் இந்துப்பு, நவாச்சாரம், கரியுப்பு ஓரளவாகப் பொடித்து ஒரு சிட்டிகையளவு கூட்டி உண்ண கழிச்சலையும், ஒரு முறை வாந்தியையும் எழச் செய்யும்

2. பேரீச்சங்காய், கொட்டைத் திராட்சை, சீரகம், ஓமம், சீந்தில் தண்டு, வெட்டிவேர், நிலாவாரை, அதிமதுரம், கடுகுரோகணி ஆகியவைகளை ஓரளவாகக் கொண்டு குடிநீரிட்டதில் அரை ஆழாக்குக் கொண்டு அதில் பனங்கற்கண்டும் இந்துப்பும் சிறிது கூட்டிக் கொடுக்கக் கழிச்சலுண்டாகும். இது அழல் தாது பாதிப்பால் வரும் குன்ம நோய்க்குத் தகுந்ததாகும்.

3. கொம்புக் கள்ளியைச் சுட்டெடுத்த சாம்பல், கொடிவேலி வேர்ப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அக்கரகாரம், அதிமதுரம், சிவதை வேர், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய் வகைக்கு ஓரளவாகக் கொண்டு இடித்ததில் இந்துப்பு சிறிது கூட்டிக் கொடுக்கக் கழிச்சலாகும்.

4. பிரண்டை வற்றல், சிற்றாமுட்டி, சீரகம், ஓமம், சுக்கு, மிளகு, சித்திரமூலம், பெருங்காயம், சிவதை வேர், சதகுப்பை, காட்டு எள்ளு வகைக்கு பலம் இரண்டு. கூகைநீறு பலம் பத்து. ஒரு சாலில் இரண்டுபடி நீரிட்டு அதில் 5 பலம் எடையுள்ள கள்ளியை சிதைத்து நீரிலிட்டு அத்துடன் அரைப்படிப் பசுந்தயிர் கூட்டிச் சாலின் வாய்க்கு ஒரு சீலையைக் கட்டி அதன் மேல் பொடிகளையிட்டு மேல்மூடி, பிட்டவியலாக அவித்தெடுத்து நன்றாக உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இப்பொடியில் ஒரு விரற்கடையளவு கொள்ளக் கழிச்சலாகும். எருவாயில் கூடிய வாயுக்கள் நீங்கும்.

5. பிரண்டைச் சாறு, முடக்கறுத்தான் சாறு, துளசிச் சாறு, புதினாச் சாறு, புளியாரைச் சாறு வகைக்குப் படி ஒன்று. சித்திரமூல வேர்ப்பட்டை, வெள்ளைச் சாறணை வேர், சிறுதேக்கு, வசம்பு, அமுக்கரா, சீந்தில் தண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் வகைக்குப் பலம் இரண்டு. கடுகுரோகணி, சிவதை, அதிமதுரம் பூண்டுத்திரி வகைக்குப் பலம் ஒன்று. நெய் படி இரண்டு ஆகக் கொண்டு சாறுவகைகளையும் நெய்யையும் கூட்டியதில் கடைச் சரக்குகளைப் பால் விட்டரைத்து அதில் கலக்கிச் சிறு தீயாகக் காய்த்து வடித்து வைத்துக் கொண்டு, தக்க அளவில் சிறிது இந்துப்பு கூட்டிக் கொடுக்கக் கழிச்சல் உண்டாகும்.

6. கடுக்காய் கொட்டை நீக்கியது பலம் பத்து கொண்டு அத்துடன் வாய் விடங்கம், சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுதேக்கு, கடுகுரோகணீ, சிவதைவேர், சுண்டை வற்றல், கள்ளிவேர்ப்பட்டை, ஊழலாற்றிப் பட்டை வகைக்குப் பலம் ஒன்றாக இடித்துக் கூட்டி நான்கு படி தயிர்த்தெளிவிட்டுக் காய்த்து ஒரு படியாகக் குறுக்கியதில் ஒருபடி நெய்யிட்டு அடுப்பேற்றி அதில் சீரகம், சோம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, திப்பிலி வகைக்குப் பலம் 1/2 யாகப் பொடித்துப் பால்விட்டரைத்துக் கலக்கிப் பதத்தில் வடிக்கவும். நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக்க வளி குன்மமும், வாயு குன்மமும் போம். இரண்டு மூன்று முறை கழியச் செய்யும்.

7. கொட்டை முந்திரிகை, பேரீந்து, பற்பாடகம்,சீந்தில், வெட்டிவேர், விலாமிச்சு வேர், அதிமதுரம், கோரைக் கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய் வகைக்குப் பலம் மூன்று; கடுக்காய் பலம் இருபதாகக் கூட்டி இடித்து நான்கு படி நீர் விட்டு எட்டிலொன்றாகக் குறுக்கி, அரைப்படி பசுநெய்யில் கூட்டி அடுப்பிலிட்டுச் சீரகம், சோம்பு, சாதிப்பத்திரி, சாதிக்காய், இலவங்கம், இலவங்கப்பட்டை வகைக்கு ஒரு வராகனெடையாகக் கொண்டு, பால் விட்டு அரைத்தெடுத்து அந்நெய்யில் கூட்டிக் காய்த்துத் திரண்டு வரும்போது 1 பலம் பெருங்காயத்தைப் பொரித்துப் பொடித்துக் கூட்டி ஒரு கொதி வந்தபின் வடித்தெடுக்கவும். 1 முதல் 3 கரண்டியளவு அழல் தாது பாதிப்பால் வரும் குன்மத்திற்குக் கொடுக்கக் கழியச் செய்யும்.

8. எண்ணெய் வகை பேதி மருந்துகளில் சித்தாதி எண்ணெய், மெருகுள்ளி எண்ணெய், வாதராக்கத எண்ணெய், குமட்டி எண்ணெய் முதலியவைகளில் நோய் வன்மைக்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக்கக் கழிச்சலையும் வாந்தியையும் உண்டாக்கி நோயைப் போக்கும்.

## நோய்க்கான உள் மருந்துகள்

### கற்க மருந்துகள்

1. குன்மக் குடோரிக் கற்கம்: குன்மக் குடோரிப் பூண்டு இலை பலம் ஒன்று, மிளகு பலம் அரை, உப்பு பலம் வீசம் ஆகக் கொண்டு அம்மியிலிட்டு நெகிழ அரைத்து அடையாகத் தட்டியதில், காலை மாலையாக சுண்டைக்காயளவு உண்ணவும். நாளொன்றுக்கு ஒரு சுண்டையாக உயர்த்திக் கொண்டே வந்து, ஐந்து சுண்டையளவு வரை வந்தபின் அவ்வளவே நோய் தீருமட்டும் சாப்பிட்டுச் சிறிது நீர் கொள்ளவும். கற்கத்தைத் தினமும் காலையில் சூரியனில் காயவைத்து எடுக்கக் கெடாது.

2. சில்லிக் கீரை, பொன்னாங்காணிக்கீரை இவைகளை அரைத்துச் சிறிது பனைவெல்லம் கூட்டி, வெள்ளாட்டுப் பாலோடு தினம் உட்கொண்டுவர எரி குன்மம் தீரும்.

3. இஞ்சியை மேல்தோல் சீவி, சிறு துண்டுகளாகத் தரித்து, பசுநெய் குத்தி இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்து பலம் ஐந்துடன் மிளகு, திப்பிலி, கோஷ்டம், கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்குப் பலம் 1/2 பொடித்துப் போட்டுக் கூட்டிக் கொண்டதில், ஒரு வராகனெடை காலை, மாலையாகச் சிறிது சர்க்கரை கூட்டி உண்ணவும்.

4. ஓமத்தில் நெருஞ்சியிலைச் சாறு விட்டு உலர்த்திப் பொடித்ததை வேண்டிய அளவில் வெற்றிலைச் சாற்றுடன் உட்கொண்டு வரக் குன்மநோய் நிலையாது. உடலின் திமிரும் நீங்கும்.

***குடிநீர் வகைகள்***

1. குன்மக் குடோரிப்பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சாதிக்காய் வகைக்குப் பலம் ஒன்று. கள்ளி வேர்ப்பட்டை 1/2 பலம் கூட்டி, எட்டுப் பங்கு நீரிட்டு, எட்டிலொன்றாகக் காய்த்து வடித்துக் காலை, மாலையாகக் கொடுக்க நோய் போகும்.

2. முருங்கைப்பட்டை, வெள்ளைப்பூண்டுத்திரி, சாறணைவேர், வன்னிப்பட்டை, கழற்சிப் பருப்பு, கொழுஞ்சிப் பட்டை, சுக்கு வகைக்கு இரண்டு கழஞ்சு இடித்து, 1 படி நீரிட்டு உழக்காகக் காய்த்துக் காலை, மாலையாகச் சாப்பிடக் குன்மம் போம்.

3. கழற்சிப் பருப்பு, பூண்டு, செவ்வியம், இந்துப்பு, காயம், சுக்கு, ஓமம் இவைகளை இடித்து முறைப்படிக் குடிநீரிட்டுக் கொடுக்கச் சூலை குன்மம் நீங்கும்.

4. நெற்பொரி, பச்சைப்பயறு, வில்வம், முன்னை, ஏலக்காய், சுக்கு, நெல்லி முள்ளி ஆகியவைகளைச் சமன் கூட்டி இளநீர் விட்டு ஒன்றாய்க் குறுக்கி உண்ண சத்தி குன்மம், உழலை, மூர்ச்சை ஆகியவை நீங்கும்.

5. வேலம் பட்டை, நெல்லி வற்றல், நெற்பொரி, பச்சைப் பயறு, வில்வக் கட்டை இவற்றை ஓரளவாகக் கூட்டிப் பொடித்துப் பசுநீர் விட்டுக் குடிநீராக்கியதைக் குடிக்க ஏப்பமும் குன்ம நோயும் போம்.

***பொடி வகைகள்***

1. சாறணைவேர், சுக்கு, இந்துப்பு வகைக்குப் பலம் ஒன்று. மிளகு, திப்பிலி, பூண்டு, ஓமம். வகைக்குப் பலம் இரண்டு. கடுக்காய்த் தோல் பலம் 15. இவைகள்

யாவற்றையும் நன்றாக இடித்துத் தூளாக்கியதில் திருகுக்கள்ளிப் பால் படி ஒன்று, வெள்ளாட்டின் நீர் படி ஒன்று, வெள்ளாட்டுப் பால் படி இரண்டு கூட்டிப் பிசைந்து உலர்த்தவும். பின் இருபது ஆற்றுத் தும்மட்டிக் காயை ஊறுகாய்க்குப் பிளப்பதுபோல் நான்கு கீற்றுகளாகக் கீறியதில் மேற்படித் துகளைத் திணித்துக் கயிறு கொண்டு சுற்றிக் காய்களைப் பானைக்குள் அடுக்கி வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து ஆட்டுப் புழுக்கை கொண்டு புடமிட்டுக் கறுப்பு நிறம் அடையும் நிலையைக் கண்டு அறிந்து தீயாற்றவும். கரியைப் பொடித்து வைத்துக் கொண்டு அரை சிட்டிகை முதல் ஒரு சிட்டிகையளவு, இஞ்சிச்சாறு அல்லது சுக்குக் குடிநீரில் கொடுத்து உப்பு, புளி நீக்கவும். இதனால் குன்ம நோய்கள் யாவும் நீங்கும்.

2. ஆடாதோடை இலையை உலர்த்தி எடுத்த எடைக்கு அரைப்பங்கு தூய்மைப் படுத்திய உப்பும், கால் பங்கு ஓமமும் கூட்டிச் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடிச் சீலைமண் செய்து 60 வறட்டியில் புடமிடச் சாம்பலாகும். இச்சாம்பலில் கால் வராகன் எடை அளவு மிளகுக் குடிநீரில் கொள்ளக் குன்ம நோய் நீங்கும்.

3. உலர்ந்த கையாந்தகரை, வெள்ளுள்ளி, உப்பு மூன்றும் ஓரளவு. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவைகளின் தோல் அவ்வளவு கொண்டு ஒரு பானையிலிட்டு ஓடு மூடிச் சீலைமண் செய்து குழியில் புடமிட்டு எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு அதில் தக்க அளவு கொள்ளக் குன்ம நோய்கள் போகும்.

4. சுக்கு
மிளகு
திப்பிலி
சாதிக்காய்
இலவங்கப்பட்டை-வகைக்குப் பலம் ஒன்று.
ஓமம்
இந்துப்பு
வெடியுப்பு
நவாச்சாரம்-வகைக்குப் பலம் இரண்டு.
வெள்ளுள்ளி
கடுகு
பொரித்த பெருங்காயம்
சாறணைவேர்

கொடிவேலிவேர்ப்பட்டை-வகைக்குப் பலம் மூன்று.

சூரத்துக் கடுக்காய் விதை நீக்கியது - பலம் 15.

இவ்வகைகளைப் பொடித்ததில் கள்ளிப்பால் படி ஒன்றையும் வெள்ளாட்டுச் சிறுநீர் படி நாலையும் கூட்டிப் பிசைந்து நன்றாக உலர்ந்த பின் மீண்டும் பொடிக்கவும். 30 ஆற்றுத் தும்மட்டிக் காயை ஊறுகாய்க்குப் பிளப்பது போல் பிளந்து மேற்படித் துகளை அவற்றின் வாய்க்குள் அடைத்து ஒரு பானையில் அடுக்கி, பானையின் வாயை மூடிச் சீலை மண் செய்து பழைய குப்பைமேட்டில் 100 எருவில் புடமிட்டெடுக்கச் சாம்பலாகும். இச்சாம்பலை எடுத்துப் புட்டியிலடைத்து ஈரமில்லாத இடத்தில் வைத்துக் கொள்ளவும். இதில் ஒரு சிட்டிகை அளவு தேன், இஞ்சிச்சாறு இவைகளில் காலை மாலையாகக் கொடுக்கவும். ஆகாப் பொருட்களை நீக்கவும். வாரம் ஒன்றுக்கு ஐந்து நாட்களாக 4 வாரம் சாப்பிட்டு வர எண்வகைக் குன்மநோய்களும் நீங்கும்.

5. நாரத்தங்காயை வளைய வளையமாகத் தறித்து உப்பு கூட்டி மட்கலத்திலிட்டு, வேண்டிய அளவு கள்ளிப் பால் விட்டு வாய்மூடிச் சீலை மண் செய்து மண்ணடியில் புதைத்து 40 நாட்கள் கழித்த பின்னர் எடுத்து ஒரு துண்டை இரண்டு பங்காக்கிக் காலை, மாலை கொள்ளக் குன்மம் போம்.

**எண்ணெய் வகை**

1. வெள்ளுள்ளி
   நொச்சி
   மூக்கிரட்டை
   காட்டு முருங்கைப் பட்டை
   வெள்ளைச் சாறணை
   ஆடுதீண்டாப்பாளை
   வேளைக் கீரை
   கொட்டைக் கரந்தை
   பிரமி - இவைகளின் சாறு வகைக்கு 1 படி.
   வெள்ளாட்டுப் பால்
   வெள்ளாட்டுச் சிறுநீர்

எலுமிச்சம்பழச் சாறு

புளிப்பு நாரத்தம் பழச்சாறு

செங்கழுநீர்க் கிழங்குச் சாறு

பிரண்டைச் சாறு

நெய்

எண்ணெய்

சிற்றாமணக்கு நெய் - வகைக்கு 1/2 படி.

இவற்றைக் கூட்டிக் கலக்கிச் சிறு தீயால் எரித்துக் குழம்புபோல் சுண்டிவரும்பொழுது அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோஷ்டம், கொடிவேலி வேர்ப்பட்டை, அழிஞ்சில் வேர்ப்பட்டை, சிறுதேக்கு, இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்குப் பலம் ஒன்றாகக் கொண்டு பொடித்து வடித்து மேற்படி குழம்பில் தூவி, கடுகுபோல் திரளும்போது எடுத்து வைத்துக் கொண்டு நெய்யும் கடுகுமாக அரை உச்சிக் கரண்டியளவு காலையில் மட்டும் சாப்பிட்டு வரக் குன்ம வகைகள் யாவும் தீரும்.

| | | |
|---|---|---|
| 2. | பேய்க் குமட்டிச் சாறு | 1 படி |
| | வெள்ளைப்பூண்டுச் சாறு | 1 படி |
| | நெய் | 1/4 படி |
| | விளக்கெண்ணெய் | 1/4 படி |

கூட்டி மெழுகுபதம் வரும் வரையில் துழாவிக் கொண்டே வந்தபின், அதில் இந்துப்பு, நவாச்சாரம், கல்லுப்பு, வெங்காரம், பூநீறு வகைக்குப் பலம் ஒன்று; கடுக்காய்த் தோல் 5 பலம்; சாதிக்காய், சாதிப்பத்திரி, கொடிவேலிவேர், பொரித்த பெருங்காயம் வகைக்குப் பலம் 2 கூட்டிக் கடுகு போலத் திரளும் படியாகச் சிறுக எரியவிட்டு இறக்கியதில் மிளகளவு காலையில் மட்டும் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| 3 | தோல், முளை நீக்கிய பூண்டு | 20 பலம் |
| | பொரித்த பெருங்காயம் | 100 பலம் |
| | மெருகன் கிழங்குத் தோல் | |
| | சீவி உலர்த்தியது | 5 பலம் |
| | கொடிவேலி வேர்ப்பட்டை | 2 1/2 பலம் |
| | கழற்சிப் பருப்பு | 1 பலம் |
| | இந்துப்பு | |

கறியுப்பு
நவாச்சாரம்
வெங்காரம்
சீனாக்காரம்
வெடியுப்பு
வளையலுப்பு-வகைக்கு 1/2 பலம்

இவைகளை நன்றாக இடித்து மை போலரைத்து அதனுடன் சிற்றாமணக்கு நெய் 1 படி, பசுநெய் 1 படி கூட்டிச் சிறு தீயில் எரித்துக் கடுகு போல் திரண்டு வரும்போது எடுத்து யாவற்றையும் புட்டியில் அடைத்துக் கொள்ளவும். இதனில் ஒரு கரண்டி வீதம் கலக்கி எடுத்துக் காலை மாலையாகக் கொடுக்க நோய் போகும்.

## இலேகிய வகைகள்

1. இஞ்சித் தோலை நீக்கிக் குறுக தரித்து நெய்விட்டு வதக்கி உலர்த்திப் பொடித்துச் செய்த பொடி 20 பலம்

பிரண்டையை மோரிலிட்டு உப்பு கூட்டி வற்றலாக்கியதன் பொடி 10 பலம்
கொத்துமல்லி
சீரகம்
சிறுதேக்கு
சிற்றரத்தை
சோம்பு
குரோசாணி ஓமம்
திப்பிலி
மிளகு-இவைகளின் பொடி வகைக்குப் பலம் 1.

| | |
|---|---|
| பனங்கற்கண்டு | 1 வீசை |
| எலுமிச்சம் பழச்சாறு | 1/2 படி |
| புளித்தகாடி | 1/2 படி |
| கொடி நாரத்தைப் பழச்சாறு | 1/2 படி |

இவற்றை எல்லாம் கூட்டிக் கரைத்து வடித்துக் காய்த்து, பாகு போல் திரளும் போது மேற்படி பொடிகளைக் கூட்டியதைச் சிறுகச் சிறுகத் தூவி இளகம் போல் வரும்போது எடுத்துக் கொள்ளவும். இதில் புன்னைக் காயளவு காலை மாலை கொள்ளக் குன்ம நோய் நீங்கும். இந்நோயில் உண்டாகும் வாந்தி நிற்கும்.

2. ஆமணக்கு வேர்
திருகுக் கள்ளியின் வேர்ப்பட்டை
பூவரசின் வேர்ப்பட்டை
பெருமர வேர்ப்பட்டை
சீந்தில் தண்டு
சாறணைவேர்
வில்வவேர்
அமுக்கராக் கிழங்கு
சிறுதேக்கு
சிற்றாமுட்டிவேர் - வகைக்கு 2 பலம்.
சுக்கு
மிளகு
திப்பிலி
சித்திரமூல வேர்ப்பட்டை
கண்டங்கத்தரிவேர்
சீரகம்
கறுஞ்சீரகம்
சோம்பு
குரோசாணி ஓமம்
இலவங்கப்பட்டை
இலவங்கப்பத்திரி
இலவங்கம்
புளிவஞ்சி
சதகுப்பை - வகைக்கு 1 பலம்

இவைகளை ஒன்றிரண்டாக இடித்து 4 படி நீரிலிட்டு எட்டிலொன்றாகக் காய்த்துக் குறுக்கி அத்துடன்

காடி
புளிப்பு மாதுளஞ்சாறு
புளியாரைச்சாறு
இஞ்சிச்சாறு

புளித்த தயிரின் நீர்

நாரத்தம்பழச்சாறு

அரிசி கழுவிய நீர் - வகைக்கு 1/4 படி கூட்டி ஒரு வீசை பனைவெல்லம் சேர்த்து ஒரு கொதிவந்து, வெல்லம் கரைந்தபின் வடித்து வாயகன்ற கடாயிலிட்டுப் பாகுபதமாக வரும்போது அதில்

கொத்துமல்லி

மோடி

யானைத்திப்பிலி

வெண்மிளகு

அசோகுப் பட்டை

வெள்ளிலோத்திரப்பட்டை

புங்கு வேர்ப்பட்டை

பிரண்டை

பெருங்காயம் - இவைகளை வறுத்துப் பொடியாக்கியது வகைக்கு 1 பலம்.

உளுந்துமா

கோதுமைமா

கொள்ளுமா - வகைக்கு உழக்கு, எள்ளுப்பொடி-1ஆழாக்கு. இவைகளை ஒன்றாகக் கலந்து கிண்டி பதத்திலெடுத்து நெய் உழக்கும், தேன், ஆழாக்கும் விட்டுக் கிண்டி எடுக்கவும். இதனில் ஒரு புன்னைக் காயளவு காலை மாலையாகக் கொடுக்கக் குன்மம் நீங்கும்.

**மாத்திரை வகைகள்**

1. செம்புப்பற்பம்
   இலிங்கம்
   தாளகம்
   நவாச்சாரம் - வகைக்குப் பலம் ஒன்று.
   வசம்புச் சாம்பல்
   வாய்விடங்கம்
   சுக்கு
   மிளகு

திப்பிலி

பெருங்காயம் - இவைகளின் பொடி வகைக்கு 1/2 பலம்.

இவைகள் யாவற்றையும் கல்வத்திலிட்டுக் கொடிவேலிச்சாறு, புளிப்பு மாதுளைச்சாறு, கொடி நாரத்தைச் சாறு ஆக மூன்றிலும் இரண்டு நாள் அரைத்துக் குன்றியளவு உருட்டி நிழலில் உலர்த்தி, ஓர் உருண்டை காலை, மாலையாகக் கொள்ள வளி குன்மம், வாந்தி குன்மம் நீங்கும்.

2. தூய்மை படுத்திய இரசம் பலம் ஒன்றைக் கல்வத்தில் இட்டுக் காந்தட்கிழங்கின் சாறுவிட்டு 10 நாள் அரைத்துப் பின் தேக்கிலைச்சாறு, தேக்குப்பூச்சாறு, கொடுப்பைச்சாறு, துளசிச்சாறு ஆகியவைகளில் தனித்தனியே ஒரு நாள் கை விடாமல் அரைத்து ஒரே வில்லையாகத் தட்டவும் உலர்ந்தபின் அதன் எடைக்கு 6 பங்கு பச்சை காந்தள்கிழங்கை அரைத்துச் சற்று நீர் வற்றிவரும் போது இரண்டு அடைகளாகத் தட்டி அதன் நடுவில் இரசவில்லையை வைத்து இறுக அழுத்தி உலர்த்தி, 7 சீலைமண் செய்து மணல் மறைவில் புடமிடவும். இவ்வாறு அரைத்துக் கவசித்து மணல் மறைவில் இருபது வறட்டியில் 4 புடமிட இரசம் பற்பமாகும்.

இப்பற்பத்துக்குச் சுத்தித்த வாளம், ஓமம், சீரகம், சாதிக்காய், இலவங்கப்பட்டை, மாசிக்காய் ஆகியவற்றைச் சம அளவாகக் கொண்டு, கொடுக்காய்ப் புளியை நீரில் கரைத்து அந்நீரைக் கொண்டு நான்கு நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்யவும்.

மாத்திரையில் ஒன்றைக் காலை, மாலையாக இஞ்சிச் சாற்றில் சிறிது தேன் கூட்டிக் கொடுக்க அழல் குன்மம், சூலை குன்மம் போம். இதற்கு உப்பு நீக்குதல் வேண்டும்.

**பற்பம்**

செம்புப் பற்பம்

இரசப் பற்பம்

கறுவங்கப்பற்பம்

வெள்ளைப்பாடாணப்பற்பம்

ஆகிய பற்பங்கள் இந்நோய்க்குப் பயன்படும். இதனைத் தக்க அளவில், தக்க அனுபானத்துடன் வழங்க வேண்டும்.

"சித்த வைத்தியத் திரட்டு" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள குன்மத்திற்கான மருத்துவ முறைகள் வருமாறு:

***மாத்திரை வகைகள்***

1. கோடாசூரி மாத்திரை: இம்மாத்திரையில் தாளகம், இரசம், வெள்ளைப் பாடாணம், வீரம், கருநாபி, நேர்வாளம், அபின், மடல் துத்தம், மனோசிலை போன்ற பாடாண வகைகளையும் சாதிப்பத்திரி, சந்தனம், கடுகுரோகணி போன்ற கடைச்சரக்குகளையும் வகைக்கு 1/4 வராகன் எடையாகச் சேர்த்து 7 நாட்கள் கையான் சாறு விட்டும் பிறகு நொச்சிச்சாறு, கொட்டைக் கரந்தைச் சாறு ஆகிய சாறுகள் விட்டும் முறையே ஏழேழு நாட்கள் அரைத்துப் பயறளவு உருண்டையாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

இம்மாத்திரையைப் பல்வித அனுபானங்களில் கொடுக்கப் பல்வேறு நோய்கள் தீரும். குமட்டிக்காய்ச் சாற்றில் இம்மாத்திரையை அனுபானித்துக் கொடுக்க எண்வகைக் குன்மமும் நீங்கும்.

2. சஞ்சீவி மாத்திரை: இதில் இருவி, நாபி, அரிதாரம், இரசம், கந்தகம், வெங்காரம், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய சரக்குகள் 1 1/4 வராகன் எடையும் நேர்வாளம் 1/4 வராகன் எடையும் சேர்கின்றன. மேற்கண்ட சரக்குகளைச் சுத்தித்த பின் பொடித்து, கையான் சாற்றில் 7 நாட்கள் கல்வத்திலிட்டு அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்ய வேண்டும்.

இம்மாத்திரையை வலி குன்மத்துக்கு நொச்சிச் சாற்றில் வழங்கலாம்.

3. சூலைக்குடாரம்: இம்மாத்திரையில் சேரும் சரக்குகள்: இரசம், வெங்காரம், கந்தகம், திரிபலை, திரிகடுகு, தாளகம், நாபி, தாம்பிரப் பற்பம், நேர்வாளம். சேரும் அளவு: சம அளவு.

இவற்றைச் சுத்தித்துக் கல்வத்திலிட்டுக் கரிசாலைச் சாற்றால் 7 நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்த வேண்டும்

இம்மாத்திரையில் தினம் ஒன்றாக இஞ்சிச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்கச் சூலை குன்மம் தீரும்.

4. பாடாண மாத்திரை: வெள்ளைப் பாடாணத்தைச் சுத்தித்துப் பாகலிலைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டு மூடி, சீலை மண் செய்து மணல் மறைவில் புடமிட்டெடுக்க வேண்டும். மறுபடியும் இதனைப் பாதிரிப்பூச் சாற்றிலும், பசரைக் கீரைச் சாற்றிலும் அரைத்து மேற்கண்டவாறே புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இப்பற்பத்தை எலுமிச்சம்பழச் சாற்றிலும் வில்வ இலைச் சாற்றிலும் முறையே இரண்டிரண்டு நாள் அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து தேனில் இழைத்துக் கொடுக்கக் குன்மம் நீங்கும்.

5. முருக்கன் விதை மாத்திரை: திரிகடுகு, சீரகம், கடுகுரோகணி, முருக்கன் விதை ஆகியவை சம அளவு; இவை எல்லாம் சேர்ந்த எடைக்கு நேர் அளவில் நேர்வாளம். எல்லாவற்றையும் முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து நீர் விட்டரைத்துச் சுண்டையளவு மாத்திரை செய்து கொள்ளவேண்டும்.

வயிற்றுப்புசம் அதிகமாக உள்ள குன்ம நோயில் இதனைப் பனை வெல்லம் அல்லது இளநீரில் அனுபானித்துக் கொடுக்க வயிறு கழிந்து உப்புசம் நீங்கும். ஒரு நாள் ஒரு முறை மட்டும் கொடுத்தால் போதுமானது.

6. மேகநாதக் குளிகை: வெங்காரம், இலிங்கம், சிவதைவேர், வசம்பு, சுக்கு, இந்துப்பு, வாய்விடங்கம், ஓமம், பெருங்காயம், காட்டாமணக்கு வேர் ஆகிய சரக்குகளுடன் நேர்வாளமும் இதில் சேரும். குன்றியளவு மாத்திரை செய்ய வேண்டும்.

இதில் ஒன்றிரண்டு மாத்திரை மட்டும் கொடுக்கக் குன்ம நோயில் ஏற்படும் மலக்கட்டு நீங்கும்.

7. விரேசனப்பூபதி மாத்திரை: இரசம், சுக்கு, வெங்காரம், கந்தகம் ஆகியன சம அளவிலும், இவை அனைத்தும் சேர்ந்த எடைக்கு நேர்வாளமும் சேர்க்கப்படுகின்றன. இவற்றைத் தண்ணீர் விட்டு ஒன்றாக அரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்ய வேண்டும்.

இவற்றில் ஒன்றிரண்டு மாத்திரை மட்டும் வழங்க மலம் கழிந்து வயிற்றுப் பொருமல் நீங்கும். வாயு குன்மத்தில் வயிறு கழியாமல் ஊதியிருக்கும் நிலையில் இதனை ஒரு வேளை மட்டும் வழங்கலாம்.

8. வெங்கார மாத்திரை: இம்மாத்திரையும் மலம் கழிவதற்காக வழங்கப்படும் மாத்திரை ஆகும். இதில் வெங்காரத்துடன் திப்பிலி, மிளகு, இந்துப்பு, சுக்கு, நேர்வாளம், காந்தப் பொடி, பெருங்காயம், கழற்சிப் பருப்பு முதலியன சம அளவில் சேர்க்கப்பட்டுச் செய்யப்படுகின்றது. எண் வகைக் குன்ம நோய்களிலும் எண்ணெயில் தோய்த்து இம்மாத்திரையை வழங்கலாம். இதற்குப் பத்தியமாக காடை, கவுதாரி, காளான், மீன், சம்மங்கோழி முதலியனவற்றை உண்ணலாம்.

9.குங்குமப்பூ மாத்திரை: ஐயக் குன்ம நோய்க்கு இம்மாத்திரை வழங்கப்படுகிறது. இதில் குங்குமப்பூ, கோரோசனை, சாம்பிராணிப்பூ, இலிங்கம், வெங்காரம், சுக்கு, வெண்மிளகு, வால்மிளகு, திப்பிலி, இலவங்கம், ஓமம், ஏலம், கோஷ்டம் முதலியன சம அளவில் சேர்க்கப்பட்டுக் குங்குமப்பூ குடிநீரில் 1 சாமம் மெழுகு போல் அரைத்துப் பயறளவு மாத்திரைகளாகச் செய்யப்படுகின்றன.

தேன் அல்லது முலைப்பாலில் கொடுக்க ஐயக் குன்மம், நாட்பட்ட மலக்கட்டு முதலியன நீங்கும்.

10. நவக்கிரகப் பூபதி: இம்மாத்திரையில் மனோசிலை, தாளகம், இரசம், கந்தகம், வெங்காரம் முதலிய சரக்குகள் சம அளவில் சேர்க்கப்பட்டுப் பொடித்து , செருப்படைச் சாற்றால் அரைத்து உலர்த்தி குப்பியிலிட்டு, வாலுகா இயந்திரத்தில் வைத்து எரித்து எடுக்கப்படும்.

அதன் பின் அது இஞ்சிச் சாற்றால் அரைத்துக் கடலையளவு மாத்திரையாகச் செய்யப்படும்.

தினம் ஒரு மாத்திரையை இஞ்சிச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்க நாட்பட்ட வயிற்று நோய் நீங்கும்.

11. பூரண சந்திரோதயம்: சுத்தித்த இரசம், கந்தகம், தங்கரேக்கு முறையே 8,16, 1 பங்காக எடுத்துச் செம்பருத்திப்பூச் சாறு, கற்றாழைச்சாறு இவற்றில் முறையே 1,2 நாட்கள் அரைத்து வில்லை செய்து காசிக் குப்பியிலடைத்து மணல் மறைவுப் புடமிட்டெடுக்க மாந்துளிர் நிறமான செந்தூரமாக மாறும்.

இதனைப் பச்சைக்கற்பூரம், சாதிப்பத்திரி, குங்குமப்பூ, சாதிக்காய், கஸ்தூரி முதலியவற்றைத் தக்க அளவில் சேர்த்து, செம்பருத்திப்பூச்சாறு விட்டு அரைத்துப் பயறளவு மாத்திரை செய்ய வேண்டும். இம்மாத்திரையை வெண்ணெய், சர்க்கரை, இஞ்சிச்சாறு இவற்றில் ஒன்றில் அனுபானித்துக் கொடுக்க எட்டுவகைக் குன்ம நோய்களும் நீங்கும்.

12. மகா வசந்த குசுமாகரம்: பொன், முத்து, பவழம், அப்பிரகம், காந்தம், செம்பு, வங்கம், கந்தகம், நிமிளை ஆகிய இவைகளின் பற்பங்களும், நாபியும் சேர்த்துச் செய்யப்படும் மிகப்பெரும் மருந்து இது. இம்மாத்திரை பல்வேறு அனுபானங்களில் பல்வேறுபட்ட நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. சிவதை வேர் சூரணத்தில் இதை வழங்க வயிற்றுவலி என்னும் குன்ம நோய் நீங்கும்.

**பற்ப வகைகள்**

1. சண்டரசப் பற்பம்: இரசத்தை வெடியுப்புத் திராவகத்தினால் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து மூன்று பங்கு உப்பும் ஒரு பங்கு செங்கல்தூளும் கலந்ததில் பாதியை ஒரு சட்டியில் கொட்டி அதற்கு மேல் வில்லையை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை செய்து முத்தீயாக 12 மணி நேரம் எரிக்கவும் பின் மேல் சட்டியில் பிடித்துள்ள பதங்கத்தை எடுத்து மேற்படி திராவகம் விட்டு அரைத்து முன்போலவே வில்லை செய்து எரிக்க வேண்டும்.

இப்பற்பத்தைக் கால் முதல் அரை அரிசியளவு வரை தக்க அனுபானத்தில் கொடுக்கக் குன்மம் முதலான பல்வகை நோய்கள் தீரும். கடும் பத்தியம் வைக்க வேண்டும்.

2. பஞ்சலவணப் பற்பம்: இந்துப்பு 1 பலம், கல்லுப்பு 1 1/2 பலம். இவைகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தைச் சாறு, கள்ளிப்பால், குப்பைமேனிச் சாறு, எருக்கன்சாறு இவைகளில் முறையே தனித்தனியே அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து புடமிடப் பற்பமாகும்.

இதனை 1 முதல் 2 குன்றியளவு தக்க அனுபானத்தில் கொள்ளக் குன்மம் தீரும்.

### செந்தூர வகைகள்

1. உப்புச் செந்தூரம்: கல்லுப்பு 4 பலம், இரசம் 1 பலம். இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு மடியும்படி வில்வச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து உலர்த்திப் பொடித்துக் குகையிலிட்டுக் கொல்லன் உலையில் வைத்துப் பழுக்க ஊத, உப்பு உருகி மணிமணியாக இருக்கும். ஆறவிட்டு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஆகாயத் தாமரைச் சாற்றால் 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துச் சில்லிட்டுச் சீலை செய்து முழப்புடமிடவும். இவ்வாறு 5 புடமிடச் செந்தூரம் முடியும்.

இச் செந்தூரத்தில் குன்றிமணி அளவு தேனில் கொள்ள 8 வகைக் குன்மம், நெஞ்சு எரிச்சல் முதலியன நீங்கும்.

2. சோற்றுப்புச் செந்தூரம்: சோற்றுப்பு 5 பலத்திற்கு 1/4 படி ஆகாயத் தாமரைச் சாறுவிட்டு அரைத்து சிறுசிறு வில்லைகள் செய்து இரவில் உலர்த்திச் சீலை செய்து 10 வறட்டியில் புடமிடவேண்டும். இவ்வாறு 6 புடமிட உயர்தர செந்தூரமாகும். ஒவ்வொரு புடத்துக்கும் வறட்டியின் அளவை உயர்த்திக் கொண்டே போய் 20 வறட்டியுடன் நிறுத்திவிடவேண்டும்.

இச் செந்தூரத்தில் 1 முதல் 2 அரிசி எடை தக்க அனுபானத்தில் வழங்க அசீரணமும் குன்மமும் நீங்கும்.

3. கௌரி சிந்தாமணி: சுத்தி செய்த இரசம், கந்தகம், பொரிகாரம் வகைக்கு 1 பலம் கல்வத்திலிட்டுப் பொடித்து, பொடியை ரெட்டினால் (முரட்டுத் துணி) கொட்டைப் பாக்களவாகக் கிழிகட்டி மணல் மறைவில் கிழிகளை வைத்து, 10 வறட்டிகளை மணல் மேல் அடுக்கி எரித்து எடுக்க வேண்டும். குளிர்ந்த பின் ரெட்டுகளை நீக்கி மருந்தை எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். இது பூலாம்பழம் போலக் கறுப்பு நிறமாகும்.

இச்செந்தூரத்தை 1 குன்றி மணியளவு எடுத்து, திரிகடுகுத்தூள் வெருகடியளவுடன் கலந்து தேனில் கொடுக்க எல்லா வகைக் குன்ம நோய்களும் நீங்கும். வேறுபல நோய்களும் இம்மருந்தினைப் பல்வித அனுபானங்களில் கொடுக்கத் தீரும்.

4. சுயமாக்கினி செந்தூரம்: அயப்பொடி, காந்தம், இரசம், கந்தகம் இவற்றை 1:2:4:8 விகித அளவில் எடுத்துக் கல்வத்தில் இட்டுப் பொடித்துக் கற்றாழைச் சாற்றால் இருசாமம் நன்றாக அரைத்து, தாம்பாளத்தில் வில்லையாகத் தட்டி வெயிலில் வைக்கக் காய்ந்து தீபம் போல் எரிந்து அடங்கும். இதனைப் பொடித்துக் குப்பியில் அடைக்க வேண்டும்.

இச் செந்தூரத்தில் குன்றிமணி அளவு இஞ்சிச் சாற்றில் கொடுக்கக் குன்மம் முதலானப் பல நோய்களும் தீரும்.

5. தாம்பிரச் செந்தூரம்: முதலில் தாம்பிரத் தகட்டை எட்டிப்பழச் சாற்றில் 15 நாட்கள் ஊறவைத்து எடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புதுப்புதுச் சாறு உபயோகிக்க வேண்டும்.

கந்தகத்தை நல்வேளைச் சாற்றில் அரைத்துக் குகை போல் செய்ய வேண்டும். பின் அதனை மற்றொரு குகைக்குள் வைக்க வேண்டும்.

படிகாரத்தைத் தண்ணீரில் அரைத்து மேற்படி ஊறவைத்தெடுத்த தாம்பிரத் தகட்டிற்குப் பூசிக் குகைக்குள் வைத்து மேல் மூடி 7 சீலை மண் செய்து கஜபுடம் இட நீறிப் போகும். இதனுடன் தாம்பிர எடைக்குச் சரி எடை இலிங்கம் சேர்த்து எருக்கம் பாலால் அரைத்து வில்லை தட்டி ஓட்டிலிட்டுச் சீலை செய்து கஜபுடமிட முருக்கம்பூப்போல் சிவந்த செந்தூரமாகும்.

இதனை 1/2 முதல் 1 குன்றிமணியளவு எடுத்துத் திரிகடுகுத் தூளுடன் தேன் சேர்த்து அனுபானிக்க எண் வகைக் குன்மமும் நீங்கும்.

6. நாகச் செந்தூரம்: சுத்தித்த நாகத்தை 4 பலம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு உருகி வரும்போது வெடியுப்பு, ஓமம், சுக்கு, மஞ்சள் இந்நான்கும் சேர்ந்த பொடி ஒருபடியைச் சிறிது சிறிதாக நாகத்திலிட்டு வறுக்கத் தூளாகும். நாயுருவியை இடித்துப் போட்டு மேலும் வறுக்க வேண்டும். பொடியைப் பழச் சாற்றால் அரைத்து மாதுளம் பூ நிறம் வரும் வரை புடமிட்டு எடுக்கவும்.

இதில் குன்றிமணி அளவு எடுத்துத் திரிகடுகுச் சூரணத்தில் கொடுக்கக் குன்மம் முதலியப் பல்வகை நோய்களும் தீரும்.

7. பூரண சந்திரோதயச் செந்தூரம்: தங்க ரேக்கு, இரசம், கந்தகம் இவற்றை 1:8:16 விகித அளவில் சேர்த்து முறைப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து

செம்பருத்திப்பூச் சாற்றாலும், வாழைக் கிழங்குச் சாற்றாலும் முறையே இரண்டிரண்டு நாட்கள் அரைத்து வில்லை செய்து காசிக் குப்பியிலடைத்து, மணல் மறைப்புடமாக எரித்து எடுக்க வேண்டும் (24 மணி நேரம் எரிக்க வேண்டும்).

இச் செந்தூரத்தை 1/2 முதல் 1 குன்றிமணியளவு கற்பூராதிச் சூரணத்தில் கலந்து வெற்றிலைச் சாற்றில் கொள்ளக் குன்மம் முதலாகப் பல்வகை நோய்களும் தீரும்.

8. துருசு செந்தூரம்: துருசு 1 பலம், வேப்பிலை 2 பலம். இவற்றை நீர் விடாமல் கல்வத்திலிட்டு அரைத்து வில்லை செய்ய வேண்டும். பிறகு பிரண்டையை அரைத்து அதற்குள் இவ்வில்லையைப் பொதிந்து முற்றும் காய்வதற்குள் 10 வறட்டியில் புடமிடவேண்டும். இவ்வாறே செந்தூரமாகும் வரை புடமிட வேண்டும்.

இதில் கால் முதல் அரை குன்றிமணியளவு தக்க அனுபானத்தில் வழங்கக் குன்மம் நீங்கும்.

9. வெள்ளிச் செந்தூரம்: 5 பலம் கந்தகத்தைப் பொடித்து ஒரு சட்டியிலிட்டு, ஒரு பலம் வெள்ளியைத் தகடு தட்டிச் சுருட்டி அதன் மத்தியில் முழுகும் படி அமர்த்திச் சட்டி கொண்டு மூடி, சிரட்டை ஓடு 100 கொண்டு எரித்தெடுக்கச் செந்தூரம் ஆகும்.

இதில் ஒரு நெல்லரிசி அளவு அனுபானமறிந்து கொடுக்கக் குன்மம் முதலான நோய்கள் தீரும்.

## கருப்பு வகை மருந்து

சிவனார் அமிர்தம்: இருவி, இரசம், கருநாபி, நெல்லிக்காய், கந்தகம், சுக்கு, மனோசிலை, வெங்காரம், அரிசித் திப்பிலி ஆகிய இவைகள் வகைக்கு 1 பலம். மிளகு 8 பலம். இவைகளை முறைப்படி சுத்தி செய்து, தனித்தனியே சூரணமாக்கி மேற்கூறிய அளவாக நிறுத்துக் கொண்டு கல்வத்தில் இட்டு, 7 நாட்கள் விடாமல் அரைக்க வேண்டும். இது கறுப்பு நிறமடையும்.

இதனை 1 முதல் 2 குன்றிமணி அளவில் திரிகடுகுச் சூரணம் கலந்து தேனில் குழைத்து வழங்க, குன்மம் நீங்கும்.

## பதங்கம் வகை மருந்து

சாம்பிராணிப்பூ பதங்கம்: சாம்பிராணி 3 பங்கு; சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், வால்மிளகு, ஏலரிசி,

சாரப் பருப்பு, கிராம்பு, புனுகு, இம்பூறல், அதிமதுரம். மரமஞ்சள், புனுகுச் சட்டம் இவைகள் வகைக்கு 1 பங்கு - ஆக மொத்தம் 20 பங்கு.

இவைகளில் புனுகு நீக்கி மற்றவைகளை நன்றாக இடித்துக் கலந்து, புனுகைச் சேர்த்து ஒரு பெரிய மட்பாண்டத்தில் இடவும். அதற்கு வாய் பொருந்தும்படியான மற்றோர் சட்டிக்குச் சாமந்தி இலை, கொடிவேலி இலை, தும்பை இலை ஆகிய சாறுகளின் கூட்டுத் தொகை பத்து பங்கைக் கொண்டு மேற் சட்டியில் உட்புறம் பூசிப்பூசி உலர்த்தியபின், பெரிய சட்டிக்குப் பொருத்தவும், பொருத்துவாய்க்கு வன்மையாய்ச் சீலைமண் செய்து அடுப்பிலிட்டு, உலர்ந்த ஆட்டுப் புழுக்கை, காட்டெரு, உமி, வேர்ப்பட்டைகள் ஆகியவைகளுள் ஏதேனும் ஒன்றைப் போட்டு எரிக்கவும். மருந்த தானாகவே பற்றி எரிந்து அடங்கி ஒருநாள் ஆனபின் சட்டி அசையாமற்படி சீலையை நீக்கி, எடுத்துப் பார்க்க அதனில் சாம்பிராணிப்பூ படிந்து இருக்கும். அதனை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுத் துளசிச் சாற்றில் கொடுக்க அசீரணமும், சாணிப் பாலில் கொடுக்க வேறு பல நோய்களும் தீரும்.

## குழம்பு வகை மருந்துகள்

1. அகத்தியர் குழம்பு: " வாத நோய்களின் பொது மருத்துவம் " என்னும் அத்தியாயத்தில்* இதன் செய்முறை வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு அனுபானங்களில் பல்வகை நோய்களுக்கு இம் மருந்து பயன்படும். குன்ம நோய்க்குக் குமட்டிச் சாற்றில் இதனை வழங்கலாம்.

பத்தியம் : ஆவின் நெய், முருங்கைப் பிஞ்சு, வாழைப் பிஞ்சு, நாரத்தங்காய், தூதுளை ஆகியவைகள் ஆகும்.

2. தேங்காய்க் குழம்பு: இந்துப்பு 5 வராகன் எடை; காந்தம் 5 வராகன் எடை; இஞ்சிச்சாறு 1/2 படி; வெள்ளுள்ளி 1 பலம்; திரிகடுகு, பெருங்காயம், ஓமம், பூநீறு, நேர்வாளம் வகைக்கு 5 வராகன் எடை; தேங்காய்ப் பால் 1/2 படி.

தேங்காய்ப் பால், இஞ்சிச்சாறு இவ்விரண்டையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து அதில் நேர்வாளம், வெள்ளுள்ளி இவ்விரண்டையும் நன்றாக அரைத்தும் பெருங்காயத்தைப் பொரித்தும் மற்ற வகைகளை இடித்துத் தூளாக்கியும் மேற்படியில் சேர்த்து, சிறு தீயில் எரித்துக் குழம்பு பக்குவத்தில் நெய் 21/2 பலம் சேர்த்து இறக்க வேண்டும்.

அளவுப்படி உண்ண வயிற்றுநோய் தீரும். பேதியாகும்.

* சித்த மருத்துவம் தொகுதி4, பகுதி-1 இல் இடம் பெற்றுள்ளது.

3. குமட்டிக் குழம்பு: இதில் குமட்டிக் காய்ச்சாறு, பழச்சாறு, வெள்ளுள்ளிச் சாறு, நொச்சிச்சாறு, இஞ்சிச்சாறு ஆகியன வகைக்கு 1 படி அளவாகச் சேர்த்து சிறு தீயில் எரித்துக் குழம்பு பக்குவம் வரும் போது இரசம், இலிங்கம், பெருங்காயம், இந்துப்பு, வெங்காரம், கடுகு, மஞ்சள், வெந்தயம், மிளகு, காந்தம், நேர்வாளம் வகைக்கு 1 1/4 வராகன்எடை எடுத்துப் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் சேர்த்து, சிறு தீயில் கிண்டிக் கிண்டி பழம்புளி பாகத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

தூதுளங்காய் பிரமாணம் பனை வெல்லத்தில் கொடுக்கக் குன்மம் நீங்கும்.

4. நாயுருவி உப்பாதிக் குழம்பு: நாயுருவி உப்பு, வாழை உப்பு, தாழையுப்பு, தெங்கினுப்பு, அன்னபேதி, சத்திச்சாரம், வீரம், பூரம், நவாச்சாரம், பூநீறு, இந்துப்பு, வளையலுப்பு, வெண்ணாபி, சங்குபற்பம், கந்தகம், திரிகடுகு வகைக்கு 1 பலம். இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சாராயம், எருக்கம்பால், கள்ளிப் பால் இவை வகைக்கு முறையே கால் படி விட்டரைத்து ஒரு மட்பாண்டத்தில் சேர்த்து, நெய் 1/4 படி, தேன் 1/4 படி சேர்த்து மெழுகுபதம் வரும் வரை கொதிக்க வைத்து, ஆறவிட்டுப் புட்டியில் அடைக்கவும்.

இதில் 1 குன்றியளவு எடுத்துத் தாம்பிரச் செந்தூரம் நெல்லெடை சேர்த்து வெள்ளைச் சர்க்கரையில் கொடுக்க, எண்வகைக் குன்மமும் தீரும். கொள்ள வேண்டிய நாட்கள் அரை மண்டலம்.

5. கௌசிகர் குழம்பு: இதன் செய்முறை "வாத நோய்களின் பொது மருத்துவம்" என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. நேர்வாளம் சேர்ந்த பெரிய மருந்துகளில் இதுவும் ஒன்று. இது பல்வேறுபட்ட நோய்களுக்குப் பல்வேறு அனுபானங்களில் பயன்படுத்தப்படுகிறது.

இம்மருந்தைச் சத்தி குன்மத்திற்குத் தகரைச் சாற்றிலும், வாயு குன்மத்துக்கு வல்லாரைச் சாற்றிலும், அழல் குன்மத்துக்குப் புளியாரைச் சாற்றிலும், எரி குன்மத்துக்கு இளநீரிலும் சீரகத்திலும் வழங்கலாம். குழம்பை உள்ளுக்குக் கொடுப்பதால் வயிற்றுக் கடுப்பும் மிகுபேதியும் உண்டானால் மோர், கிராம்பு, ஆவாரம்பட்டை ஆகியவைகளைச் சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

### மெழுகு வகை மருந்துகள்

1. இடி வல்லாதி: இம்மருந்தில் சுண்டையளவு காலை, மாலை இருவேளையாக 1 மண்டலம் கொள்ள, எண்வகைக் குன்மம் நீங்கும். பத்தியம்: இச்சாபத்தியம். வறுத்த உப்பு, தயிர், மோர், நெய், துவரை, பாசிப் பயறு,

ஆரைக்கீரை, பொன்னாங்காணிக் கீரை ஆகியவைகள் ஆகும். மீன் ஆகாது. விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை முழுகவும்.

இம் மருந்தைப் பனைவெல்லத்தில் வழங்குவது நல்லது.

இதன் செய்முறை: 10 பலம் சேங்கொட்டை எடுத்து மூக்கை வெட்டி சாணப்பாலில் 3 நாள் ஊறவைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இதனைக் கல்லுரலில் போட்டு அத்துடன் 10 பலம் எள்ளை இடித்துச் சேர்த்துக் கொப்பரைத் தேங்காய் 2 சேர்த்து பூணில்லா உலக்கையால் நன்றாக இடித்துப் பிறகு பறங்கிப்பட்டை, அமுக்கரா, சித்திரமூல வேர்ப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், கறுஞ்சீரகம், வாலுளுவை, குரோசாணிஓமம், வெற்றிலைக் காம்பு, கடுக்காய்த்தோல், திப்பிலி, கோஷ்டம் வகைக்கு 1 பலம் எடுத்து நன்றாக இடித்து வடிகட்டி மேற்படி சேங்கொட்டையுடன் சேர்த்து மெழுகுபோல் ஆகும்வரை நன்றாக இடித்து 1/2 பலம் இரசக் கற்பூரத்தைக் குங்குமம் போல் பொடித்து அதில் சேர்த்து, பிறகு பனைவெல்லம் 5 பலம் சேர்த்து உறவாகும்படி இடித்துக் குப்பியில் அடைக்கவும்.

2. நந்தி மை: இதில் சேரும் சரக்குகளில் முக்கியமானது சேங்கெட்டையாகும். இது தவிர இரசம், பூரம், இலிங்கம், மனோசிலை, வெள்ளைப்பாடாணம் போன்ற பாடாணங்களும் கடைச்சரக்குகள் பலவும் சேர்த்துச் செய்யப்படும் மிகப்பெரிய மருந்து இது. குன்ம நோய்க்குத் தேற்றான் விதையளவு, பனைவெல்லத்தில் அனுபானித்துக் கொடுக்கலாம். நோய்க்குத் தக்கவாறு 1/4 முதல் 1 மண்டலம் வரை பத்தியத்துடன் கொள்ளலாம்.

இம் மருந்தை உண்டபிறகு குமரித்தைலம், சந்தனாதித்தைலம், ஆமலகத்தைலம், சண்பகத் தைலம் ஆகிய தைலங்களில் நான்கு நாட்களுக்கொருமுறை மூழ்கலாம்.

3. நவஉப்பு மெழுகு: கறியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு, அமுரியுப்பு, மூங்கிலுப்பு, கல்லுப்பு, பாறையுப்பு, பூநீறு ஆகிய உப்புகள் சேர்த்து செய்யப்படும் மருந்து இது.

இதனை மிளகளவு கருப்பட்டியில் காலை மாத்திரம் ஒன்று முதல் மூன்று நாள் உடல் வன்மைக்குத் தக்கவாறு வழங்க, மலம் கழிவதன்றி எண்வகைக் குன்ம நோய்களும் பல்வேறுவித வளி நோய்களும் தீரும். வெந்நீரும் சோறும் வழங்கலாம். மறுபத்தியத்தில் வறுத்த உப்பு, பசும்பால், நீர்மோர், சிறுகீரை, பிஞ்சு முருங்கை, கத்தரி, அவரை, பாசிப்பயறு, துவரை, குஞ்சுக் கோழி, காடை முதலியன கொள்ளலாம்.

4. வான் மெழுகு: இது பல்வேறு பாடாணப் பொருள்களையும் சேர்த்து முட்டையின் மஞ்சள் கருவால் அரைத்து எடுத்துக் கொள்ளும் மருந்தாகும். இம் மருந்தை உளுந்தளவு, பனைவெல்லத்தில் இருவேளை 5 முதல் 8 நாட்கள் மட்டும் கொடுக்கலாம். இடைவெளி விட்டு மறுமுறையும் இவ்வாறு வழங்கலாம். இதனால் குன்மம் முதலான பல்வகை நோய்கள் தீரும். இச்சாபத்தியம் தேவை.

5. குன்மக் குடோரி மெழுகு: இந்துப்பு, கல்லுப்பு, சோற்றுப்பு, பூநீறு, வளையலுப்பு, வெங்காரம், நவாச்சாரம், வெடியுப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கிராம்பு, மோடி, கோஷ்டம், பெருங்காயம்-இவைகள் வகைக்கு 1 பலம். உரித்த பூண்டு 5 பலம். பனை வெல்லம் 5 பலம். தேன் 5 பலம். இவைகளைக் கல்வத்திலிட்டு இளகியபதம் வரும் வரை அரைத்துத் தினம் 2 வேளை சிறு சுண்டைக் காயளவு உட்கொள்ளக் குன்மம், மந்தம், அசீரணம் ஆகியன தீரும்.

### சூரண வகை மருந்துகள்

1. தீபாக்கினி சூரணம்: ஐந்துப்பு, எவாச்சாரம், வெங்காரம், சவர்க்காரம், சுக்கு, கண்டுபாரங்கி, செவ்வியம், திப்பிலிமூலம், யானைத்திப்பிலி, வட்டத்திருப்பி, ஓமம், மிளகு வகைக்கு 1 பலம். எல்லாம் சேர்ந்த எடைக்குப் பாதி செஞ்சித்திரமூல வேர்ப்பட்டை: இவைளை முறைப்படி சுத்தித்து, வறுக்க வேண்டியவைகளை வறுத்துப் பொடி செய்து, ஒன்றுபடக் கலந்து அளவுப்படி தேனில் கொடுக்கக் குன்மம் முதலான பல நோய்கள் தீரும்.

2. அமுக்கராச் சூரணம்: கிராம்பு 1 பங்கு; சிறுநாகப்பூ 2 பங்கு; ஏலம் 4 பங்கு; மிளகு 8 பங்கு; திப்பிலி 16 பங்கு; சுக்கு 32 பங்கு; அமுக்கரா 64 பங்கு; சர்க்கரை 128 பங்கு. சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை முறைப்படி சுத்தித்து, தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்றுபடக் கலந்து, பிறகு சர்க்கரையையும் சேர்த்துக் கலந்து அளவுப்படி கொடுக்க எண்வகைக் குன்மமும் நீங்கும். கைகால் எரிவு அடங்கும். உடல் பெருக்கும்.

3. குமட்டி சூரணம்: விதை, ஓடு நீக்கப்பட்ட ஆற்றுக் குமட்டிக் காய் 20, வளையலுப்பு 5 பலம், உப்பு 1 படி, பசுவின்பால் 1 படி கூட்டிச் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி வேகவைத்துக் கடைந்து மூடிச் சீலைமண் செய்து, 40 நாள் புதைத்து எடுத்து அரைத்து வைத்துக் கொண்டு, ஒரு வராகன் எடையாக காலையில் மாத்திரம் கொடுத்துவரக் குன்மம் நீங்கும்.

4. மூக்கிரட்டைச் சூரணம்: மூக்கிரட்டைவேர், வெண்குன்றிவேர், கொன்றைவேர் வகைக்கு 1 பங்கு;கடுக்காய்த்தோல் 3 பங்கு. இவைகளைப் பொடித்து அளவுப்படி கொடுக்க வயிற்றுவலி தீரும்.

5. திராட்சாதி சூரணம்: திராட்சை, பேரீச்சங்காய், கோரைக் கிழங்கு, காட்டு மிளகு, சந்தனத்தூள், நெற்பொரி, கூகைநீறு, காட்டெருமைப்பால், ஏலம், நற்சீரகம் வெட்டிவேர், திரிகடுகு, திரிபலை, பேராமுட்டிவேர், கோஷ்டம், அதிமதுரம், சிற்றாமுட்டி, சீந்தில் சர்க்கரை, நிலக்குமிழ் வேர், சிற்றாமல்லி, நெருஞ்சில் வேர், விலாமிச்சம் வேர், மரமஞ்சள், நெய்தல் கிழங்கு, கிராம்பு, கஸ்தூரிமஞ்சள், ஆகியவற்றைச் சமஎடை இடித்துப் பொடித்துச் சலித்துச் சம அளவு சர்க்கரை கூட்டித் தான்றிக்காயளவு தேனில் கொள்ளக் குன்மம் முதலாகப் பல நோய்கள் தீரும்.

6.தாளிசாதி சூரணம்: தாளிசம் முதலாகப் பல்வகைப்பட்ட கடைச்சரக்குகளைச் சேர்த்துச் சூரணமாக செய்து வழங்கப்படும். இதனை நோய்க்குத் தக்கவாறு அளவு நிர்ணயித்து நாளொன்றுக்கு இரு வேளை தேனில் கொள்ள, குன்மம் நீங்கும். ஐயம் தொடர்பாக வரும் இருமல், சயம் முதலிய நோய்களிலும் இம்மருந்து பெரிதும் பயன்படுத்தப் படுகிறது.

**வடக மருந்துகள்**

1. பிரண்டை வடகம்: பிரண்டையைத் துண்டு துண்டாக நறுக்கி, வகிர் வகிராகப் பிளந்து மோரில் ஊறவைத்து நன்றாக நைய இடித்து அதில் மிளகு, கொத்துமல்லி விதை, உப்பு, சீரகம், உளுந்து, எள்ளு, கொள்ளு, முதலியவற்றை அளவாகச் சேர்த்து, அரைத்து சிறிய வடகங்களாகச் செய்து காய வைத்து, நன்றாகக் காய்ந்து பின் நெய்யில் வறுத்துப் புசிக்கக் குன்மம் நீங்கும்.

2. பிரண்டை வடகம் (வேறுமுறை): பிரண்டையின் கணுக்களையும், பக்கத்திலுள்ள நரம்புகளையும் நீக்கி, நெய்யிலிட்டு வதக்கி, அதற்கு நேர் மிளகு, சுத்தி செய்த பச்சை வசம்பு, உப்பு, ஓமம் கடுக்காய் சேர்த்திடித்து, மோர் விட்டுப் பிசைந்து கால் பலம் உள்ள உருண்டைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் உபயோகித்து வரக் குன்ம வகை நோய்கள் நீங்கும். இச்சாபத்தியம் காக்கவும்.

3. கறிவேப்பிலை வடகம்: கறிவேப்பிலை, கொத்துமல்லி, உப்பு, மிளகு, கிச்சிலிக் கிழங்கு, சாதிப்பத்திரி இவைகளைச் சம அளவு நீர் விட்டரைத்து இலந்தை விதைப் பிரமாணம் உருட்டி உலர்த்தவும். சீரணப்பிணிகள் யாவும் தீரும்.

## இலேகிய வகை மருந்துகள்

1. சரபங்க வில்வாதி இலேகியம்: இதன் செய்முறை வாத நோய்களின் பொது மருத்துவ முறைகளில் கூறப்பட்டுள்ளது. குழம்பு பக்குவத்தில் உள்ள இந்த இலேகியத்தில் 1 1/4 வராகன் எடை அளவாக ஒரு நாளுக்கு 2 வேளை உண்டு வர எண் வகைக் குன்ம நோய்களும் நீங்கும். ஒரு மண்டலம் உட்கொள்ளலாம்.

பத்தியம்: புளி, கைப்பு, புகை, பெண்போகம் நீக்க வேண்டும்.

2. நாரத்தை இலேகியம்: அழல் குன்மத்திற்கு இம்மருந்து மிகவும் சிறந்தது. இதில் நாரத்தம் பழச்சாறு, இஞ்சிச்சாறு, அமுக்கராவேர்ச்சாறு, சாறணைவேர்ச் சாறு முதலான சாறு வகைகளும் திரிகடுகு, திரிபலை முதலான கடைச்சரக்குகள் பலவும் சேர்த்துத் தேன், நெய் முதலியனவும் கலந்து கிண்டி புதுக் கலசத்தில் சேர்த்து 4 நாள் பழகியபின் அளவுடன் காலை மாலை 1 மண்டலம் கொள்ள அழல் குன்மம், நெஞ்செரிவு முதலியன நீங்கும்.

3. இஞ்சி இளகம்: இஞ்சிச் சாறு, கண்டங்கத்தரிச்சாறு, நெருஞ்சில் சாறு, முள்ளங்கிச் சாறு, பழச்சாறு இவை வகைக்கு 1 படி. ஆவின்பால் 2 படி. பனைவெல்லம் 8 பலம். சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வாய்விடங்கம், கிராம்பு, தாளிசம் இவை வகைக்கு 1 பலம். பசு நெய் 1/2 படி. தேன் 1/4 படி. சாறுகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பனைவெல்லத்தை அதில் கரைத்து அடுப்பேற்றிக் கடைச்சரக்குகளைச் சூரணித்து அதில் கலந்து எரித்து இலேகிய பதத்தில் இறக்கி நெய், தேன் இவை விட்டுக் கிளறி பாக்களவு வழங்கவேண்டும். நாளுக்கு 2 வேளையாகச் சாப்பிடலாம். எண் வகைக் குன்மமும் நீங்கும்.

4. கேசரி இலேகியம்: எலுமிச்சம்பழம் 200. நாட்டுச் சர்க்கரை 200 பலம். மிளகு 6 பலம். சீரகம் 6 பலம். கோஷ்டம், சுக்கு, தாளிசம், திப்பிலி, சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு 8 வராகன் எடை. நெய் 8 பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு எலுமிச்சம் பழத்தை வதக்கிச் சாறு பிழிந்து சர்க்கரையை அதில் கலந்து கரைத்து வடிகட்டி அடுப்பேற்றிப் பாகுபதம் வந்தவுடன் இறக்கிச் சூரணித்த கடைச்சரக்குகளைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறிப் பிறகு நெய் சேர்க்க வேண்டும்.

1 முதல் 2 வராகன் எடை அளவு கொடுத்து வர அன்ன வெறுப்பு, வயிற்று வலி, வாந்தி முதலியன நீங்கும்.

### தைல வகைகள்

1. கந்தகச்சுடர் தைலம்: இது மேகநோய்கள், வளிநோய்கள், தோல் நோய்கள் ஆகியவற்றில் பயன் படுத்தப்படும் மருந்தாகும்.

இத்தைலத்தில் 3 3/4 குன்றிமணி அளவு சர்க்கரையில் காலை மாலை இருவேளையாக 10 நாள் பத்தியமின்றி கொள்ள, குன்ம நோய் தீரும் எனக் கூறப்பட்டுள்ளது.

2. சித்தாதி எண்ணெய்: இது நேர்வாளம் சேர்ந்த பேதி மருந்தாகும். வளி நோய்களில் வளித்தாதுவைத் தன்னிலை அடையச் செய்யப் பேதிக்கு வழங்குவது அவசியமாகையால் அந்நோய்களில் பெரிதும் பயன்படுகிறது. வளி தொடர்பான நோய்களில் ஒன்றான குன்மமும் இம்மருந்தினால் குணமாகும் என எண்ணப்படுகிறது.

3 முதல் 5 துளிகள் நிசித்தண்ணீரில் அல்லது சோம்புக் குடிநீரில் கொடுக்கப் பேதியாகும். எண்வகைக் குன்ம நோய்களிலும் நோயின் தன்மையறிந்து இதனைப் பயன்படுத்தலாம். இம்மருந்தினால் மிகுதியாகப் பேதியானால் சீரகக் குடிநீர், பழரசம், மோர் ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுக்க பேதி நின்று விடும்.

3. வாதநாசத்தைலம்: வாத நாராயண இலைச் சாறு 1 படி, வெங்காயச் சாறு 1 படி, ஆமணக்கு நெய் 1 படி. இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்துப் பக்குவத்தில் காய்ச்சி வடித்து அதில் 1/2 பலம் இரசக்கற் பூரத்தை நன்றாகப் பொடித்துக் கலக்க வேண்டும்.

1/4 முதல் 1 அவுன்சு அளவாக காலையில் மாத்திரம் கொள்ளப் பேதியாகும். இதனால் கீல்வாயு, பக்கவாதம், சூலை போன்ற நோய்கள் போம். குன்மமும் குணமாகும் எனப்படுகிறது.

### சரபேந்திரரின் குன்ம நோய் மருத்துவ முறைகள்

#### 1. ஏகமூலிகைச் சூரணம்

நீர் மேல் நெருப்பு என்னும் மூலிகையை ஞாயிற்றுக் கிழமை வேருடன் பிடுங்கி வந்து, வெயிலில் காயவைத்து மற்றோர் ஞாயிறன்று இடித்து ஒரு புதிய சட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வெருகடிப் பிரமாணம் 3 தினம் வெந்நீரில் உட்கொண்டு புளி, கசப்பு நீக்கி, பத்தியமாகச் சாப்பிடக் குன்மங்கள் தீரும்.

5 நாட்கள் இம்மருந்தைச் சாப்பிட சத்தி குன்மம் நீங்கும்.

7 நாட்கள் சாப்பிட வளி குன்மம் தீரும்.

10 நாட்கள் சாப்பிட அழல் குன்மமும் தீரும்.

2. தீபாக்கினி சூரணம்

சோற்றுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, உவர்மண் உப்பு, வெங்காரம், சவுக்காரம், நவாச்சாரம் ஆகிய உப்பு வகைகள் வகைக்கு 1 பலம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுதேக்கு, ஓமம், செவ்வியம், கண்டத்திப்பிலி, கறுஞ்சீரகம், சீரகம், வட்டத்திருப்பி ஆகிய கடைச் சரக்குகள் வகைக்கு 1 பலம். கொடிவேலி, இஞ்சி ஆகியன வகைக்கு 41/2 பலம். இவை எல்லாச் சரக்குகளையும் வறுத்துப் பொடி செய்து தினந்தோறும் ஒரு வெருகடியளவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். எண்வகைக் குன்ம நோய்களும் நீங்கும்.

### 3. சிவதைச் சூரணம்

சுத்தி செய்த சிவதை வேர் 27 வராகன் எடை, கொத்துமல்லி விதை, கடுக்காய், திப்பிலி, கோரைக் கிழங்கு, வாய்விடங்கம், சுக்கு, மிளகு, தான்றிக்காய் வகைக்கு 1 வராகன் எடை - இவைகளை உலர்த்தி இடித்துத் துணியில் சலித்து இதற்குச் சரி எடை சர்க்கரை கலந்து வெந்நீருடன் உட்கொள்ளக் குன்மம் நீங்கும்.

### 4. நிலவாகைச் சூரணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கறுஞ்சீரகம், ஓமம், பெருங்காயம், இந்துப்பு வகைக்கு 1 பலம் எடுத்து நன்கு சூரணம் செய்து, நிலவாகை 4 பலத்தைத் தனியாகச் சூரணித்து இரண்டையும் ஒன்றுபடக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்

இச்சூரணத்தில் வெருகடிப்பிரமாணம் வெந்நீருடன் சாப்பிட்டு வர குன்மங்கள் நீங்கும். உப்பு சேர்க்கலாம். புளி, கைப்பு, வாயுப் பொருட்கள் ஆகியவற்றை நீக்கவும்.

### 5. நரசிங்க இரசாயனம்

சுத்தி செய்த கொடிவேலிவேர், சேங்கொட்டை வகைக்கு 16 பலம்.

தண்ணீர் விட்டான் கிழங்கு, நெருஞ்சில், நிலப்பனைக்கிழங்கு ஆகியன முறையே 64,8,20 பலம் அளவுகளில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தேன், பசுநெய், சீனி முதலியன முறையே 16,8, 25 பலம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி சரக்குகளை நன்கு சூரணம் செய்து, நெய், தேன், சீனி ஆகியவற்றையும் சூரணத்துடன் ஒன்றுபடக் கலந்து ஒரு நெய் தடவிய பானையில் வைக்க வேண்டும்.

காலையிலும் மாலையிலும் ஒரு வராகன் எடை வீதம் சாப்பிட்டு வரக் குன்மங்கள் யாவும் தீரும்.

## 6. பஞ்ச லவணச் சூரணம்

இந்துப்பு, கடலுப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, உவர்மண் உப்பு- இவை வகைக்கு 1 படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

சதுரக் கள்ளியை வேருடன் சிறுகச் சிறுக நறுக்கிய தூள் 5 படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு புதுப்பானையில் முதலில் இந்துப்பு ஒரு படியைப் போட்டு அதன்மேல் நறுக்கிய சதுரக்கள்ளி 1 படி போடவேண்டும். பின் அதன் மேல் கடலுப்பு 1 படி போட்டு மறுபடியும் அதன்மேல் சதுரக்கள்ளி 1 படி போடவேண்டும். இவ்வாறே மற்ற உப்புகளுக்கும் செய்ய வேண்டும். பின் பானைக்குச் சரியான மூடி கொண்டு மூடி சீலைமண் செய்து, காய வைக்கவும். பின் இப்பானையை அடுப்பில் ஏற்றி 60 நாழிகை எரிக்க வேண்டும்.

ஆறியவுடன் பானைக்குள் உள்ள பற்பத்தை எடுத்து, அதனுடன் வகைக்கு 1 பலம் அளவில் எடுத்து வறுத்துச் சூரணித்த ஓமம், திப்பிலி, மிளகு இவற்றுடன் சேர்த்து நன்கு அரைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இச்சூரணத்தை அதிகாலையில் வெந்நீருடன் ஒரு காசெடை வீதம், 7 நாட்கள் சாப்பிடக் குன்ம நோய் நீங்கும்.

## 7. பிரண்டையாதிச் சூரணம்

பிரண்டைக் கொடியின் வேர், புளியரணைவேர், அவுரிவேர்-இவை சம எடை எடுத்து வெயிலில் உலர்த்தி, பின் உரலிலிட்டு நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்குச்சம எடை சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

நாள் ஒன்றுக்கு ஒரு குன்றிமணி அளவு உட்கொண்டு வரக் குன்மம் தீரும். புளி, கைப்புப் பதார்த்தம் நீக்கவும்.

## 8. கொடிவேலியாதி சூரணம்

சுத்தி செய்த கொடிவேலி வேர், பொரித்த பெருங்காயம் வகைக்கு 2 வராகன் எடை. சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, கறுஞ்சீரகம் இவை வகைக்கு 1 பலம். இவை எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்துச் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் புள்ளடிப் பிரமாணம் (பறவையின் கால் அளவு) எடுத்து அன்னத்தில் போட்டுச் சாப்பிட்டு வரக் குன்மம் நீங்கும்.

## 9. சாறணை வேர்ச் சூரணம்

சாறணை வேரைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிச் சாறணைச் சாற்றில் ஊறவைத்து எடுத்துக் கொண்டு அத்துடன் சரிபாகம் வரிக்கடுக்காய் சேர்த்து நன்கு அரைக்க வேண்டும். அரைத்த விழுதை வெயிலில் காய வைத்துப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும். இதில் ஒரு வெருகடியளவு (பூனையின் காலடி அளவு) வெந்நீரில் சாப்பிடக் குன்மம் நீங்கும்.

## 10. வாயு குன்மச் சூரணம்

மிளகு 2 பலம், சுக்கு 3 பலம், சீரகம் 4 பலம்- இவைகளை நன்கு உலர்த்தி உரலிலிட்டுப் பொடி செய்து சலித்து வைக்க வேண்டும்.

பொரித்த இந்துப்பு, கல்லுப்பு வகைக்கு 3 பலம்; பொட்டிலுப்பு 2 பலம் - இவற்றையும் பொடி செய்து வைத்துக் கொண்டு மேல் சொன்ன சூரணத்துடன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் வேளைக்கு ஒரு வெருகடியளவு வெந்நீரோடு சாப்பிட வாயு குன்மம் தீரும். புளி, பூசணிக்காய், பால், கைப்புப் பொருட்கள், மோர், கடுகு, புகையிலை, தயிர் இவற்றை நீக்கவும்.

## 11. இங்குலாதிச் சூரணம்

| | | |
|---|---|---|
| பொரித்த பெருங்காயம் | 1 | வராகன் எடை |
| பொரித்த இந்துப்பு | 2 | " |
| சீரகம் | 3 | " |
| வசம்பு | 4 | " |
| சுக்கு | 5 | " |
| கடுக்காய்த்தோல் | 6 | " |

கொடிவேலி வேர்த்தோல் 7 "

கோஷ்டம் 8 "

இவ்வெட்டு சரக்குகளையும் கல்லுரலிலிட்டு நன்கு இடித்துத் துணியில் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் ஒரு வெருகடியளவு இள வெந்நீரில் சாப்பிடக் குன்மம் நீங்கும்.

## 12. பெருங்காயச் சூரணம்

பொரித்த பெருங்காயம் 1 பலம்; வெள்ளைப்பூண்டு 5 பலம்; இந்துப்பு, பொட்டிலுப்பு, கல்லுப்பு, யவச்சாரம், வளையலுப்பு, கண்டத்திப்பிலி, நவாச்சாரம், பேரரத்தை, வெங்காரம், கடுகுரோகணி, ஓமம் இவைகள் வகை ஒன்றுக்கு 1 வராகன் எடை; நாயுருவி, வாழைச் சருகு, நீர்முள்ளி இவைகளின் உப்பு வகைக்கு 1 வராகன் எடை; கண்டங்கத்தரி சுட்டசாம்பல்- இவைகளைக் கல்லுரலில் இட்டு நன்கு சூரணித்துக் கொள்ள வேண்டும். பின்பு வெள்ளைப்பூண்டுத் தைலத்தினால் நன்கு அரைத்துக் கொண்டு, ஒரு மிளகு அளவு வியாதிக்குத் தக்கவாறு 2 வேளை உட்கொள்ள, 8 வகைக் குன்மங்களும் தீரும்.

## 13. ஆடுதீண்டாப்பாளை எரிப்புச் சூரணம்

ஆடுதீண்டாப்பாளைச் சமூலத்தைத் தேங்காய் அளவு அரைத்து எடுத்துக் கொள்ளவும். ஒரு புதுச்சட்டியில் இரண்டு பிடி உப்பைப் பரப்பி அதன் மேல் ஒரு விரற்கடையளவுக்கு ஆடுதீண்டாப்பாளைக் கற்கத்தைத் தட்டையாகத் தட்டி வைத்து அதன் மேல் மேலும் இரண்டு பிடி உப்பைப் பரப்பி, பின் அச்சட்டியை மூடிச் சீலைமண் செய்யவும். இதை அடுப்பில் வைத்துச் சீறு தீயாக எரிக்கவும்.

எரிக்கும் போது உப்பு படபடவென வெடித்துச் சீலைமண் வழியே ஆவிவர ஆரம்பித்துப் பொன் நிறமாகும். அப்போது அதை அடுப்பிலிருந்து எடுத்து இறக்கிச் சூடாறியபின் அம்மியில் வைத்து நன்கு பொடி செய்து கொள்ளவேண்டும்.

இம்மருந்தில் ஒரு வெருகடியளவு எடுத்து வெந்நீருடன் உட்கொள்ளக் குன்மம், அசீரணம், பசியின்மை யாவும் நீங்கும்.

## 14. பெருங்காயத் துளசி சூரணம்

பொரித்த பெருங்காயம், துளசி வகைக்கு 5 வராகன் எடை எடுத்துச் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு 1 1/2 வராகன் எடை வீதம் 2 வேளை சாப்பிட்டு வெந்நீர் உட்கொள்ளவும். மறுதினம் துவரை, மிளகு ரசம் உப்பில்லாமல் வைத்துச் சாப்பிட்டு வெந்நீர் உட்கொள்ளவும். இப்படி 20 நாளும் பிறகு 10 நாட்கள் ஒரு வேளை மருந்தும் சாப்பிடக் குன்மம் நீங்கும்.

## 15. கறுநொச்சிக் குடிநீர்

கறுநொச்சி, திப்பிலி, மிளகு, கறுஞ்சீரகம், சுக்கு, இவை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்து-இவைகள் எல்லாம் சேர்ந்த அளவுக்கு 8 மடங்கு நீர் வைத்து 1 மடங்காக வற்றக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். இக் குடிநீரைத் தினம் சாப்பிட்டு வரக் குன்மம் தீரும்.

## 16. கறிவேப்பிலைக் குடிநீர்

கறிவேப்பிலை, சீரகம், மிளகு, மஞ்சள், திப்பிலி, சுக்கு சம எடை எடுத்துக் கொண்டு இவற்றை எல்லாம் நீர் விட்டரைத்து, இளநீரில் கரைத்து நீர் வற்றும்படியாகக் காய்ச்சி, அதனை தினமும் உண்ண வேண்டும். இதனால் குன்மம் தீரும்.

## 17. புரசம்பட்டைக் குடிநீர்

புரசம்பட்டை, திப்பிலி, சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு-இவை யாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்யவும். பின் குடிநீரை இறுத்துவிட்டு அடியில் தங்கியிருக்கும் சரக்குகளை அரைத்துக் குடிநீருடன் குழப்பிச் சாப்பிடக் குன்மங்கள் தீரும்.

## 18. நெற்பொரியாதிக் குடிநீர்

நெற்பொரி, பச்சைப்பயறு, புரசம்வேர், முல்லைவேர், ஏலக்காய், சுக்கு, நெல்லி-இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து ஒன்றிரண்டாக்கி இளநீர் ஒரு மரக்கால் அளவு போட்டு அடுப்பின்மேல் வைத்துப் பாதியாகச் சுண்டக்காய்ச்சவும். இதில் தினந்தோறும் 1 அவுன்சு வீதம் சாப்பிட்டுக் கொண்டுவர, சத்தி குன்மம் தீரும்.

## 19. வெண்ணொச்சி மோர் தெளிவு

புதிதாய் ஒரு சட்டியை அடுப்பின் மேல் ஏற்றி அதில் வெண்ணொச்சி இலை போட்டு அத்துடன் கல்லுப்பையும் போட்டு வறுக்கவும். கொஞ்சம் சூடு இருக்கும்போது மோரையும் ஊற்றவும். பின்பு அதனை ஓரிடத்தில் வைத்துத் தெளியவிடவும். நன்கு தெளிந்தபின் மேல் தெளிவை இறுத்துக் கொள்வும். குன்மம் ஆரம்பிக்கும்போதே சாப்பிட, உடனே தீரும்.

## 20. குன்மாதிக் குடிநீர்

ஆயில் மரப்பட்டை, புங்கம்பட்டை, சாறணைவேர், கொடிவேலிவேர், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கடுக்காய்- இவைகளைச் சம எடை எடுத்து உரலில் இட்டு ஒன்றிரண்டாக இடித்து 16 பங்கு நீர் விட்டு, 8-இல் ஒன்றாகக் காய்ச்சிக் குடிநீர் செய்து உபயோகிக்கக் குன்மம் குணமாகும்.

## 21. எரி குன்ம வாயுக் குடிநீர்

மிளகு ஒரு காசெடை, சீரகம் 3 காசெடை எடுத்து அவ்விரண்டையும் பொன் வறுவலாக வறுத்துக் கொண்டு, அரைப்படி நீர் விட்டு அரைக்கால் படியாக வற்றக் காய்ச்சவும். பின்பு அதனுன் 2 காசெடை கற்கண்டும் பசுநெய் 4 காசெடையும் சேர்த்துக் காலை, மாலை 3 நாள் சாப்பிட எரி குன்மம் தீரும்.

## 22. வலி குன்மக் குடிநீர்

சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலிவேர், சாறணைவேர்-இவைகள் வகைக்கு 2 பலம் எடுத்துச் சிறியதாக நறுக்கி, 4 படி தண்ணீர் விட்டு அரைப்படியாக வற்றக் காய்ச்சித் தினம் காலை, மாலை ஒரு அவுன்சு வீதம் குடித்துவர, வலி குன்மம் தீரும்.

## 23. புரசம் பட்டைக் குடிநீர்

புரசம்பட்டையின் மேல் புறணியைச் சீவிவிட்டு சிறியதாக நறுக்கி இடித்துச் செய்த தூள் 4 பலத்தோடு, 4 மரக்கால் தண்ணீர் விட்டு ஒரு மரக்காலாக வற்றக் காய்ச்சி நன்றாகப் பிசைந்து ஒரு பானையில் வடி கட்டிக் கொள்ளவும். இதில் 1/4 பாகம் மட்டும் எடுத்து மறுபடியும் அடுப்பிலேற்றி நாலில் ஒன்றாகக் காய்ச்சவும்.

மிளகு, சுக்கு, வெள்ளைப்பூண்டு, வசம்பு இவற்றைத் தனித்தனியே இக்குடிநீர் கொண்டு அரைத்து ஒவ்வொன்றிலும் ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்து மிகுதியுள்ள 3/4 பாகத்தைப் புரசம்பட்டைக் குடிநீரில் குழப்பிக் கொள்ளவும்.

இதை தினம் 2 வேளை 1/4 படி வீதம் 3 நாள் சாப்பிடக் குன்மம் தீரும். நாள்பட்டக் குன்மத்திற்கு 10 நாள் சாப்பிட வேண்டும். பத்தியம் தேவை.

## 24. வலி குன்மக் குழம்பு

பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப்பூண்டு, கடுகு, இந்துப்பு, சீரகம், கறுஞ்சீரகம், வெந்தயம், கழற்சிக்கொடிக் கொழுந்து, கழற்சிக்காய் பருப்பு, வேலிப்பருத்தி, முடக்கற்றான் இலை- வகைக்கு 1 பலம் எடுத்து இடித்துத்

தேங்காய்ப்பால் 2 நாழி, வெள்ளாட்டுப்பால் 2 நாழி விட்டுக் குழப்பி அடுப்பிலிட்டு 2 நாழியாகக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும். இதனால் வலி குன்மம் குணமாகும்.

## 25. ஏரண்டத் தைலம்

வெள்ளைப்பூண்டு, இஞ்சி, சிவந்திப்பூ, சிவதைவேர், இந்துப்பு, மிளகு, திப்பிலி, நிலவாகை வேர், உகாவேர், முருங்கைப் பட்டை முடக்கற்றான், நொச்சி, கழற்கொடி, சாறணைவேர், கொன்றைவேர், கொடி வேலிவேர், செம்முள்ளி, கள்ளிப்பால் (கொடிக்கள்ளி அல்லது சதுரக்கள்ளி) - இவை ஒவ்வொன்றும் சம எடை எடுத்துக் கல்கமாக அரைத்து, இவை எல்லாம் சேர்ந்த எடைக்கு 4 பங்கு ஆமணக்கு எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதில் தினமும் காசெடை சாப்பிட எண்வகைக் குன்மங்களும் நீங்கும்.

## 26. இந்துப்பாதி எண்ணெய்

இந்துப்பு, காயம், வசம்பு, உள்ளிப்பூண்டு வகைக்கு 1 பலம். கொடிவேலி வேர் எலுமிச்சங்காயளவு. சீந்தில் கொடிவேர் நாரத்தங்காயளவு.இவைகளை எடுத்து எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து 4 சேர் விளக்கெண்ணெயில் கலந்து அடுப்பிலேற்றிப் பதத்தில் இறக்கி எண்ணெயை வடித்துக் கொள்ளவும். இதை அனுதினமும் ஒரு காசெடை சாப்பிட்டு வர எரி குன்மம், சத்தி குன்மம், வலி குன்மம் ஆகியன நீங்கும்.

## 27. குமட்டிக்காய் எண்ணெய்

நன்கு முற்றிய பேய்க்குமட்டிக் காய்களை வரகு வைக்கோலைப் போட்டுக் கொளுத்தி விடவும். காய்கள் நன்கு வெந்தபின் அவைகளை நசுக்கி 2 படி சாறு பிழிந்துகொள்ளவும். அத்துடன் வெள்ளைப்பூண்டுச்சாறு 2 படி, விளக்கெண்ணெய் 2 படி, பசுவின்பால் 2 படி ஆகச் சேர்த்து நன்கு கலந்து ஒரு பானையிலிட்டு அடுப்பின் மேலேற்றி மெழுகு பதம் வரும்வரை எரிக்கவும். பின்னர் பொரித்த பெருங்காயம் 1 பலம், கடுகுரோகணி 3 வராகன் எடை, கண்டத்திப்பிலி 3 வராகன் எடை- இவற்றை நன்கு பொடி செய்து மேலே சொன்ன கொதிக்கும் எண்ணெயில் கலந்து பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு துட்டளவு அதிகாலையில் 7 நாட்கள் வரை கொடுத்து, எட்டாம் நாள் வெதுப்பித்துக் கொடுக்கவும். பேதியாகும் அன்றைக்குப் புளி சேர்த்து இச்சாபத்தியமாக இருக்கவும். குழந்தை இல்லாதவர்களுக்குக்

கர்ப்பம் உண்டாகும். இவ்வாறே 3 முறை எட்டெட்டு நாட்கள் சாப்பிடக் குன்மம் முதலாகப் பல்வேறுபட்ட நோய்களும் நீங்கும்.

## 28. அழல் குன்ம எண்ணெய்

முசுமுசுக்கை இலையை ஒரு கடுக்காய் அளவு விழுதாக அரைத்து, நல்லெண்ணெய் ஒரு ஆழாக்கோடு சேர்த்துக் குழப்பி எலுமிச்சம்பழச் சாற்றையும் அத்துடன் சேர்த்து நன்கு குலுக்கி வைத்துக்கொள்ளவும்.

இதை வேளைக்குத் துட்டெடை வீதம் 3 வேளையும் சாப்பிட்டுவரப் பற்பல நோய்கள் தீர்வதுடன், அழல் குன்ம நோயும் நீங்கும். இச்சாபத்தியமாக இருக்க வேண்டும்.

## 29. கந்தகத் தைலம்

சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் 1 பலத்தைச் சங்கம் பழத்தின் சாறு விட்டு நன்கு அரைத்து நல்ல வெயிலில் வைக்க அதிலிருந்து தைலம் பிறக்கும். அதை ஒரு இறகினால் எடுத்து வழித்துப் பீங்கானில் சேமித்து வைத்துக் கொள்ளவும்.

இத் தைலத்தில் ஒன்று அல்லது இரண்டு சொட்டு மட்டும் உள்ளுக்கு சாப்பிட்டு வரக் குன்மங்கள் தீரும்.

## 30. எரி குன்ம நெய்

கொத்துமல்லி விதை, செண்பகப்பூ, கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், ஏலக்காய், சாதிக்காய், கறுஞ்சீரகம், சாத்திரபேதி, பெருங்காயம், சதகுப்பை- இவைகள் வகைக்கு 1 வராகன் எடை எடுத்துத் தண்ணீர் விட்டுக் கற்கமாக அரைத்துக் கொண்டு பசுநெய் 1 படியில் நன்றாகக் குழப்பி அடுப்பின் மீது ஏற்றிப் பதத்தில் இறக்கவும். தினந்தோறும் கால் தோலா வீதம் சாப்பிட எரி குன்மம் நீங்கும்.

## 31. பிரண்டைக் கடுகு

கொடிப்பிரண்டைச் சாறு 1 குருணி; கடுக்காய் 50 எண்ணிக்கை; சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 1 பலம்; சீரகம், பெருங்காயம், சவுக்காரம், அதிவிடயம், வெங்காரம் வகைக்கு 1/2 பலம்; கடுகு, ஓமம் வகைக்கு 1 உழக்கு; உப்பு 2 நாழி; கடுகுரோகணி, மல்லி வகைக்கு 4 வராகன் எடை; அதிமதுரம் 7 வராகன் எடை; பூண்டு 5 பலம். இவற்றைச் சேர்த்து அரைத்து அனலில் வைத்து அடியில் பற்றாமல்

கிளறிவிட்டு இறுகும் பக்குவத்தில் சிற்றாமணக்கெண்ணெய் 1/4 படி விட்டு அடிப் பற்றாமல் பதமாக இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

தினம் ஒன்றுக்கு 1 பாக்களவு. 1 மண்டலம் சாப்பிடவும். புளிப்பு, கைப்பு பதார்த்தம் நீக்க வேண்டும். குன்ம நோய் நீங்கும்.

### 32. நவாச்சாரப் பற்பம்

புளியம்புறணி சுட்ட சாம்பலை எடுத்துக் குப்பைமேனியின் சாறு விட்டு அரைத்துக் குகை செய்து உலர்த்தி, குகைக்குள்ளே நவாச்சாரம் வைத்துக் குகை வாயை மூடிக் களிமண்ணால் சீலைமண் செய்து, குக்குடபுடத்தில் அதாவது 1 1/2 சாண் ஆழமுள்ள புடத்தில் இடவும். அது பற்பமாகும். பற்பத்தில் இரண்டு பணவெடை வீதம் தேனில் சாப்பிட, நாட்பட்ட வாயு குன்மம், வாயு கட்டி ஆகியன நீங்கும்.

### 33. வழுதுணைப்பழ மருந்து

சிறுமுள் கத்தரி 40 பழங்கள், உப்பு 1 நாழி - இவ்விரண்டையும் ஒரு குருணி மோருடன் பெரிய பானையிலிட்டு அதன் வாயை ஒரு சட்டியால் வாய் படிய மூடி, பூமிக்குள் புடமாக வைக்கவும். 30 நாட்கள் கழித்து எடுத்து ஒவ்வொரு நாளும் காலையில் 1 பழம் எடுத்து, ஒரு காசெடை நல்லெண்ணெயில் தோய்த்து 15 நாட்கள் சாப்பிட வேண்டும். இதனால் எண் விதக் குன்மங்களும் தீரும்.

### 34. கத்தரிப் பெருங்காய மருந்து

சொத்தை இல்லாத நன்றாக முற்றிய கத்தரிக்காய் இரண்டு கொண்டு வந்து அதைக் குடைந்து கொள்ளவும். அதில் 1/2 வரகனெடை பெருங்காயத்தை வைத்து 1/2 சேர் நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொள்ளவேண்டும்.

இதை மூன்று தினம் சாப்பிட்டு மேற்படி எண்ணெயை மேலே தடவிக் கொண்டு வர, வலி குன்மம் தீரும்.

### 35. நாகச் செந்தூரம்

துத்தநாகம் 10 பலம் எடுத்து இலுப்பை எண்ணெயையும் பசுவெண்ணையையும் அதன் மேல் தடவி, வெள்ளாட்டுப்பாலில் 20 தடவை உருக்கி ஊற்றிச் சுத்தம் செய்து அதை ஓர் சட்டிக்குள் வைத்து அடுப்பிலேற்றவும். அதில் வெடியுப்பு 1 நாழி, சுக்கு 1 பலம், ஓமம் 1/2 படி, மஞ்சள் 1 பலம்- இவற்றை நன்றாகப் பொடி செய்து சிறுகச் சிறுகப் போட்டு, அத்துடன் செந்நாயுருவியையும்

நறுக்கிப் போட்டு நன்றாக வறுக்கவும். அது மாதுளம்பூப் போல சிவந்த செந்தூரமாகும்.

இச்செந்தூரத்தில் 1 முதல் 3 குன்றி எடை வரை எடுத்து அதனுடன் ஒரு வெருகடியளவு கொடிவேலி வேர்ச் சூரணம் சேர்த்துத் தேனில் குழைத்து 10 நாட்கள் சாப்பிடவும். இதனால் சத்தி குன்மம், எரி குன்மம், வலி குன்மம், வாயு குன்மம் ஆகியன தீரும்.

### 36. இரசமாதி செந்தூரம்

சுத்தி செய்த இரசம் 5 பலம், சுத்தி செய்த கந்தகம் 1 பலம், இந்துப்பு 4 பலம், அயத்தூள் 2 பலம், பொரித்த வெங்காரம் 8 பலம், ஊசிக் கந்தகம் 7 பலம். இச்சரக்குகளைச் சோற்றுக் கற்றாழைச் சாற்றால் 2 நாட்கள் அரைத்து, ஒரே வில்லையாகத் தட்டி ஒரு புதுச் சட்டிக்குள் வைத்து, அதன் மேல் மற்றொரு பொருத்தமான சட்டியால் மூடிச் சீலைமண் செய்து சாம்பிராணிப் புகை போட்டுக் காய வைக்கவும். பின்பு இதை அடுப்பின் மேலேற்றி ஒரே மாதிரி விறகால் 16 சாமம் எரிக்கவும். 5-ஆவது நாள் அதனை எடுத்து மறுபடியும் கற்றாழைச்சாறு விட்டு அரைத்து மறுபடியும் முன் கூறியவாறு செந்தூரமாகும் வரைப் புடமிடவும்.

இச்செந்தூரத்தில் 2 குன்றி எடையும் திரிகடுகு சூரணமும் சேர்த்து வெந்நீரில் சாப்பிடலாம். தேன், பழச்சாறு, தயிர் இவற்றையும் வெந்நீருக்குப் பதில் பயன்படுத்தலாம்.

இதனால் எல்லாவகைக் குன்ம நோய்களும் நீங்கும்.

### 37. இலவணச் செந்தூரம்

கல்லுப்பு 1 படி; நத்தைச் சதை 1 படி; பெருங்காயம், சங்கு, பொரித்த வெங்காரம், பலகறை, இந்துப்பு இவை வகைக்கு 1 பலம். மேற்படி சரக்குகள் யாவற்றையும் கொள்ளுக்குடிநீரில் அரைத்து, ஒரு புதுச்சட்டியை எடுத்து அதில் வெற்றிலைகளைப் பரப்பி மேற்படி மருந்தைப் பிட்டு போல் வைத்து மறுபடியும் வெற்றிலையால் மூடவும். பின்பு அச்சட்டியை மற்றொரு சட்டியால் மூடிச் சீலைமண் செய்து கஜபுடம் இடவும்.

புடம் ஆறிய பின் செந்தூரத்தை எடுத்துக் குன்ம நோய்களுக்கு வியாதியின் நிலைமை அறிந்து ஒரு வராகனெடை செந்தூரத்தைத் தேனிலோ, இஞ்சிச் சாற்றிலோ, பசுவெண்ணெயிலோ குழைத்துக் கொடுக்க வேண்டும்.

### 38. தாம்பிரச் செந்தூரம்

சுத்தி செய்த தாம்பிரப்பொடி 6 கழஞ்சு; சுத்தி செய்த இரசம், கந்தகம், பொரித்த வெங்காரம், பெருங்காயம் இவை வகைக்கு 2 கழஞ்சு.இவற்றைக் கல்வத்திலிட்டுத் தூதுளைச் சாற்றால் நன்கு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து, அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலை மண் செய்து காய வைத்துக் குக்குடப் புடம் இடவும். இதனால் செந்தூரம் கிடைக்கும். இதனை 1 முதல் 2 குன்றியளவு தேனில் குழைத்துச் சாப்பிட எண்விதக் குன்மமும் தீரும்.

### 39. இரசப் பற்பம்

பாதரசம் 5 வராகன் எடை, வெங்காரம் 1 வராகன் எடை- இவ்விரண்டையும் எருக்கம்பூச்சாறு விட்டு 7 நாட்கள் அரைத்து, அரைத்த விழுதைப் பெரிய காசிக் குப்பியில் போட்டு, குப்பியை 7 சீலைமண் செய்து அதன் வாயை மாக்கல்லினால் மூடிவிடவேணடும். ஒரு பெரிய மண் சட்டியில் மணலைப் போட்டு அதில் இக் குப்பியை வைத்துக் குப்பியின் வாய்மட்டம் வரைக்கும் மணல் போட்டுச் சட்டியின் வாயை மற்றோர் சட்டியால் மூடிச் சீலைமண் செய்து சிறு தீயாக 12 சாமம் எரிக்க வேண்டும்.

ஆறிய பின் மருந்தை எடுத்துச் சுத்தி செய்த படிகாரம், சுத்தி செய்த பால்துத்தம், சங்குப் பற்பம் இவை வகைக்கு 1 வராகனெடை எடுத்து அந்த மருந்துடன் சேர்த்து ஒன்றாய் அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இம்மருந்தை 1 முதல் 2 குன்றியளவில் இஞ்சிச்சாற்றில் சாப்பிடக் குன்மம் நீங்கும்.

### 40. குக்கிலாதி மாத்திரை

சிற்றரத்தை, பெருங்காயம், ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், யவச்சாரம், சத்திச்சாரம், வெங்காரம், வெண்மிளகு, மஞ்சள், வசம்பு, கடலுப்பு, இந்துப்பு, அட்டுப்பு, வளையலுப்பு, உவர்மண் உப்பு, இலவங்கப்பட்டை, கோஷ்டம், கண்டத்திப்பிலி, வாய்விடங்கம், செவ்வியம், சாதிப்பத்திரி, சாதிக்காய்-இவை வகைக்கு 1 பலம். இவையெல்லாம் சேர்ந்த நிறைக்குச் சமஅளவு சுத்தி செய்த குங்கிலியமும், வெள்ளைப்பூண்டு 100 பலமும், வேண்டிய அளவுக்கு வெல்லமும் நெய்யும் சேர்த்து நன்றாக இடித்துக் கழற்சிக் காயளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொண்டு, அதிகாலையில் தினம் ஒரு உருண்டை சாப்பிடக் குன்மம் முதலான பலவித நோய்கள் நீங்கும்.

## 41. தேங்காய் உருண்டை

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், குரோசாணி ஓமம், பூண்டு, கண்டத்திப்பிலி வகைக்கு 1 பலம். இந்துப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, பெருங்காயம், சவுட்டுப்பு, கல்லுப்பு- இவை வகைக்கு 3 வராகன் எடை எடுத்துப் பொடி செய்து கொள்ளவும். மேற்கண்ட சரக்குகள் அனைத்தையும் இஞ்சிச்சாறு விட்டு அரைக்கவும். இரண்டு முற்றின தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரை இறுத்து விட்டு, அரைத்த மருந்தை அதனுள் இட்டுக் கண்ணை மூடி சாணத்தால் கவசம் செய்து புடத்தில் போடவும். சாணம் கறுகும்படி அதைச் சுட்டெடுத்து அதைத் தட்டி உடைத்து அதனுள்ளிருக்கும் மருந்தை எடுத்து அரைத்து, தேற்றாங்கொட்டை அளவுக்கு உருண்டையாக உருட்டிக் கொள்ளவும். தேங்காயைக் கீறி காய வைத்துக் கொள்ளவும். ஒரு கீற்றுத் தேங்காயும் ஒரு உருண்டை மருந்துமாக தினம் 2 வேளை சாப்பிட, எண்வகைக் குன்மங்களும் நீங்கும்.

## 42. வில்வாதி இளகம்

மேல்தோல் நீக்கிய வில்வவேரில் 30 பலம் எடுத்து நசுக்கி 8 மரக்கால் நீர் விட்டு ஊறவைத்து மறுநாள் அடுப்பின் மேலேற்றி 1 மரக்கால் ஆகும் வரை வற்றக் காய்ச்ச வேண்டும். பின்பு அக்குடிநீருடன் 30 பலம் வெல்லம் சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பின்மேல் ஏற்றிப் பாகுபதம் வரும்வரை காய்ச்சவேண்டும். இதனுடன் செவ்வியம் 40 பலம்; மிளகு, சீரகம், திப்பிலி, வகைக்கு 2 பலம்; சுக்கு 3 பலம்; கொடிவேலிவேர், அதிமதுரம், கண்டத்திப்பிலி, சாதிப்பத்திரி ஆகியன வகைக்கு 1 பலம், இலவங்கப்பத்திரி 1/2 பலம், ஏலக்காய் 1/2 பலம்.

மேற்படி சரக்குகளைப் பொன் நிறமாக வறுத்து உரலிலிட்டு இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். முதலில் தயாரித்த பாகில் இதனைக் கலந்து கிண்டி பதத்தில் இறக்கவேண்டும். சூடு ஆறியபின் தேன் 1 படி சேர்த்துக் கிளறி வைத்துக் கொள்ள வேண்டும். இதில் தினமும் ஒரு கழற்சிப் பிரமாணம் சாப்பிட, எண்வகைக் குன்மங்களும் நீங்கும்.

## 43. சீரக இளகம்

சீரகம் 2 பலம், இலவங்கப்பத்திரி 3 வராகன் எடை -இவைகளை இடித்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

தேன் 3 சேர் எடுத்து இளஞ்சூடாகக் காய்ச்சி ஆறவிட்டு எடுத்து மேற்படி சூரணத்துடன் கலந்து உபயோகிக்கவேண்டும். சத்தி குன்மம், அரோசகம் போன்ற நோய்கள் நீங்கும்.

இனி அகத்தியர் வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் கூறப்பட்டுள்ள குன்ம மருந்துகளைக் காணலாம்.

### 1. அட்ட குன்மத்துக்கு மருந்து

கல்லுப்பு, கறியுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, சுக்கு, கறுஞ்சீரகம் எவச்சாரம், இலவங்கம், சத்திச்சாரம், மனோசிலை, நேர்வாளம் வகைக்கு 1/4 பலம். கடுகுரோகணி 1 பலம்-மேற்கண்ட சரக்குகளைப் பொடித்துக் கொள்ளவும். ஒரு தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரைக் கொட்டிவிட்டு அதற்குள் பொடியைப் போட்டு, மேற்பகுதியைச் சாணியால் மூடி அடுப்பில் எரித்துப் புடம்போட வேண்டும். தேங்காய் ஓடு வெந்தபிறகு எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தூதுளங்காயளவு வழங்க எண்விதக் குன்மங்களும் தீரும். பசும்பால் அல்லது நெய்யில் அனுபானித்துக் கொள்ளவும்.

### 2. எரி குன்ம மருந்து

தெங்கம் பாளைப்பூ, சீரகம், அதிமதுரம், சர்க்கரை சம அளவு சேர்த்துப் பால்விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும்.

எலுமிச்சங்காயளவு பாலில் அனுபானித்துக் கொடுக்க எரிகுன்மம் தீரும்.

### 3. சத்தி குன்ம மருந்து

எருக்கம் பழுப்புச் சாறு, வெள்ளுள்ளிச் சாறு ஆகியவற்றைச் சம அளவு கலந்து காசெடை உண்ண, சத்தி குன்மம் தீரும்.

### 4. வலி குன்ம மருந்து

நெருஞ்சி சமூலம், ஆவாரை இலை ஆகியவற்றைச் சம அளவு எடுத்து வறுத்து முறைப்படி குடிநீர் செய்து சாப்பிட வலி குன்மம் நீங்கும்.

நோய்களுக்குச் சித்த பரிகாரம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள குன்ம நோய் சிகிச்சை முறைகள் வருமாறு:

### 1. அண்ட இளகம்

எலுமிச்சம்பழம் 25, கோழிமுட்டை 25, சீரகம் பலம் 25, சோம்பு பலம் 1, சர்க்கரை பலம் 25, நெய் பலம் 5 1/4, தேன் பலம் 5 1/4.

முட்டையின் வெண்கருவை மட்டும் ஒரு பாண்டத்திலிட்டு, அத்துடன் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து சேர்த்து சர்க்கரையை அதில் கரைத்து அடுப்பேற்றி, சிறு தீயாக எரித்துக் காய்ச்சிக் கிண்டிக் கொண்டேயிருந்து பாகு பதத்தில் சீரகம்,

சோம்பு வறுத்து இடித்துத் துணியில் சலித்துச் செய்யப்பட்ட பொடியைத் தூவிக் கிளறி நெய்விட்டு இறக்கி வைக்கவும். ஆறியபின் தேன் சேர்த்துக் கிண்டி ஜாடியில் வைக்கவும்.

கழற்சிக் காயளவு காலை மாலை ஆகாரத்திற்கு முன் சாப்பிட்டு வர எப்படிப் பட்ட குன்ம நோயும் இருவாரத்தில் குணம் ஆகும். நல்ல பசியுண்டாகும். குன்ம நோய்களுக்குக் கைகண்ட அனுபவமுறை இது. யாவரும் இதனைக் கையாளலாம்.

## கறிவேப்பிலை இளகம்

இலவங்கச் சூரணம், ஓமம் வறுத்து இடித்த சூரணம், அதிவிடயச் சூரணம், கடுக்காய்ப்பூச் சூரணம், கடுக்காய்ப் பிஞ்சு வறுத்து இடித்த சூரணம் இவ்வைந்தும் வகைக்கு 5 பலம். இந்துப்பு இடித்துப் பொடித்தது 2 1/2 பலம், நெய் தெளித்துப் பொரித்தெடுத்த பெருங்காயப் பொடி 21/2 பலம், பச்சைக் கறிவேப்பிலை சிறிய மாங்காயளவு விழுதாக அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவைகளை எல்லாம் ஒரு சட்டியில் ஒன்றாகக் கலந்து பசுமோர் 1 1/2 முதல் 2 படி விட்டுக் குழம்பாகக் கரைத்து அடுப்பில் ஏற்றிச் சிறு தீயில் எரித்துக் கிளறவும். நீர்வற்றி இலேகியபதம் வரும் போது கீழே இறக்கி வாயகன்ற புட்டியில் வைத்து மூடி வைக்கவும்.

1/2 முதல 1 தோலா எடையளவில் இலேகியத்தைக் காலை, மாலை பசுவின் மோரில் அல்லது சுடுநீரில் அனுபானித்துக் கொடுக்கக் குன்மம், அது தொடர்பான வலி, ஏப்பம், அசீரணம் ஆகியன நீங்கும்.

## 3. நெல்லிக்காய். இளகம்

முற்றின நெல்லிக்காய் 12 படி, பசுநெய் 1/2 படி, நல்லெண்ணெய் 1/4 படி, சீனி 6 வீசை.

சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், ஓமம், சீரகம், இலவங்கம், ஏலரிசி, தக்கோலம், கொத்துமல்லி, கூகைநீறு, அதிமதுரம், வாய்விடங்கம் ஆகியவற்றின் வறுத்திடித்த பொடி வகைக்கு 6 தோலா. மேலும் பசுநெய் 1/4 படி, தேன் 1/2 படி.

நெல்லிக்காயை ஒரு பாண்டத்திலிட்டு 30 படி தண்ணீர் விட்டு அடுப்பேற்றி வற்றக் காய்ச்சவும், வெந்த காய்களைத் துண்டுகளாக்கி அவற்றிலுள்ள விதை, நார் ஆகியவைகளைப் பொறுக்கி எடுத்து விட்டு நன்றாய்ப் பிசைந்து ஒரு சல்லடையில் சிறுகச் சிறுக வைத்துத் தேய்க்கவும். வெண்ணெய்போல் வரக்கூடிய நெல்லிக்காயின் சதையை ஒரு வெண்கல உருளியில் போட்டு அடுப்பேற்றி

நீர்ச்சத்து வற்றும்படி நன்றாய் வதக்கவும். அப்பால் முதலில் கூறிய நெய்யையும், நல்லெண்ணெயையும் அதில் விட்டுக் கிளறவும். சர்க்கரையை நெல்லிக்காய் வெந்து வடித்த சாற்றில் கரைத்துப் பாகு காய்ச்சி அதில் நெல்லிக்காய் பாவனையையும் சூரணங்களையும் போட்டுக் கிண்டி, பின்னால் கூறப்பட்டுள்ள நெய்யையும் விட்டு நன்கு கிளறி இறக்கி ஆறியபின் தேன்விட்டுப் பிசைந்து பளிங்கு சீசாவில் வைக்கவும்.

1/2 முதல் 1 தோலா வீதம் காலை, மாலை சாப்பிட்டு வரக் குன்மம் யாவும் குணமாகும்.

தாமிரப் பற்பம் அல்லது செந்தூரங்களைக் குன்ம நோய்க்கு வழங்கும் போது இதை அனுபானமாகக் கொள்ளலாம்.

சங்கு பற்பம், சிலாசத்துப் பற்பம் ஆகியவற்றைக் குன்ம நோய்க்கு வழங்கும் சமயம் இதனையும் சேர்த்துக் கொடுக்க, குன்மம் விரைவில் குணமாகும்.

## 4. இஞ்சி இரசாயனம்

அரைப்படி எலுமிச்சம்பழச்சாற்றில் இந்துப்பு 1 பலம் கரைத்து அதில் 10 பலம் மேல் தோல் சீவிய இஞ்சியை வில்லையாக அரிந்து போட்டு 3 நாள் ஊறவைத்து உலர்த்தி இடித்துத் துணியில் சலித்துக் கொள்ளவும். கோஷ்டம், பெருங்காயம், அக்கரகாரம் இவை வகைக்கு பலம் 1/8; பறங்கிப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்கு பலம் 1/16; சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிவிடயம், மல்லி, ஓமம், கற்கடகசிங்கி, தாளிசப்பத்திரி, சீனம், சதகுப்பை, மகரப்பூ, அதிமதுரம், சோபனுப்பு, பொட்டிலுப்பு, இலவங்கம், இலவங்கப்பத்திரி, சன்ன இலவங்கப்பட்டை இவை வகைக்கு 1/4 பலம். இந்தச் சரக்குகளையும் வெதுப்பி இடித்து ஒன்றாய்க் கலந்து தேன் படி 1/4, பசு நெய் படி 1/4 விட்டு நன்றாகப் பிசைந்து வைத்துக் கொண்டு, நெல்லிக்காயளவு காலை, மாலை 40 நாட்கள் கொடுக்க அட்ட குன்மம், நெஞ்செரிவு முதலியன தீரும்.

## 5. குன்மக் குடோரி மெழுகு (கண்ணுசாமியம்)

ஒரு பலம் வீரத்தை முறையாகச் சுத்தி செய்து ஒரு மண்ணோட்டில் வைத்து சிறு தீயில் எரித்து எடுக்கவும் எருக்கம் பழுப்பு இலை பிழிந்தெடுத்த சாற்றால் ஒரு சாமம் சுறுக்குக் கொடுத்து வீரம் கரைந்தபின்பு, ஒரு வராகன் எடை வெள்ளிக் காடிக்காரம் போட்டு மீண்டும் அச் சாற்றால் இரண்டு சாமம் சுறுக்குக் கொடுத்து மெழுகு பதத்தில் சேதப்படாமல் ஓலையால் வழித்துக் கல்வத்திலிட்டு முலைப்பாலால் 4 சாமம் அரைத்துக் கொம்புச் சிமிழில் வைக்க வேண்டும்.

இதனை 6 மாதம் வரை உபயோகிக்கக் கூடாது. பின்னர் குன்மம், பாரிசவாயு, சன்னி முதலிய நோய்களுக்குச் சிறு பச்சைப்பயறளவு பனைவெல்லத்தில் பொதிந்து காலை மாலை 3 நாள் கொடுக்கவும். முதல் நாள் சில தேகிகளுக்கு வாந்தியானாலும் ஆகும். அதற்கு மறுநாள் வாந்தியாகாது. இதற்குள் வாய் வேக்காடு உண்டாகிறதா என்று கவனித்துக் கொண்டே வந்து, அப்படியிருந்தால் மருந்தை நிறுத்திவிட வேண்டும். மீண்டும் தேவையாயின் 10 நாட்கள் இடைவிட்டு இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

பத்தியம்: பால்கஞ்சி நல்லது. புளி சேர்க்காமல், இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 6. குன்மக் குடோரி இளகம் (சிகிச்சாரத்ன தீபம்)

பனைவெல்லம் 10 பலம், நவாச்சாரம், வெங்காரம், வளையலுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, சோற்றுப்பு, சுத்தித்த பூநீறு, சூடம்- இவை வகைக்கு 1 பலம். வெள்ளாட்டு அமுரி (மூத்திரம்) 1/2 படி.

ஒரு பழகின பாண்டத்தில் பனைவெல்லத்தையும் வடிகட்டின வெள்ளாட்டு அமுரியையும் விட்டுக் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகுபதம் வரும் சமயம் மற்ற சரக்குகளை இடித்துப் பொடித்துத் தூவிக் கிண்டி இலேகிய பதத்தில் இறக்கி ஆறவைத்துச் சுரண்டி எடுத்துக் கல்வத்திலிட்டு, தேன் விட்டரைத்து மெழுகு பதமாக்கி, ஒரு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

வேளைக்குச் சிறு சுண்டைக் காயளவு காலை மாலை 2 வேளை தனியாக வேனும் அல்லது சூதப் பற்பத்துடன் சேர்த்தேனும் கொடுக்க வலி குன்மம், சத்தி குன்மம் முதலியன தீரும். இச்சாபத்தியம் தேவை.

## 7. வீரமெழுகு

பேயன் வாழைப்பழம் 25 எடுத்து, அத்திப்பட்டை இடித்த பொடி பச்சையாக ஒரு பிடி- இவற்றையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு சட்டியிலிட்டு நன்றாய்ப் பிசைந்து ஒரு கெட்டித் துணியில் கட்டித் தொங்க வைக்கவும். அடியில் பீங்கான் கோப்பையைச் சாறு வடிந்து கொண்டிருப்பதற்காக வைத்திருக்க வேண்டும். ஆறு மணி நேரம் சென்ற பிறகு அப்பொட்டலத்தைப் பிழியச் சாறு வரும். இந்தச் சாற்றுக்குப் பெயர் வாழைப்பழச் செயநீர் ஆகும்.

இதற்கு மேல் சுத்தி செய்த வீரம் 1 பலம் எடுத்து, இரும்புக் கரண்டியைச் சுத்தமாகத் துலக்கி அதில் வைத்து முன் தயாரித்த வாழைப்பழச் செயநீர் கொண்டு

சிறு தீயில் சுருக்குக் கொடுக்கவும். வீரம் கரைந்து மெழுகாகும். இறுகியபதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். அதை வழித்து ஒரு கல்வத்திலிட்டு முலைப்பால் கொண்டு 4 சாமம் அரைத்து வழித்துக் கொம்புச்சிமிழில் வைக்கவும். ஒருக்கால் நீர்பாகமாக இருந்தால் சிறது திரிகடுகுத்தூள் தூவிக் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு கடுகு அளவு சிறிது பனைவெல்லத்திற்குள் பொதிந்து காலை, மாலை 3 நாட்கள் சாப்பிடக் குன்ம நோய் யாவும் குணமாகும்.

மெழுகைத் தயாரித்து 6 மாதங்கட்குப் பின்னர்தான் உபயோகிக்க வேண்டும். பத்தியம்: பால் கஞ்சி நல்லது. புளி நீக்க வேண்டும். இச்சாபத்தியம் வைக்க வேண்டும்.

### 8. சௌபாக்கிய சுண்டி (சிகிச்சா இரத்தின தீபம்)

ஆவின்பால் 2 படி; சர்க்கரை 1/2 வீசை; சுக்கு 8 பலம்; வாலுளுவை அரிசி, ஓமம், வாய்விடங்கம், திப்பிலி, மிளகு, ஏலம், கரிசாலை, சதகுப்பை. தனியா ஆகியவை வகைக்கு 1 பலம்.

ஒரு இரும்புக் கடாயில் ஆவின்பாலை விட்டு அடுப்பேற்றி, சுத்தப்படுத்திய வெள்ளைச் சர்க்கரையைப் போட்டுச் சிறு தீயாக எரித்துப் பாகுபதம் வரும்போது மற்ற சரக்குகளின் சூரணத்தைத் தூவிக் கிண்டி இலேகிய பதத்திற்குப் போதிய நெய், தேன் விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ளவும்.

வேளைக்குச் சுண்டைக்காயளவில் தினம் காலை, மாலை சாப்பிடக் குன்மம், அசீரணம், சூதகவாயு முதலியன நீங்கும்.

### 9. பச்சைக் கற்பூரச் சூரணம்

தோல் சீவிய சுக்கு சூரணித்தது 1 பங்கு, ஏலரிசி வறுத்திடித்த சூரணம் 1/2 பங்கு, பச்சைக் கற்பூரம் 1/4 பங்கு. இம் மூன்று பொடிகளையும் கலந்து, சம அளவு சர்க்கரை சேர்க்கவும். ஒரு வராகன் எடை அளவு சூரணத்தைக் காலை, மாலை தேனில் கொள்ள வலி குன்மம், வாந்தி, விக்கல், அசீரணம் முதலியன தீரும்.

### 10. அயவீரச் செந்தூரம் (யூகிமுனி வாத வைத்தியம்)

இதை அயச் செந்தூரம் என்றும் கூறுவர். சுத்தி செய்த அயப்பொடியும், சுத்தி செய்த சவ்வீரமும் சம எடை எடுத்துக் கல்வத்தில் ஒன்றுபடக் கலந்து அரைக்கவும். அப்பால் சங்குநீர் அல்லது புகைநீர் என்றழைக்கப்படும் வெடியுப்புத் திராவகம் அல்லது தண்ணீர் விட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தி எரிப்புச் சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து உலர்த்தி, வட்டடுப்பில்

வைத்து 3 நாட்கள் எரிக்க வேண்டும். தினம் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை எரிக்க வேண்டும். இரவில் எரிப்பை நிறுத்தித் தணலில் அடுப்பின் மேலேயே வைத்திருக்க வேண்டும். முதல் நாள் தீபாக்கினி, கமலாக்கினியாகவும் இரண்டாம் நாள் கமலாக்கினி, காடாக்கினியாகவும் மூன்றாம் நாள் காடாக்கினியாகவும் எரிக்க வேண்டும். அப்பால் ஆறினபின் கவசத்தைப் பிரித்து அடிச்சட்டியிலுள்ள செந்தூரத்தை மட்டும் சேகரித்துப் பொடித்துப் பாட்டிலில் வைக்கவும். இந்தச் செந்தூரத்தை அரிசி எடை திரிகடுகு சூரணத்தில் கலந்து தேனில் காலை, மாலை கொள்ள வலி குன்மம் குணமாகும்.

## 11. கல்லுப்புச் சுண்ணம் (யூகிமுனி வாத வைத்தியம்)

கடல் நுரையும் சோற்றுப்பும் சமம் கூட்டிக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து மணல் சட்டியிலிட்டு மேல் மூடி முறைப்படி புடம் போட்டு எடுக்கச் சுண்ணமாகும். இதில் நான்கிலொரு பாகமாக இலிங்கக் கட்டுச் செந்தூரம் சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டு 1 முதல் 2 குன்றி எடை எடுத்து அத்துடன் திரிகடுகுத்தூள், தேன் கலந்து காலை, மாலை சாப்பிட வலி குன்மம் தீரும்.

## 12. ஏலாதிக் குடிநீர் (தேரையர் வைத்தியம் 1500)

ஏலம், நெல்லிமுள்ளி, நெற்பொரி, பாசிப்பயறு, வில்வவேர் இவை வகைக்கு 1 பலம் கூட்டிப் பொடித்து, இளநீர் விட்டரைத்துப் பசுவின் கோமியம் 1 படி விட்டு நான்கிலொன்றாகக் காய்ச்சி வேளைக்கு 2 அவுன்சு வீதம் காலை, மாலை 1 மண்டலம் சாப்பிட்டு வரக் குன்ம நோய்கள் குணமாகும். பத்தியமாகத் துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, பசுவின்பால், வெந்நீர், தூதுவளை, பொன்னாங்காணி ஆகியவற்றைச் சேர்க்கலாம்.

## 13. உப்புச் செந்தூரம் (தேரையர் வைத்தியம் 1500)

சோற்றுப்பு வேண்டிய அளவு எடுத்து ஆற்றுத் தும்மட்டிக் காய்ச் சாறு விட்டு கல்வத்தில் இரண்டு நாளரைத்து அகலிலிட்டு மேலகல் மூடிச் சீலைமண் செய்து முழுப்புடம் போட்டெடுக்கச் செந்தூரமாகும். 1 முதல் 2 குன்றி எடைச் செந்தூரத்தைப் பனைவெல்லத்தில் பொதிந்து காலை, மாலை சாப்பிடக் குன்ம நோய்கள் யாவும் பறந்தோடிப் போகும் எனக் கூறப்படுகிறது.

## 14. கறுங்கோழிச் சூரணம்

முதிர்ந்த கறுங் கோழியைக் குடல், தலை, மயிர் நீக்கி அதன் வயிற்றுக்குள் பெருங்காயம், கடுகு, திப்பிலி, கண்டத்திப்பிலி, சுக்கு, மிளகு, இந்துப்பு, ஓமம்,

கறுஞ்சீரகம், பொரிகாரம், சீனாக்காரம், சவுக்காரம் வகைக்கு 3 வராகன் எடை; சத்திச் சாறணைக் கிழங்கு, திருகுக் கள்ளி வேர்ப்பட்டை வகைக்கு 1 பலம் அரைத்து வைத்து மூடி, கொள்ளவித்த தண்ணீர் 2 படி, சிறு தும்பைச் சாறு 1 படி நன்றாய்க் கலந்து அதற்குள் விட்டு மூடிச் சீலைமண் செய்து நீர் வற்ற வேகவைத்து, எலும்பு நீக்கி உலர்த்திப் பொடித்துத் திரிகடியளவு காலை, மாலை தேனில் கொள்ளச் சகலவிதக் குன்ம நோய்களும் தீரும்.

### 15. வில்வவேர்க் குடிநீர்

வில்வவேர், முல்லை வேர், சுக்கு, ஏலம், பாசிப்பயறு, நெல்லிப்பருப்பு இவை வகைக்கு 1/4 பலம் வீதம் இடித்து 1 படித் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாய் வற்ற வைத்துக் காலை, மாலை 3 நாட்கள், 6 வேளை கொள்ள அழல் குன்மம் குணமாகும்.

### 16. வெடியுப்புச் சுண்ணம்

வெடியுப்பு 10 கிராம், படிகாரம் 2 கிராம், நவாச்சாரம் 2 கிராம். இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்து ஒன்றுபடக் கலந்து வைத்துக் கொள்ளவும். பின்பு அதனுடன் 14 கிராம் பழைய புளியைச் சேர்த்துக் கல்லுரலில் வைத்து இடித்துக் கொண்டு, உருண்டைகளாகச் செய்து ஒரு எரிப்புச் சட்டியில் ஒவ்வொரு உருண்டையாக வைத்து அடுப்பிலிட்டுத் தென்னை ஓலையால் எரித்தெடுத்து வைத்துக் கொள்ளவும்.

5 முதல் 10 கிராம் அளவில், சரியளவு திரிகடுகுச் சூரணத்துடன் சேர்த்து தண்ணீர் அல்லது மோரில் கலந்து சாப்பிட, எல்லா வகைக் குன்ம நோயும் நீங்கும்.

### 17. பஞ்சபாண மாத்திரை

பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி இவை வகைக்கு 5 பலம்; ஓமம் 2 பலம்; சீரகம் 2பலம்; கறுஞ்சீரகம் 6 பலம்; மிளகு 9 பலம்; சுக்கு 7 பலம். இவைகளை உலர்த்திப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றால் 1 நாள் அரைத்துச் சிறு சுண்டைக் காயளவு மாத்திரைகளாக்கி, தினம் காலையில் மட்டும் சாப்பிட்டு வரக் குன்ம நோய் நீங்கும்.

### 18. போஜனக் குடாரி மாத்திரை

சுக்கு, பெருங்காயம், வகைக்கு 1 பலம்; இஞ்சி 2 பலம்; இந்துப்பு 2 பலம்; சீரகம், மிளகு வகைக்கு 3 பலம்; இவைகளை உலர்த்திப் பொடித்துப் பழச்சாறு

விட்டு ஒரு நாள் அரைத்துச் சுண்டைக் காயளவு மாத்திரைகளாகச் செய்து 1 மாத்திரை காலையில் மட்டும் சாப்பிட்டு வரக் குன்மம், அசீரணம், முதலியன நீங்கும்.

பதினெண் சித்தர் அருளிய வைத்தியத் திறவு கோல் என்னும் நூலில் கூறப்பட்டக் குன்ம நோய் சிகிச்சை முறைகள் வருமாறு:

### 1. குங்கிலியச் சூரணம்

வெள்ளைக் குங்கிலியம் 1 பலம் கொண்டு வந்து, 5 இளநீர் உடைத்துச் சட்டியில் இட்டுக் குங்கிலியக் கட்டியை அதில் போட்டு அடுப்பிலேற்றி நீர் சுண்டும் வரையில் எரித்துப் பின்னர் குங்கிலியக் கட்டியை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சூரணமாக்கிப் புட்டியில் வைத்துக் கொண்டு இரண்டு அரிசி எடை சூரணத்தை வெண்ணெய் அல்லது நெய்யில் குழைத்துக் கொடுக்க, வயிற்றில் உள்ள புண் ஆறும். சூடு தணியும்.

### 2. உப்புச் சூரணம்

உப்பு 1படி; எருமை மோர் 1 படி; வரிக் குமட்டிச் சாறு 1 படி; இந்துப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு-இவைகள் வகைக்கு 1/8 பலம். இவை யாவற்றையும் ஒன்றாகப் போட்டு அடுப்பேற்றி எரித்துக் கொண்டிருப்பதுடன், பூவரசன் குச்சியினால் கிளறிவிடவும். சர்க்கரை போலாகும் சமயத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். ஒரு வராகன் எடை உப்பை வாயில் போட்டுக் கொண்டு நீராகாரம் சாப்பிடவும். குன்மம், வாய்வு இவற்றுக்குச் சிறந்த மருந்தாகும்.

### 3. மதுராதிச் சூரணம்

அதிமதுரம், கோஷ்டம், அக்கரகாரம், விலாமிச்சம்வேர், தக்கோலம், ஏலம், சிறுநாகப்பூ, மல்லி, கிராம்பு, சிறுதேக்கு, மிளகு, திரிபலை, கூகைநீறு, முத்தக்காசு, திப்பிலி, இலவங்கப்பத்திரி, நன்னாரி வேர், பருத்தி விதைப்பருப்பு, நெற்பொரி, நற்சீரகம்- இவைகள் வகைக்கு 2 வராகன் எடை வெதுப்பிப் பொடித்துத் தாளிசப்பத்திரி சூரணம் 4 வராகன் எடை, சீனி 4 பலம் கூட்டித் திரிகடிகை பிரமாணம் சாப்பிட்டு வரப் பித்தம் தொடர்பான குன்மம், அரோசகம், நெஞ்செரிச்சல், வாந்தி, கிறுகிறுப்பு தீரும்.

### 4. பிரண்டைச் சூரணம்

திரிகடுகு, திரிபலை, கல்லுப்பு, ஏலம், இலவங்கம், சிற்றரத்தை, திப்பிலி மூலம், கறுஞ்சீரகம், நற்சீரகம், பறங்கிப் பட்டை, அக்கிரகாரம், இந்துப்பு, கிராம்பு,

சாதிக்காய், சாதிப்பத்திரி, அமுக்கராக் கிழங்கு வகைக்கு 4 கழஞ்சு; கடுகுரோகணி, வெங்காரம், ஓமம் வகைக்கு 2 கழஞ்சு. இவைகளை இடித்துச் சூரணம் செய்து அதற்கு நிகர் முற்றின பிரண்டைச் சூரணம் பாதியும் சீனி பாதியும் கலந்து திரிகடிப் பிரமாணம் தேன், நெய், பால் இவைகளில் கொள்ள குன்மம் முதலான நோய்கள் தீரும்.

### 5. இங்குலாதிச் சூரணம்

பெருங்காயம், வசம்பு சுட்ட கரி, மாதுளம் வேர், ஓமம், மல்லி, கோஷ்டம், பொன்முசுட்டை வேர், செங்கழுநீர்க் கிழங்கு, கொட்டைக் கரந்தைச் சமூலம், கொடிவேலி வேர், பஞ்சலவணம், செவ்வியம், யானைத் திப்பிலி, திரிகடுகு, சீரகம், வாய்விடங்கம், குரோசாணி ஓமம், கறிவேப்பிலை ஆகியவற்றை ஓர் நிறையாக எடுத்துச் சூரணித்துத் திரிகடிகை பிரமாணம் வெந்நீரில் கொள்ள அக்கினி மந்தம், வாய் நீருறல், வாந்தி, வெள்ளோக்காளம், விக்கல் முதலிய குன்ம நோய் தொடர்பான தொந்தரவுகள் நீங்கும்.

### 6. அக்கினிச் சூரணம்

கொடிவேலிவேர், திரிகடுகு, ஓமம், சிறுதேக்கு, யானைத் திப்பிலி, கோஷ்டம், இந்துப்பு, காயம், வசம்பு சுட்ட கரி வகைக்கு 1 பலம், கடுகு 1/2 பலம். இவற்றைச் சூரணித்து அதற்கு நிகர் சீனி கலந்து திரிகடிகை பிரமாணம் வெந்நீரில் கொள்ள, குன்மம் தொடர்பான அசீரணம், மந்தம், பொருமல், கிராணி முதலியன நீங்கும்.

### 7. நாகப்பற்பம்

நாகம் 1 பலம் கொண்டு வந்து இலுப்பை நெய்யில் 20 தடவை உருக்கிச் சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும். பின்பு 1/2 பலம் நாகத்தை மட்டும் உருக்கிக் கண்விட்டாடும் போது சிற்றாமணக்கு இலையைக் கசக்கி 5 அல்லது 6 துளி பிழியச் சத்தமிடும். மறுபடியும் 5 அல்லது 6 துளி பிழியச் சத்தமிடும். மறுபடியும் 5 அல்லது 6 துளி பிழியச் சத்தம் அடங்கும். துருத்தியை விசையாக ஊதி மறுபடியும் 5,6 துளி பிழிந்து சிற்றாமணக்கின் வேரால் கிண்டி வர மல்லிகைப்பூவைப் போல் நீறும். அதைப் பலவித அனுபானங்களிலிடக் குன்மம், மூலம், வெட்டை, வெள்ளை முதலியன தீரும்.

### 8. கறியுப்புச் செந்தூரம்

கறியுப்பை எருக்கம்பால், திருகுக்கள்ளிப் பால், தும்பை, கவுரித்தும்பை, மருதம்பட்டை, குமரி, எலுமிச்சம்பழம், பொடுதலை-இவைகளின் சாற்றில் வகைக்கு 2 புடம் போடச் செந்தூரமாகும். இதனை 3 பணவெடை தேனில் கொடுக்கக் குன்மம், சூலை, வாய்வு முதலியன தீரும்.

### 9. காவிக்கல் செந்தூரம்

பூங்காவி 2 வராகன் எடை, படிகாரம் 2 வராகன் எடை -இவைகளைக் கல்வத்தில் அரைத்து வெண்ணெய், அல்லது நெய்யில் சாப்பிட, வயிற்று நோய்கள், பெரும்பாடு நீங்கும்.

### 10. காளமேகச் செந்தூரம்

இரசம் 6 வராகன் எடை; தாளகம், கந்தகம், இலிங்கம் இவை மூன்றும் வகைக்கு 1 வராகன் எடையாகக் கொண்டு கவல்வத்தில் இட்டு, குமரிச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலில் வைத்து மேலோடு மூடிச் சீலை மண் செய்து 5 எருவில் புடம் போடச் செந்தூரம் ஆகும்.

அனுபானமாக நெய், தேன், வெண்ணெய் முதலியவற்றைப் பயன்படுத்தலாம். இவ்வனுபானங்களில் பணவெடை அளவில் கொடுக்க மதுமேகம், தந்திமேகம், சுக்கிலமேகம், கண்டமாலை முதலியன தீரும். குன்மம் முதலான வயிற்று நோய்களுக்குச் சர்க்கரையில் கொடுக்கவும். புளி நீக்குவது அவசியம். நோயின் திறனறிந்து 3 அல்லது 5 நாட்கள் மட்டும் வழங்கவும்.

### 11. பஞ்சபாணச் செந்தூரம்

சூரத்துக் கற்பூரம், சாதிலிங்கம், மனோசிலை, தாளகம், காந்தம், இரசம், சங்கு பாடாணம், கந்தகம்-இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்துக் கல்வத்திலிட்டு மேனிச் சாற்றில் 3 சாமம் அரைத்து அப்படியே நிழலில் ஆறவைக்கவும். கறுப்பு வெற்றிலைச் சாறு, செம்பருத்திச் சாறு, வெள்ளறுகுச் சாறு, துளசிச் சாறு, வேலிப்பருத்திச் சாறு, பொடுதலைச் சாறு ஆகியவற்றில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சாற்றால் 4 சாமம் அரைக்கவும். ஒரு சட்டியில் கம்மாறு வெற்றிலையைப் பரப்பி, அரைத்த மருந்தை வில்லை தட்டி அதன் மேல் வைத்து மேல்மூடிச் சீலைமண் 7 செய்து அடுப்பிலேற்றி ஒரே சாதி விறகால் 4 சாமம் எரிக்கவும். அச்சட்டி சிவக்கக் கண்டால் தீயைக் கமலம்போல் எரிக்கவும். இப்படி 1 நாழிகை

எரித்தபின் இறக்கி, ஆறின பின்னர் எடுக்கச் செந்தூரமாகும். இஞ்சி, தேன் இவைகளில் 2 அரிசி எடை கொடுக்க எண்வகைக் குன்மமும் தீரும். இச்சாபத்தியம் வைக்கவும்.

## 12. இஞ்சி இலேகியம்

தோல் நீக்கிய இஞ்சி 10 பலம் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு மை போலரைக்கவும். ஒரு சட்டியை அடுப்பேற்றி மேற்படிச் சாற்றை அதில் விடவும். பிறகு சீரகம், மிளகு, ஏலம், அதிமதுரம், திப்பிலி மூலம், கோஷ்டம், வாலுளுவை அரிசி, தாளிசப்பத்திரி, கடுகு, கொத்துமல்லி, சித்திர மூலம், சிங்கி, குரோசாணி ஓமம் ஆகியவற்றை வகைக்கு 1/2 பலமாக எடுத்துக் கரிசாலைச் சாற்றால் அல்லது பழச்சாற்றால் துவள அரைத்து முன் மருந்துடன் சேர்க்கவும்.

பிரண்டையை மோரில் உப்பிட்டு ஊற வைத்து உலர்த்தி இடித்து 1 பலம் முன் மருந்துடன் சேர்க்கவும். சீனிச் சர்க்கரையை மேற்படி மருந்தின் எடைக்குப் பாதி சேர்த்து, ஆவின் நெய் போதுமானவரை விட்டு இலேகியமாகக் கிளறி இறக்கிக் கொள்ளவும்.

வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு காலை, மாலை 20 நாட்கள் சாப்பிட வலி குன்மம், அழல் குன்மம், உப்புசம், அரோசகம் முதலியன நீங்கும்.

குணபாடம்-தாதுசீவ வகுப்பு என்னும் நூலில் காணப்படும் குன்ம நோய் மருத்துவ முறைகள் வருமாறு:

## 1. எஃகுச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த எ.ஃகுப் பொடியைக் கமுகம் பாளைச் சாறு,காந்தள் சமூலச் சாறு, ஆத்தியிலைச்சாறு, மாவிலைச்சாறு ஆகியவைகளைத் தனித்தனியே விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, சில்லிட்டுச் சீலை மண் செய்துலர்த்திப் புடமிட்டெடுக்கச் செந்தூரம் ஆகும். இதற்குப் பன்னீரைத் துணை மருந்தாகக் கொண்டு வழங்க ஐயக் குன்மம் தீரும். உண்ணும் அளவு 200 மி.கி. முதல் 400 மி. கிராம் வரை.

## 2. எஃகுச் செந்தூரம் (வேறு முறை)

10 பலம் உருக்கைத் தகடாக அடித்துக் கொல்லன் உலையிலிட்டுக் காய்ச்சி எட்டியிலைச் சாற்றில் 10 முறை தோய்க்கத் தோய்க்க உதிரி உதிரியாய்ச் சாறு வைத்த சட்டியில் விழும்.

இத்தூளில் 1 பலம் எடுத்துக் கல்வத்திலிட்டு மருதம்பட்டைச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்திச் சில்லிட்டுச் சீலை மண் செய்துலர்த்தி, கவச எடைக்கு 24 பங்கு எடை வறட்டி கொண்டு புடமிடவும். புடமிட்டதை நாவற்பட்டைச் சாற்றால் 2 சாமம் அரைத்து முன்போல மூன்று புடமிடச் செந்தூரமாகும்.

200 முதல் 300 மி. கிராம் வரை வெண்ணெய், நெய், தேன், கருப்பஞ்சாறு, வெள்ளைப்பூண்டுச் சாறு இவற்றில் நோயின் தன்மைக்கு ஏற்றவாறு அனுபானித்துக் கொடுக்கக் குன்ம நோய்கள் நீங்கும்.

### 3. வங்கச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த வங்கப் பொடியில் நாகமல்லியிலைச்சாறு, வாழைக்கிழங்கின் சாறு இரண்டையும் தனித்தனியாக 4 பலம் வீதம் விட்டு நான்கு நாள் அரைத்து வில்லை செய்து, 3 நாள் உலர்த்திக் கவசித்து 1 நாள் உலர்த்தி 30 வறட்டியில் புடமிட்டெடுக்கச் செந்தூரம் ஆகும்.

100 முதல் 200 மி.கி. அளவில் சந்தனக் குழம்பு என்னும் துணை மருந்தில் வழங்கச் சத்தி குன்மம் நீங்கும்.

### 4. செம்புப் பற்பம்

சுத்தி செய்த செம்பின் பொடி 1 பலத்திற்கு 2 பலம் ஆத்திச் சாறு விட்டு, 2 நாட்கள் அரைத்து வில்லை செய்து நான்கு நாட்கள் வெயிலில் உலர்த்திப் பிறகு ஆட்டு எருவில் புடமிட்டெடுக்கவும், இப்படியே ஆடுதீண்டாப்பாளைச் சாறு, வேம்பின் சாறு, கடுக்காய்ச் சாறு, செம்பைச் சாறு இவற்றுள் ஒவ்வொன்றினாலும் அரைத்து வில்லை செய்து காயவைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

தேரன் மருத்துவ பாரத முறைப்படி முள்ளங்கிச் சாற்றைச் செம்புப்பொடிக்கு விட்டு முறைப்படி அரைத்து 5 புடமிட்டெடுக்க, 15 நாளில் பற்பமாகும்.

அளவு: கடுகு, தினை, சாமை, கொள் இவற்றுள் ஒவ்வொன்றையும் நன்னான்கு கூறாக்கி அப்பங்கின் அளவாகக் கொள்ள வேண்டும். 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை உண்ணுவது நலம்.

செம்புப்பற்பம் பாசுபதாஸ்திரத்துக்கு ஒப்பானது எனக் கூறப்படுகிறது. இப் பற்பத்தைக் காயாம்பூ இரசத்தில் அனுபானித்துக் கொடுக்க வாதக் குன்மம் தீரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

### 5. நாகச் செந்தூரம்

நன்றாக சுத்தி செய்த சிறுகண் நாகம் 4 பலம் எடுத்து, ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றவும். அந்த நாகம் நன்றாய் உருகும் சமயத்தில் வெடியுப்பு, ஓமம், தோல் சீவின சுக்கு, பூசுமஞ்சள் இந்நான்கும் சமமாய்ப் பொடி செய்து 1 படி எடுத்து அந்த நாகத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு தூள் ஆகும் வரை வறுக்க வேண்டும். அப்படி வறுக்கப்பட்ட அந்த நாகத்தூளைச் சிவப்பு நாயுருவிச் சமூலம் சேர்த்து இடித்து முன்போலவே கொஞ்சம் கொஞ்சமாக 1 படி தூள் போட்டு வறுத்து அந்தத் தூளைப் பிறகு எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துப் புடம் இட்டு வைத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரத்தைப் பணவெடை திரிகடுகு சூரணத்துடன் சேர்த்து நெய்யிலோ, தேனிலோ, பாலிலோ கொடுக்கச் சில நாட்களில் குன்மம் நீங்கும்.

### 6. மண்டூரச் செந்தூரம்

நாட்சென்ற 4 பலம் மண்டூரத்தை இடித்து, 40 படி வெள்ளாட்டு நீரில் ஒரு நாள் ஊற வைத்து, நீர் சுண்டக் காய்ச்சி, பசுநீரில் 10 முறை தோய்த்துக் கழுவி எடுத்து, கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாற்றால் ஒரு நாளரைத்து வில்லை தட்டி உலர்ந்த பின் ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து 2 முழ உயரப் புடம் போடவும்.

இவ்விதமாகச் சோற்றுக் கற்றாழைச் சாற்றில் 10 புடமும், நீர்முள்ளி, கரிசாலை, வீழி, வேலிப்பருத்தி, மாதுளம்பழம் இவற்றின் சாற்றினால் வகைக்குப் பத்து புடமும் போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். இதில் வேளைக்குப் பணவெடை வீதம் கரிசாலைச் சாற்றில் தினம் காலை, மாலை 2 வேளையும் கொடுக்கக் குன்மம், பாண்டு, சோபை, மகோதரம் முதலியன நீங்கும்.

### 7. நாராயண மண்டூரம்

திரிகடுகு, திரிபலை, திப்பிலிமூலம், யானைத்திப்பிலி, செவ்வியம், சிறுதேக்கு, ஓமம், குரோசாணிஓமம், வசம்பு, மஞ்சள், கடுகுரோகணி, வெள்ளுள்ளி, பெருங்காயம், மயிலிறகு சாம்பல், வாளம், பிரண்டை, காட்டாத்திப்பூ, நிலவேம்பு, சாதிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு, முட்காவேளை வேர், சாறணைவேர், கரிசாலை, ஆலம் விழுது, குமட்டிக்காய்-இவைகளைச் சமமாக எடுத்துச் சேர்த்த எடைக்குச் சமன் மண்டூரம் கூட்டி ஆடாதோடைச் சாறு, கரிசாலைச் சாறு, பழச்சாறு, இஞ்சிச்சாறு, ஆயில்பட்டைக் குடிநீர், தெளிந்த காடி, நெல்லிக்காய்ச் சாறு இவைகளில் முறையே அரைத்துக்கொள்ள வேண்டும்.

புளியங்கொட்டையளவு காலை, மாலை 2 வேளை வெந்நீர் அல்லது மோரில் கொள்ள பாண்டு, சோபை, காமாலை போன்ற நோய்களோடு, குன்மமும் தீரும்.

## 8. கருங் குழம்பு

வல்லத்துச் சிட்டம், காந்தம், தோல் நீக்கிய நீரடிமுத்து இவை வகைக்கு 1 கழஞ்சு; நேர்வாளம் 2 கழஞ்சு சுத்தி செய்து கல்வத்திலிட்டு மெழுகுபதமாக அரைத்து எருமைக் கொம்புச் சிமிழில் வைத்துக் கொள்ளவும். பணவெடை பனைவெல்லத்தில் உட்கொள்ள இரத்த வாதக் குன்மக் கட்டி தீரும்.

## 9. வெள்ளிச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த வெள்ளிப் பொடியில் பாதிரிச் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, நிலப்பனைக் கிழங்குச் சாறு, சித்திரமூலச்சாறு இவைகளைத் தனித்தனியே விட்டு, முறைப்படி அரைத்து வில்லை செய்து உலர்த்திக் கவசித்துப் புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும். வெந்நீரில் கொடுக்கக் குன்மம் நீங்கும்.

## 10. இரசச் செந்தூரம்

1 பலம் சுத்தி செய்த இரசத்திற்குத் துவரை இலைச்சாறு, புலித்துடக்கியிலைச் சாறு, களா இலைச்சாறு, கடம்பிலைச்சாறு, பண்ணையிலைச்சாறு, சுரையிலைச் சாறு, ஆரையிலைச்சாறு இவைகளை முறைப்படித் தனித்தனியே விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திப் புடமிட்டு ஆறவிட்டு எடுக்கின் செந்தூரமாகும்.

பித்த உன்மத்தம் சேர்ந்த குன்ம நோய்க்கு இதனைத் தாமரையிலைச் சாற்றில் வழங்கலாம்.

## 11. சூதக்கருப்பு

சுத்தி செய்த இரசம் 1 பங்கு, வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு, பச்சை விடதாரி வேர்ப்பட்டை 8 பங்கு. இம்மூன்றையும் குப்பைமேனிச்சாறு விட்டு 6 மணி நேரம் விடாமல் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து சில்லிட்டு 7 சீலை மண் செய்து, எண்மடங்கு வறட்டி கொண்டு புடமிட்டு ஆறவிட்டு எடுக்கவும். வில்லையைப் பொடித்துக் குப்பியில் அடைத்துக் கொள்ளவும். 2 முதல் 4 உளுந்தெடை பசுநெய், தேன், பால் இவற்றில் வழங்கக் குன்மம் தீரும்.

## 12. இரசப்பதங்கம்

இரசத்தை வேண்டிய அளவு எடுத்து வெடியுப்பு திராவகத்தால் அரைத்து 1 பங்கு செங்கல்தூளும் கலந்து அதில் பாதியை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை

மண் செய்து முத்தீயாக 12 மணி நேரம் எரிக்கவும். ஆறின பின் மேல்சட்டியில் படிந்துள்ள பதங்கத்தை எடுத்து மேற்படி திராவகம் விட்டு முன்போல் அரைத்து வில்லை செய்து எரிக்கவும். இபபடியே பதங்கிக்காமல் அடியில் தங்குமட்டும் எரிக்கவும். இதனைச் சண்டரசப் பற்பம் என்றும் கூறுவர்.

1/2 முதல் 1 அரிசி எடை அளவு தக்க அனுபானத்தில் கொடுக்கக் குன்மம், சூலை, வளிநோய்கள் தீரும்.

## 13. இலிங்கப் பற்பம்

1 பலம் சுத்தி செய்த இலிங்கத்திற்கு 4 பலம் அளவுள்ள சரக்கொன்றை சமூலச் சாறு விட்டு 4 நாட்கள் அரைத்து, 2 நாட்கள் வில்லை செய்து உலர்த்தி, அகலிலிட்டுக் கவசித்து 1 நாள் உலர்த்தி, 32 வறட்டியில் புடமிட்டு எடுக்க வேண்டும். இவ்வாறே நாட்டு எட்டிக்கனி இரசம், சுரபுன்னையிலைச் சாறு, வாட்கோரை சமூலச்சாறு, திருவாத்தி சமூலச்சாறு, நறுமாமர சமூலச்சாறு, பனைவேல் மர சமூலச் சாறு, கல்லால் சமூலச் சாறு ஆகியவற்றால் அரைத்துப் புடமிட்டு எடுக்க இலிங்கம் பற்பமாகும்.

- துவரையில் எட்டில் ஒரு கூறு அளவில் உண்பது நல்லது.
- தக்க அனுபானத்தில் வழங்க வளி, அழல், ஐய வகைக் குன்மங்கள் தீரும்.
- குன்ம அனல் புண் என்னும் வகையான நோயும் இப்பற்பத்தால் தீரும்.

## 14. கந்தகச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த கந்தகத்திற்கு ஆமணக்கிலைச்சாறு, கற்பூரவள்ளிச் சாறு, தேவதாரு இலைச்சாறு, எருக்கிலைச்சாறு இவை ஒவ்வொன்றிற்கும் 5 நாள் வீதம் மொத்தம் 20 நாட்களும் முறைப்படி அரைத்து வில்லை செய்துலர்த்தி சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கச் செந்தூரம் ஆகும்.

வெல்லத்தில் அனுபானித்துக் கொடுக்க வாந்தி (சத்தி) குன்மம் தீரும்.

## 15. கந்தகத் தைலம்

கந்தகம், வெடியுப்பு, மனோசிலை இவை வகைக்கு 1 பலம் எடுத்துப் பொடித்து நவாச்சாரம், வீரம் இவைகளை வகைக்கு அரைக் கழஞ்சு கூட்டிப் பசுவெண்ணெய் 4 பலம் சேர்த்து அரைத்துச் சுடர் தைலம் வாங்கவும். அரைப்பணவெடை காலை, மாலை 2 வேளை, 10 நாட்கள் சர்க்கரையில் வழங்க, குன்ம நோய்கள் தீரும்.

## 16. கந்தக இரசாயனம்

கந்தகம் 10 பலம்; அமுக்கராக் கிழங்கு 5 பலம்; பறங்கிச் சக்கை 2 பலம்; கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விடங்கம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடலைப்பருப்பு, சேங்கொட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை வகைக்கு 1 பலம்-இவைகளைத் தனித்தனியாகச் சூரணம் செய்து பிறகு எல்லாவற்றையும் ஒன்றுபடக் கலந்து சர்க்கரை, தேன், நெய் சேர்க்கவும்.

10 முதல் 15 குன்றியளவில் உண்ணக் குன்மம், மேகநோய்கள், வளிநோய்கள் முதலியன நீங்கும்.

## 17. பஞ்சபாடாணச் செந்தூரம்

சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், அரிதாரம், கந்தகம், இரசக் கற்பூரம், வெள்ளைப் பாடாணம் இவை வகைக்கு 1 பலம் எடுத்து ஒவ்வொன்றையும் சுத்தி செய்து குப்பைமேனி, வெற்றிலை, வெள்ளறுகு, துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை இவைகளின் சாற்றால் வகைக்கு 4 சாமம் ஆட்டி வில்லை செய்து நிழலில் உலர்த்தி, அதற்கு வெற்றிலையால் கவசம் செய்து ஒரு சட்டியில் வைத்து மேற்சட்டி கொண்டு மூடி, 7 சீலைமண் செய்து நன்றாகக் காயவைத்து அடுப்பேற்றி, தீபம் போல 4 சாமம் எரித்துப் பார்க்க மேற்சட்டியில் செந்தூரம் பற்றியிருக்கும். அதை எடுத்துப் பணவெடை தேன், இஞ்சிச்சாறு இவைகளில் அனுபானித்துக் கொடுக்கக் குன்ம நோய்கள் தீரும்.

# 3

# நீரிழிவு நோய்

**முன்னுரை**

வளி நாடியும் அழல் நாடியும் கூடி நடக்கின் பெருமழையால் ஓடும் நீர் போல் சிறுநீர் இறங்கும். உருவம் வேற்றுமை அடையும். அளவு கடந்து உண்ணினும் மென்மேலும் பசியுண்டாகும். உடலின் ஊன் கரைந்து சிறுநீராக வெளியாகும். அன்றியும் சிறுநீர் இனிக்கும்.

வளிநாடியின் இடப் பக்கத்தே ஐயநாடிக் கூடி நடந்தாலும் நீரிழிவு காணும். அந்நீர் கள்ளைப் போலும், பதனீர் போலவும் காணப்படும். உடல் இளைத்து வெளுப்பாகும். ஐய நோய்களும் துணை கொள்ளும்.

எனவே நீரிழிவு நோயில் வாதம் முதலில் கேடடைந்து உடன் பித்தத்தையும் ஐயத்தையும் கேடடையச் செய்யும் என்பதை அறியலாம்.

இந்நோயை மதுமேகம், இனிப்பு நீர், மிகு நீர், மேகநீர் என்ற பெயரிலும் அழைப்பார்கள். பிரமேகம் என்ற சொல்லும் நீரிழிவு நோயைக் குறிக்கும் சொல்லாகும்.

**நோய்க் காரணங்கள்**

- அளவு கடந்த நெய்ப்பு, இனிப்புச்சுவையுள்ள பொருட்களை உண்ணுதல்
- மிகுதியும் கலவி செய்தல்
- எப்பொழுதும் மனம் நைதல்
- சோம்பித் திரிதல்
- மிகுதியும் உட்கார்ந்திருத்தல் ஆகிய காரணங்களால்

கீழ்நோக்குக் கால், மேல்நோக்குக் கால், பரவுகால் ஆகிய இம்மூன்றும் மிகுந்து, முதல் நிலை அதாவது மூலாதாரத்தைத் தூண்டி அங்குள்ள கனலை எழுப்பி இந்நோயைப் பிறப்பிக்கும்.

தாய், தந்தை வழியாகவும் இந்நோய் வரக்கூடும் என அறிதல் வேண்டும். நெய், பால், கள், இறைச்சி, மிக்க சுவையுள்ள மீன்கள், இனிப்புச் சுவையுள்ள உணவுப் பொருட்கள், வேகாப் பொருட்கள், ஈரப் பொருட்கள், வெறுப்பைத் தரத்தக்க உணவுகள் என்னும் இவைகளும் நோய் வரும் வழிகளாம்.

**நோய்க் குறிகுணங்கள்**

- ❖ நீர் மிகுந்த அளவில் இறங்கும்.
- ❖ நீரின் நிறம் தண்ணீரைப் போலவும், நிறை அளவு கடந்தும், எடை கனத்தும், மணம் தேன் போலும் காணும். காய்ச்சின தேனின் மணம் வீசுதலும் உண்டாகும்.
- ❖ மிகுந்த பசி, மிகுந்த நீர்வேட்கை, நாவறட்சி காணும்.
- ❖ புசித்த சற்று நேரத்திற்கெல்லாம் பசி எடுப்பது போல் காணும்.
- ❖ நெய், பால் முதலிய ஊட்டம் தரும் பொருட்களை உண்டாலும் உடல் ஊட்டம் பெறாமல் இருக்கும்.
- ❖ உடல் நாளுக்கு நாள் மெலிவடைந்து கொண்டே வரும்.
- ❖ தோல் நெய்ப்புப் பசையற்று வறண்டு, சுருங்கிக் காணப்படுவதுடன் வெளுத்த மஞ்சள் நிறத்தை அடையும்.
- ❖ தோலில் சொறி உண்டாகி அரிப்பு ஏற்படவும் செய்யும்.
- ❖ நரம்புத் தளர்ச்சி ஏற்படும்.
- ❖ அதனால் கை, கால் விரல் நுனிகளிலும் உள்ளங்கால், உள்ளங்கைகளிலும் எரிச்சல் அல்லது ஊசியால் குத்துவது போன்ற உணர்வு அல்லது திமிர்த்தது போலிருத்தல் ஆகிய குறிகுணங்கள் காணும்.
- ❖ இந்நோய் பெரும்பாலும் ஐயக் காலமாகிய முதுமையில் உண்டாகும் நோய் ஆகும். சிறுபான்மை இளவயதிலும் நடு வயதிலும் வருவதுண்டு. நடுவயதிலும், இளவயதிலும் வரும் இந்நோய் எளிதில் தீரும்.
- ❖ சரியான மருத்துவம் உரிய நேரத்தில் செய்யாவிடின் பல்வகைக் கேட்டினை உடம்பில் ஏற்படுத்தும். சிறுநீர் அடிக்கடி மிகுந்து

வெளியாவதுடன் உடல் சத்தை உருக்கி சர்க்கரையாய் நீர் வழியே வெளியாக்கி விடும்.

❖ மயக்கம், தலை சுற்றல், களைத்து வீழ்தல்

❖ தன் உணர்வின்றி படுத்துக்கிடத்தல்

❖ மூச்சு, வியர்வை ஆகியவற்றில் தேன் மணம் வீசல்

❖ கண் மங்கல், கண்ணில் திரையுண்டாதல் ஆகியன தோன்றும்.

❖ இருமல், இரைப்பு, இளைப்பு தமரக வாயு ஆகிய நோய்களை ஏற்படுத்தும்.

❖ நோய் முற்றிய நிலையில் சிறுநீரானது நாளுக்கு நாள் அளவில் குறைந்து கொண்டே வந்து, நீர்க் கட்டு நோயை உண்டாக்கி மனக்கலக்கம், சினம், மயக்கம் ஆகிய குறிகளைக் காட்டிப் படுக்கையில் கிடத்தி மூச்சுத் தடுமாறி திணறச் செய்து கொல்லும்.

❖ சில வேளை தோலில் கட்டிகளை ஏற்படுத்தித் துன்புறுத்தும்.

**நோய் வகை**

யூகி முனிவர் மேகநீர் என்னும் நீரிழிவு நோயை 20 வகையாகக் கூறியுள்ளார். வாதத்தின் தொடர்பாக வருவன 4 என்றும், பித்தம் தொடர்பாக வருவன 6 என்றும், கபம் தொடர்பாக வருவன 10 என்றும் வகைப்படுத்தியுள்ளார். இந் நோய்களில் இழியும் சிறுநீரின் தன்மையை ஒத்து அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாகக் கூறப்பட்டுள்ளன. அந்நிலையில் ஏற்படும் குறிகுணங்களும், அக் குறிகுணங்கள் தீர்க்கப்படாத நிலையில் எவ்வளவு நாட்களில் மரணத்தை ஏற்படுத்தும் என்பதும் இதில் கூறப்பட்டுள்ளன. எனவே இங்கு கூறப்பட்டுள்ள நோய் வகைப்பாடு, நீரிழிவு நோயின் பல்வேறு நிலையில் காணப்படும் நீரின் தன்மை மற்றும் அந்நிலையில் காணும் குறிகுணங்களே என்பதை அறிந்து கொண்டால், இவ்வகைகளைப் புரிந்து கொள்வது எளிது.

## I. வளிக் குற்றத்தால் வரும் நான்கு

### 1. நெய்மண நீர்

❖ இந்நோயில் இழியும் சிறுநீர் நெய்யின் மணத்தையும் பிசுபிசுப்பையும் பெறும்.

❖ இந்நீரைச் சீலையில் தோய்த்து, திரியாக்கி விளக்கேற்றின் நெய்விளக்கு போல் எரிவதன்றி அம்மணமும் பெற்றிருக்கும்.

- ❖ இறங்கும் நீர் மிகுதியாகக் காணும்.
- ❖ உடல் வாடிக் கொண்டே வரும்.
- ❖ நோய் கண்ட 7 நாட்களில் கொல்லும்.
- ❖ இதனை ஆச்சிய கந்தி மேகம் என்பர்.

**2. பசுமண நீர்**

- ❖ இந்நோயில் இழியும் சிறுநீர் பசுவின் நீர் போலும், அதன் மணத்தை ஒத்தும் காணப்படும்.
- ❖ நாழிக்கு நாழி படியளவாக நீர் இறங்கும்.
- ❖ இந்நீரையும் முன் சொன்னவாறு துணியில் நனைத்துத் திரியாக்கி எரிக்க, பசு நீர் மணம் வீசும்.
- ❖ உடல் மெலிந்து சோர்வுண்டாகும்.
- ❖ நோய் கண்ட 15-ஆம் நாளில் கொல்லும்.
- ❖ இதனைச் சுத்த மேகம் என்பர்.

**3. சீழ் நீர்**

- ❖ சீழ் போல் சிறுநீர் நாழிக்குப் படி அளவில் இறங்கும்.
- ❖ அது கவிச்சு நாற்றம் பெறும்.
- ❖ அதனைக் காய்ச்சின் தேன்போல மணம் வீசும்.
- ❖ இந்நோய் 6 திங்களில் கொல்லும்.
- ❖ இதனைப் பிரமிய மேகம் என்பர்.

**4. சதை நீர்**

- ❖ இந்நோயில் நீர்ப்புழை, நீர்ப்பை ஆகிய இடங்களில் உள்ள சதை, சவ்வு முதலியன இற்றுச் சிறுநீருடன் கலந்து ஆட்டுக் குட்டியின் கறியைக் கழுவிய நீர்போல் வாசனை உண்டாகும்.
- ❖ வேளைக்குக் குறுணியளவாக இறங்கும்.
- ❖ இந்நீரைக் காய்ச்சின் ஆட்டுநீர் மணத்தையும், புளித்த கருப்பஞ் சாற்றின் மணத்தையும் வீசும்.

- இந்நோய் கண்ட 3 முதல் 8 நாட்களுக்குள் இறப்பர்.
- தவறின் 5-ஆம் திங்களில் இறப்பது திண்ணம்.
- இதனை மாங்கிச சிராவக மேகம் என்பர்.

**வளி நீரின் பொதுக் குறிகுணங்கள்**

- பொதுவாக கை, கால், கண் இவை அழல் போல் எரிதல்
- நா வறளல்
- பல், நா, தொண்டை இவை கறுத்தல்
- பேச்சு வன்மை குறைதல்
- கண் மேல் சொருகுதல்
- அடிக்கடி பசியும், நீர்வேட்கையும் உண்டாதல்
- உடல் முழுதும் கத்தியால் வெட்டியது போல் வலித்தல் முதலியனவாம்.

## II. அழல் குற்றத்தால் வரும் ஆறு

### 1. யானைக் கொழுப்பு மணநீர்

- இழியும் நீர் யானையின் நீர் போல் காணும்.
- வேளைக்குப் படிக் கணக்கில் இறங்கும்.
- இதனைக் காய்ச்சின் நீரினடியில் உவர்மண்போல் படிந்திருக்கும்.
- நோய் கண்ட 6 திங்களில் கொல்லும்.
- இதனை அப்பிய மேகம் என்பர்.

### 2. கற்றாழை மணநீர்

- இதில் இழியும் நீர் நாழிகைக்குப் படிக் கணக்கில் இழியும்.
- கற்றாழை நாற்றத்துடன் காணும்.
- காய்ச்சின் மிக்க நாற்றமுள்ளதாய்க் காணும்.
- இந்நோய் தோன்றிய மூன்றாம் ஆண்டில் கொல்லும்.
- இதனைப் பித்தப் பிரமியம் என்பர்.

### 3. சுண்ண மணநீர்

- வேளைக்குப் படியளவில் இழியும்.

- சுண்ணநீர் போன்ற மணம் காணும்.
- தெளிய வைக்கின் அடியில் சுண்ணாம்பு தெளிந்து படிந்து காணும்.
- நோய் கண்ட இரண்டாம் ஆண்டில் கொல்லும்.
- இதனைச் சவிரண மேகம் என்பர்.

### 4. இனிப்பு மேக நீர்

- வேளைக்கு அரைப்படியளவாய் அடிக்கடி நீரிழியும்.
- நீரிறங்கும் போதெல்லாம் நீர்ப்புழை கடுத்து விரை நோகும்.
- நீரைக் காய்ச்சின் தேனின் மணம் உண்டாகும்.
- அடியில் தங்கும் எஞ்சல் வெண்மை நிறத்துடன் பிசுபிசுத்து அடிபிடிக்கும்.
- உடல் வெளுத்துக் காணும்.
- நோய்கண்ட ஐந்து ஆண்டில் கொல்லும்.

### 5. பளிங்கு நீர்

- நீரிறங்கும்போது நீர்ப்புழையில் எரிச்சலையும் விரையில் வலியையும் உண்டுபண்ணும்.
- நீர் தாழைவிழுதியின் சாற்றைப் போல் இழியும்.
- நீரைக் காய்ச்சின், பார்வைக்குச் சீழ் போலும் அதன் நாற்றத்தோடும் காணும்.
- வேளைக்குப் படியளவாய் அடிக்கடி நீர் போகும்.
- நோய் கண்ட ஐந்தாம் ஆண்டிற்குள் கொல்லும்.
- இதனைச் சாந்திர மேகம் என்பர்.

### 6. முயற் குருதி நீர்

- சிறுநீர் அடிக்கடி இரண்டுபடி அளவாய் இறங்கும்.
- அது முயலின் குருதியைப் போல் சிவந்து நாற்றத்துடன் இழியும்.
- காய்ச்சின் புலால் நாற்றம் வீசும்.
- நீர் இறங்கும் போதெல்லாம் நீர்ப்புழை எரியும். விரைப்பக்கம் கடுக்கும்.
- நோய் கண்ட 9-ஆம் திங்களில் கொல்லும்.
- இதனை ஆர்க்க மேகம் என்பார்.

### அழல் நீரின் பொதுக் குறிகுணங்கள்

- உடல் முழுதும் வெப்புண்டாகி, எரிச்சல் காணும்.
- உடல் வறண்டு சுருங்கும்.
- மிகுந்த வியர்வை தோன்றி கவிச்சு நாற்றமடிக்கும்.
- இழியும் நீர் சீழ்போலும், தேன் போலும் கற்றாழை நீர் போலும் இருக்கும்.
- நீர்ப்புழை, விரை, ஈரல், உந்தி ஆகிய இடங்களில் வேக்காடு உண்டாகும்.

## III. ஐயக் குற்றத்தால் வரும் பத்து

### 1. ஐய நீர்

- இந்நோயில் இழியும் நீர் முறைக்குக் குறுணியளவாய் இறங்கும்.
- கொழுப்பு நிறைந்து அம்மணத்தைப் பெறும்.
- நிணத்தின் நாற்றமும் பெற்றிருக்கும்.
- ஆண்குறியும் விரையும் நோகும்.
- 7 ஆண்டிற்குள் சாக்காட்டை விளைவிக்கும்.
- இதனை வசாமேகநீர் என்பர்.

### 2. தூய்மை நீர்

- நல்ல தண்ணீர் போல் நீர் இழியும்.
- காய்ச்சினாலும் நல்ல தண்ணீரின் மணமே காணும்.
- வேளைக்குக் குறுணியளவாக நீர் இழியும்.
- நோய் தோன்றிய 10 ஆண்டில் கொல்லும்.
- இதனை உத்தம மேகம் என்பர்.

### 3. மூளை நீர்

- இதில் இழியும் நீர் எலும்பின் உள்ளே இருக்கும் மூளையை நீரில் கரைத்தாற்போல் காணும்.
- ஒவ்வொரு வேளையும் மூன்று நாழி அளவாய் வெளியாகும்.
- சிறுநீரைக் காய்ச்சினால் நிணநாற்றமாய் இருக்கும்.
- இந்நோயுற்றார் ஆயுள் அளவு 5 ஆண்டாகும்.

- ❖ இதனை மஜ்ஜை மேகம் என்பர்.

**4. இள நீர்**

- ❖ இளநீர் போன்று சிறுநீர் இழியும்.
- ❖ அது போன்றே மணக்கும்.
- ❖ காய்ச்சின் தேங்காய் நெய்யின் மணம் வீசும்.
- ❖ வேளைக்குப் படியளவாய் இழியும்.
- ❖ மிக்க தாகம் உண்டாகும்.
- ❖ உடம்பு இளைத்துக் காணும்.
- ❖ மிகுந்த மனக்கலக்கம் உண்டாகும்.
- ❖ நோய்கண்ட 7 ஆண்டில் கொல்லும்.
- ❖ இதனை ஆதிக்க மேகம் என்பர்.

**5. கள் நீர்**

- ❖ இழியும் சிறுநீர் கள்ளைப் போல் வெளுத்தும் நுரைத்தும் காணும்.
- ❖ வேளைக்கு நாழி அளவாக இறங்கும்.
- ❖ காய்ச்சினால் கள் மணம் வீசும்.
- ❖ மயக்கம் உண்டாகும்.
- ❖ ஏழாம் ஆண்டில் கொல்லும்.
- ❖ இதனைச் சுரா மேகம் என்பர்.

**6. வெண்ணீர்**

- ❖ இந்நோயில் சிறுநீர் குழகுழத்து விந்து கலந்து இழியும்.
- ❖ இதனைக் காய்ச்சின் உறைந்து கறுத்து ஈரல் போலத் தோன்றும்.
- ❖ மூன்றாமாண்டில் கொல்லும்.
- ❖ இதனைச் சுக்கில மேகம் என்பர்.

**7. கழுநீர்**

- ❖ இந்நோயில் நீர் அடைத்துச் சிக்கிச்சிக்கி அடிக்கடி கழுநீர் போல மிகுதியாய் இறங்கும்.
- ❖ காய்ச்சின் அடியில் சங்கைச் சுட்ட சுண்ணாம்பு போலப் படியும்.

- உடல் நாற்றமடிக்கும்.
- ஓராண்டில் கொல்லும்.
- இதனை உதகமேகம் என்பர்.

**8. தேன் நீர்**

- இழியும் நீர் தேன் போல் மிகுதியாய் இறங்கும்.
- தேன் போன்ற மணத்துடன் சிறுநீரிழியும்.
- மெழுகு போல் அடியில் எஞ்சல் காணும்.
- ஈ, எறும்பு மிகுதியாய் மொய்க்கும்.
- வேளைக்குக் குறுணியளவாக இழியும்.
- உடலில் தேன் மணம் வீசும்.
- ஐந்து மாதத்தில் கொல்லும்.
- இதனைப் பிரசமேகம் என்பர்.

**9. உப்பு நீர்**

- இழியும் நீர் சுண்ணம் கலக்கிய நீர் போல் வெளுத்தும், அதன் மணத்துடனும் காணும்.
- தெளியவைக்க அடியில் சுண்ணம் படிந்து காணும்.
- அளவில் மிகுந்தும் இழியும்.
- காய்ச்சின் உப்பு படியும்.
- 15 வருடத்தில் கொல்லும்.
- இதனைச் சாரமேகம் என்பர்.
- இந்நோயில் மேலும் உடல் இளைத்தல், மனக்கவலை, ஏக்கம், பசியின்மை, செரியாமை ஆகிய குறிகுணங்கள் காணும்.

**10. கவிச்சி நீர்**

- கறியைக் கழுவின நீர் போன்ற நிறத்துடனும், புலால் நாற்றத்துடனும் சிறுநீர் காணும்.
- நீர் போகும் போதெல்லாம் ஆண்குறியைப் புரட்டி நீரடைத்தது போல முறுக்கும்.

- அடிக்கடி மிகுந்த அளவில் போகும்.
- நோய் கண்ட மூன்றாம் ஆண்டில் கொல்லும்.
- இதனைத் தைத்திய மேகம் என்பர்.

**ஐயநீரின் பொதுக் குறிகுணங்கள்**

- உடல் பெருத்து, வெளுத்து ஊதிக் காணும்.
- உடலில் தோல் கேடடைந்து சொறி, சிரங்கு, தினவு முதலியன உண்டாகும்.
- அடிக்கடி உணவும் நீரும் தேடும்.
- இருமலும், தொண்டையில் கோழை கட்டலும் உண்டாகும்.

**20 வகை மேக நீர்களின் பொதுக் குறிகுணங்கள்**

- மிகுந்த நீர் வேட்கை
- அடிக்கடி நீரிழிதல்
- இருமல்
- மேல் மூச்சு
- சுவையின்மை
- மனம் கலக்கமடைதல்
- அடிக்கடி நீரும் சோறும் கேட்டல்
- இடுப்பு, கழுத்து, எலும்பு ஆகியன உழன்று எரிதல்
- உடல் மெலிந்துபோதல்
- தூக்கமின்மை
- வாயு மிகுந்து பரிதல்
- காற்று வேண்டுதல்
- சூடாக மூச்சு வெளியாதல்
- விக்கல்
- மயக்கம்
- உடல் வெளுத்தல்
- அரட்டல், புரட்டல் முதலானவை காணும்.

## இந்நோயில் காணும் அவத்தைகள்

நீரிழிவு நோயில் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும் 10 வித அவத்தைகள் வருமாறு:

1. உடல் பெருத்துக் கொண்டே வருவதோடு நீர்ப்புழை அகன்று வரும்.
2. நீர் பெருகி இழிவதோடு விந்து கெட்டு உடலின் ஒளி குன்றிக் காணும்.
3. நாவறட்சியும், வயிற்றுள் காற்று கூடியும் பெருக்கும்.
4. நீர் வேட்கை மிகுந்து, முப்பிணி (சன்னி) தொடரும்.
5. சிறுநீர் பெருகி இழிந்து விந்தை அழிக்கும்.
6. படுக்கையில் கிடக்கவொட்டாமல் மூச்சு வாங்கும்.
7. உடலில் கழலைக் கட்டி உண்டாகும்.
8. வாய் குமட்டிச் சுவையற்றுப் பெருமூச்சு உண்டாய், உடல் சோரும்.
9. உடலில் புழுக்கள், கிருமிகள் தோன்றி, உடலை மெலியச் செய்யும்.
10. இளைப்பு நோய் உண்டாகிக் கொல்லும்.

## நீரிழிவு நோயில் வரும் கட்டிகள் அல்லது பிளவைகள்

நீரிழிவு நோய் உடலில் ஊறி, உடல் வன்மையைக் குறைத்து, ஆங்காங்கு சிறு பருக்களையேனும் பெருங்கட்டிகளையேனும் பிறப்பிக்கும் நோயாகும். சில வேளைகளில் பருக்கள் அல்லது கட்டிகள் பிறக்காமலே சொறிந்த இடத்திலேனும் அடிபட்ட இடத்திலேனும் புண்பட்டுச் சினைத்துப் பெருந்துன்பத்தையும் உண்டாக்கும்.

### வகைகள்

இனிப்பு நீர்க் கட்டிகள் குற்ற அளவாய் நான்கும், குருதியளவாய் ஒன்றும், அடிபடல் வெட்டுப் படலால் ஒன்றும் கூடி 6 வகை எனப்படும். அவைகள் முறையே வளி, அழல், ஐயம், முக்குற்றம், குருதி, காயக் கட்டிகள் என வழங்கப்படும்.

சில நூலோர் மது மேகத்தில் உண்டாகும் கட்டி அல்லது பிளவைகளை 10 வகை என்பர். அவை:

1. கடுகுப் பிளவை
2. கடலைப் பிளவை
3. நிலப்பூசினிப் பிளவை

4. கட்டிப் பிளவை
5. மடக்குப் பிளவை
6. ஆமையோட்டுப் பிளவை
7. பேய்ச்சுரைப் பிளவை
8. கூன் பிளவை
9. வலைக்கண் பிளவை
10. கூட்டுப் பிளவை என்பனவாகும்.

**குறிகுணம்**

1. கடுகுப் பிளவை: கடுகைப் போன்ற வடிவத்துடன் சிறு கட்டிகளாய் ஒன்றன் பின் ஒன்றாய், இடைக்கிடை கடுகு இடவும் இடமின்றி உடல் முழுவதையும் விரைவாய்க் கவர்ந்து கொள்ளும். கட்டிகள் பார்வைக்குச் சிறிதளவாய்க் காணினும் மிகவும் வலிக்கும்.

2. கடலைப் பிளவை: கடலை அளவாய் உடல் முழுதும் சிறிதும் இடம் இல்லாமல் பரவிவிடும். தாங்க முடியாத வலியைத் தரும்.

3. நிலப்பூசினிப் பிளவை: நிலப்பூசினியின் அளவையும் வடிவத்தையும் ஒத்த அளவில் கட்டி உண்டாகி அதில் தாங்க முடியாத வலியையும் கிளை நோய்கள் பலவற்றையும் உண்டாக்கும்.

4. கட்டிப் பிளவை: தோலின் மேலாவது, சதையின் மேலாவது கட்டி போலப் பெருத்து வட்டமாகவேனும் நீளமாகவேனும் வளர்ந்து, சிலவேளை உடைந்து சீழ் வடியும். சிலவேளை உடையாமலே அழுந்திப் போவதும் உண்டு. இது தவிர ஓரிடத்தில் தோன்றிய கட்டி உலருமுன் அவ்விடத்தை விட்டு மற்றோர் இடத்தில் புதிதாய்த் தோன்றுவதுமாகி மாறிமாறி வரச்செய்யும்.

5. மடக்குப் பிளவை: இது பெரும்பாலும் சதைப் பற்றுள்ள இடங்களான பிட்டம், தொடை முதலிய இடங்களில் உண்டாகலாம். அது தோன்றும்போதே, அவ்விடத்தில் கனத்து வீங்கி அடி பருத்து அகன்று, அதன் ஓரங்களைச் சுற்றி அணையிட்டதுபோல் தோல் தடித்துச் சிவந்து, நடுக்குழிந்து கறுநிறம் அடைந்து அல்லது கறுஞ்செம்மை நிறமடைந்து காணும். இக்கட்டி தாங்க முடியாத வலியையும், உடல் வியர்த்தலையும் உண்டாக்கும். இது பார்வைக்கு அகலைப் போல் குழி விழுந்திருப்பதால் இதனை அகல் கழலை அல்லது அகல் பிளவை என்றும் கூறுவர்.

6. ஆமையோட்டுப் பிளவை: ஆமையோட்டைக் கவிழ்த்தது போல் கட்டி நாளுக்கு நாள் பெருத்துக் கொண்டே வந்து அதில் சிறுசிறு கண்கள் தோன்றி, அக்கண்களிலிருந்து சீழ் வடியும். மற்றைய இடங்கள் வழுவழுத்து ஒளிரும். வன்மையுள்ள பெருமருந்துகளைக் கொடுத்தாலும் உலராது. பல கெடுதிகளை உண்டுபண்ணும்.

7. பேய்ச்சுரைப் பிளவை: இக்கட்டி உண்டாகும் இடத்தில் நெருப்பால் சுட்டதுபோல் எரிச்சல் உண்டாகிப் பின் அவ்விடத்தே கறுஞ்செம்மை நிறமான கொப்புளம் பிறந்து, அது பேய்ச்சுரை வடிவம் போலப் பெருகும். அதன் அடி சினத்து வீங்கி மிக வலிக்கும். அத்துடன் சுரம், மயக்கம், சோர்வு, கழிச்சல் முதலியன தொடரும்.

8. கூன் பிளவை: இது வயிற்றிலாவது இடுப்பிலாவது உண்டாகிப் பெருத்துத் திரண்டு, மேல் பூசினாற் போலும், உள்பக்கம் அழுந்தினாற் போலும் மிகுந்த கறுநிறத்தோடும் தோன்றும். வியர்வை, தாங்க முடியாத வலி, சுரம் முதலிய குறிகுணங்களைக் காட்டி, கட்டியிலிருந்து நாற்றத்துடன் நீர்வடிதல், கூனனைப் போல் நிமிரவும் வளையவும் முடியாமை முதலிய பல்வகையான குறிகுணங்களைக் காட்டும்.

9. வலைக்கண் பிளவை: இக் கட்டி உண்டாகும்போதே அவ்விடத்தில் எரிச்சல், குத்தல், குடைதல் என்னும் குறிகளைக் காட்டி, தடித்துச் சிவந்து வீங்கி வளரும். பின்பு நாளுக்கு நாள் மிகவும் பெருத்து வலையின் கண்கள் போல் சிறுசிறு கண்கள் தோன்றி, அதனின்று சீழ் கசியும். எளிதில் உலராமல் பரவிக் கொண்டே போகும்.

10. கூட்டுப் பிளவை: பல சிறு கட்டிகள் ஒரே கூட்டமாய்ப் பிறந்து அவைகள் வளரவளர சிறு கட்டிகள் யாவும் ஒன்றாக இணைந்து ஒரு பெருங்கட்டியாய்த் தேறும். இதில் தாங்க முடியாத வலியும் எரிச்சலும் காணும். நோயாளியை மிகுதியும் வாட்டி, ஐயப் பெருக்கினை ஏற்படுத்தும்.

### *பிளவையின் பொதுக் குறிகுணங்கள்*

- **நீரிழிவு நோயின் வன்மை பெருகப்பெருக உடல் இளைத்தல், வியர்த்தல், தோல் சுருங்கி உலர்தல் மிகுநமை ஆகிய குறிகளைக் காட்டிச் சொறிதலால் குருதி வெளியாகிய இடத்திலேனும் அடிபட்டுப் புண்ணாகிய இடத்திலேனும், புண் பரவிக் கொண்டே புரையோடும். புண்படாமலே வீங்கிக் கட்டிபோலேனும் உண்டாகித் துன்புறுத்தும்.**

- கட்டிகள் தடித்து வீங்கி மிகுந்த வலியை உண்டாக்கி நாளுக்கு நாள் பரவிக் கொண்டே வரும்.
- கட்டி பழுக்கும் தறுவாயில் தோல் சுருங்கிக் கருத்துக் காணும்.
- பின் அதில் சிறு கொப்புளங்களைப் போல் பருக்கள் உண்டாகி உடைந்து அதனின்று சீழ்வடியும்.
- சீழ் முற்றிலும் வெளியாகாமல், கட்டியில் அழுகிய சதையும் சீழும் கூடி அழுகி எளிதில் உலராமலிருக்கும்.
- மருந்துகளிட்டுக் கழுவின் அழுகிய சதை சிறிது சிறிதாய் நைந்து இற்று வெளியாகும்.
- சிலவேளை சிலையோடிக் கீழ் நோக்கிப் பரவும்.
- இதனை அரசப்பிவை அல்லது இராசப் பிளவை அல்லது இராசக் கட்டி என்றும் கூறுவர்.
- இது பெரும்பாலும் முதுகிலும், பிட்டத்திலும், புறங் கழுத்திலும், தோளிலும் வருவதுண்டு.
- இவ்விடங்களில் காணின் துன்பங்கள் பல தொடரும்.
- மற்ற இடங்களிலும் தோன்றும் கட்டிகளைப் பக்கப் பிளவை என்று கூறுவர்.
- மேற் கூறப்பட்ட பத்து வகைக் கட்டிகளுள் எவ்வகைக் கட்டியாயினும் கழுத்தின் பின்புறத்து மேல் பாகத்திலேனும், நடு முதுகிலேனும் வரின் எளிதில் தீராவாம். இவ்விரண்டில் கழுத்தின் பின் புறத்து வருவன தீமையை மிகுதியும் உண்டாக்கும்.

### நீரிழிவு நோய் கணிப்பு: நாடி

நோய் தோன்றுவதற்கான பல்வேறு காரணங்களால் கீழ்நோக்குக் கால், மேல்நோக்குக் கால், பரவுகால் ஆகியன கேடடைந்து மூலாதாரத்தைத் தூண்டி அங்குள்ள கனலை எழுப்பி இந்நோயை உண்டுபண்ணும். நோய் முதிர முதிர அழலும், ஐயமும் ஒன்றன்பின் ஒன்றாகக் கேடுற்று உடற்கட்டுகள் ஏழையும் ஒவ்வொன்றாகக் கேடடையச் செய்யும். பசித்தீ கேடடையும்; உடற்கு ஊட்டம் தரும் பொருளை உண்ணினும் உடல் வன்மையடைவதில்லை.

வளிநாடியின் இடது பக்கத்தே ஐயநாடி கூடி நடந்தால் நீரிழிவும் காணும். அந்நீர் கள்ளைப் போலும் பதநீர் போலும் காணப்படும். உடல் இளைத்து வெளுப்பாகும். ஐய நோய்களும் துணை கொள்ளும் என்று கூறப்படுகிறது.

நீரிழிவு நோய் முற்றிய நிலையில் நாடிகள் மூன்றும் தளர்ந்து நடக்கும். நீரிழிவு நோயில் உடல் வன்மை குறைந்து கார்மேகம் போல் பலபிணிகள் கூடின், நாடி தளர்ந்து வன்மையின்றி நீரோடுதல் போலும், அல்லது நெருப்பில் விழுந்த புழுப்போலும் நாடி நடக்கும்.

இந்நோயில் உடலில் வறட்சி மிகுந்து உடல் உலர்ந்து இருக்கும் நிலையில் அழல் நாடியானது வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் பாயாமல் நேராக நடக்குமாயினும் அதன் துடிப்பு பச்சைப்புழு எவ்வாறு தலையை முன்வைத்து உடலை மேல் எழுப்பி, தலை இருந்த இடத்தே வாலைக் கொணர்ந்து வளைந்து நடக்குமோ அவ்வாறே நடக்கும். இவ்வாறான நாடி நடையில் சுரமும் காணும்.

**நீர்க்குறி நெய்க்குறி**

வளித்தாது பாதிப்பால் உண்டாகும் நீரிழிவில் இழியும் நீரானது:

- ❖ நெய்யின் நிறத்தையும் மணத்தையும் இனிப்புச் சுவையையும் பெறும்.
- ❖ பசு நீரின் நிறத்தையும் மணத்தையும் பெறும்.
- ❖ ஆட்டுக் கறியைக் கழுவிய நீரின் மணத்தையும் நிறத்தையும் பெறும்.
- ❖ கள்ளின் மணத்தையும் நிறத்தையும் பெறும்.

இந்நால்வகைப்பட்ட வளிநீரிழிவின் நீரை வெள்ளைப் பீங்கான் கோப்பையில் விட்டு ஒரு துளி எண்ணெய் விடின், அவ்வெண்ணெய் சிதறியோடின் நோய் நீங்காது எனச் சில நூல்கள் கூறினும், தக்க மருந்துகளால் தீரும் என்பது வேறு சில நூலோர் கருத்து.

அழல் தாது பாதிப்பால் இழியும் நீர் சிறிது மஞ்சள் நிறத்தைப் பெற்று, ஈயும் எறும்பும் மொய்க்கும்.

ஐயம் பாதிப்படைவதால் இழியும் நீர் தடித்து மாசுபடிந்தாற்போல் வெளுத்தும், நுரைத்தும் காணும். நீரில் விட்ட நெய்த்துளி முத்துப் போல் இருக்கும். அது நீரில் மிதக்காமல் கீழ் அழுந்தும். இந்நிலை நோய் தீர்வது கடினம் என்பதைக் காட்டும்.

வளிநோயில் மலம் தீய்ந்து கறுத்துக் கடினப்பட்டுப் புழுக்கை போல இறங்கும்.

அழல் நோயில் மிகுதியாய்க் கழிந்து மஞ்சள் நிறம் பெற்று எருவாயில் எரிச்சலை உண்டாக்கி இறங்கும்.

ஐயநோயில் வெண்மையாகவும், மாக்கரைத்தாற்போல நுரைத்தும் அடிக்கடி இறங்கும்.

**நீரிழிவு நோய் மருத்துவம்**

இந்நோயில் வாயுக்களும், முத்தாதுக்களும், ஏழு உடற்கட்டுகளும் வேற்றுமை அடைகின்றன. வேற்றுமை அடைந்த இவற்றைத் தன்னிலை படுத்துவது அவசியம். இவை வேற்றுமை அடையக் காரணமாக இருந்த மூலக் கனலைக் குறைப்பதற்குத் தேவையான மருத்துவம் செய்ய வேண்டும்.

கலவி நோயின் காரணமாக நீரிழிவுநோய் தோன்றியிருப்பின் அதற்குண்டான மருத்துவம் செய்ய வேண்டும்.

நீரிழிவு நோயில் சிறுநீர் உடலில் உள்ள திசுக்களைக் கரைத்துக் கொண்டு வெளிப்படுவதால் உடல் மெலிந்து, உடல் கட்டுகள் பாதிப்படைந்து, உடலில் மேலும் பலவிதமான நோய்களும் தொடர்வதற்கு ஏதுவாகிறது. எனவே இதனைக் கட்டுப்படுத்துவதற்காக குடிநீர், சாறு, பிட்டு, வடகம் போன்றவற்றை வழங்கலாம். அவற்றினால் பலன் குறைவாக இருப்பின் அப்பிரகம், கருவங்கம், வெள்வங்கம் முதலியவற்றாலான பற்பம், செந்தூரம் முதலியவற்றை வழங்கலாம்.

கலவி நோயின் காரணமாக ஏற்படும் மதுமேக நோயாளர்க்கு இரச, கந்த பாடாணங்களால் ஆன மருந்துகளைச் சேர்த்து வழங்க வேண்டும்.

உடல் கட்டுகளின் வன்மை மிகுதியும் இந்நோயில் குறைவுபடுவதால் தங்கம், வெள்ளி, செம்பு, காந்தம், காரீயம், அயம் முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட பற்ப, செந்தூர வகைகளைப் பாதிப்புக்கு ஏற்றாற்போல் வழங்குவது அவசியம்.

இந்நோயில் அழல் தாது பாதிப்படைந்து குருதியழல் நோய், தமரக நோய், முதலியன தொடர் நோயாகத் தொடர்ந்திருப்பின் அதற்குண்டான மருத்துவமும் செய்தல் அவசியம்.

இதில் ஐயத்தாது மிகுதியும் பாதிப்படைந்து இருந்தால் அதைத் தொடர்ந்து, இருமல், இளைப்பு, மூச்சுவாங்குதல் ஆகியன எற்படும். அந்நிலையில் அதற்குண்டான மருந்துகளை சேர்த்து வழங்குதல் அவசியம்.

மேலும் இந்நோயில் மயக்கம், விக்கல், தாகம், நாவறட்சி முதலியன தோன்றுமாதலால், அதனைத் தீர்க்கும் விதமாக எளிய சூரணம், குடிநீர் முதலியவற்றைச் செய்து மற்ற மருந்துகளுடன் சேர்த்தோ, தனியாகவோ வழங்க வேண்டும்.

நீரிழிவு நோயில் நரம்பின் தன்மை பாதிக்கப்பட்டு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு அதன் காரணமாக கை, கால்களில் எற்படும் உணர்ச்சியற்ற நிலை, திமிர், எரிச்சல் முதலியவற்றை அறிந்து நரம்புகளை வன்மைப்படுத்தும் உள், வெளி, மருந்துகளை வழங்குதல் வேண்டும்.

நீரிழிவு நோய் முற்றிய நிலையில் கட்டிகள் அல்லது பிளவைகள் ஏற்பட்டிருப்பின் நீரிழிவு நோய்க்கான உள் மருத்துவத்துடன், கட்டிகளைப் பரிகரிப்பதற்குத் தேவையான உள், வெளி மருந்துகளை நல்குதல் வேண்டும்.

நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்தவுடன் உடலை வன்மைப்படுத்துவதற்கான பொன், வெள்ளி முதலானவற்றால் செய்யப்பட்ட பற்ப, செந்தூரங்களையும் தாது விருத்தி செய்யும் இலேகியங்களையும் கொடுத்து உடலை வன்மைப் படுத்தலாம்.

# I

நீரிழிவு நோய்க்கு எளிய முறையில் கையாளும் சில மருத்துவ முறைகளைச் "சித்த மருத்துவம்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளதை இனிக் காண்போம்:

**குடிநீர் வகைகள்**

1. ஆவாரைத் துளிர், கல்மதம், கொன்றை வேர் இம்மூன்றயும் ஒன்றுபட அரைத்து மோரில் கலக்கிக் குடிக்க நீரிழிவு நீங்கும். தினம் காலை மாலை இருவேளை சாப்பிட்டு வரலாம்.

2. ஆவாரையின் இலை, வேர், பூ, பட்டை, காய் ஆகியவைகளைச் சேர்த்து, 1 பலம் கொன்றைவேர், நாவற்கொட்டை, கடலழிஞ்சில், கோரைக்கிழங்கு, கோஷ்ட்டம், மருதம்பட்டை இவை வகைக்கு1 பலம் எடுத்து ஒன்றுபட இடித்து எட்டு பங்கு நீர் விட்டு அரை ஆழாக்காகக் காய்த்துச் சாப்பிட்டு வர நீரிழிவு போம்.

3. தேற்றான் விதை, கடுக்காய்த் தோல், ஆவாரை வித்து, விளாம்பிசின் இவை வகைக்கு 1/4 பலம் வீதம் எடுத்து முதல் நாள் இரவில் சிறிது மோரில் ஊறவைத்து மறுநாள் காலை அரைத்துப் பசுவின் மோரில் கலந்து, காலை மாலை சாப்பிட்டு வர நீரிழிவு நீங்கும்.

4. நீர்முள்ளிப் பூவினை அதன் மகரந்தத்தோடு எடுத்துத் தெங்கின் வட்டும் கூட்டிக் காலை மாலை மென்று தின்ன நீரிழிவு, வெள்ளை இவை நீங்கும்.

5. விளாவேர், ஆவாரை வேர், பூலாவேர், இலவங்கம், காட்டுமல்லிவேர் இவைகளை ஓரளவாக எடுத்து எருமை மோரில் வேகவைத்து வடித்துக் கூட்டி காலை மாலை குடிக்க நீரிழிவு நீங்கும்.

### பொடி வகைகள்

1. சீந்தில் பொடி: முற்றிய சீந்தில் தண்டில் எடுத்த சர்க்கரை படி நான்கு. ஆவாரம்பூ, தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரைப்பூமொட்டு, செவ்வந்தியிதழ், வெள்ளைச் சந்தனம், சிவப்புச் சந்தனம், நன்னாரி வேர், நீர்முள்ளி விரை, சுக்கு, அமுக்கராக் கிழங்கு, பச்சிலை, இரேணுகம், செம்பருத்தி விரை, பூனைக்காலி விதை, நெற்பொரி, தக்கோலம், அதிமதுரம், மான்கொம்பு, கல்நார், குங்கிலியம், சாதிப்பத்திரி, ஏலம், உலர்ந்த திராட்சை, பேரீந்து, சிறுநாகப்பூ, திப்பிலி, சீரகம், தேவதாரு, கற்பூரம் என்னும் இவைளைத் தனித் தனியே பொடித்து வகை ஒன்றுக்கு 5 கழஞ்சியாகக் கூட்டி, இதன் கூட்டுத் தொகைக்குச் சமம் கற்கண்டுப் பொடி கூட்டிக் கலந்து இதில் வெருகடித் தூளைத் தேனில் கொள்ள நீரிழிவும், கை கால் எரிச்சல், வாய்க் குமட்டல் முதலியனவும் நீங்கும்.

2. நாவல் பொடி: நாவல் விதையின் பருப்பு, கொன்றைப்பூ, ஆவாரம்பூ, நீர்முள்ளிப்பூ, சுத்திசெய்த இரும்புப் பொடி இவற்றை ஓர் அளவாகக் கொண்டு பொடித்து நாவல் பழச்சாற்றில் மைபோலரைத்து, வாய் அகன்ற சட்டியில் வெயிலில் வைத்து உலர்த்தி, நன்றாக உலர்ந்த பின்னர் பொடித்தெடுத்ததில் ஒரு சிட்டிகை அளவு காலை மாலை கொள்ளலாம். இதனால் நீரிழிவும், நீர் எரிச்சலும் நீங்கும்.

3. சந்தனப் பொடி: சந்தனத்தூள், விலாமிச்சு, வெட்டிவேர், இலவங்கம், அக்கரகாரம், கல்மதம் வகைக்கு 1 பலம்; சீந்தில் சர்க்கரை 6 பலம். இவற்றைக் கூட்டிக் கொள்ள நீர் வேட்கை, வாய் குமட்டல் ஆகியவை நீங்கும்.

### இலேகிய வகைகள்

1. இலவங்க இலேகியம், வில்வாதி இலேகியம், தேற்றான் இலேகியம் இவைகளில் ஒன்றைத் தக்க அளவில் காலை, மாலை கொடுத்துவர நீரிழிவு குணமாகும்.

"மருத்துவ பாரதம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள நீரிழிவு சிகிச்சை முறை வருமாறு:

இந்த நூலில் மதுமேக நோய் உண்டாவதற்கு மூலகாரணமான மேகநோய்க்குக் கீசகனையும் நீரிழிவு நோயாகிய மதுமேக நோய்க்குச் சயிந்தவனையும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. எங்ஙனம் பீமனால் கீசகனும், தருமன், அர்ச்சுனன், கண்ணன், பீமன், நகுலன், சகாதேவன் இவர்களால் சயிந்தவனும் கொல்லப்பட்டனரோ, அங்ஙனமே பீமனாகின்ற இரசத்தினால்

மேகநோயையும், தருமன் முதலான அயம், எ∴கு, வெள்ளி, கெந்தி, பொன், காரீயம், செம்பு இவற்றால் செய்யப்பட்ட பற்ப, செந்தூரங்களினால் நீரிழிவு நோயினையும் போக்குதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

கீசகன் பாஞ்சாலியை இச்சித்தது-ஆணும் பெண்ணும் இச்சித்துக் கூடியதால் பிறந்த மேக நோய் எனக்கொண்டு அம்மேகத்தால் பிறந்த நீரிழிவு நோய் நீங்க மேகநோயை முன் நீக்க வேண்டும் என்பதால் முதலில் கந்தகமும், பிறகு இரசமும் சேர்ந்த மருந்துகளைக் கொடுத்தல் வேண்டும். இரசம் கீசகனைக் கொன்ற பீமனுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.

மேகத்தைத் தொடர்ந்து வரும் நீரிழிவு நோயைச் சயிந்தவனுக்கு ஒப்பாகக் கூறப்பட்டது சயிந்தவன் அர்ச்சுனனால் பாசுபதாஸ்திரம் என்னும் ஆயுதத்தைக் கொண்டு கொல்லப்பட்டான். இங்கு பாசுபதாஸ்திரம் என்னும் ஆயுதம் பாசுபதாஸ்திர மாத்திரைக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. அர்ச்சுனன் இவ்வாயுதத்தைக் கொன்றைப்பூ மாலையிட்டு சயிந்தவன் மேல் ஏவியதால், இம்மாத்திரையைக் கொன்றைப்பூச்சாற்றில் வழங்க, நீரிழிவு நீங்கும் எனக் கூறப்பட்டது.

நீரிழிவு நோயில் உடல் கட்டுகள் யாவும் கேடடைந்து பல்வகைப்பட்ட துணை நோய்களும் ஏற்படும் என்பதால், கௌரவர் சேனையைச் சேர்ந்த அத்துணை நோய்ளையும் நீக்க தருமர், அர்ச்சுனன், கண்ணன், பீமன், நகுலன், சகாதேவன் ஆகிய பாண்டவ சேனைக்கு ஒப்பான அயம், எ∴கு, வெள்ளி, கெந்தி, பொன், காரீயம் இவற்றால் செய்யப்பட்ட பற்ப, செந்தூரங்கள் வழங்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டது.

இம்மருந்துகளினால் உடல்கட்டுகளை வன்மையடையச் செய்யும் முறை கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது:

முதலில் இரசத்தாதின் கேட்டிற்காக கந்தகத்தாலாகிய கந்தகப் பற்பம், கந்தக இரசாயனம், கந்தகச் சுடர்த் தைலம் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றைப் பொடி வகைகளில் ஏதேனும் ஒன்றுடன் துணையாகக் கொண்டு கொடுத்துவரலாம்.

இரத்தத் தாதுவைப் பெருக்குவதற்கு இரும்பு, எ∴கினால் ஆன பற்ப, செந்தூரங்களை நாவல்பட்டை, அல்லது நாவல்பழச் சாற்றில் அனுபானித்து வழங்கலாம் . ஆவாரைக் குடிநீரையும் துணை மருந்தாகக் கொடுக்கலாம்.

ஊன் தாது பெருகவும், உடலில் மேகத்தால் பிறந்த கழலையைப் போக்கவும் வெள்ளிப் பற்பம் அல்லது செந்தூரத்தை நீர்முள்ளிப்பூ, மணத்தக்காளி வித்து, இவைகள் போன்ற நீரின் எரிச்சலைப் போக்கக் கூடியவைகளைக் கொண்டு செய்த

குடிநீர், பொடி, நெய், இளகம் முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றினைத் துணைமருந்தாகக் கொடுத்தல் வேண்டும்.

கொழுப்பு, என்பு ஆகிய உடல்கட்டுகளை வன்மை படுத்தப் பொன்னாலான பற்பம், செந்தூரம், மாத்திரைகள் முதலானவற்றைத் தக்க துணை மருந்துகளோடு கொடுக்க உடலின் வன்மை மிகுந்து, மேனி சிவந்து காணும்.

மூளையையும், சுக்கிலத்தையும் வன்மை படுத்துவதற்கான மருந்துகளைக் கொடுத்தால்தான் இம்மருத்துவம் முற்றுப் பெறும். இதற்காக காரீயம், செம்பு இவைகளாலாகிய மருந்துகளை வழங்குதல் வேண்டும். காரீயம் சேர்ந்த மருந்தை ஒன்று அல்லது இருமுறை தக்க துணைமருந்துகளோடு கொடுத்த பின்பு, செம்பாலாகிய மருந்தை வழங்கின் நோய் முற்றிலும் நீங்கும் என்பது தேரன் துணிபு.

ஈயம் செம்புக்கு அரசன் என்னும் பழமொழி ஒன்றுண்டு. ஆதலால் செம்பின் பற்ப, செந்தூரங்களை வழங்கும் போதுண்டாகும் கெடுதிகள் வராமல் தடுத்துக் காக்க ஈயத்தாலான மருந்தினைத் துணை கூட்டினார் தேரன் எனக் கொள்ளல் வேண்டும்.

# II

"சித்த வைத்தியத் திரட்டு" என்னும் நூலில் கூறப்படும் நீரிழிவு நோய் மருத்துவ முறைகள் வருமாறு:

### 1. அப்பிரகப் பற்பம்

சுத்தி செய்த கிருஷ்ணா அப்பிரகம் 1 பலத்தை ஒரு பாத்திரத்திலிட்டு, மருதோன்றி வேர் 16 பலத்தை இடித்து வேறொரு பாண்டத்திலிட்டு, 64 பலம் தண்ணீர்விட்டு, அடுப்பேற்றிச் சிறுக எரித்து 4-இல் 1 பங்கான 16 பலமாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு, நாளொன்றுக்கு 2 பலம் வீதம் அந்த அப்பிரகத்தில் 8 நாள் வார்த்து ஊறவைத்து நிழலில் உலர்த்தவும். அது நன்றாய் உலர்ந்தபிறகு, அந்த அப்பிரகத்தை நிறுத்து அப்போதிருக்கும் எடைக்கு 2 பங்கு கடப்பம்பிசின் சேர்த்து, அந்த 2 பங்கு பிசின் ஆறி ஒரு பங்காய் குறைந்த பிறகு, முன்போல நாள் ஒன்றுக்கு 2 பலம் வீதம் குப்பை மேனிச் சாற்றை 8 நாள் வரைக்கும் விட்டு ஊறவைத்து நிழலில் உலர்த்த வேண்டும்.

உலர்த்திய பின் அந்த அப்பிரகத்தைக் கல்வத்திலிட்டு, அப்பிரக எடைக்கு 2 பங்கு வேப்பெண்ணெய் தினமும் விட்டு, அப்படி 6 நாள் அரைத்து வில்லை

செய்து வெயிலில் உலர்த்தும் போது, வில்லையை நிறுத்துக் கொண்டு, அந்த எடைக்குச் சரியெடை ஏறும்படி 3 நாள் வரைக்கும் அத்திப்பாலை அந்த வில்லைக்கு அடித்து உலர்ந்தபின் அதை அகலிலிட்டுச் சீலை செய்து 60 வறட்டியில் புடமிட்டு, நன்றாக ஆறினபின்னர் எடுத்தால், வெண்மையாய் இருக்கும்.

இப்பற்பத்தை 1 முதல் 2 குன்றியளவில் நெய்யிலாவது, வெற்றிலைச் சாற்றிலாவது அனுபானித்து 1 மண்டலம் வழங்கலாம்.

இதனால் நீரிழிவு நோய், பிளவை, மகோதரம், உன்மாதம், சுரம், விரை வாதம் முதலியன நீங்கும்.

புளி, புகையிலை, பெண்போகம், கடுகு, மதுபானம், அகத்திக்கீரை ஆகியவற்றை நீக்க வேண்டும்.

சரியான முறையில் சுத்திகரித்துத் தயார் செய்த இப்பற்பம் எவ்விதத் தீங்கும் விளைவிக்காது. சுத்தியோ, செய்முறையோ சரியாக இல்லாவிடின் மருந்தீட்டால் உண்டாகும் கெடுதி போல துன்பம் விளைவிக்கும். அதுசமயம் மறுதோன்றி சுக்குக் குடிநீர் அருந்தினால் அத்துன்பம் நீங்கும்.

### 2. அப்பிரகச் செந்தூரம்

கறுப்பு அப்பிரகம் 10 பலம் எடுத்து உரலிலிட்டுப் பொடித்து, அவ்வெடைக்குச் சமம் பனைவெல்லமும் வெடியுப்பும் ஒன்றாகச் சேர்த்து நீர் விட்டு அரைத்து, வில்லை தட்டி ஓட்டிலிட்டுக் காய வைத்து, மேல் மூடிச் சீலை செய்து கஜபுடம் இடவும். அப்பிரகம் தளுக்கற்று வெளுத்துப் போயிருக்கும்.

இதனைக் கல்வத்திலிட்டு எருக்கம் பாலால் 1 சாமம் அரைத்து வெயிலில் காயவிடவும். இவ்விதம் 40 நாள் செய்யவும். 41-ஆம் நாள் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டு, 7 சீலை செய்து கஜபுடம் போட்டு ஆறினபின்னர் எடுக்க, அப்பிரகம் சிவந்து இருக்கும்.

இதனைக் கல்வத்திலிட்டு கையான் சாற்றால் 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து புடமிடவும். இவ்விதம் 51 புடம் போட அப்பிரகம் சிவந்திருக்கும். இதனைப் பொடித்துக் குப்பியில் அடைக்கவும்.

உண்ணும் முறை: ஆவாரப் பஞ்சாங்கம் 8 பலம், அமுக்கராக் கிழங்கு 8 பலம், சீரகம் 5 பலம் இவற்றைப் பொடித்துச் சூரணமாக்கி, இச்சூரணம்

வெருகடியளவுடன் குன்றியளவு அப்பிரகச் செந்தூரம் சேர்த்துப் பசுவெண்ணெயில் 2 வேளை 1 மண்டலம் கொள்ள நீரிழிவு என்னும் மதுமேகம் நீங்கும் .

### 3. மகா வசந்த குசுமாகர மாத்திரை

அப்பிரகம், பொன், முத்து, பவளம், அயம், காந்தம், வங்கம், நிமிளை, கந்தி, செம்பு இவைகளின் பற்பங்கள், நாபி-இவை சம அளவு எடுத்துக் கல்வத்திலிட்டுக் குமரிச் சாற்றால் 3 நாள் அரைத்துத் திரண்ட பிறகு, ஒரு முத்துச் சிப்பியில் வைத்து, மறறொரு பொருத்தமான சிப்பியால் மூடி, வெங்காரத்தையும் குன்றிமணிப் பருப்பையும் பழச் சாற்றினால் அரைத்து மேற்படி முத்துச் சிப்பிக்குக் கவசம் செய்து உலர்த்தவும். பின் இதனை மணல் மறைவில் எரித்துப் பதம் வந்த பிறகு ஆறவிட்டு எடுத்துச் சீலையை நீக்கி, சிப்பியுடன் கல்வத்தில் இட்டுப் பொடிக்கவும்.

பின் செங்கழுநீர்ப் பூச்சாறு, கோங்கிலவம்பூச்சாறு, தாமரைப் பூச்சாறு, மாதுளம் பூச்சாறு இவைகளில் தனித்தனியாக நன்றாக அரைத்த பிறகு, வெட்டிவேர்க் குடிநீர், விலாமிச்சம் வேர்க் குடிநீர் இவைகளில் முறையே ஒவ்வொரு நாள் அரைத்து, மருந்து எடைக்கு 1/8 பங்கு கஸ்தூரி, 1/8 பங்கு குங்குமப்பூ, 1/16 பங்கு பச்சைக் கற்பூரம் சேர்த்து வெட்டிவேர்க் கியாழம் கொண்டு 3 நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும்.

மாத்திரை ஒவ்வொன்றைச் சீந்தில் சர்க்கரையில் அனுபானித்துக் கொடுக்க, பிரமேகம் என்னும் நீரிழிவு நோய் நீங்கும்.

### 4. கௌரி சிந்தாமணி செந்தூரம்

சுத்தி செய்த இரசம் 1 பலம், கந்தகம் 1 பலம், பொரிகாரம் 1 பலம்-இவற்றைக் கல்வத்திலிட்டு முறைப்படி பொடித்து, பொடியை ரெட்டினால் கொட்டைப்பாக்களவாய் கிழிகட்டி, மணல்மறைவில் கிழிகளை மறையும்படி வரிசையாக வைத்து 10 வறட்டிகளை மணல் மேல் அடுக்கி எரித்துக் குளிர்ந்தபின் எடுத்து, ரெட்டுகளை நீக்கி மருந்தை எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். மருந்து பூலாம்பழம் போல் கறுப்பாக இருக்கும்.

மருந்து 1 குன்றியளவில், ஆவாரம் தைலத்தில் கொடுக்க நீரிழிவு 20 வகையும், சதையடைப்பு, உள்ளுருக்கி, மூத்திர அடைப்பு, என்பு சுரம் முதலியனவும் நீங்கும்.

### 5. வெள்ளிச் செந்தூரம்

5 பலம் கந்தகத்தைப் பொடித்து ஒரு சட்டியிலிட்டு, ஒரு பலம் வெள்ளியைத் தகடாகத் தட்டியதைச் சுருட்டி, அதன் மத்தியில் மூழ்கும்படி அமர்த்திச் சட்டி கொண்டு மூடி, சிரட்டை ஓடு 100 கொண்டு எரித்தெடுக்கச் செந்தூரமாகும்.

ஒரு நெல்லரிசி அளவு அனுபானமறிந்து கொடுக்க மேகநீர் என்னும் நீரிழிவு நோயும், பாண்டு, காமாலை, குன்மம், சூலை, சன்னி, சுரம், சயம் முதலான நோய்களும் நீங்கும்.

## 6. சாம்பிராணிப்பூ பதங்கம்

சாம்பிராணி 3 பங்கு, சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், வால்மிளகு, ஏலரிசி, சாரைப்பருப்பு, கிராம்பு, புனுகு, இம்பூறல்வேர், அதிமதுரம், மரமஞ்சள், புனுகுச் சட்டம்-இவைகள் வகைக்கு 1 பங்கு எடுக்க மொத்தம் 20 பங்கு ஆகும்.

இவற்றில் புனுகை நீக்கி மற்றவைகளை நன்றாக இடித்துக் கலந்து புனுகைச் சேர்த்து ஒரு பெரிய மட்பாண்டத்திலிட்டுச் சட்டிக்குச் சாமந்தி இலை, கொடிவேலி இலை, தும்பை இலை, இவற்றின் சாற்றின் கூட்டுத் தொகை பத்துப் பங்கைக் கொண்டு மேற்சட்டியில் உட்புறம் பூசிப்பூசி உலர்த்தியபின், பெரிய சட்டிக்குப் பொருத்தி, பொருத்துவாய்க்கு வன்மையாய்ச் சீலைமண் செய்து அடுப்பிலிட்டு அடுப்பினுள் உலர்ந்த ஆட்டுப்புழுக்கை, காட்டெரு, உமி, வேர்ப்பட்டைகள் இவைகளுள் ஏதேனும் ஒன்றைப் போட்டுத் தீயிடவும். தீப்பற்றி எரிந்து அடங்கி ஒரு நாள் ஆனபின்பு சட்டி அசையாமல் சீலையை நீக்கி, மேற் சட்டியைச் சரிவாக எடுத்துப் பார்க்க, அதனில் சாம்பிராணிப்பூ படிந்து இருக்கும்.

இதனைக் கரும்புச் சாற்றில் தக்க அளவில் கொடுக்க நீரிழிவு தீரும்.

## 7. இரசக் கந்தி மெழுகு

சேரும் சரக்குகள், மற்றும் செய்முறை ஏற்கனவே வாதநோய்களின் பொது மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. அதிகக் கலவியால் ஏற்படும் மேகநோயைத் தொடர்ந்து வரும் நீரிழிவு நோயில் இதனை மேக நோய் நீங்குவதற்காக வழங்கலாம். மேலும் நீரிழிவு நோயின் தொடர்நோயாக வரும் பிளவை நோயில் அதை நீக்கும் பொருட்டு உள்மருந்தாக வழங்க நல்ல பயன் தரும்.

## 8. கந்தி மெழுகு

சுத்தித்த கந்தகத்தை வெள்ளை வெங்காயச் சாறு விட்டு 5 நாள் அரைத்துப் பிறகு இஞ்சிச்சாறு விட்டு 5 நாள் அரைத்து மெழுகு பதமானவுடன் குப்பியில் அடைக்கவும். வேண்டும் போது 2 முதல் 3 குன்றியளவு உருட்டிக் கொடுக்க வெகுமூத்திரம் போன்ற மேக நீர்களும், சொறி, சிரங்கு, குட்டம், மூலம் முதலியனவும் நீங்கும்.

### 9. கௌசிகர் குழம்பு

இதன் செய்முறை மற்றும் சேரும் சரக்குகள் முதலியன வாத நோய் மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. நீரிழிவு நோயில் காணும் பிளவை என்னும் தொடர் நோய்க்குக் கௌசிகர் குழம்பினைப் புகையாகக் கொள்ள அவை உள்வாங்கும் எனக் கூறப்படுகிறது.

### 10. நன்னாரி மணப்பாகு

12 1/2 பலம் நன்னாரி வேர்ப் பட்டையை இடித்து 1 1/2 படி வெந்நீரில் 6 மணி நேரம் ஊறவைத்தபின் காய்ச்சி 3/4 படியாக வற்றவைத்து வடிகட்டி அதில் 12 1/2 பலம் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சி மணப்பாகு பக்குவத்தில் எடுத்து புட்டியில் அடக்கஞ் செய்யவும்.

1/2 பலம் மணப்பாகுடன் 1 பலம் தண்ணீர் கலந்து சாப்பிட்டு வரப் பிரமேகம், அதில் உண்டாகும் நாவறட்சி, தாகம், மேகக் காங்கை, நீர்க்கடுப்பு முதலியன நீங்கும்.

### 11. மேக நாதத் தைலம்

வாத நோய் மருத்துவத்தில் இதன் செய்முறை மற்றும் சேரும் சரக்குகள் கூறப்பட்டுள்ளன. நீரிழிவு நோய்க்கும் இம் மருந்தை வழங்கலாம். முட்டைக் கரண்டியளவு 2 வேளை கற்கத்துடன் வழங்க வேண்டும். பத்தியம் தேவை. 5-நாள் மருந்து உண்டு பின்னர் பசுமோர் கூட்டலாம். 15 நாள் சென்றபின் எண்ணெயிட்டு முழுகலாம்.

### 12. குங்கிலிய வெண்ணெய்

சுத்தி செய்த குங்கிலியம் 1 பலம், வன்னியிலைச் சாறு 1 ஆழாக்கு, பசுநெய்1 ஆழாக்கு-இவைகளைக் கலந்து சட்டியிலிட்டு எரித்துச் சிறிதாறிய பின்னர் நீர்நிறைந்த ஓர் வாயகன்ற மட்பானையில் கொட்டி மத்திட்டுக் கடையக் கட்டி கட்டியாக வெண்ணெய் திரளும். இதை ஒரு பாத்திரத்திலிட்டு நீரைக் கொட்டி ஒவ்வொரு நாளும் பழைய நீரை நீக்கிப் புது நீர் சேர்த்து வரவேண்டும்.

இதில் நாளொன்றுக்கு இருமுறையாக கொட்டைப் பாக்களவு கொடுக்கப் பிரமேகம், கீல்பிடிப்பு முதலிய நோய்கள் நீங்கும்.

### 13. வெள்ளை மெழுகு

மஞ்சள் மெழுகை உருக்கி இளம் சூடாக இருக்கும்பொழுது வெள்ளைப் பாடாணப் பொடியைச் சேர்த்துக் கிண்டி, வேண்டிய அளவு எடுத்து வில்லை தட்டி

அனலில் காட்டி அரையாப்பு போன்ற கட்டிகளில் போடத் தீரும். அதாவது அழுந்தி விடும்.

மெழுகு 1 எடை, தேங்காய் நெய் 1/2 எடை, வெள்ளைப் பாடாணம் 1/10 எடை- இவ்வளவில் கூட்டி மேற்சொன்ன விதிப்படி செய்து கொள்ளவும். தடித்த துணித் தண்டில் வேண்டிய அளவு தடவி கட்டிகள், பிளவைகள், ஆறாத விரணங்கள் ஆகியவற்றின் மீது போடலாம். நீரிழிவில் காணும் இராசப்பிளவை, பக்கப் பிளவை போன்றவற்றில் இது நல்ல பலன் தரும்.

**14 பச்சை எருவை**

வெள்ளைப் பாடாணம் 4 பலம், அரிதாரம் 4 பலம், சுண்ணாம்பு 8 பலம், குங்கிலியம் 16 பலம். இவைகளை நல்லெண்ணெய் விட்டு மைபோல் அரைத்துப் பிறகு நீர் விட்டு அரைத்து, நீரை வெளிப்படுத்தி, மீண்டும் இவ்விதம் 9 முறை செய்யவும்.

இதனைப் பிளவை, ஊன் வளரும் கட்டி, புண் முதலியவற்றுக்குப் போடலாம்.

# III

"குணபாடம்-மூலிகை" என்னும் நூலின்படி நீரிழிவு நோய்க்குப் பயன்படும் மூலிகைகள் பற்றிய விபரம் வருமாறு:

1. அத்தி: அத்திப்பாலை, வெண்ணெய் அல்லது சீனியுடன் கலந்து கொடுக்க நீரிழிவும், பெரும்பாடு, இரத்தபேதி, வெள்ளை, தாதுக்குறைவு முதலியனவும் நீங்கும். நீரிழிவில் பிறந்த பிளவைக்கு இப்பாலைப் பற்றிட்டு வர நன்மைதரும். அத்திப் பழத்தைக் காய வைத்துச் சூரணித்து உட்கொள்ள சிறுநீரில் உள்ள இனிப்புமறையும்.

2. அசோகு: அசோகு மரப்பட்டை அல்லது அதன் சாற்றினைத் தக்க அளவில் கொடுக்க நீரிழிவு நோய் குறையும்.

3. அமுக்கரா: அமுக்கரா கிழங்கு அல்லது இலையை அரைத்து மேகக் கட்டிகளுக்குப் பூசலாம். அமுக்கரா கிழங்கைப் பாலில் வேடுகட்டி வேக வைத்து எடுத்து உலர்த்தி, இடித்து எடுத்த சூரணத்தைப் பசுவின்பால் கலந்து சாப்பிட்டு வர நீரிழிவு நோயில் காணப்படும் நரம்புத் தளர்ச்சி, உடல் பலவீனம் ஆகியன நீங்கும்.

4. ஆல்: ஆலம்பட்டையை இடித்து 10 மடங்கு நீர்விட்டு நன்றாக ஊறவைத்து உள்ளுக்குக் கொடுத்துவர நீரிழிவு நீங்கும். ஆலம் பால், விழுது, பழம், விதை, பூ, இலை ஆகியவற்றுக்கும் நீரிழிவைப் போக்கும் குணம் உண்டு. ஆலிலையை வதக்கி மேகக்கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாம். இதனால் கட்டி உடைந்து சீழ் நீங்கும்.

5. ஆவாரை

- ❖ ஆவாரைப் பஞ்சாங்கம் எனப்படும் ஆவாரையின் இலை, பூ, காய், பட்டை, வேர் என்னும் ஐந்து உறுப்புகளால் நீரிழிவுநோய் நீங்கும்.
- ❖ ஆவாரைப்பிசினை 4 கிராம் முதல் 10 கிராம் எடை வரை நீரில் கலந்து குடித்து வர நீரிழிவு, சிறுநீர் எரிச்சல் ஆகியன நீங்கும்.
- ❖ வேருடன் கூடிய முழுச்செடியைக் குடிநீரிட்டுக் கொடுக்க நீரிழிவு, ஆண்குறி எரிச்சல் இவை நீங்கும். இக்குடிநீரில் பனங்கற்கண்டும் பசுவின் பாலும் சேர்த்துத் தக்க அளவில் வால்மிளகு, ஏலக்காய் சேர்த்து மணப்பாகு செய்து, உரிய அளவில் நீருடன் கலந்து சாப்பிட்டு வரச் சிறுநீர் அளவில் மட்டுப்படும். அதில் நிறைந்த இனிப்பு குறையும். உடல் வன்மையடையும்.
- ❖ ஆவாரை, கொன்றை, நாவல், கடலழிஞ்சில், முத்தக்காசு, கோஷ்டம், மருதம்பட்டை இவற்றை ஒரே அளவில் கூட்டி அதற்குத் தகுந்த நீர் விட்டு எட்டில் ஒன்றாக வற்றச் செய்து குடிக்க நீரிழிவு நோய் நீங்கும்.
- ❖ ஆவாரைத் துளிர், கல்மதம், கொன்றைவேர் ஆகிய மூன்றையும் புளித்த மோரில் கலக்கிக் கொடுக்க நீரிழிவு நோய் நீங்கும்.
- ❖ ஆவாரை, சீந்தில், தில்லைச் செடி இவைகளின் வேர், இலை, தண்டு, பூ முதலியவற்றை முறையே 3,2,1 என்ற எடையாகக் கொண்டு, இளவறுப்பாக வறுத்து ஒன்றிரண்டாக இடித்துப் பொடியாக்கி அரைப்பிடிக்கு அரைப்படி நீர்விட்டு 1/8 படியாகக் குடிநீர் செய்து, பால் கூட்டிக் காலை மாலை கொடுக்க நீரிழிவு நீங்கும். நீரில் சர்க்கரை குறையும்.

6. கடுக்காய்: தோலைக் குடிநீர் செய்து கொடுக்க அதிமூத்திரம், கண்நோய் குணப்படும்.

கடுக்காய் வித்து, கரியபோளம், நாபிக் கிழங்கு, அபின், கொடிவேலி,

எருக்கன் வேர், வாளம்-இவைகளைச் சமபாகம் எடுத்து எருக்கம் பாலில் அல்லது எருக்கம் பழுப்புச் சாற்றில் அரைத்துத் தடவப் பிளவை நீங்கும்.

7. கணப்பூண்டு: பச்சை இலையை அரைத்து மேகக் கட்டிகளின் மீது வைத்துக் கட்ட, கட்டி கரையும்.

8. கருங்காலி: கருங்காலி மரப்பட்டை 1 பங்கு, நீர் 8 பங்கு சேர்த்துக் காய்ச்சி 8-இல் 1 ஆகக் குறுக்கிக் கொள்ளவும். அல்லது கருங்காலிக் கட்டை அல்லது பட்டையுடன் கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய் சேர்த்து மேற்கண்டவாறு குடிநீர் செய்யவும். இக்குடிநீர் நீரிழிவு நோயில் நல்ல பலனைத் தரும்.

கருங்காலிப் பிசின் 1 கிராம் அல்லது 2 கிராம் அளவில் நீரில் கரைத்துக் கொடுக்க மேக நீரிழிவு நீங்கும்.

மரத்தின் வேரைச் சிறு துண்டுகளாக்கிக் குடிநீர் செய்து கொடுத்தாலும் நீரிழிவு நோய், குருதிக் கழிச்சல் முதலியன நீங்கும்.

9. வெண்கருங்காலி: வெண்கருங்காலி மரத்தின் வேரைக் குடிநீர் செய்து கொடுக்க, கள்ளைப் போலிழியும். மேக நீரிழிவு நீங்கும்.

10. கறிவேம்பு: கறிவேம்பு இலையை நிழலில் உலர்த்தி, அத்துடன் மிளகு, உப்பு, சீரகம், சுக்கு இவைகளைப் பொடியாக்கிக் கலந்து சாதத்தில் சேர்த்து, கொஞ்சம் நெய்விட்டு உண்ணப் பிரமேகம், வயிற்றில் உள்ள மந்தம், மலதோடம், மலக்கட்டு முதலியன நீங்கும்.

11. காசிரத்னம்: இக்கொடியில் உள்ள இலையைச் சிதைத்துக் கட்ட நீரிழிவு நோயில் காணும் கட்டி அல்லது பிளவை பழுத்து உடையும்.

12. காஞ்சொறி: சிறுகாஞ்சொறி, பெருங்காஞ்சொறி, கறுங்காஞ்சொறி ஆகிய மூன்று வகை வேர்களில் ஒன்றை 8 முதல் 17 கிராம் எடுத்து ஆழாக்கு நீரிலிட்டு, அரையாழாக்காக எரித்துச் சுண்டியபின் வடிகட்டிக் கொடுத்து வர நீரிழிவு, நீர்வேட்கை, வளிப்பெருக்கு முதலியன நீங்கும்.

13. கீழாநெல்லி: கீழாநெல்லியை அரைத்து நல்ல பசுவின் தயிரில் கலந்து நாளும் கற்ப முறைப்படி உண்ண மதுமேகம், மேகவெட்டை, காமாலை முதலியன நீங்கும். பல பிணிகளினால் நொந்து உடல் மெலிந்து வெளுத்திருக்குங் கால் இதை நல்கப் பெரும் பலம் உண்டாகும்.

14. குங்கிலியம்: குங்கிலிய வெண்ணெய் செய்து நாளொன்றுக்கு இருமுறையாக கொட்டைப் பாக்களவு கொடுக்கப் பிரமேகம், மேக விரணம் ஆகியன நீங்கும்.

குங்கிலியத்தைப் பொடித்து 1 கிராம் வீதம் 120 மில்லி பாலில் கலக்கி நாளும் காலையில் சாப்பிட்டு வர உடல் வலுக்கும். பிரமேகம், வெள்ளை முதலியன நீங்கும்.

15. குங்குமப்பூ: குங்குமப்பூ 1 பங்கை 80 பங்கு நீரில் ஊறப்போட்டு வடிகட்டி வேளை ஒன்றுக்கு 30 மிலி முதல் 60 மிலி வரை வழங்க மேகநீர், நீர்வேட்கை முதலான பல நோய்கள் நீங்கும்.

16. குடசப்பாலை: பட்டையை முறைப்படி குடிநீரிட்டு 15 முதல் 30 மிலி வரை தினம் 3 வேளை கொடுத்து வர நீரிழிவு, கழிச்சல் நீங்கும். மிகுந்த வளி குறையும்.

17 குந்திரிக்கம்: குந்திரிக்கம் அல்லது பறங்கிச் சாம்பிராணி, நல்லெண்ணெய், வெள்ளை மெழுகு வகைக்கு 3 கிராம் எடுத்துச் சிறுதீயிட்டு உருக்கி வடிகட்டிக் கொண்டு நீரிழிவுநோயில் தோன்றும் பிளவைக்கு மேலுக்குத் தடவலாம்.

18. குருவேர்: குருவேர் அல்லது வெட்டிவேரினால் மேகக் கட்டிகள் நீங்கும் எனக் கூறப்படுகிறது. வெட்டிவேரினைப் பொடி செய்த தூள் 195 முதல் 600 மிகி வரை வழங்கலாம். அல்லது வெட்டிவேரை ஊறல் குடிநீராகச் செய்து 30 முதல் 60 மிலி வரை வழங்கலாம்.

19. குறட்டை: இதன் இலையையும் தும்மட்டி வேரையும் சம எடை சேர்த்து அரைத்துப் பிளவைக்குப் பற்றிடலாம்.

20. கேழ்வரகு, 21. கோதுமை: நீரிழிவு நோயாளருக்கு இவைகளைக் கொண்டு கஞ்சி, ரொட்டி, சாதம் முதலிய உணவுப் பண்டங்கள் செய்து வழங்கப்படுகிறது.

22. கோவை: கோவைக் கிழங்கின் சாற்றை ஓர் உச்சிக்கரண்டி முதல் 3 உச்சிக்கரண்டி வரை கொடுக்க நீரிழிவு நீங்கும்.

கிழங்கின் சாற்றை நீரிழிவு நோயில் வழங்கும் பெரிய மருந்துகளுக்குத் துணையாகவும் வழங்கலாம்.

23. சீந்தில் : சீந்தில் கொடியிலிருந்து எடுக்கப்படும் சத்து, சீந்தில் சர்க்கரை எனப்படும். நன்றாக இடித்த சீந்தில் கொடியைக் குளிர்ந்த நீரிலிட்டு மறுநாள் கடைந்து திப்பியைக் கசக்கிப் பிழிந்து நீக்கி வெயிலில் 2 அல்லது 3 மணிநேரம் வைக்க நீர் தெளியும். அந்த நீரை இறுத்துவிட்டு, வேறுநீர் விட்டுக் கலக்கி மேற்கண்டபடியே நீரை இறுத்துச் சுண்டவிட்டு மறுபடியும் மேற்படியாகவே செய்து நீரை இறுத்துவிடின் அடியில் படிந்திருக்கும் மா போன்ற பொருளே சீந்தில்

சர்க்கரையாகும். இதை உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் கசப்பாக இருக்கும்.

சீந்தில் சர்க்கரை நீரிழிவு நோயில் வழங்கப்படும் அப்பிரகப்பற்பம், அப்பிரகச் செந்தூரம் போன்ற மருந்துகளில் துணை மருந்தாக வழங்கப்படுகிறது. சீந்தில் பொடி, சீந்தில் சர்க்கரைப்பொடி, அமுத சர்க்கரை இலேகியம் போன்ற மருந்துகளாகச் செய்து தனியாகவும் வழங்கப்படுகிறது.

24. பொற்சீந்தில்: இதன் கிழங்கினால் நீரிழிவு, இளைப்புநோய், குருதியழல் நோய் இவை நீங்கும்.

25. தண்ணீர் விட்டான் கிழங்கு: கிழங்கைப் பொடி செய்து வேளைக்கு 1 முதல் 2 கிராம் எடை தினம் 2 வேளை கொள்ளலாம். இதனால் நீரிழிவு நோய், நாட்பட்ட சுரம், என்புருக்கி நோய், வெட்டை, உட்சூடு, முதலியன நீங்கும்.

26. தேற்றான்: தேற்றான் விதை, கடுக்காய், ஆவாரை, விளாம்பிசின் இவை நான்கையும் ஓரெடையாக எடுத்துப் பசுவின்மோரில் கலந்து ஒரு நாளைக்கு ஆறுமுறை பருகிவர நீரிழிவு நீங்கும்.

27. தொட்டான் சிணுங்கி: இதன் இலையையும் வேரையும் உலர்த்திப் பொடித்துப் பாலில் 4 முதல் 8 கிராம் எடை சேர்த்துக் கொடுக்க நீரிழிவு நீங்கும்.

28. நன்னாரி: நன்னாரி வேரை உணவு முறையாக சமையல் செய்துண்ண பித்த மேகம் நீங்கும். நன்னாரியின் வேர், இலை, கொடி, காய், பூ இவைகளை நெய்யுடனே வதக்கி வறுத்துக்கொண்டு சிறுபுளி, மிளகு, லவணம் இட்டுத் துவையல், வடகம் முதலியவைகளாய்ப் பாகம் செய்து 1 மண்டலம் வரைக்கும் பத்தியத்துடன் உட்கொள்ள, பித்த மேக நீரிழிவு நீங்கும். அழல் குற்றத்தால் வந்த வெள்ளை, அக்குள் நாற்றம், வியர்வை நாற்றம் முதலியன நீங்கும்.

27. நாவல்: நாவல் பட்டையை எவ்விதத்திலேனும் குடிநீர் செய்து சாப்பிட நீரிழிவு நீங்கும்.

நாவல்பழ மேல் தோலை எந்த முறையாகவேனும் உட்கொள்ள, நீர்ப்பெருக்கு, நீர்வேட்கை முதலியன தீரும்.

நாவல் வேர் ஊறிய நீரானது கழிச்சல், நீரிழிவு நோய்களை நீக்கும்.

நாவல் கொட்டையைத் தூள் செய்து வேளைக்கு 2 முதல் 4 கிராம் எடை கொடுக்க நீரிழிவு நீங்கும்.

நாவல்பழச் சாற்றைப் பிழிந்து ஒரு புட்டியில் ஒரு திங்கள் வரையில் மூடிவைத்திருந்து அதன்பின் எடுத்துக் கொடுக்க நீரிழிவில் உண்டாகும் நீர்வேட்கை நீங்கும்.

28. நெய்தல் கிழங்கு: இப்பூண்டின் விதைகளை உலர்த்திக் குடிநீரிட்டுக் கொடுக்க நீரிழிவில் காணும் நீர்வேட்கை தணியும்.

29. பறங்கிப்பட்டை: இதைப் பொடி செய்தாவது,குடி நீரிட்டாவது கொடுத்துவர நீரிழிவு நோய், பிளவை, பற்பல வளி நோய்கள், கடிவிடம், சிரங்கு, குறை நோய் முதலியன நீங்கும்.

30. பிளவைக் கொல்லி: இதன் இலையை நீர்விடாமல் அரைத்துப் பிளவைகளின் மீது பூசிவர அவைகள் ஆறும்.

31. மருது: மருதம்பட்டையை இடித்துச் சாறு எடுத்தோ அல்லது குடிநீர் செய்தோ கொடுக்க நீரிழிவு நீங்கும். ஆவாரையுடன் சேர்த்து நீரிழிவு நோய்க்கு குடிநீர் செய்து வழங்கலாம்.

32. வாகை: இதன் பிசினை 1 முதல் 2 கிராம் வரை கொடுத்து வர மேகக் கட்டி நீங்கும்.

33. விளா: விளாம் பிசினைத் தூய்மை செய்து பொடித்து மாத்திரை முதலியன செய்து சாப்பிட நீரிழிவு, வெள்ளை, நீடித்த கழிச்சல், பெரும்பாடு முதலியன நீங்கும்.

விளா வேர், ஆவாரை வேர், பூலா வேர், இலவங்கம், காட்டுமல்லி வேர் இவற்றை ஒரே அளவில் எடுத்து எருமை மோரில் வேகவைத்துத் தயிரில் கலந்து அருந்த மிகுந்த நீரிழிவு நீங்கும்.

34. வேல்: கறுவேலம்பட்டை ஒரு பங்கு எடுத்து 14 பாகம் தண்ணீரில் ஊறவிட்டு ஊறல் குடிநீராகச் செய்து அதில் 30 முதல் 45 மிலி வீதம் கொடுத்து வர நீரிழிவு நீங்கும்.

கறுவேலம் பிசின் சூரணத்தை மதுமேகம், அதிமூத்திரம் முதலான நோய்களில் துணை மருந்தாகக் கொள்ளலாம்.

# IV

"குணபாடம்-தாது சீவ வகுப்பு" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள நீரிழிவு நோய் சிகிச்சை முறைகள் வருமாறு:

## 1. அப்பிரகப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த அப்பிரகப் பொடிக்கு 6,5,4,3 பங்கு முறையே கொத்தவரைச் சாறு, நீலோற்பலச் சாறு, கட்டுக் கொடி இலைச் சாறு, பசு மூங்கில் கிழங்குச் சாறு ஆகியவற்றைச் சேர்த்து, முறையே 6,5,4,3 நாட்கள் அரைத்து, முறையே 5,4,3,2 நாட்கள் வில்லையை உலர்த்தி, முறையே 40,36,30,27 வறட்டிகளின் புடமிட்டு எடுக்க வேண்டும்.

அளவு: கடலையின் கால் கூறு அளவில் மருந்து உண்பது உத்தமம். ஈச்சங்கள்ளில் அனுபானித்துக் கொடுக்க நீரிழிவு நோய் நீங்கும். இதனை 1 மண்டலம் வரை உண்ணலாம். புளி, புகை, பெண்போகம், கடுகு, மதுபானம், அகத்திக் கீரை இவைகளை நீக்கிச் சாப்பிட வேண்டும்.

## 2. அப்பிரகச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த அப்பிரகப் பொடிக்கு முறையே 4,7 பங்கு அளவிலான கொம்புப்பாகலிலைச் சாறு, பழச்சாறு இவற்றால் முறையே 4,7, நாட்கள் அரைத்து முறையே 3,6 நாட்கள் வில்லை செய்து வறட்டியில் தனித்தனியே புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும்.

அளவு கடலையின் கால் கூறு அளவில் 1 மண்டலம் உண்ண மேக நீரையழித்து, சரீரத்தை அழிவிலிருந்து காக்கும்.

## 3. அப்பிரகச் செந்தூரம் (வேறு முறை)

சுத்தி செய்த அப்பிரக நவநீதம் 1பலம் எடுத்து ஒரு பீங்கான் கோப்பையில் சேர்த்து, நவநீதம் நன்றாக ஊறும்படி 3 நாள் வரைக்கும் காட்டு சாமந்திச் சாறு விட்டு வரவும் நான்காம் நாள் முதல் இச்சாறு விட்டு மெழுகு போல் அரைத்து, இலேசாகச் சிறிய வில்லைகள் செய்து, நிழலில் 3 நாட்கள் உலர்த்திப் பின் வெயிலில் நன்றாகக் காயவைத்துச் சில்லிட்டுச் சீலை செய்து உலர்த்தி, 50 எருவில் புடமிடவும்.

இவ்வாறு 7 புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும். இச் செந்தூரம் மேகநீருக்கும் அதிமூத்திர நோய்க்கும் நல்ல பலன் தரும்.

### 4. அப்பிரகச் செந்தூரம் (வேறு முறை)

சுத்தி செய்த அப்பிரக நவநீதம் 10 பங்குக்குச் சுத்தி செய்த கந்தகம் 1 பங்கு சேர்த்து, எலுமிச்சம்பழச் சாறு விட்டு மைபோல் அரைத்து, மிக்க இலேசான காசளவில் சிறு வில்லைகள் செய்து வெயிலில் நன்றாக உலர்த்திப் பிறகு புடமிட்டெடுத்து, தேறிய எடைக்குப் பத்தில் ஒரு பங்கு சுத்தி செய்த கந்தகம் கூட்டிக் கரிசாலைச் சாற்றில் முன்கூறியதுபோன்றே அரைத்துப் புடமிட்டெடுக்கவும். பின் முன்போலவே தேறிய எடைக்குப் பத்தில் 1 பங்கு கந்தி சேர்த்து சிறு செருப்படைச் சாற்றில் அரைத்து ஒரு புடம் போடவும். பின் முருங்கைப்பூ ரசத்தில் அவ்வாறே அரைத்து ஒரு புடமும் பொடுதலைச் சாற்றில் அவ்வாறே ஒருபுடமும் , வைக்கச் செந்தூரமாகும்.

அளவு: 1/4 முதல் 1 பணவெடை வரை உட்கொள்ள நீரிழிவு நோய் நீங்கும்.

### 5. சொர்ணாப்பிரகச் செந்தூரம்

| | |
|---|---|
| அப்பிரகச் செந்தூரம் | 1/2 பலம் |
| பவழப்பற்பம் | 1/2 பலம் |
| குந்தனத் தங்கத்தகடு | 1/4 பலம் |
| இரசப் பதங்கம் | 1/2 பலம் |
| அயக்காந்தச் செந்தூரம் | 1/2 பலம் |
| கருவங்கச் செந்தூரம் | 1/8 பலம் |

இச்சரக்குகளைக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச் சாறு விட்டுத் தங்கத்தின் தளுக்கு நீங்குமட்டும் அரைத்து வில்லை செய்து உலர்த்திச் சில்லிட்டு 3 மண்சீலை செய்துலர்த்தி, 20 வறட்டியில் புடமிட்டு ஆறியபின் எடுக்கவும்.

பின் வில்லை எடைக்கு அரை எடை சுத்தி செய்த கந்தியும், கந்தியின் எடைக்குப் பாதி எடை இலிங்கமும் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச் சாற்றால் நன்றாக அரைத்து வில்லை செய்துலர்த்தி முன்போல 20 வறட்டியில் புடமிடவும். இவ்வாறு மேலும் 7 புடமிட நல்ல செந்தூரம் ஆகும். தக்க அளவில் சீந்திலாதி லேகியத்தில் இதை அனுபானித்துக் கொடுக்க நீரிழிவு 20-க்கும் சிறந்த பலன் கிடைக்கும்.

### 6. திரிலோகச் செந்தூரம்

சுத்தி செய்த அயம், காந்தம், அப்பிரகம் வகைக்குப் பலம் ஒன்று; கந்தகம் பலம் 3, இரசம் பலம் 1/2. இவைகளைக் கல்வத்திலிட்டுப் பழச் சாற்றால் அரைத்து, பூநீறு கழஞ்சு 3 கூட்டியரைத்துப் பிறகு பொற்றலைக் கையான், சிறுசெருப்படை, குமரி இவைகளின் சாற்றால் வகைக்கு 4 சாமம் அரைத்து வில்லை செய்து காய வைத்து 100 எருவில் புடம் போட்டு, இலிங்கம் 1/2 பலம் கூட்டி குமரிச் சாற்றால் 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து 30 வறட்டியில் புடம் போடச் செந்தூரமாகும்.

இதனைச் சஞ்சீவி சூரணத்தில் பணவெடை அளவில் வைத்து நெய்யில் மத்தித்து உட்கொள்ள மேகநீர் 20-ம் நீங்கும். தேகம் குளிரும்.

### 7. கருவங்கப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த வங்கப் பொடிக்குப் பசரையிலைச் சாறு, ஆகாயத்தாமரைச் சாறு, செப்பு வன்னியிலைச் சாறு, பசுமஞ்சள் சாறு, நெருஞ்சில் சமூலச்சாறு, கருணையிலைச் சாறு இவற்றில் தனித்தனியே முறையே, 6,5,4, 3,2,1 ஆகிய அளவில் சாறுகளைச் சேர்த்து அதே நாளளவில் அரைத்து முறையே 6,5,4,3,2,1 ஆகிய நாளளவில் வில்லை உலர்த்தி, முறையே 45,36,26,18,16,9 ஆகிய எண்ணிக்கையுள்ள வறட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பம் கிடைக்கும். இதனைத் துவரையின் கால் கூறு அளவில் வெந்நீரில் உட்கொண்டு வர நீரிழிவு நோய் நீங்கும்.

### 8. தங்கச் செந்தூரம்

தங்கம் வராகன் எடை 1க்கு உருக்குமுகத்தில் இரசம் வராகன் எடை 2 கூட்டி வெட்டையாக்கி, உப்பிலாங்கொடிச் சாறு விட்டு 6 சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்திச் சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கவும். 1/2 முதல் 1 உளுந்தெடை வரை கொடுத்துவர நீரிழிவு, சயம், காசம் ஆகியவை நீங்கும்.

### 9. வெள்ளிச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த வெள்ளிப் பொடியில் பாதிரிச் சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, சித்திரமூலச்சாறு இவைகளைத் தனித்தனியாக விட்டு, முறைப்படி அரைத்து வில்லை செய்து உலர்த்திக் கவசித்துப் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

இதனைத் தக்க அளவில் வாதுமை நெய்யில் வழங்க வெகுமூத்திரம் நீங்கும்.

## 10. இரசப்பற்பம்

சுத்தி செய்த இரசம் 8 பலம் எடுத்துச் சோற்றுப்பும் செங்கல் தூளும் ஒரு பாண்டத்திலிட்டு அதில் இரசத்தை விட்டு மேல் சட்டி கொண்டு மூடி மண்சீலை செய்து உலர்த்தி நெருப்பில் வைத்து எரிக்க வேண்டும். இரசம் பதங்கமாகி மேல் சட்டியின் உட்புறத்தில் ஏறி நிற்கும். அப்பதங்கத்தின் எடைக்குச் சரியெடையாக சங்கத்திராவகம் விட்டு அரைத்து, அரைத்த கல்வத்துடன் வெயிலில் வைக்கவும். இதன் மூலம் கிடைப்பது திங்களையொத்த வெள்ளை நிற இரசப்பற்பமாகும்.

அரைக்காசெடையாக இருவேளை ஏழு நாட்கள் தண்ணீரில் கொடுக்க மேகநீர் நோய்கள், பிளவைகள் நீங்கும். இரண நோய்களுக்கும் இது உகந்ததாகக் கூறப்படுகிறது.

## 11. ஜெய வீரரண சிங்கிக் கயிறு

புது ஓட்டிலிட்டு அடுப்பேற்றி நீர் சுண்டும் படி எரித்து எடுத்த எண்ணெய், வெங்காரம் வராகன் எடை 10, வீரம் வராகன் எடை 1, உளுந்தின் மா வராகன் எடை 2. இவற்றைக் கல்வத்திலிட்டு மழை நீர் விட்டரைத்து மெழுகு பதத்தில் மாத்திரையாக்கி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். நாளானால் மாத்திரையின் வெண்மை நிறம் பழுப்பாகும். அதனால் தவறில்லை. இதை ஒரு வருடம் பழகியபிறகே கையாள வேண்டும்.

இம் மாத்திரையை நீரில் இழைத்துப் பொட்டு போலத் தடவி வர பக்கப்பிளவை, இராசப்பிளவை, உச்சிப்பிளவை, இலிங்கப் புற்று, மேக விரணங்கள், கண்டமாலை, ஆசன கிரந்தி முதலியன நீங்கும்.

## 13. கந்தக மெழுகு

சுத்தி செய்த கந்தகத்திற்கு வெள்ளை வெங்காயச்சாறு விட்டு 5 நாளரைத்துப் பிறகு இஞ்சிச்சாறு விட்டு ஐந்து நாளரைத்து மெழுகு பதம் ஆனவுடன் குப்பியிலடைக்கவும்.

2 முதல் 3 குன்றியளவில் வழங்க வெகு மூத்திரம், மேகநீர் நோய்கள், சொறி, சிரங்கு, குட்டம் முதலியன நீங்கும்.

## 14. பஞ்சபாடாணச் செந்தூரம்

சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், அரிதாரம், கெந்தி, இரசக்கற்பூரம், வெள்ளைப் பாடாணம் இவை வகைக்குப் பலம் 1 எடுத்துச் சுத்தி செய்து குப்பை மேனி, வெற்றிலை, பருத்தி, வெள்ளறுகு, துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை இவைகளின் சாற்றால் வகைக்கு 4 சாமம் அரைத்து வில்லை செய்து நிழலில் உலர்த்தி அதற்கு வெற்றிலையால் கவசம் செய்து ஒரு சட்டியில் வைத்து மேல்சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து நன்றாகக் காய வைத்து அடுப்பேற்றித் தீபம் போல 4 சாமம் எரித்து, ஆறவைத்துப் பிரித்துப் பார்க்க மேல் சட்டியில் செந்தூரம் பற்றியிருக்கும்.

இதில் பணவெடை எடுத்துத் தேன், இஞ்சிச்சாறு இவற்றில் அனுபானித்துக் கொடுக்கப் பிளவை, புற்று, மேகம் முதலான பல்வேறு நோய்களும் நீங்கும்.

## 14. கறியுப்புப் பற்பம்

ஒரு பலம் சோற்றுப்பைக் காணான் சமூலச் சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, அத்திப்பால், கொட்டியிலைச் சாறு இவற்றால் முறையே 4,3,2,1 அளவாக விட்டு, முறையே 4,6,10,12 நாட்கள் அரைத்து, முறையே 3,5,9,11 நாட்கள் வில்லையைகக் காய வைத்து, முறையே 32,27,18,16 வறட்டியில் புடமிடப் பற்பமாகும். ஒவ்வொரு சாறு விட்டும் தனித்தனியே அரைத்துப் புடமிடவேண்டும்.

இப்பற்பத்தைத் துவரையின் கால்பங்கு அளவில், கொன்றைப் பிசின் கூட்டின நல்ல தண்ணீரில் கொள்ள மதுமேகம், நீர்ப் பெருக்கு முதலியன தீரும்.

## 15. பவழப்பற்பம்

கற்பூரச்சிலாசத்து சேர்த்துச் செய்யப்பட்ட பவழப்பற்பத்தை வெண்ணெயில் கலந்துண்ண மதுமேகம், என்புருக்கி நோய்கள் நீங்கும்.

## 16. புட்பராகப் பற்பம்

எருக்கம்பால், குமரிச்சாறு இரண்டையும் தனித்தனியே இரண்டுபலம் எடுத்துக் குழைத்து அதில் புட்பராகம் 8 குன்றிமணியளவில் புதைத்துக் காயவைத்துக் காவிமண்ணினால் மூன்று சீலை செய்து உலர்த்தி, 70 வறட்டியில் ஒன்று அல்லது இரண்டு புடமிடப் பற்பமாகும்.

ஒரு அரிசியெடை அளவில் கொடுக்கலாம். கவுஸ்பான் 1 வராகன் எடையை மூன்று பலம் நீரிலிட்டு நான்கில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டிய குடிநீரை 6 வராகன்

எடை எடுத்து, 3 வராகன் எடை தேன் கலந்து அதில் பற்பத்தை வைத்துக் கொடுக்க பிரமேகம், இருமல், சுரம், புண் முதலியன நீங்கும். இருதயம் பலப்படும்.

### 17. முத்துப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த முத்துப் பொடிக்கு வெள்ளைச் சாறுவேளை சமூலச்சாறு, எருக்கஞ்சமூலச் சாறு, அத்தியிலைச் சாறு, மருதம்பட்டைச் சாறு-ஆகிய சாறு ஒவ்வொன்றிலும் 5 பலம் அளவில் விட்டு, 5 நாள் அரைத்து, 4 நாள் வில்லை உலர்த்திப் பின் முறையே 9,8,7,6 வறட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும். ஒவ்வொரு சாற்றிலும் தனித்தனியே அரைத்துப் புடமிடவேண்டும்.

அவரைக் கொட்டையில் 6-இல் ஒரு கூறு அளவில் உண்பது நல்லது. இதனைப் பசுநெய்யில் அனுபானித்துக் கொடுக்க நீரிழிவு போன்ற நோய்கள் தீரும்.

### 18. கோமூத்திரச் சிலாசத்து

'கோமூத்திரச் சிலாசத்தால் குறுகியே போம் மூத்திரம், என்பதற்கிணங்க நெல்லெடை எடுத்து நெய்யில் கலந்து கொடுக்க அதிமூத்திரம் குறுகித் தன்னிலையடையும்.

கோமூத்திரச் சிலாசத்துடன் அப்பிரகப்பற்பம் சேர்த்து மதுமேகத்திற்குக் கொடுக்கலாம். மதுமேகநோயில் காணும் அதிமூத்திரம், தாகம், கரபாதசன்னி முதலியன நீங்கும்.

### 19. கோரோசனை மாத்திரை

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கற்பூரம், ஏலம், கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், அக்கிரகாரம்-வகைக்கு 3 கழஞ்சு எடுத்துப் பொடித்து சந்தனத்தூள் குடிநீரால் நான்கு சாமமும் சண்பகப்பூக் குடிநீரால் 2 சாமமும் குங்குமப்பூக் குடிநீரால் இரண்டு சாமமும் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து உலர்த்திக் கொண்டு, பாலில் கொடுக்கலாம். நீரிழிவு நோயில் இம்மாத்திரையை அப்பிரகப்பற்பத்துடன் கலந்து கொடுக்க நல்ல பலன் உண்டாகும்.

### 20. தந்தங்களின் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த பல்லின் பொடிக்குத் தூதுளைச் சமூலச் சாறு 4 பலம் எடுத்து 4 நாள் அரைத்து 3 நாள் வில்லை உலர்த்தி, 1 நாள் மட்டும் கவசம் உலர்த்தி 40 வறட்டியில் புடமிடவேண்டும். இதேபோல் மேலும் மூன்று முறை

செய்ய வேண்டும். இரண்டாம், மூன்றாம், நான்காம் தடவைகளில் புடமிடும்போது வறட்டியினளவு முறையே 35,30,25 என்னும் எண்ணிக்கையில் இருக்க வேண்டும்.

கடலையளவு பற்பத்தைப் பனங்கள்ளில் குழைத்து வழங்கலாம். நீரிழிவு நோய் நீங்கப் பெண் குதிரைப் பல்லின் பற்பத்தை வழங்குவது நலம்.

## V

"ஆத்மரட்சாமிர்த வைத்திய சார சங்கிரகம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள மதுமேக நோய் சிகிச்சை முறைகள் வருமாறு:

1. திரிகடுகு, கறுஞ்சீரகம், நற்சீரகம், ஏலம், அதிமதுரம் கோஷ்டம், சண்பகப்பூ, இலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, கோரோசனை, சூகைநீறு, கல்நார், தாமரை வளையம், இலவங்கபத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு பலம் 5.

வாய்விடங்கம், திரிபலை, குரோசாணி ஓமம் வகைக்குப் பலம் 1.

இவைகளை இடித்துச் சூரணித்து. சலித்து, அதில் சீந்தில் சர்க்கரை, சீனி, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம் இவைகளை ஒன்றாகச் சேர்த்து இடித்துக் கொண்டு திரிகடிப் பிரமாணத்தில் வங்கப்பற்பம் ஒரு பணவெடை வைத்து 1 மண்டலம் கொள்ள பிரமேகம் தீரும்.

2. பசுமஞ்சள்சாறு குறுணியில் 50 பலம் சீனியைக் கரைத்துப் பாகு செய்து அதில் நெல்லிமுள்ளி, மல்லி, மரமஞ்சள், வெங்காரம், அதிமதுரம், கோஷ்டம், இலவங்கம், ஏலம், சதகுப்பை, இருவேலிவேர், கோரைக்கிழங்கு, தான்றிக்காய், சீரகம், கறுஞ்சீரகம் வகைக்குப் பலம் 2 சூரணித்துத் தூவிக் கிண்டி ஒரு கலசத்தில் போட்டு ஒரு மண்டலம் நெல்லினுள்ளே புதைத்தெடுத்து வேளை ஒன்றுக்கு ஒரு பாக்களவு கெந்தக பற்பம் வைத்து 20 நாள் உண்ணப் பிரமேகம் தீரும்.

3. ஒரு படி புங்கம்பூவில் ஒரு படி ஆவின் நெய்யைச் சிறுகச்சிறுக விட்டுக் கிண்டித் திரிகடியளவில் கருவங்கச் செந்தூரம் 1 பணவெடை வைத்து, ஒரு மண்டலம் கொள்ளப் பிரமேகங்கள் தீரும்.

4. அரிதாரம், மனோசிலை, வெள்ளைக் குங்கிலியம், விளாம்பிசின், தேற்றான் விதை, இரசம்-இவைகளைச் சமமாய்ப் பொடித்துத் துணியில் கிழிகட்டி 3 நாள் வரையில் பச்சரிசிக் கழுநீரில் ஊறவைத்துலர்த்தி, காடி விட்டரைத்து குன்றிபோல் உருட்டி உலர்த்திக் கொண்டு நாளொன்றுக்கு ஒரு உருண்டை வீதம் மோரிலாவது, தேனிலாவது ஒரு மண்டலம் கொள்ளச் சகல மேகந்தீரும்.

முருங்கையிலைச் சாற்றில் கொடுக்க மதுப்பிரமேகம் தீரும்.

- ❖ நீர்முள்ளி விரையும் மேற்படி உருண்டையும் சேர்த்தரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்கச் சலமாயெடுக்கின்ற பிரமேகம் தீரும்.
- ❖ முள்ளிவிரையையும் மேற்படி உருண்டையையும் பொடித்துக் கறுங்குறுவை அரிசிமாக்களியில் போட்டுப் பிசைந்து கொடுக்க மூத்திரக் கிரிச்சரம் தீரும்.
- ❖ மேற்படி உருண்டையை ஆனையறுக்குச் சூரணத்தில் கொடுக்க மாவுக் கரைத்தது போலிறங்கும் பிரமேகம் தீரும்.
- ❖ பிண்ணாக்கையும் சிறுகீரையையும் வேகவைத்துத் தண்ணீர் வடித்து நல்லெண்ணெய் கலந்து அதில் மேற்படி உருண்டையக் கரைத்துக் கொடுத்து, நல்லெண்ணெய் புண்ணாக்கும் சேர்த்துண்ண மஞ்சள் நிறமாயும் சுண்ணாம்பும் போலிறங்கும் பிரமேகம் தீரும்.
- ❖ திரிபலை, முத்தக்காசு, மஞ்சள், தென்னம்பாளை, முருக்கிலை, கடலிராஞ்சிப் பட்டை வகைக்கு கழஞ்சு 1 பொடித்து, 2 படி நீரில் போட்டு, 1/4 படியாய் வற்ற வைத்து மேற்படி உருண்டையை அரைத்துக் கொடுக்கச் சுண்ணாம்பு நீர் போலவும், நுங்குபோலும் இறங்கும் பிரமேகம் தீரும்.
- ❖ கடுக்காய் கழஞ்சு 3, கடலிராஞ்சிப்பட்டை கழஞ்சு 2, நெல்லிமுள்ளி, கந்தகம், வெங்காரம் வகைக்குக் கழஞ்சு 1. இவைகளைப் பொடித்து 2 படி நீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து அதில் ஒரு காசெடை தேன் கலந்து மேற்படி உருண்டையைக் கரைத்துக் கொடுக்கக் கடுப்பு, எரிவு, சீழ்மேகம் நீலநிறமாய் நீர் இறங்கும் தன்மை ஆகியன நீங்கும்.
- ❖ கறுங்குறுவையரிசியும் நீர்முள்ளியிலையும் சேர்த்துச் சிதைத்துக் கஞ்சி காய்ச்சி வடித்து அதில் மேற்படி உருண்டையை அரைத்துக் கொடுக்க மிகுந்து நீர் இறங்குவதும் அடைநீராயிறங்குவதும் மீன் கழுவின நீராய் இறங்குவதும் தீரும்.
- ❖ எள்ளுப் பிண்ணாக்கு, நெருஞ்சி வேர், முசுட்டை வேர் வகைக்கொரு பிடி வீதம் இடித்து ஒருபடி நீரில் போட்டு, கால்படியாய் வற்றவைத்து ஒரு துட்டெடை நல்லெண்ணெய் கலந்து அதில் மேற்படி உருண்டையை அரைத்துக் கொடுக்க நீர்ச்சிறுப்பு, கடுப்பு, எரிவு தீரும்.

பத்தியம்: நல்லெண்ணெய், நீர் மோர், பாசிப் பயறு, பொன்னாங்காணி, முயல், உடும்பு, ஆமை, காடை, ஊர்க்குருவி, வெள்ளாடு, புறா, தூதுளை சமூலம். சிறுவழுதலைப் பிஞ்சு இவைகளைப் பயன்படுத்தலாம்.

5. சுத்தி செய்த காரீயம் வராகன் எடை 10, இரசம் வராகனெடை 5 சாதிலிங்கம், காந்தம், மனோசிலை வகைக்கு வராகனெடை 5, எடுத்துப் புளித்த மோர் விட்டுச் சாந்துபோலாக்கிக் குன்றியளவு உருண்டை செய்து கொண்டு மோரில் கொடுக்கச் சகலபிரமேகமும் தீரும். இவ்வுருண்டையை முன் சொன்னவாறே பல்வித அனுபானங்களில் கொடுக்க அந்தந்த தன்மைத்தான வியாதிகள் நீங்கும்.

6. மரமஞ்சள், கறுவேலம் பிசின் வகைக்குப் பலம் அரைக்கால்; மஞ்சள், தேற்றான் விதை வகைக்குப் பலம் கால்; ஆவாரம் விதை பலம் 2 1/2. இவைகளைச் சூரணித்துத் திரிகடியளவு மோரில் கொள்ளத் தீரும்.

7. மருது, கொன்றை, நாவல்-இவற்றின் வேர்ப்பட்டை; அத்திப்பூ, அல்லிக்கிழங்கு, மூங்கிலரிசி, தான்றிக்காய், நெல்லிக்காய், விராஞ்சிப் பட்டை, காசுக்கட்டி-இவைகளைச் சமன் கூட்டி நல்லெண்ணெய், தேன் விட்டு வகைக்கொரு சாமம் அரைத்து, கடலையளவு உருட்டிக் கொண்டு எண்ணெயிலும் தேனிலும் வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டைவீதம் 20 நாட்கள் உண்ணச் சலப்பிரமேகம், கடுப்பு தீரும்.

8. ஆவாரை விரை படி 1, காசுக்கட்டி பலம் 1, பூரம் பலம் 4 பொடித்துத் தேன் விட்டு ஒரு சாமமரைத்துக் கடலையளவு உருட்டியுலர்த்தி, வேளையொன்றுக்கு ஒரு உருண்டை வீதம் எண்ணெயில் ஊறவைத்துத் தேனில் மத்தித்து 5 நாட்கள் உட்கொள்ளச் சகல மேகம், கடுப்பு தீரும்.

9. அத்தி, மருது இவற்றின் பட்டையால் கறுவங்கத்தைக் கிண்டி வறுத்துப் பொடித்த பின் அதற்குச் சமன் இரசம் 1 பலம் நிறுத்துக் கல்வத்திலிட்டுத் திரிபலை, ஆவாரை, கடலிராஞ்சிப்பட்டை வகைக்குப் பலம் 1 கூட்டிப் பொடித்து நல்லெண்ணெய் விட்டு அரைத்துக் கழற்சிக் காயளவு உருட்டியுலர்த்தி நல்லெண்ணெயில் ஊறவைத்துக் கொண்டு, மேற்படி எண்ணெயில் மத்தித்து வேளைக்கொரு உருண்டை வீதம் சாப்பிட்டு உடனே நன்னாரி வேர், ஆவாரைப் பிஞ்சு சமன் கூட்டிக் குறுணி நீர் விட்டுக் குடிநீர் செய்து சாப்பிட்டு வர சலமேகம், சீழ் இரத்தம் முதலான மேகங்களும் தீரும்.

கோஷ்டம், அதிமதுரம், மரமஞ்சள், சன்னலவங்கம், திரிபலை, சீரகம், சீந்தில், மஞ்சள், முத்தக்காசு, நன்னாரி வேர், சிறுதேக்கு, விலாமிச்சுவேர்

தூதுளம்வேர், கடலிராஞ்சிப்பட்டை, கொன்றைப் பட்டை, ஆவாரம்பட்டை, நாவல்பட்டை, அத்திப் பட்டை, பூவரசம்பட்டை, மருதம்பட்டை, அரசம்பட்டை, இலந்தைப்பட்டை, சிற்றாமுட்டி, நெருஞ்சில் சமன் கூட்டி இடித்துக் குடிநீர் செய்து அதில் சிறுகத் தேன் விட்டு மேற்படி உருண்டையை உரைத்துக் கொடுக்க நீரிழிவு தீரும்.

10. அவரைச் சாற்றில் மஞ்சள் தூளைப் போட்டுக் கொடுக்க சகல பிரமேகமும் தீரும்.

11. துத்தி, ஆல், அரசு, அத்தி, கறுவேல், ஆவாரை இவைகளின் விதைகளையும், செங்கிலுப்பைப் பட்டையையும் ஓர் நிறையாய்ச் சூரணித்து, அதிவிடயம், கல்மதம், கிராம்பு, சாதிக்காய், திப்பிலி, காயம் இவற்றைச் சமனாய்ப் பொடித்து முன் பொடியுடன் கலந்து உட்கொள்ள வாதப்பிரமேகம் தீரும்.

12. விலாமிச்சு, மருதம்பட்டை, வெள்ளிலோத்திரம், அத்திப்பட்டை, சந்தனம்-இவைகளைச் சேர்த்துக் குடிநீர் செய்து உட்கொள்ள பித்தப்பிரமேகம் தீரும்.

13. வேப்பம்பட்டை, ஆமலகத்தோடு, பேய்ப்புடல், சீந்தில்-இவைகளைச் சம அளவெடுத்துக் குடிநீர் செய்து தேன் விட்டு உட்கொள்ளப் பித்தப் பிரமேகம் தீரும்.

14. வெள்ளிலோத்திரம், அகில் கட்டை, அத்திப்பட்டை, இருவேலி-இவைகளைக் குடிநீரிட்டுத் தேன் விட்டு உட்கொள்ளப் பித்தப் பிரமேகம் தீரும்.

15. தேவதாரம், திரிபலை, முத்தக்காசு, மரமஞ்சள் இவைகளைக் குடிநீர் செய்து தேன்விட்டு உட்கொள்ள பித்தப் பிரமேகம் தீரும்.

16. திரிபலை, வெட்பாலைப் பட்டை , மரமஞ்சள் இவைகளைக் குடிநீர் செய்து தேன் விட்டு உட்கொள்ளக் கபப்பிரமேகம் தீரும்.

17. வெள்ளிலோத்திரம், விளாவரிசி, சீதேவி, பொன்முசுட்டை, முத்தக்காசு, கடுக்காய், செந்தொட்டி, கருங்காலிப்பட்டை இவைகளைக் குடிநீர் செய்து தேன் விட்டு உட்கொள்ளச் சகலப்பிரமேகமும் தீரும்.

18. பங்கம்பாளை, மரமஞ்சள், மருதம்பட்டை இவைகளைக் குடிநீர் செய்து உட்கொள்ளச் சகல பிரமேகமும் தீரும்.

19. ஆவாரை வேர்ப்பட்டை, வேம்பு, மருது, கருங்காலி, வேங்கை, கடலிராஞ்சி இவைகளின் பட்டை, முருங்கை வித்து, திரிபலை, முத்தக்காசு, பொன்முசுட்டை, தேற்றான் கொட்டை இவைகளை உடனுக்குடனே குடிநீர் செய்து தேன் விட்டு உட்கொள்ளத் தீரும்.

20. அப்பிரகச் செந்தூரம், அயகாந்தச் செந்தூரம், பவழப் பற்பம், இரசப்பற்பம்-வகைக்கு 1 வராகன் எடை. தக்கோலம்-வராகன் எடை 2 1/2. கருவங்கச் செந்தூரம் -வராகன் எடை 1 1/4 .

இவற்றைக் குமரிச் சாற்றாலாட்டிப் புடம்போட்டு அதற்குப் பாதி கெந்தி, அதற்குப்பாதி இலிங்கம் சேர்த்து மேற்படி சாற்றினால் அரைத்து 7 புடம்போட்டு எடுக்கச் செந்தூரம் ஆகும். நிறம் குறைவாக இருந்தால் 1 கழஞ்சு இலிங்கம் சேர்த்தரைத்துப் புடம் போட்டு வைத்துக் கொண்டு, இலேகியங்களிலாவது, வெண்ணெயிலாவது பணவெடை வீதம் வைத்துண்ண மேகம், மேகச்சூலை முதலியனவும் தீரும்.

21. சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, சாதிலிங்கம், கல்நார், கெருடப்பச்சை, குரோசாணி ஓமம், காந்தம், அக்கரகாரம், காசுக்கட்டி வகைக்கு கழஞ்சு-1. ஊமத்தை விதை கழஞ்சு 1/2. இவைகளுக்குச் சரிஎடை அபின். இவையெல்லாம் சேர்ந்த எடைக்கு ஆவாரை விரையை இளவறுப்பாக வறுத்துப் பொடித்து எருமை மோரில் அரைத்துச் சுண்டைக்காயளவு உருண்டை செய்து உலர்த்திக் கொண்டு, எருமை மோரில் இரண்டு வேளையும் 1மண்டலம் கொள்ளத் தீரும்.

22. கடலிராஞ்சி, பூவரசு, செம்பணாத்தி, ஒதி, வெள்வேல், கறுவேல், ஆவாரை, செங்கிளுவை, அத்தி இவைகளின் பட்டை வகைக்குப் பலம் 10 இடித்து, 4 மரக்கால் தண்ணீரில் போட்டு 8 நாள் ஊறவைத்து ஒருபடியாக வற்றவைத்துக் காந்தம், அப்பிரகச் செந்தூரம், கிட்டம் அரப்பொடி, மஞ்சள், தேற்றான் விதை, கடுக்காய், நெல்லிமுள்ளி, விளாம்பிசின், காரீயமும், இரசமும் சேர்த்து உருக்கிப் பொடித்த பொடி, வேலம்பிசின்-இவற்றை ஓர் நிறை எடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி கியாழத்தால் அரைத்துப் பத்து வராகனெடை எடையுள்ள உருண்டைகளாக செய்துச் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டையையும், இருபது வராகனெடை ஆவாரை அரிசியையும் பொடித்துத் தேனில் மத்தித்து 20 நாட்கள் உண்ணத் தீரும்.

23. மரமஞ்சள், கறுவேலம்பிசின் வகைக்குப் பலம் அரைக்கால்; மஞ்சள், தேற்றான் விதை வகைக்குப் பலம் 1/4; ஆவாரையரிசி பலம் 2 1/2 சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் தேனில் 20 நாள் உட்கொள்ளத் தீரும்.

24. மரமஞ்சள், சுக்கு, கடுகு, வகைக்கு பலம் 1/8, கறுவேலம்பிசின் பலம் 1/4, ஆவாரையரிசி பலம் 2 1/2. இவைகளை ஆவாரை வேர்க் கியாழத்தால் அரைத்து மோரில் 20 நாட்கள் உட்கொள்ளவேண்டும்.

25. ஆவாரம் கொழுந்து, கல்மதம், கொன்றைவேர் இவைகளைச் சமஎடை எடுத்துப் புளித்த மோர் விட்டு எலுமிச்சங்காயளவு அரைத்து மோரில் கலக்கி, காலை மாலை 20 நாட்கள் கொள்ளத் தீரும்.

26. காரீயம் கழஞ்சு 10, இரசம் கழஞ்சு 4. இரண்டையும் ஒன்றாகத் தொந்தித்துக் கல்வத்திலிட்டுக் கந்தகம் கழஞ்சு 12, சாதிலிங்கம் கழஞ்சு 4- இவற்றை மோர் விட்டரைத்து உளுந்துப் பிரமாணம் உருண்டை செய்து, வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் மோரில் 1 மண்டலம் கொள்ளத் தீரும்.

27. சாதிக்காய், காந்தம், சாதிப்பத்திரி, அபின், கோரோசனை, காசுக்கட்டி இவைகளை ஓர் நிறையாய் எடுத்துப் பொடித்துத் தேனில் 1 மண்டலம் கொள்ளத் தீரும்.

28. மருளூமத்தம் விரை, கறுஞ்சீரகம், நற்சீரகம், காந்தம், ஓமம், குரோசாணி ஓமம், திரிசாதம், இலிங்கம், திப்பிலி, பால்கருடக்கல் வகைக்குக் கழஞ்சு 1; அபின் கழஞ்சு 4. இவைகளைத் தேன் விட்டரைத்துச் சிமிளில் வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்குக் கால் கழஞ்சு வீதம் சாப்பிட்டு வரத் தீரும்.

29. ஆவாரம் கொழுந்து, ஆவாரம்பூ அரிசி, கீழ்க்காய் நெல்லி, சித்திரப்பாலாடை, ஆரையிலை இவைளைச் சமமாய்ச் சிதைத்து 1 படி எருமை மோரில் போட்டு 1/2 படியாய் வற்ற வைத்து, அதிமதுரத்தை அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு கலந்து, கல்மதம், நெல்லிப்பருப்பு வகைக்குப் பலம் கால், தேற்றான்விதை பலம் 4-இவைகளை மேற்படி மோரில் அரைத்துக் கொண்டு, எலுமிச்சங்காயளவு மேற்படி மோரில் கலந்து கொடுக்கவும். இவ்வாறு 20 நாள் உண்ணத் தீரும்.

30. சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அபின், காந்தம், சாதிலிங்கம், ஆவாரம் விதை, மருளூமத்தம் விரை, பொரித்த பொரிகாரம்-இவைகளை ஓர் நிறையாய்ப் பொடித்து, வேளை ஒன்றுக்கு 1 கழஞ்சு வீதம் தேனில் கொடுக்கத் தீரும்.

| | | |
|---|---|---|
| 31. | விரை போக்கிய கடுக்காய் | பலம் 4 |
| | விரை போக்கிய தான்றிக்காய் | பலம் 4 |
| | கடலிராஞ்சிப் பட்டை | பலம் 4 |
| | நெல்லிப் பருப்பு ஓடுபோக்கி | பலம் 2 1/2 |
| | தேற்றான் விதை | பலம் 1 1/2 |
| | செங்கிளுவைப்பட்டை | பலம் 2 |

| | |
|---|---|
| ஆவாரம் வேர்ப்பட்டை | பலம் 21/2 |
| சீந்தில் தண்டு மேல் | |
| தோல் நீக்கி | பலம் 2 1/2 |
| முசுட்டைத் தண்டு | பலம் 3 |

இவற்றைப் பொடித்து 10 படி நீரில் போட்டு 2 படியாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்குக் கால் படி வீதம் ஒரு துட்டெடை தேன் விட்டு உணவிற்குப் பின் உட்கொள்ளத் தீரும்.

32. ஆவாரங் கொழுந்து, சித்திரப் பாலாடை, சிறுபுள்ளடி இவைகளை இடித்துப் பிட்டவித்து அரைத்து எலுமிச்சங்காயளவு 3 நாள் 6 பொழுது சாப்பிட்டு வரத் தீரும்.

33. விடத்தலை, விளா, கட்டுக்கொடி இவைகளின் கொளுந்து; ஆவாரம்பட்டை வகைக்கொரு பிடி-இவைகளை எருமை மோர் வார்த்தரைத்து இரண்டுநாள் இருநேரம் சாப்பிடத் தீரும்.

34. ஏங்கலரிசி, சாமையரிசி, வரகரிசி, அமளையரிசி வகைக்குப் படி ஒன்று பொரித்து இயந்திரத்திலிட்டு அரைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு படி மா வீதம், 1/4 படி கோவைத் தண்டுச் சாற்றில் 11 நாள் உண்ணத் தீரும்.

35. ஆவாரை வேர்ப்பட்டை பலம் 4, கடலிராஞ்சிப் பட்டை பலம் 1, கறுங்காலிப்பட்டை பலம் 1/4 . இவைகளைச் சிதைத்துச் சட்டியிலிட்டு ஒரு படி பால் விட்டு வேடுகட்டி அதன் மத்தியில் 2 வராகன் எடை அபின் வைத்து மேல் சட்டி மூடி தீயெரித்துப் பால் வற்றினபின்பு சட்டியில் உள்ள பட்டையையும், அபினையும் உலர்த்திக் கொண்டு அவைகளுடன் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, பச்சைக் கற்பூரம் வகைக்கு வராகன் எடை 1, ஏலரிசி வராகன் எடை 3, இவைகளைத் தனித்தனியே பொடித்து வடிகட்டித் திரிகடியளவு தேனிலாவது நெய்யிலாவது கொள்ளத் தீரும்.

36. ஆவாரைப் பஞ்சாங்கம், நிலப்பனைக் கிழங்கு, நீர்ப்பூலா, முத்தக்காசு, வில்வவேர், தேற்றான் விரை, பொன் முசுட்டை, துடரி, நீர்ச்சுண்டி கறுஞ்சூரை, சுண்டைவேர், இலந்தைவேர், மாதுளம் வேர், பேரீச்சு, முந்திரிப்பழம், நெற்பொரி, சீனாக் கற்கண்டு, பொன்னாங்காணிவேர் வகைக்கு கழஞ்சு 1 இடித்து, 2 படி நீரில் போட்டு எட்டிலொன்றாக வற்றவைத்து உட்கொள்ள மேக நோயினருக்குத் தோன்றும் நீர் வேட்கை தீரும்.

37. சீந்தில் தண்டும் நெற்பொரியும் கியாழம் செய்து உண்ண நீர்வேட்கை தீரும்.

38. மரமஞ்சளைத் தட்டி, சட்டியில் போட்டு, கறுகவறுத்து மோர் விட்டு கியாழம் செய்து கொடுக்கத் தீரும்.

39. சிறுகட்டுக்கொடியிலைச் சாறு, பேய் முசுட்டையிலைச் சாறு வகைக்குப் படி 1/2. ஒன்றாகக் கலந்து ஒரு சட்டியிலிட்டு வைத்திருக்கக் கட்டியாய் உறைந்திருக்கும். அதனை வேளை ஒன்றுக்கு ஒரு எலுமிச்சங்காயளவு சாப்பிட்டு வரத் தாகம் தீரும். சிறுநீர் அதிகரித்துப் போவதையும் கட்டுப்படுத்தும்.

40. கிடாமாட்டு நீரும் நல்லெண்ணெயும் சமன் கலந்து மத்திக்க வெண்ணெய் போலாகும். அதை வேளை 1 க்குக் கொட்டைப் பாக்களவு சாப்பிட தாகம், காந்தல் தீரும்.

41. மேகாதி வடகம் 10 பலம், வெள்ளுள்ளி 25 பலம் எடுத்துப் பசுவின்பாலில் போட்டுத் தீபம் போல் எரித்து வேகவைத்து, 5 பலம் பசுநெய் விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கிச் சீனி பலம் 2 1/2, கோதுமை மாவு பலம் 5 தூவிக் கிண்டி வேளை ஒன்றிற்குக் கொட்டைப் பாக்களவு கொள்ள வெகுமூத்திரமாயிறங்கும் மேக நீரெல்லாம் தீரும்.

42. திரிபலை, பருத்திக் கொட்டைப் பருப்பு, புளியம் விதைத்தோல், வெள்வேலாம் பிசின், வெண் குன்றிப் பருப்பு, மஞ்சள் காந்தப் பற்பம், அப்பிரகச் செந்தூரம் வகைக்கு வராகன் எடை 1. இவைகளின் மொத்த எடைக்குச் சமன் ஆவாரம் வித்தின் பருப்பு கூட்டிப் பொடித்து அத்திப்பால் விட்டு, முக்கழஞ்சி எடை உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் எருமை மோரில் கொள்ள மேகநீர் 20-ம் தீரும்.

# VI

"மேக நிவாரணி போதினி என்னும் நீரிழிவு நோய் மருத்துவம்" என்ற நூலில் கூறப்பட்டுள்ள நீரிழிவு நோய் சிகிச்சை முறைகள் வருமாறு:

### 1. ஆவாரையாதிக் குடிநீர்

ஆவாரம்பட்டை, சரக்கொன்றைப் பட்டை, நாவற்பட்டை, கடலழிஞ்சில்பட்டை, கோஷ்டம், மருதம்பட்டை-இவை வகைக்கு 1 வராகன் எடை.

இவற்றை நைய இடித்துச் சிதைத்து, 1 படி தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் குடித்து வரவேண்டும். காலை மாலை 2 வேளையாக 20 நாள் குடித்து வர நீரிழிவு நோய் தீரும்.

**2. அத்தியாதிக் குடிநீர்**

அத்தி மரப்பட்டை, கடலழிஞ்சில் பட்டை, நாவல் மரப்பட்டை, ஆவாரம்பட்டை, சரக்கொன்றைப் பட்டை இவை வகைக்கு வராகன் எடை 3. இவற்றை நன்கு சிதைத்து 1/2 படி நீரில் போட்டு 8-இல் 1 பாகமாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி 1/2 ஆழாக்கு வீதம் குடித்து வரலாம். இவ்வாறு காலை மாலை 2 வேளை 10 நாள் குடிக்க நீரிழிவு நோய் தீரும்.

**3. அழிஞ்சியாதிக் குடிநீர்**

கடலழிஞ்சில் பட்டை, ஆவாரம் வேர்ப்பட்டை - இவை வகைக்குப் பலம் 10; நெல்லிமுள்ளி, தான்றியின் தோல், பறங்கிப்பட்டை-இவை வகைக்குப் பலம் 1, தேற்றான் விதை சீவல் பலம் 1/2. இவை யாவற்றையும் நன்கு சிதைத்து ஒரு புது மண்பாண்டத்தில் போட்டு அதில் 5 படி தண்ணீர் வார்த்து நாலில் ஒரு பாகமாகச் சுண்டியபின்னர் 1/2 ஆழாக்குக் குடிநீர் வடிகட்டிக் குடித்து வரவும். இவ்விதம் ஒரு நாளில் நான்கைந்து முறை குடிக்கலாம். நீரிழிவு, அரோசகம் (உணவில் வெறுப்பு) தீரும்.

**4. மருதம் பட்டைக் குடிநீர்**

மருதம்பட்டை, மஞ்சள், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி வற்றல், விலாமிச்சம் வேர், நாவற்பட்டை, தேற்றான் விதை, கோரைக் கிழங்கு, கறுவேலம் பட்டை, பொன் முசுட்டை வேர், கடலழிஞ்சில்பட்டை, சிறுகீரை வேர், சந்தனத்தூள், பொன்னாங்காணிவேர். இவைகள் வகைக்குப் பலம் 1 எடுத்து ஒன்றாக உரலில் இடித்து ஒரு புதுமண் பாத்திரத்திலிட்டு 3 படி தண்ணீர் ஊற்றி நாலில் ஒரு பங்காகக் காய்ச்சிய குடிநீரில் வேளைக்கு 1/2 ஆழாக்கு வீதம் வடிகட்டி, 1 வராகன் எடை தேன் விட்டுக் கலந்து குடித்துவர நீரிழிவு நோய் தீரும்.

**5. வில்வாதிக் குடிநீர்**

வில்வவேர்ப்பட்டை, நெய்ச்சட்டிவேர், தேற்றான் கொட்டைச் சீவல், நற்சீரகம், வெந்தயம், கொத்துமல்லி விதை, கடலழிஞ்சில் பட்டை- வகைக்கு வராகன் எடை 2.

இவற்றைச் சிதைத்து ஒரு புது மட்பாத்திரத்திலிட்டு அதில் 2 ஆழாக்கு நீர் ஊற்றி 4-இல் 1 பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி, அரை ஆழாக்குக் குடிநீர் சாப்பிடவும். இவ்வாறு காலை மாலை 2 வேளை சாப்பிட்டுவர, நீரிழிவு நோய் நீங்கும்.

### 6. வில்வாதிக் குடிநீர் (வேறு முறை)

வில்வ வேர்ப்பட்டை, உலர்ந்த வாழையிலை, விலாமிச்சம் வேர், சந்தனத்தூள், உலர்ந்த ஆலிலை, நெற்பொரி இவை வகைக்கு 2 1/2 வராகன் எடை. இவற்றைக் கால்படி தண்ணீரில் பாகப்படிக் குடிநீர் செய்து 4-இல் 1 பாகமாகச் சுண்ட வைத்து வேளைக்கு 1/2 ஆழாக்கு வீதம் குடித்து வர, நீரிழிவினால் உண்டாகும் தாகம் தீரும்.

### 7. குமிழாதிக் குடிநீர்

நிலக்குமிழ் வேர்ப்பட்டை பலம் 1/2, மேல் தோல் சீவிய சுக்கு பலம் 1/4 பனைவெல்லம் பலம் 1 1/4. இவற்றைச் சிதைத்து 4 படி தண்ணீரில் போட்டு 4-இல் 1 பாகமாகச் சுண்டக் காய்ச்சி அருந்தி வர, மேக ரோகத்தில் ஏற்படும் சோபம், சுரம், மாந்தம் ஆகியன தீரும்.

### 8. திரிபலாதிக் குடிநீர்

திரிபலா (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றின் தோல்), ஆவாரம்பட்டை, கடலழிஞ்சில் பட்டை இவை வகைக்கு வராகனெடை 2.இவற்றைச் சிதைத்து 2 படி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாகக் காய்ச்சிக் குடித்துவரலாம். காலை மாலை 2 வேளையாக இருவாரம் குடித்துவர, நீரிழிவு நோய் தீரும்.

### 9. வேப்பன் பிசின் சூரணம்

வெகு நாள் சென்ற வேப்பமரத்தின் பிசினைக் காயவைத்து இடித்த தூள், வறுத்த சாமை, அரிசி மா. இவை இரண்டையும் சாமாகக் கலந்து வெருகடியளவு சூரணம் உட்கொள்ளலாம். காலை மாலை 2 வேளை 1 மண்டலம் உண்ண நீரிழிவு நோய் நீங்கும்.

### 10. வேலம் பூவாதிச் சூரணம்

உலர்ந்த கறுவேலம்பூ, வறுத்த உழுந்து, உலர்ந்த குன்றிமணி இலை. தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் சம எடை எடுத்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். பேயன் வாழைப்பழம், சீனிச் சர்க்கரை, பசுவெண்ணெய் இம்மூன்றும் சமமாகக் கலந்து, 1 வராகனெடை மேல் கண்ட சூரணத்தைக் குழைத்துச் சாப்பிட நீரிழிவு தீரும்.

## 11. கோவைத் தண்டு சூரணம்

கோவைத் தண்டைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கறுங்குறுவை நெல்லுடன் கலந்து ஒன்றாக வேக வைத்து, துண்டுகளைத் தனியே பொறுக்கி வெயிலில் நன்கு உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து, அதை வராகன் எடை அளவில் தேனில் அனுபானித்துச் சாப்பிடலாம்.

## 12. கொன்றையிலைச் சூரணம்

சரக்கொன்றையிலையை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு, வெருகடிப் பிரமாணம் தேனில் கலந்து சாப்பிடலாம். நீரிழிவு, கழிச்சல் முதலியன நீங்கும்.

## 13. பெருமரவித்துச் சூரணம்

பெருமரத்தின் கொட்டைகளை இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும். இச்சூரணம் வரகான் எடை அளவில் சிறுகீரைச் சாற்றில் கலந்து உண்ண நீரிழிவு நோய் நீங்கும்.

## 14. ஆவாரம் பூவாதிச் சூரணம்

ஆவாரம்பூவின் மத்தியில் இருக்கும் பூப்பிஞ்சுகளை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம் 10, நெல்லி வற்றல் சூரணம் பலம் 5, இலவங்கம், சாதிக்காய் இவற்றைத் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்குப் பலம் 1/4. இவற்றை ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆழாக்கு எருமை மோரில் மேற்படி சூரணத்தைக் கலந்து குடித்துவர நீரிழிவு நீங்கும்.

## 15. ஆவாரையாதி மருந்துகள்

- ❖ ஆவாரம்பட்டை, உலர்த்தின கொட்டிக்கிழங்கு, இவற்றைத் தனித்தனியே இடித்துச் செய்த சூரணம் பங்கு 2, வரகரிசி பங்கு 2, தினையரிசி, சம்பா பச்சரிசி, சம்பா புழுங்கலரிசி இவை வகை 1க்கு பங்கு1. இவை யாவற்றையும் தனித்தனியே மணம் வறும் வரையில் ஒன்றாய்ச் சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும். வெருகடிப் பிரமாணத்தில் காலை மாலை 2 வேளையாக, 10 நாட்கள் உட்கொள்ள நீரிழிவு தீரும்.

- ஆவாரம் விதையைப் புளித்த மோரில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அம்மியில் மைபோல் அரைத்து 1 1/2 ஆழாக்கு மோரில் கரைத்துக் . காலை மாலை 2 வேளையாக 8 நாள் அருந்தலாம். உப்பு, புளி பத்தியம்.
- ஆவாரம் செடியின் வேரைத் துண்டுகளாக நறுக்கி அம்மியில் வைத்து மைபோலரைத்த விழுது பலம் 1/2 அளவில் எடுத்து 1 ஆழாக்கு எருமைத் தயிரில் கலந்து குடித்து வரலாம். தினம் 1 வேளை காலையில் மாத்திரம் 6 நாட்கள் சாப்பிட நீரிழிவு நோய் நீங்கும் . உப்பு, புளி நீக்க வேண்டும்.
- பருத்தி விதைப் பருப்பு, பொன்னாவாரம் கொழுந்து இவை வகை 1க்குப் பலம் 1/2 இவற்றை மைபோல் அரைத்து ஆழாக்கு புளித்த மோரில் கலந்து தினம் காலையில் 1 வேளையாக, 8 நாட்கள் அருந்த நீரிழிவு நோய் நீங்கும்.
- ஆவாரம் கொழுந்து, நறுவிலிக் கொழுந்து, விடத்தேரின் கொழுந்து, கட்டுக் கொடிக் கொழுந்து, தேற்றான் சீவல், நீர்ச் சுண்டியிலை-இவை சம எடை எடுத்து அம்மியில் வைத்து மைபோலரைத்து எடுத்த விழுதில் 1 1/2 பலம் நிறுத்தெடுத்து, ஆழாக்கு எருமைத் தயிரில் கலந்து உண்ணவேண்டும். சமயோசிதம் போல் ஓரிரண்டு வேளையாகச் சாப்பிட்டு வர நோய் நீங்கும்.
- ஆவாரம் துளிர், சரக்கொன்றை வேர்ப்பட்டை, கல்மதம் இவை வகை ஒன்றுக்கு பலம் 1/4. இவற்றை அம்மியில் வைத்து அரைத்து ஆழாக்கு புளித்த மோரில் கலந்து சாப்பிட வேண்டும். இவ்விதம் தினம் 2 வேளை செய்து வர நீரிழிவு தீரும்.
- தேற்றான் சீவல், மஞ்சள், கடுக்காய்த் தோல், ஆவாரம்பட்டை, விளாம்பிசின். இவை வகைக்கு வராகன் எடை 1 1/4. இவற்றைப் பசுவின் மோர் வார்த்து மைபோலரைத்து ஆழாக்கு பசுமோரில் கலக்கிக் குடித்து வரலாம். நீரிழிவு நோய் நீங்கும்.
- பருத்திக் கொட்டை பலம் 5 எடுத்துத் தண்ணீரில் ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் நன்கு இடித்து அதில் ஒரு ஆழாக்கு பசுவின்பால் விட்டுப் பிசைந்து பிழிந்து வடிகட்டிப் பனை வெல்லமிட்டுக் கரைத்து, காலையில் 1 வேளையாகச் சாப்பிட்டுவர நீரிழிவு நோய் நீங்கும்.
- பாதிரி மரத்தினடிப் பட்டையை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம், கறுங்குறுவை அரிசிமா. இவை வகைக்குச் சம எடை

சேர்த்து நீர் வார்த்துப் பிசைந்து ரொட்டி செய்து சாப்பிட்டு வர, எவ்வித நீரிழிவு நோயும் நீங்கும்.

- ஆவாரையிலை படி 1க்குக் கறுங்குறுவை அரிசிமா படி 1/4. இவ்விரண்டையும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து உப்பில்லாமல் வடையாகச் செய்து நல்லெண்ணெயில் சுட்டு வைத்துக் கொண்டு சீரண சக்திக்கேற்றவாறு தினத்தோறும் சாப்பிட்டு வர, நீரிழிவு நோய் நீங்கும். அன்றாடம் புதிதாகச் செய்வதே நலம்.
- ஆவாரம் பூ பலம் 1, ஆவாரம் கொழுந்து பலம் 1. இவ்விரண்டையும் கல்லம்மியில் அரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும். 1 பாண்டத்தில் கால்படி மோரை விட்டுப் பானை வாய்க்கு வேடு கட்டி முன் சித்தப்படுத்தினதை வைத்து நன்றாய் வெந்தபின் இறக்கி, அப்பிட்டையும், பானையில் மோர் திரிந்திருக்கும் கற்கத்தைச் சம அளவாக எடுத்து இவ்விரண்டையும் அம்மியில் வைத்தரைத்து அதில் ஒருபலம் எடுத்து, அதற்குள் நாகச் செந்தூரம் பணவெடை வைத்துச் சாப்பிடவும். இவ்வாறு 2 வேளை 3 நாள் சாப்பிட நீரிழிவு நீங்கும்.
- ஆவாரம் கொழுந்தை, ஒரு மட்பாண்டத்தில் 1/4 படி எருமைத் தயிர் வார்த்து அதன் வாய்க்கு வேடுகட்டி அதன்மேல் வைத்து மேற்சட்டி மூடி பக்குவமாய் வெந்தபின் எடுத்து, அவித்த பாண்டத்தில் எஞ்சியிருக்கும் மோரில் பிசைந்து சாப்பிடலாம். இவ்விதம் காலை மாலை இருவேளை செய்துவர நீரிழிவு நோய் நீங்கும்.
- விடத்தேரையிலை, விழுதியிலை இவை வகை 1க்கு 1/2 பங்கு; எள்ளுப்பிண்ணாக்குத் தூள் 1 பங்கு. இவற்றையரைத்து ஒரு மட்பாண்டத்தில் மோர் விட்டு வேடுகட்டி அதன்மேல் வைத்து மேல் சட்டி மூடிப் பிட்டாகச் செய்து கொள்ளவும். இதனைத் தேக பலம், நோய் பலத்திற்குத் தக்க அளவில் சாப்பிட்டு வர நீரிழிவு நீங்கும்.
- தாமரை வளையம், தொடரியிலைக் கொழுந்து, ஆவாரம் விதை இவை சம எடை எடுத்து நிழலில் உலர்த்தி வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு மட்பாண்டத்தில் மோர் விட்டு வேடுகட்டி முன் சித்தப்படுத்தின சூரணத்தை மோர் தெளித்துப் பிசைந்து அதில் வைத்து மேற்சட்டி கொண்டு மூடி, பக்குவமாய்ப் பிட்டாய் செய்து சாப்பிடவும். காலை மாலை இரு வேளையாகச் சாப்பிட நீரிழிவு நோய் நீங்கும்.

**16. மேகாதிக் குளிகை**

உலர்த்தின இளந்தென்னம்பாளைப் பொடி, மஞ்சள், கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த் தோல் இவை வகைக்கு பலம் 8.

பருத்திக் கொட்டைப் பருப்பு, வெள்ளைக் குன்றிமணி பருப்பு, புளியங்கொட்டைத் தோல், தேற்றான் கொட்டை சீவல், கர்க்கடகசிங்கி வகைக்கு பலம் 2.

நிலப்பனைக் கிழங்கு, கறிமஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கொடிவேலி வேர்ப்பட்டை, கறுவேலம் பிசின், வெள்வேலம் பிசின், விளாம்பிசின், கருங்காலி பிசின்-வகைக்கு வராகன் எடை 6 1/4. வேப்பம் பிசின் வராகன் எடை 1/8.

இவை எல்லாவற்றையும் ஒன்றாக இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் பலம் 3 1/4

சுத்தி செய்த இரசம் பலம் 1

கிருஷ்ணா அப்பிரகச் செந்தூரம் பலம் 1 1/4

இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து, கறுத்து மை போலாகிற வரையில் அரைத்துப் பின்னர் மேற்படி அப்பிரகச் செந்தூரத்தைச் சேர்த்து அரைத்து முன் சித்தப்படுத்தின சூரணத்தையும் சிறுகச் சிறுகப் போட்டுச் சேர்த்தரைத்து நன்றாகக் கலந்த பின்னர் எடுத்து அம்மியில் வைத்து ஆவாரம் சாற்றால் 1 நாளும், மருதயிலைச் சாற்றால் 1 நாளும், இலந்தையிலைச் சாற்றால் 1 நாளும் அரைத்து இலந்தைக் காயளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

வேளை 1க்கு 1 குளிகையாக தேனில் குழைத்துச் சாப்பிடலாம். தினம் காலை மாலை 2 வேளையாக உண்டுவர நீரிழிவு தீரும்.

**17. ஏலாதி மாத்திரை**

ஏலம், சீந்தில் கிழங்கு, தாமரை வளையம், இலவங்கம், தண்ணீர் விட்டான் கிழங்கு, ஆவாரம் வேர்ப்பட்டை, ஆவிரைக் கொழுந்து, பூ, பிஞ்சு, விதை, எட்டி வேர்ப்பட்டை, தேற்றான் கொட்டை சீவல்-இவற்றைத் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த தூள் சம எடை- எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மோர்

விட்டு மை போலரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். பசுவின்பாலில் 1 மாத்திரையை இழைத்து அருந்தி வரலாம். தினம் காலை மாலை இரு வேளையாக அருந்தி வர நீரிழிவு நோய் நீங்கும்.

## 18. மகாலிங்க மாத்திரை

அயச் செந்தூரம், காரீயச் செந்தூரம் அல்லது பற்பம், வட்டத் துத்தி வேர்ச்சூரணம் -வகைக்குப் பலம் 4.

சுத்தி செய்த இலிங்கம், சுத்தி செய்த காந்தம் இவை வகைக்குப் பலம் 2.

வெள்ளிப் பற்பம், வசுவாசி இவை வகைக்குப் பலம்1.

ஊமத்தம் விதை, ஆவாரம் விதை, தேற்றான் கொட்டை சீவல், சதகுப்பை இவற்றைத் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்குப் பலம் 10. ஆவாரம் கொழுந்து 1 பிடி.

செய்முறை: தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து சித்தப்படுத்திக் கொள்ளவும். ஒரு பானையில் 2 படி நெல் போட்டு அதில் 4 படி நீர்விட்டுப் பானை வாய்க்கு வேடு கட்டி அதன்மேல் முன் சித்தப்டுத்தியதை வைத்து வேறு சட்டியினால் மூடி நீர் சுண்டும் வரை எரித்து ஆறினபின் எடுத்து, கல்வத்தில் வைத்து எருமைத் தயிர் வார்த்து மைபோல் 4 சாமம் அரைத்து, தேற்றான் விதைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

பயன்படுத்தும் முறை: ஆவாரம் விதைச் சூரணம் 3 விரல்கடை அளவு எடுத்து அதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்து, தேன் விட்டுக் குழைத்து உட்கொள்ள வேண்டும். தினம் காலை மாலை 2 வேளை உண்டு வர எல்லா வகை நீரிழிவு நோயும் நீங்கும்.

## 19. ஆவாரையாதி உருண்டை

ஆவாரை வேர்ப்பட்டைச் சூரணம் பலம் 2 1/2; ஆவாரையிலை, நெட்டியிலை, நீர்முள்ளியிலை, நெய்தல் கிழங்கிலை, பொன்முசுட்டையிலை- இவை வகைக்குப் பலம் 2 1/2. இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மைபோலரைத்து ஒரு வராகன் எடை அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

வேளை 1க்கு 1 மாத்திரையாக காலை மாலை 2 வேளையும் தக்க அனுபானங்களில் உட்கொள்ள நீரிழிவு நோய் தீரும்.

## 20. வெள்வங்கப் பற்பம்

சுத்தி செய்த வெள்வங்கத்தைப் புளியிலை கனத்தில் தகடாகச் செய்து சிறு துண்டுகளாகக் கத்தரித்து 2 1/2 பலம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பருத்திக் கொட்டையை மைபோலிடித்து 1 1/2 சாண் நீள அகலம் கொண்ட ஒரு கோணித் துணியில் 1 அங்குல கனம் பரப்பி அதன் மேல் முன் சொன்ன வங்கத் துண்டுகளைப் பரப்பி, திரியாகச் சுருட்டிக் கட்டி ஒரு முழ ஆழமும் ஒரு முழ அகலமும் உள்ள ஒரு குழி தோண்டி அதில் பாதியளவு வரை வறட்டிகளை அடுக்கி அதன் மேல் திரியை வைத்து அதற்கு மேல் குழி நிறையும்படி வறட்டிகள் அடுக்கிப் புடமிடவும். புடம் ஆறியபின் சாக்கிரதையுடன் பொரிந்திருப்பதை எடுத்துக் கல்வத்தில் போட்டுப் பொடித்து வஸ்திரகாயம் செய்து வைக்கவும். பொரியாமல் எஞ்சி நிற்பவைகளை முன்போலப் புடம் போடப் பொரிந்துபோம்.

அளவு: 1 குன்றி எடையளவு நீரிழிவு நோய்க் குடிநீர் ஒன்றில் அனுபானித்துக் கொடுக்க விரைவில் நோய் நீங்கும்.

## 21. இரசவங்கப் பற்பம்

சுத்தி செய்த வெள்வங்கம் பலம் 1, சுத்தி செய்த இரசம் பலம் 1.

இரசத்தை ஒரு சிறு கலயத்தில் விட்டு அதன் மேல் கொஞ்சம் விளக்கெண்ணெய் விட்டு அதன் மேல் வங்கத்தை உருக்கிச் சாய்த்து, ஆறியபின் துணியினால் துடைத்துச் சுத்தம் செய்து கொள்ளவும். எள்ளுப் பிண்ணாக்குத் தூள் பலம் 121/2, பூலாவிலை பலம் 121/2 இவ்விரண்டையும் சேர்த்து மைபோலரைத்து இரண்டு அடைகளாகத் தட்டி மேற்படி பில்லையை அல்லது தூளை அவற்றினுள் பொதிந்து 5 சீலைமண் செய்து முன்போல் முழப்புடம் போட்டு ஆறவிட்டு எடுக்கப் பற்பமாகும்.

விடத்தேரையிலைச் சூரணம் வராகன் எடை அளவுடன் மேல் கண்ட பற்பம் 2 குன்றி எடையைச் சேர்த்து உண்டு வர நீரிழிவு நோய் நீங்கும். 10 நாட்கள் இருவேளையாக உண்ணலாம். இச்சாபத்தியம் தேவை.

## 22. அப்பிரகச் செந்தூரம்

சட்டியைச் சிவக்கக் காயவைத்துத் தேவையான அப்பிரகத்தைப் போட்டு வறுத்துப் பசும் பாலில் போடவும். ஆறினபின் முன்போல் வறுத்து மறுபடியும் பாலில் போடவும். இவ்வாறு 5 தடவை செய்யவும்.

கோரைக் கிழங்கு 1 பங்குடன் தண்ணீர் 4 பங்கு சேர்த்துக் காய்ச்சி 1/2 பாகம் சுண்டியபின்னர் வடிகட்டிக் கொள்ளவும். இக் குடிநீரில் மேல் சொன்ன அப்பிரகத்தை 1 நாள் ஊறவைத்து எடுக்கவும்.

இவ்வாறு எடுத்த அப்பிரகத்துக்குச் சம எடை நெல் சேர்த்துக் கெட்டித் துணியில் மடித்து, காடித் தெளிவில் வைத்து இரண்டு கையினாலும் தேய்த்துக் கழுவினால் அப்பிரகம் எல்லாம் காடியில் இறங்கி நிற்கும். அதை வெயிலில் வைத்துத் தெளியத் தெளியக் காடியை வடித்து நீக்கி, அடியில் உள்ளதைக் காயவைத்து எடுத்துக் கொள்வதே அப்பிரக நவநீதமாகும்.

மேற்படி அப்பிரக நவநீதம் தேவையான அளவு கல்வத்திலிட்டு நீர்முள்ளி வேரும், ஆலங்கொழுந்தும் சமனாகச் சேர்த்து இடித்து எடுத்துச் சாற்றினை விட்டு 4 சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து மூடி 3 சீலைமண் செய்து கனத்தபுடம் போடவும். இவ்விதம் 7 புடம் அல்லது நன்கு சிவக்கும் வரை புடம் போட நல்ல செந்தூரமாகும்.

ஆவாரம் விதைச் சூரணத்தை எருமைத் தயிர் விட்டுக் குழைத்து எடுத்து விழுதில் கொட்டைப் பாக்களவு எடுத்து அதில் மேற்படி செந்தூரம் 2 குன்றிமணி அளவில் உட்கொள்ள நீரிழிவு நோய் நீங்கும்.

## 23. அப்பிரகச் செந்தூரப் பாவனை

அப்பிரகச் செந்தூரம், இரசப்பற்பம் இவை சம எடை எடுத்து ஒரு பீங்கானில் போட்டு அது மூழ்கும்படி நெல்லிக்காய்ச் சாறு விட்டு உலர வைக்கவும். இவ்விதம் 7 தடவைகள் செய்து கொள்வதே பாவனை என்பதாம்.

இப்பாவனைப் பற்பத்தை 2 குன்றிமணி அளவில் எடுத்து அதனுடன் பெருமர வித்தின் சூரணம் ஒரு வராகனெடை சேர்த்து, சிறுகீரைச் சாற்றில் குழைத்துண்ண எல்லா வகை நீரிழிவும் நீங்கும்.

## 24. காரீயச் செந்தூரம்

வட்டத் துத்தி ஆணிவேரைக் காய வைத்துக் கரணையாக நறுக்கியது படி 4, சுத்தி செய்த காரீயம் பலம் 2.

சட்டியை நெருப்பில் காயவைத்து சிவந்தபின்பு மேற்படி ஈயத்தைப் போட்டு உருக்கு முகத்தில் மேற்படி வேரை ஒவ்வொன்றாகக் கொடுத்துக் கிளறி வேர் எரிந்து சாம்பலானபின்னர் மறு துண்டைக் கொடுக்கவும். இவ்விதம் வேர் முழுதும்

கிரசம் கொடுத்து வறுக்க வட்டத் துத்திப்பூ நிறமாகும். அது சமயம் எடுத்துக் கல்வத்தில் வைத்து அரைத்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக் கொள்ளவும்.

சரக்கொன்றைப்பூச் சாற்றில் அல்லது வட்டத்துத்தி வேர்ச் சூரணத்தில் 1 முதல் 2 குன்றி எடை செந்தூரத்தை அனுபானித்து நாளுக்கு 2 வேளையாக உண்டு வரவும். நீரிழிவு நோய் நீங்கும்.

## 25. பஞ்ச சர்க்கரை

i. சீந்தில் தண்டை மேல்புறணி நீக்கி மரவுரலில் வெண்ணெய் போல் இடித்து, அதற்கு 5 பங்கு நீர் விட்டுக் கரைத்து வடிகட்டிப் புதுமண் பாத்திரத்தில் விட்டு வெயிலில் வைத்துத், தெளியத் தெளிய, தெளிவை இறுத்து நீக்கி அடியில் நிற்கும் வண்டலை வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்வதே சீந்தில் சர்க்கரையாம்.

ii. மேற்கண்ட விதத்தில் மரவள்ளிக் கிழங்கைச் செய்து எடுத்ததே வள்ளிச் சர்க்கரையாம்.

iii. மேற்கண்ட முறைப்படி நிலப்பனைக் கிழங்கையும் செய்து கொள்வதே நிலப்பனை சர்க்கரையாம்.

iv.. நிலக்குமிழ் வேரை நீர் வார்த்து அரைத்து 6 பங்கு நீரில் கரைத்து வடிகட்டிப் புது மண்பாத்திரத்தில் விட்டு அதில் கொஞ்சம் எலுமிச்சம்பழம் சாறு விட்டு வைக்க முத்துப்போல் நீர் தெளியும். அந்த நீரை மேலாக இறுத்து நீக்கி, அடியில் படிந்திருக்கும் வண்டலைக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் இறக்கி வெயிலில் வைத்துலர்த்தி எடுத்துக் கொள்வதே நிலக்குமிழ் சர்க்கரையாகும்.

v. கோவைத் தண்டை மேற்புறணி நீக்கி முன்சொன்னவாறே செய்தெடுப்பது கோவைச் சர்க்கரையாகும்.

இவ்வைந்து வகை சர்க்கரைகளையும் சம எடையில் கலந்து எடுத்துக் கொள்வதே பஞ்ச சர்க்கரையாகும். 2 முதல் 21/2 வராகன் எடையளவில் உண்ணலாம். இதனை மேகாதிக் குளிகை, வங்கச் செந்தூரம் போன்ற பெரிய மருந்துகளுக்கு அனுபானமாகவும் கொள்ள நீரிழிவு நோய் விரைவில் நீங்கும்.

# VII

"கண்ணுசாமியம் என்னும் வைத்திய சேகரம்" என்ற நூலில் கூறப்படும் சில நீரிழிவு நோய் சிகிச்சை முறைகள் வருமாறு:

### 1. மதுமேகக் குடிநீர்

ஆவாரைப்பஞ்சகம், கடலழிஞ்சில் பட்டை, மருதம்பட்டை, வெண்ணாவல் கொட்டை, அதன் பட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, பாதிரிவேர் இவைகள் வகைக்குப் பலம் 2; மரமஞ்சள், கல்நார் வகைக்குப் பலம் 1; குரோசாணி ஓமம் பலம் 1/4. இவற்றை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வேளைக்கு 3 வராகன் எடை, 1/4 படி நீரில் போட்டு 1/8 படியாகக் காய்ச்சிச் சிறிது சர்க்கரை போட்டு வேண்டுமாயின் கொஞ்சம் பசுவின்பால் விட்டுச் சாப்பிடலாம். இவ்வாறு தினம் இரு நேரம் 1 மண்டலம் சாப்பிட மதுமேகம், அதனால் உண்டாகும் கழலை, தாகம் முதலியன நீங்கும்.

### 2. நீரிழிவுச் சூரணம்

வெண்ணாவல் கொட்டையும் பொரித்த படிகாரமும் தனித்தனியே இடித்துச் சமன் எடையாக நன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு தினம் 2 வேளை 1 வராகன் எடையளவில் நீரில் கலந்து உட்கொள்ள, அதிக நீர் போதல் நிவர்த்தியாகும்.

### 3. இடியாவாரை இலேகியம்

நன்றாய்க் கழுவித் தேய்த்துப் பொட்டு போகப் புடைத்து இடித்தெடுத்த எள் படி ஒன்று, ஆவாரை வேர்ப்பட்டைச் சூரணம், வறுத்த கடலைமாவு வகைக்குப் படி 1/2; இவற்றுடன் 1 வீசை நாட்டுச் சர்க்கரையும், 1/4 படி நல்ல தேனையும் கூட்டிக் கொஞ்சமாய்ச் சேர்த்திடித்து இலேகிய பதமாய் செய்து கொள்ள வேண்டும். வேளைக்கு நெல்லிக்காயளவு அந்தி சந்தி இருவேளை உண்ண தாகம், அழலை அதிநீர் முதலிய குணங்களையுடைய மதுமேகம் தீரும். பெண்போகமும் இனிப்புப் பதார்த்தங்களும் ஆகாது.

### 4. கறுவங்கப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த கறுவங்கத்தை ஈசல் இறகுபோல் தகடு அடித்து, சிறு துண்டுகளாக நறுக்கிக் கல்வத்திலிட்டு, அதனுடன் 1/2 பலம் கடல்நுரையைச் சேர்த்துக் குழந்தைகளின் சிறுநீரால் 7 நாள் அரைத்து வில்லை செய்து வெயிலில் உலர்த்தி, அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை செய்து காயவைத்து 30

எருவில் புடமிடவும். புடம் குளிர்ந்த பின் வில்லையை மீண்டும் முன்போல் சிறுநீரில் அரைத்து 7 புடமிட மேகவர்ணத்தை ஒத்த பற்பமாகும்.

இதனில் தினம் 2 வேளை குன்றியளவு 7 நாள் சாப்பிடவும். தேவையாயின் 15 நாட்கள் இடைவெளிவிட்டு மீண்டும் ஒரு முறை 7 நாள் சாப்பிடவும்.

இதனால் மதுமேகம், கருமேகம், வெள்ளை முதலியன குணமாகும். புளி நீக்கி, இச்சாபத்தியம் அனுசரிக்க வேண்டும்.

## 5. அப்பிரக லவணம்

10 பலம் கிருஷ்ணா அப்பிரகத்தைப் பழுக்கக் காய்ச்சி, 10 முறை பசுவின் பாலில் தோய்த்து அகண்ட சட்டியில் போட்டுப் பனங்கள் சிறிது சிறிதாக விட்டு 8 சாமம் சுருக்குக் கொடுத்து வறுக்கவும். சமனெடை வெடியுப்பு சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பனங்கள் விட்டு 4 சாமம் அரைத்து, இவை கொள்ளும்படியான ஒரு அடிகனத்த குடைவான இரும்புச் சட்டியில் போட்டு வாய்க்குப் பொருத்தமான இரும்புத் தகட்டால் மூடிச் சீலை செய்து 300 வறட்டியில் புடமிடவும்.

நன்கு ஆறியபின் மருந்தைச் சேதப் படாமல் எடுத்து மீண்டும் சம எடை வெடியுப்பு கூட்டி முன்போலரைத்து இரும்புச் சட்டியிலிட்டுச் சீலை செய்து 3 புடமிடவும். அப்பிரகத்தின் தளுக்கு மாறிவிடும். அங்ஙனம் ஆகாவிடின் வெடியுப்பு சேர்க்காமல் பனங்கள்ளினால் மருந்தை மீண்டும் அரைத்து முன்போல் இரண்டொரு புடம்போட்டுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பெற்ற பற்பத்துடன், நான்கு எடை பாலில் கரைத்துக் காய்ச்சி எடுத்த சோற்றுப்பைச் சேர்த்து அரைத்து ஆப்பச் சட்டியைப் போன்ற ஒன்றில் செலுத்தி பொருத்தமான மேல் மூடி ஒன்றால் மூடிச் சீலை செய்து காய வைத்து இரண்டு சாமம் எரித்துப் பின் அடிச்சட்டி மேலாகவும் மேல் சட்டி கீழாகவும் திருப்பி வைத்து 2 சாமம் எரித்து ஆறவிட்டு மருந்தை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

வேண்டும்பொழுது 5 பலம் மருந்துக்குச் சம எடை வெள்ளைக் குங்கிலியம் சேர்த்தரைத்து முன்போல் சட்டியில் போட்டு மேல் சட்டி மூடிச் சீலை செய்து காய்ந்த பின் 3 சாமம் சிறு தீயில் எரித்துப் பின்னர் அப்படியே 30 வறட்டியில் புடமிடவும்.

பற்பம் எத்தகைய நிறமாக இருந்தாலும் நல்ல குணம் கொடுக்கும். வேளைக்குப் பணவெடை பற்பத்தைப் புளித்த மோரில் போட்டுக் கலக்கி, தினம் 2 வேளை கொள்ள நீரிழிவு, தாகம், அழலை, பலக் குறைவு முதலிய குணங்களையுடைய மதுமேகம் நிவர்த்தியாகும். நீரைச் சோதனை செய்து பார்க்க இனிப்பு நீங்கி உப்பும் ஏற்படும்.

### 6. அப்பிரகப் பற்பம்

இரண்டு பலம் வெள்ளை அப்பிரகத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு குடுவையில் போட்டு சுண்ணாம்பும் சிறுநீரும் விட்டு அதனில் 3 நாள் ஊறப்போட்டு எடுக்கவும். பின்னர் சுத்த நீர் விட்டு அதனில் 3 நாள் ஊறப்போட்டு எடுக்கவும்.

பின்னர் சுத்த நீர்விட்டு அலம்பி, 5 பலம் எண்ணெய் வெங்காரத்தைப் பொடி செய்து ஒரு குடுவையில் படிப்படியாக வெங்காரப் பொடியையும் அப்பிரகத்தையும் போட்டமுத்தி உள் இடைவெளி இருக்க மூடிச் சீலை செய்து காயவைத்து 200 வறட்டியில் புடமிடவும். புடம் ஆறினபின் குடுவையிலிட்ட அப்பிரகமானது கறுப்பாக உருகி நிற்கும். இதனைப் பழச்சாறு விட்டு 3 நாளறைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலடுக்கிச் சீலை செய்து 40 வறட்டியில் புடமிடவும். இவ்வாறு 3 புடமிட வெள்ளைநிறப் பற்பமாகும். இதனில் பணவெடை எடுத்து நெய், வெண்ணெய் இவற்றில் தினம் 2 வேளை கொடுக்க மதுமேகம், வெகு முத்திரம் ஆகியவை குணமாகும்.

### 7. மேக சிந்தாமணி செந்தூரம்

காந்தம், பவழம், தங்கம், கெந்தி இவை வகைக்குக் கழஞ்சு 2; அப்பிரகச் செந்தூரம், சூதம் வகைக்குக் கழஞ்சு 5. இவைகளுள் முதலில் கல்வத்தில் சூதத்துடன் தங்கரேக்கினை இட்டு நன்றாய் அரைத்து நன்கு கலந்தபின் கெந்தியைச் சேர்த்து அரைக்கக் கறுப்பாக இருக்கும்.

பின்னர் மற்றவற்றை ஒன்றன்பின் ஒன்றாய்ச் சேர்த்துக் குமரிச்சாறு விட்டு 4 சாமம் அரைத்துக் கல்வத்தோடே காயவைத்துச் சேதமின்றிச் சுரண்டி குப்பியிலிட்டு வாயை பலப்பக்கல்லால் அடைத்துச் சீலை செய்துலர்த்தவும். ஒரு மட்கடத்தில் இரண்டு மூன்று விரல் அளவுக்கு மணல் கொட்டி அதன்மீது மருந்து அடைக்கப்பட்ட குப்பியை வைத்துக் கழுத்தளவு மணல் நிரப்பி அடுப்பின் மீது ஏற்றி 4 சாமம் முத்தீயாக எரிக்கவும். பின்னர் ஆறவிட்டுக் குப்பியை உடைத்து உள்ளிருக்கும் மருந்தைச் சேதமில்லாமல் எடுத்துக் கல்வத்திலிட்டு மீண்டும் குமரிச் சாற்றால் 4 சாமம் நன்றாக அரைத்து வில்லை செய்து, காயவைத்து அகலில் அடுக்கி மேல் அகல் மூடிச் சீலை செய்து 10,12 எருவில் புடமிடவும். தங்கச் சாயல் இருப்பின் மீண்டும் இரண்டொரு புடமிடவும்.

இதனில் குன்றியளவு எடுத்து தினம் 2 வேளை நெய், வெண்ணெய் ஆகிய அனுபானங்களில் 10, 20 நாள் கொள்ள நீரிலுள்ள இனிப்பு, தேக அழலை, வெகு மூத்திரம், சக்தி குறைதல் முதலியன குணமாகும். போகம் கூடாது. நல்ல ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

### 8. அப்பிரகச் செந்தூரம்

ஒரு படி பனங்கள்ளில் ஒரு சேர் கிருஷ்ணா அப்பிரகத்தை 5 நாள் ஊறப்போட்டு எடுத்துக் கன்னான் உலையில் நன்றாய் பழுக்கக் காய்ச்சி, புளித்த தயிரில் 3 நாள் ஊறப்போட்டுக் கழுவி எடுத்துக் கம்பளத்திலாவது, கோணியிலாவது முடிச்சு கட்டித் தயிர் விட்டுப் பிசைந்து அழுத்தித் தேய்க்க வழுவழுப்பாக உள்முடிந்த அப்பிரகம் வெளிப்பட்டுவிடும். இதனைச் சேதமாகாமல் குடைவான சட்டியில் போட்டுத் தயிரின் தெளிவு நீர் விட்டுக் கலக்கி ஒரு நாள் முழுவதும் அசையாமல் வைத்திருக்க, அப்பிரகத் தூள் எல்லாம் கீழிறங்கி நீர் தெளிந்து நிற்கும்.

இந்த நீரை அசையாமல் சாய்த்து, வெயிலில் வைக்க வெண்ணெய் போலிருக்கும். இதனையே அப்பிரக நவநீதம் என்பர்.

இதனை வெங்காயச்சாறு விட்டு 3 சாமம் நன்றாக அரைத்துச் சிறு வில்லைகளாகத் தட்டி வெயிலில் காயவைத்து, அகலில் பரப்பி மேலகல் மூடி மண்சீலை செய்து காய்ந்தபின்னர் 50 எருவில் புடமிடவும்.

மீண்டும் இதனைக் குமரிச்சாறு, ஆலம் விழுதுச்சாறு, பழச்சாறு, பொற்றலைக் கையான் சாறு முதலியவைகளால ஒவ்வொரு புடம் போட, தளுக்கில்லாமல் செந்தூரமாகும்.

ஒருவேளை தளுக்கு இருந்தால் மீண்டும் பொற்றலைக் கையான் சாற்றால் இரண்டொரு புடம் அதிகமாகப் போட்டுக் கொள்ள வேண்டியது அவசியம்.

இதனில் குன்றியளவு எடுத்து தினம் 2 வேளை தேக சுபாவத்திற்கு ஏற்றவாறு தக்க அனுபானங்களில் கொடுக்க அதிநீர், பலவீனம், தாகம் முதலியன 10 நாளில் தீரும். பெண்போகம், மது, லாகிரிப் பொருட்கள், இனிப்புப் பொருட்களை நீக்கவும். இச் செந்தூரத்தை மேகசிந்தாமணி செந்தூரத்தில் சேர்த்துச் செய்தால் மிகுந்த நன்மையைக் கொடுக்கும்.

### 9. அப்பிரகச் செந்தூரம் (வேறு முறை)

கிருஷ்ணா அப்பிரகத்தைத் தேவையான அளவில் கொண்டுவந்து சிறு துண்டுகளாக நறுக்கிக் குறட்டினால் பிடித்துக் கொண்டு கன்னான் உலையில் நன்றாகக் காய்ச்சிப் பசுவின்பாலில் தோய்க்கவும்.

இங்ஙனம் எல்லாத் துண்டுகளையும் 2,3 முறை காய்ச்சித் தோய்த்து உலர்த்திக் கல்லுரலில் போட்டுக் கடப்பாரையால் இடித்துத் துகள் செய்து அதில் 5 பலமும், பொடி செய்த நவாச்சாரம் 5 பலமும் ஒரு குடுவையில் படிப்படியாகக் கலந்து போட்டு வாய்க்கு ஓடு மூடிச் சீலை செய்து 80 வறட்டியில் புடமிடவும். இதில் அப்பிரகமானது தங்கத்தின் சாயலாக, பதங்கம் போன்ற இலேசான பொருளாகவும் தோன்றும். நீர் விட்டு அலம்பி சாரத்தின் சத்து யாவும் விலகும்படி செய்து, பின் கல்வத்திலிட்டுச் சிறு தும்பையிலைச் சாற்றில் 4 சாமம் அரைத்து, சிறிய வில்லைகள் செய்து அகலில் பரப்பிக் காய்ந்தபின் மேலகல் மூடிச் சீலை செய்து 150 வறட்டியில் புடமிடவும். இப்படிப் பத்து புடமிடச் சிவப்பாகும்.

இவ்வாறே சிவப்பு நாயுருவி இலைச் சாற்றில் 10 புடமும், செவ்வகத்திப்பூச் சாற்றில் 10 புடமும் இட்டெடுக்க நல்ல செந்தூரமாகும்.

இதில் குன்றி எடையாக வாத தேகிக்குப் பசுநெய்யிலும், பித்த தேகிக்குத் தேனிலும் காலை மாலை 2 வேளை 16 நாள் கொடுக்கவும்.

மறுபடியும் 10 நாட்கள் மருந்தில்லாமல் விடுத்து மீண்டும் 16 நாட்கள் கொடுக்கலாம்.

இதனால் மதுமேகம், கண்டமாலை முதலியன நீங்கும். புளி, பால், சர்க்கரை, அரிசி மாவுப் பண்டங்கள் கூடாது. பிஞ்சு காய்கறிகள் சேர்க்கலாம்.

### 10. அயச் செந்தூரம்

புதிதாக இராவிய அயப்பொடி, சீந்தில் கொடி, கடுக்காய், தான்றிக்காய் இவற்றின் சூரணம் ஒவ்வொன்றும் ஒரு சேர் வீதம் ஒரு மட்கடத்தில் போட்டு ஒருபடி நாவல்பழச் சாறும் ஒரு படி நாவல்பட்டைச் சாறும் அல்லது அதன் கியாழம் விட்டுக் கலக்கி 2 மாதம் அசையாமல் நிழலில் வைக்க, அயப்பொடியானது உடன் சேர்க்கப்பட்டுள்ள துவர்ப்பான திரவத்துடன் உறவாடிக் கரைந்து பக்குவப்படும். பின்னர் ஈரம் வறள வெயிலில் உலர்த்தி ஒரு இரும்புச் சட்டியிலிட்டுச் செந்நிறமாகும் பொருட்டு வறுக்கவும். வறுக்கும் பதமானது அயப்பொடியுடன் சேர்க்கப்பட்டுள்ள சரக்குகள் எல்லாம் சாம்பலாகிக் காற்றுடன் சம்பந்தப்பட்டு வெளியாகவும், அயம் மாத்திரம் நின்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இத்தருணத்தில் மீண்டும் அதிகத் தீயிட்டு அயம் சிவந்திருக்கும் செவ்வி நோக்கி ஒரு சேர் ஆவின் நெய்யை விடப் பற்றி எரிந்து தானே தணியும்போது அயமானது மாதுளம்பூ நிறத்திற்கு ஒப்பாக சிவந்திருக்கும். அதனை ஆறவிட்டுப் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

இதனை வேளைக்குப் பணவெடை வீதம் நெய், தேன் முதலியவைகளில் கொடுக்க மதுமேகம், காமாலை, பாண்டு, பெரும்பாடு முதலிய பல பிணிகள் நிவர்த்தி ஆவதுடன் தேகம் வலுக்கும். ஆயுள் விருத்தி உண்டாகும். புளி தள்ளி இச்சாபத்தியம் கொள்ளவும்.

# VIII

கண்ணுசாமியின் "வைத்திய சிந்தாமணி" என்னும் நூலில் காணும் சில சிகிச்சை முறைகள் வருமாறு:

### 1. அப்பிரகச் செந்தூரம்

ஆவின் நீரும் வெள்ளாட்டு நீரும் ஒன்றாகக் கலந்து வாயகன்ற பாண்டத்திலிட்டு, அதில் கிருஷ்ணா அப்பிரகத்தைப் பழுக்கக் காய்ச்சித் தோய்த்து, பின்னர் கல்லுரலில் போட்டுக் கடப்பாறையால் இடித்து, நெல்லுடன் கலந்து அவித்த ஒரு முரட்டுத் துணியில் தளர்ச்சியாக முடிச்சு கட்டிக் காடி விட்டுப் பிசைந்து மறுநாள் தெளிவை இறுத்துப் பார்க்க அடியில் அப்பிரகம் உறைந்திருக்கும்.

இந்நவநீதத்தைக் கல்வத்திலிட்டு, இலை நடுவே சிவப்புக் கோடு விழுந்திருக்கும் நறுந்தாளிக் கீரையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு அரைக்கவும். இப்படி இரண்டு சாமம் அரைத்து இலேசான வில்லையாகத் தட்டி உலர்த்தி ஓட்டில் பரப்பி மேலோடு மூடிச் சீலைமண் செய்து கஜபுடம் இடவும். இம்மாதிரி பத்துப் புடங்கள் இடவேண்டும். ஒவ்வொரு முறையும் தளிரைச் சேர்த்து 2 சாமம் அரைக்க வேண்டும். அதன் பிறகு மாம்பட்டை, நாவல்பட்டை, ஓதியம்பட்டை இவை ஒவ்வொன்றின் சாற்றாலாயினும் கியாழத்தாலேனும் தனித்தனியே 4 சாமங்கள் வீதம் அரைத்து வில்லைகள் தட்டி முன் போலப் புடமிட்டு எடுக்க உயர்தரமான செந்தூரமாகும்.

வேளைக்குக் குன்றியெடை காலை மாலை நெய்யில் கொடுத்துவர மேகத்தாலான நீரிழிவுநோய் நீங்கும். மேலும் மதுமேகத்தால் உண்டாகும் மேகக்கட்டிகள் போன்ற துன்பங்களையும் குணப்படுத்தும். நீரிலுள்ள இனிப்பு வெகு சீக்கிரம் மாறிவிடும்.

இச் செந்தூரத்தைக் கொடுக்கும்போது நீரில் இனிப்பு அதிகமாக இருப்பின் நாவற்கொட்டை மாத்திரையையும், சிறுநீரின் அளவு மிஞ்சியிருப்பின் ஆவாரைக் குடிநீரையும் கொடுத்தல் நன்று.

### 2. நாவற்கொட்டை மாத்திரை

வேண்டிய அளவு நாவற்கொட்டையை எடுத்து இடித்துச் சூரணம் செய்து கல்வத்திலிட்டு, ஆடுதீண்டாப்பாளை இலைச் சாறு விட்டு 10 நாட்கள் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு, வேளைக்கு 2 அல்லது 3 மாத்திரை வீதம் காலை மாலை சாப்பிட்டு வர, 15 நாளில் நீரிழிவு நோய் குணமாகும். அதே சமயம் தங்கச் செந்தூரம் அல்லது மேல் சொல்லப்பட்ட அப்பிரகச் செந்தூரத்தைக் காலை மாலை சாப்பிடுவது நல்லது. இதன் மூலம் நீரிலுள்ள இனிப்பைக் குறைத்து, மேகக் கட்டிகள் வராமல் தடுக்கலாம்.

### 3. ஆவாரைக் குடிநீர்

நாவற்கொட்டை, மருதம்பட்டை, கோரைக் கிழங்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கட்டுக்கொடி, போஸ்தக்காய்த் தோல், கடலழிஞ்சில் பட்டை, ஆவாரைப்பூ, ஆவாரைப்பட்டை, ஆவாரைவேர்ப் பட்டை.

மேற்கண்ட 12 சரக்குகளும் வகைக்கு 1 பலம் எடுத்து இடித்துச் சூரணித்து வைத்துக் கொண்டு, வேண்டும் போது 1 தோலா சூரணத்தைக் கால்படி நீரில் போட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு வடித்துச் சாப்பிடவும்.

இவ்வாறு தினம் 2 வேளையாக 10 நாட்கள் சாப்பிடவும். இதனால் மதுமேகம், அதனால் உண்டாகும் தாகம், நீர்ப்போக்கு, அழலை ஆகியவை நீங்கும். மேல் சொன்ன அப்பிரகச் செந்தூரத்துக்கு இக் குடிநீரைத் துணை மருந்தாகக் கொண்டால் மிகவும் நல்ல பலன் உண்டாகும்.

### 4. தங்கச் செந்தூரம்

ஒரு வராகன் எடை தங்கரேக்கைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்துக் கல்வத்திலிட்டு அதனுடன் 4,5 வராகன் எடை சுத்தி செய்த இரசத்தை விட்டு அரைக்கவும். தங்கமும் சூதமும் உறவான பின்னர் திருநீற்றுப் பச்சை என்னும் சப்ஜா இலையில் 10,12 போட்டு அரைக்க மெழுகாகும்.

பின்னர் வெள்ளைக் காக்கட்டான் வேர்ப்பட்டையும் இலையும் கூட்டி இடித்துப்பிழிந்த சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மேல் மூடியிட்டுச் சீலைமண் செய்து உலர்ந்தபின், 20 வறட்டியில் புடமிடவும்.

மீண்டும் அம்மருந்தைக் கல்வத்திலிட்டு வேறொன்றும் சேர்க்காமல் முன் கூறிய மூலிகைச் சாற்றால் 2 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து, ஒட்டிலடுக்கிச் சீலைமண் செய்து உலர்த்தி, 20 வறட்டியில் புடமிடவம். இப்படி 4,5 புடங்களில் போட்டெடுக்க நல்ல செந்தூரமாகும்.

தங்கச் சாயல் நீங்கும் வரை புடம் போடவேண்டும். 4,5 புடங்களில் தங்கச்சாயல் நீங்கி செந்தூரம் முடிந்திருக்கும். மருந்தின் எடையும் சற்றுக் கூடுதலாக இருக்கும்.

வேளைக்கு 1 முதல் 2 அரிசி எடை காலை மாலை நெய், தேன் இவற்றில் கொடுக்க மதுமேகம் குணமாவதுடன் வெகு நாள் நோயினால் உண்டான தேகபலகீனமும் நீங்கும்.

# IX

கண்ணுசாமியின் "சிகிச்சா இரத்தின தீபம்" நூலில் கூறிய முறைகள் வருமாறு.

### 1. *இலிங்க மாத்திரை*

இலிங்கம், நாபி இவை வகைக்குப் பலம் 1. சிவனார் வேம்பு பலம் 5. நல்லெண்ணெய் பலம் 5.

செய்முறை: நாபியை மட்டும் சுத்த நீர் விட்டு நெகிழ அரைத்து இலிங்கத்திற்குக் கவசமிட்டுப் பிறகு சிவனார் வேம்பு வேரைச் சுத்தநீர் விட்டு முன்போலவே அரைத்து மற்றொரு முறை கவசமிட்டு இரண்டுமணி நேரம் கடுவெயிலில் உலர்த்தி அதன்மேல் பட்டுத் துணியால் சுற்றி வைத்துக் கொள்க. ஒரு இரும்புக் கரண்டியில் நல்லெண்ணெய் விட்டு நெருப்பின் மேல் வைத்துச் சூடேற்றிய பின் சித்தப்படுத்திய இலிங்க உருண்டையை அதில் போட்டு எண்ணெய் எல்லாம் சுண்டச் சுண்ட புரட்டிக் கொண்டு வருக. மேல்கவசம் கருகின பதத்தில் உள்ளிருக்கும் இலிங்கத்தை வெளிப்படுத்திக் கல்வத்திலிட்டு அரிசி வெந்த கொதிநீர் விட்டு 1 சாமம் அரைத்து மெழுகுபதம் வரும்போது, மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

ஆவாரம் இலைச் சாறு அல்லது ஆவாரங் கொழுந்து அரைத்த விழுதுடன் சமன் பசுவெண்ணெயைப் புங்கங்காய் அளவு சேர்த்து வேளைகு ஒரு மாத்திரை

வீதம் தினம் காலை மாலை 7 முதல் 10 நாட்கள் சாப்பிட்டு வர வெகு மூத்திரம், மதுமேகம் முதலியன நீங்கும்.

இம்மாத்திரையை மதுமேக இலேகியத்துடன் உண்ண மிக்க நன்மை பயக்கும்.

## 2. மதுமேக இலேகியம்

இதனை எள்ளுப்பிண்ணாக்கு இலேகியம் என்றும் கூறுவர்.

எள்ளுப்பிண்ணாக்கு பலம் 1/2, ஆவாரம் பட்டை பலம் 1/2, பருத்தி விதைப் பருப்பு 4 தோலா, மாசிக்காய் 1 தோலா, சிறு நாகப்பூ 1 தோலா, பறங்கிப்பட்டை 2 தோலா, பசுவின்பால் சேர் 1/2, நல்லெண்ணெய் 6 தோலா, பழைய வெல்லம் 7 1/2 பலம்.

செய்முறை: மேற்கூறப்பட்ட சரக்குகளைச் சூரணித்துப் போதிய அளவு பால் விட்டரைத்து வைத்துக் கொள்க. பால் மிகுந்திருப்பின் அத்துடன் சிறிது நீர் கலந்து வெல்லத்தை அதில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிப் பாகுபதத்தில், முன் அரைத்து வைத்திருக்கும் மருந்தைப் போட்டு நன்றாகக் கிளறி இலேகிய பதத்தில் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்துக.

வேளைக்கு 1/2 தோலா வீதம் காலை மாலை சாப்பிட்டு வர வெகு மூத்திரம், மதுமேகம் ஆகியன நீங்கும். இலிங்க மாத்திரைக்கு இதனை அனுபானமாகக் கொள்ளலாம்.

# X

"சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள சில முறைகள் வருமாறு:

## 1. கடலழிஞ்சல் சத்து

10 பலம் கலழிஞ்சில் பட்டையை நன்றாய் இடித்து ஒரு வாயகன்ற மட்பாத்திரத்தில் போட்டு, 2 படி நீர் விட்டு 1/4 படியாக வற்றக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, மீண்டும் பாண்டத்தில் விட்டுக் குழம்பு பதமாகக் காய்ச்சிப் பீங்கான் தட்டுகளில் விட்டு வெயிலில் வைத்துலர்த்தி, இடித்துச் சூரணமாகச் செய்து வைத்துக் கொள்ளவும். இதுவே கடலழிஞ்சில் சத்து ஆகும்.

இதனை 5 முதல் 10 குன்றி எடை தினம் 2 வேளை சர்க்கரையுடன் கலந்தாவது அல்லது இனிப்புள்ள சர்ப்பத்துக்களில் கலந்தாவது கொடுக்க நீரிழிவு, மதுமேகம் குணமாகும்.

## 2. கடலழிஞ்சில் பட்டை இலேகியம்

1 வீசை கடலழிஞ்சில் பட்டையைப் பஞ்சு போல் இடித்து ஒரு பாண்டத்திலிட்டு 8 படி நீர் விட்டு 1 படியாக வற்றக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

1 படி பருத்திக் கொட்டையை ஒரு நாள் தண்ணீரில் ஊறவைது மறுநாள் உரலில் இடித்து, அப்பால் ஆட்டுக்கல் உரலில் போட்டு நீர் தெளித்துக் குளவியைக் கொண்டு ஆட்டி வழித்தெடுத்துச் சீலையில் வைத்துப் பிழிந்து பால் வாங்கவும். மீண்டும் திப்பியை உரலில் ஆட்டி முன்போல் பால் வாங்கவும். இப்படி 1 படி பால் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பின் உலர்ந்த வன்னியிலை, அத்திப் பிஞ்சு, ஆவாரம்பட்டை, கசகசா, சுக்கு, வேப்பம் பட்டை, கிராம்பு, ஓமம், கொத்துமல்லி, சாதிக்காய், சிறுநாகப்பூ, ஏலம், சடாமாஞ்சில், திரிபலை, மரமஞ்சள்-வகைக்குப் பலம் ஒன்றாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும்.

பின் கடலழிஞ்சில் பட்டைக் கியாழத்தையும் பருத்திக் கொட்டைப் பாலையும் ஒரு பாத்திரத்திலிட்டு, 2 வீசை வெள்ளைச் சர்க்கரையைப் போட்டுக் கரைத்து அடுப்பிலேற்றிப் பாகுபதம் வரும் சமயம் முன் சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிளறி கீழ் இறக்கிப் போதிய அளவு நெய், தேன் விட்டுக் கிளறி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இலேகியத்தை அந்தி சந்தி கழற்சிக்காய் அளவு கொடுத்துவர மதுமேகம், நீரிழிவு முதலான நோய்கள் நீங்கும்.

## 3. கடல் தேங்காய்க் குடிநீர்

கடல் தேங்காயைச் சிதைத்து முறைப்படி குடிநீர் செய்து வேளைக்கு 1 முதல் 2 அவுன்சு வீதம் தினம் 3 வேளை கொடுத்து வர, நீரிலுள்ள இனிப்பு நீங்கும். வெகு மூத்திரம் குறையும்.

### 4. கர்ச்சூரக்காய்

இந்தக் காயைத் தினம் 2 வேளை, 2 அல்லது 3 தின்ற பின் பசுவின்பாலை அருந்திவரக் கபத்தை அறுக்கும், பசியை உண்டாக்கும், மதுநீரைப் போக்கும். தாது விருத்தி உண்டாகும்.

### 5. கிரந்தித் தகரம்

இதன் வேர்ப்பட்டையைக் கியாழமிட்டாவது அல்லது இதன் விதையைச் சூரணம் செய்து தக்க அளவில் தேனிலாவது நெய்யிலாவது கொடுக்க மதுமேகம் போகும்.

### 6. சரக்கொன்றைப்பூக் குடிநீர்

சரக்கொன்றைப்பூ 1/2 தோலா எடையை ஒரு மட்கலயத்தில் போட்டு 1/4 படி நீர் விட்டு 1/8 படியாக சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்க மதுமேகம் நீங்கும். குடலில் உள்ள கிருமிகள் சாகும்.

### 7. சீந்தில் கொடிக் குடிநீர்

சீந்தில் கொடி 1/2 பலம், நெற்பொரி 1/2 பலம். இவற்றை ஒரு கலயத்தில் போட்டு 1/2 படி நீர் விட்டு வீசம்படியாக சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 முதல் 11/2 அவுன்சு வீதம் தினம் 3 வேளை கொடுக்க மேகநீர், தாகம் நீங்கும்.

### 8. அமிர்தாதி இலேகியம்

சீந்தில் சர்க்கரை, பூமிச் சர்க்கரைக் கிழங்கு வகைக்கு பலம் 2 1/2; பறங்கிச்சக்கை பலம் 3; சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், சிற்றரத்தை, சிறுநாகப்பூ, மகரப்பூ, கடலிராஞ்சிப்பட்டை, கிராம்பு, கோஷ்டம், ஏலம், சிறு தேக்கு, அதிமதுரம், சந்தனத்தூள், சீரகம், சடாமாஞ்சில் வகைக்குப் பலம் 1/2; குங்குமப்பூ, கோரோசனை வகைக்குப் பலம் 1/4 ஆக இவற்றைக் கல்லுரலிலிட்டுக் கடப்பாரையால் நன்கு இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பெரிய பாண்டத்தில் ஆவாரம் விதை, ஆவாரம் வேர் வகைக்குப் பலம் 5 வீதம் இடித்துப் போட்டு 10 படி செவ்விளநீர் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து 1/8 பாகமாக வற்றக்காய்ச்சிக் கீழே இறக்கி வடிகட்டி அதில் ஒரு வீசை வெள்ளைச் சர்க்கரை போட்டுக் கரைத்து மற்றொரு பாண்டத்திலிட்டு மீண்டும் அடுப்பேற்றி எரிக்கவும். நல்ல பாகுபதம் வரும் சமயம் முன் சூரணங்களைக்

கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிளறி கீழே இறக்கி ஆறவிட்டுப் போதிய அளவு நெய்யும் தேனும் விட்டுப் பிசைந்து ஜாடியில் வைக்கவும். வேளைக்குக் கொட்டைப் பாக்களவு தினம் காலை மாலை 2 வேளை 1/2 முதல் 1 மண்டலம் சாப்பிட்டுவர மதுமேகம், அதிமூத்திரம், அதிதாகம், மேக காங்கை முதலியன நீங்கும்.

### 9. பொடுதலைக் குடிநீர்

பொடுதலைத் துளிரைக் காம்பும் இலையுமாகப் பறித்து 1 பலம் எடைக்கு 1/4 படி நீர் விட்டு, சிறு தீயாக எரித்து வீசம்படியாக வற்றவைத்து வடித்து வேளைக்கு 1 அவுன்சு அளவாக காலை மாலை கொடுத்துவர, நீரில் இனிப்பு உள்ளவர்களுக்கு நீரைக் குறைத்து இனிப்பை மாற்றும்.

### 10. பெருங்குமிழ் மர வேர் அரைப்பு

பெருங்குமிழ் வேரை அரைத்துச் சுண்டைக் காயளவு பசும்பாலில் உட்கொள்ள மதுமேக எரிச்சல் நீங்கும்.

# XI

"பதார்த்த குண விளக்கம் (தாதுவர்க்கம்)" என்னும் நூலில் கூறப்படும் சில முறைகள் வருமாறு:

### 1. அப்பிரகப் பற்பம்

ஐந்து பலம் அப்பிரக நவநீதத்தை ஒரு கல்வத்திலிட்டுக் குமிழம்பட்டைச் சாற்றினால் 4 சாமம் அரைத்துக் காலணா அளவுள்ள வில்லைகளாகத் தட்டி உலர்த்தி அகலில் அடுக்கிச் சீலை மண் செய்து உலர்த்திக் கஜபுடமிடவும். ஆறவிட்டு எடுத்துப் பின்னர் முன்போல் ஆலம்பாலில் அரைத்து 2 புடமும் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து ஒருபுடமும் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தகுந்த அளவில், தக்க அனுபானங்களில் கொடுக்க மதுமேகம், கை காலெரிவு, மேக காங்கை முதலியன நீங்கும்.

### 2. காந்தச் செந்தூரம்

மூன்று பலம் காந்தத்தைக் கன்னான் உலையில் வைத்து ஊதி நெருப்பைப் போல் சிவந்த உடன் பசுவின் நீரில் தோய்க்கவும். இப்படி 7 முறை செய்ய நல்ல சுத்தியாகும்.

இதை இடித்துத் தூள் செய்து கல்வத்திலிட்டுத் தாழம் விழுதுச் சாறு விட்டு 4 சாமம் அரைத்து அரையணா கனமுள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி அகலில் பரப்பி மேலகல் மூடிச் சீலைமண் செய்து முழுப்புடம் போட்டு ஆறவிட்டெடுக்கவும்.

இப்படியே அரைத்து அரைத்து வில்லைதட்டி 5 புடமிட்டுச் செந்தூரத்தை மீண்டும் முன்போல் எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து 3 புடம் இடவும். நல்ல செந்தூரம் கிடைக்கும்.

வேளைக்குக் குன்றி எடை தேனில் காலை மாலை கொடுத்துவரப் பாண்டு, சோபை, காமாலை, பெருவயிறு ஆகிய நோய்களுடன் மதுமேகத்தையும் தாது பலகீனத்தையும் குணப்படுத்தும்.

### 3. கறுவங்கச் செந்தூரம்

மூன்று பலம் சுத்தி செய்த கறுவங்கத்தை இருப்புக் கடாயில் போட்டு அடுப்பேற்றி எரித்து உருகின பதத்தில் பச்சை முருங்கைப்பட்டையைப் பஞ்சுபோல் இடித்து அதனுடன் 1 1/2 பலம் வெடியுப்புத் தூளைக் கூட்டிப் பிசறிக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு, அயக்கரண்டி கொண்டு தேய்க்கவும். இவ்வாறு 4 முதல் 6 சாமங்கள் தேய்த்தெடுக்கப் பற்பமாகும்.

இதனைச் சீலையில் அரித்துத் திப்பியை நீக்கி அடியில் உள்ள பற்பத்தில் 2 பலம் அளவுக்குக் கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றாழையின் பால் விட்டு 2 சாமம் நன்றாக அரைத்துச் சிறுவில்லைகளாக தட்டி உலர்த்தித் அகலில் பரப்பி மேலகல் மூடிச் சீலைமண் செய்து காய்ந்தபின் முழுப்புடமிடவும். இப்படியாக 10 முறை சோற்றுக் கற்றாழையின் பால் விட்டு இரண்டிரண்டு சாமங்கள் அரைத்து வில்லை தட்டி முன்போலப் புடம் போடப் பத்து புடத்தில் நல்ல செந்தூரம் ஆகும்.

இச்செந்தூரத்தில் 4 அல்லது 5 குன்றி எடை எடுத்து ஒரு அயக்கரண்டியிலிட்டுச் சிறிது நல்லெண்ணெய் விட்டு, அடுப்பில் வைத்து எரிக்க எண்ணெய் தீப்பற்றி எரியும் ஆறவிட்டுக் கரண்டியில் பார்க்கச் செந்தூரமானது உருகி மணிகளாகியிருப்பின் உபயோகத்திற்கு தகுதியல்ல. மீண்டும் 2,3 புடங்கள் போட்டு எடுக்கவும்.

வேளைக்கு 2,3 அரிசி எடை வீதம் தினம் 2 வேளை நெய்யில் அல்லது தேனில் கொடுக்க மதுமேகம், ஆறாத விரணம், புரையோடிய புண்கள் முதலியன குணமாகும். 10 முதல் 15 நாட்கள் கொடுக்கலாம்.

### 4. கறுவங்கப் பற்பம்

சுத்தி செய்த 3 பலம் கறுவங்கத்தை ஒரு இரும்புக் கடாயில் போட்டு அடுப்பில் வைத்து எரித்து உருகினசமயம், 15 பலம் எடையுள்ள உலர்ந்த புற்றான் சோற்றைச் சிறிது சிறிதாகப் போட்டு 4 சாமம் அயக்கரண்டி கொண்டு ஒன்றாகத் தேய்த்துச் சத்தில்லாமல் எடுக்கப் பற்பமாகும். இதன் நிறம் பார்வைக்கு அரைத்து உலர்த்திய சந்தனவில்லையைப் போலிருக்கும். இதனைப் பத்திரப்படுத்தவும்.

1/4 முதல் 1/2 குன்றி எடையில் தகுந்த அனுபானங்களில் காலை மாலை கொடுத்துவர மதுமேகம் குணமாகும். இத்துடன் அப்பிரகச் செந்தூரம் கூட்டிக் கொடுத்துவர மிக்க நன்மை உண்டாகும்.

### 5. கோமூத்திரச் சிலாசத்து

இது வெயில் காலத்தில் மலைகளின் இடுக்குகளிலிருந்து உருகி வெளியாகும் சத்து. இதை எடுக்கும்போது மண் கலந்திருக்கும். ஆதலால் 10 பலம் கோமூத்திரச் சிலாசத்தை வெந்நீரில் நன்றாகக் கலக்கி ஒரு வாயகன்ற பீங்கான் கோப்பையில் இட்டு வெயிலில் வைத்து அப்போதைக்கப்போது மேல் கட்டுகின்ற ஆடையை வழித்து ஒருங்கு சேர்த்துக் காயவைத்துப் பத்திரப்படுத்துக. இதுவே உயர்ந்த ரகமானதாகும். அதிலுள்ள மண்மாவும் அடியில் நின்று விடும். இதைப்போலவே வெந்நீருக்குப் பதிலாக திரிபலைக் கியாழம் அல்லது வேப்பம் பட்டைக் குடிநீர் இவற்றிலொன்றில் கரைத்து வெயிலில் வைத்து மேல்கட்டுகின்ற அடையைச் சேகரிப்பதுண்டு.

இதில் வேளைக்கு 1/2 முதல் 3 குன்றி சிறிது நெய்யுடன் சேர்த்து அனலில் காட்டி மத்தித்து தினம் 2 வேளை சாப்பிடலாம்.

ஆரம்பத்தில் 1/2 குன்றியளவு கொடுத்து நோய் குணமாகாவிடில் போகப்போக அளவினை அதிகப்படுத்தி 3 குன்றியளவு வரை கொடுக்கலாம்.

இதனால் மதுமேகம், கல்லடைப்பு, ஈரல்நோய்கள், குன்மம், பெரும்பாடு முதலியன நீங்கும்.

### 6. மரகதப் பற்பம்

தேவையான அளவு மரகதம் கொண்டு வந்து ஒரு வச்சிர மூசையில் போட்டுக் கரி நெருப்பனலில் வைத்துச் சூடேறின சமயம் குதிரை மூத்திரத்தில் கொட்டவும். இப்படி 7 முறை செய்யச் சுத்தியாகும்.

இக்கற்களை ஈரமின்றித் துடைத்து இரும்பு உரலில் இட்டு இடித்துத் தூளாக்கிக் கல்வத்தில் இட்டு, கல்லுருவி இலைச் சாறு விட்டு 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலில் அடக்கிச் சீலை செய்து, 50 வறட்டியில் புடமிடவும். இவ்வாறு 4,5 புடமிட உயர்தரமான பற்பமாகும். இதைச் சிறிதளவு எடுத்து நீரிலிட மிதக்க வேண்டும். இன்றேல் மீண்டும் 2 புடங்கள் போட்டெடுக்கவும்.

1/2 முதல் 1 அரிசி எடை தக்க அனுபானத்தில், காலை மாலை கொடுக்க மதுமேகம் நீங்கும். மேலும் காக்கை வலி, பைத்தியம், பக்கச்சூலை, மார்பு நோய், இரத்த வாந்தி, ஈரல், குண்டிக்காய் பலவீனத்தால் வரும் நோய்கள் முதலியன நீங்கும்.

### 7. ஈசல் சூரணம்

ஈசலின் இறகுகளை நீக்கித் தீயாத பக்குவத்தில் வறுத்து இடித்து அதனுடன் சிறிது வறுத்திடித்த சீரகச் சூரணம் கூட்டி 1/2 தோலா வீதம் தினம் 2,3 வேளை உட்கொண்டு வர மதுமேகம், வெகுமூத்திரம், கிராணி, தேக வெப்பம் முதலியன நீங்கும்.

# XII

"தேரையர் மகா கரிசல்" என்னும் நூலில் காணப்படும் சில முறைகள் வருமாறு:

### 1. பேரீச்சங்காய் கிருதம்

பேரீச்சம் பழத்தின் உள்ளிருக்கும் கொட்டையை நீக்கிப்பின் நுரையுடன் கூடிய புதிய ஆற்றுநீரால் கழுவி எடுத்துக் கொண்டு அதற்குச் சம எடையாகப் பேராமுட்டி, கொடிவேலி, பேய்ப்புடல், நன்னாரி, சிறுபீளை, கொன்றை, செண்பகம், பல்லிப்பூண்டு ஆகிய இவ்வேர்களைச் சேர்த்து முறைப்படி குடிநீர் செய்து, அக்குடிநீரில் திரிகடுகு, ஏலம், இலவங்கம் ஆகியவைகளைப் போட்டு 20 நாழிகை எரித்துப் பின் அதை இறுத்து அதில் கால்பாக அளவு பசுநெய்யைச் சேர்த்து வாயகன்றுள்ள பாத்திரத்தில் இட்டு எரிக்கவேண்டும். அவ்விதம் எரித்துக் கொண்டிருக்கும்பொழுது முரசு ஒலிப்பது போன்ற ஒலியுடன் கொதிக்கும். அது நெய்யின் கடுகு திரளும் சமயமாகும். அத்தருணத்தில் இறக்கி 30 நாள் தானியபுடமாக வைத்துப் பின் பேசாது எடுத்து இருபொழுது உட்கொள்ள மதுமேகம், எரிகுன்மம், உஷ்ணவாயு, மகோதரம், ஈரல் தொடர்பான நோய்கள்

ஆகியவற்றைப் போக்கடித்து, உடலுக்கு அழகையும், உயிருக்கு உறுதியையும் கொடுத்து, வீரியத்தைப் பெற்றிடும். பெண்களும் விரும்புமாறு போக இன்பத்தைக் கொடுக்கும். இத்தகைய ஆண்மையை நல்க வல்லது பேரீச்சங்காய் கிருதம்.

## 2. நீரிழிவுக் குடிநீர்

நீர்க்கடம்பு, சோற்றுக் கற்றாழை, மிளகு-மூன்றும் சேர்த்துச் சம அளவில் ஒரு பானையில் இட்டு நீர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாய்ச் சுருக்கிக் குடிநீராகச் செய்து அருந்தி வர நீரிழிவு நோய் குணமாகும்.

இதே போன்று நீர்க்கடம்பு, சோற்றுக் கற்றாழை, சுக்கு, திப்பிலி ஆகியவற்றால் குடிநீர் செய்து அருந்திவர நீர்க்கட்டு நோய் நீங்கும் என்பதையும் அறியலாம்.

## 3. தாளிசச் சூரணம்

தாளிசப்பத்திரி, தான்றி, சுக்கு, மிளகு, திப்பிலி, மாதுளை, பெரிய தண்ணீர்விட்டான் கிழங்கு, தென்னை, அறுகு, ஆத்தி, தாழை, தேவதாரு, வில்வம், விளா, தாமரை, கத்தரி, தழுதாழை, வசந்த மல்லிகை, பனை, மந்தாரை ஆகியவற்றின் வேர்கள், தேன், வெள்ளை சர்க்கரை.

தாளிசப்பத்திரிவேர் இரண்டு பங்கும் ஏனைய வேர்கள் எல்லாம் ஒரு பங்கும். கொண்டு, இவ்வெல்லா வேர்களையும் உரலிலிட்டு இடித்து எடுத்த பொடியுடன் தாமரைக் குளக் கரையில் உள்ள தாழையின் தேன் கலந்து மேற்படிச் சூரணத்தை 7 தினங்கள் பூமிக்குள் புதைத்து வைத்து எடுக்க வேண்டும். பின் சர்க்கரையை மைபோல் இடித்துப் பொடியாக்கிச் சூரணத்தில் கலந்து 1 பட்சம் வெயிலில் காயவைத்துக் கொள்ள வேண்டும்.

தக்க அளவில், தக்க அனுபானத்துடன் வழங்க அதிதாக நோய் நீங்கும். நாக்கிற்கு ருசியைக் கொடுக்கும். கால்பிடிப்பு, தாள்பிடிப்பு, புற இசிவு, விக்கல்நோய் முதலியனவும் தீரும்.

## 4. சேராங்கொட்டை இலேகியம்

சுத்தி செய்த சேராங்கொட்டை 2 பங்கினைப் பனங்கள் 4 பங்கு, பசுவின் தயிர் 4 பங்கு ஆகியவை சேர்ந்த கலவையில் 9 நாட்கள் ஊறவைத்தபின்பு சூரிய ஒளியில் அதனை 9 நாள் உலர்த்தி, உரலில் இட்டு நன்றாகத் தூள் செய்து, அதனுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சோற்றுப்பு இவற்றைச் சேர்த்து இடிக்கவும். குளத்திலுள்ள சேற்றைப் போல் ஆகும் வரை இச்சரக்குகளைச்

சேர்த்து இடிக்க வேண்டும். பின் எல்லா சரக்குகளும் சேர்ந்த எடைக்குச் சமன் அல்லது ஒன்றரை பங்கு வெல்லத்தைச் சேர்க்க வேண்டும். பின் பெருஞ்சீரகம், சிறிய சீரகம் ஆகியவற்றைச் சேரும்படி இடித்துத் தீயில் வைத்துச் சேதமாகாதவாறு இலேகியமாகச் செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு மாத காலம் இந்த இலேகியத்தைப் பழக வைத்தபின் உண்ணவேண்டும்.

பத்தியத்துடன் 2 வேளை (காலை, மாலை) உண்ணலாம்.

வெளியே தெரியாமல் உள்ளிருந்தே கொல்லும் இனிப்பு நீர் நோயும், மேகப்புண்களும், குட்டம், தொற்று நோய்கள், வளிசன்னி முதலிய நோய்களும் நீங்கும். தேகத்திற்கு அழகு உண்டாகும். இளங்காளையைப் போல் பலம் உண்டாகும். அதிகப் பசி உண்டாகும். சேமக்கலத்தை அடித்தால் உண்டாகின்ற சப்தம் போல் குரல் ஒலி உண்டாகும். ஆதிசேடனைப் போன்று புணர்ச்சியில் இன்பம் உண்டாகும். செவ்வேளைப் போன்று முகத்தில் களை உண்டாகும். மன்மதனைப் போல் அழகு உண்டாகும்.

## 5. கோடாசலக் குளிகை

கோரோசனை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோஷ்டம், அரிதாரம், பவழம், கோவை, நிலப்பனை, இலந்தை, தும்பை, பிச்சிப்பூ, கஞ்சா இவற்றின் வேர்களைச் சம அளவு எடுத்துச் சாணிநீர் விட்டு ஊறி உலர்ந்தபின், முறை தவறாமல் அரைத்தும், கோங்கு இரசத்தில் இரண்டு நாளும், கோபுரந்தாங்கி இலைச் சாற்றில் இரண்டு நாளும், அழிஞ்சில் இரசத்தில் இரண்டு நாளும், பன்றியின் மூத்திரத்தில் இரண்டு நாளும், கோழி முட்டைக் கருவினால் இரண்டு நாளும், குயில் முட்டைக் கருவினால் இரண்டு நாளும், அரைத்து, மாத்திரையாக உருட்டி நல்ல வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

பலவித அனுபானங்களில் வழங்க, பல்வகை நோய்களை நீக்கும். செங்காந்தள் சாற்றில் இதை உண்ண நீரிழிவு நோய் நீங்கும். விளாம்பழச் சாற்றில் அருந்தினால் இராசப்பிளவை தீரும். தேனில் உட்கொள்ள மகோதர நோய் நீங்கும்.

## 6. கீழாநெல்லிக் கிருதம்

மூன்று பங்கு கீழாநெல்லி வேரை வெட்டியெடுத்துக் கொண்டு மூங்கில்வேர், சிறுகீரை வேர், பனைமரவேர், வேங்கை மரவேர், கிழக்கு திசை நோக்கிச் செல்லும் கொமண் வேர், கீடவேர் ஆகிய இவ்வேர்களை ஒவ்வொரு பங்கு வீதம்

வெட்டியெடுத்துக் கொண்டு இவைகளையும் கீழாநெல்லி வேரையும் வெயிலில் உலர்த்தி ஒரு பானையிலிட்டு, எட்டு பங்கு பாலை ஊற்றி அதற்குச் சமமாக நீரையும் விட்டு முறைப்படிக் காய்ச்சி வடித்த குடிநீரில் அத்தி, முப்பலை, கீரை வித்து, ஏலம், ஆல், சர்க்கரை, நெய் ஆகியவற்றைச் சேர்த்து அடிபிடிக்காமல் பதமாகக் காய்ச்சி எடுக்க வேண்டும்.

அளவுப்படி கொள்ள வளி நோய்கள் பலவும் நீங்கும். கீழ்நோக்குக் கால் கேடடைந்து வரும் நோய்களில் நீரிழிவு நோயும் ஒன்று என்பதால் கீழ்நோக்கு வாயுவின் கேட்டைப் போக்கும் இம்மருந்து நீரிழிவு நோயையும் போக்கும் எனலாம். உடலை மெலியச் செய்யும் நோய்களையும் அரற்றலைக்கொடுக்கும் நோய்களையும் போக்கும்.

## 7. காந்தப் பற்பம்

காந்தத்தின் தூள் 1 பங்கிற்கு 2 பங்கு கலப்பைக் கிழங்குச் சாறு, சித்திரமூலச் சாறு, மூன்றாவதாக மறுபடியும் கலப்பைக் கிழங்கின் சாறு விட்டு உலர உலர ஒவ்வொரு சாறுக்கு 1 நாள் வீதம் 3 நாட்கள் நன்றாக அரைத்து இலைபோன்ற தட்டையான ஒரே வில்லையாகச் செய்து சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி நுண்ணிய மண் கொண்டு சீலைமண் செய்து அடுப்பில் ஏற்றி மரச்சுள்ளி கொண்டு மூன்று நாள் எரிக்க வேண்டும். பின் ஆற விட்டெடுத்து அதை மறுபடியும் முன்போலவே குப்பைமேனியிலைச் சாறு, கொள்ளுக்காய் வேளைச் சாறு ஆகியவை கொண்டு அரைத்து உலர்த்தி எரிக்கவும். இதே போன்று மறுபடியும் நொச்சிச் சாற்றிலும் ஒரு முறை செய்து எடுக்கக் காவிநிறமான பற்பம் உண்டாகும்.

இப்பற்பத்தை 1 குன்றி முதல் 2 குன்றி வரை கறுப்புப் பசுவின் நெய்யில் உண்ண மதுமேகம் நீங்கும். பலவித அனுபானங்களில் வேறுபல நோய்களும் நீங்கும்.

## பிளவைக்கான மருத்துவ முறை

இந்நோயில் நீரிழிவு நோய்க்கான உள் மருத்துவம் செய்வதோடு புற மருந்துகளையும் கையாளுதல் வேண்டும். தேவைப்படின் அறுவை மருத்துவமும் செய்யலாம்.

நீரிழிவு நோயுடையார் சொறிந்து புண்படினும், அடிபட்டுப் புண்படினும் அவைகள் உடனே எளிதில் உலர்ந்து போகக்கூடிய வழிகளை நாடுதல் வேண்டும். சிறு பருக்கள் அல்லது கொப்புளங்கள் காணினும் உடனே மருத்துவம் செய்தல் நல்லது. புண் அல்லது அடிபட்ட இடம் பெரிதாகாவண்ணம் அமிர்த வெண்ணெய்,

பச்சை எருவை, புங்கு எண்ணெய் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைப்பூசி உலர்த்தல் வேண்டும். பருக்கள் தோன்றின் அவைகளுக்கு வெந்நீர், வறுத்த தவிடு முதலியவற்றால் ஒற்றடமிட்டுப் போக்க வேண்டும்.

அதற்கு அடங்காமல் பெருகுமாயின் சீத்தா இலை, அந்திமந்தி இலை, எருக்கிலை இவைகளுள் ஏதேனும் ஒன்றை எண்ணெய் பூசி அனலில் வெதுப்பி, சூட்டுடன் கட்டிக்கு வைத்துக் கட்டப் போகும்.

இதற்கும் அடங்காமல் சீழ்கோர்த்துப் பெருகுமாயின் பிராயம்பட்டைப்பால், அத்திப்பால் இவைகளைக் கட்டியின் மேல் பற்றிடலாம்.

தேன் மெழுகு 1 பலம், வெள்ளைப் பாடாணம் 1 வராகன் எடை கொண்டு, தேன் மெழுகை உருக்கி வெள்ளைப் பாடாணத்தைப் பொடித்துத் தூவிக் கிண்டி, அதை மெல்லியதாய்த் தட்டி கட்டியின் மீது வைத்துக் கட்ட, கட்டி பழுத்து உடையும். கட்டி பழுத்து உடைந்த பின் வெந்நீர் விட்டுக் கழுவி சீழை வெளிப்படுத்திய பின் துணியை மத்தன் எண்ணெயில் துவைத்துப் புண் குழியிலிட்டுக் கட்டி வைக்கவும். இவ்வாறு புண் உலரும் வரை கழுவிக் கொண்டு மருந்திட்டு வரவும்.

மத்தன் எண்ணெய்க்குப் பதிலாக ஆடுதீண்டாப்பாளை எண்ணெய், புங்கு எண்ணெய், விரண சஞ்சீவி எண்ணெய் போன்றவைகளையும் வழங்கலாம்.

கட்டி பழுத்து உடைந்ததும் சிலவேளை எளிதில் உலராமல் சிலையோடிப் புண்போலப் புடம் வைப்பதுண்டு. அப்போது வீரம், பூரம், இலிங்கம் முதலியவைகளால் செய்யப்பட்ட களிம்பு வகைகளைத் திரியில் ஊட்டி புரையோடும் வழியில் செலுத்தி புண்ணை உலர்த்தலாம். அல்லது அறுவை செய்து புண்ணை ஆற்றலாம். சீழ் பெருகாதவாறு உள்ளுக்குப் பூரப்பற்பம் கொடுத்தல் நன்று.

நீர்ப்போக்கையும் அதில் உள்ள சர்க்கரையையும் குறைத்தற்கான மருந்தும் கொடுத்து வருதல் வேண்டும்.

### நீரிழிவு நோயில் யோகாசனப் பயிற்சி

நீரிழிவு நோயில் தக்க மருத்துவம் செய்வதோடல்லாமல், சரியான யோகப்பயிற்சிகள் செய்வது மூலமாகவும் விரைவில் நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர இயலும். பொதுவாக தேவைக்கதிகமாக உண்டு சரியான உடலுழைப்பு இல்லாமல் சோம்பியிருத்தலே இந்நோய் வருவதற்கான காரணம் எனக் கூறப்படுவதால் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும், உடலில்

உள்ள முக்கிய உள்ளுறுப்புகளின் செயல்பாட்டைத் தூண்டுவிக்கும் முறையிலும் அமையக் கூடிய சில யோகாசன முறைகளைச் செய்து வருவது அவசியம். கீழ்க் கூறப்பட்டுள்ள ஆசன முறைகள் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைக்கவும், குணப்படுத்தவும் பெரிதும் உதவும் என்று யோக நூல்கள் கூறுகின்றன. அவை:.

1. சிரசாசனம்
2. சர்வாங்காசனம்
3. மகா முத்திரா
4. ஜானு சிரசாசனம்
5. பட்சிமோத்தாசனம்
6. வீராசனம்
7. ஆகர்ண தனுராசனம்
8. சலபாசனம்
9. தனுராசனம்
10. பரிபூரண நாவாசனம்
11. அர்த்த நாவாசனம்
12. ஜடர பரிவர்த்தனாசனம்
13. உட்டானாசனம்
14. மரீச்சியாசனம்
15. அர்த்த மத்ஸ்யேந்திராசனம்
16. பாசாசனம்
17. பரிபூரண மத்ஸ்யேந்திராசனம்
18. ஊர்த்துவ தனுராசனம்
19. துவிபாத விபரீத தண்டாசனம்
20. மயூராசனம்
21. ஹம்சாசனம்
22. புஜங்காசனம்
23. உத்தியானா
24. நௌலி

25. நாடி சோதன பிராணாயாமம்

26. சவாசனம்.

## நீரிழிவு நோயில் அனுசரிக்க வேண்டிய உணவு முறைகள்

உடல் கட்டுகள் ஏழும் வன்மை பெருகுமாறு உணவை அளவிட்டுக் கொடுத்தல் வேண்டும். அன்றியும் சிறுநீரைப் பெருக்கக்கூடிய உணவுப்பொருட்களைத் தவிர்த்து நீரை அளவுடன் போகச் செய்யும் பொருட்களைக் கொள்ளுதல் நன்று.

செரிப்புத் தன்மை நல்ல நிலையில் இருக்கும் பொழுது கோதுமை, சம்பாகோதுமை, கேழ்வரகு இவைகளாலான சோறு அல்லது மாப் பண்டங்களும், கறிவகையில் ஆட்டுக்கறி, காடை, கவுதாரி முதலியவைகளும், காய்கறிகளில் கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, நெய், பால், தயிர், மோர் போன்றவைகளும் கொள்ளலாம்.

சிறுநீர் எரிச்சல் உள்ள போது வெண்டைக் காய், பீர்க்கங்காய், புடலங்காய் இவை போன்றனவும் நீர் அளவு கடந்து, எரு(மலம்) கடினப்பட்டபோது தாளிக்கீரை, அறுகீரை, முருங்கைக்கீரை, முருங்கைப்பூ, ஆவாரம்பூ போன்றனவும் கொள்ளலாம்.

உடல் மிகவும் மெலிந்த நிலையில் பெருங் கழிச்சல் உண்டாகும். அப்பொழுது இருமுறை வடித்த அரிசியின் கஞ்சி, வால்கோதுமையை அரைத்து நீரில் வடித்துக் காய்ச்சிய கஞ்சி, அவ்வாறே செய்த வாதுமைப் பருப்புக் கஞ்சி இவைகளில் சிறிது பால் கூட்டிக் கொடுத்தல் நலம்.

# 4

# வெள்ளை நோய்

## முன்னுரை

வளித்தாது கேடடைவதால் வரும் பல நோய்களில் வெள்ளை நோய் எனப்படும் மேகநோயும் ஒன்றாகும். இதனைச் "சதகநாடியின்" வளி நாடிப் பாடலில் கூறியிருப்பதன் மூலம் நன்கு உணர முடியும்.

நீர்க்கிரிச்சரங்கள் என்று கூறப்படும் நீரினைச் சுருக்கல் நோய்களும், தந்துமேகம் எனப்படும் வெள்ளை நோயும் வளித்தாது கேடடைவதால் உண்டாகின்றன என்பதை அறிய முடிகிறது. வெள்ளை நோய் என்பது பிரமிய நோய் என்றும் வெட்டை நோய் என்றும் மேக நோய் என்றும் அழைக்கப்படும். மது மேகம் என்பதும், பிரமேகம் என்பதும் இதனின்று வேறுபட்டது என்பதையும் அவை நீரிழிவு நோயைக் குறிப்பன என்பதையும் அறிவது அவசியம்.

## நோய் இயல்பு

வெள்ளை நோய் சிறுநீர் இறங்குவதற்கு முன்போ அல்லது பின்போ வெண்ணிறத்துடன் சீழ் போல் இறங்குவதும், நீர்ப்புழையில் எரிச்சலையும் கடுப்பையும் உண்டாக்குதலுமான இயல்பை உடைய நோய் ஆகும். இந்நோயுற்றோரிடம் கலவி செய்த சிலநாட்களில் குறியில் நமை, நீர்ப்புழையில் எரிச்சல் ஆகிய குறிகளைக் காட்டி, நீர் இறங்கும்போது சீழ் கலந்தாற்போல் இறங்கி நூல் தொங்குவது போலும் வெண்டைக் காய் கழுவிய நீர் போலும் வெளியாகும்.

### நோய் வரும் வழி

- அளவு கடந்த கலவியாலும், இந்நோயுற்றோருடன் கூடுதலாலும் இந்நோய் உண்டாகும். மேலும் யோகத்தில் நிலைத்து, மூலக்கனலை எழுப்பும் போதும் இந்நோய் பிறக்கும் என்பர் சிலர்.
- எளியோரை இகழ்ச்சி சொல்லல், பெரியோரை ஏவல் கொள்ளல், பொன்னை சோரம் செய்தல், மற்றவரின் பொருளை அபகரித்தல், தற்பெருமை பேசித் திரிதல், நம்பினவர்களை ஏமாற்றி அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்துதல், எப்போதும் பெண்களை மோகித்திருத்தல் ஆகியனவும் இந்நோய் உண்டாவதற்கான காரணங்களாக நூல்கள் உரைக்கின்றன.
- மிகுந்த பெண்போகத்துடன் இருந்து அத்துடன் பட்டினி கிடத்தல், தன்னால் முடியாத அளவுக்குச் சூட்டினைத் தாங்கிக் கொண்டிருத்தல், காரமான உணவை மிகுதியும் உண்ணுதல், அத்துடன் அதிக உப்பு, துவர்ப்பு இவற்றையும் உணவில் சேர்த்தல், பலவிதமான கேளிக்கைகளில் ஈடுபடல் போன்றவையும் இந்நோயை உண்டுபண்ணும் காரணங்களாகும்.
- இந்நோயானது முதுகெலும்பு, நாபி ஆகியவற்றைச் சுற்றி எழும்பி குதத்திற்கும் குய்யத்திற்கும் நடுவில் உள்ள மூலாதாரத்தைப் பாதிப்படையச் செய்து நோயை உண்டுபண்ணும். நாடிகளிலும் எலும்புகளிலும் சூழ்ந்து சுக்கில சுரோணிதத்தில் கலந்து நோயை ஏற்படுத்தும். அடிவயிறு இழுத்து வலியைத் தோற்றுவிப்பது பிரமியத்தின் இயல்பாம்.

### நோய் வகை

'உரைத்திட்டேன் மேகமென்ற ரோகந்தானே உத்தமனே இருபத்தொன்றாகுங் கண்டாய்' என்று பிரமியரோக நிதானம் என்ற தலைப்பில் "யூகி சிந்தாமணி 800" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளபடி இந்நோய் 21 வகையாக பிரிக்கப்பட்டுள்ளதை உணரலாம்.

இதே நூலில் இதற்கு அடுத்து வரும் அத்தியாயத்தில் மேகரோக நிதானம் என்ற தலைப்பில் மதுமேக நோய் வகைகளை 20 எனப் பிரித்துக் கூறியுள்ளார். எனவே மேகம் என்ற சொல் இருவேறிடங்களில் இரண்டு வித நோய்களைக் குறிக்கும் சொல்லாக உள்ளதை அறியவேண்டும். இடம் பார்த்துப் பொருள்

கொள்வது இங்கு அவசியமாகிறது. பொதுவாக வழக்கத்தில் மேக நோய் என்பது தகாத புணர்ச்சியால் வரும் வெள்ளை வெட்டை நோயைக் குறிக்கும் சொல்லாகவே பயன்படுகிறது. மதுமேகம் என்பதே நீரிழிவு நோயைக் குறிப்பதாக உள்ளது என்பதை அறிய வேண்டும்.

**மேக நோய்களின் பெயர்கள்:**

1. வாதப் பிரமியம் என்னும் வளி வெள்ளை
2. பித்தப் பிரமியம் என்னும் அழல் வெள்ளை
3. கபப் பிரமியம் என்னும் ஐய வெள்ளை
4. வாதப் பித்தப் பிரமியம் என்னும் வளியழல் வெள்ளை
5. பித்தக் கபப் பிரமியம் என்னும் அழல் ஐய வெள்ளை
6. தொந்தப் பிரமியம் என்றும் முக்குற்ற வெள்ளை
7. கட்டிப் பிரமியம் என்னும் கட்டி வெள்ளை
8. சலப் பிரமியம் என்னும் நீர் வெள்ளை
9. நாறு தந்திப் பிரமியம் என்னும் தந்த வெள்ளை
10. சீதப் பிரமியம் என்னும் சீழ் வெள்ளை
11. ஒழுக்குப் பிரமியம் என்னும் ஒழுக்கு வெள்ளை
12. அரித்திராப் பிரமியம் என்னும் மஞ்சள் வெள்ளை
13. கிரிச்சரப் பிரமியம் என்னும் எரிச்சல் வெள்ளை
14. கரப்பான் பிரமியம் என்னும் கரப்பான் வெள்ளை
15. கல் பிரமியம் என்னும் கல் வெள்ளை
16. தந்து பிரமியம் என்னும் நூல் வெள்ளை
17. நீச்சுப் பிரமியம் என்னும் நீச்சு வெள்ளை
18. வலிப் பிரமியம் என்னும் மலின வெள்ளை
19. மதுப் பிரமியம் என்னும் இனிப்பு வெள்ளை
20. விரணப் பிரமியம் என்னும் புண் வெள்ளை
21. இரத்தப் பிரமியம் என்னும் குருதி வெள்ளை

என்பனவாகும். இனி இவற்றின் குறிகுணங்களைத் தனித்தனியே காணலாம்.

1. **வாதப் பிரமியம்**

- ஆண்குறியின் அடித்தண்டில் வலிக்கும்.
- சிறுநீர், பசுவின் சிறுநீரைப் போலிறங்கும்.
- சிறுநீர் கட்டியாய் சீழ் கலந்து காணும்.
- விதையில் கனத்து வலியுண்டாகும்.
- அடிவயிறு, பக்கங்களில் பாரமாகத் தோன்றி, வலியும் உண்டாகும்.
- வயிற்றில் இசிவுடன் கூடிய வலி காணும்.
- உடல் வற்றிக் காணும்.

2. **பித்தப் பிரமியம்**

- உடல் மிகவும் வற்றித் தியக்கம் (சோர்வு) உண்டாகும்.
- மூட்டுகளிலும் கை, கால்களிலும் வலி உண்டாகும்.
- உடல் கறுத்து எரிச்சலுடன் காணும்.
- குதம், குய்யங்களில் கடுப்பு காணும்.
- சிறுநீர் இழியும்போது, நீர்ப்புழை கடுத்துத் தாங்க முடியாத எரிச்சலை உண்டாக்கிச் சீழ் கலந்தும், மஞ்சளித்தும் நீர் வெளியாகும்.
- கை, கால் மிகுதியும் ஓய்ச்சலாய் காணும்
- ஆண்குறி வீங்கி நோகும்.

3. **கபப் பிரமியம்**

- ஆண்குறியில் வலியுடன் கடுப்பு கணும்.
- சிறுநீர் இறங்கும்பொழுது வெண்மையும் சீழும் கலந்திருக்கும்.
- மேனி வெளுத்துக் காணும்.
- கண்களைச் சோதித்துப் பார்க்க இரத்தமின்றி வெளுத்திருப்பதைக் காணலாம்.
- நீர்ச் சுருக்கு உண்டாகும்
- அடிக்கடி ஏற்படும் நீர்ச் சுருக்குடன் நீர்ப்புழையில் எரிச்சல் ஏற்பட்டு, சிறிது சிறிதாக நீர் வெளியாகும்.
- உடலில் அனல் மிகுந்து காணும்.

### 4. வாதப் பித்தப் பிரமியம்

- ❖ உடல் முழுதும் வலி காணும்.
- ❖ ஆண்குறியின் அடிப்புறத்தில் சலாகையை (ஊசி) வைத்ததுபோல் அடிக்கடி வருத்தம் உண்டுபண்ணும்
- ❖ சிறுநீரில் மாக்கரைத்தது போல் கரைந்து விழும்.
- ❖ வயிற்றில் கட்டி தோன்றி, மலமானது வெளியாகாமல் இறுகிக் கொள்ளும்.
- ❖ நீர் விரைந்து வெளியாகாமல் சுருக்கென்ற குத்தலுடன் வெளியாகும்.

### 5. பித்தக் கபப் பிரமியம்

- ❖ வாய் மிகவும் கசப்பாக இருக்கும்.
- ❖ அடிவயிறு பொருமி, ஊதி இழுத்தது போல் வலிக்கும்.
- ❖ ஆண்குறியில் சுருக்கு மிகுதியுமுண்டாகும்.
- ❖ மஞ்சள் நிறத்தோடு கூடிய சீழுடன் நீர் இறங்கும்.
- ❖ கீல்கள் தோறும் வலி காணும்.
- ❖ பகலில் அதிகமான தூக்கம் உண்டாகும்.
- ❖ பசியின்மை காணப்படும்.
- ❖ உடல் முழுதும் ஊதிக் காணும்.

### 6. தொந்தப் பிரமியம்

- ❖ உடம்பில் தினவு உண்டாகி, உடல் முழுதும் புழுக்கள் ஊர்வதுபோன்ற உணர்வு உண்டாகும்.
- ❖ அடிவயிற்றில் சுரப்புண்டாகி, அடிக்கடி நீர் கடுத்து இறங்கும். அத்துடன் வெள்ளை காணும் .
- ❖ சிறுநீரைத் தெளிய வைக்கின் அடியில் தூசு படிந்ததுபோல் காணப்படும்.

### 7. கட்டிப் பிரமியம்

- ❖ உடலில் வெள்ளை நோய் நாட்பட்டு நிலைத்திருப்பின் அது ஊறி கட்டிகளை உண்டாக்கி, உடலை வற்றச்செய்து வன்மையைக் குறைக்கும்.

- ❖ ஆண்குறியிலும் நீர்ப்புழையிலும் தினவையும் எரிச்சலையும் உண்டாக்கும்.
- ❖ ஆண்குறியில் பருக்கள் போல் தோன்றிப் பின் கட்டியாக மாறி சீழ் வடியும்.
- ❖ ஆண்குறியின் கீழ்ப் பகுதியில் கட்டி தோன்றி உடைந்து, நீர்ப்புழையுடன் சேர்த்துத் துளை உண்டாக்கி, அத்துளை வழியாக விதையின் மேல் நீர் கசியும்.

## 8. *சலப் பிரமியம்*

- ❖ ஆண்குறியில் வலியும், நீர்ப்புழையின்று வெள்ளையாக நீர் கசிதலும் காணும்.
- ❖ அடிவயிற்றில் பிடுங்கலுடன் வலி காணும்.
- ❖ மலத்தில் சீதம் கலந்து போகும்.
- ❖ அரையாப்புக் கட்டி தொடையிடுக்குகளில் உண்டாகும்.
- ❖ உடம்பு முழுதும் வலி உண்டாகும்.

## 9. *நாறு தந்திப் பிரமியம்*

- ❖ அடிவயிறு புண்போல் நொந்து காணும்.
- ❖ ஆண்குறியின் அடித்தண்டு விறுவிறுத்துப் பூரிக்கும்.
- ❖ நீர் இறங்குவதற்கு முன்னதாக ஆண்குறியின் துளைப் பகுதியிலிருந்து கம்பி போல் ஒரே தொடர்ச்சியாக வெள்ளை தொங்கி வீழும்.
- ❖ எப்பொழுதும் வெள்ளை கசிந்து கொண்டேயிருந்து, துணியில் நனைந்து காணும்.
- ❖ கை, கால் எரிச்சல் காணும்.

## 10. *சீதப்பிரமியம்*

- ❖ சீழ்போல் வெள்ளை விழும்.
- ❖ அரையாப்புக் கட்டி, பவுத்திரம் முதலியன தோன்றும்.
- ❖ நாபிப் பகுதி எல்லாம் புண்ணாகும்.
- ❖ கணுக்கால் மூட்டில் தாங்க முடியாத வலி உண்டாகும்.
- ❖ அடிக்கடி சிறுநீர் கடுத்து இறங்கும்.

- ❖ சுரம் தோன்றி அதிகரித்துக் குளிரும் உண்டாகும்.
- ❖ மிகுந்த துன்பம் உண்டாகி மயக்கமும் உண்டாகும்.
- ❖ உடல் முழுதும் நொந்து காணும்.

## 11. ஒழுக்குப் பிரமியம்

- ❖ இந்நோயில் சீழும், குருதியும் கலந்த நீர் போல் வெள்ளை எந்நேரமும் ஒழுகிக் கொண்டே இருக்கும்.
- ❖ உடல் முழுமையும் சிறுபருக்கள் போல் கட்டி உண்டாகி, முளைகள் தோன்றி உடைந்து புண்ணாகிக் காணும்.
- ❖ உடல் முழுதும் குடைந்து நோகும்.
- ❖ வயிற்றில் தீப்போல அனலை உண்டு பண்ணி, மிகுதியாய்ப் புசிக்கச் செய்து, படுக்கையில் கிடக்கச் செய்யும்.

## 12. அரித்திராப் பிரமியம்

- ❖ மஞ்சள் நிறத்தில் வெள்ளை இழியும்.
- ❖ நீர்ப்புழையில் நெருப்பு போன்ற எரிச்சலுடன் கடுத்து நீர் இறங்கும்.
- ❖ முகம் மஞ்சள் நிறம் அடையும்.
- ❖ நாக் கைத்துக் காணும்.
- ❖ உடல் திடுக்கிடும்.

## 13. கிரிச்சரப் பிரமியம்

- ❖ மஞ்சள் நிறமாக நீர் இறங்கும்.
- ❖ நீர்ப்புழை மிகக் கடுத்து நீர் இறங்கும்.
- ❖ அடிக்கடி சிறுநீர் வராமல் கட்டிக் கொள்ளும்.
- ❖ உறக்கமில்லாமல் துன்புறுத்தும்.
- ❖ உணவு உண்ண விருப்பமிராது.
- ❖ மனம் மிகவும் சஞ்சலப்பட்டுக் காணும்.
- ❖ உடல் முழுதும் உளைச்சல் காணும்.

## 14. கரப்பான் பிரமியம்

- வயிறு உளைந்து நொந்து சீதத்துடன் கழிச்சல் காணும்.
- சிறுநீர் மிகுந்த சூட்டுடன் இழியும்.
- உடல் முழுதும் வெப்பத்துடன் சொறி உண்டாகி, கரப்பான் நோய் போல் காணும்.
- ஆண்குறி புண்போல் நொந்து குத்திச் சிறுநீர் இறங்குகையில் பொடிப்பொடியான சிறுகற்கள் சுண்ணப்பொடி போல் நீரில் கலந்து வெளியாகும்.
- மலமும் நீரும் கட்டுப்படும்.
- கை கால் ஓய்ந்து காணும்.

## 15. கல் பிரமியம்

- ஆண்குறியின் நீர்ப்புழையினின்றும் கள்ளைப் போல் வெள்ளை கசியும்.
- உடம்பில் கற்றாழை நாற்றம் வீசும்.
- சாந்து அரைக்கப் பயன்படுத்தும் கறுநிறக் கல்போல் கறுநிறத்தில் கல் சிறுநீரில் வெளியாகும்.
- அவை வெளியாகும்போது நீர்ப்புழையில் சிக்குமாயின் அதனால் வயிறு விம்மும்.
- உந்தி முதல் விரை வரை விறுவிறுத்து உப்புசமாகி நோகும்.
- பசி இல்லாதிருக்கும்.
- உடல் பளிங்கு நிறமாகிப் பாரமாகும்.

## 16. தந்து பிரமியம்

- இந்நோயில் சிறுநீர் இறங்கும்போது சிலந்தியின் நூல்போல் மெலிதாக வெள்ளை கலந்து விழும்; இரத்தமும் கலந்து காணும்.
- ஆண்குறி விம்மும்போது வலியுடன் காணும்.
- சிறுநீரைத் தெளிய வைத்துப் பார்க்கும்பொழுது அடியில் சீழ் தங்கியிருக்கும்.
- விலாப்பக்கங்களில் நோகும்.
- சிறுநீர்த் துளித்துளியாய் விழும்.

## 17. நீச்சுப் பிரமியம்

- ❖ சிறுநீர் இறுகிக் கள்ளைப் போல் இறங்கும்.
- ❖ அது வெளுத்துச் சீழுடன் காணும்.
- ❖ ஆண்குறி உச்சமாகும் சமயம் அடித்தண்டு வீங்கி இறுக்கிப் பிடித்தாற்போலும் விறுவிறுப்போடும் மிகுதியாய் வலிக்கும்.
- ❖ நரம்புகள் சுருங்கித் தோன்றும்.
- ❖ அடிவயிற்றில் குத்தல் உண்டாகும்.

## 18. வலிப் பிரமியம்

- ❖ ஆண்குறியின் அடி நரம்பு, குதம், குய்யம் ஆகியவற்றில் அடிக்கடி குத்தலுடன் வலி உண்டாகும்.
- ❖ உடல் முழுதும் கனன்று காணும்.
- ❖ மயக்கம் உண்டாகும்.
- ❖ நாக் கைத்துக் காணும்.
- ❖ புறங்கால் பக்கம் திமிர் உண்டாகும்.
- ❖ குறி வீங்கி நீர் இறங்கும்போது, அதில் இற்றுப்போன சதைத் துணுக்குகளும் வெள்ளையும் சேர்ந்து இழியும்.
- ❖ சிறுநீரைத் தெளிய வைத்துப் பார்க்க அடியில் தூசு படிந்தாற்போலக் காணும்.

## 19. மதுப் பிரமியம்

- ❖ இந்நோயில் குறி மிகவும் நொந்து, நீர் வண்டலாய் தேன் போல் இறங்கும்.
- ❖ சிறுநீரில் எறும்பு மொய்க்கும்.
- ❖ சிறுநீரில் இறைச்சி கழுவிய நீர் போல் சற்றுச் சிவந்து, கொழுப்பும் சதையும் கலந்தது போல் காணும். இது உள்ளுக்குள்ளே விரணமாகி இருப்பதை உணர்த்தும்.
- ❖ உடல் முழுதும் நாற்றம் உண்டாகும்.
- ❖ நா வறண்டு சுவை அறியாது, நாக்கு உணர்ச்சியற்றதுபோல் காணப்படும்.
- ❖ மயக்கம் உண்டாக்கும்.

## 20. விரணப் பிரமியம்

- ❖ உடல் முழுதும் புண் உண்டாகி மிகவும் துன்பத்தைக் கொடுக்கும்.
- ❖ மயக்கம் உண்டாகும்.
- ❖ ஆண்குறி பருத்து வீங்கி, சீழும் இரத்தமும் கலந்து சிறுநீர் இறங்கும்.
- ❖ முட்டுகள் தோறும் கரடு கட்டியது போல் வீங்கி நொந்து, நீட்டவும் . மடக்கவும் முடியாமல் இருக்கும்.
- ❖ உடல் வெதும்பி விறுவிறுத்துக் காணும்.

## 21. இரத்தப் பிரமியம்

- ❖ உடல் தியக்கத்துடன் கிறுகிறுப்பும் காணும்.
- ❖ உடல் முழுதும் பஞ்சு போன்று தளர்வுற்றுக் காணும்.
- ❖ மிக்க வலியுடனும், கடுப்புடனும் சிறுநீர் இறங்கும்.
- ❖ முயல் இரத்தம் போல் சிறுநீரில் கலந்து இரத்தம் இழியும்.
- ❖ முகம் மிகவும் கலங்கிக் காணும்.
- ❖ சிறுநீர் மிகச் சுருங்கி சிவப்பாய் இறங்கும்.
- ❖ அடிக்கடி சிறுநீர் கழியும்.
- ❖ பிசாசு போல் மனம் அலையும்.

## நோயின் பொதுக்குறிகுணங்கள்

- ❖ குறியின் நுனி சிவந்து, நமைத்து, கடுத்து வீங்கி, சிறுநீர் இறங்குகையில் நூல்போல வெளுத்த சீழ் நீருக்கு முன் இழியும்.
- ❖ சீழ் சில நாட்களில் கடினப்பட்டுத் தாங்க முடியாத எரிச்சலை உண்டாக்கும்.
- ❖ நாள் செல்லச் செல்ல சீழ் கடினப்படுவதுடன் அதிக அளவிலும் மஞ்சள் நிறத்துடனும் இழியும்.
- ❖ மேலும் இச்சமயங்களில் இடுப்பு, முதுகு, தொடை, முதலியன நோகும்.
- ❖ உடல் முழுதும் வலி காண்பதுடன் மூட்டுகள் தோறும் வலி உண்டாகும்.
- ❖ சில வேளைகளில் சுரமும் உண்டாகும்.
- ❖ வெப்ப மிகுதியால் மலம் வெளிப்படுவதிலும் தடை உண்டாகும்.
- ❖ பசியும் இராது.

- நாளாக நாளாக நீர்ப்புழை நெருப்புப் போல் எரிந்து, புண்பட்டுக் குருதி மிகுதியாய் இழியும்.
- அப்பொழுது நீர் இறங்க முடியாமல் உயிர் போவது போன்று வலிக்கும்.
- இந்நிலையிலும் தக்க மருத்துவம் செய்யாவிடின் நோய் உடலில் ஊறி சீழ்வறண்டு, நீர்ப்புழை பெரிதும் புண்பட்டு, நீர் அடிக்கடி தாங்க முடியாதவாறு இறங்கும். அல்லது நீரைக் கழிப்பதற்காக உட்காரினும் எளிதில் நீர் இறங்காமல் அடைத்தல், குத்தல் போலும் வலித்தல், பளுவாக இருத்தல் போன்ற உணர்ச்சியும், விரையில் வீக்கமும், தாங்க முடியாத வலியும் உண்டாகும்.
- போகப்போக சதையடைப்பை உண்டாக்கி நீர் கட்டும்.
- இது நிலைத்துவிடின் சீழ் மிகுந்து சதையை அழுகச் செய்து, நீர்ப்புழையைத் துளைத்து, தண்டின் அடியிலேனும் முனையிலேனும் பகந்திரம் போலுண்டாய், அவ்வழியே நீர் இறங்கும்.
- நாட்கள் செல்லச் செல்லக் குறியின் முனையை அடைத்து நீரும் விந்துவும் பகந்திரத் துளை வழியிலேயே இழியும்.
- இந்நோயின் காரணமாக உடல் முழுதும் கட்டி தோன்றி உடைந்து கிரந்தி என்னும் மேகப்புண்களை ஏற்படுத்தும். இவை எளிதில் ஆறாத புண்களாக மேலும் மேலும் கிளைக்கும்.
- அரையில் கட்டிகள் தோன்றி அரையாப்பு எனப்படும் கட்டிகளை ஏற்படுத்தி, தாங்கொணாத் துன்பத்தை ஏற்படுத்தும்.
- இந்நோயின் தன்மையால் கால், கைகளில் உள்ள பெரிய மூட்டுகள் நீர்க்கோர்த்து வீங்கிச் சிவந்து மிக்க வலியை உண்டு பண்ணும். நரித்தலை போன்று இவ்வீக்கம் காணப்படுமாதலால் இதனை நரித்தலை வாதம் என்பர்.
- உரிய நேரத்தில் குணப்படுத்தவில்லையெனில் இந்நோய் தமரகத்தைப் பாதிக்கச் செய்து, தமரகவாயு என்னும் நோயை ஏற்படுத்தி, உயிரைப் போக்கும்.
- மூளையையும் இந்நோய் பாதித்து அதன் காரணமாக பக்கவாதம், நடுக்குவாதம் போன்ற நோய்களை ஏற்படுத்தும்.
- கண் நரம்புகளைப் பாதித்துப் பார்வைக் குறைவை ஏற்படுத்தும்.

- ❖ பெண்களிலும் ஆண்களிலும் இந்நோய் மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும்.
- ❖ இந்நோயுள்ளவர் கருத்தரிப்பின் அது குழந்தையையும் பல்வேறு விதங்களில் பாதித்துப் பிறவிக் கோளாறுகள் ஏற்படும்.

**மருத்துவம் செய்யும் முறை**

இந்நோயில் தன்னிலையில் மாறுபாடு அடைந்த வளித்தாதுவையும் கீழ் நோக்குக் காலையும் தன்னிலை அடையச் செய்வதற்குத் தேவையான கழிச்சல் மருந்துகளை வழங்க வேண்டும்.

வளித்தாதுவுடன் அழல் தாதுவும் இந்நோயில் கேடடைந்து உடலில் மிகுதியான சூட்டுடன் எரிச்சலும் வலியும் காணப்படுவதால் அதைத் தணிப்பதற்குக் குளிர்ச்சியை உண்டுபண்ணும் மூலிகை மற்றும் தாதுப்பொருட்களாலான மருந்துகளையும் உணவுகளையும் வழங்குவது அவசியம்.

அத்துடன் மேக நோய்க்கு நேர் மருந்துகள் எனக் கூறப்படும் இரசம், கந்தகம் ஆகியவற்றால் செய்யப்பட்ட மருந்துகளையும், சேராங்கொட்டை, பறங்கிப் பட்டை முதலிய மூலிகைப் பொருட்களாலான மருந்துகளையும் வழங்கி நோயை நீக்க வேண்டும். நோயின் வன்மைக்குத் தக்கவாறு மருந்தின் வன்மையை உயர்த்தி வழங்குதல் வேண்டும்.

நோயின் தீவிரத் தன்மை குறைந்து குணமடையும் தருவாயில் உடல் தாதுக்களை வன்மைப்படுத்தும் தங்கம், வெள்ளி, முத்து, பவழம் ஆகியவற்றால் செய்யப்பட்ட மருந்துகளையும், வெண்பூசணி இலேகியம் போன்ற குளிர்ச்சி பொருந்திய வன்மையைக் கொடுக்கும் இலேகியங்களையும், நெய் வகைகளையும் வழங்குதல் வேண்டும்.

இத்துடன் இந் நோயில் கிளை நோய்களாக உண்டாகும் கிரந்தி, அரையாப்பு போன்றவற்றிற்குத் தக்க வெளிப்பிரயோக மருத்துவமும் செய்ய வேண்டும்.

இந்நோயின் காரணமாக கீல்கள் பாதிக்கப்பட்டு மேகச்சூலை போன்ற நோய்கள் ஏற்பட்டிருப்பின் மேக நோய் மருத்துவத்துடன் மூட்டுவாத நோய்க்கான மருத்துவமும் செய்ய வேண்டும்.

தமரகவாயு ஏற்பட்டிருப்பின் தமரகத்தை வன்மைப்படுத்தும் பல மருந்துகளையும் இத்துடன் சேர்த்து வழங்கவேண்டும்.

இந்நோய் உடலில் ஊறி இருக்கும் நிலையில் மூளையையும் நரம்புகளையும் பாதிப்படையச் செய்யும் என்பதால் மேகநோயை முற்றிலும் நீக்கம்

செய்யும் அளவுக்கு மருத்துவம் செய்வதோடு மற்ற உடல் தாதுக்களின் வன்மைக் குறைவையும் நீக்குவதற்கு வேண்டிய மருத்துவத்தையும் இணைந்து செய்தால் பிற உறுப்புகளைப் பாதிக்கும் நோய்கள் ஏற்படாமல் தடுக்கலாம்.

இந்நோயில் கேடடைந்த வளித்தாதுவைத் தன்னிலைப் படுத்த வழங்கப்படும் கழிச்சல் மருந்துகளைப் பற்றி இனிக் காண்போம்:

**குடிநீர்**

கண்டங்கத்தரிவேர், பறங்கிச்சக்கை, வெள்ளறுகு, நெருஞ்சில், சுரைக்கொடி, பூவரசம்பட்டை, ஏலம், புங்கம் வேர்ப்பட்டை-இவற்றை வகைக்கு 1 பலம் எடுத்து ஒருபடி நீர்விட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சிக் குடிநீராக்கியதில் காலை மாலை இருவேளைகளிலும் கொள்ள கழிச்சலையும் நீரையும் பெருக்கி வளித்தாதுவைத் தன்னிலைஅடையச் செய்யும்.

பேய்க் கரும்பு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், தேற்றான் கொட்டை, நெருஞ்சில், பூவரசம்பட்டை, வல்லாரைக் கீரை, சிவதை வேர், வால் மிளகு, குரோசாணி ஓமம், சோம்பு, சதகுப்பை-இவை வகைக்கு 1 பலமாய்க் கொண்டு, முறைப்படி குடிநீர் செய்து அதைக் காலை மாலைகளில் கொள்ளலாம்.

**எண்ணெய்**

மேகநாதத்தைலம், இரசத்தைலம், தண்ணீர் விட்டான் நெய், இவைகளில் ஏதேனும் ஒன்றை அளவறிந்து வழங்கலாம்.

## I

நோய்க்கான மருந்துகள் பற்றிய விபரம் பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் காண்போம். முதலில் "சித்த வைத்தியத் திரட்டு" என்னும் நூலில் கூறப்படும் மருத்துவ முறைகள் வருமாறு:

**மாத்திரை**

1. கோடாசூரி மாத்திரை: சிறு பயறளவு உள்ள மாத்திரைகளை நாளொன்றுக்கு 2 வேளையாக அறுகன் வேர்க் குடிநீரில் கொடுக்க வெள்ளை, வெட்டை ஆகியன நீங்கும். குமட்டிக்காய்ச் சாற்றில் கொடுக்கக் கிரந்தி நீங்கும். திரிகடுகுச் சாற்றில் கொடுக்கக் கிரந்திசூலை நீங்கும்.

2. இலவங்காதி மாத்திரை: குன்றியளவு மாத்திரை செய்து உடல் நிலைக்குத் தக்கவாறு அளவு படுத்திக் கொடுக்க, பேதியை உண்டாக்கி நோய் வன்மையைக் குறைக்கும்.

3. மேகநாதக் குளிகை: வெள்ளை, வெட்டை நோய்களில் மலம் கழிவதற்கு இம்மாத்திரையை வழங்கலாம். குன்றியளவு மாத்திரை செய்து ஒன்று அல்லது இரண்டு மாத்திரையை ஒரு நேரம் மட்டும் வழங்கி, பேதியாகும்படி செய்யலாம். இதனால் கேடடைந்த தாது தன்னிலை அடைய வாய்ப்பு ஏற்படும்.

**பற்பம்**

*1. அயப் பற்பம்*: ஒரு பலம் அயத்தைக் கல்வத்திலிட்டு நாளொன்றுக்கு 6 பங்கு குறுக்கத்திப்பூச்சாறு விட்டு 3 நாட்கள் அரைத்து, 4-ஆம் நாள் வில்லை செய்து உலர்த்தி, 5-ஆம் நாள் போதுமான புளியிலையை அரைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை மூசை செய்து அதில் வில்லையை வைத்து மற்றொரு பாகத்தால் வில்லையை மூடிச் சீலைசெய்து 6- நாள் உலர்த்தி, 7-ஆம் நாள் 108 வறட்டியில் புடம்போட்டு 1 நாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்து எடுத்தால் வெண்மையான பற்பமாகும்.

தேனும், சர்க்கரையும் இதற்கு ஏற்ற அனுபானமாகும். 2 குன்றியளவில் வழங்க மேக நோய்கள், மேகப்புண்கள், கிரந்தி, விப்புருதி ஆகியன தீரும்.

2. வெள்வங்கப் பற்பம்: வெற்பேந்தி எண்ணெயால் முடிக்கப்பட்ட வெள்வங்கப் பற்பம் மேகவெட்டை நோய்களுக்கு வேளைக்கு ஒரு குன்றியளவாக சர்க்கரை, நெய், குளிர்ந்தநீர், சீரகம், பசும்பால், மஞ்சள் ஆகிய இவற்றில் ஏதேனுமொன்றில் அனுபானித்து ஒரு மாதம் வரை வழங்கலாம். புளி, கடுகு, அகத்திக் கீரை, பெண்போகம், ஆகாது.

*3. கறுவங்கப் பற்பம்*: தினையளவு தேன், நெய், பால், இளநீர், நீர், மோர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அனுபானித்து வழங்க மேகம் என்னும் வெள்ளைநோய் நீங்கும், மருந்து உண்ணும் சமயம் தினை, வரகு, அபினி, கொள்ளு, புளி, அகத்திக்கீரை, கலியாணப் பூசணிக்காய், பெண்போகம் முதலியன ஆகாது.

***4. தாம்பிரப் பற்பம்*: நீங்காத மேக நோய்க்கு இளநீரில் தாம்பிரப் பற்பத்தைக் கடுகு அளவில் 2 வேளை கொடுத்து வர நோய் நீங்கும். புளி, மீன், அகத்திக்கீரை, கடுகு, கொள்ளு, எள் இவற்றைச் சேர்க்காமல் பத்தியமாக இருப்பது நலம்.**

*5. சிலாசத்துப் பற்பம்:* வெண்ணெயில் நோயின் அளவு அறிந்து கொடுக்க உடல் எரிவு, பித்த வெட்டை, நீர்க்கடுப்பு ஆகியன நீங்கும்.

*6. சண்டரசப் பற்பம்:* கால் முதல் அரை அரிசியளவு தக்க அனுபானத்தில் கொடுக்க மேகம், மேகவிரணம் ஆகியன நீங்கும்.

*7. குங்கிலியப் பற்பம்:* ஒன்று முதல் நான்கு குன்றிமணியளவு நோய் பலம் நோயாளி பலம் அனுசரித்து, சீதவீரிய மூலிகை ஏதேனும் ஒன்றில் அனுபானித்துக் கொடுக்க நீர் எரிச்சல், நீர்க்கட்டு, வெள்ளை, வெட்டை, பிரமியம் ஆகியன நீங்கும்.

*8. கந்தகப் பற்பம்:* 1 முதல் 2 குன்றியளவில் உண்ண மேகம், குட்டம், சொறிசிரங்கு முதலியன நீங்கும்.

### செந்தூரங்கள்

*1. ஆறுமுகச் செந்தூரம்:* 1/2 முதல் 1 குன்றியளவில் திரிகடுகுத் தூளுடன் தேனும் கலந்து கொடுக்க அரையாப்பு, கிரந்தி, வெள்ளை நோய்கள் நீங்கும்.

*2. இலிங்கச் செந்தூரம்:* அரிசியளவு தேன் கலந்து கொடுக்க மேக நோய்களும், வளி தொடர்பான நோய்களும், எல்லாச் சுரங்களும் நீங்கும்.

*3. இரசச் செந்தூரம்:* 1/2 முதல் 1 குன்றிமணியளவு 2 வேளை 10 நாட்கள் கொடுக்க மேகநோய் முதல் வேறுபல நோய்களும் தீரும். புளி, புகையிலை நீக்க வேண்டும்.

*4. கௌரி சிந்தாமணி செந்தூரம்:* 1 குன்றிமணி அளவு எடுத்துத் திரிகடுகு சூரணம் வெருகடியளவு கலந்து தேனில் கொடுக்க அரையாப்பு, தொடை வாழை முதலிய மேகம் தொடர்பான நோய்களும் மேலும் பல வகை நோய்களும் தீரும். ஆவாரைத் தைலத்தில் கொடுக்க மேக நோய்கள் 21-ம் தீரும்.

*5. நாகச் செந்தூரம்:* குன்றிமணி அளவில் திரிகடுகுச் சூரணத்தில் கொடுக்க, வெள்ளை, மேகத்தடிப்பு, விந்து நட்டம், கைகாலெரிவு, மூலம், பெருவயிறு முதலியன நீங்கும்.

*6. பூரண சந்திரோதயம்:* 1/2 முதல் 1 குன்றிமணியளவு கற்பூராதி சூரணத்தில் கலந்து வெற்றிலைச் சாற்றில் கொள்ள வெட்டை, மேகம்,சயம் போன்ற பல்வகை நோய்கள் தீரும். உடல் இரத்தப் பெருக்கால் செம்மை நிறமடையும். கண்கள் சிவக்கும். ஆயுள் பெருகும். விந்து கட்டும். வீரிய வளர்ச்சி உண்டாகும்.

**பதங்கம்**

*பறங்கிப் பட்டைப் பதங்கம்:* 1 முதல் 2 குன்றியளவு பனைவெல்லத்தில் அனுபானித்து வழங்க எல்லா வகை மேகநோய்களும் தீரும். 1 மண்டலம் வழங்கலாம்.

**குழம்பும் மெழுகும்**

*1. அகத்தியர் குழம்பு:* குன்றிமணியளவில் கற்கண்டில் கொடுக்கப் பிரமிய நோய்கள் நீங்கும். மிக்க பேதியை உண்டு பண்ணுமாகையால் அளவை அனுசரித்து வழங்க வேண்டும். ஓரிரு நாள் மட்டும் கொடுத்து நிறுத்திவிடலாம்.

*2. இரச மெழுகு:* மிளகளவு பனைவெல்லத்தில் காலை மாலை 2 வேளை ஏழு நாட்கள் மட்டும் வழங்க வெள்ளை, அழிகிரந்தி, குழிகிரந்தி, அரையாப்பு முதலான மேகம் தொடர்பான நோய்களும் கை, கால் முடக்கு முதலான வளி நோய்களும் தீரும். உப்பில்லாப் பத்தியம். பால்சாதம் உண்ணலாம்.

*3. இரசக்கந்தி மெழுகு:* சுண்டைக் காய்ப் பிரமாணம் பனை வெல்லத்தில் பொதிந்து உண்ணலாம். மோரும் சோறும் உண்டு அதன் பின் இம்மருந்தை உண்ணலாம். 1 மண்டலம் உண்ணலாம். எல்லா வகை வெள்ளை, வெட்டை நோய்களும் அரையாப்பு, கிரந்தி, புற்று, பிளவை, முதலிய மேகம் தொடர்பான நோய்களும், வளி நோய்கள் பலவும் தீரும். பத்தியமில்லை.

*4. இடிவல்லாதி:* சுண்டையளவு காலை மாலை 2 வேளையாக 1 மண்டலம் பனைவெல்லத்தில் பொதிந்து உட்கொள்ள மேகம், அரையாப்பு, கிரந்தி, இரணமேகம் ஆகியவை தீரும். இச்சாபத்தியம் தேவை. வறுத்த உப்பு சேர்க்கலாம். தயிர் மோர் அதிகம் சேர்க்கலாம். ஐந்து நாட்களுக்கு ஒரு முறை மருந்தை நிறுத்தி மறுபத்தியம் வைத்து, விளக்கெண்ணெயில் மூழ்கியபிறகு மறுமுறை மருந்தை ஆரம்பிக்கலாம்.

*5. நந்தி மை:* தேற்றான் விதை அளவில் பனைவெல்லத்தில் பொதிந்து 1/4, 1/2, 3/4, 1 மண்டலம் எனத் தேவையான நாள் அளவு உண்ணலாம். பத்தியம் தேவை. மேகநோய்கள் அனைத்திலும் இதனை வழங்கலாம். இம்மருந்தை உண்டபிறகு குமரித்தைலம், சந்தனாதித் தைலம், ஆமலகத்தைலம், சண்பகத் தைலம் ஆகிய தைலங்களில் தலை மூழ்கலாம்.

*6. நவ உப்பு மெழுகு:* மிளகு அளவு கருப்புக் கட்டியில் காலையில் மாத்திரம் 1 முதல் 3 நாள் உடல் வன்மைக்குத் தக்கவாறு வழங்க மலம் கழியும் கிரந்தி, மேகம் முதலியன நீங்கும். வெந்நீரும் சோறும் மட்டும் சேர்க்கலாம்.

மறுபத்தியத்தில் வறுத்த உப்பு, பசும்பால், நீர்மோர், சிறுகீரை, பிஞ்சு முருங்கை, கத்தரி, அவரை, பாசிப்பயறு, துவரை, பிஞ்சுக் கோழி, காடை முதலியன சேர்க்கலாம்.

*7. மகாவீர மெழுகு:* 1 முதல் 2 பயறளவு, பனை வெல்லத்தில் வழங்க மேக நோய்கள், வளி நோய்கள் யாவும் தீரும்.

*8. கௌசிகர் குழம்பு:* குன்றிமணி அளவு நாக்கில் தேய்த்து வெந்நீர் குடிக்க வெள்ளை, அக்கரம், தோடம் முதலியன நீங்கும். அரையாப்பு முதலிய நோய்களில் இக் குழம்பைச் சீலையில் தடவி, சுருட்டித் திரியாகத் திரித்து வேப்பெண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி உண்டாகும் புகையை நாசியில் ஏற்றத் தீரும்.

### சூரணம்

*1. அமுக்கராச் சூரணம்:* வெருகடியளவு காலை மாலை இருவேளை 1 மண்டலம் பாலில் கலந்து சாப்பிட்டு வர வெட்டை, பிரமியம் போன்ற நோய்களோடு மேலும் பலவித நோய்களும் தீரும். உடல் பருக்கும்.

*2. பஞ்ச தீபாக்கினி சூரணம்:* மூவிரலளவு சூரணத்தைத் தேன் அல்லது நெய்யில் கொள்ள வெட்டை, மூலவாய்வு, செரியாமை, போன்றன தீரும்.

*3. பறங்கிப்பட்டைச் சூரணம்:* வெருகடியளவு பாலில் கலந்து உண்ண, மேகம் முதலியன தீரும்.

*4. புங்கம்பூ சூரணம்.* வெருகடியளவு நாள் ஒன்றுக்கு 1 வேளையாக ஒரு மண்டலம் கொள்ள மேகவகையாவும் தீரும். புளி, புகை, வாயுப்பண்டம் நீக்கவும்.

*5. தாளிசாதி சூரணம்:* வெருகடியளவு தேனில் 2 வேளை கொள்ள அனைத்து நோய்களுடன் வெள்ளை நோயும் தீரும்.

### இரசாயனம்

*கந்தக இரசாயனம்:* 10 முதல் 15 குன்றியளவில் சர்க்கரை, தேன், நெய் இவற்றில் அல்லது பனைவெல்லத்தில் அனுபானித்து வழங்க மேக நோய்கள் தீரும்.

### இலேகியம்

*வெண்பூசணி இலேகியம்:* புன்னைக் காயளவு உட்கொள்ள, வெள்ளை நோய்கள் தீரும். உடல் வலுக்கும், விந்து ஊறும், சூட்டினால் உண்டான நீர்ச் சுருக்கு தீரும்.

பத்தியம் : புளி, புகை நீக்கவும்.

**நெய்**

*1. தூதுவளை நெய்*: ஒரு பொட்டுக் கரண்டி வீதம் காலையில் மாத்திரம் 1 மண்டலம் கொள்ள மேகம், உட்டிணம், ஈளை, இருமல், காசம், சயம், இரைப்பு ஆகியன தீரும்.

*2. புளியாரை நெய்*: பொட்டுக் கரண்டி அளவு 2 வேளை உட்கொள்ள மேகம், காசம், மாந்தம், ஈளை, இரைப்பு, வாந்தி, இருமல் இவை தீரும்.

*3. வெண்பூசணி நெய்*: பொட்டுக் கரண்டி வீதம் 2 வேளை உட்கொள்ள வெள்ளை, வெட்டை, ஆண், பெண் குறி எரிவு, முதலியன தீரும்.

*4. குங்கிலிய வெண்ணெய்*: புன்னைக் காயளவு 2 வேளை கொடுக்க மேகவெள்ளை, நீர்க்கடுப்பு, கைகால் காந்தல் முதலியன தீரும்.

**மணப்பாகு**

நன்னாரி மணப்பாகு: 1/2 பலம் மணப்பாகுடன் 1 பலம் தண்ணீர் கலந்து சாப்பிட்டு வர, மேகக் காங்கை, பிரமியம், நீர்ச்சுருக்கு, கட்டு, கடுப்பு, காந்தல் முதலியன நீங்கும்.

**தைலம்**

*1. இரசத்தைலம்*: கால் பலம் வீதம் காலையில் மாத்திரம் 3 நாள் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்க வெள்ளை, வெட்டை, நுணாக் காய் கிரந்தி, விரணம், மேகக் கசிவு, கண்டமாலை ஆகியன தீரும்.

*2. கந்தகச் சுடர்த் தைலம்:* 1 முதல் 2 குன்றிமணி அளவு சர்க்கரையில் காலை மாலை 2 வேளை 10 நாட்கள் கொள்ள வெள்ளை, விரணம், கருமேகம் முதலியன நீங்கும் , உப்பு, புளி பத்தியம் தேவை.

*3. கருடன் கிழங்குத் தைலம்*: 2 முதல் 3 குன்றியளவுடன் சர்க்கரை கலந்து கொடுக்க கிரந்தி, தீரா வெள்ளை, அரையாப்பு, மேகவிரணம், மேகஊறல், கறுமேகம், மலச்சிக்கல் முதலியன நீங்கும்.

4. சித்தாதித் தைலம்: மூன்று முதல் ஐந்து துளி நிசித்தண்ணீரில் அல்லது சோம்புக் குடிநீரில் கொடுக்க பேதியாகும். அதனால் மிகுதியடைந்த தாது தன்னிலை பெற்று நோய் நீங்க ஏதுவாகும். மேக நோய், பறங்கிப்புண் போன்ற நோய்களில் பேதிக்கு வழங்க இம் மருந்து பயன்படும்.

*5. மேகநாதத் தைலம்*: முட்டைக் கரண்டியளவு இருவேளை கந்தகத்துடன் கொடுக்க அரையாப்பு, இலிங்கப்புற்று, வெள்ளை, வெட்டை முதலியன தீரும்.

உப்பு, மொச்சை, பாசிப்பயறு, துவரை, முளைக்கீரை இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். 5 நாள் மருந்துண்டு பின்னர் பசுமோர் கூட்டலாம். 15 நாள் சென்ற பின் எண்ணெயிலிட்டு மூழ்கலாம்.

# II

"குணபாடம் தாது சீவ வகுப்பு" என்னும் நூலில் கூறப்படும் வெள்ளை நோய் சிகிக்சை முறைகள் வருமாறு :

**1. அயமெழுகு**

அயப்பொடி 70 கிராம், பொரித்த வெங்காரம் 35 கிராம், நவாச்சாரம் 8.75 கிராம், புளிப்பு மாதுளை இரசம் 700 கிராம்- இவற்றுள் முதல் 3 சரக்குகளையும் கல்வத்திலிட்டுச் சாறு விட்டரைத்து இருபுச்சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயால் எரித்து, மேற்படிச் சாற்றில் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுக் கிளறிக்கொண்டே சாறு முழுவதும் முடியும்வரை எரித்து, மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும். பதம் வரும் வரை சாற்றை உபயோகிக்க வேண்டும்.

அளவு: 2 முதல் 4 கிராம் வரை.

துணை மருந்து: நெய், தேன், சோம்புக் குடிநீர், சுக்குக் குடிநீர்.

தீரும் நோய்: பித்த வெட்டை, சோபை, காமாலை.

**2. காந்தச் செந்தூரம்**

ஒரு பலம் சுத்தி செய்த காந்தப் பொடியை 24 நாட்களுக்குள்ளே வாழைக் கிழங்குச் சாறு, விளாமரப் பட்டைச்சாறு, முருங்கைப்பட்டைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு - இவைகள் ஒவ்வொன்றாலும் தனித்தனியே அரைத்து வில்லை தட்டிக் கவசித்து உலர்த்திப் புடமிடவும். அப்பொழுது காந்தம் முருக்கம்பூ நிறச் செந்தூரமாகும்.

வெண்ணெயில் ஒன்று முதல் இரண்டு குன்றிமணி எடை அளவு கொடுக்க மேகப் பிணிகள் யாவும் விலகும். புளி, உப்பு நீக்கிப் பத்தியம் கொள்ளின் விரைவில் நோய் குணமாகும்.

**3. செம்புச் செந்தூரம்**

ஒரு பலம் சுத்தி செய்த செம்புப் பொடியை 32 நாட்களுக்குள்ளே தாமரையிலைச்சாறு, கரந்தையிலைச் சாறு, சண்பகத்தின் சாறு, வேம்பின்சாறு இவை ஒவ்வொன்றாலும் தனித்தனியே அரைத்து, வில்லை தட்டிக் கவசித்து

உலர்த்திப் புடமிடவும். அப்பொழுது செம்பு செம்பசுமை நிறச் செந்தூரம் ஆகும். இதனை 1 முதல் 2 குன்றி மணியளவில் கட்டுக் கொடிச் சாற்றில் வழங்க வெள்ளை என்னும் மேக நோய்கள் தீரும்.

## 4. நாகப் பற்பம்

சுத்தி செய்த நாகம் அரை பலத்தைக் குகையிலிட்டு உருக்கிக் கண் விட்டு ஆடும்போது சிற்றாமணக்கிலையைக் கசக்கி ஐந்தாறு சொட்டுப் பிழியச் சத்தம் உண்டாகும். மறுபடியும் ஐந்தாறு சொட்டுப் பிழியச் சத்தம் அடங்கும். மேற்படி நாகத்தின் மீது படும்படி துருத்தியால் ஊதி, மறுபடியும் ஐந்தாறு சொட்டுப் பிழிந்து சிற்றாமணக்கின் வேரினால் கிண்ட மல்லிகைப்பூப் போல நீறாகும்.

இதனை வெள்ளை, வெட்டை முதலிய பிணிகளுக்கு வழங்கலாம். தாதுவிருத்தியும் உண்டாகும்.

மேகவெட்டை வெப்பத்தினால் உடலில் உண்டாகும் 6 வகை விரணப் பிணிகளுக்கும் நாகப் பற்பத்தைத் தக்க அனுபானத்தில் வழங்கத் தீரும் அவை:

1. மேகவெட்டைக் கடின வாத விரணம் என்ற நோயில் இம்மருந்தைக் குளிர்ந்த நீரில் வேப்பெண்ணெயை அரைப்பங்கு கூட்டிக் கொடுத்து, மேல் பூச்சுக்கும் மேற்படிக் கலவையையே உபயோகித்து, இலுப்பைப் பிண்ணாக்கு அரைத்துத் தேய்த்து வெந்நீர் விட்டுச் சுத்தி செய்யவும்.

2. மேகவெட்டை வாத லலித விரணத்தில் இதைப் பனங்கள்ளில் தேங்காய் நெய் சேர்த்துக் கொடுத்து, மேல் பூசி, தேய்த்துக் கழுவப் பயற்றையும் வெந்நீரையும் உபயோகிக்கவும்.

3. பித்தக் கடின விரணத்திற்குக் காய்ச்சிய பட்டைச் சாரயமும் ஆமணக்கு நெய்யும் அனுபானமாம். தேய்த்துக் கழுவ சீக்கிரான் இலையை உபயோகித்து, வெந்நீரும் இலுப்பை நெய்யும் பயன்படுத்தலாம். புளியிலை விட்டுக் காய்ச்சிய நீரை உபயோகிக்கவும்.

5. கபக் கடின விரணத்தில் முந்திரிப்பழச் சாறும் காட்டாமணக்கு நெய்யும் அனுபானமாகும். தேய்த்துக் கழுவ சிகைக்காய் பயன்படுத்த வேண்டும்.

6. கபலலித விரணத்தில் தேனும் பிரம்மதண்டி நெய்யும் அனுபானம் ஆகும். தேய்த்துக் கழுவக் கொள்ளிலையைப் பயன்படுத்தலாம்.

### 5. நாகச் செந்தூரம்

இலுப்பை நெய்யில் சுத்தி செய்த நாகத்தைப் புதுச் சட்டியிலிட்டு உருக்கி சீதேவிச் செங்கழுநீர்ப் பூண்டு இட்டு அயக்கரண்டியால் 4 சாமம் கிண்டினால் நாகம் மாண்டுபோகும். பிறகு சீதேவி செங்கழுநீர்ச் சாறுவிட்டு அரைத்துக் கனமான வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு, மேலோடு கொண்டு மூடி வலுவாய்ச் சீலை செய்து கஜபுடமிட்டு எடுத்துத் திரும்பப் பொற்றலைச் சாறுவிட்டு அரைத்து, 3 முறை புடமிட்டெடுக்க நாகம் செந்தூரம் ஆகும். இது மஞ்சள் சிவப்பு நிறமாக இருக்கும்.

பணவெடை அளவு பசுவெண்ணெயில் குழைத்து 2 வேளை வீதம் அரைமண்டலம் கொள்ள, மேகநோய் நீங்கும். கரப்பான் பண்டம் சேர்க்கக் கூடாது.

### 6. நாகச் செந்தூரம் (வேறு முறை)

நன்றாகச் சுத்தி செய்த சிறுகண் நாகம் 4 பலம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி அந்த நாகம் நன்றாக உருகும் சமயத்தில் வெடியுப்பு, ஓமம், சீவின சுக்கு , பூசு மஞ்சள் ஆகியவற்றைச் சமமாகப் பொடி செய்து ஒரு படி எடுத்துக் கொண்டு அந்த நாகத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுத் தூள் ஆகும் வரை வறுக்க வேண்டும்.

அப்படி வறுக்கப்பட்ட அத்தூளுடன் சிவப்பு நாயுருவிச் சமூலத்தை இடித்து முன்போலவே கொஞ்சம் கொஞ்சமாய் ஒருபடி தூள்போட்டு வறுத்து அத்தூளைப் பிறகு எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து மாதுளம்பூ நிறம் வரும் வரைக்கும் புடமிட்டு வைத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரத்தைப் பணவெடைத் திரிகடுகுச் சூரணத்துடன் சேர்த்து, நெய்யிலாவது தேனிலாவது கொடுத்தால் சில நாட்களில் மேக நோய்கள், கை கால் எரிச்சல், வெள்ளை, விந்து நட்டம், மூலம், பெருவயிறு, கவிசை முதலியன நீங்கும்.

### 7. தங்கப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த தங்கத்திற்குத் துவரையிலைச்சாறு, ஆத்தியிலைச்சாறு, ஆமணக்கிலைச்சாறு, அகத்தியிலைச்சாறு, வாழைக்கனி இரசம் ஆகிய இவற்றால் 5,4,3,2,1 பலம் ஆகிய அளவு களில் எடுத்துத் தனித்தனியே அரைத்துப் புடமிட்டெடுக்கத் தங்கம் பற்பமாகும். இது நல்ல வெள்ளை நிறத்தில் இருக்காது. சிறிது மஞ்சளாகவே இருக்கும்.

அவரைக்கொட்டையில் 6 இல் 1 கூறு அளவில், வெந்நீர் அனுபானத்தில் உட்கொள்ள மேகப் பிணிகள் விலகும். மருந்து அருந்தும் காலத்தில் பெண்போகம் நீக்க வேண்டும்.

## 8. வெள்வங்கப் பற்பம்

1 பலம் வெள்வங்கத்தைச் சுத்தி செய்தபின் பெரும்பீர்க்கு, வெள்ளரி, கோவை ஆகிய இவற்றின் சமூலச்சாறு முறையே 4,3,2 பங்கு என்ற அளவில் தனித்தனியே அரைத்துப் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும். இவற்றை முறையே 15,10, 5 நாட்கள் அரைக்க வேண்டும்.

இதனைத் துவரையில் கால்கூறு என்ற அளவில் வழங்கலாம். பித்த காரகவெட்டை என்னும் மேக நோய், வெண்ணெயில் அனுபானித்துக் கொடுக்கத் தீரும்.

## 9. வெள்வங்கச் சுண்ணம்

வங்கம் நான்கு பங்கு எடுத்து உருக்கி, உருக்கு முகத்தில் 4 பங்கு இரசம் சேர்த்து வெட்டையாக்கி அரைக்கவும். பிறகு 4 பங்கு அண்ட ஓடு சேர்த்து அரைத்து ஒரு பங்கு வீரம் சேர்த்துத் தூளாக்கி ச் சுண்ணாம்பு நீரைச் சிறிது சிறிதாக விட்டு நன்றாய் மடியும்படி அரைக்கவும். பின் வச்சிரமூசையிலிட்டுச் சீலை மண் செய்து உலர்ந்த உடன் உலையிலிட்டு மூசை அழுக ஊதி எடுக்கச் சுண்ணம் ஆகும். ஒரு அரிசி எடை தேனில் அனுபானித்துக் கொடுக்க மேக நோய் தொடர்பாக வரும் மூட்டு வாத சூலை நோய்கள் நீங்கும்.

## 10. வெள்வங்கச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த வெள்வங்கப் பொடியைப் புளியிலைச் சாறு, ஆலங் கொழுந்து சாறு, விழுதியிலைச் சாறு, சீதாப்பழ மரவிலைச் சாறு, பொன்முசுட்டைச் சாறு, சிற்றரத்தையிலைச் சாறு ஆகிய இவை வகைக்கு 6 பலம் கொண்டு, ஆறு ஆறு நாட்கள் தனித் தனியே அரைத்துப் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

இதனை 1 முதல் 2 குன்றிமணி அளவில் வேலம்பட்டைச் சாராயத்தில் வழங்க வெண்மேகக் கிரந்தி ரோகம் தீரும்.

## 11. தங்க உரம்

நவாச்சாரம், வெள்வங்கம், கந்தகம், இரசம், இவைகளைச் சம எடை சேர்த்து வெடியுப்பு திராவகத்தால் மெழுகு போலரைத்துக் குப்பியில் இட்டு முறைப்படிச்

சீலைமண் செய்து வாலுகா இயந்திரத்தில் 25 மணி நேரம் எரித்தெடுக்கப் பொன் அப்பிரகம் போலப் பளபளவென்றிருக்கும். இதுவே தங்க உரமாகும்.

130 மி.கிராம் முதல் 260 மி.கி. வரை தேன் அல்லது நெய்யில் வழங்க ஆண், பெண் பிறப்புறுப்பு நோய்கள் நீங்கும். நாட்பட்ட வெள்ளை நோயில் நல்ல குணத்தைக் கொடுக்கும். உடலைத் தேற்றவும், உரமுண்டாக்கவும், விந்து நட்டத்தைப் போக்கிப் புத்துணர்ச்சி நல்கவும் இது உதவும்.

## 12. வெள்ளி உரம்

தங்க உரத்தில் கூறப்பட்டுள்ள சரக்குகளுடன் படிகாரம் 1/4 பங்கு சேர்த்துச் செய்ய வெண்ணிறத்தை அடையும். இதுவே வெள்ளி உரம்.

அளவு: 1/2 முதல் 1 குன்றி எடை.

அனுபானம்: சாதிக்காய் இலேகியத்தில் வழங்கத் தாது விருத்தி உண்டாகும். அமுக்கராச் சூரணத்தில் தேன் கலந்து கொடுக்க மேகச்சூலை தீரும்.

## 13. வெள்ளிப் பற்பம்

வெள்ளிப் பொடி ஒரு பலத்திற்கு இரண்டு பங்கு வீதம் நெட்டியிலைச் சாறு ஒவ்வொரு நாளும் விட்டு ஊறவைத்து, 6 நாட்கள் கழித்தெடுக்கவும், பிறகு ஒரு நாள் கொவ்வைச் சாற்றில் ஊறவைத்து எடுத்து மறுநாள் மேற்படி சாற்றாலரைத்து வில்லை செய்து உலர்த்திக் கொள்ளவும். கறுவேலின் தோலை வேம்பின் நெய்யால் 4 நாழிகை அரைத்து மூசை செய்து நிழலில் உலர்த்தி, மகிழம்பூத் தூளை முசையில் சிறிது இட்டு வில்லையை வைத்து மேலே மேற்படித் தூளை நிறைத்துத் தினம் ஒரு சீலைமண் செய்து உலர்த்தி, அதுபோலவே மற்ற 6 நாளும் சீலை செய்து உலர்ந்தபின் 100 எருவில் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும்.

அளவு: 1 முதல் 2 குன்றிமணி அளவில் தேன், நெய், சர்க்கரை ஆகிய அனுபானங்களில் வழங்க மேக வாதங்கள், மேக விரணங்கள், மேக ஊறல்கள், மேகப்புள்ளிகள் முதலான மேக நோய்கள் நீங்கும். புளி கால் பங்கே சேர்க்கலாம்.

## 14. வெள்ளிச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த வெள்ளிப் பொடியில் பாதிரிச்சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, நிலப்பனைக் கிழங்குச் சாறு, சித்திரமூலச் சாறு இவற்றைத் தனித்தனியாய் விட்டு முறைப்படி அரைத்து, வில்லை செய்து உலர்த்திக் கவசித்துப் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

கற்றாழைச் சாற்றில் 1 முதல் 2 குன்றிமணியளவில் வழங்க மேகத்தேமல் நோய் நீங்கும்.

## 15. இரசப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த இரசத்திற்குக் கவுரிவால் புல்சாறு, கறு ஊமத்தைச் சாறு, ஆலங்கொழுந்துச் சாறு, கம்மாறு வெற்றிலைச் சாறு, பேரீச்சம் சாறு ஆகியவற்றை வகைக்கு 3 பலம் அளவில் எடுத்துத் தனித்தனியே வகைக்கு 5 நாட்கள் அரைத்து வில்லை செய்து, தனித்தனியே 5 நாள் உலர்த்தி ஒவ்வொருமுறையும் 40 வறட்டியில் புடமிட்டு எடுக்க நல்ல இரசப்பற்பம் கிடைக்கும்.

அளவு: துவரையில் நான்கில் ஒரு பங்கு.

அனுபானம்: கறுப்பு ஊமத்தங்காய் விதைக் குழித் தைலம்.

மேகப்புண்கள் யாவும் நீங்கும் . மேகப்புண்கள் இருவகையானவை:

1. கர்ப்பத்தைப் பற்றியது: தாய் தந்தையரின் சுரோணிதம், சுக்கிலம் என்னும் இருவகை சம்பந்தத்தினால் கர்ப்பத்திலே ஊறி வருவது. இதில் கை, கால், மார்பு, முகம் வாய் ஆகிய இடங்களில் சூட்டைக் காட்டி, சுரம் காய்வது போல் காயும், அன்னத்தை வெறுக்கச் செய்து பசி, தாகம் முதலியவற்றை உண்டாக்கிச் சூட்டுடன் சிவந்த பருவைப்போலவும் கோடைக் கொப்புளத்தைப் போலவும் புன்னைக் காயைப் போலவும் சங்கம்பழத்தைப் போலவும் விரணம் காணும்.

வாதம் மிகுந்த உடலானால் பாதத்தின் பின்னால் குதிகாலடி, பக்கவிலா, முழங்கால், கணுக்கால் மேற்புறம், புறவடிப் பள்ளம் முதலியவைகளில் விரணம் ஏற்படும்.

பித்தம் மிகுந்திருந்தால் மார்பின் பள்ளத்திலும், முலைக் கண்களிலும், புறமார்பிலும் ஏற்படும்.

கபம் மிகுந்திருந்தால் முகம், அக்குள், தோள்களின் மேற்பக்கம், பல்லடி, வாய் ஆகிய இடங்களில் புறப்படும்.

2. பெண்போக மிகுதியால் வந்த புண்: வாத உடம்பில் தொடையடியின் மடிப்பு, விதை, வாய் இவ்விடங்களில் ஏற்படும்.

பித்த உடலானால் முகம், கால், தனம், விலாப்பக்கம் ஆகிய இடங்களில் தோன்றும்.

கப உடலானால் மூக்குத் தண்டின் விளிம்புகள், காது, கன்னம் ஆகிய இடங்களில் தோன்றும்.

கறுப்பு ஊமத்தங்காய் விதைக் குழித் தைலம் செய்முறை

கறுப்பு ஊமத்தங்காய் விதை 1 வீசை; பூவரசின் விதை, பிரண்டை விதை, காரை விதை, அழிஞ்சில் விதை, நிலாவாரை விதை, எட்டிவிதை, பொன்னாவாரை விதை, பேய்ப் பீர்க்கன் விதை, பலாக்கொட்டை, பேய்ப்புடல் விதை, துளசி விதை, முசுமுசுக்கை விதை, மிளகாய் விதை இவையெல்லாம் சேர்த்து 1 வீசை இருக்க வேண்டும்.

வெள்ளைக் குங்கிலியம் 10 பலம், மெழுகு 5 பலம், கொப்பரைத் தேங்காய் 5 பலம்- இவைகளை ஒன்று சேர்த்துக் கடத்தில் இட்டுக் குழித்தைலம் இறக்கி 10 நாள் ஆற வைத்து எடுத்துக் கொள்ளவும். இதுவே கறுப்பு ஊமத்தாங்காய் விதைக் குழித் தைலம் ஆகும்.

மேகப்புண்களில் இரசப் பற்பத்திற்கு அனுபானமாக இது வழங்கப்படுவதோடு, விரணங்களின் மேல் தடவுவதற்கும் பயன்படும். பருக்கள் தோன்றும் போதே இதைப் பூச அவை பழுத்து உடைந்து ஆறிவிடும். தானாகவே உடைந்து புண்ணாகுமானால், சுரமில்லாவிடில் சாத்தியம் என்றும் சுரம் தோன்றில் அசாத்தியம் என்றும் கூறப்படும்.

பத்தியம்: வெப்பத்தைக் கொடுக்கும் உணவு வகைகளை நீக்க வேண்டும். பூசணிக்காய், கீரைத்தண்டு, முள்ளங்கி, சுரை ஆகியவை ஆகும் பொருள்களாகும். புளித்த பொருள்கள் ஆகா.

பொதுவாக இரசம் தொடர்பான மருந்துகளை அருந்தும் காலத்து மீன், உப்பு, மிகு சீதம், மிகு உஷ்ணம், மந்தப் பொருள், எண்ணெய், மதுபானம், கைப்பு, கார்ப்பு, புளிப்புச் சுவையுள்ள பொருள்கள், பெண்போகம் ஆகாது.

## 16. இரசப் பற்பம் (வேறு முறை)

சுத்தி செய்த இரசம் 1 பலம் எடுத்து இதனை மேல் சொன்ன கறுப்பு ஊமத்தங்காய் விதைக் குழித் தைலத்தால் 5 நாள் அரைத்து வில்லை தட்டி, 5 நாள் வெயிலில் காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து இலகு புடமிடப் பற்பமாகும்.

அளவு: அரை உளுந்து எடை. துணைமருந்து: தேன், நெய், சர்க்கரை.

தீரும் நோய்: மேக நோய்கள், இருமல், ஈளை, சுரம் முதலியன.

## 17. இரசப் பற்பம் (வேறு முறை)

சுத்தி செய்த இரசம் 1 பலம் எடுத்துப் பனைமட்டையின் சாறுடன் கல்வத்தில் இட்டு 8 சாமம் அரைத்து, காசளவான வில்லை செய்து உலர்த்திப் பனை மட்டைக்குள் வைத்து மூடி, 3 சீலை செய்து நன்குலர்த்திக் காய்ந்த பின்பு, 30 வறட்டி கொண்டு புடம் போட்டெடுக்கப் பற்பமாகும்.

1 முதல் 2 குன்றியளவில் நெய்யில் கலந்து கொடுக்க மேகநோய்கள் யாவும் தீரும்.

## 18. இரசப் பற்பம் (வேறு முறை)

சுத்தி செய்த இரசம் எட்டு பலம் எடுத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் சோற்றுப்பும் செங்கல் தூளும் இட்டு அதில் இரசத்தை விட்டு மேல் சட்டி கொண்டு மூடி மண் சீலை செய்து உலர்த்தி, நெருப்பில் வைத்து எரிக்கவும். இரசம் பதங்கித்து மேல் சட்டியில் ஏறி நிற்கும். அதனை எடுத்துக் குழிக்கல்லில் இட்டுப் பதங்கத்தின் எடைக்குச் சரி எடை சங்கத்திராவகம் விட்டு அரைத்து, கல்வத்துடன் வெயிலில் வைக்கவும். இவ்வாறு உலர்த்த, வெள்ளை நிறப் பற்பம் கிடைக்கும். மேக விரண நோய்களுக்கு 7 நாட்கள், 1 குன்றியளவு கொடுக்கத் தீரும்.

## 19. சண்டரசப் பற்பம் அல்லது இரசப் பதங்கம்

இரசத்தை வேண்டிய அளவு எடுத்து வெடியுப்புத் திராவகத்தால் அரைத்து, வில்லைதட்டிக் காயவைத்து, 3 பங்கு உப்பும் 1 பங்கு செங்கல் தூளும் கலந்து அதில் பாதியை ஒரு சட்டியில் கொட்டி அதன் மேல் வில்லையை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை செய்து முத்தீயாக 12 மணி நேரம் எரிக்கவும். ஆறின பின் மேல் சட்டியில் படிந்துள்ள பதங்கத்தை எடுத்து மேற்படி திராவகத்தை விட்டு முன்போல் அரைத்து வில்லை செய்து எரிக்கவும். இப்படியே பதங்கிக்காமல் அடியில் தங்கும் மட்டும் எரிக்கவும். இதுவே சண்டரசப் பற்பமாகும்.

1/4 முதல் 1/2 அரிசி எடை நெய், தேன் இவற்றில் வழங்க மேகம், மேகப்புண் யாவும் தீரும்.

## 20. இரச மெழுகு

வாலை இரசம் 2 வராகன் எடை, பறங்கிப்பட்டை 2 வராகன் எடை, திப்பிலி, இலவங்கம் இரண்டும் 4 வராகன் எடை. இவற்றைக் கரும்பு வெல்லம் சேர்த்தரைத்து 3/4 வராகன் எடையளவான உருண்டை செய்து வைத்துக் கொள்ளவும்.

வேளைக்கு ஒரு உருண்டை அளவில் காலை மாலை இருவேளையாக 7 நாட்கள் சாப்பிட மேக வெள்ளை, தடிப்புப் புண்கள், அரையாப்பு, மேகச் சூலை, குழிகிரந்தி, அழிகிரந்தி, கை கால் முடக்கு போன்ற நோய்கள் யாவும் தீரும்.

## 21. இரசத் தைலம்

வெற்றிலை, பாவட்டையிலை, கோவையிலை இம் மூன்றையும் வகைக்கு 5 பலமாக நிறுத்துக் கல்லுரலிலிட்டுப் பாதரசம் பலம் 1/4 விட்டு, இரும்புப்பூணில்லாத உலக்கையால் மைபோலிடித்துக் கடைந்து திரட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு, ஆமணக்கு நெய் 1 படி ஊற்றி மர அகப்பையால் ஒன்றுபடக் கலந்து 3 நாள் சூரியபுடம் வைத்து எடுக்கவும் பலம் 1/4 வீதம் போதுமான நாட்கள் சாப்பிட மேக நோயில் தோன்றும் நுணாக் காய் கிரந்திகள் நீங்கும். எந்நேரமும் சீழ் கசிந்து கொண்டிருக்கும் வெள்ளை என்னும் மேகரோகம் நீங்கும். உப்பு, புளி சேர்க்கலாகாது.

## 22. மேகவிரணக் களிம்பு

இரசம், இலிங்கம், பூரம், வீரம்,பால்துத்தம், மயில்துத்தம், மிருதார்சிங்கி, நீரடிமுத்து, கார்போகரிசி, கசகசா, மஞ்சள், மெழுகு வகைக்கு 1/2 பலம். மெழுகு நீங்க மற்றவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வைத்துக் கொள்ளவும். தேங்காய் எண்ணெய் காய்ச்சி அதில் மெழுகைச் சேர்க்கக் கரைந்துபோகும். சூடாறுமுன் பொடியைத் தூவி, ஆறும் வரை கை விடாமல் கிளறிவரக் களிம்பாகும்.

இதனை மேகம் தொடர்பான விரணங்களுக்குப் போட ஆறும்.

## 23. சண்டரசப் பற்பம்

இலிங்கத்திற்குச் சங்கத்திராவகம் விட்டு அரைத்துப் பதங்கக் கருவியிலிட்டு முறைப்படி எரிக்கவும். இலிங்கம் கீழ்ச் சட்டியிலும் மேல் சட்டியிலும் படிந்திருக்கும். அதைச் சேகரித்து முன்போலவே சங்கத்திராவகம் விட்டரைத்து மேலும் நான்கு முறை செய்யக் கீழ்ச்சட்டியில் இலிங்கம் நீறாகிவிடும்.

இதனை நல்ல வெல்லத்தில் பணவெடை கொடுக்க மேகவாயு, நீர்க்கட்டு, நீரடைப்பு, முதலிய நோய்களுடன் மேலும் பல கடுமையான நோய்களும் தீரும்.

## 24. பூரப் பற்பம்

சுத்தி செய்த பூரத்தைக் கல்வத்திலிட்டு 7 நாட்கள் நன்றாக அரைத்துப் பின்னர் சேகரித்துக் கொள்ளவும். இதுவே பூரப் பற்பமாகும்.

1/2 முதல் 1 உளுந்தெடை கரும்பு வெல்லத்தில் 7 நாள் அருந்தத் தொடை வாழை, மேக வாயு முதலான பல நோய்களும் தீரும்.

## 25. பூரக் குளிகை

சுத்தி செய்த பூரம் 5 வராகன் எடை, வெளைப்பூண்டு 2 வராகன் எடை, மிளகு 30 வராகன் எடை, வெற்றிலை 40 வராகன் எடை சேர்த்து வெற்றிலைச் சாறு விட்டு 5 சாமம் அரைத்துச் சுண்டைக்காய் போல் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். வேளைக்கு 1 மாத்திரையாய் 2 வேளை 7 நாள் அருந்தவும். உப்பு, புளி நீக்கவும்.

மேகக்கிரந்தி, இலிங்கப்புற்று, குழிப்பட்ட விரணம், சொறிகிரந்தி முதலியன நீங்கும்.

## 26. பூரக் களிம்பு

இரசக்கற்பூரம் 1 பங்கு, சுண்ணாம்பு 1/2 பங்கு, மெழுகு 6 பங்கு சேர்த்துக் கலந்துகொள்ளவும். இதனைப் பறங்கிப் புண்ணுக்கு உபயோகிக்கலாம்.

## 27. பூரப் பொடி

கடுக்காய்த் தோல், காய்ச்சுக்கட்டி, மிருதார்சிங்கி இவைகளைத் தனித்தனியே ஒவ்வொரு பலம் எடுத்து, சம எடை பூரம் சேர்த்துத் தூள் செய்து வைத்துக் கொள்ளவும்.

ஆண் குறியில் தோன்றும் கொறுக்குப்புண் (மேகப்புண்) நோயில் இத்தூளை மேலே தூவி வரக் குணமடையும்.

## 28. பூர எண்ணெய்

இரசக்கற்பூரம், ஏலரிசி, சுக்கு வகைக்கு 1 பலம் எடுத்துப் பொடிக்கவும். சிற்றாமணக்கெண்ணெய் 40 பலம் எடுத்து அதைச் சிறிது சிறிதாய்ப் பூரப் பொடியில் விட்டரைத்துப் பின் மற்றைய இரண்டு சரக்கின் பொடிகளையும் கலந்து கொள்ளவும். 1/2 முதல் 1 அவுன்சு 3 நாள் காலை மாத்திரம் வழங்கவும். மேக நோய், வளி நோய் போன்றவற்றில் கேடடைந்த தாதுக்களைத் தன்னிலைப்படுத்த, மலம் கழியும் பொருட்டு வழங்கலாம்.

## 29. வீரக் களிம்பு

வீரம் 1 வராகன் எடை எடுத்து அரை பலம் வெண்ணெயில் அரைத்துக் கொள்ளவும். மேகத்தால் சொறி சொறியாகவும் புள்ளி புள்ளியாகவும் காணப்படும் புண்களின் மேல் பூச முதலில் விரணமாகும். பின் ஆறும்.

### 30. வீரக் குழம்பு

ஒரு கழஞ்சு வீரத்தைப் பொடித்துக் கால்படி வெண்ணெயிலிட்டு 2 சாமம் நன்றாய் அரைத்து நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும். இதனை அரையாப்புக்கு மேல் தடவி வரக் குணமாகும். வீக்கங்களுக்கும் கண்டமாலைக்கும் விரணங்களால் உண்டாகும் நெறிக்கட்டுகளுக்கும் போடலாம்.

### 31. வீரரணச் சிங்கிக்கயிறு

புது ஓட்டிலிட்டு நீர் சுண்டும்படி அடுப்பேற்றி எரித்து எடுத்து எண்ணெய், வெங்காரம் வராகன் எடை 10; வீரம் வராகன் எடை 1; உளுந்தின்மா வராகன் எடை 2. இவற்றைக் கல்வத்திலிட்டு மழை நீர்விட்டு அரைத்து, மெழுகு பதத்தில் மாத்திரையாக்கி, நிழலில் உலர்த்திக் கொள்ளவும். நாளானால் மாத்திரையின் வெண்ணிறம் பழுப்பாகும். அதனால் தவறில்லை. ஓர் ஆண்டு பழகிய பிறகே இதனை உபயோகிக்க வேண்டும்.

இம்மாத்திரையை இழைத்துப் பொட்டுப் போல் தடவிவர மேக விரணங்கள், கிரந்தி, பிளவை நீங்கும்.

### 32. கந்தகப் பற்பம்

கந்தகத்திற்கு வெள்ளைக் காட்டாமணக்குப் பால் விட்டு 1 சாமம் சுருக்குக் கொடுக்கவும். பிறகு 2 நாள் மேற்படி பால் விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்திச் சில்லிட்டுச் சீலை செய்து 5 வறட்டி கொண்டு புடமிடப் பற்பமாகும்.

அளவு: 1 முதல் 2 குன்றி.

துணைமருந்து: தேன், நெய்.

தீரும் நோய்: மேகம், தோல் பிணிகள் முதலியன .

### 33. கந்தக மெழுகு

கந்தகம் 4 பலம் எடுத்து அதனை ஈருள்ளிச் சாறுவிட்டு 3 நாளும், முள்ளங்கிச்சாறு விட்டு 3 நாளும் அரைத்து எடுக்கக் கந்தகமெழுகு கிடைக்கும். இதனைத் தேனில் கொடுக்கக் கிரந்தி, சூலை நோய்கள் தீரும்.

### 34. கந்தகத் தைலம்

கந்தகம், வெடியுப்பு, மனோசிலை இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்துப் பொடித்து, நவாச்சாரம், வீரம் இவைகளை வகைக்கு 1/2 கழஞ்சு கூட்டிப் பசு வெண்ணெய் 4 பலம் சேர்த்து அரைத்துச் சுடர் தைலம் வாங்கவும்.

அளவு: 1/2 பணவெடை, காலை மாலை 2 வேளை, 10 நாள்.

துணைமருந்து: சர்க்கரை.

தீரும் நோய்: வெள்ளை, கறுமேகம், சொறி, விரணம், குட்டம், குன்மம் முதலியன.

## 35. கந்தக இரசாயனம்

கந்தகம் 10 பலம், அமுக்கராக் கிழங்கு 5 பலம், பறங்கிச் சக்கை 2 பலம்.திரிகடுகு, திரிபலா, வாய்விடங்கம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடலைப்பருப்பு, சேங்கொட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை வகைக்குப் பலம் 1, இவைகளைத் தனித்தனியே சூரணம் செய்து, பிறகு எல்லாவற்றையும் கலந்து சர்க்கரை, தேன், நெய் சேர்க்கவும்.

அளவு: 10 முதல் 15 குன்றி எடை.

தீரும் நோய்: மேக நோய்கள் மூத்திரக்கிரிச்சரம், குட்டம், வீக்கம், குன்மம் முதலியன தீரும்.

## 36. பஞ்சபாடாணச் செந்தூரம்

இலிங்கம், மனோசிலை, காந்தம், தாரம், கெந்தி, இரசக்கற்பூரம், வெள்ளைப் பாடாணம்-இவை வகைக்கு 1 பலம். இவற்றைச் சுத்தி செய்து குப்பைமேனி, வெற்றிலை, பருத்தி, வெள்ளறுகு, துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை ஆகியவற்றின் சாற்றால் வகைக்கு 4 சாமம் ஆட்டி, வில்லை செய்து நிழலில் உலர்த்தி அதற்கு வெற்றிலையால் கவசம் செய்து ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடி, 7 சீலைமண் செய்து, நன்கு காய வைத்து, அடுப்பேற்றித் தீபம் போல் 4 சாமம் எரித்து ஆற வைத்துப் பார்க்க மேல் சட்டியில் செந்தூரம் பற்றியிருக்கும்.

இதில் பணவெடை தேன், இஞ்சிச்சாறு இவைகளில் அனுபானித்துக் கொடுக்க மேக நோய்கள், கிரந்தி, அரையாப்பு போன்றவற்றுடன் பலவித வளிநோய்களும் தீரும்.

## 37. மிருதார்சிங்கிச் செந்தூரம்

மிருதார்சிங்கி 1 சேர். இதனைப் பொடித்துத் தேனில் 3 நாள் ஊறவைத்தெடுத்துக் குகையில் இட்டு அல்லது இரும்புக் கரண்டியிலிட்டு உருக்கி ஊற்ற ஈயம் புறப்படும். அந்த ஈயத்தை ஓர் அடி கனத்த சட்டியில் வைத்து அடுப்பேற்றி, காடாக்கினியாய் எரித்துக் கண்டங்கத்தரி, பொற்றலைக் கையான்,

புரசம்பூ இவை மூன்றும் சமஎடை எடுத்துப் பொடித்து வைத்துக் கொண்டு ஈயத்துக்குக் கிராசம் கொடுத்துச் செந்தூரம் ஆகும்வரை இரும்புக் கரண்டியால் கிண்டி வரவும். செந்தூரமானபின் ஆறவிட்டுக் குப்பியில் அடைத்துக் கொள்ளவும்.

அளவு: 1/2 பணவெடை.

துணைமருந்து: தேனில் 2 வேளை வீதம் ஒரு மண்டலம் கொடுக்க அனைத்து மேக விரணங்களும் நீங்கும். இச்சாபத்தியம் தேவை

## 38. படிகாரப் பற்பம்

படிகாரத்தை நீரில் கரைத்துக் கனத்த சீலையில் வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் கொட்டித் தூசுபடாமல் சீலையால் மூடி, சூரியபுடத்தில் வைக்க படிகாரம் மலினமற்றுக் கட்டியாய் நிற்கும். இதைக் கோழிமுட்டை வெண்கருவினால் அரைத்துச் சுத்த வெண்மை நிறம் அடையும் மட்டும் குக்குட புடமிடவும். நீர்க்கட்டு, தசையடைப்பு, நீரெரிவு முதலிய நோய்களுக்குப் பசுவெண்ணெய், நீர்முள்ளிச்சாறு, சிறுபீளைச்சாறு, சிறுநெருஞ்சிச் சாறு இவைகளில் கொடுக்கக் குணமாகும். இதில் இரண்டு குன்றியை ஆடாதோடைச் சாற்றில் நாள் ஒன்றுக்கு மும்முறை வீதம் கொடுத்துவரப் பெண்களுக்குக் காணும் வெள்ளையும் அத்துடன் படும் உதிரமும் நிற்கும்.

## 39. பவழப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த பவழத்தைத் திருவாத்தியிலைச்சாறு, கொன்றை சமூலச்சாறு, வேங்கை சமூலச் சாறு, வெள்ளெருக்கன் சமூலச்சாறு இவை முறையே, 6,5,6,5 பலமளவு எடுத்துத் தனித்தனியே, 6,5,6,5 நாள்கள் அரைத்து வில்லை தட்டி முறையே 5,4,5,4 நாட்கள் உலர்த்தி முறையே 30,25,30,25 வறட்டிகளில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு: மிளகில் 5-இல் 1 கூறு உத்தமமாகும்.

வேறு முறைகளிலும் பவழத்தைப் பற்பமாக்கலாம். அவை:

1. பவழத்தை எருக்கம்பாலில் 3 நாள் ஊறவைத்து அதை அகலுக்குள் வைத்துக் கவசமிட்டு வெயிலில் உலர்த்திப் புடமிடப் பற்பமாகும்.

2. பவழத்தை இலந்தை இலைக் கற்கத்தினுள் வைத்துச் சீலை செய்து புடமிடப் பற்பமாகும். பசும்பால் தெளித்து வெயிலில் உலர்த்திக் கொள்ளவும்.

3. இலந்தை இலைக்குப் பதிலாக தைவேளை அல்லது கீழாநெல்லியினால் கவசித்துப் புடமிட்டெடுத்தாலும் பற்பமாகும்.

4. பவழத்தை முயல் இரத்தம் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் புடமிட்டு எடுத்தாலும் பற்பமாகும்.

5. பவழத்தையும் கற்பூரசிலாசத்தையும் சரியெடை கூட்டி வச்சிரவல்லிச் சாற்றால் 4 சாமம் ஆட்டி வில்லை தட்டி கஜபுடமிட்டெடுத்து மறுபடியும் புளியாரைச் சாற்றாலும் செய்யப் பற்பமாகும்.

6. பவழம் 24 கிராம், தேன் 120 கிராம், இரண்டையும் ஒரு புதிய கல்வத்திலிட்டு வாயை ஓட்டால் மூடிச் சந்தில்லாமல் பொருத்திச் சீலைகள் செய்து 1 முழ நீளம், 1 முழ உயரத்தில் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும்.

## அனுபானமும் தீரும் நோயும்

❖ மாதுளை விதையை 1/4 பலமாக மூன்று பலம் நீரில் ஊறவைத்து அரைத்து, 1/8 பலம் பழைய வெல்லம் இட்டுக் குழைத்து, அதில் பசுவின்பால் 3 பலம் விட்டுக் கலந்து மேற்கூறிய அளவு பவழப் பற்பத்தைக் கூட்டி, தினம் 2 வேளை வீதம் 1 மண்டலம் அருந்த வாதமேக உஷ்ணத்தினால் உண்டாகும் விந்து நட்டம் நீங்கி, வீரிய விருத்தி உண்டாகும்.

❖ முருங்கை வித்தை ஊறவைத்து 1/8 பலம் சர்க்கரை இட்டுக் குழைத்து அதில் பசுநெய் விட்டுக் கலந்து கொடுக்கப் பித்த மேக உஷ்ணத்தினால் உண்டான விந்து நட்டம் நீங்கி, வீரிய விருத்தி உண்டாகும்.

❖ புல்லாஞ்சி வித்தை ஊறவைத்து அரைத்துக் கற்கண்டிட்டுக் குழைத்து அதில் பசுவெண்ணெய் இட்டுக் கலந்து மேற்படி முறையில் அருந்த கபமேக உஷ்ணத்தினால் உண்டாகும் விந்து நட்டம் நீங்கி, வீரிய விருத்தி உண்டாகும்.

பத்தியம்: வாத மேக உஷ்ணத்திற்கு எண்ணெய், கடுகு, புளி, பெண்போகம் நீக்க வேண்டும். பால் பானம் செய்து, அத்திப்பழத்தையும் மாம்பழத்தையும் ஆகாரமாகக் கொள்ளப் பிணி நீங்கிப் பலம் வரும்.

❖ பித்த மேக உஷ்ணத்திற்கு வெந்நீர் பானம் செய்து, பலாப்பழத்தையும் பனம் பழத்தையும் உட்கொண்டுவரப் பிணி நீங்கிப் பலம் உண்டாகும்.

❖ கபமேக உஷ்ணத்திற்குக் கிச்சிலிப்பழத்தையும் வாழைப்பழத்தையும் நினைத்த போதெல்லாம் அருந்தி வரச் சவுக்கியமாகும்.

❖ மேலும் பவழப் பற்பத்தைப் பனங்கள்ளில் அனுபானித்துக் கொடுக்க மேகச் சூட்டினால் வரும் சீழ் நீங்கும்.

- நெல்லிக்காய்ச் சாற்றில் கொடுக்கப் பித்த மேகத் தினவு, வெட்டையூறல் நீங்கும்.
- கொத்துமல்லிச் சாற்றில் வழங்கக் கபமேகப்பிணி, பருக்கட்டி, இராசசிலந்தி முதலியன நீங்கும்.
- எருக்கம்பாலால் செய்த பவழப் பற்பத்தை அரிசியளவு நெய்யில் தினம் 2 வேளையாய் உண்டு வந்தால் மேகச்சூடு, காங்கை, இருமல் நீங்கும்.
- கற்பூரசிலாசத்து சேர்த்துச் செய்ததைத் தேனில் கொள்ள மேக ஊறல் நீங்கும்.
- கீழாநெல்லியால் செய்ததை நெய்யில் உண்ண நீர்க்கடுப்பு நீங்கும்.
- பவழப்பற்பத்தைச் சிறுபுள்ளடிச் சாறு, சிறுசெருப்படைச்சாறு, கள் இம்மூன்றிலும் அனுபானித்துக் கொடுக்க மேகப்பிணி கூட்டங்கள் நீங்கும்.

### 40. முத்துப் பற்பம்

சுத்தி செய்த முத்திற்கு வெண்கடுகிலை ரசம்விட்டு முறைப்படி 3 நாளரைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இப்பற்பத்தினால் மேகப்பிணிகள், தேமல், நீர்க்கட்டு முதலியன நீங்கும்.

### 41. முத்துச் செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த முத்திற்கு முல்லைச்சாறு, மருக்கொழுந்துச்சாறு, கோவைச் சாறு ஆகியவைகளை ஐந்தைந்து நாட்கள் விட்டு அரைத்து, நன்னான்கு நாட்கள் வில்லை உலர்த்தி, பத்துப் பத்து வறட்டியில் புடமிட்டெடுக்கச் செந்தூரம் ஆகும்.

தக்க அளவில் நெய்யில் அனுபானித்து வழங்க மேகப்பிணிகள் யாவும் தீரும்.

### 42. கற்பூரசிலசத்துப் பற்பம்

சுத்தி செய்த கற்பூரசிலாசத்தைக் கல்வத்திலிட்டுச் சிறுசெருப்படைச் சாற்றாலரைத்து இலேசாக வில்லை செய்து காயவைத்து, 50 எருவில் புடமிட்டு ஆறவிட்டு எடுத்தபிறகு முன் போல் 3 புடமிட வெண்மையான பற்பமாகும்.

இதனைப் பசுவெண்ணெயில் கொடுக்க மேக எரிவு, பித்தவெட்டை, நீர்க்கடுப்பு ஆகியன நீங்கும்.

### 43. கற்பூரசிலாசத்துப் பற்பம் (வேறு முறை)

கற்சுண்ணாம்பைச் சிலாசத்தின் மேல் தடவிக் காயவைத்து ஓட்டிலிட்டு, கஜபுடமிட்டு எடுக்க வெளுப்பாகும். பின் அதன் மீதுள்ள சுண்ணாம்பைக் கீறி நீக்கிக் கல்வத்திலிட்டு, குமரிச்சாறு விட்டு நன்றாக அரைத்து வில்லை செய்து உலர்த்திச் சில்லிட்டுச் சீலை செய்து, கனபுடமிட்டு ஆறவிட்டெடுக்கப் பற்பமாகும்.

புளியம் வித்தளவு எடுத்து நெய், பால் இளநீர் இவற்றில் ஒன்றில் கொடுக்க வெட்டைநோயில் காணும் நீரெரிச்சல், நீர்க்கட்டு முதலியன நீங்கும்.

### 44. கல்நார் பற்பம்

கல்நாரைச் சிறு துண்டாகப் பிளந்து ஓட்டிலிட்டு, அதற்குக் கீழும் மேலும் கோங்கிலவம் பட்டையை இடித்துப் போட்டுப் புடமிடவும் பிறகு கோங்கிலவம் பட்டைக் குடிநீர் விட்டரைத்து 3 புடம் போடப் பற்பமாகும்.

இதனைத் தேன் அல்லது தூதுவளை இலேகியத்தில் கொள்ள அனைத்து வகை மேகக் காங்கையும் தீரும்.

### 45. நண்டுக்கல் பற்பம்

சுத்தி செய்த கல்நண்டை முள்ளங்கிச் சாற்றால் மை போலரைத்து உலர்த்திப் பிறகு, சிறுபீளைச் சாற்றால் அரைத்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

1/2 முதல் 2 குன்றி வரை சிறுநீரைப் பெருக்கச் செய்யும் மூலிகைச் சாறு, அல்லது குடிநீரில் வழங்கச் சலப்பிரமேகம், வெள்ளை, நீர்க்கட்டு, நீரடைப்பு, கல்லடைப்பு முதலியன நீங்கும்.

### 46. பலகறைப் பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த பலகறையைச் சுரபுன்னை சமூலச்சாறு, சித்திரமூலச் சமூலச் சாறு, கல்லால் சமூலச்சாறு, காட்டு மல்லிகைச் சமூலச்சாறு, நீலோற்பலச் சமூலச்சாறு, சந்தனக் குழம்புத் தெளிநீர் ஆகிய இவைகள் முறையே 4,4,4,3,2,1 பலமளவில் எடுத்து, முன்றையே, 6,5,4,3,2,1 நாட்கள் தனித்தனியே அரைத்து முறையே, 5,4,3,2,1 நாட்கள் வில்லையை உலர்த்தி, 30 வறட்டியளவில் ஒவ்வொரு முறையும் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அருந்தும் நாளளவு: இரண்டு பட்சம் அருந்தி, மறுபத்தியம் இரண்டு பட்சமிருக்க வேண்டும்.

### அனுபானமும் தீரும் நோயும்

- பன்னீரில் அனுபானித்து, கடலையின் 5 பங்கில் ஒரு பங்கு மட்டும் சாப்பிட மேக உஷ்ணநோய் நீங்கும்.
- வாதத்தைச் சேர்ந்த மேக உஷ்ணப் பிணியில் வயிறு ஒரு பக்கம் இழுத்துக் கொள்ளுதல், பசியின்மை, திமிர், வயிற்றடி, கன்னம், கழுத்து இவ்விடங்களில் பரு தோன்றித் துன்பத்தைக் கொடுத்தல் ஆகியவற்றிற்குப் பலகறைப் பற்பத்தை மிளகு இரசத்தில் அனுபானித்துக் கொடுக்க வேண்டும்.
- பித்தத்தைச் சேர்ந்த மேக உஷ்ணப் பிணியில் அக்கரம் போலிருத்தல், வாய்நீர் ஊறல், வாந்தி, விக்கல், பெருந்தாகம், வாய், உதடு, முகவாய்க் கட்டை, மார்புப் பள்ளம், விரல் இவ்விடங்களில் புண், பரு கண்டு ஆறாதிருத்தல் ஆகியவற்றிற்குப் பலகறைப் பற்பத்தைச் சுக்கு இரசத்தில் அனுபானித்துக் கொடுக்க வேண்டும்.
- கபத்தைச் சேர்ந்த மேக உஷ்ண சொறி என்ற பிணியில் கழுத்தில் துர்நாற்றத்துடன் வியர்வை காணுதல், வயிறு உப்பி மேல் சுவாசம் கண்டு, பசி தாகமில்லாதிருத்தல், பீனிசம் போல் மூக்கில் இரத்தம் விழுதல், முழங்கால், முதுகு, உச்சி இவ் விடங்களில் பருவும் கட்டியும் கண்டு, தலையில் ஒருவித சொறி, தேமல் போலத் தோன்றி, சொறிந்தால் சாம்பல் பொடியைப் போல் தூள் உதிர்ந்து கொண்டிருத்தல் ஆகியவற்றிற்குப் பலகறைப் பற்பத்தைத் திப்பிலி இரசத்தில் அனுபானித்துக் கொடுக்க வேண்டும்.

பத்தியம்: புளி, நல்லெண்ணெய், கடுகு, பெண்போகம் ஆகியன நீக்க வேண்டும்.

வாத மேகத்திற்குத் தேங்காய்ப் பாலில் நல்ல வெல்லத்தைச் சேர்த்து குழப்பிச் சிற்றுண்டியாக வழங்க வேண்டும்.

பித்த மேகத்திற்குத் தேங்காய்ப் பாலுடன் சர்க்கரை, கோதுமை மா சேர்த்துச் செய்யப்பட்ட பட்சணத்தை வழங்கலாம்.

கப மேகத்திற்குத் தேங்காய்ப் பாலில் அரிசிமா, கற்கண்டு, பசுவின்பால் கூட்டி தேங்காய்ப் புட்டடையாகச் செய்து உண்ண வேண்டும்.

## 47. மான் கொம்புப் பற்பம்

மான் கொம்பை நான்காய்ப் பிளந்து சிறு துண்டுகளாக நறுக்கி, ஒருநாள் குப்பைமேனிச் சாற்றில் ஊறவைத்து, மேற்படி இலையில் அரைத்துக் கவசம் செய்து காயவைத்து, ஓட்டில் பரப்பி மேலோடு மூடிச் சீலைமண் செய்து, 50 எருவில் புடம் போட்டெடுக்கவும் ஆவின்பால் விட்டரைத்து, வில்லை தட்டிக் காய வைத்து முன்போல் புடமிடப் பற்மாகும்.

அனுபானமும் தீரும் நோயும்:

தேன், பசுநெய், பசுவெண்ணெய் இவற்றில் ஒன்றில் அனுபானித்து 1 முதல் 2 குன்றியளவில் கொடுக்க மேகக் காங்கை, நீரடைப்பு, நீர் எரிச்சல், சதையடைப்பு முதலியன நீங்கும்.

# III

"மேக நிவாரண போதினி" என்னும் நூலில் கூறப்படும் வெள்ளை நோய் சிகிக்சை முறைகள் வருமாறு:

### மூலிகைகள்

*1. கையான்:* கையான் இலை பலம் 1, கரியசீரகம் பலம் 1/4, சர்க்கரை பலம் 1/2. இம்மூன்றையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து, காலை மாலை 2 வேளையாக 7 முதல் 9 நாட்கள் வரை உட்கொண்டு வர, வெள்ளை நோய் தீரும். புளி, உப்பு நீக்க வேண்டும். நெய்சாதம் சாப்பிடவும்.

கையான்சாறு 1 பலம், நல்லெண்ணெய் 1 பலம். இவ்விரண்டையும் கலந்து காலை மாலை 2 வேளை தக்க அளவில் 7 நாட்கள் வரை சாப்பிட, பிரமியம் என்னும் வெள்ளை நீங்கித் தாது விருத்தி உண்டாகும்.

*2. சாத்திரபேதி:* சாத்திரபேதி, மருதம்பட்டை, பொன்னாங்காணி இலை இவை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து மைபோலரைத்து 2பலம் பசுவின் வெண்ணெயில் குழைத்து உட்கொள்ள வேண்டும். இவ்வாறு காலை மாலை 2 வேளை 7 நாட்கள் உட்கொள்ள வெள்ளை நீங்கும். புளி, உப்பு, புகையிலை நீக்க வேண்டும்.

*3. இலுப்பை:* இலுப்பைக் கொழுந்து பலம் 5, நீராகாரம் 1 1/4 ஆழாக்கு. இவ்விரண்டையும் சேர்த்து இடித்து வடிகட்டின இரசம் 1 ஆழாக்கு எடுத்து அத்துடன் எள்ளெண்ணெய் 1/2 பலம் சேர்த்து 3 நாட்கள் காலையில் மாத்திரம் அருந்திவரலாம். இதனால் எவ்விதப் பிரமிய நோயும் நீங்கும். சிலருக்குப்

பேதியாகும். எனவே அளவினை அனுசரித்துக் கொடுக்க வேண்டும். வாயு பதார்த்தம், உப்பு நீக்க வேண்டும்.

*4. பொடுதலை*: பொடுதலை இலை 5 பலம், எருமைமோர் 2 ஆழாக்கு. இவ்விரண்டையும் கலந்து இடித்த சாற்றைத் தக்க அளவில் காலைமாலை 2 வேளையாக 3 நாட்கள் குடித்து வர வெள்ளை நோய் தீரும். உப்பு, புளி நீக்கவும். மோர் சாதம் உண்ணலாம்.

*5. தும்பை*: தும்பை இலை அரைத்த விழுது 1/2 பலத்தை ஒரு ஆழாக்கு எருமை மோரில் கலந்து காலை மாலை 2 வேளையாக 10 நாள் சாப்பிட, சுக்கிலப் பிரமியம் தீரும்.

*6. அத்தி*: 10 பலம் அத்திப் பிஞ்சை எடுத்து அதில் 2 ஆழாக்கு வெந்நீர் விட்டுப் பிசைந்து வடிகட்டிக் குடித்துவரலாம். இவ்வாறு காலைமாலை 2 வேளையாக 10 நாட்கள் குடிக்க, இரத்தப் பிரமியம் நீங்கும்.

*7. காரை*: காரையிலையை அரைத்த விழுது 1பலம். இதனை 1 ஆழாக்கு எருமை மோரில் கரைத்துக் காலை மாலை 2 வேளையாக 7 நாட்கள் வரை குடித்துவர இரத்தப் பிரமியம் நீங்கும்.

*8. துத்தி*: வட்டத் துத்தி வேர்ப்பட்டை, பொன்னாங்காணி வேர், சிறுகீரை வேர், நெருஞ்சி வேர்- இவற்றைச் சமஎடையாக எடுத்துக் குழவியில் வைத்து அரைக்கவும். இவ்வாறு அரைத்தெடுத்த விழுதில் 2 பலம் எடுத்து, அரை ஆழாக்குப் பசுவின் பாலில் கரைத்துக் குடிக்கலாம். இவ்விதம் காலை மாலை 2 வேளையாக 20 நாட்கள் செய்து வர, மேகப் பிரமியம் தீரும்.

*9. பூலா*: ஒரு பலம் நீர்ப்பூலா வேரை அரைத்து, 5 பலம் சோற்றுக் கற்றாழைச் சோற்றில் போட்டுப் பிசைய எல்லாம் நீராகிவிடும். இதனை வடிகட்டி அதில் 1 பலம் சீனி சர்க்கரை சேர்த்துக் காலையில் ஒரு வேளை மட்டும் குடித்துவர, சீதப் பிரமியம் தீரும்.

*10. நாரத்தை*: 3 நாரத்தம்பழங்களைப் பிழிந்து வடிகட்டின சாற்றில், 3 குன்றிமணி எடை ஊசிக்காந்தத்தைப் பொடித்துச் சூரணித்துக் கலந்து குடித்துவரலாம். காலை மாலை 2 வேளையாக 3 நாள் செய்ய, பிரமியம் தீரும். கைப்பு, புளிப்பு நீக்க வேண்டும்.

*11. பிராயனிலை*: முதிர்ந்த பிராயனிலையை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக் கொள்க. இச் சூரணத்தில் வேளை 1க்கு வராகன் எடை அளவில் காலை மாலை 2 வேளையும் பசுவின்பாலில் குழைத்து 10 நாட்கள் சாப்பிட்டுவர, இரத்தப் பிரமியம் நீங்கும்.

*12. பருத்தி*: ஒரு படி பருத்திக் கொட்டையை மைபோல் இடித்துப் புடைத்துத் தோல் முதலியனவற்றை நீக்கின பருப்புத் தூள் 3 ஆழாக்கு; சுக்கு, சங்கன் வேர்ப்பட்டை இவை வகைக்கு 1 பலம்; பனைவெல்லம் 1 பலம், எருமைப்பால் 1/2 படி, எள்ளெண்ணெய் 2 ஆழாக்கு.

செய்முறை: மூன்று சரக்குகளையும் தனித்தனியாக எருமைப்பால் விட்டரைத்து ஒன்றாகச் சேர்த்து அதனுடன் வெல்லத்தைச் சேர்த்து அரைத்து, மிஞ்சின பாலையும் எண்ணெயையும் அதனுடன் நன்கு உறவாகும்படிக் கலந்து, அடுப்பேற்றிச் சிறுதீயாய் எரித்து நீர் சுண்டிய பதத்தில் இறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும். வேளை 1 க்கு 2அல்லது 3வராகனெடை அளவில் நாளுக்கு 2 வேளையாகச் சாப்பிட்டுவர, சுக்கிலப் பிரமியம் தீரும்.

*13. புளி*: புளியிலையில் தண்ணீர்விட்டு இடித்துப் பிழிந்த சாறு 1/2 ஆழாக்கு, தேங்காய் பால் 1/2 ஆழாக்கு - இவ்விரண்டையும் கலந்து அருந்திவரலாம். காலையில் மட்டுமாக 7 நாட்கள் அருந்தி வர மேக ஒழுக்கு, மேகச் சூடு ஆகியன தீரும்.

*14. தழுதாழை*: தழுதாழை இலைச் சாறு 1/2 பலம், எள்ளெண்ணெய் 1/2 பலம். இவ்விரண்டையும் கலந்து கொண்டு காலை மாலை 2 வேளையாக, 2 முதல் 9 நாட்கள் உட்கொள்ள, மேகத்தினால் உண்டான கை, கால் பிடிப்பு தீரும். உப்பு, புளி நீக்கவும்.

*15. கோவை*: கோவையிலைச் சாறு 1/4 ஆழாக்கினைப் பசுவின் பால் 1/4 ஆழாக்கில் கலந்து குடித்து வரலாம். இவ்விதம் காலை ஒரு வேளை மாத்திரம் 9 நாட்கள் குடித்துவர, மேகவெள்ளை தீரும். வெந்நீர் சாதம் மட்டும் கொடுக்கவும்.

*16. முடக்கறுத்தான்*. முடக்கறுத்தான் இலைச்சாறு, பன்றிநெய் இவை வகைக்கு 3/4 பலம் எடுத்து மத்தித்து உட்கொள்ள வேண்டும். இவ்வாறு நாளுக்கு 2 வேளையாக 3 முதல் 5 நாட்கள் உட்கொள்ள மேக வெள்ளை தீரும். வெந்நீர் சாதம் மட்டும் கொடுக்கவும்.

*17. தேற்றான்*: தேற்றான் விதையைச் சீவி ஊறவைத்தரைத்த விழுது 1/4 பலம் எடுத்து, 1/2 பலம் பசுவெண்ணெயில் குழைத்து உட்கொள்ளவேண்டும். இவ்வாறு நாளுக்கு 2 வேளையாக 5 நாட்கள் மட்டும் செய்ய, மேக ஒழுக்கு தீரும்.

*18. அம்மான் பச்சரிசி*: அம்மான் பச்சரிசி இலையை அரைத்த விழுது 1/2 பலம். இதனைக் கொஞ்சம் சர்க்கரையுடன் உட்கொள்ள வேண்டும். இவ்விதம் நாளுக்கு 2 வேளையாக 5 நாட்கள் உட்கொள்ள மேக ஒழுக்குத் தீரும்.

*19. துளசி*: துளசி இலைச்சாறு 1 பலம், நல்லெண்ணெய் 1 பலம். இவ்விரண்டையும் கலந்து நாளுக்கு 2 வேளையாக 7 முதல் 9 நாட்கள் கொள்ள, வெட்டை முதலான நோய்கள் தீரும்.

*20. உள்ளி*: தோலுரித்த வெங்காயம், நாயுருவி இலை-இவை வகைக்கு 1 பிடி சேர்த்து அரிந்து சட்டியிலிட்டு வேகவைத்து, 1/4 படி நெய்விட்டுக் கொதிக்க வைத்தெடுத்துக் கொள்க. இவற்றை 8 பாகமாக்கி, 2 வேளையாக 4 நாட்கள் சாப்பிட்டு வரப் பிரமியம், மேகச்சூடு, கல்லடைப்பு முதலியன நீங்கும்.

*21. நிலப்பனைக் கிழங்கு*: நிலப்பனைக் கிழங்கு அரைத்த விழுது 1 பலம் எடுத்து, 1 ஆழாக்கு எருமைப் பாலில் கலக்கிக் குடித்துவர வேண்டும். இவ்வாறு 3 நாள் காலையில் மட்டும் அருந்திவர மேகச்சூடு, மேகக் கடுப்பு நீங்கும். புளி, உப்பு, கைப்பு நீக்கவும்.

**பிறமருந்துகள்: குடிநீர் வகைகள்**

1. மாதுளைக்குடிநீர்: மாதுளம்பிஞ்சு, மாதுளம் பூ இவை வகைக்கு 1 பலம் எடுத்து 1/2 படி நீர்விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் குடித்து வரலாம். இவ்விதம் 2 வேளையாக 5 நாட்கள் அருந்திவர இரத்தப் பிரமியம் தீரும்.

2. நெல்லிமுள்ளிக் குடிநீர்: நெல்லிமுள்ளி, வேப்பம்பட்டை, பேய்ப்புடல், மேல் தோல் நீக்கப்பட்ட சீந்தில் தண்டு இவை வகைக்கு 9 1/2 வராகன் எடை எடுத்துச் சிதைத்து, 9 ஆழாக்குத் தண்ணீர் வார்த்து நாலில் ஒருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிக் குடித்துவருக. இவ்விதம் 6 நாட்கள் காலையில் மாத்திரம் கொள்ள மேக வெட்டை, பித்த வெட்டை நீங்கும்.

3. மேகக் குடிநீர் I: மூங்கிலிலை, பாதிரி வேர்ப்பட்டை, கோரைக்கிழங்கு, மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவை வகைக்கு 3 வராகனெடை எடுத்துச் சிதைத்து, 3 ஆழாக்கு நீர் வார்த்து நாலிலொரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் தேன் 1 வராகன் எடை விட்டுக் குடித்து வருக. மேகநோய்கள் தீரும்.

4. மேகக் குடிநீர் II: மஞ்சள் கடுக்காய்த்தோல் தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கோரைக் கிழங்கு, பாதிரிவேர்ப்பட்டை, சிறுபாவட்டைவேர், விரலிமஞ்சள் இவை வகைக்கு 2 வராகன் எடை எடுத்துச் சிதைத்து, 1/2 படி நீர் வார்த்து எட்டில் ஒரு பாகமாகக் குறுக்கி வடிகட்டி, அதில் சுட்டுச் சூரணித்த மஞ்சள் 1 வராகன் எடை சேர்த்துத் தேன் 1 வராகன் எடை விட்டுக் கலக்கிக் குடித்துவரலாம். இவ்விதம் காலை மாலை 2 வேளை உட்கொள்ள மேக வறட்சி தீரும்.

5. மேகக் குடிநீர் **III:** வெட்டிவேர், காட்டாத்திப்பூ, வெள்ளிலோத்திரம், மரமஞ்சள் இவை வகைக்கு 3 1/2 வராகன் எடை எடுத்துச் சிதைத்து, 1/2 படி நீர்விட்டு 8-இல் ஒன்றாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டி அதில் தேன் 1 வராகன் எடை கலக்கிக் குடிக்கலாம். இவ்வாறு காலையில் மாத்திரம் செய்துவர, மேகநோய் தீரும்.

6. மேகக் குடிநீர் **IV:** சந்தனத்தூள், விலாமிச்சம்வேர், வெள்ளிலோத்திரம், மருதம் பட்டை இவை வகைக்கு 31/2 வராகன் எடை எடுத்துச் சிதைத்து, 1/2 படி நீர் விட்டு 8-இல் ஒன்றாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிக் குடித்துவருக. இவ்விதம் காலை மாலை 2 வேளையும் செய்துவர, மேகச்சூடு தீரும்.

7. மேகக் குடிநீர் **V:** ஏலம், கோரைக்கிழங்கு, விலாமிச்சம் வேர், இலவங்கம், இலவங்கப்பத்திரி, வெட்டிவேர், சந்தனம் இவை வகைக்கு 1/4 வராகன் எடை எடுத்துச் சிதைத்து, 1/2 படி நீர்விட்டு 8 இல் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி அதில் கொஞ்சம் சர்க்கரை போட்டுக் கரைத்துக் குடித்து வருக. அனைத்து வகை பிரமிய நோய்களும் தீரும்.

10. மேகக் குடிநீர் **VI:** நெல்லிமுள்ளி, தேற்றான் விதைச் சீவல், மஞ்சள் கடுக்காய்த் தோல், புரசம்பட்டை இவை வகைக்கு 3 1/4 வராகன் எடை எடுத்துச் சிதைத்து, 3 ஆழாக்கு நீர் விட்டு 4-இல் 1 பாகமாகக் காய்ச்சிக் குடித்துவரலாம். இவ்விதம் காலை மாலை 2 வேளையாகச் செய்துவர, மேக நோய்களும் தீரும்.

### சூரண வகைகள்

1. புற்றான் சூரணம்: கரையான் புற்றை வெட்டி அதனுள் இருக்கும் சோற்றை எடுத்து வெயிலில் உலர்த்திச் சூரணித்து வைத்துக் கொள்ள வேண்டும். வேளை 1க்கு 1 வராகன் எடை சூரணத்தைத் தேனில் குழைத்து உட்கொண்டுவர, வெள்ளை நோய்கள் தீரும்.

2. சங்கனாதிச் சூரணம்: சங்கன் வேர்ப்பட்டை, கொடிவேலிவேர்ப் பட்டை, வெள்ளைச் சாறணைச் சமூலம், தூதுளைச் சமூலம், சிவனார் வேம்புச்சமூலம், வீழி சமூலம், முத்தெருக்கன் சமூலம், வெண்ணொச்சிப்பட்டை, மாவிலிங்கம் பட்டை, முருங்கைப்பட்டை, சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு, ஏலம், இலவங்கம், சீரகம், கொத்துமல்லி, வெள்ளை மிளகு. கண்டத்திப்பிலி-இவை சமஎடை. சர்க்கரை தேவையான அளவு.

எல்லாவற்றையும் சேர்த்திடித்து வஸ்திரகாயம் செய்து சூரணித்துக் கொள்ளவும். சம எடை சர்க்கரையை அதில் கலந்து கொள்ள வேண்டும்.

2 வராகன் எடை அளவில், 2 வேளையாக உட்கொள்ள, மேகவாயு முதலியன தீரும்.

3. மேகாதிச் சூரணம்: மிளகு, உலர்த்தின வாழைப்பூ இதழ், மாம்பட்டை, வெள்ளைப்பூண்டு, இவற்றைச் சமமாக நிறுத்தெடுத்து அம்மியில் அரைத்துத் தூளாக்கி 1/2 வராகன் எடை சூரணத்தைப் பசுநெய்யில் மத்தித்து உட்கொள்க. எல்லாவகை வெள்ளை ஒழுக்கும் தீரும்.

### 4. சதாவேரி இரசாயனம்

சதாவேரிக் கிழங்கை மேல் தோல் நீக்கிச் சிறு துண்டுகளாகக் கத்தரித்து வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்தில் பசும்பால் மிதக்கவிட்டு 1 நாள் ஊறவைத்து, வெயிலில் உலர்த்தித் தூள் செய்து அதில் பாதி எடை சீனிச்சர்க்கரை, அதே அளவு தேன் விட்டு அதனுடன் நன்றாகக் கலந்து பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும். இதில் 1 1/2 வராகன் எடை அளவில் காலை மாலை 2 வேளை உட்கொண்டு வர தந்தி மேகம், வெள்ளை ஒழுக்கு முதலியன தீரும். மீன், புகை, புளி தவிர்க்க வேண்டும்.

## இலேகிய வகைகள்

### 1. பறங்கிப் பட்டை இலேகியம்

பறங்கிப்பட்டைச் சூரணம், சீனாக் கற்கண்டு தூள் வகைக்குப் பலம் 3; வெள்ளைக் குங்கிலியத் தூள், சீரகச் சூரணம், சோம்புச் சூரணம் வகைக்கு பலம் 1; எலுமிச்சம் பழச்சாறு, எள்ளெண்ணெய், வெள்ளைப் பூண்டுச் சாறு-சம அளவு கலந்து கொண்டு, தேவையான அளவு சூரணங்களையும் கற்கண்டையும் நன்றாகக் கலந்து கொண்டு, சாறு வகைகளைச் சிறுகச்சிறுக விட்டுப் பிசைந்து இலேகிய பதமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேளை ஒன்றுக்கு 2,3 வராகன் எடை எடுத்துருட்டி அதிமதுரச் சூரணத்தில் புரட்டி உட்கொள்ள வேண்டும். இவ்விதம் தினம் 2,3 வேளையாக 10 நாள் உண்டுவர, எல்லாவகை பிரமிய நோய்களும் தீரும்.

### 2. வல்லாதி இலேகியம்

சுத்தித்த இரசம், சுத்தித்த நெல்லிக்காய்க் கந்தகம் -வகைக்கு 4 வராகன் எடை.

குரோசாணிச் சூரணம், தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம், சேராங்கொட்டைக் குழித்தைலம்- வகைக்குப் பலம் 1. பனைவெல்லம் பலம் 2.

செய்முறை: இரசத்தையும் கந்தகத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கறுப்பாகும் வரை அரைத்து. அதனுடன் மற்றவற்றையும் ஒவ்வொன்றாகச் சேர்த்து மைபோலரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரை முதல் முக்கால் வராகனெடை அளவு, நாளுக்கு 2 வேளையாக உட்கொள்ளலாம்.

வெள்ளை, வெட்டை ஆகிய நோய்கள் தீரும். புளி, புகை தவிர்க்கவும்.

### 3. சீனா இலேகியம்

பறங்கிப்பட்டைச் சூரணம் பலம் 5; மிளகு, நற்சீரகம், கறுஞ்சீரகம் ஆகியவற்றின் இளவறுப்பாக வறுத்திடித்த சூரணம் வகைக்குப் பலம் 1; இளவறுப்பாய் வறுத்திடித்த அரிசித்திப்பிலிச் சூரணம் பலம் 1/2; ஏலரிசி, இலவங்கம், சாதிக்காய், இவற்றின் சூரணம் வகைக்குப் பலம் 1/4; சர்க்கரை பலம் 1; தேன், பசுவின்பால் வகைக்கு 1/4 படி.

செய்முறை: தேனையும் பாலையும் கலந்து காய்ச்சிப் பாகு பதத்தில் மற்றெல்லா சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து கிண்டிக் கிளறி இலேகிய பதத்தில் இறக்கிக் கொள்க.

1/2 வராகன் எடை 2 வேளை 40 நாள் உட்கொள்ள, வெள்ளை தொடர்பான அனைத்து நோய்களும் நீங்கும்.

### 4. மனோகர இலேகியம்

சீனிச்சர்க்கரை, பசுநெய், பசுவின்பால், திறமான கெட்டித்தேன்- இவை சமஎடை சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி மெதுவாக எரித்துக் காய்ச்சிப் பக்குவமாக பாகுபதத்திலிறக்கி ஆறினபின் இலேகியம் போலாகிவிடும். இதில் 2 1/2 முதல் 3 வராகன் எடை அளவில் தினம் 2,3 வேளை சாப்பிட்டு வர மூத்திரக் கிரிச்சரம், வெள்ளை, வெட்டை, என்புருக்கி முதலியன தீரும்.

### 5. பால் இலேகியம்

(1) பசுவின் பால் 1 1/2படி

பருத்திவிதை பலம் 25-ஐ ஒரு பாத்திரத்திலிட்டு அது மூழ்கும்படி நீர்விட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் இடித்துப்பிழிந்த பருத்திப்பால் 1 படி.

தேங்காய்ப் பால் 1 படி

பனைவெல்லம் 20 பலம்

சீனிசர்க்கரை 22 பலம், நெய் 24 பலம், தேன் 2 பலம்.

(2) மேல் தோல் சீவிய சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்துமல்லி, வெந்தயம், ஏலம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சாதிக்காய் இவை வகைக்கு 1/2 பலம்.

இவற்றை ஒன்றாக இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்க.

செய்முறை: 1-இல் உள்ள 3 வகைப் பாலையும் ஒன்றாகக் கலந்து, அதில் வெல்லத்தையும் சர்க்கரையையும் கரைத்து வடிகட்டித் திப்பியை நீக்கிக் காய்ச்சிப் பாகுபதத்தில், 2-இல் உள்ள சூரணத்தைச் சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டிக் கிளறி, நெய்யையும் தேனையும் விட்டுக் கீழிறக்கி ஆறினபின் பீங்கானில் பத்திரப்படுத்தவும்.

1 1/2 பலம் காலை மாலை 2 வேளையாக 40 நாட்கள் உட்கொள்ள மேகவெட்டை, எலும்புருக்கி, வாயு வகைகள், வறட்சி, தாகம் முதலியன நீங்கும். இச்சாபத்தியம் கொள்ள வேண்டும்.

## 6. சங்கனாதி இலேகியம்

சங்கன் வேர்ப்பட்டை, அமுக்கராக் கிழங்கு, பறங்கிப்பட்டை இவற்றைத் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்குப் பலம் 1; சர்க்கரை பலம் 3, பசுவின்பால் ஆழாக்கு 2, பசுநெய் பலம் 21/4.

செய்முறை: பாலில் சர்க்கரையைக் கலந்து வடிகட்டிக் காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணங்களை ஒன்றாகச் சேர்த்துத் தூவிக் கிண்டிக் கிளறி நெய்யை விட்டுக் கலந்து இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் வைக்கவும்.

5,6 வராகன் எடை அளவில் இரண்டு வேளையாக 9 நாட்கள் உட்கொள்க.

வெள்ளை, வெட்டை, மேகவாயு ஆகியன தீரும். இச்சாபத்தியம் கொள்க.

## 7. கரிசாலையாதி இலேகியம்

கையான் சமூலம், வெண்ணொச்சியிலை, கொட்டைக் கரந்தை சமூலம்- இவற்றைத் தனித்தனியே நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து எடுத்த சூரணம் வகைக்குப் பலம் 2 1/4.

மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல் - இவற்றைத் தனித்தனியே இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்குப் பலம் 1 1/2.

கஞ்சா இலைச் சூரணம் பலம் 1.

சர்க்கரை பலம் 16, தேன் பலம் 16.

செய்முறை: சர்க்கரையையும் தேனையும் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் சூரணங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துச் சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டிக் கிளறி இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

2 முதல் 3 வராகன் எடை அளவில் சாப்பிட்டு வர, சகல மேகவாயுக்களும் தீரும்.

## 8. சேராங்கொட்டை இலேகியம்

(1) சுத்திசெய்த சேராங்கொட்டை பலம் 10, தோலுரித்த வெள்ளைப்பூண்டு பலம் 5.

(2) கொப்பரைத் தேங்காய் பலம் 5.

சித்திரமூல வேர்ப்பட்டை, குரோசாணி ஓமம், நற்சீரகம், பெருஞ்சீரகம், செண்பகப்பூ, பறங்கிப் பட்டை, சிலாசத்து, சிறுநாகப்பூ, இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, வால்மிளகு இவை வகைக்குப் பலம் 1.

சாதிக்காய் வராகன் எடை 3.

ஏலம், நெல்லிக்காய்க் கந்தகம் வகைக்கு வராகன் எடை 1 1/2.

சாதிப்பத்திரி, இலவங்கம்-வகைக்கு வராகன் எடை 1.

இவற்றில் சிலாசத்து, கந்தகம் இரண்டையும் கல்வத்தில் பொடித்துக் கொள்க.

மற்ற எல்லாவற்றையும் இளவறுப்பாக வறுத்துக் கொள்க.

(3) பசுநெய் ஆழாக்கு 1.

செய்முறை: 1-இல் உள்ள சேராங்கொட்டைச் சூரணத்துடன் கொப் பரையையும் பூண்டையும் சேர்த்திடித்து, சிலாசத்தையும் கந்தகத்தையும் அவற்றுடன் கூட்டி நன்றாக மசித்தபின் நெய்யைச் சிறுகச் சிறுக விட்டு மைபோல இடித்து இலேகியபதமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

1 முதல் 1/2 வராகன் எடை அளவில் 2 வேளையாக 20 நாட்கள் உட்கொள்ள, எல்லா வகையான பிரமிய நோய்களும் தீரும்.

## 9. அளகாதி இலேகியம்

உலர்த்தின தூதுளம்பூ, முருங்கைப்பூ இவை வகைக்கு படி 1; சதாவேரிக் கிழங்கு பலம் 9; நெருஞ்சிக்காய், நன்னாரி வேர், நிலப்பனைக் கிழங்கு, ஏலரிசி, அதிமதுரம் இவை வகைக்குப் பலம் 1. எல்லாவற்றையும் இடித்துச் சூரணித்து

வஸ்திரகாயம் செய்து கொள்க. சர்க்கரை பலம் 8, நெய், தேன் இவை வகைக்குப் பலம் 20; பசும்பால் படி 2.

செய்முறை: பாலை அடுப்பேற்றிச் சிறு தீயாலெரித்துக் கைவிடாமல் துழாவி, குழம்பான பதத்தில் சூரணத்தைச் சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டிக் கிளறிப் பதமாக வரும்பொழுது சர்க்கரையைத் தூவிப் பின்பு நெய்யையும் தேனையும் விட்டு நன்கு கடைந்து இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

1/2 முதல் 3/4 பலம் அளவில் 2 வேளை உட்கொள்ளச் சுக்கில மேகம், என்புருக்கி, கலவி நோய்கள் நீங்கும்.

## மாத்திரை வகைகள்

### 1. வேளை மாத்திரை

நல்வேளைச் சமூலம் 5 பலம்; மிளகு, சீரகம் வகைக்குப் பலம் 1/2. எல்லாவற்றையும் வெந்நீர் விட்டரைத்து ஒவ்வொரு வராகன் எடையுள்ள மாத்திரைகளாகச் செய்துலர்த்தி வைத்துக் கொள்க. வேளை 1க்கு 1 மாத்திரை, 1/4 முதல் 1/2 ஆழாக்குத் தேங்காய்ப்பாலில் அனுபானித்து உட்கொள்ள வேண்டும்.

இவ்வாறு காலை மாலை 2 வேளை 3 நாள் சாப்பிடவும். இச்சமயம் வெந்நீர் சாதம் மட்டும் சாப்பிடவும். 4-ஆம் நாள் உப்பை வறுத்துச் சேர்க்கலாம். பின்னர் படிப்படியாக பால், நெய், மோர் சேர்க்கலாம்.

இவ்வாறு செய்ய சீதப் பிரமியம் நீங்கும்.

### 2. தேற்றான் மாத்திரை

சரக்கொன்றைக் கொழுந்து, ஆவாரைக் கொழுந்து- வகைக்குப் பலம் 10. இதனை வேக வைக்காத மட்பாத்திரத்தில் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்துலர்த்தி 10 எருவில் புடம் போட்டு எடுத்துக் கொள்க.

தேற்றான் விதை 5 பலம் சீவி பசும்பாலில் வேகவைத்து எடுத்துக் கொள்க.

மஞ்சள் கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி-இவை வகைக்குப் பலம் 1/2.

இவை எல்லாவற்றையும் அம்மியில் மைபோலரைத்து, முடிவில் கொஞ்சம் நல்லெண்ணெய் சேர்த்தரைத்து நெய்ப்பசை உணடாக்கி ஒரு வராகன் எடை மாத்திரைகளாகச் செய்து கொள்க.

வேளை 1க்கு 1 மாத்திரையாக தினம் காலை மாலை 2 வேளையும் தேனில் இழைத்து உட்கொள்ள பிரமிய நோய் தீரும்.

## 8. மேகாதி மாத்திரை

1. சித்திரமூல வேர்ப்பட்டை, கடலழிஞ்சில்பட்டை, புளியங்கொட்டைத் தோல், ஆவாரம் வேர்ப்பட்டை, துத்திவிதை, வாகை விதை, நீர்முள்ளி விதை, கொழுஞ்சி விதை, சாதிக்காய், தேற்றான் விதை, முருங்கைப்பிசின், விளாம்பிசின், கறுவேலம்பிசின், உசிலம்பிசின், வேப்பம்பிசின். இவற்றைத் தனித்தனியே தூள் செய்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்கு 1 பங்கு

2. கல்மதம், காந்தம், கல்நார், சாதிலிங்கம், கருடப்பச்சை இவை வகைக்கு 1 பங்கு. இவறறைத் தனித்தனியாகப் பொடித்து 1 பங்கு இரசத்தையும் சேர்த்தரைத்து ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கொள்க.

3. எருமைத்தயிர், இளநீர், பருத்திக்காய்ச் சாறு, கையான் சாறு, பன்னீர்- இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை. 1, 2-இல் உள்ளவைகளை ஒன்றாகச் சேர்த்து 3-இல் உள்ளவைகளில் முறையே ஒவ்வொன்றாகத் தனித்தனியே விட்டு ஒவ்வொரு சாமம் அரைத்து, மெழுகுப்பதத்தில் தேற்றான் விதைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

கடினமான மேக நோய்கள், மூத்திரக் கிரிச்சர நோய்கள், நீர்க்கடுப்பு, என்புருக்கி, உள்ளுருக்கி, கிராணி ஆகிய நோய்கள் தீரும்.

வேளை 1 க்கு 1 மாத்திரையாக தேனில் அல்லது சர்க்கரையில் அனுபானித்துக் கொடுக்க வேண்டும்.

## கிருதம் அல்லது நெய்வகைகள்

### 1. கூழ்பாண்டக் கிருதம்

பூசணிக்காயை இரண்டாக வெட்டி உள்ளிருக்கும் விதை முதலியவற்றை நீக்கி, உரலில் போட்டு இடித்துப் பிழிந்து வடிகட்டின இரசம், கரும்புச்சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, வெள்ளரிக்காய்ச் சாறு இவை வகைக்குப் படி 2. நெய் படி 2. இவை எல்லாவற்றையும் கலந்து ஒரு மண்பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றுக.

கோரைக்கிழங்கு, அதிமதுரம், கற்கடகசிங்கி, கச்சோலம், தாமரை வளையம், தேவதாரம், அரிசித்திப்பிலி, செஞ்சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சவேர், குறுவேர், கருங்காலிப் பட்டை, நன்னாரிவேர், மரமஞ்சள், பச்சிலை இவை வகைக்குப் பலம் 1/2. இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்க.

செய்முறை: முன் நெய்க் கூட்டில் இச்சூரணத்தைத் தூவித் துழாவி நீர் சுண்டியபின் நெய் பதத்திலிறக்கி வடிகட்டிச் சீசாவில் பத்திரப் படுத்தவும்.

வேளை 1 க்கு 1/2 முதல் 1 பலம் அளவில் காலை மாலை 2 வேளை 10 நாட்கள் சாப்பிட்டு வரப் பிரமிய நோய், மேகச் சூடு தீரும்.

## 2. கோவையாதிக் கிருதம்

கோவையிலைச் சாறு, பொடுதலைச் சாறு, தேங்காய்ப்பால், பசுவின்பால், எள்ளெண்ணெய் இவை வகைக்கு படி 1/2. இந்நான்கையும் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டி நெய் பதமாக வரும்போது 10 பலம் பனைவெல்லத்தைப் பொடித்துப் போட்டுக் கரைந்தவுடனே, சாணியைக் குழித்து அதில் தண்ணீர் வார்த்து நெய்ச்சட்டியை இறக்கி அதில் வைத்து நன்றாக ஆறினபின் வடிகட்டிச் சீசாவில். வைத்துக் கொள்க.

## 3. வல்லாதகி நெய்

மூக்கு வெட்டிச் சாணிப்பாலில் சுத்தி செய்த சேராங்கொட்டை பலம் 21/2. பசுநெய் பலம் 10. கொட்டையை நன்னான்கு துண்டுகளாக வெட்டி நெய்யில் போட்டு எரித்து, கொட்டைகள் மிதந்தவுடன் இறக்கி வடிகட்டிச் சீசாவில் வைத்துக் கொள்க.

1 முதல் 1 1/2 வராகன் எடையாக நாளுக்கு 2 வேளையாக உட்கொண்டு வர, மேக நோய்கள் தீரும்.

## எண்ணெய் வகை மருந்துகள்

## 1. புங்கம் பாலெண்ணெய்

புங்கம் வேரை மெல்லியதாகச் சீவி இழைத்து இடித்துப் பிழிந்து வடிகட்டினபால், தேங்காய்ப் பால் இவை வகைக்கு ஆழாக்கு 1; எள்ளெண்ணெய் ஆழாக்கு 2, மாவிலிங்கம்பட்டை பலம் 1, சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு வராகன் எடை 1/2. இதனைத் துணியில் முடிந்து பசுவின் பாலில் வேக வைத்து நெய்யில் வறுத்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை: முன் மூன்று வகைகளையும் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி இரண்டொரு கொதி வந்தவுடன் பின் சொல்லப்பட்ட இரண்டையும் மைபோலரைத்துக் கலக்கிக் காய்ச்சி திரவபதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

1/2 முதல் 1 வராகன் எடை சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் காலை மாலை 2 வேளையும் 6 நாட்கள் உட்கொள்ளலாம்.

இதனால் மேகக் கிரந்தி, அரையாப்பு முதலியன தீரும். புளி, உப்பு முறையே சுட்டும் வறுத்தும் சேர்க்கலாம்.

## 2. மேகத்தெண்ணெய்

1. கீழாநெல்லிச்சாறு
கற்பூரவள்ளிச் சாறு
ஆவாரை இலைச்சாறு
பொன்னாங்காணிச்சாறு
ஆரைக் கீரைச்சாறு
முசுமுசுக்கை இலைச்சாறு
மாதுளையிலைச்சாறு
பொடுதலைச் சாறு
தாமரை வளையச் சாறு
பருத்தியிலைச் சாறு
சிறுகீரைச்சாறு
தூதுளைச்சாறு - வகைக்கு ஆழாக்கு 1.
எலுமிச்சம் பழச்சாறு - ஆழாக்கு 2.

2. நாவற்பட்டை, நிலக்குமிழ் பட்டை, அத்திப்பட்டை, ஓதியம்பட்டை, வெங்காயம், மாதுளை மரப்பட்டை, ஆவாரம் பட்டை, மாதுளம் பிஞ்சு, மாம்பட்டை- இவை வகைக்குப் பலம் 2 1/4. இவற்றைச் சிதைத்து 8 படி தண்ணீர் விட்டு 1 படியாகச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்க.

3. ஆமணக்கெண்ணெய் ஆழாக்கு 2, எள்ளெண்ணெய் படி 1/2.

4. ஏலரிசி, மிளகு, சுக்கு, சன்ன இலவங்கப் பட்டை, இலவங்கம்-வகைக்குப் பலம் 2.

சாதிக்காய் வராகன் எடை 2.

சாதிப்பத்திரி, பெருலவங்கப்பட்டை இவை வகைக்கு வராகன் எடை1. இவற்றை இடித்துத் தூளாக்கி வஸ்திர காயம் - செய்து வைத்துக் கொள்க.

செய்முறை: 1, 2, 3-இல் உள்ளவைகளை ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி 3/4 பாகம் சுண்டின பின்னர் 4-இல் உள்ள சூரணத்தைத் தூவிக் கிண்டிக் கிளறி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிப் பீங்கானில் வைத்துக் கொள்க.

1 1/4 முதல் 1 1/2 வராகன் எடை வீதம், 2 வேளை உட்கொள்ள, எல்லாவகை மேக நோய்களும் தீரும்.

### 3. சூட்சும மேகத்தெண்ணெய்

தோலுரித்த வெள்ளைப் பூண்டு, மிளகு இவை வகைக்குப் பலம் 1; துளசியிலை பிடி 1, ஆமணக்கெண்ணெய் ஆழாக்கு 2.

செய்முறை: மூன்று வகைகளையும் தனித் தனியே மைபோலரைத்து எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்க.

1/2 முதல் 3/4 பலம் காலையில் மாத்திரம் 3 நாள் உட்கொள்க. எல்லாவகை மேகமும் தீரும்.

### 4. மேகத்தெண்ணெய்

தோலுரித்த வெள்ளைப் பூண்டு, மிளகு இவை வகைக்கு பலம் 2. பசுவின்பால், நல்லெண்ணெய் வகைக்குப் படி 1/2.

செய்முறை: முன்னிரண்டு சரக்கையும் பால் விட்டரைத்து எண்ணெயில் கலக்கி மிஞ்சின பாலையும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்க.

3 முதல் 4 வராகன் எடை 2 வேளையும் 6 நாட்கள உட்கொள்ள, எல்லாவகை மேக நோய்களும் தீரும்.

### 5. வெட்பாலை எண்ணெய்

வெட்பாலை இலை 1 பிடி, வெள்ளைப் பூண்டிதழ் வராகன் எடை 2 1/2. இவற்றை மைபோல் அரைத்துக் கொள்க. கார்போகரிசி, கறுஞ்சீரகம், கம்பிப்பிசின், பறங்கிப்பட்டை, ஓமம், மஞ்சள் கடுக்காய்த்தோல், வசம்பு இவை வகைக்கு வராகன் எடை 1. இவற்றை இடித்துத் தூள் செய்து கொள்ளவும். ஆமணக்கெண்ணெய் பலம் 16.

செய்முறை: எண்ணெயில் முன் அரைத்த விழுதைக் கரைத்தும் சரக்குகளின் சூரணத்தைத் தூவியும் அடுப்பேற்றித் திரள் பதமாகக் காய்ச்சி வடிகட்டி வேறு பாத்திரத்தில் ஊற்றி வாய்க்குக் கெட்டியாக சீலை கட்டி நெல்லிற்குள் 15 நாள் வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

காலையில் 1 1/2 பலம் அளவிலும் மாலையில் அதில் பாதியும் தேகபலத்திற்கு ஏற்றார் போல் உட்கொள்ள வேண்டும். இவ்விதம் 3 நாள் செய்க. உப்பு,புளி,புகை நீக்க வேண்டும். அரிசி சாதம், சர்க்கரை, இரவில் பால் முதலியன சேர்க்கலாம். 4-ஆம் நாள் உப்பு வறுத்துக் கூட்டி 7-ஆம் நாள் வடிகஞ்சி தேய்த்து வெந்நீர் குளியல் செய்ய வேண்டும்.'

மேக நோயில் ஏற்படும் வெடிப்பு, சூலை, அரிகிரந்தி, வெட்டை ஆகியன தீரும்.

### 6. மேகாதிக் குழித்தைலம்

முற்றின வேளைவேர், சங்கன் வேர்ப்பட்டை, சேராங்கொட்டை, பூவரசம்பட்டை, சித்திரமூலவேர்ப்பட்டை, நுணா வேர்ப்பட்டை, வேப்பம்பட்டை, சிவனார்வேம்பு வேர், சதுரக்கள்ளி, நிலவாகைப்பட்டை, மருதம்பட்டை-இவை சம எடை எடுத்து நிழலிலுலர்த்திக் குழித்தைலமாக இறக்கிக் கொள்ள வேண்டும்.

1 முதல் 1 1/2 வராகன் எடை அளவு எடுத்து அரிசிப் பொரிமாவில் கலந்து உட்கொள்க. இவ்விதம் 2 வேளை உண்ணலாம்.

எல்லாவகை மேகப்பிரமிய நோய்களும் தீரும்.

## பற்பவகைகள்

### 1. வெள்வங்கப் பற்பம்

சுத்தி செய்த வெள்வங்கம் பலம் 1-இதனை ஒரு சட்டியிலிட்டு உத்தாமணிச்சாறு படி 1/2 விட்டு அடுப்பேற்றி மெதுவாக எரித்துவர சாறெல்லாம் சுண்டிச் சமபலாகி, வங்கமும் பற்பமாகிவிடும். இது அதிக காரமாக இருக்கும்.

2 முதல் 5 குன்றிமணி எடை தேகபலம் அறிந்து, அளவில் குறைத்தும் அதிகப்படுத்தியும் கொடுக்க வேண்டும்.

காலை மாலை 2 வேளை 10 நாள் உண்ணலாம். உப்பு நீக்கிப் பத்தியம் கொள்ளவும்.

### 2. கறுவங்கப் பற்பம்

சுத்தி செய்த கறுவங்கத்தைத் தகடாக அடித்து மெல்லிய துண்டுகளாகச் செய்து வைத்துக் கொள்க.

பச்சைப் புளியம் பட்டையை மைபோல் அரைத்த விழுதை ஒரு முழுசதுரமான கோணியின் மேல் 1 அங்குலம் பரப்பி அதில் பல சிறு குழிகள் செய்து அவற்றுள்

முன் சித்தப்படுத்தின வங்கப்பொடியைத் தூவி அதன் மேல் மற்றொரு சதுரமான கோணித்துணியால் மூடித் திரியாகச் சுருட்டி ஒரு சட்டியில் வைத்து, மேல் சட்டி மூடி வைத்துக் கொள்க.

ஒரு முழ அகலமும் ஆழமும் உள்ள ஒரு குழிதோண்டி அதில் அரைப்பாகம் வறட்டியடுக்கி அதன்மேல் முன் சட்டியை வைத்து அதற்கு மேலாகவும் வறட்டி அடுக்கிப் புடமிடவும். புடம் 1 நாள் ஆறிய பின்னர் எடுத்துப் பார்க்க வங்கம் சோளப் பொறி போல் பொரிந்திருக்கும். இதைக் கல்வத்தில் வைத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும்.

3 குன்றியளவு எருமை வெண்ணெய் அல்லது ஒதியம்பட்டைச் சாற்றில் உட்கொள்ளச் சுக்கிலப் பிரமியம் தீரும். செம்பரத்தம் பூச்சாற்றில் உட்கொள்ள இரத்தப்பிரமியமும், பருத்திக்காய்ச் சாற்றில் கொள்ளத் தந்திப் பிரமியமும் தீரும்.

## அரையாப்பு மருந்துகள்

### 1. அரையாப்பு நெய்

1. பசுநெய், எள்ளெண்ணெய் இவை வகைக்குப் படி 1.

2. சங்கன் வேர்ப்பட்டை, மிளகரணை வேர்ப்பட்டை, சத்திச் சாறணை வேர்ப்பட்டை, சாயவேர்ப்பட்டை, செங்கந்தாரி வேர்ப்பட்டை, மாவிலிங்க வேர்ப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை, வெள்ளைச் சாறணை வேர்ப்பட்டை, ஆதண்டை வேர்ப்பட்டை, வசம்பு, தோல் நீக்கிய வெள்ளைப் பூண்டு இவை வகைக்குப் பலம் 2. இவைகளை ஒன்றாக இடித்துச் சிதைத்துக் கொள்ளவேண்டும்.

செய்முறை: 1-இல் உள்ளவைகளை ஒன்றாகக் கலந்து அதில் 2-இல் உள்ளவற்றைப் போட்டுக் காய்ச்சி, சரக்குகள் சிவந்தப் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்க.

அளவு: பலம் 1/4 முதல் 1/2. காலையில் மாத்திரம் உட்கொள்ள வேண்டும்.

அரையாப்பு, தொடைவாழை, விப்புருதி ஆகியன தீரும்.

பத்தியம்: வெந்நீர் சாதமும், முளைக்கீரையில் மிளகுத் தூளிட்டும் உண்க. 5 நாள் இவ்வாறு செய்து, 6 ஆம் நாள் உப்பை வறுத்தும் புளியைச் சுட்டும் உபயோகிக்க வேண்டும்.

**2. அரையாப்பு நெய் (வேறு முறை)**

பசுநெய் படி 1

நற்சீரகம், கொடிவேலி வேர்ப்பட்டை, களிப்பாக்கு-இவை வகைக்குப் பலம் 1. இம்மூன்றையும் இடித்துத் தூள் செய்து தண்ணீர் வார்த்து மைபோல் அரைத்து மேற்படி நெய்யில் கலக்கி அடுப்பேற்றி எரித்து மெழுகுபதமாய் வரும் சமயத்தில் வெல்லம் 1 பலம் போட்டுக் கரைத்துப் பதத்தில் இறக்கிச் சீசாவில் வைத்துக் கொள்க.

1 முதல் 1 1/2 பலம் காலை மாலை 2 வேளை உட்கொள்ளலாம். அரையாப்பு தீரும்.

உப்பு, புளி புகை ஆகா. மருந்தை நிறுத்திய பின் உப்பை வறுத்தும், புளியைச் சுட்டும் சேர்க்கலாம்.

**3. அரையாப்பு எண்ணெய்**

எள்ளெண்ணெய் படி 1/4

கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்த விழுது பலம் 1, பனை வெல்லம் பலம் 1. இவ் விரண்டையும் முன் எண்ணெயில் கலக்கி 3 நாள் வெயிலில் வைத்து நீர் சுண்டினபின்னர்க் கண்ணாடி சீசாவில் பத்திரப்படுத்தவும். இதை அடுப்பில் வைத்துக் காய்ச்சியும் பயன்படுத்தலாம்.

1/2 அல்லது 3/4 பலம் காலை மாலை 2 வேளையாக, 5 நாட்கள் உட்கொள்ளலாம்.

அரையாப்பு, கிரந்திப்புண்கள், மேக நோய்கள் தீரும்.

உப்பு, புளி, புகை நீக்க வேண்டும்.

**4. அரையாப்புக்கு அடை**

அரையாழாக்குப் புழுங்கலரிசியைத் தண்ணீரில் ஊறவைத்து எடுத்து அதனுடன் 1/4 வராகன் எடை கொடிவேலி வேர்ப்பட்டையையும் வைத்தரைத்து அடையாக அல்லது ரொட்டியாகச் சுட்டுக் காலையில் மாத்திரம் நெய், சர்க்கரையுடன் உட்கொள்க. இவ்வாறு 3 நாள் சாப்பிடவும். அரையாப்பு தீரும். வெந்நீர் சாதம் மட்டும் சாப்பிடவும்.

**5. அரையாப்புப் பற்று**

கொடிவேலி வேர்ப்பட்டை, நத்தைச்சூரி வேர்-இவை இரண்டும் சம எடை எடுத்து மைபோலரைத்த விழுதில் கொட்டைப்பாக்களவு எடுத்து அதில் எள்ளெண்ணெய் விட்டு மத்தித்து அரையாப்புக் கட்டியின் மேல் பற்றிடவும். இவ்விதம் காலையில் மாத்திரம் செய்க. அரையாப்புக் கட்டி உடைந்து, அதிலுள்ள சீழும் நீரும் வெளிவந்து ஆறும்.

**6. அரையாப்பு மேல்பூச்சு**

1/4 பலம் கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்த விழுதை எள்ளெண்ணெய் 1/4 படியில் சேர்த்துக் கலந்து வெயிலில் வைத்து நீர் சுண்டின பின் மேல் பூச அரையாப்புப் புண், கிரந்திப்புண் ஆகியன ஆறும்.

**7. மேக வீக்கங்களுக்கு மேல்பூச்சு**

துருசு, கறியுப்பு வகைக்கு 2 பங்கும், தாளகம் பங்கு 1 1/2-யும் சேர்த்துப் பொடித்து, உத்தாமணிச் சாறு விட்டு மைபோலரைத்து மேக வீக்கங்களின் மேல் பூசிவர அவை தீரும்.

# IV

"அனுபோக வைத்திய நவநீதம்" பாகம் 8-இல் கூறப்படும் சில முறைகள் வருமாறு:

**1. குக்கிலாதிச் சூரணம்**

சுத்தி செய்த குக்கில் 32 வராகன் எடை, பறங்கிப்பட்டை 16 வராகன் எடை, நெல்லிக்காய் கந்தகம் 8 வராகன் எடை; அரிசித்திப்பிலி, கண்டத்திப்பிலி, வெட்பாலையரிசி, வாய்விடங்கம் வகைக்கு 2 வராகன் எடை.

செய்முறை: இவை எல்லாவற்றையம் ஒன்றாகச் சேர்த்திடித்துத் துணியில் சலித்துக் கொள்ளவும். நெல்லிக்காய்க் கந்தகத்தைத் தனியே தூள் செய்து துணியில் சலித்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

அளவு: 1 முதல் 1 1/2 வராகன் எடை.

அனுபானம்: வெந்நீர், சர்க்கரை, நெய், தேன் முதலியன.

தீரும் நோய்: 21 வகை பிரமிய நோய்கள், அல்குல் புற்று, கிரந்தி, மேகச் சூலை, அரையாப்பு, நடுக்குவாதம், திமிர்வாதம், கண்டமாலை முதலியன தீரும்.

**2. குக்கில் வல்லாதி**

(அ) சுத்தி செய்த குக்கில் 15 பலம், சுத்தி செய்த சேராங்கொட்டை 71/2 பலம்.

(ஆ) வட்டத் திருப்பி, பேய்ப்புடல், தேவதாரம், கறுஞ்சீரகம், வாய்விடங்கம், செவ்வியம், கொடிவேலி வேர்ப்பட்டை, கார்போகரிசி, கடுகுரோகணி, வசம்பு, மரமஞ்சள், அதிவிடயம், சாதிப்பத்திரி, சிறுதேக்கு, நுனிமஞ்சள், மஞ்சிட்டி, அரிசித்திப்பிலி, ஓமம், கண்டத்திப்பிலி வகைக்கு 4 வராகன் எடை.

(இ) எவ்சாரம், வெங்காரம், படிகாரம், நவாச்சாரம், கல்லுப்பு, கறியுப்பு, வெடியுப்பு, இவை வகைக்கு 4 வராகன் எடை.

(ஈ) தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை: (ஆ) வில் உள்ள சரக்குகளை இடித்துத் துணியில் சலித்துக் கொள்ளவும். (இ) யில் உள்ள உப்புகளைத் தூள் செய்து மேற்படித் தூள்களுடன் கலந்து வைத்துக் கொள்ளவும்

சேராங்கொட்டையைக் கல்லுரலில் இட்டு மைபோல் இடித்துத் தனியே வைத்துக் கொள்ளவும்.

குக்கிலைத் தனியே இடித்து மைபோலான பின்பு சேராங்கொட்டையைச் சேர்த்திடித்து நன்றாகக் கலந்து, பின்பு மேற்படித் தூள்களைச் சிறுகச்சிறுகத் தூவி எல்லாம் சென்றபின்பு எடுத்து அம்மியில் வைத்துத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்துத் திப்பியில்லாமல் வெண்ணெய் போலாகிற வரையில் அரைத்துப் பீங்கானில் பத்திரப்படுத்தவும்.

சேராங்கொட்டையை எவ்வளவு இடித்தாலும் சரியாக மசியாது என்பதால் அதைக் குழித்தைலமாகச் செய்து பயன்படுத்தலாம். சேராங்கொட்டை அளவு 1 பலம் எனில் குழித்தைலம் கால் பலம் அளவில் சேர்த்தால் போதும்.

அளவு: 1/4 முதல் 1/2 வராகன் எடை.

தீரும் நோய்: பிரமியநோய்கள், குட்டங்கள், வளிநோய்கள் தீரும்.

**3. குக்கில் நெய்**

(அ) அரிசித்திப்பிலி, கண்டத்திப்பிலி, செவ்வியம், சித்திரமூல வேர்ப்பட்டை, பொன்முசுட்டை, சீந்தில் கொடி, சுண்டைவேர், வில்வவேர், ஆடாதோடைவேர், இஞ்சி, பேய்ப்புடல், கண்டங்கத்தரி, வேப்பம்பட்டை, கறுவேலம்பட்டை, ஆயில்பட்டை, புங்கம்பட்டை, சரக்கொன்றைப்பட்டை, கோரைக்கிழங்கு,

ஆடுதீண்டாப்பாளை வேர்ப்பட்டை, செங்கடுக்காய்த் தோல், கொத்துமல்லி விதை, தேவதாரம், வசம்பு, முட்காவேளை வேர் ஆகிய இவற்றை வெயிலில் காயவைத்து இடித்தது வகைக்கு 7 1/2 பலம். இவற்றை ஒரு பாண்டத்திலிட்டு, 16 படி நீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

(ஆ) பசுநெய் 1 படி, பால் 1/2படி.

(இ) சீனாக்காரம், சிறுநாகப்பூ, மேல்தோல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி, தேவதாரம், கடுக்காய்த் தோல், தான்றித்தோல், நெல்லிமுள்ளி, சவுக்காரம், சத்திச்சாரம், கோஷ்டம், வசம்பு, இலவங்கப்பத்திரி, கொடிவேலிவேர்ப்பட்டை, கண்டத்திப்பிலி, கையான், கடுகுரோகணி, சாறணைக் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, அதிவிடயம், பொன்முசுட்டை வேர், வெண்கடுகு, சடாமாஞ்சில், பெருங்குரும்பை, யானைத் திப்பிலி, பெருங்காயம், ஓமம், இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, பெருமரப்பட்டை இவை வகைக்கு 1 வராகன் எடை. இவைகளை இடித்துத் தூள் செய்து துணியில் சலித்துக் கொள்ளவும். சுத்தி செய்த குக்கில் 5 பலம் எடுத்து இடித்துக் கொள்ளவும். பிறகு இரண்டையும் சேர்த்து அம்மியில் வைத்துப் பாலைச் சிறுகச்சிறுகத் தெளித்து வெண்ணெய் போலரைத்து வைத்துக் கொள்ளவும்.

செய்முறை: (அ) வில் உள்ள குடிநீருடன் (ஆ) வில் உள்ள நெய்யையும், பாலையும் கலந்து (இ)யில் சொன்னபடி சித்தப்படுத்தினதைக் கரைத்து அடுப்பேற்றி 5 நாள்வரையில் மந்தாக்கினியாக எரித்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்து வாய்பந்தனம் செய்து 1 வாரம் வரை தானியபுடம் வைத்துப் பின் உபயோகிக்கவும்.

அளவு: 1 வராகனெடை, காலை மாலை இரண்டு வேளை உபயோகிக்கலாம்.

அனுபானம்: தேன், சர்க்கரை, வெண்ணெய் முதலியன.

தீரும் நோய்: 21 வகை பிரமியம், பிளவை, எண்வகைக் குன்மம், விப்புருதி, கொங்கைக் குத்து, கண்டமாலை, கை கால் முடக்கு, உடலில் கருப்பு முதலியன நீங்கும்.

பத்தியம்: புளி, புகை, கசப்பு, நல்லெண்ணெய், கடுகு, மீன், கருவாடு, அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பூசணிக்காய், பறங்கிக்காய், தேங்காய் இவை ஆகா. இச்சாபத்தியம்.

### 4. அமுக்கராச் சூரணம்

பச்சை அமுக்காரக் கிழங்கு தேவையான அளவு. இதனைத் தண்ணீரால் மண்ணில்லாமல் கழுவி சுத்தி செய்து வட்டமான வில்லைகளாகத் துண்டித்து ஒரு பாத்திரத்தில் போடவும். அவை அமிழ்ந்து இருக்கும் படியாக பசுவின்பாலை விட்டு வேகவைத்துப் பால் சுண்டியபின்பு எடுத்து வெயிலில் உலர்த்தி இடித்துத் துணியில் சலித்த தூள் 8 பலம்.

சிறுநாகப்பூ, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு 1 வராகன் எடை; மாசிக்காய்த் தோல் 1பலம். இவை எல்லாவற்றையும் இடித்துத் தூள் செய்து துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும். சர்க்கரை 10 பலம்.

செய்முறை: மேற்படி இரண்டு வகைத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து, சர்க்கரையையும் சேர்த்துக் கல்வத்தில் அல்லது அம்மியில் 1 மணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 1/2 முதல் 2 1/2 வராகன் எடை. காலை மாலை 2 வேளை உட்கொள்ளலாம்.

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய்.

இதை உட்கொண்டவுடன் சீரண சக்திக்குத் தக்கபடி 1/2 அல்லது 1 ஆழாக்கு காராம் பசுவின் பாலை அல்லது பசுவின் பாலைக் கறந்தவுடன் பருகச் செய்யவேண்டும். பாலில் கற்கண்டு சேர்க்கலாம். இவ்விதம் ஒன்று முதல் இரண்டு மண்டலம் உபயோகிக்கலாம்.

மெலிந்த உடல் பருக்கும். உடல் வலிமை உண்டாகும். வெள்ளை, வெட்டை இவற்றால் உண்டான உடல் சூடு தணியும். பிரமிய நோய்கள் நீங்கும்.

பத்தியம்: பழையது, மீன், கருவாடு ஆகாது.

### 5. அமுக்கரா விழுது

பச்சை அமுக்கராகிழங்கை அரைத்த விழுது 1 பலம். பால், நெய் நல்லெண்ணெய் ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றை 1 பலம் எடுத்து அதில் கலந்து உட்கொள்ளலாம். காலையில் ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு உடன் கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய பசுவின் பாலைக் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்துவர மேகச்சூடு நீங்கும். உடல்வலிமை உண்டாகும். உடல் பருத்துத் தழைக்கும். புளிப்பு வகைகளை அதிகமாகச் சேர்க்கலாகாது.

## 6. அமுக்கரா இலேகியம்

பசுவின்பாலில் வேகவைத்து உலர்த்தி இடித்த அமுக்கராத் தூள் 61/2 பலம். சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம், வால்மிளகு, கண்டத் திப்பிலி, தாளிசப் பத்திரி, இலவங்கப்பத்திரி, இலவங்கம், சோம்பு, சிறுநாகப்பூ, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, நிலப்பனைக் கிழங்கு-இவற்றின் தனித் தனித் தூள் வகைக்கு 1/2 பலம்.

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கசகசா இவை வகைக்கு 1 வராகன் எடை.

இந்நான்கையும் தனித்தனியே அரைத்து ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

சர்க்கரை, நெய் 16 பலம்.

தேன் 4 பலம்.

செய்முறை: தூள்களை எல்லாம் நன்றாகக் கலந்து சர்க்கரை, நெய், தேன் ஆகியவைகளையும் அதில் சேர்த்து அம்மியில் அல்லது கல்வத்தில் நன்றாக அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 1/2 முதல் 21/2 வராகன் எடை.

தீரும் நோய்கள்: மேகம் தொடர்பாக வரும் சுரம், வெட்டை, என்புருக்கி நோய், என்பு சுரம் முதலியன தீரும்.

## 7. அமுக்கரா நெய்

(அ) பச்சை அமுக்கராக் கிழங்கு இடித்த சாறு 1 படி, வல்லாரைச் சாறு 1 படி, பசுவின்பால் 1 படி, பசு நெய் 1 படி.

(ஆ) பச்சைக் கடலை 1 படி -இதனை 1 நாள் தண்ணீரில் ஊறவைத்து இடித்து உப்பு, வெள்ளாட்டுப் பால் விட்டுப் பிசைந்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

(இ) நன்னாரி வேர், நற்சீரகம், கறுஞ்சீரகம், ஓமம், பெருஞ்சீரகம், கொத்துமல்லிவிதை, இலவங்கம், இலவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சாதிக்காய்-இவை வகைக்கு 1 வராகன் எடை. இவற்றைத் தனித்தனியே இடித்துத் துணியில் சலித்துக் கொள்ளவும்.

செய்முறை: (அ) வில் உள்ளவைகளையும் (ஆ)வில் உள்ளவைகளையும் ஒன்றாகக் கலந்து, (இ) யில் உள்ள தூள்களைப் பால்விட்டு வெண்ணெய் போலரைத்து அதில் கலக்கி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில்

இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

அளவு: 1 1/2 முதல் 3 வராகன் எடை.

தீரும் நோய்: என்புவெட்டை, மேகவெட்டை, மேகரணம் முதலியன நீங்கும்.

இச்சாபத்தியம் தேவை.

## 8. பறங்கிப்பட்டைச் சூரணம்

சிவனார்வேம்புச் சமூலம், சிறுகாஞ்சொறி வேர்ப்பட்டை, தலைச்சுருளி வேர்ப்பட்டை, சங்கன்குப்பி இலை, வெள்ளறுகுச் சமூலம், செங்கந்தாரிப் பட்டை, சங்கம் வேர்ப்பட்டை-இவைகளைத் தனித்தனியே உலர்த்தி இடித்த தூள்கள் வகைக்கு 1 பலம்; சுத்தி செய்த பறங்கிப்பட்டைத்தூள் 8 பலம்.

செய்முறை: தூள் வகைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து நன்றாகக் கலக்கும்படி இரண்டொரு மணிநேரம் அரைத்துப் பீங்கான்பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 1 1/2 வராகன் எடை.

அனுபானம்: சர்க்கரை,நெய், தேன், சிவனார் வேம்புக் குழித்தைலம்.

தீரும் நோய்கள்: மேகப்புண், மேகவெள்ளை, கறுமேகம் முதலியன தீரும்.

இச்சாபத்தியம். நெய், பால், இறைச்சி, மோர் ஆகியன அதிகம் கூட்டவும்.

## 9. பறங்கிப்பட்டை இளகம்

(அ) பறங்கிப்பட்டை 10 பலம்; சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டத்திப்பிலி, சித்திரமூல வேர்ப்பட்டை, செவ்வியம், சிறுதேக்கு, இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, கோஷ்டம், அதிமதுரம், கறுஞ்சீரகம், ஓமம், கற்கடகசிங்கி, அமுக்கராக் கிழங்கு, உலர்த்தின வெள்ளறுகு, சிவனார்வேம்பு, பிரப்பம் கிழங்கு, -இவை வகைக்கு 1 பலம்; ஏலரிசி, இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு 2 வராகன் எடை; சங்கங்குப்பிச்சாறு செல்லத் தக்க அளவு; திருகுக் கள்ளி 1/2 முதல் 1 வீசை.

(ஆ) நாட்டுச் சர்க்கரை 15 பலம், தேன் 20 பலம், நெய் 20 பலம்.

செய்முறை: (அ) வில் உள்ள சரக்குகளை எல்லாம் இடித்துத் துணியில் சலித்து, சங்கங்குப்பிச் சாற்றை விட்டுப் பிட்டைப் போலப் பிசைந்து வைத்துக் கொள்ளவும். 25 படி கொள்ளும்படியான ஒரு பாண்டத்தில் 10 படி வெந்நீரை விட்டு அதில் திருகுக் கள்ளியைத் துண்டுகளாகத் துண்டித்துப் போட்டுப் பானை வாய்க்கு மெல்லிய துணியால் வேடுகட்டி, அதன்மேல் முன் சித்தப்படுத்தின தூள்

வகைகளைப் பரப்பி மேல் சட்டி மூடிச் சந்தில்லாமல் சீலைமண் செய்து அடுப்பேற்றி, சிறு தீயாக எரித்துச் சுமார் 1/2 பங்கு நீர் சுண்டின சமயத்தில் எரிப்பை நிறுத்தவும். குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்துத் தூள்களை எடுத்து நிழலில் உலர்த்தி அம்மியில் வைத்துக் கட்டிகளில்லாமல் அரைக்கவும் சர்க்கரையை வெந்நீரில் கரைத்துப் பாகு செய்து தேன் விட்டுக் கலந்து, தூள்களைச் சிறுகச் சிறுகக் கொட்டி மத்தால் கடைந்து நெய்யையும் விட்டு நன்றாகக் கிளறி ஆறினபின்னர் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 1/2 முதல் 2 வராகன் எடை, காலை மாலை இரண்டு வேளை 20 முதல் 40 நாள் நோய் வலிமைக்குத் தகுந்தபடி உண்ணலாம்.

தீரும் நோய்: 21 வகை பிரமியநோய்கள், மேகச் சூலை, மேகப்பிடிப்பு, மேகக்கிரந்தி, கிரந்தி விரணம், மேக ஊறல், மேகத்தடிப்பு முதலியன.

பத்தியம்: காரம், புளிப்பு, புகை, புணர்ச்சி ஆகா. உப்பு, வெந்நீர், துவரை, உள்ளி, மிளகு, முருங்கைப் பிஞ்சு சேர்க்கலாம்.

### 10. பறங்கிப்பட்டைப் பதங்கம்

பறங்கிப்பட்டை 10 பலம். இதனைப் பாக்கைப் போல் சீவி ஒரு மண்பாத்திரத்தில் போட்டு அது அமிழ்ந்து கிடக்கும் படியாக சங்கங்குப்பிச் சாறை விட்டு 3 நாள் ஊற வைத்து 4 -ஆம் நாள் வெயிலில் உலர்த்தி இடித்துத் தூள் செய்து வைத்துக் கொள்க.

இலிங்கம், மனோசிலை, நெல்லிக்காய்க் கந்தகம், இரசக்கற்பூரம், கார்போகரிசி, வன்னிவேர்ப்பட்டை, கோஷ்டம், செண்பக மொக்கு, துத்தம், இரசம், இவை வகைக்கு 1/4 பலம்; வங்காளப் பச்சை 1 வராகன் எடை, துருசு 1/2 வராகன் எடை. இந்த 12 சரக்குகளையும் இடித்துத் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்து, மற்ற சரக்குகளையும் தனித்தனியே தூள் செய்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு நல்லெண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுமணி நேரம் அரைத்து ஒரு வில்லையாகச் செய்து கொள்ளவும்.

இந்த வில்லையை ஒரு பானையின் நடுவில் வைத்து அந்தப் பானை வாய்க்கு மெல்லிய துணியால் வேடுகட்டி, முன் சித்தப்படுத்தி வைத்துள்ள பட்டைத் தூள்களை அதன்மேல் வைத்து மறுசட்டி கொண்டு மூடி, சந்தில்லாமல் 7 சீலைமண் செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்துச் சந்தில்லாமல் மண் தடவிக் கமலாக்கினியாக 2 சாமம் எரித்து ஆறவிட்டுக் கவசத்தைப் பிரித்துத் தூள்களை எடுத்து மறுபடியும் கல்வத்தில் பொடித்துப் பளிங்கு மூடியுள்ள குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1/2 முதல் 1 வராகன் எடை, காலை மாலை 2 வேளையும் உபயோகிக்கலாம்.

அனுபானம்: தேன், நெய்.

தீரும் நோய்: வாயு, சூலை ஆகியன.

பத்தியம்: இச்சாபத்தியம்.

**11. சந்தனாதிச் சூரணம்**

பன்னீர் விட்டிழைத்து உலர்த்தின சந்தனம் 5 பலம்.

கோஷ்டம், நன்னாரிவேர், வால்மிளகு, சீந்தில் சர்க்கரை, மஞ்சள், இலுப்பைப்பூ, அதிமதுரம், கிச்சிலிக்கிழங்கு, ஏலரிசி, தாமரை வளையம், நெய்தல் கிழங்கு, மரமஞ்சள், விலாமிச்சம் வேர், நெல்லிமுள்ளி, இவற்றைத் தனித்தனியே இடித்த தூள் வகைக்கு 1/4 பலம். திராட்சைப்பழம், கசகசா வகைக்கு 1/4 பலம்- இவ்விரண்டையும் தனித்தனியே கொஞ்சம் தண்ணீர் விட்டரைத்து எடுத்துக் கொள்ளவும். பச்சைக்கற்பூரம் 1 1/4 வராகன் எடை - இதனைப் பொடித்துக் கொள்ளவும்.

செய்முறை: இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து 1 மணிநேரம் அரைத்து எல்லாம் கலந்தபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1/2 முதல் 2 வராகன் எடை.

அனுபானம்: நெய், வெண்ணெய், தேன், பசும்பால். இளநீர், வெள்ளரிப்பிஞ்சுச்சாறு, வெள்ளரி விதைப்பால், பசுவின் மோர்.

தீரும் நோய்: சீழ்மேகம், இரத்தமேகம், தந்திமேகம் முதலான வெள்ளை நோய்கள், நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்ப்பை அழலை முதலிய நோய்களுக்கு இது மிகச் சிறந்த மருந்து. உப்பு, புளிப்பு, புகை நீக்குவது நல்லது.

**12. சந்தன நெய்**

பசுவின் பால் 2 படி, சந்தன அத்தர் 2 1/2 பலம், வெடியுப்பு 5 வராகன் எடை, படிகாரம் 5 வராகன் எடை.

செய்முறை: பாலில் சந்தன அத்தரைச் சேர்த்துக் காய்ச்சிப் பிரை குற்றிக் கடைந்து வெண்ணெய் எடுத்துக் காய்ச்சி நெய்யாக்கி, மேற்படி இரண்டு சரக்குகளையும் பொடித்து அதில் கலந்து பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு: 1 முதல் 2 வராகன் எடை.

தீரும் நோய்: மேக ஒழுக்கு, வெள்ளை நோய்கள், நீரருகல், நீர் எரிச்சல் முதலிய நோய்கள்.

## 13. வல்லாதகி இளகம்

சுத்தி செய்த சேராங்கொட்டை 12 பலம், தேன் 12 பலம் , பழைய நாட்டுச் சர்க்கரை 12 பலம் , பசும் பால் 1 படி, இலவங்கப்பட்டை, கறுஞ்சீரகம், நெல்லிமுள்ளி, குரோசாணி ஓமம் இவை வகைக்கு 3 வராகன் எடை; யானைத் திப்பிலி 1 3/4 வராகன் எடை; சுக்கு 1 1/2 வராகன் எடை, சாதிப்பத்திரி 1 1/2 வராகன் எடை, இலவங்கம், சாதிக்காய், மாசிக்காய், நீர்முள்ளி விதை, மஞ்சள் கடுக்காய்த்தோல் இவை வகைக்கு 1 வராகன் எடை.

செய்முறை: சேராங்கொட்டையை அம்மியில் வைத்து மெதுவாகப் பொடித்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய் போலரைத்து. மிகுந்த பாலில் இதனைக் கரைத்துத் தேனையும் சர்க்கரையையும் சேர்த்து அடுப்பேற்றி 3 விறகால் தீபம்போல் எரித்துப் பாகுபோல் வரும் பதத்தில் முன்சொன்ன சரக்குகளைத் தனித்தனியே இடித்துத் துணியில் சலித்து ஒன்றாகக் கலந்து தூவிக் கிண்டி இளகியபதம் வந்த பிறகு தீயை எடுத்துவிட்டு ஆவிபோகாமல் மூடி வைத்துத் தானே குளிர ஆறினபின்பு எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 1 1/2 வராகன் எடை.

தீரும் நோய்: மேக வகைகள், பவுத்திரம், கண்டமாலை, இலிங்கப்புற்று, அல்குல் புற்று, கறுங்குட்டம், பறங்கிப்புண், சூலை முதலியன.

நோய் பலத்திற்குத் தக்கபடி 40 நாட்கள் சாப்பிட வேண்டும். நோய் அதிகப் பலமாக இருந்தால் இடையில் 1 மாதம்விட்டு மறுமுறை சாப்பிடவும். இவ்விதம் 3 முறை சாப்பிட்டால் எந்த வித நாட்பட்ட நோயும் தீரும்.

பத்தியம்: சேவல் இறைச்சி, செம்மறியாட்டு இறைச்சி, அகத்திக்கீரை, துவரம்பருப்பு, பச்சைப்பருப்பு, புடலங்காய், பீர்க்கங்காய், நெய், பால், சர்க்கரை, வெள்ளாட்டு வற்றல் ஆகியவற்றைச் சேர்க்கலாம்.

## 14. நரசிம்ம இளகம்

(அ) சுத்தி செய்த சேராங்கொட்டை 40 பலம், பசுநெய் 117 1/2 பலம், தேன் 35 பலம், சர்க்கரை 70 பலம். பசுவின்பால் 2 படி.

(ஆ) சீமைச்சதாவரிக் கிழங்கு, கழுவி உலர்த்தின எள்ளு, நெருஞ்சி முள் இவை வகைக்கு 40 பலம்; நிலப்பனைக் கிழங்கு, சீந்தில் சர்க்கரை வகைக்கு 20

பலம்; உலர்த்தி இடித்த பாலமுதுக்கனி கிழங்குத்தூள், ஊமத்தை விதை, கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்கு 10 பலம், மேல் தோல் சீவிய சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு 8 பலம்; சாதிக்காய், சாதிப்பத்திரி,கிராம்பு, அதிமதுரம், பீதரோகிணி வகைக்கு 4 பலம்.

செய்முறை: (அ) வில் உள்ள சேராங்கொட்டையை நான்காக நறுக்கி நெய்யில் போட்டுக் காய்ச்சி எண்ணெய் கக்கினவுடன் நெய்யைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். இந்தக் கொட்டைகளைப் பசுவின்பாலில் போட்டுக் காய்ச்சினால் இன்னும் அவற்றிலுள்ள தைலம் புறப்படும். பின்னும் அந்தக் கொட்டைகளை எடுத்துத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அறவே தைலம் புறப்பட்டபின் அந்தக் கொட்டைகளை நீக்கி விட்டு அந்தத் தண்ணீரையும் பாலையும் கலந்து, அதில் சர்க்கரையும் தேனையும் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்ச வேண்டும்.

(ஆ) வில் சொன்ன சரக்குகளில் எள் தவிர மற்ற சரக்குகளை எல்லாம் இடித்துத் தூள் செய்து ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து, (அ) வில் உள்ள பாலைத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ள வேண்டும். எள்ளை இளவறுப்பாக வறுத்துச் சிறுகச் சிறுக அம்மியில் வைத்து மேற்படி பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தினதுடன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முன் அடுப்பில் ஏற்றியிருக்கும் பாகில் அரைத்த மருந்தைச் சிறிது சிறிதாகப் போட்டு மத்தால் கடைந்து வரவேண்டும். சுடர்த்தீயாக எரிக்க வேண்டும். தீ அதிகமானால் மருந்து முறிந்து கெட்டுவிடும்.

அரைத்த மருந்தெல்லாம் பாகில் கலந்த பின்னர் முன் நெய்யையும் விட்டுச் செம்மையாகக் கிளறி அடுப்பிலுள்ள தீயை நீக்கிவிட்டு ஆவிபோகாமல் மூடி அடுப்புடன் விட்டுக் குளிர ஆறின பின்னர் பீங்கான் சாடியில் போட்டு வாய்ப்பந்தனம் செய்து, ஒரு மாதம் வரையில் தானிய புடம் வைத்துப் பிறகு உபயோகிக்க வேண்டும்.

அளவு: 1 முதல் 2 வராகன் எடை.

அனுபானம்: வங்கப் பற்பம், தங்கப் பற்பம், இரசப்பற்பம், கந்தகப்பற்பம், காந்தப் பற்பம் முதலியவற்றில் ஒன்றை மேற்படி இளகத்துடன் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்: கர்ப்ப மேகநோய், கிரந்தி, பறங்கிப்புண், வளிநோய்கள், வெட்டை நோய்கள், இலிங்கப்புற்று, அல்குல்புற்று முதலிய நோய்கள் தீரும்.

இம்மருந்து பலநூறு ஆண்டுகளானாலும் கெட்டுப் போகாதிருக்கும் எனக் கூறப்படுகிறது. இதனை கற்பமருந்தாகவும் உண்ணலாம். தங்கப் பற்பத்துடன் சேர்த்து 6 மாதம் சாப்பிட்டால் உடல் இறுகி வச்சிர உடலாகி நரைதிரை மாறும்.

பத்தியம்: இச்சாபத்தியம்.

## 15. மேக வல்லாதி

(அ) சுத்தி செய்த சேராங்கொட்டை பலம் 4. இதனைக் குழித்தைலமாகச் செய்து கொள்வது நலம். பறங்கிப்பட்டை 4 பலம், தான்றித் தோல் சூரணம் 2 பலம்; சுக்கு, மிளகு, ஓமம், சீரகம், வாய்விடங்கம், மஞ்சள் கடுக்காய்த் தோல்- இவற்றின் தூள் வகைக்கு 1 1/2 பலம்; சுத்தி செய்த மைசாட்சி 1 பலம் (இதனைக் கல்வத்தில் வெண்ணெய் போல அரைத்துக் கொள்ள வேண்டும்), பனைவெல்லம் 16 பலம். முற்றின தேங்காய் 1 (இதனை உடைத்துத் துருவிக் கொள்ள வேண்டும்).

(ஆ) சுத்தி செய்த இரசம் 1 1/2 வராகன் எடை, சுத்தி செய்த இலிங்கம் 1 1/2 வராகன் எடை, சுத்தி செய்த நெல்லிக்காய்க் கந்தகம் 3 வராகன் எடை, நீரடி முத்துப் பருப்பு 3 வராகன் எடை (இதன் மீதுள்ள மேற்சருகையும், நடுவிலிருக்கும் முளையியையும் நீக்கிவிடவேண்டும்).

செய்முறை: இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கறுத்த தூளானவுடன் இறுத்து வைத்துக் கொள்ளவும். பின் இலிங்கத்தையும் சேர்த்தரைத்து அதன் பின் நீரடிமுத்தைச் சேர்த்து அரைத்து வெண்ணெய் போலானவுடன் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

தேங்காய்த் துருவலைக் கல்லுரலில் போட்டு மர உலக்கையால் நன்கு இடித்து மசியச் செய்த பின் மேற்படித் தூள்களையும் அதில் சேர்த்துப் பின்

(ஆ) வில் உள்ள மருந்தையும் அதில் சேர்த்து இடிக்க வேண்டும். பனை வெல்லத்தைத் தண்ணீரில் கரைத்துக் கொஞ்சம் காய்ச்சி வடிகட்டி அதில் உள்ள திப்பி, மண் முதலியவற்றை நீக்கி, கெட்டிப் பாகாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு முன் மருந்தில் சிறிதுசிறிதாகத் தெளித்து இடித்து வரவேண்டும். எவ்வளவு நேரம் இடிக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு நன்மையாகும். 6 மணி நேரத்துக்குக் குறையாமல் இடித்து எல்லாம் நன்றாக மசிந்து மைபோலான பின்னர் எடுத்துப் பீங்கானில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1/2 முதல் 1 வராகன் எடை.

தீரும் நோய்: மேகநோய்கள், மேக ஊறல், கிரந்தி, பறங்கிப்புண் முதலியன.

பத்தியம்: கடுகு, நல்லெண்ணெய் தள்ள வேண்டும்.

### 16. பால் வல்லாதி

(அ) சுத்தி செய்த சேராங்கொட்டை எண் 50, பசுவின்பால் 1 படி, தண்ணீர் அரைப்படி, பனை வெல்லம் 1 பலம். (ஆ) சுத்தி செய்த இரசம், இரசக்கற்பூரம், கந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், மிருதார்சிங்கி- வகைக்கு 2 வராகன் எடை; வீரம் 1 வராகன் எடை.

(இ) மஞ்சள் கடுக்காய்த் தோல் சூரணம் 12 வராகன் எடை .

செய்முறை: (அ)வில் உள்ள பாலையும் தண்ணீரையும் கலந்து அதில் சேராங்கொட்டைகளை நான்கு துண்டுகளாக நறுக்கிப்போடவும் எண்ணெய் கக்கி கொட்டைகள் மிதந்தபின்பு அவைகளை எடுத்து வேறு தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எண்ணெய்ப் பசை நீங்கினவுடன் இந்த நீரையும் மேற்படி பாலில் சேர்த்துக் காய்ச்சிக் கைவிடாமல் துழாவிக் கொண்டேயிருந்து எல்லாம் அல்வாவானவுடன் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(ஆ) வில் உள்ளவைகளில் இரசம், கந்தகம், வீரம் இவற்றைச் சேர்த்து நன்றாக மசிந்தபின் இலிங்கத்தையும் வீரத்தையும் சேர்த்து அரைக்க வேண்டும். தாளகத்தைத் தனியே பொடித்துப்பின் இதனுடன் சேர்த்து அரைக்க வேண்டும்.

அவ்வாறே மிருதார்சிங்கியையும் பொடித்துச் சேர்த்து அரைக்க வேண்டும். பிறகு வெல்லத்தைச் சேர்த்து அரைத்த பின் (இ)யில் உள்ள கடுக்காய்த் தூளைச் சேர்த்து இரண்டுமணிநேரம் அரைத்து, எல்லாம் ஒன்றாக மசிந்தபின்பு முன் சித்தப் படுத்தியிருக்கும் பால் அல்வாவைச் சிறுகச் சிறுகச் சேர்த்து மைபோல் ஆகும் வரை அரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு: 2 முதல் 4 குன்றி எடை.

அனுபானம்: சர்க்கரை, வெல்லம், பாலேடு, இளக வகைகள்.

தீரும் நோய்: மேகநோய்கள், அரையாப்பு, கிரந்தி, வெட்டை, பவுத்திரம், கண்டமாலை, வெடி சூலை, இலிங்கப்புற்று முதலிய கொடிய நோய்கள் நீங்கும்.

பத்தியம்: கடுகு, நல்லெண்ணெய், புளி, புகை, புணர்ச்சி ஆகாது. மாமிசம் சாப்பிடாதிருப்பது நலம்.

### 17. இலகு வல்லாதி

சுத்தி செய்த சேராங்கொட்டை 2 1/2 பலம். இதனை முறைப்படி குழித்தைலம் இறக்கவும்.

சுத்தி செய்த கந்தகம் 1 பலம், சுத்தி செய்த இரசம் 1/2 பலம், சுத்தி செய்த இரசக் கற்பூரம் 1/2 பலம், சுத்தி செய்த இரசச் செந்தூரம் 1/2 பலம், முத்தெருக்கஞ்செவியிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை: இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்து நன்றாகக் கறுத்த பின்னர், மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து முன் சித்தப்படுத்திய சேராங்கொட்டைத் தைலத்தை விட்டு 1 மணிநேரம் அரைத்துப் பிறகு முத்தெருக்கஞ் செவியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து 4 சாம நேரம் அரைத்து மைபோலான பின்பு பீங்கான்சிமிழில் பத்திரப் படுத்தவும்.

அளவு: 2 முதல் 4 குன்றி எடைவரை. உடல் வன்மை, நோய் வன்மைக்குத் தக்கபடி அளவு மாறலாம்.

தீரும் நோய்: கிரந்திப்புண், அரையாப்பு, மேகநோய்கள், மேகவாயு, சூலை நோய்கள் முதலியன.

பத்தியம்: இச்சாபத்தியம்.

## 18. வெந்தயச் சூரணம்

வெந்தயம், நற்சீரகம், கறுவேலம்பிசின் வகைக்குப் பலம் 1. கற்கண்டுத்தூள், பசுவின் நெய் வகைக்குப் பலம் 5.

செய்முறை: கறுவேலம் பிசினைக் கொஞ்சம் நெய்யில் பொரித்துப் பொடித்துக் கொள்ள வேண்டும். வெந்தயத்தையும், நற்சீரகத்தையும் தனித்தனியே இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூள் செய்து துணியில் சலித்துக்கொள்ள வேண்டியது. இந்தத் தூள் வகைகளையும் கற்கண்டையும் நன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு முன் நெய்யை உருக்கிச் சீலையில் வடிகட்டி அதில் விட்டு நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவேண்டியது.

அளவு: 1 1/2 முதல் 2 1/2 வராகன் எடை.

தீரும் நோய்: வெட்டைச் சூடு, நீரெரிவு, மார்புவலி, மயக்கம், கை கால் அசதி ஆகியவை தீர்ந்து, தாதுவிருத்தி உண்டாகும்.

## 19. மைசாட்சி வில்லை

மைசாட்சி, இராகுக்கல், நாட்டு வெங்காரம், சீனாக்காரம், சவுக்காரம், மூசாம்பரம், அபினி, கஸ்தூரி மஞ்சள், மைலாலக்கடி, பெருங்காயம் இவை வகைக்கு 1/2 பலம். இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்துத் தூள் செய்து

ஒன்றாகக் கலந்து 1/2 மணி நேரம் அரைக்கவும் எல்லாம் கலந்த பின்பு பழுத்த பெரும் கத்தரிப்பழத்திற்குள் அல்லது முற்றிய கத்தரிக்காய்க்குள் குடைந்து வைத்து மூன்று சீலைமண் செய்து உமிக் காந்தலில் வைத்துக் கத்தரிக்காய் வெந்த பதத்தில் எடுத்துக் கவசத்தை நீக்கிவிட்டு மற்றெல்லாவற்றையும் அம்மியில் வைத்து வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ளவும். 1/4 அங்குல கனமுள்ள வில்லைகளாகச் செய்து கொள்ள வேண்டும். ஒரு தடவை செய்த வில்லையைப் பல தடவை உபயோகிக்கலாம்.

தீரும் நோய்: அரையாப்புக் கட்டி, கரளை முதலியன தீரும்.

## 20. தேங்காய்ப்பால் இளகம்

(அ) தேங்காய்ப்பால் 5 பலம், கோதுமையை ஊறவைத்து அரைத்துப் பிழிந்த பால், உளுந்தை ஊறவைத்து அரைத்துப் பிழிந்த பால், பருத்திவிதையை ஊறவைத்து அரைத்துப் பிழிந்தபால், பசுவின்பால், கசகசாவை அரைத்துப் பிழிந்த பால் இவை வகைக்கு 2 1/2 பலம்.

(ஆ) பேதானா விதை, நீர்முள்ளி விதை, நாட்டு நீர்முள்ளி விதை, துத்தி விதை, வெந்தயம், சாதிக்காய், சாதிப்பத்திரி, நிலப்பனைக் கிழங்கு, பூனைக்காலி விதை, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, கறுவாப்பட்டை இவற்றின் தூள் வகைக்கு 3 வராகன் எடை.

(இ) மேல் தோல் நீக்கிய வாதுமைப் பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, பூசணிவிதைப் பருப்பு, சுரை விதைப்பருப்பு, சாரப்பருப்பு, கசகசா இவை வகைக்கு 3 வராகன் எடை.

செய்முறை: (அ) வில் உள்ள பால்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதில் கற்கண்டைத் தூள் செய்து போட்டும் தேன் விட்டும் பாகு செய்து கொள்ளவும்.

(இ) யில் உள்ள பருப்பினங்களையும் கசகசாவையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்து மேற்படி பாகில் போட்டு மத்தினால் கடைந்து பாகுபதத்தில் (ஆ)வில் உள்ள தூள்களை ஒன்றாகக் கலந்து சிறுகச்சிறுகத் தூவி நன்றாகக் கடைந்து கீழிறக்கி ஆறினபின் பீங்கான்பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 1/2 முதல் 2 வராகன் எடை, காலை மாலை 2 வேளையும், 20 நாட்களுக்குக் குறையாமல் உபயோகிக்கவும்.

தீரும் நோய்: எல்லாவகை மேக நோய்களும் தீரும். மேகவெட்டை, உடல் இளைப்பு, அனல் நோய், பித்தச் சூடு முதலியனவும் தீரும். தாதுவலிமை உண்டாகும்.

## 21. தேங்காய்ப்பால் நெய்

தேங்காய் தனிப்பால் 1 படி, புளியங் கொட்டை மேல்தோல் தூள் 2 1/2 பலம்.

செய்முறை: மேற்கூறிய இரண்டையும் கலந்து அடுப்பேற்றி எண்ணெயாகிற வரையில் காய்ச்சி வடிகட்டி ஆறினபின்னர் பீங்கான்பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும். இது தேங்காய் எண்ணெய் போல் இல்லாமல் நெய் போலிருப்பதால் இதனைத் தேங்காய்ப்பால் நெய் என்பர்.

அளவு: 1 முதல் 3 வராகன் எடை.

தீரும் நோய்: வெட்டைச்சூடு, கணைச்சூடு, நீர் எரிச்சல், மூலச்சூடு முதலியன தீரும்.

## 22. தேங்காய் நெய்

(அ) பருமனான தேங்காய் 10-ஐ உடைத்துத் தண்ணீரைத் தனியே வைத்துக்கொண்டு, தேங்காயைத் துருவி பாலை எடுத்துக் கொள்ளவும். கந்தகம், துருசு-வகைக்கு 1/2 பலம், இரசம் 2 1/2 வராகனெடை.

(ஆ) கறுஞ்சீரகம், நீரடிமுத்து இவை வகைக்கு 1 பலம்; கடுகுரோகணி, சுத்தி செய்த வாளப்பருப்பு வகைக்கு 1/2 பலம். மேற்கண்டவைகளில் இடிக்கவேண்டியவைகளை இடித்தும், தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்தும் தனித்தனியே நிறுத்தெடுத்துக் கொள்ளவும். கொடிக்கள்ளிப்பால் 1/2 பலம், பிராயம்பட்டைச் சாறு 2 1/2 பலம்.

செய்முறை: (அ) வில் உள்ள இரசத்தையும் கந்தகத்தையும் தொந்தித்து அரைத்து, நன்றாகக் கறுத்தபின்பு துருசையும் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ள வேண்டியது. இவற்றுடன் (ஆ) வில் உள்ள சரக்குகள் எல்லாவற்றையும் கலந்து அம்மியில் வைத்து முன் இளநீரைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்து, முன் தேங்காய்ப்பாலில் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி நெய் பதத்தில் வடிகட்டி ஆறினபின் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1/2 முதல் 2 வராகன் எடை.

அனுபானம்: சர்க்கரை, இளநீர், வெந்நீர்.

தீரும் நோய்: மேகப்புண்கள், வெட்டை, பிரமியம், கிரந்தி, அரையாப்பு, பறங்கிப் புண் முதலியன.

## 23. இளநீராதி நெய்

(அ) இளநீர் (செவ்விளநீர் மேலானது), பூசணிக்காய்ச் சாறு, வாழைக் கிழங்கின்சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, பசுவின் பால், மேல் விடத்தை நீக்கிச் சிதைத்துச் செய்த சீந்தில் குடிநீர்-வகைக்கு 2 படி.

கருப்பஞ்சாறு, பொன்னாங்காணிச்சாறு, நீர்முள்ளிச்சாறு வகைக்கு 1 படி.

நெருஞ்சிச்சாறு, ஓரிலைத் தாமரைச்சாறு இவை வகைக்கு 1/2படி; சர்க்கரை 20 பலம், தேன் 10 பலம்.

(ஆ) சிலாசத்து, கல்நார், கல்மதம், சிறுபீளை வேர்ப்பட்டை, நாயுருவி வேர்ப்பட்டை, யானைத்திப்பிலி, பொன்னாங்காணி வேர், கூகைநீறு, நீர் முள்ளிவிதை , தேற்றான்விதை (இதனை மெலிதாகச் சீவிப்பாலில் ஊறவைத்து அரைத்துக் கொள்க) பொன்னூமத்தை விதை- இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்தும், தூள் செய்ய வேண்டியவற்றைத் தூள்செய்தும் எடுத்த தூள் தனித்தனியே 3 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்துப் பசுவின்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும்.

செய்முறை: (அ) வில் உள்ளவைகளில் தேன், சர்க்கரை ஆகியன தவிர மற்றவற்றை யெல்லாம் ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் முன் (ஆ) வில் சொல்யிருக்கிறபடி சித்தப்படுத்தினதைக்.'. கரைத்துச் சிறு தீயாக எரித்து நீரெல்லாம் சுண்டிக் கடுகுத்திரள் பதத்தில் இறக்கி வடிகட்டின நெய்யில் தேனையும் சர்க்கரையையும் சேர்த்து மறுபடியும் இளஞ்சூடு காட்டி இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 5 முதல் 6 வராகன் எடை.

தீரும் நோய்: சுக்கிலமேகம், வெள்ளை வீழ்தல், வெட்டை, மஞ்சள் வெட்டை, இரத்த வெட்டை, நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், கை கால் எரிச்சல் முதலியன.

## 24. தேற்றான் இளகம்

தேற்றான் கொட்டை 2 பலம் -இதனை மெலிதாகச் சீவி இளநீரில் ஊறவைத்து அம்மியில் வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும்.

சீரகம், தண்ணீர் விட்டான் கிழங்கு இவற்றின் தூள் வகைக்கு 1 பலம்.

விதை நீக்கின பேரீச்சங்காய், விதை நீக்கிய திராட்சைப்பழம், சாரப்பருப்பு, கசகசா, ஓமத்தூள்- இவை வகைக்கு 1/2 பலம்; சாதிக்காய், சாதிப்பத்திரி, மிளகு,

இசப்புக்கோல்விதை, சப்ஜாவிதை, சாலாமிசிரி, ரூபி மஸ்தகி, பேதானா விதை, சீமைநீர்முள்ளி விதை- இவற்றின் தூள் வகைக்கு 1 1/4 பலம்.

மேல்தோல் நீக்கிய வாதுமைப்பருப்பு 1 பலம், மிசிரி அபின் 1 1/4 வராகன் எடை, கறுவாப்பட்டை, வால் மிளகு, இவற்றின் தூள் வகைக்கு 1 1/4 வராகன் எடை பசுவின்பால் 1/2 படி, சர்க்கரை 10 பலம், கற்கண்டு 4 பலம், நெய் 4 பலம்.

செய்முறை: பருப்பினங்களையும், பேரீச்சங்காய், திராட்சை ஆகியவைகளையும் தனித்தனியே அரைத்து வெண்ணெய் போலான பதத்தில் ஒன்றாகக் கலந்து இவற்றுடன் முன் சித்தப்படுத்தின தேற்றான் கொட்டை விழுதையும் மற்ற தூள்களையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். சீனியைப் பாகு செய்து முன் சித்தப்படுத்தியிருப்பதைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து தூள் செய்த பின் நெய்யை விட்டு மறுபடியும் கலந்து கீழிறக்கி ஆறினபின்பு, அபினியில் கொஞ்சம் தண்ணீர்விட்டு அரைத்து அதில் கலந்து கற்கண்டைப் பொடித்துத் தூவி மறுபடியும் நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 1/2 முதல் 2 வராகன் எடை.

தீரும் நோய்: பிரமியம், வெட்டை, மூலச்சூடு, விந்து ஒழுக்கு, தாது இழப்பு, நீர் எரிச்சல் முதலியன தீரும்.

## 25. மகிழம்பட்டைச் சூரணம்

முற்றின மகிழம் பட்டையை நிழலில் உலர்த்தி இடித்துத் துணியில் சலித்த தூள் 1 பலம், புரசம்பிசின் தூள் 1 பலம், சீமைநீர்முள்ளி விதைத் தூள் 1 பலம்.

செய்முறை: இம்மூன்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேரம் அரைத்து நன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு: 2 வராகன் எடை, காலை மாலை 2 வேளையாக, 7 நாட்கள்.

அனுபானம்: தேன், நெய், நீர்.

தீரும் நோய்: விந்து வெளிப்பாடு, விந்து ஒழுக்கு, விந்து நீர்த்திருத்தல் ஆகியன நீங்கும். புணர்ச்சி வேட்கை உண்டாகும்.

பத்தியம்: ஆட்டுக்கறி, நெய், சிறுபயறு சேர்த்துக் கிச்சடி செய்து சாப்பிடவும். 7 நாட்கள் வரை மகளிர் சேர்க்கை கூடாது.

# V

"கண்ணுசாமியம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள முறைகள் வருமாறு:

## 1. வெள்ளைக்குச் சூரணம்

படிகாரம், கற்கண்டு, நெல்லிவற்றல்-இவைகளைச் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து, கலக்கி வேளைக்கு 2 கழஞ்சு வீதம் தினம் அந்தி சந்தி மோருடன் கலந்து சாப்பிட் 3 நாளில் வெள்ளை, நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல் முதலியன நீங்கும்.

## 2. மேகவாய்வுக் குளிகை

பூரம், இலிங்கம் வகைக்கு 3 கழஞ்சு வீதம் கல்வத்தில் இட்டு நன்றாய் அரைத்து ஒரு மண் ஓட்டில் போட்டுச் சிறு தீயில் வைத்து எரித்துப் புகையாவண்ணம் கொடிக்கள்ளி, கரிசிலாங்கண்ணி, கொள்ளுக்காய்வேளை, வெள்ளைச் சாட்டரணை இவற்றின் தனிச் சாற்றைச் சமமாகக் கலந்து 4 சாமம் சுறுக்குக் கொடுத்துப் பின்னர் கல்வத்தில் வழித்துப்போட்டு, அதனுடன் 3 கழஞ்சு சுத்தி செய்த ஓமம் சேர்த்து முன் கலந்து வைத்துள்ள சாற்றில் மெழுகு பதம் காண அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் அடைத்திட வேண்டும்.

இம்மாத்திரையில் ஒன்றைப் பனை வெல்லத்தில் வைத்து தினம் 2 வேளையாக, 7 நாள்வரை உண்ணலாம். மேகம் தொடர்பான நோய்கள் யாவும் தீரும். மேக வாய்விலான தீராக் குடைச்சலுக்கு இது சிறந்த மருந்தாகும்.

## 3. குக்கில் வல்லாதி இலேகியம்

கந்தகம், குக்கில் வகைக்குப் பலம் 8; சேராங்கொட்டை, சீந்தில் சர்க்கரை, எள் வகைக்குப் பலம் 1; கொடிவேலி பலம் 2; சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கறுஞ்சீரகம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தக்கோலம், தனியா, கோஷ்டம், அதிமதுரம், குரோசாணி ஓமம், வாலுளுவை, சிற்றரத்தை, பேரரத்தை, கிராம்பு, சிறுதேக்கு, சன்னலவங்கப் பட்டை, சாதிக்காய்,ஏலக்காய் வித்து, வெட்பாலையரிசி, வாய்விடங்கம், அமுக்கராக் கிழங்கு, பறங்கிச்சக்கை, தாளிசப் பத்திரி, சாதிபத்திரி, இலவங்கப்பத்திரி, செவ்வியம், பிஞ்சு கடுக்காய், கடுக்காய்ப்பூ, கண்டுபாரங்கி, பூனைக் காலிவித்து, கூகைநீறு, அதிவிடயம், கோரைக் கிழங்கு, வால்மிளகு, யானைத் திப்பிலி, நிலப்பனை, சாரப்பருப்பு, வாலை இரசம் வகைக்கு பலம் 1.

செய்முறை: சேராங்கொட்டை, கந்தகம் இவற்றைச் சுத்தி செய்து சூரணத்தைக் கந்தகத்துடன் உறவாகும்படி நன்றாய் அரைத்துப் பின்னர் மற்றவைகளை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து சிறு கண்களையுடைய சல்லடையால் சலித்து மேற் சொன்ன கந்தகத்துடன் கூட்டிக் கல்வத்திலிட்டு இரண்டொருநாள் நன்கு கலக்கும்படி அரைத்துச் சமனெடை பனைவெல்லம் கூட்டி 2,3 சாமத்திற்குக் குறையாமல் எல்லாச் சரக்குகளும் உறவாகும்படி நன்றாய்ப் புரட்டிப்புரட்டி இடிக்கவும். பின்னர் சேதப்படாமல் சாடியில் பத்திரப்படுத்தவும்.

வேளைக்குச் சுண்டைக்காய் அளவில் தினம் 2 வேளை, 1/2 அல்லது 1 மண்டலம் உட்கொள்ள மேகம் தொடர்பான நோய்கள், அரையாப்பு, கண்டமாலை, புற்று, திமிர் முதலியன தீரும்.

## 4. சிவனார்வேம்புக் குழித்தைலம்

சங்கம்வேர், பூவரசம்பட்டை, சிவனார்வேம்பு, வாலுளுவை இவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு குடுவையின் அடியில் மூன்று சிறு துவாரங்களையிட்டு அதனில் போட்டு வாயை மூடிச் சீலை செய்துலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

பின்னர் பூமியில் ஒரு பள்ளம் தோண்டிப் பீங்கான் பாத்திரம் ஒன்றை வைத்து முன் சித்தப்படுத்திய குடுவையின் துளையிட்ட பாகம் பீங்கானுக்கு நடுவில் இருக்கும்படிப் பொருத்தி வைத்துச் சந்தில்லாமல் பீங்கானுக்கும் குடுவைக்கும் இரண்டொரு சீலைசெய்யவும்.

பீங்கானைச் சுற்றி மண் போட்டமுத்திக் குடுவை மறைய அரையடி கனத்திற்குச் சூழ எருவடுக்கித் தீயிடவும். புடம் ஆறினபின்னர் கவனமாககுடுவையை நீக்கிப் பார்க்க பீங்கானில் தைலம் நிரம்பியிருக்கும்.

இதனில் அரைக் காசெடை சர்க்கரையில் விட்டு மத்தித்துத் தினம் 2 வேளை, 1 மண்டலம் கொள்ள மேகரணம், மேகத்துடிப்பு, மேகச்சொறி, புண், புரைகள் யாவும் குணமாகும்.

## 5. பூவரசம் பட்டை எண்ணெய்

கோவையிலைச் சாறு, பீச்சங்கன் இலைச்சாறு, அத்திப்பட்டைச்சாறு, பூவரசம்பட்டைச்சாறு வகைக்கு 1/4 படி; சிற்றாமணக்கெண்ணெய், உப்பு. இவற்றை ஒரு பழகின மட்பாண்டத்தில் சேர்த்து எரித்துக் கொதிக்கும் தருவாயில் இலவங்கப்பட்டை,மிளகு, கடுகுரோகணி, திப்பிலி, வாய்விடங்கம், கார்போகரிசி

வகைக்குப் பலம் 1; அசுவகந்தி பலம் 2 1/2, பறங்கிச் சக்கை பலம் 3. இவற்றையெல்லாம் முன் கூறப்பட்ட ஏதேனுமொரு சாற்றினால் அரைத்துக் கலக்கி வண்டல் மெழுகு பதம் வரும் செவ்வியில் வடித்துக் கொள்க. பின்னர் 1/4 பலம் சுத்தி செய்த பூரத்தைக் கல்வத்தில் இட்டு முன்முடித்த எண்ணெயில் சிறிது விட்டரைத்துப் பின்னர் மொத்த எண்ணெயுடன் கூட்டிக் கலக்கி உபயோகப்படுத்தவும்.

தினம் காலை நேரத்தில் 1/2 பலம் வீதம் 5 நாள் கொள்ள 4,5 முறை பேதி ஆகும். இதனால் மேகப்படை, மேகரணம், சொறி, சிரங்கு, குட்டம் நீங்கும். புளி தள்ளி, இச்சாபத்தியம் கொள்க.

### 6. பூவரசங்காய் எண்ணெய்

பூவரசங்காய்ச் சாறு 2 படி, முற்றின புங்கன்வேர், விழுதியிலை, சங்கன் குப்பியிலை, நுணாவிலை, வில்வம், வெங்காயம், பிரமியிலை, வேப்பம்பட்டை, மணத்தக்காளி, பொடுதலை, வல்லாரை, ஊழலாற்றிப் பட்டை. இவற்றின் சாறு வகைக்கு 1/4 படியாக எடுத்து, 3 படி சிற்றாமணக்கெண்ணெயில் கூட்டி அதனில் மஞ்சள், கோஷ்டம், அதிமதுரம், சாதிக்காய், சாதிப் பத்திரி, தான்றிக் காய், ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, கசகசா, திப்பிலி, செருப்படை, கிரந்தி நாயகம், புளியாரை, கரிசாலை, கறுஞ்சீரகம் வகைக்குப் பலம் 1/2 யாக முன்கூறப்பட்டுள்ள ஏதேனும் ஒரு சாற்றால் அரைத்துக் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடித்து மீண்டும் அதனில் அரைப்பாகம் கந்தகம், அரைப்பலம் பூரம் இவையிரண்டையும் நன்றாக அரைத்துக் கலக்கிச் சீசாவில் இடவும்.

தினம் ஒரு வேளை காலை நேரத்தில் 1/2 பலம் உட்கொள்ள 2,3 தடவை பேதியாகும். இப்படி 3 முதல் 5 நாட்கள் உட்கொள்ள மேகம் தொடர்பான அனைத்துப் படை, சொறி, கட்டி முதலியன நீங்கும்.

### 7. வங்கரசப் பற்பம்

வெள்வங்கம் பலம் 3/4. சூதம் பலம் 1/2. இவற்றை முறைப்படி உருக்கித் தொந்தித்துக் கல்வத்திலிட்டு அதனுடன் ஒரு பலம் பால்கருடக்கல் சேர்த்துச் சுண்ணநீர் விட்டு 8 சாமத்திற்குக் குறையாமல் நன்றாய் அரைத்து வில்லை தட்டி வெயிலில் உலர்த்தி, அகலில் இட்டுச் சீலை செய்து காய்ந்த பின் 30 வறட்டியில் புடமிடப் பற்பமாகும்.

இதனில் குன்றியெடை எடுத்து நெய் அல்லது வெண்ணெயில் தினம் 2 வேளை உண்ண வெள்ளை, நீர்ச்சுருக்கு, மேக அழலை முதலியன நீங்கும்.

### 8. கறுவங்கச் சுண்ணம்

சுத்தி செய்த கறுவங்கத்தை ஒரு வாணலியில் போட்டு உருக்கி, ஆடுதின்னாப்பாளையைச் சிறிதுசிறிதாகப் போட்டு இரும்புக் கரண்டியால் உலோக சத்தில்லாமல் 12 சாமம் வறுத்து, அதனுடன் சம அளவு கெட்டி மிளகைக் கூட்டி மேற்படி மூலிகைச் சாறு விட்டு அரைத்து வில்லை செய்து, நன்றாகக் காய்ந்தபின் அகலில் அடக்கிச் சீலை செய்து உலரவைத்து 50 எருவில் புடமிடச் சுண்ணமாகும்.

இதனில் வேளைக்கு அரைக் குன்றி, அந்தி சந்தியாக இருவேளை 7 நாள் நெய், தேன் முதலிய அனுபானங்களில் கொடுக்க மேகவாய்வு, நீரடைப்பு, முதலியன தீரும். தவிர மேகக் கட்டி, மேகவிரணங்களும் ஆறும். புளி, மிளகாய், புகையிலை நீக்கவும்.

### 9. வீரரசப்பதங்கம்

ஒரு பலம் சூதம், ஒரு பலம் வீரம். இவ்விரண்டையும் நன்றாக அரைத்து ஒரு சிறு குடுவையில் போட்டு வாய்க்கு ஓடு மூடிச் சீலை செய்து காய்ந்த பின், 3 செங்கல்களை அடுப்பு போல் அமைத்து அதன் மேல் குடுவையை வைத்து அடியில் ஒரு அகன்ற அகலில் நிறைய விளக்கெண்ணெய் விட்டு அதில் 25 இழையுள்ள பருத்தி நூல் திரியிட்டு ஒரு சாமம் எரிக்கவும். பின்னா 2-ஆவது சாமத்தில் அதைப்போன்று மற்றொரு திரியிட்டு எரிக்கவும். இவ்வாறு 4 சாமம் எரிக்கவும். பின் ஆறவிட்டு எடுக்கப் பதங்கமாகியிருக்கும்.

இதனை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

தேக வன்மைக்கு ஏற்றவாறு ஒரு பலம் சிற்றாமணக்கெண்ணெயில் குன்றியளவு பதங்கத்தை நன்றாக உறவாகும்படிக் கலக்கிக் காலையில் சாப்பிட 4,5 தடவை பேதியாகும். மேகவாயு, பிடிப்பு, மேக விரணம் முதலியன குணமாகும்.

பத்தியம்: புளி நீக்கவும். இச்சாபத்தியம் தேவை. பசித் தீபனம் அதிகமாகக் காணப்படுமாதலால் நல்ல ஆகாரங்களை உட்கொள்ளுதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதங்கம் 4 வராகன் எடை, வரகரிசி மாவு 1/2 பலம், பனைவெல்லம் 1/2 பலம்.

இவைகளை அரைத்து மெழுகாகச் செய்து மிளகுப் பிரமாணம் வாழைப்பழத்தில் வைத்துத் தினம் 2 வேளை 3 முதல் 5 நாட்கள் கொடுக்கப் புண், கிரந்தி, அரையாப்பு, தொடை வாழை முதலியன குணமாகும்.

### 10. வெள்ளிப் பற்பம்

இரசம், நவாச்சாரம், வெள்ளைப்பாடாணம் வகைக்கு 1 கழஞ்சு , வெள்ளி அரப்பொடி 7 கழஞ்சைக் கல்வத்திலிட்டு நாகமல்லியிலைச் சாற்றால் 4 சாமம் இடையறாது நன்றாக அரைத்து வில்லை செய்து வெயிலில் காய வைத்துப் பின்னர் அகலில் வைத்து மேல் அகல்மூடிச் சீலை செய்து 30 எருவில் புடமிடப் பற்பமாகும். ஒருக்கால் வெள்ளியின் சத்து இருக்குமானால் அல்லது பற்பத்தின் நிறம் கறுத்திருப்பினும், முன் கரைத்த மூலிகைச் சாற்றால் மீண்டும் 4 சாமம் அரைத்து வில்லை செய்து முன்போல் புடமிடவும். நல்ல பற்பமாகும்.

இதனில் கால் குன்றிப் பிரமாணம் தினம் 2 வேளை, தேகவன்மைக் கேற்றவாறு 5 முதல் 7 நாட்கள் நெய், வெண்ணெய் ஆகியவற்றில் கொடுக்க வெள்ளை, தந்திமேகம், நீரடைப்பு முதலியன குணமாகும். வளிநோய்களும் நீங்கும்.

### 11. கல்நார்ப் பற்பம்

5 பலம் நாட்டுக் கல்நாரைக் கல் இல்லாமல் கரைத்த சுண்ணாம்பில் 6 நாள் ஊறப்போட்டு எடுத்து அதற்குச் சுண்ணாம்பும் பிரமியிலையும் சமடையாக அரைத்துக் கனமாகக் கவசம் செய்து உலர்த்திப் பின்னர் மண்சீலை செய்து 100 எருவில் புடமிடவும். மீண்டும் உள்ளிட்ட கல்நாரை எடுத்துக் கல்வத்திலிட்டு வெற்றிலைக்காய்ச்சாறுவிட்டு நன்றாய் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடிச் சீலை செய்து, 25 வறட்டியில் புடமிடவும். இவ்விதம் 3 புடமிட நல்ல பற்பம் ஆகும்.

வேளைக்குக் குன்றியளவு நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில், தினம் 2 வேளை கொள்ளின் நீர் எரிச்சல், மேகக் காங்கை, நரம்பு பலவீனம் முதலியன நீங்கும். தேகத்தில் விந்தூறும். நரம்புகள் வலுப்படும்.

### 12. சூதப்பற்பம்

ஒரு கோப்பையில் சூதத்தையும் வெடியுப்புத் திராவகம் என்னும் புகைநீரையும் விட்டு வெயிலில் வைக்க ஒருவிதமாகக் கட்டுப்பட்டுப் பூத்துப் புட்டுப் போலாகும். இதனை நன்கு உலர்த்திப் பொடித்து வைத்துக் கொள்க.

ஒரு சிற்றண்டத்தில் சிறு துளையிட்டு அதன் மூலமாக ஒரு குச்சியை விட்டுவிட்டு இழுக்க உள்ளிருக்கும் கரு எல்லாம் வெளியாகும். பின்னர்

காயவைத்து அதனில் முட்டை ஒன்றுக்கு ஒரு வராகனெடையாக முன் சித்தப்படுத்திய சூதப்பற்பத்தைச் செலுத்தி வாய்க்கு ஒரு முட்டை ஓட்டின் துண்டினால் உழுந்தின் பசை தடவி மூடிச் சீலை செய்து நன்றாகக் காய்ந்த பின் 12 வறட்டியில் புடம் போடவும். ஆறினபின் கவசம் நீக்கி அண்டத்தின் ஓட்டையும் உள்ளிருக்கும் பற்பத்தையும் சேதப்படாமல் எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக் கொண்டு 2,3 அரிசிப்பிரமாணம் கருப்பட்டியில் தினம் 2 வேளை, 5 நாட்கள் கொடுக்க மேகத்தினால் வரும் பிடிப்புகள், கிரந்தி, கொறுக்கு, குழிவிரணங்கள் முதலியன தீரும்.

இச்சாபத்தியமாக இருக்கவும். பசுமோர், நெய் ஆகியவற்றைத் தேகம் சூடாகாமல் இருக்க மிகுதியும் சேர்க்கவும்.

## 13. திரிலோக பூபதி

தங்கம் அரப்பொடி, கெட்டிமுத்து வகைக்கு 2 குன்றியெடை, வெள்ளியரப்பொடி, தாம்பிர அரப்பொடி, சீமைக் கல்நார், பவழம் வகைக்கு 3 குன்றி எடையாகக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றினால் 4 சாமம் அரைத்து வில்லை செய்து காயவைக்கவும். ஒரு அகலில் மெலிதாகச் சீவிய கற்றாழையின் சோற்றை வைத்து அதன்மீது வில்லையை அடுக்கி மேலும் முன்போல் மெல்லியதாகச் சீவிய கற்றாழையின் சோற்றையிட்டு மேல் அகல் மூடிச் சீலை செய்து 7,8 வறட்டியில் புடமிடவும். அரைத்து அரைத்து 4,5 புடமிடப் பற்பமாகும் இது அதிக வெளுப்பாயிராது. மேக வர்ணத்திலும் சற்று உயர்தரமாக வெளுத்தே காட்டும்.

இதனில் அரிசிப்பிரமாணம் தினம் 2 வேளை, 7 நாட்கள் நல்ல இலேகியங்களில் வைத்துண்ணலாம். மேகம் சம்பந்தமான பல நோய்களும், வாத நோய்களும், குன்மமும் தீரும். நல்ல ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

## 14. நாகப்பற்பம்

வெடியுப்பு, படிகாரம், எலுமிச்சம் பழத் தோல் இவைகளை வகைக்கு ஒரு பலமாகக் கல்வத்திலிட்டு நன்றாக அரைக்க மெழுகு போலாகும். இதனை வில்லையாகத் தட்டி நெருப்பனலின்மீது ஒரு புது மண் ஓட்டைவைத்து அதனிலிட்டு நீர் சுண்ட, புரட்டிப் புரட்டிக் கொடுத்து எடுத்துக் கொள்க. இதனை ஒருவிதமான குரு என்பர்.

இலுப்பை எண்ணெயில் 7 முறை உருக்கிச் சாய்த்துச் சுத்தி செய்தெடுத்த ஒரு பலம் நாகத்தை இரும்பு வாணலியில் இட்டுக் கன்னான் உலையில் வைத்து உருக்கி, முன் சித்தப்படுத்தி வைத்துள்ள குருவைப் பொடித்துச் சிறிது சிறிதாகப்

போட்டு அயக்கரண்டியால் துழாவி, விசையாக உலையை ஊத, நாகமானது பற்றி எரிந்து பூத்துநிற்கும். இதனைச் சேதப்படாமல் சுரண்டிக் கல்வத்திலிட்டு ஆமணக்கிலைச் சாற்றால் 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து, ஓட்டிலிட்டு மேலகல் மூடிச் சீலை செய்து முழுப்புடம் போடவும். இப்படி 3 புடமிட உயர்தரமான பற்பமாகும்.

இதனில் குன்றி எடை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் தினம் இருவேளை. உட்கொள்ள மேகரணம், வெள்ளை நோய், நீர் எரிச்சல், மூலம், பவுத்திரம் முதலியன நீங்கும். தாது வலுக்கும்.

## 15. பஞ்சபாணப் பற்பம்

கற்பூர சிலாசத்து, பால் கருடக்கல், கல்நார், பவழம், வெங்காரம் வகைக்குப் பலமாக எடுத்துக் கல்வத்திலிட்டுக் குமரிச் சாற்றால் 4 சாமமரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலிலிட்டு மேல் அகல் மூடிச் சீலைசெய்து காய்ந்த பின்னர் 20 வறட்டியில் புடமிடவும்.

புடம் நன்கு ஆறின பின்னர் மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு மீண்டும் குப்பைமேனிச் சாற்றில் 4 சாமம் அரைத்து வில்லைதட்டி முன் போல் அகலில் அடக்கிச் சீலை செய்து 20 வறட்டியில் புடமிடவும். இது உயர்தரமான பற்பமாகும். பொடித்துச் சீசாவில் இடவும்.

வேளைக்கு 1 குன்றியளவு தினம் 2 வேளை நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் ஒருவாரம் உண்ண வெள்ளை, நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல் முதலியன தீரும். பத்தியம்: காரசாரமில்லாத ஆகாரமாக உட்கொள்ளல் சாலச் சிறந்தது.

## 16. வெள்ளிப் பற்பம்

ஆலம் விழுதின் நுனிகளைக் கொய்து உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கியது 1 பலம், வெள்ளி அரப்பொடி அல்லது சுத்தப்படுத்திய வெள்ளிச்சரிகை 1 பலம். இவையிரண்டையும் கல்வத்திலிட்டு ஆலம் விழுதின் நுனிகளை இடித்துப் பிழிந்தெடுத்த சாறுவிட்டு 3 சாமம் அரைத்து வில்லைதட்டி அகலில் இட்டுச் சீலை செய்து முழுப்புடமிடவும். இப்படி 3 முறை புடமிட்டெடுத்த பற்பத்தில் குன்றி எடை தினம் 2 வேளை நெய்யில் கொள்ளத் தாதுவலுக்கும். வெட்டை அறவே நீங்கும்.

## 17. பஞ்சபூதச் செந்தூரம்

வீரம், இரசம், இலிங்கம், பூரம், இரசச் செந்தூரம் வகைக்கு 1/2 பலம் வீதம் கல்வத்தில் இட்டு அரைத்து ஒரு மண்ணோட்டில் போட்டுத்தீயின் மேல் வைத்து

முருங்கைப்பூச் சாறு, செப்பு நெருஞ்சில் இலைச்சாறு, முலைப்பால் சம அளவாகக் கலந்து, வைத்துக் கொண்டு, 4 சாமம் சுருக்குக் கொடுத்து ஆறினபின் இரண்டொருநாள் உலரும்படி வைத்துக் கல்வத்திலிட்டு 1 வாரம் வரையில் தினம் 2, 3 மணி நேரத்திற்குக் குறையாமல் அரைத்துவரச் செந்தூரம் ஆகும்.

இம்மருந்தில் தினம் 2 வேளை, காலை மாலை தேன், நெய் முதலிய அனுபானங்களில் 1/2 முதல் 1 குன்றிமணிப் பிரமாணம் கொடுக்க மேகரணம், குடைச்சல், பக்கவாதம், சர்வாங்க வாய்வு முதலியன தீரும்.

பத்தியம்: புளி நீக்கி, இச்சாபத்தியமாக இருக்கவேண்டும்.

இச்செந்தூரத்தில் தேன் விட்டரைத்து மெழுகு பதமாக வைத்துக் கொள்வதுமுண்டு. அந்நிலையில் அதைப் பஞ்சசூதமெழுகு என்று சொல்வர். இச் செந்தூரம் நாட்பட்டதாக இருப்பின் நல்லது.

## 18. சிங்கிச் செந்தூரம்

மிருதார்சிங்கி 1 பலம், அன்னபேதி 1 பலம். இவையிரண்டையும் கல்வத்திலிட்டு மழை நீரில் 10 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் அடக்கி மேல் அகல் மூடிச் சீலை செய்து காய்ந்தபின், 20 பலம் கொண்ட வறட்டியில் புடமிடச் செந்தூரமாகும்.

இதனில் வேளைக்கு அரைக்குன்றியளவு தினம் 2 வேளை தேன், நெய் முதலிய அனுபானங்களில் கொடுத்துவரத் தாது வலுக்கும். மேகவிரணங்கள், வாத, பித்த ரோகங்கள் குணமாகும்.

## 19. சொர்ணவங்கச் செந்தூரம்

ஒரு பலம் கறுவங்கத்தை முறைப்படிச் சுத்தி செய்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பின்மீது வைத்துருக்கி, அதனோடு கொஞ்சம் கொஞ்சமாக தங்க ரேக்கு ஒரு வராகன் எடை கொடுத்துத் தேய்க்க உறவாகும். அத்தருணம் தீயை அதிகப்படுத்தி, சட்டியானது செந்நிறமாக இருக்குந் தறுவாயில் சிறு துண்டுகளாக நறுக்கிய 10 பலம் வெள்ளைச் சாட்டரணைச் சமூலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கரண்டியால் தேய்க்க 1 சாமத்திற்குள் அற்புதநிறமுடைய செந்தூரம் ஆகும்.

இச்செந்தூரத்தில் அரிசிப்பிரமாணம் தினம் 2 வேளை நெய், தேன் இவற்றில் 7 நாட்கள் உட்கொள்ள நீடித்த வெள்ளை, தந்திமேகம் முதலியன குணமாகும். வியாதி மிகவும் தீவிரமானதாயின் மீண்டும் ஒருமுறை சாப்பிட வேண்டும்.

கருமேகத்திற்கு 4 அல்லது 6 முறை சாப்பிட வேண்டும். மேக விரணங்களுக்கு 3 அல்லது 4 முறை உட்கொள்ள வேண்டும்.

## 20. பூரச் செந்தூரம்

சுத்தி செய்த பூரம் 4 பலம், வாலை இரசம் 2 பலம், சுத்தி செய்த கந்தகம் 2 பலம். முதலில் கந்தகத்தையும் வாலை இரசத்தையும் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்துச் சுத்தக் கறுப்பாக இருக்கும் தன்மை நோக்கி அதனுடன் இரசக்கற்பூரத்தைக் கூட்டி 2, 3 சாமம் வரையில் எல்லாம் உறவாகும்படி அரைத்து, பெருந்தேங்காய்ப் பிரமாணம் உள்ள ஒரு மட்குடுவையில் மருந்தைப் போட்டு அத்தகைய மற்றோர் குடுவையை வாய்பொருந்தும்படி கவிழ்த்து, சந்தில்லாமல் மண் அப்பி 7 சீலை செய்து வெயிலில் காயவைத்து மேல் குடுவையின் உச்சியில் குடைக்கம்பி தாராளமாக நுழையும் படியான ஓர் துளையிட்டு வைத்துக் கொள்க.

பின்னர் ஒரு வாயகன்ற மட்பாண்டத்தில் நான்கு விரலளவு பெருமணல் பரப்பி அதன் மத்தியில் முன் சித்தப்படுத்திய குடுவையை அமர்த்தி, மேற்குடுவை முக்கால்பாகம் மறையும் படியாக மணல்கொட்டிப் பரப்பி அடுப்பேற்றி 4 சாமம் முத்தீயாக எரித்து வருக. இங்ஙனம் எரிக்கும்போது நாழிகைதோறும் மேற் குடுவையிலிட்டத் துளையின் வழியாகக் குடைக் கம்பியை விட்டு மருந்தைக் கிளறிக் கொடுத்துக் கொண்டு வருக. கம்பியின் முனை சிவந்தவர்ணம் காட்டினும் வெளுத்த புகை படிந்திடினும் செந்தூரம் ஆயிற்று என அறியலாம்.

இதனில் 1/2 முதல் 1 குன்றி நெய், தேன் ஆகிய அனுபானங்களில் தினம் 2 வேளை, 5 முதல் 7 நாட்கள் உண்ணக் கிரந்தி, மேகவிரணம், சூலை வாதக் குடைச்சல், சுரம், சன்னி முதலியன தீரும். மேகம் சம்பந்தமான பல நோய்களைப் பரிகரிப்பதற்கு இது ஒரு விசேஷ மருந்தாக எண்ணப்படுகிறது.

## 21. வீர மெழுகு

அரைப்படி கொடிக்கள்ளிச் சாறும், அரைப்படி முலைப்பாலும் தனித்தனியாகச் சேகரித்து வைத்துக் கொண்டு, ஒரு மண்ணோட்டில் 1 பலம் வீரத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கியிட்டு அடுப்பின் மீது ஏற்றிச் சிறு தீயாக எரித்து ஒன்றன்பின் ஒன்றாகச் சுருக்கிட்டுக் கொண்டுவரின், வீரம் கரைந்து சுண்டி மெழுகு பதமாகும். பின்னர் சமனெடைப் பனைவெல்லம் சேர்த்து நன்றாய் அரைத்துப் பத்திரப் படுத்தவும்.

இதனில் வேளைக்குக் குன்றி பிரமாணம் தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க மேகம் தொடர்பான பிடிப்பு முதலான எல்லா நோய்களும் குணமாகும். புளி தள்ளி, இச்சாபத்தியமாக இருத்தல் அவசியம்.

## 22. மேகவிரணக் களிம்பு

பூரம், மிருதார்சிங்கி, படிகாரம், இலிங்கம் இவைகளைச் சம எடையாகக் கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்து வைத்துக் கொண்டு வேண்டும் போது வெண்ணெயில் சிறிது மத்தித்து மேக விரணங்களுக்கும், கொருக்குப் புண்களுக்கும் பூச ஆறும்.

# VI

"ஆத்மரட்சாமிர்தம்" என்னும் "வைத்திய சார சங்கிரகம்" என்ற நூலில் கூறப்படும் சில சிகிச்சை முறைகள்:

## வெள்ளை நோய்க்கான பொது மருத்துவம்

1. ஒரு பலம் சீனிக்காரத்தை ஆவின் பாலால் ஆட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து காடைப்புடம் போட்டு, வேளை ஒன்றுக்கு 1 வராகன் எடை வீதம் எலுமிச்சம்பழச்சாற்றில் 3 நாள் கொடுக்க நீங்கும். பத்தியம்: மோர்சாதம் மட்டும் சாப்பிட வேண்டும்.

2. சிற்றிலைப்பாலாடையை எலுமிச்சங்காயளவு அரைத்து ஆவின்பாலில் கலக்கி 3 நாட்கள் கொடுக்கப் பிரமியம் தீரும்.

3. வெள்ளாட்டுப் பால், எலுமிச்சம்பழச்சாறு, மாம்பட்டைச்சாறு இவைகளை ஓர் நிறையாய்க் கலந்து 3 நாட்கள் கொடுக்கத் தீரும்.

4. ஒரு துட்டெடை வெந்தயத்தை இரவில் ஊறவைத்துக் காலையில் அரைத்து மோரில் கலக்கி 3 நாள் கொடுக்கத் தீரும்.

5. நீர்ப்பூலாக் கொழுந்தை எலுமிச்சங்காயளவு அரைத்து, ஆவின் பாலில் 3 நாள் கொடுக்கத் தீரும்.

6. அத்திப்பிஞ்சைத் தேங்காய்ப்பால் விட்டு இடித்துப் பிழிந்து, வெள்ளைக் குங்கிலியம் 1 வராகனெடை பொடித்துப் போட்டு வேளை ஒன்றுக்கு அரைக்கால் படியளவு 3 நாள் கொள்ளத் தீரும்.

7. ஒரு பிடி கற்றாழை வேரை இளநீரில் அரைத்துக் கலக்கிச் சீனி கலந்து 3 நாள் கொடுக்கத் தீரும்.

8. துளசியிலையைப் பிட்டவித்து 1/8 படி சாறு பிழிந்து அதில் ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெய் சேர்த்து 3 நாள் கொள்ளத் தீரும்.

9. எலுமிச்சம்பழச்சாறு, ஈருள்ளிச்சாறு, பனங்கருப்பட்டி - இவைகளை ஓர் நிறையாகக் கலந்து இரவில் பனியில் வைத்துக் காலையில் உட் கொள்ள வேண்டும். இவ்வாறு 3 நாள் கொள்ளப் பிரமியம் தீரும்.

10. பற்பாடகத்தை எலுமிச்சங்காயளவு ஆவின்பால் கலந்து, சீனி கூட்டி 3 நாள் உண்ணத் தீரும்.

11. சிவந்த கொட்டைக்கரந்தை, ஈருள்ளி வகைக்கு ஒரு பிடி வீதம் இடித்துச் சாறு பிழிந்து ஆழாக்கு நல்லெண்ணெய் சேர்த்துக் கலந்து இதே விகிதத்தில் 3 நாட்கள் உட்கொள்ளத் தீரும்.

12. வெள்ளைக் குங்கிலியம் பலம் 1, காசுக் கட்டி, மேல் தோல் நீக்கின பூண்டு, வசம்பு வகைக்குப் பலம் கால். இவைகளைச் சிதைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டு, சூரியபுடம் வைத்து, வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் 20 நாள் கொள்ள நாட்சென்ற பிரமியமும் தீரும். பத்தியம்: ஆவின்பால், நெய், தயிர் கூட்டவும்.

13. வெள்ளைக் குங்கிலியம், சர்க்கரை, பறங்கிப்பட்டை வகைக்குப் பலம்5. பொடித்து வடிகட்டி நல்லெண்ணெயிலாவது, பசுநெய்யிலாவது ரசாயனம் செய்து அந்திசந்தி கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வரத் தீரும்.

14. பொன்னாங்காணி, சிறுகீரை இவைகளின் வேர் வகைக்கு ஒரு பிடி சிதைத்து அரைப்படி ஆவின்பாலில் போட்டு, இத்துடன் 1/2 படி தண்ணீர் கலந்து, தண்ணீர் வற்றக் காய்ச்சி வடித்து ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெயும், திரிகடியளவு சீனியும் கலந்து சாப்பிடவும். இவ்வாறு 3 நாள் 6 வேளை சாப்பிடத் தீரும்.

## இரத்தப் பிரமியம் நீங்க மருத்துவம்

1. ஆவாரையரிசி படி 1/8; நற்சீரகம், சந்தனம், சர்க்கரை வகைக்குக் கழஞ்சு. இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துக் கலக்கி 3 வேளை கொடுக்கத் தீரும்.

2. ஆவாரை வேர்ப்பட்டை, விஷ்ணுகாந்தி சமூலம் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் பாலில் கரைத்துச் சர்க்கரை சேர்த்து 3 நாள் கொள்ளத் தீரும்.

3. விஷ்ணுகாந்தி வேரையாவது, அம்மான் பச்சரிசியையாவது, அல்லிவிரையையாவது ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்துப் பசும்பாலில் கலந்து 3 நாள் கொடுக்கத் தீரும்.

4. முருங்கைப் பூச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1/8 படி, வெல்லம் 2 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து 3 நாட்கள் கொள்ளத் தீரும்.

5. சிறுகீரைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு படி 1/8; கற்சுண்ணாம்புத் தெளிவு படி அரைக் கால். ஒன்றாய்க் கலந்து 8 நாட்கள் கொள்ளத் தீரும்.

6. விடத்தலைக் கொழுந்தும், ஏலமும் அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துத் தயிரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

7. சந்தனம், சண்பகப்பூ வகைக்கு கழஞ்சு 1; காவிக்கல், பொன்மெழுகு வகைக்குக் கழஞ்சு 2. இவைகளைத் தாய்ப்பால் விட்டரைத்துக் தூதுவளங்காயளவில் உருண்டை செய்து, வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம், 1/8 படி தாய்ப்பாலில் 8 நாள் கொடுக்கத் தீரும்.

8. பிரப்பங்கிழங்கு, சங்கன் வேர்ப்பட்டை, வெள்ளறுகு, சிவனார்வேம்பு, முற்றின வேப்பம்பட்டை வகைக்குப் பலம் 10. இவைகளை இடித்துச் சூரணம் செய்து திரிகடிப் பிரமாணம் 3 நாள் கொள்ளத் தீரும்.

9. மேனியிலைச்சாறு படி 1/8, எலுமிச்சங் காயளவு வெல்லம் கலந்து 3 நாள் கொள்ளத் தீரும்.

10. பருத்தியிலைச் சாறு படி 1/8-இல் , கல்நாரை, எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்துப்போட்டுச் சீனி கலந்து 3 நாள் கொடுக்கத் தீரும்.

11. நெருஞ்சில் வேரை எலுமிச்சங்ககாய் பிரமாணம் அரைத்துப் பசுவின்பாலில் 3 நாள் கொடுக்கத் தீரும்.

12. ஓரிலைத் தாமரைச் சாற்றில் சீனி கலந்து வேளை ஒன்றுக்கு 1/4 படி வீதம் 3 நாள் கொள்ளத் தீரும்.

13. முருங்கைப்பூ, கற்றாழஞ்சோறு, வெண்ணெய் இவைகளை ஓர் நிறையாய் எடுத்து அரைத்து வேளை ஒன்றுக்கு ஒரு மாங்காயளவு அந்தி, சந்தி 3 நாள் சாப்பிடத் தீரும்.

14. ஒரு படி வல்லாரையை 1/4 படி பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி 3 நாள் கொள்ளத் தீரும். உப்பு, புளி நீக்கவும்.

### சுக்கிலப் பிரமியம் நீங்க மருத்துவம்

1. கலைக்கொம்பும் சந்தனமும் வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு மோர் விட்டரைத்துத் தேனில் குழைத்துண்ண நீங்கும்.

2. வில்வவேரும் நெற்பொரியும் வகைக்குப் பலம் 10 இடித்து, 8 படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து வேளை ஒன்றுக்கு 1/8 படி வீதம் 6 வேளை கொள்ளத் தீரும்.

3. கோரைக் கிழங்கு, விஷ்ணுகாந்தி, மிளகு வகைக்குப் பலம் 1/2 ஐ-4படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு 1/8 படி வீதம் 6 வேளை கொள்ளத் தீரும்.

4. நெல்லிக்காய் 10, தேற்றான் விதை 20. நையத் தட்டி செவ்விளநீரில் ஒரு நாள் ஊறப்போட்டு மறுநாள் காலையில் இறுத்து அதில் கலைக்கொம்பைக் கொட்டைப் பாக்களவு அரைத்துக் கலக்கி சீனி கலந்து 3 நாள் கொள்ளத் தீரும்.

5. ஈருள்ளிச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய் இவற்றைச் சமமாய்க் கலந்து வேளையொன்றுக்கு 1/8படி வீதம் 3 நாள் காலையில் கொள்ளத் தீரும்.

6. நற்சீரகம், ஏலம், சிறுபுள்ளடி ஆகியவற்றை ஓர் நிறையாய் எடுத்து ஆவின்பால் விட்டு இடித்துப் பிழிந்த சாறு 1/4 படியில் சீனி கலந்து 3 நாள் சாப்பிடத் தீரும். 6 நாள் வரை உப்பு, புளி தள்ளவும்.

7. ஆவின் நெய், பால் வகைக்குப் படி 1; வாழைப் பூச்சாறு, வாழைக் கிழங்குச் சாறு வகைக்குப் படி 1/2. ஒன்றாய்க் கலந்து அதில் நற்சீரகம், அமிர்தச் சர்க்கரை வகைக்குப் பலம் 3/4. ஆவின் பாலில் அரைத்துப் போட்டு மெழுகு பதத்தில் வடித்து நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உண்ணத் தீரும்.

8. பருத்திக் கொட்டைப் பால் படி 1, வெல்லம் பலம் 4, கோழிமுட்டை 10, நல்லெண்ணெய் படி 1/4 - ஒன்றாய்க் கலந்து காய்ச்சி 3 நாள் சாப்பிடத் தீரும்.

9. ஆவின் நெய் படி 1, கீழாநெல்லிவேர் பலம் 5, விரலிமஞ்சள் பலம் 5 - அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் 8 நாள் கொள்ளத் தீரும்.

### சீதப் பிரமியத்தின் மருத்துவம்

1. மிளகை ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து நல்லெண்ணெயில் மத்தித்து 3 நாள் சாப்பிடத் தீரும்.

2. அதிமதுரத்தைச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் நீராகாரத்தில் 10 நாள் கொள்ளத் தீரும்.

3. அத்திப்பிஞ்சைத் தேங்காய்ப்பால் விட்டு இடித்துப்பிழிந்த சாறு படி 1/8-இல் வெள்ளைக் குங்கிலியம் வராகன் எடை 1 ஐப் பொடித்துப் போட்டு 3 நாள் சாப்பிடவும்.

4. குப்பைமேனியிலையை உப்பில்லாமல் அவித்து, மிளகையும் அரிசியையும் பொரித்துப் பொடித்துத் தூவி ஒரு சிறு மாங்காய் அளவு காலை மட்டும் 3 நாள் சாப்பிடத் தீரும்.

## வெட்டை நோய் மருத்துவ முறைகள்

1. ஆவின் நெய் படி 2 1/2; பொரித்த நற்சீரகம் பலம் 5; கற்கண்டு பலம் 2 1/2 - பொடித்துப்போட்டு வைத்துக் கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

2. நாயுருவிவேர் பலம் 20-ஐ இடித்து 10 படி தண்ணீரில் போட்டு 4 படியாய் வற்ற வைத்து வடித்து அதில் தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு, ஆவின் பால், நெய் வகைக்குப் படி 1 கூடவிட்டு முத்தக்காசு, நன்னாரி வேர், ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துச் சர்க்கரை பலம் 4 கூட்டி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத் தீரும்.

3. வெள்ளைக் குங்கிலியம், கற்கண்டு வகைக்குப் பலம் 7 பொடித்துக் கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு பலம் வீதம் 1/2 பலம் நல்லெண்ணெயில் மத்தித்து நாளொன்றுக்கு 2 வேளையாக 7 நாட்கள் சாப்பிட்டுவர வெட்டை தீரும்.

4. தேங்காய்ப் பால், பருத்தி விதைப்பால், பசுவின் பால், வகைக்குப் படி 1. ஒன்றாகக் கலந்து இதில் பறங்கிப்பட்டை, சுக்கு, மிளகு, நற்சீரகம் வகைக்குப் பலம் 1, பொடித்துப்போட்டு ஒன்றறைப் படியாய் வற்ற வைத்துக் கொண்டு, வேளை ஒன்றுக்கு 1/4 படி வீதம் சாப்பிடத் தீரும்.

5. புங்கம் வேரின் பால் படி 1/4, தேங்காய்ப் பால், பசுவின்பால் வகைக்குக்குப் படி 1/8 - ஒன்றாகக் கலந்து அதில் ஓரிலைத் தாமரை வேரை அரைத்து, ஒரு எலுமிச்சங்காயளவு கரைத்து, 3 நாள் சாப்பிடத் தீரும்.

6. பழம் பாசிச் சாறு,நல்லெண்ணெய் வகைக்குப் படி 1/8. ஒன்றாகக் கலந்து அதில் நற்சீரகம், ஈருள்ளி வகைக்குப் பலம் 1/4 அரைத்துக் கலக்கி 3 நாள் சாப்பிடத் தீரும்.

7. ஒரு படி புங்கம்பூவில் ஒருபடி பசுநெய்யைச் சிறுகச்சிறுக விட்டு பொன்னிறமாய் வதக்கிக் கொண்டு, அந்தி சந்தி திரிகடியளவு சாப்பிட்டுவர வெள்ளை, வெட்டை, மேகச்சூலை தீரும்.

9. எலுமிச்சம்பழச் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1/8 படி எடுத்து ஒன்றாகக் கலந்து 3 நாள் காலையில் மட்டும் சாப்பிடத் தீரும்.

10. நாரத்தையிலை, மாம்பட்டை வகைக்கு ஒரு தேற்றான் விதைப் பிரமாணம் அரைத்து எருமைத் தயிரில் கலந்து 3 நாள் சாப்பிடத் தீரும்.

11. நிலக்குமிழியிலையை ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து, ஈருள்ளி வராகன் எடை 15 துடன் சேர்த்து, புதுக் கலசத்தில் 1/8 படி தண்ணீர் விட்டு அதில் போட்டுப் பனியில் வைத்துக் காலையில் பிழிந்து சாப்பிடவும். இவ்வாறு 6 நாட்கள் சாப்பிடத் தீரும்.

12. 100 கதலி வாழைப்பழத்தைத் தோல் நீக்கி ஒரு பீங்கானில் போட்டு அதில் பச்சை மூங்கிலின் மேல்தோலை இடித்த தூள் (விழுது) விளாங்காய் பிரமாணமும், பச்சரிசி ஒரு சிரங்கையும் போட்டுப் பிசைந்து 30 நாழிகை வைத்திருந்து, பிறகு துணியில் முடிந்து தொங்க விட்டால் நீரிறங்கும். அந்த நீரில் 1 படி எடுத்து ஒரு நாள் சூரியபுடம் வைத்து, அடுத்த நாள் ஒரு பலம் சர்க்கரை கலந்து காய்ச்சிப் பதத்தில் இறுத்து வைத்துக் கொண்டு, வேளை ஒன்றுக்கு 1/2 வீசம்படி அளவில் சாப்பிட வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிவு தீரும்.

13. மேற்சொன்ன கதலி பழச்சாறு படி 1, பசுவின் பால் படி 1, கற்கண்டு பலம் 6. ஒன்றாய்க் கலந்து காய்ச்சி ஓயாமல் கிண்டிக் கொடுத்துக் குறுகி வரும்போது நெய் 1/8 படி விட்டுக் கிண்டி பாகை ஒரு இலையில் விட்டு ஆற்றித் திரட்டிப் பார்க்க மெழுகு போலிருந்தால் அதைப் பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு, வேளை ஒன்றுக்குக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் பவழப்பற்பம் வைத்து உண்ணத் தீரும்.

14. பசுவின் பால், ஏரண்டத்தெண்ணெய், தேங்காய்ப் பால், எலுமிச்சம்பழச்சாறு, ஈருள்ளி, யானை நெருஞ்சில் வகைக்குச் சாறு படி 1. இவற்றை ஒன்றாய்க் கலந்து வெந்தயம், சீரகம், ஏலம், அதிமதுரம், சந்தனம் வகைக்குக் கழஞ்சு 3 அரைத்துப் போட்டு 3 நாள்வரை சிறு தீயாக எரித்து வடித்துக் குங்குமப்பூ, கோரோசனை வகைக்குக் கழஞ்சு 3 அரைத்துப் போட்டுக் கலக்கி வைத்துக் கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர வெள்ளை, வெட்டை, நீர்ச்சிறுப்பு, நீர்க்கடுப்பு ஆகிவை தீரும்.

15. துளசி, சீராசெங்கழுநீர், சுரை, வல்லாரை, ஈருள்ளி, கற்பூரவள்ளி, வில்வம் இவற்றின் சாறு வகைக்குப் படி 1/2. ஒன்றாகக் கலந்து அதில் கூகை நீறு, திரிசாதம், பால்கருடக்கல், அதிமதுரம், கறுஞ்சீரகம், நற்சீரகம், மலாக்கா சந்தனம், செஞ்சந்தனம், ஏலம், வகைக்குக் கழஞ்சு 2 அரைத்துப் போட்டு, நெய் படி 1 கூடவிட்டுக் காய்ச்சி வடித்து, வேளை ஒன்றுக்கு ஒரு கரணடி வீதம் கொள்ளத் தீரும்.

### அரையாப்புக்கு மருத்துவம்

1. பச்சைக் கொடிவேலி வேர்ப்பட்டையையும், சுண்ணாம்பையும் ஓர் நிறையாய் அரைத்துப் பூச அரையாப்புக் கட்டி வற்றும்.

2. வெள்ளைப் பாடாணத்தையும் மெழுகையும் அரைத்து வில்லை தட்டி வெதுப்பி வீக்கத்தில் வைத்துக் கட்டக் கட்டி கரைந்துபோகும்.

3. நீர்மேல்நெருப்பை அரைத்து வீக்கத்தில் வைத்துக் கட்டக் கரைந்துபோகும்.

4. கோவையிலையை அரைத்து பசுவெண்ணெயில் மத்தித்து வீக்கத்தில் கட்டத் தீரும்.

5. நீர்ப்பூலாக் கொழுந்தை அரைத்து பசு வெண்ணெயில் மத்தித்துக் கட்டத் தீரும்.

6. அவுரியிலையை அரைத்துப் வெண்ணெயில் மத்தித்தும் கட்டலாம்.

7. பழம்புளி பலம் 1, சேராங்கொட்டை எண் 10. இவற்றைப் பஞ்சுபோல் தட்டி வீக்கத்தில் கட்டலாம்.

8. வெள்ளைப் பூண்டையும், வெள்ளறுகையும் சேர்த்தரைத்து வீக்கத்தில் கட்டத் தீரும்.

9. முடக்கத்தானிலை, சுண்ணாம்பு, வெல்லம் இவகைளை அரைத்துத் தடவத் தீரும்.

10. ஆதளை வேரை நையத் தட்டி வைத்துக் கட்டத் தீரும்.

11. எருக்கம் பிஞ்சையும் வெள்ளைப் பூண்டையும் ஒரு நிறையாக உமிக்காந்தலில் வெதுப்பியரைத்து வீக்கத்தில் தடவத் தீரும்.

மேற் சொன்ன பற்றுகளுடன் வெள்ளை நோய்க்கான உள் மருந்துகளையும் வழங்குதல் வேண்டும். அரையாப்பு நோயில் உட்கொள்வதற்கான சில எண்ணெய் மருந்துகள் கீழே கூறப்பட்டுள்ளன:

1. மேல் தோல் சீவிய கொல்லன் கோவைக் கிழங்கு பலம் 2, பச்சைக் கொடி வேலி வேர்ப்பட்டை பலம் 1, அப்பைக் கிழங்கு பலம் 2, நீர்முள்ளியிலை பலம் 2 இவைகளை அரைத்து 1/2 படி விளக்கெண்ணெயில் போட்டு, எள்ளெண்ணெய் படி 1/2 கூடவிட்டு, மிருதார்சிங்கி வராகனெடை 2 பொடித்துப் போட்டுக் காய்ச்சி, மருந்துகள் மொருமொருவென வெந்த பருவத்தில் கருப்புக்கட்டி பலம் 2 தட்டிப்போட்டு இறக்கி வைத்துக் கொள்ளவும். கடுகில் 12 பலமும் எண்ணெயில் ஒரு கரண்டியுமாய் 12 வேளை சாப்பிட்டுவர வேண்டும்.

உப்பு, புளி தள்ளி ஆவின் நெய், துவரம்பருப்பு, வெந்நீர் இவைகளைச் சேர்த்து 7ஆம் நாள் மேற்படி எண்ணெயைத் தேய்த்துக் குளித்து, புளி கூட்டவும்.

2. பச்சைக் கொடிவேலி வேர்ப்பட்டை பலம் 8, தோல் நீக்கிய வெள்ளைப்பூண்டு பலம் 8. அரைத்து ஒருபடி நல்லெண்ணெயில் போட்டு, ஒரு படி பொடுதலைச் சாறு கூடவிட்டுக் காய்ச்சி, வெள்ளைப்பூண்டு பொன் நிறமாக வருகிற சமயத்தில் இறக்கவும். வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி எண்ணெயும் ஒரு கரண்டி கடுகுமாய்ச் சாப்பிட்டுவிட்டு உப்பு, புளி தள்ளிப் பத்தியமாயிருக்கத் தீரும்.

3. கொடிவேலி, மாவிலிங்கு, தலைச்சுருளி இவற்றின் இலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி 1/2. மேற்படி வேர்ப்பட்டைகள் மூன்றும் வகைக்கு வராகனெடை 5. மிளகு, வெள்ளைப்பூண்டு, கடுக்காய். கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், கறுஞ்சீரகம் வகைக்கு வராகனெடை 4 அரைத்துப் போட்டுக் கலந்து காய்ச்சி வடித்து மூன்று நாள் சாப்பிட்டு, 6 நாள் வரை உப்பு, புளி தள்ளிப் பத்தியமாயிருந்து, 7ஆம் நாள் தலைக்குத் தண்ணீர் வார்க்க அரையாப்பு, கண்டமாலை தீரும்.

4. பொடுதலைச் சமூலம், பூவரசம்பட்டை வகைக்குப் பலம் 14 விகிதம் எடுத்து மைபோலரைத்து 1/8 படி காடி நீரில் கரைத்து, இவ்வாறே 3 நாட்கள் காலையில் மட்டும் சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியம் கொண்டு, நீர்க்கஞ்சி மட்டும் கொள்ளவும். மறுபத்தியம் 3 நாள் இருந்து 8 -ஆம் நாள் தலைக்குத் தண்ணீர்விட்டு, உப்பு வறுத்துக் கூட்ட அரையாப்பு, கிரந்தி, பறங்கிப்புண் தீரும்.

5. அரையாப்புக் களிம்பு: இலிங்கம், மிருதார் சிங்கி, இரசக்கற்பூரம், வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய், தான்றிக்காய் இவைகளை ஓர் நிறையாய்ப் பொடித்துப் பசுவெண்ணெயால் அரைத்துத் தண்ணீரில் ஒருநாள் மிதக்கப் போட்டு மறுநாள் எடுத்து விரணங்களில் போடத் தீரும்.

6. அரையாப்புக்குத் துவர்ச்சீலை: ஓதி, இலந்தை, நாவல், கறுவேல், அத்தி இவற்றின் பட்டை வகைக்குப் பலம் 5; துத்தம், துருசு, கடுக்காய், காசுக்கட்டி, வெள்ளைக் குங்கிலியம், சீனாக்காரம் வகைக்குப் பலம் 1/4. இவற்றின் பட்டைகளைச் சிதைத்து இரண்டுபடி தண்ணீரில் போட்டு 3 நாள் ஊறவைத்துக் காய்ச்சி 1/2 படியாய் வற்ற வைத்துப் பிழிந்து வடிகட்டி மற்ற சரக்குகளைப் பொடித்துப்போட்டு, 5 எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து ஓயாமல் கிண்டி குழம்பு பதத்தில் சீலையில் நனைத்து உலர்த்திக் கொண்டு சிறு துண்டுகளாய் வெட்டி விரணங்களில் போட்டு வர ஆறும்.

## பிரமிய நோய்க்குச் சூரணம்

1. மேகராசாங்க சூரணம்: வெட்டிவேர், சீரகம்,இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, கோஷ்டம், நெல்லிவற்றல், நிலப்பனைக்கிழங்கு, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், குங்குமப்பூ, கோரோசனை, சிறுநாகப்பூ, தாமரை வளையம், பச்சைக் கற்பூரம், சந்தனம், திரிகடுகு, அதிமதுரம், நெற்பொரி, அமுக்கராக் கிழங்கு, கற்கடகசிங்கி, தக்கோலம் வகைக்குப் பலம் 1/2. இடித்துச் சூரணித்து அதற்குச் சமன் சீனி கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடிப்பிரமாணம் பசுவெண்ணெயில் 1 மண்டலம் கொள்ளக் கைகால் எரிவு, தேக வறட்சி முதலியன நீங்கும்.

2. கரந்தைச் சூரணம்: திரிகடுகு, திரிபலை, வசம்பு, இந்துப்பு, வாலுளுவையரிசி, கோஷ்டம், கறுஞ்சீரகம், ஓமம், ஏலம், மரமஞ்சள், திப்பிலிமூலம், சாதிக்காய், சண்பகப்பூ, தாளிசப் பத்திரி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், சாதிப் பத்திரி, கார்கோலரிசி, செவ்வியம், வாய்விடங்கம், யானைத்திப்பிலி- இவற்றை ஓர் நிறையாய் வெதுப்பிச் சூரணித்து அதற்கு நிகர் கரந்தைச் சூரணம் சேர்த்து வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் பசுநெய்யில் மத்தித்து, இரசப்பற்பம் வைத்துண்ண அரையாப்பு, வெள்ளை, கன்னப்புற்று, யோனிப்புற்று, தொடைவாழை முதலியன தீரும்.

3. கூழ்ப்பாண்டச் சூரணம்: பெரும்பூசணிக்காய் ஒன்றைக் கீறி குடல், மேல் தோல் நீக்கி அறிந்து, பிட்டவியலாய் அவித்து மருந்து சட்டியில் இட்டுப் பசுநெய் தெளித்துச் சிவக்க வறுத்து, இடித்த சூரணத்துடன் கடுக்காய், தான்றிக்காய், திரிகடுகு, அதிமதுரம், ஏலம், இலவங்கம், சண்பகப்பூ, கல்மதம், சீரகம் வகைக்குக் கழஞ்சு 1-வெதுப்பிப் பொடித்துச் சூரணத்தையும் ஒன்றாகக் கலந்து அதற்குச் சமன் சீனி கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடிப்பிரமாணம் கொள்ள மேகம், வெள்ளைக் கடுப்பு மூத்திரக்கிரிச்சரம், நீரடைப்பு, மேகக் காங்கை முதலியன தீரும்.

4. சந்தனச் சூரணம்: சந்தனம், கோஷ்டம், நன்னாரிவேர், கடுகுரோகணி, கற்பூரம், சீந்தில் சர்க்கரை, முத்தக்காசு, மஞ்சள், இலுப்பைப்பூ, முந்திரிப்பழம், அதிமதுரம், பூலாக்கிழங்கு, ஏலம், தாமரைக் கிழங்கு, நெய்தல்கிழங்கு, மரமஞ்சள், விலாமிச்சம் வேர், நெல்லி வற்றல்-இவைகளை ஓர் நிறையாய்ச் சூரணித்து அதற்கு நிகர் சர்க்கரை கலந்து திரிகடிப்பிரமாணம் வெண்ணெயிலாவது ஆவின்பாலிலாவது கொள்ள, 21 வகை வெள்ளை நோய்களும் தீரும்.

5. அமிர்த சஞ்சீவி சூரணம்: சீந்தில் சர்க்கரை பலம் 1, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, ஏலம், கிராம்பு, கசகசா, தாளிசப்பத்திரி, மாசிக்காய் இவைகளை ஓர் நிறையாய் இடித்துச் சலித்த சூரணம் பலம் 1; சீனி பலம் 4. ஒன்றாகக் கலந்து திரிகடிப் பிரமாணம் வாலை இரசச் செந்தூரம் வைத்து நெய்யில் கொள்ளப் பிரமியம், பிரமேகம், மேகவூரல், வெட்டைச் சூடு, அஸ்திசுரம் முதலியன நீங்கும்.

## இரசாயனங்கள்

1. சகல மேக ரசாயனம்: பறங்கிப் பட்டை, அமுக்கராக் கிழங்கு வகைக்குப் பலம் 10; நிலப்பனைக்கிழங்கு பலம் 5, தண்ணீர்விட்டான் கிழங்கு பலம் 2, நன்னாரிவேர், சங்கன் வேர், திரிகடுகு, திரிபலை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, வாய்விடங்கம், மல்லி, கறுஞ்சீரகம், நற்சீரகம், குரோசாணி ஓமம், அரத்தை, சந்தனம், சிறுதேக்கு, கண்டங்கத்தரி வேர், கொடிவேலிவேர், விலாமிச்சம்வேர், தக்கோலம், வால்மிளகு, முந்திரிகை, பேரீந்து, வெட்பாலையரிசி, தாமரைக்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, பத்திரி, கறிவேப்பிலை வகைக்கு பலம் 1; குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம் வகைக்குக் கழஞ்சு 1. இவையெல்லாவற்றையும் வெயிலில் உலர்த்திச் சூரணம் செய்து கொள்ளவும். ஆவின்பால் படி நாலில் சீனி 4 சேர் போட்டுப் பாகு செய்து அப்பால் நெய்படி 1/2 கூடவிட்டுக் கிண்டி, ஒன்றாய் உறவான பின்பு கீழிறக்கி, மேற்படி சூரணத்தைத் தூவிக் கிண்டி ஆறினபின்பு தேன்படி 1 விட்டுப் பிசைந்து கொண்டு, வேளை ஒன்றுக்குக் கொட்டைப் பாக்களவு மண்டலம் கொள்ளப் பிரமியம், கிரந்தி, கண்டமாலை, சூலை, வளிநோய்கள், லிங்கப் புற்று முதலியன தீரும்.

2. கந்தகரசாயனம்: திரிகடுகு, கிராம்பு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சாதிக்காய், தாளிசப் பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம்வேர், ஓமம், சீரகம், குரோசாணி ஓமம், சிற்றரத்தை, சித்திர மூலம், திப்பிலி மூலம், யானைத்திப்பிலி, கறுஞ்சீரகம், கூகைநீறு, முந்திரிகை, சந்தனம், தக்கோலம், அதிமதுரம், முத்தக்காசு, சடாமாஞ்சில், மல்லி, பேரீச்சம்பழம், திரிபலை, சாதிப்பத்திரி, வெட்டிவேர், குங்குமப்பூ, நிலப்பனைக்கிழங்கு, அசுவகந்தி, நெருஞ்சில், நீர்முள்ளி, பூனைக்காலி- இவைகளின் வித்து வகைக்கு வராகன் எடை 4; பறங்கிப்பட்டை பலம் 20. இவைகளைத் தனித்தனியே இடித்து வடிகட்டி எடைப்படி ஒன்றாகக் கலந்து பிட்டவித்து உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும். 70 பலம் சீனியை 6 படி தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றில் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்யவும். 1 படி ஆவின் நெய்யில் சுத்திசெய்த 4 பலம் கந்தகத்தைப் போட்டுக்

கரையக் காய்ச்சிப் பாகில் விட்டுக் கிண்டி நீர்வற்றினதன் பேரில் இறக்கிச் சூரணத்தைத் தூவிக் கிண்டி ஆறவிடவும். பின்பு தேன் படி 1 கூடவிட்டுப் பிசைந்து கலசத்தில் அடைத்து நெல்லுக்குள் 10 நாள் வைத்து எடுத்துக் கழற்சிக்காய் அளவு ஒரு மண்டலம் பத்தியமாகக் கொள்ள வளிநோய்கள், பித்தம் , சிறுநீர் கிரிச்சர நோய்கள் , சூலை, சோகை, சயம் முதலியன தீரும்.

## இலேகியங்கள்

1 கூழ்ப்பாண்ட இலேகியம்: கூழ்ப்பாண்டச் சாறு படி 4, தாழை விழுது, தென்னம்பூ, எலுமிச்சம்பழம் - இவைகளின் சாறு வகைக்குப் படி 1; ஆவின்பால் படி 2 - ஒன்றாய்க் கலந்து 10 பலம் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகு செய்து அதில் சீரகம், மல்லி, கோஷ்டம், மிளகு, மாசிக்காய், ஏலம், சாதிக்காய், சாதிப் பத்திரி, அதிமதுரம், தாளிசப் பத்திரி வகைக்குப் பலம் 1 சூரணித்துத் தூவி, நெய் படி 1/2 விட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி, தேன் படி 1/2 விட்டுப் பிசைந்து, புன்னைக்காய் வீதம் சாப்பிட்டு வரப் பிரமியம், வெள்ளை வீழ்தல், அஸ்தி வெட்டை முதலியன நீங்கும்.

2. சிறு கூழ்ப்பாண்ட இலேகியம்: இரண்டு படி ஆவின்பாலில் 20 பலம் சீனியைக் கரைத்துப் பாகு செய்து அதில் பெரும் பூசணிக்காயை மேல் தோல் சீவி நறுக்கியுலர்த்தி இடித்து வடிகட்டின பொடி படி 1, கோஷ்டம், இலவங்கம். கஸ்தூரி மஞ்சள், இந்துப்பு, திரிபலை, அதிமதுரம், சாதிப்பத்திரி, திரிகடுகு வகைக்குக் கழஞ்சு 1 இடித்துச் சூரணித்து இருவகைச் சூரணத்தையும் ஒன்றாய்க் கலந்து தூவி, 1/2 படி நெய்விட்டுக் கிண்டி, மெழுகு பதத்தில் இறக்கி, வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வர வெட்டை, வெள்ளை, நீர்க்கடுப்பு, தேகவறட்சி முதலியன நீங்கும்.

3. தூதுவளை இலேகியம்: தூதுவளம்பூ, முருங்கைப் பூ வகைக்குப் பலம் 5; நன்னாரி வேர் பலம் 2, நிலப்பனைக் கிழங்கு, நெருஞ்சி முள் வகைக்குப் பலம் 1. சூரணித்துக் குறுணி ஆவின்பாலில் போட்டுக் காய்ச்சிக் குறுகி வரும்போது 12 பலம் சீனியைப் போட்டு நெய் படி 1/2, தேன் படி கால் விட்டுக் கிண்டித் தான்றிக் காய் பிரமாணம் கொள்ளப் பிரமியம், என்புருக்கி ஆகியன நீங்கும்.

## நெய்வகை மருந்துகள்

1. பொன்னாங்காணி நெய்: பொன்னாங்காணி, பொற்றலைக் கையான் இவற்றின் சாறு, ஆவின்பால், நெய் வகைக்குப் படி 1; எலுமிச்சம்பழச்சாறு படி 1/2, அதிமதுரம் பலம் 2. ஆவின்பாலால் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து,

கற்கண்டு, கோரோசனை, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு கழஞ்சு 1 பொடித்துப் போட்டு, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டால் பிரமியம், மேகக்காங்கை, காந்தல், சூடு, கைகாலெரிவு முதலியன நீங்கும். கண் குளிரும்.

2. வல்லாரை நெய்: வல்லாரை, பொன்னாங்காணி, பொடுதலை வகைக்குச் சாறு படி 1; எலுமிச்சம் பழச்சாறு படி 1/2, ஆவின்பால், நெய் வகைக்குப் படி 2, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய்ப்பூ, காட்டாத்திப்பூ, வால்மிளகு, ஏலம், கிராம்பு, அதிமதுரம் வகைக்குக் கழஞ்சு 2. ஆவின்பாலால் அரைத்துப் போட்டு மெழுகுபதத்தில் வடித்து 2 பலம் சீனியைப் போட்டுக் கிண்டி வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் இரசப்பற்பம் வைத்து உட்கொள்ளச் சகல மேகம், விரணம், கிரந்தி, மேகச்சூலை, குட்டம், யோனிப்புற்று, நீர்க்கடுப்பு முதலியன தீரும்.

3. அறுகன் வேர் நெய்: அறுகன் வேர்ச் சாறு படி 4, ஆவின் நெய் படி 1 - ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் பலம் 1, சீரகம், சாதிப்பத்திரி, விலாமிச்சம் வேர், சிற்றாமுட்டிவேர், வில்வவேர் வகைக்கு வராகன் எடை 2; ஏலம், கிராம்பு, மிளகு, கோஷ்டம் வகைக்கு வராகன் எடை1 அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள உடம்பு எரிவு, பிரமியம், நீர்க்கட்டு, தாகம் தீரும்.

### எண்ணெய் வகை மருந்துகள்

1. கொடிவேலி எண்ணெய்: நல்லெண்ணெய் படி 1/4-இல் கொடிவேலி வேர்ப்பட்டை பலம் 1/2, கருப்புக் கட்டி பலம் 1/4 அரைத்துப் போட்டு மெழுகுபதத்தில் காய்ச்சிக் கடுகுடன் வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் பத்தியமாய் 3 நாள், ஆறு பொழுது சாப்பிட்டு, நாலாம் நாள் தலைக்குத் தண்ணீர் வார்த்து, உப்பை வறுத்துக் கூட்ட அரையாப்பு தீரும்.

2. மேகராஜாங்கத்தெண்ணெய்: சிற்றாமணக்கெண்ணெய் படி 4, ஈருள்ளி, வரிக்குமட்டி, கையான், புளியாரை, சங்கு, வல்லாரை, பொடுதலை, செருப்படை, கறுநொச்சி, பொன்னாங்காணி, நுணா, ஆடாதோடை, கிரந்திநாயகம், வெள்ளறுகு, சிவனார் வேம்பு வகைக்குச் சாறு படி 2 - ஒன்றாகக் கலந்து கொடிவேலி, பூவரசு, நிலவாகை வேர், சுடுதுரத்தி வேர், கற்றாழைக் கிழங்கு, அப்பைக் கிழங்கு, சங்கன் குப்பி வேர் வகைக்குப் பலம் 1- இடித்துக் குறுணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாக வற்ற வைத்து வடித்தக் குடிநீரையும் கூட்டிச் சாதிக்காய், கிராம்பு, ஏலம், சன்னலவங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், கோஷ்டம், திப்பிலிமூலம், வெங்காரம், குரோசாணி ஓமம், தான்றிக்காய், கறுஞ்சீரகம்,

கார்போகரிசி, கஸ்தூரி மஞ்சள், அரத்தை, அதிவிடயம், அக்கரகாரம், கடுகுரோகணி, சடா மாஞ்சில், தாளிசப்பத்திரி, கசகசா, கஞ்சா, வலம்புரிக் காய், பறங்கிப்பட்டை, அழிஞ்சில் பட்டை, வாலுளுவை அரிசி, சிறுநாகப்பூ, தக்கோலம், வசம்பு, சுக்கு, அபின், சீரகம், யானைத்திப்பிலி, குங்குமப்பூ, சாத்திரபேதி, வாளம், சேராங்கொட்டை, சத்திச்சாரம், எவச்சாரம், நவாச்சாரம் வகைக்கு வராகன் எடை4 பொடித்துப் போட்டுக் காய்ச்சி எண்ணெய் பதத்தில் வடித்து, வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் கடும்பத்தியமாய் 3 நாள், ஆறு வேளை வழங்க அனைத்து மேக நோய்களும், வளி நோய்களும், சூலையும் தீரும். துவரம்பருப்பும் வறுத்த உப்பும் கூட்டிக் கொள்ளலாம்.

3. விப்புருதி எண்ணெய்: வேப்ப எண்ணெயாவது, விளக்கெண்ணெயாவது படி 1/2, ஆடுதீண்டாப்பாளை, சங்கன் குப்பி, காட்டாமணக்கு, சின்னி, அவுரி, வெள்ளறுகு, வேலம்பட்டை- இவற்றின் சாறு, புங்கம் பால், ஆலம்பால் வகைக்குப் படி 1/8 - ஒன்றாய்க் கலந்து; துத்தம், சாதிலிங்கம், மிருதார்சிங்கி, கந்தகம், சீனாக்காரம், கறுஞ்சீரகம் வகைக்கு வராகனெடை 3, கார்போகரிசி, வெள்ளைக் குங்கிலியம் வகைக்கு வராகன் எடை 5, - பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து எண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து, இதே எண்ணெயை மேலேயும் போட விப்புருதிப் புண்ணும், அரையாப்புப் புண்ணும், புரை விழுந்த புண்ணும் ஆறும்.

### வடகம் வகை மருந்து

கந்தக வடகம்: கந்தகம், திரிகடுகு, சாதுர்சாதம், வாய்விடங்கம், திரிபலை, சிறுநாகப்பூ வகைக்குப் பலம் 5; குக்கில் பலம் 2 1/2, சித்திரமூலப் பட்டை 1 1/4 - இவைகளைச் சேர்த்தரைத்துத் தான்றிக்காயளவு உருண்டை செய்து உட்கொள்ள மேக நோய்கள் யாவும் தீரும்.

### செந்தூரம்

1. சுத்தி செய்த காந்தம், அரப்பொடி, சூதம், கெந்தி, சாதிலிங்கம் வகைக்குப் பலம் 1 எடுத்துக் கற்றாழம் பாலில் 1 நாள் அரைத்து வில்லை செய்து ஒரு சட்டியில் வைத்து, மேல் சட்டி மூடிச் சீலைமண் செய்து காடாக்கினியாக 4 சாமம் எரித்துப் பணவெடை இஞ்சிச்சாற்றில் கொள்ளச் சோகை தீரும். சித்தாதி இலேகியத்தில் கொடுக்கப் பாண்டும் மேகமும் தீரும். மற்ற அனுபானங்களிலிட வெட்டை தீரும். தாகமும் தீரும்.

2. சுத்தி செய்த கறுவங்கம் பலம் 1 எடுத்து ஆடாதோடை வேரினாலும் ஆடு தீண்டாப்பாளை வேரினாலும் வகைக்கு 2 சாமம் வறுத்துக் கல்வத்திலிட்டு

மேற்படிச் சாற்றிலும் கொட்டைக் கரந்தைச் சாற்றிலும் அரைத்து வகைக்கு 3 புடமும், வெற்றிலைச் சாற்றில் 10 புடமும் போட்டுத் தக்க அனுபானங்களில் வழங்க மேக நோய்கள் யாவும் தீரும்.

**பற்பம்**

1 நாகப்பற்பம்: இலுப்பை நெய்யில் 20 முறை உருக்கிச் சாய்த்துச் சுத்தி செய்யப்பட்ட 1/2 பலம் நாகத்தைக் குகையில் உருக்கிக் கண் விட்டாடும் (உலையில் வைத்து ஊதும்) போது சிற்றாமணக்கிலையைக் கசக்கி 5,6 சொட்டுப் பிழியச் சத்தமிடும். மறுபடியும், 5,6 சொட்டு விடச் சத்தமடங்கும். துருத்தியை விசையாக ஊதி மறுபடியும் 5,6 சொட்டுப் பிழிந்து மேற்படி வேரால் கிண்டி வர மல்லிகைப்பூப் போல் நீறும். இதைத் தக்க அனுபானங்களில் வழங்க வெள்ளை, குன்மம், மூலம் முதலியன நீங்கும். தாது விருத்தியுண்டாகும்.

2. கறுவங்கப் பற்பம்: கறுவங்கத்தைப் பிரண்டைச் சாற்றில் 10 தடவை உருக்கிச் சாய்க்கச் சுத்தியாகும். இதில் 1 பலம் எடுத்துச் சட்டியிலிட்டு உருக்கி ஆடுதீண்டாப்பாளை வேரால் பற்பமாகும் வரை கிண்டி நிறுத்தி அதற்குப் பாதி இரசம் சேர்த்து மூக்கரைச் சாறணைச் சாற்றில் நாலுசாமமரைத்து, 3 புடம் போட நீறும். தக்க அனுபானத்தில் வழங்க மேக நோய்கள் தீரும்.

3. வெள்வங்கப் பற்பம்: சுத்தி செய்த வெள்வங்கத்திற்குப் பாதி இரசம் சேர்த்துக் கஞ்சாவிலைச் சாற்றால் அரைத்து வில்லை செய்து காயவைத்து , அதற்கு மேற்படி இலையை அரைத்துக் கவசம் செய்து ஓட்டிலிட்டு மூடி முன்போல் புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இதனால் மேகம், எலும்புருக்கி, நவமூலம் முதலியன நீங்கும்.

4. கற்பூரசிலாசத்துப் பற்பம்: கற்பூரசிலாசத்தை ஆவின்பாலில் போட்டுக் காய்ச்சிக் கழுவி சுத்தி செய்து, சிறு செருப்படைச் சாற்றால் நாலுசாமம் அரைத்து லேசாய் வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து 50 வறட்டியில் புடம் போடவும். இவ்வாறு 3 புடம் போடவும்.

இதனைப் பசுவெண்ணெயில் கொள்ள மேலெறிவு, பித்த வெட்டை, நீர்க்கடுப்பு நீங்கும்.

5 மான் கொம்புப் பற்பம்: மான் கொம்பை இழைத்துக் கோவைச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் நன்றாகக் காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து 50 வறட்டியில் புடம்போட நீறும். இதனை நெய், வெண்ணெய் ஆகிய அனுபானங்களில் கொள்ள மேகக் காங்கை தீரும்.

6. கல்நார் பற்பம்: கல்நாரைச் சிறு துண்டுகளாகப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழும் மேலும் கோங்கிலவம் பட்டையை இடித்துப் போட்டு, புடமிட்டெடுக்கவும். பின் மேற்படிப் பட்டையின் குடிநீர் செய்து கல்நாரை அக்குடிநீர் விட்டரைத்து வில்லை செய்து ஓட்டிலிட்டு மறுபடியும் புடமிட்டெடுக்க நீறும். இதனைத் தேனில் வழங்க மேகக் காங்கை தீரும்.

**உணவு முறை**

வெள்ளைநோய் மருத்துவத்தில் முக்கியமாகக் கையாளப்படுவது இரச, கந்தகப் பாடாண மருந்துகள் ஆகும். இவைகள் பத்தியத்துக்கு உட்பட்ட மருந்துகள் ஆகும். எனவே ஒவ்வொரு மருந்துக்கும் சொல்லப்பட்ட பத்திய உணவு முறைகளைக் கையாள்வது அவசியம்.

இது தவிர பொதுவாக இந்நோயில் சிறுநீர் எரிச்சல், சிறுநீர்க் கடுப்பு, உடல் உஷ்ணம் போன்ற குறிகுணங்கள் காணப்படுவதால் குளிர்ச்சியைத் தரும் உணவுப் பதார்த்தங்களான சுரை, வெண்பூசணி, பீர்க்கு, வெள்ளரி, வாழைத் தண்டு முதலியவற்றை உணவில் அதிக அளவில் சேர்க்கலாம். பொன்னாங்காணி, வல்லாரை, சிறுகீரை போன்ற கீரைகளைச் சேர்ப்பதால் உஷ்ணத்தால் ஏற்படும் மலக்கட்டு நீங்கும்.

உணவில் நெய்ப்புப் பதார்த்தங்களையும், மோர் முதலியவற்றையும் அதிக அளவில் சேர்க்கலாம்.

நோய் குணமாகும் தருவாயில் உடலுக்கு ஊட்டம் தரும் உணவுப் பொருட்களைச் சேர்க்கலாம்.

நோயின் ஆரம்பநிலையில் கார்ப்பு, உவர்ப்பு, புளிப்புச் சுவையுள்ள பொருட்களைத் தவிர்ப்பதுடன், பெண்போகம், வெயிலில் திரிதல் போன்றவற்றை அறவே நீக்கவேண்டும்.

# 5

# நீரினை அருக்கல் நோய்கள்

### முன்னுரை

சிறுநீர் தொடர்பான நோய்களைத் தமிழ் மருத்துவ நூல்கள் இருவகையாகப் பிரிக்கின்றன. அவை: 1. நீரினைப் பெருக்கல் நோய், 2. நீரினை அருக்கல் நோய் என்பனவாம்.

நீரினைப் பெருக்கல் நோயின் கீழ் மதுமேகம் என்னும் நீரிழிவு நோய் கூறப்படுகிறது. இந்நோய் பற்றித் தனியாக "நீரிழிவு நோய்" என்னும் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

இங்கு நீரினை அருக்கல் நோய்கள் பற்றிய பிரிவுகளையும் விளக்கங்களையும் காணலாம். நீரினை அருக்கல் நோய்கள் வளித்தாது அல்லது நாடியின் பாதிப்பினால் ஏற்படும் நோய்களே என்பதைச் "சதக நாடி" என்னும் நூலின் மூலம் அறியமுடிகிறது.

### நோய் இயல்

நீரினை அருக்கல் நோய்கள் அல்லது நீர்க்கிரிச்சரங்கள் என்று கூறப்படும் நோய்களில் சிறுநீர் தன்னளவில் மிகவும் குறைந்து இழியும். சிறுநீர் இழியும் போது கடுத்தல், எரிச்சல், நீருடன் மணல் அல்லது சிறுகல் வெளியாதல் ஆகிய இயல்புகளும் காணப்படும்.

சிறுநீருடன் வெள்ளை வீழ்தல், தனியே "வெள்ளை நோய்" என்ற பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. சில நூலோர் இதனை நீரினை அருக்கல் நோய்களில் ஒன்று எனக் கூறினாலும் பெரும்பாலான நூலோர் அதனைத் தனியாவே கூறியுள்ளதால் அதனை இங்கு கூறாது தனியாகவே விளக்கியுள்ளோம்.

**நோய் வகை**

இங்கு கூறப்படும் நீரினை அருக்கல் நோய்கள் கல்லடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, சொட்டு நீர், நீரடைப்பு என்பனவாம். இவ் வைந்து வகை நோய்களின் காரணங்கள், குறிகுணங்கள் முதலியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அறிந்த பின்பு இதற்கான மருத்துவத்தைக் காண்போம்.

## I. கல்லடைப்பு நோய்

இந்நோய் சிறுநீர் கழிக்கும்போது திடீரென்று நீரடைத்தல், குறிமுனை நோதல், நீர்ப்புழை எரிதல், இடுப்பின் பின்புறத்தும் முதுகுத்தண்டின் பக்கத்தும் நோதல், சிறுநீரில் மணலையொத்த சிறுகற்கள் கலந்திருத்தல் ஆகிய தன்மைகளை உடையதாம். இதனை அச்மரி என்ற பெயரிலும் கூறுவார்கள்.

நோய்க் காரணம்: சுனை நீர், பன்னாட்கள் தேங்கிய நீர், மாசுநிறைந்த நீர் போன்ற குற்றமுள்ள நீரினைக் குடிப்பதாலும், கல், மண், மயிர் போன்றன கலந்த அன்னத்தை அருந்துவதாலும், பழைய பண்டங்கள் மாப்பண்டங்கள் போன்ற வளிக்குற்றத்தைத் தூண்டும் பொருட்களை உண்பதாலும், மிகுதியும் மந்தத்தைத் தூண்டும் உணவுப் பொருட்களை உண்பதாலும் இந்நோய் உண்டாகும் எனக் கூறப்படுகிறது.

வகைகள்: வாதக் கல்லடைப்பு, பித்தக் கல்லடைப்பு, கபக் கல்லடைப்பு, முக்குற்றக் கல்லடைப்பு என நான்கு வகைப்படும். சில நூலோர் இதனை வாதம், பித்தம், கபம் என்ற மூன்றோடு சுக்கிரம், சர்க்கரா என்ற இரண்டினைச் சேர்த்து 5 வகை என்பர்.

### 1. வாதக் கல்லடைப்பு

- உந்திக்குக் கீழ் சுருக் சுருக்கெனக் குத்தலை உண்டாக்கி, நீர் இறங்கும் சமயம் நின்று நின்று இறங்கும்.
- ஆண்குறி தாங்க முடியாத வலியுடன் வீங்கிக்காணும்.
- வலியால் உட்காரமுடியாமல் துன்பம் உண்டாதலுமின்றி, அவ்வலியைத் தாங்க முடியாமல் அழுதல், பெருமூச்சுவிடுதல், வயிறு உப்பல் முதலியவற்றைப் பிறப்பிக்கும்.
- வெளியாகும் நீரில் நீர்ப்புழையின் மெல்லிய சவ்வும் வெளியாகும்.

## 2 பித்தக் கல்லடைப்பு

- ❖ நீர்ப்புழையில் இரும்பைக் காய்த்துச் சுட்டதுபோல் எரிச்சல் உண்டாகும்.
- ❖ அன்றியும் உடல் முற்றும் அனலாக இருக்கும்.
- ❖ சிறுநீருடன் குருதி வெளியாகும்.
- ❖ நீர்ப்புழை முழுமையும் குடைவது போலும், குத்துவதுபோலவும், கூச்செறிதல் போலும் வலித்தலுமான குறிகுணங்களைக் காட்டும்.
- ❖ நீரிழியும்போது செந்நிறமான சிறு கற்கள் வெளியாகும்.

## 3. கபக் கல்லடைப்பு

- ❖ நாபியில் வில்போல் நிமிர்ந்து குத்தலை உண்டாக்கும்.
- ❖ கை, கால் மூட்டுகள், இடுப்பு இவற்றில் குடைச்சலுடன் இசிவும் காணும்.
- ❖ ஆண்குறி விறுவிறுத்துக் கடுக்கும்; அங்கு வியர்வையும் உண்டாகும்.
- ❖ வெண்மை நிறமுடைய சிறு கற்கள் சிறுநீருடன் வெளியாகும்.

## 4. முக்குற்றக் கல்லடைப்பு

- ❖ நீர்த்தாரையின் அடிப்புறத்தில் தாங்க முடியாத வலியும், வருத்தமும் உண்டாகும்.
- ❖ சிறுநீர் விட்டுவிட்டுப் பாயும்.
- ❖ நீர் கழிக்கும் போது மணல் போலும், நொறுங்கிய கல்போலும் வந்து விழும்.
- ❖ நாளொன்றுக்குச் சிறங்கையளவு கல் வீழ்ந்து மிகவும் துன்புறுத்தும்.
- ❖ அடிக்கடி வெளியாகும் சிறுநீர் முற்றும் வெளியாகாமல் திடீனெறு அடைத்துக் கொள்ளும்.
- ❖ அச்சமயம் தாங்க முடியாத வலி ஆண் குறியிலும் எருவாய்க்கு மேற்பகுதியிலும் உண்டாகும்.
- ❖ சில வேளைகளில் கல்புரண்டு கொண்டே வந்து வெளியாவதற்கு முயன்று ஆண்குறிமுனையில் வந்து அங்கு தடைபட்டு மிகுந்த வலியையும் வீக்கத்தையும் உண்டாக்கும்.

- ❖ கற்கள் கரடு முரடாகவேனும் கூர்மையாகவேனும் இருப்பின் கீழ் வயிற்றிலும் நீர்ப்புழையிலும் தாங்கமுடியாத எரிச்சலையும் வலியையும் தந்து குருதியை மிகவும் வெளிப் படுத்தும்.

## II நீர்ச்சுருக்கு

நீர்க்கடுப்பு, நீரருக்கல், மூத்திரக் கிரிச்சரம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படும் இந்நோய் நீர்ப்புழையில் குத்தல் , எரிச்சல், வலி ஆகியவற்றை உண்டாக்கியும் முகத்தை வீங்கச்செய்தும், சொட்டு சொட்டாய் நீரிறங்கியும் துன்புறுத்தும் இயல்புடையதாம்.

நோய்க்காரணம்: பெண்களுக்குத் துரோகம் செய்து நடுவிலே கைவிட்ட பேர்களுக்கும், பசித்திருக்கும் குழந்தைகளை அருகிலே வைத்துக் கொண்டு அவர்களுக்கு வழங்காமல் தாமே உணவு உட்கொள்வோர்க்கும், தாகம் என்று தவித்து வந்த பேர்களுக்குத் தண்ணீர் கொடுத்து அவர்களின் தாகத்தை நீக்காத பேர்களுக்கும் மூத்திரக் கிரிச்சரம் என்னும் இந் நோய் உண்டாகும் என யூகி முனிவரின் "வைத்திய சிந்தாமணி 800" என்னும் நூல் கூறுகின்றது.

மேலும் மாப்பண்டம் போன்ற பொருட்களை மிகுதியாக உண்ணுவதாலும் காலங்கள் மாறியும், பகலிலும் பெண்போகம் செய்வதும், பகலில் பால் அருந்துதல், பகலில் மிகுதியும் தூங்குதல், லாகிரி வஸ்துக்களை அதிகமாக உபயோகித்தல், வெப்பம் மிகுந்த இடங்களில் திரிதல் போன்றவையும் இந்நோய் உண்டாவதற்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

நோய் வகைகள்: இந்நோய் வாத மூத்திரக் கிரிச்சரம், பித்த மூத்திரக் கிரிச்சரம், கபமூத்திரக் கிரிச்சரம், மேக மூத்திரக் கிரச்சரம் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

### 1. வாத மூத்திரக் கிரிச்சரம்

- ❖ இந்நோயில் உண்டாகும் வளியின் கேட்டினால் மேகம் என்னும் துன்பம் உண்டாகும்.
- ❖ நீர்த்தாரையில் வெண்ணீர் இறுக்கப்பட்டு நீர்த்தாரையினுள் தங்கிச் சிறுநீர் வெளியாவதைத் தடுக்கும்.
- ❖ தேகம் முழுவதும் கடுப்பு உண்டாகும்.
- ❖ சிறுநீர் இறங்குங்கால் கெட்டுப்போன மாமிசம் போன்று கறுப்பாய் வீழும்.

## 2. பித்த மூத்திரக் கிரிச்சரம்

- ❖ சிறுநீர் மஞ்சள் நிறமாகவும், சிவந்த நிறமாகவும் இழியும்.
- ❖ கை, கால்கள் தளர்ந்து அசதியாகக் காணும்.
- ❖ சிறுநீர் மிகவும் சுருங்கி, கடுப்புடன் வெளியாகும்.
- ❖ ஆண்குறி, விதை, குதம் இவற்றில் வாயுக்களின் செயல் மீறிக் காணும்.
- ❖ வயிறு விம்மிக் காணும்.
- ❖ வயிறு உப்புவதுடன் இரைச்சல் செய்து மேலேறும்.
- ❖ வாய் உலர்ந்து காணும்.
- ❖ மிரட்சி உண்டாகும்.

## 3. கப மூத்திரக் கிரிச்சரம்

- ❖ இந்நோயில் குதத்திலும், விதைப் பகுதியிலும் மிகவும் வலிக்கும்.
- ❖ உடல் முழுதும் வெளுத்துக் காணும்.
- ❖ கண் பச்சை நிறத்துடன் காணும்.
- ❖ கிறுகிறுப்பும் மயக்கமும் உண்டாகும்.
- ❖ உடல் முழுதும் கடுப்புடன் கூடிய வலியும், சொறிதலுமாகக் காணப்படும்.
- ❖ சிறுநீர் எரிச்சலுடன் இழியும்.
- ❖ அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய உணர்வை ஏற்படுத்தித் துன்புறுத்தும்.
- ❖ ஆண்குறியில் ஒருவித கூச்சம் உண்டாகும்.

## 4. மேக மூத்திரக் கிரிச்சரம்

- ❖ சிறுநீர் கழிக்கும்போது அடிக்கடி வெள்ளை நிற நூல்போல சேர்ந்து இழியும்.
- ❖ நீர்த்தாரையின் அடியில் புறாவின் எச்சம்போலும் வீழும்.
- ❖ சிறுநீருடன் இறங்கும் வெள்ளை மிகவும் கவிச்சு நாற்றத்தை உடையதாகக் காணும்.
- ❖ ஆண்குறி, குதம் இவை வேக்காட்டுடன் எரிச்சல் உண்டாகிக் காணும்.

## III. நீர்க்கட்டு

நாள்கணக்காகச் சிறுநீர் பெய்யாமலே இருந்தாலும் நீர்ப்பை நிறையாது. இது நீரடங்கல் நோய் என்றும் அழைக்கப்படுகின்றது. பையில் சிறுநீர் இருத்தலும்,

வெளியாகாதிருப்பதும் இந்நோயின் இயல்பாகும். இந்நோய் பற்றி "யூகி வைத்திய சிந்தாமணி 800" என்னும் நூலில் ஏதும் கூறாதிருப்பினும் "சித்த மருத்துவம்" என்னும் நூலில் அதன் ஆசிரியர் இந்நோயைப் பற்றியும், சொட்டுநீர் என்பது பற்றியும் தன் அனுபவத்தின் படி கூறியுள்ளார். அதன் அடிப்படையில் இந்நோய் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

நோய்க் காரணங்கள்: இந்நோய் இருபெரும் காரணங்களால் வருவதுண்டு.

1. நீர்க் குண்டிக்காயில் உண்டான சிறு கற்கள், நீர்க்குண்டிக்காயின் புழையை அடைத்துச் சுரந்துண்டான நீரை வெளிப்படுத்தாமல் தடைப்படுத்துதல்.

அல்லது பிறப்பிலேயே புழை அடைபடுதல் அல்லது புழையில் கட்டி, கழலைகள் பிறத்தல் ஆகிய தடைகளால் சிறுநீர் வெளியாகாது இருப்பது ஒரு வகையாகும்.

2. நீர்க் குண்டிக்காய் தாபிதம் அடைவதால் இயற்கையாக நீரைப் பிரித்து வெளியாக்கும் வாயுக்கள் தங்களின் தொழிலை இழத்தலாலும், குண்டிக்காயின் நீர்ப்புழைகளில் குருதிக்கட்டி உண்டாக்கி தடை ஏறபடுத்துவதாலும், அடிபட்டு நசுங்குவதாலும், நஞ்சு உட்கொள்ளுதலாலும், மிகுந்த பேதி, அளவு கடந்து வியர்த்தல் முதலிய நோய்களாலும் வருவது மற்றொரு வகை ஆகும்.

அன்றியும் நீரிழிவு நோயின் நாட்பட்ட நிலையிலும் இந்நோய் தோன்றுவதுண்டு.

**குறிகுணங்கள்**

- முதலில் கூறப்பட்ட காரணத்தால் ஏற்படும் நோயில், நீர்க் குண்டிக்காயுடன் தொடரும் நீர்ப்புழைகளில் ஒன்று தடைபட்டு மற்றொன்றின் தொழில் கெடாதிருப்பின் மிகுதியும் கேடு உண்டாவதில்லை. இரண்டு புழைகளும் ஒரே காலத்தில் அடைபட்டு விடுமாயின் தீமைகள் அதிகம் உண்டாகும்.
- இந்நிலையில் சிறுநீர் முற்றிலும் கட்டுப்பட்டு சிறிதும் இறங்காமை, மயக்கம், தலைசுற்றல் என்னும் குறிகுணங்களைக் காட்டி 10 நாட்களுக்குள் படுக்கையில் கிடக்கச் செய்தல், அரட்டல், புரட்டல், கைகால் சில்லிடல், நாவறட்சி, கொறுக்கு வலி, கண்மணி சுருங்கல் என்னும் குறிகளைக் காட்டிக் கொல்வதுண்டு.

இரண்டாவது கூறிய வகையில் முதலில் கூறியது போல் தடையதிகமாக இல்லாதிருந்தாலும், தாபிதத்தால் நீர்ச்சுரப்பு கட்டுப்பட்டு, சிறு அளவில்

வெளியாகும். சிறுநீர் மிகவும் கடினப்பட்டு செந்நிறத்தோடு இழியும். உடலில் பிசுபிசுத்த வியர்வையும் உண்டாகும். அது சிறுநீர் மணத்துடன் இருக்கும். இத்துடன் கடுமையான வாந்தியும் பேதியும் உண்டாகும். மூச்சுத் தடுமாறல், மயக்கம், சோர்வு ஆகிய குறிகுணங்கள் காணும்.

## IV. சொட்டு நீர்

சிறுநீர் தனக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஒழுகிக் கொண்டிருக்கும் இயல்புடையது இந்நோய். இதைக் குழந்தைகளுக்கு வருவது, பெரியவர்களுக்கு வருவது என இருவகையாகப் பிரிப்பர்.

### 1. குழந்தைகளுக்கு வரும் சொட்டு நீர்

குழந்தைப் பருவத்தில் பெரும்பான்மையும் அறிவின்மையால் தமக்குத் தெரியாமலே இரவில் படுக்கையில் நீர் பெய்வது, பெரியவர்களான பின்பும் தம்மியல்பிலேயே வந்துவிடுவதுண்டு. சிறு ஒலிக்கும் அஞ்சும் இயல்புடைய குழந்தைகள் தங்களுக்கு அஞ்சக்கூடிய நிலையுண்டாயின் தம்மையறியாமலேயே நீர் சொரிவதுண்டு. மற்றும் சில குழந்தைகள் நீர் பெய்ய வேண்டும் என விரும்பினும் சோம்பலால் பெய்யாமலே இருந்து, அந்நீர் தானாகவே சொட்டுவதுண்டு. இது ஒருவகை.

இதுதவிர வயிற்றுப்புழு, இளைப்பு நோய், நீர்ப்புழை பிறப்பிலேயே சரியான அளவில்லாது குறுகியிருத்தல், நீரருகல், அல்லது நீர்ப்பெருகல் ஆகிய நோய்களிலும் சொட்டு நீர் நோய் உண்டாகக் கூடும். இது மற்றொருவகை .

### 2. பெரியவர்களுக்கு வரும் சொட்டு நீர்

நோயில் அடிக்கடி நீர் வெளிப்படுதல் போன்றிருக்கும் உணர்ச்சியால் தான் அதனை அடக்கமுடியாமல், அடிக்கடி நீரைச் சிறு அளவில் சொட்டிவிட்டு எழுந்திருப்பது ஒருவகை.

சிலவேளை இருமல், சிரித்தல் அழுதல், பயப்படுதல் முதலியவைகளால் தன்னையறியாமலே நீர் சொட்டிவிடுவது மற்றொரு வகை.

நீர்ப்பெருக்கல் நோய், நீரருகல் நோய், வெள்ளை, நீர்ப்பைத் தாபிதம் என்னும் இவைகளின் கேட்டினாலும் நரம்புத் தளர்ச்சி, பாரிசவாயு, பகந்திரம், கீழ்நோக்குக் காலின் செயல் வன்மை குறைதல் ஆகியவைகளாலும் சொட்டு நீர் நோய் தோன்றும்.

## V. நீரடைப்பு நோய்

சிறுநீர் அளவில் குறைந்திழிதலும் நீர்ப்பையும், நீர்ப்புழையும் எரிதலும், வயிறு விம்மி நோதலுமான இயல்புடைய நோயாகும்.

### குறிகுணங்கள்

- ❖ மூக்கில் நீர் பாய்தல்
- ❖ கண் இரப்பை சற்று வீங்கிக் கண்ணீர் வடிதல்
- ❖ மார்பு நொந்து மூச்சுத் தடுமாறல்
- ❖ வாந்தி
- ❖ தலை நோய்
- ❖ மயக்கம்
- ❖ உறக்கம்
- ❖ சுரம்
- ❖ உடல் வெளுத்தல்
- ❖ உடல் ஊதல்
- ❖ கண் ஊதி மூடிக்கொள்ளல்
- ❖ வயிற்றுள் நீர் கோர்த்து ஊதல் என்னும் குறிகுணங்களைக் காட்டி சிறுநீரை மிகச்சுருக்கி, நீரில் குருதி கூடிக் கறுநிறத்தோடு இழியும்.
- ❖ நீர்ப்புழையில் எரிச்சல், நமை, நோதல் என்னும் குறிகளைக் காட்டும்.
- ❖ சிறுநீர் கழியும் போது தாங்க முடியாத எரிச்சலையும் நோவையும் தந்து சூட்டுடன் நீர்இறங்கும்.
- ❖ நீரிறங்குவதற்கு முன்பேனும் பின்பேனும் பச்சைக் குருதி வெளியாகும்.
- ❖ சிலவேளை நீருடன் குருதி கலந்து கறுத்து வெளியாவதும் உண்டு.
- ❖ மேலும் இளைப்பு, பெருமூச்சு, ஆயாசம், மார்பு நோய், முகவீக்கம், சிறுசுரம், இடுப்புநோய், ஆண்குறி வீக்கம், அடிவயிறு நோதல் என்னும் குறிகுணங்களும் காணும்.
- ❖ இந்நோய் சிறுவயதினர்க்கு உண்டாயின் சிறுநீரில் பெரிதும் குருதி கூடி இழியும்.
- ❖ இது எளிதில் தீரக்கூடிய நோய் எனினும் சிலவேளை மூன்று நான்கு திங்கள் வரையும் நிலைத்திருக்கின் முகம், கால், வயிறு மிகவும் ஊதி,

சிறுநீர் தன்னளவில் மிகவும் குறைந்து, உடல் வெளுத்தல், உடல் வன்மை குறைதல், செரியாமை என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

❖ இந்நோயிலிழியும் சிறு நீரைக் காய்ச்சின் அது முட்டை வேக வைக்கும் போது வெண்கரு வெளுத்து உறைவதுபோல் உறையும்.

**மருத்துவம் செய்யும் முறை**

கேடடைந்த வளிக் குற்றத்தையும் அழல் குற்றத்தையும் தன்னிலைப் படுத்த வேண்டும். கீழ்நோக்குக் காலின் கேட்டையும் தன்னிலைப்படுத்த வேண்டும்.

வளிக் குற்றத்தைத் தன்னிலைப் படுத்தவும், கீழ்நோக்குக் காலின் கேட்டைச் சரிப்படுத்தவும், மலம் வெளியாவதற்கும், சிறுநீர் வெளியாவதற்குமான மருந்துகளை வழங்க வேண்டும்.

அழல் குற்றத்தைத் தன்னிலைப்படுத்த குளிர்ச்சியைத் தரக்கூடியதான மருந்துகளைக் குடிநீர் வகையிலேனும் நெய் வடிவிலேனும் கொடுக்க வேண்டும்.

கல்லடைப்பு நோயில் கல்லைக் கரைக்கக் கூடியதும், சிறுநீர் எரிச்சலையும் அதில் கசியும் குருதியையும் அடக்கக் கூடியதுமான பொடி வகை, பற்ப செந்தூர வகை ஆகியவற்றைக் கொடுத்தல் வேண்டும்.

கல் பெரிதாக இருந்து, மருந்துகளினால் எளிதில் கரைந்து வெளிப்படாது துன்பங்களை விளைவித்துக் கொண்டே இருப்பின் அறுவை மருத்துவம் செய்ய அறிவுறுத்த வேண்டும்.

**குடிநீர் வகை**

1. நீர்முள்ளி, நெருஞ்சில், சிறுபீளை, ஏரழிஞ்சில் இவற்றின் இலைகளை ஓர் அளவாகக் கூட்டி, 8 பங்கு நீர் விட்டு, எட்டில் ஒன்றாய்க் காய்த்து, அதில் காலை, மாலை ஒவ்வோர் ஆழாக்கு உட்கொள்ள வேண்டும். அதில் விரால் மீன் தலைக்கல் பொடியை அரைச்சிட்டிகை கலந்து குடிக்கில் கல்லுடைந்து வெளியாகும்.

2. பனங் குருத்து, நெருஞ்சில், நீர்முள்ளி, சூரைவேர், காஞ்சொறிவேர், வில்வவேர், குரோசாணி ஓமம், நீர்க்கடம்பின் வேர் இவைகளை ஓர் அளவாகக் கொண்டு முறைப்படி குடிநீராக்கிக் காலை மாலைகளில் ஒவ்வோர் ஆழாக்குக் குடித்துவரக் கல் உடையும்.

3. நீர்முள்ளி, நெருஞ்சில் சுரைக்கொடி, சோம்பு, சரக்கொன்றைப்புளி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு ஒரு நிறையாய்க் கொண்டு

குடிநீரிட்டு அரைமுதல் ஒரு ஆழாக்காக்கிக் கொடுக்க வயிறு கழிதலும் சிறுநீரிழிதலும் உண்டாகும்.

4. காக்கணம் வேர், முட்காவேளைவேர், சிறுபீளை வேர், மூக்கிரட்டைவேர், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், வில்வவேர்- வகைக்கு ஓரெடையாகக் கொண்டு முறைப்படி குடிநீராக்கி, 1/2 முதல் 1 ஆழாக்கு வரை இளஞ்சூட்டில் ஒரு சிட்டிகை குங்கிலியம் பொடித்துத் தூவிக் கலக்கிக் கொடுக்கவும்.

5. கற்றாழை வேர், நிலக்கடம்பின்வேர், மிளகுக் கொடி, வெள்ளைச் சாட்டரணைவேர், பொடுதலைக் கீரை, கீழாநெல்லி - இவைகளை ஓர் நிறையாகக் கொண்டு முறைப்படி குடிநீராக்கி கால் முதல் அரை ஆழாக்கு வரை கொடுக்கலாம்.

6. இரும்புக் கிட்டம் பலம் இரண்டு, நெருஞ்சில், வெள்ளரி வித்து, பற்பாடகம், சிவதை வேர், சுரைக் கொடி, காசினிவிரை, நன்னாரி ஆகியவை வகைக்குப் பலம் ஒன்று; கள் படி ஒன்று; காடிநீர் படி ஒன்று, பசுநீர் படி ஒன்று- இவற்றைச் சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு அதில் வேண்டும் பொழுதெல்லாம் அரை ஆழாக்கு காலை மாலைகளில் கொடுக்கலாம். இக்குடிநீர்ப்பானை அடுப்பிலேயே சிறுதீயில் இருத்தல் வேண்டும். இதனை அடைக் குடிநீர் என்றும் பாண்டக் குடிநீர் எனவும் கூறுவர்.

7. வெள்ளறுகு, பிரம்மதண்டி, நீர்ப்பிரமி, வல்லாரை, பொடுதலை, நீர்க்கடம்பு, கீழாநெல்லி, சகதேவி, நெய்ச்சுட்டி இவைகளுள் நோய்க்குத் தக்கவாறு ஏதேனும் ஒன்றை அரைத்து எலுமிச்சங் காய் அளவு உருட்டி மோரிலேனும் அல்லது இளநீரிலேனும் 3 நாள் கொள்ள நீரினை அருக்கல் நோய் நீங்கும்.

## இந்நோயில் பயன்படும் மூலிகைகள்

1. அறுகம்புல்: அறுகன் வேரின் கணுநீக்கி, கால்பலம் எடுத்து, அத்துடன் வெண்மிளகு பத்து சேர்த்துக் குடிநீரிட்டு வடித்து அதில் பாக்களவு பசுவின் வெண்ணெய் கூட்டி உட்கொள்ள நீர்க்கட்டு, நீரடைப்பு, நீர்ப்புழை எரிச்சல், வெள்ளை, வெட்டை, மூலக்கடுப்பு, இரசவேக்காடு ஆகியவை நீங்கும்.

2. ஆனைக்கற்றாழை: இதன் வேர் 25 கி முதல் 35 கிராம் எடுத்து 700 மிலி நீர்விட்டு ஒரு ஆழாக்காகக் குறுக்கி வடிகட்டி நாள் ஒன்றுக்கு 2 வேளையும் அரை

ஆழாக்கு வீதம் உட்கொண்டுவர நீர்க்கட்டை உடைத்து நீரைத் தாராளமாய் வெளிப்படுத்தும்; வயிறு கழியும்.

3. இசப்புக் கோல் விதை: விதைகளை ஒன்றிரண்டாய்ப் பொடித்து ஒன்றுக்கு 80பங்கு நீர் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிய நீரை, நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று முறையாக அரை முதல் ஓர் ஆழாக்களவாகக் கொடுத்துவர நீர் எரிச்சல் நீங்கும்.

4. முள் இலவு: இதன் இலையை அரைத்து பசுவின்பாலில் கலக்கிக் கொடுக்க, சிறுநீர் எரிச்சல் நீங்கும்.

இதன் பூவைக் குடிநீரிட்டுக் கொடுக்க மலக்கட்டையும் நீர்க்கட்டையும் நீக்கும்.

இதன் வித்து ஒரு பங்கு, சீரகம் 1/2 பங்கு வால் மிளகு 1/4 பங்கு சேர்த்தரைத்து 4 கிராம் முதல் 10 கிராம் எடை வரையில் கொடுக்க நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, வெட்டை முதலியன நீங்கும்.

இதன் பட்டை பலம் 1/4 உடன் 2 ஆழாக்கு நீர் விட்டு ஓர் ஆழாக்காகக் காய்ச்சி வடிகட்டி 1/4 முதல் 1/2 ஆழாக்கு வீதம் தினம் 3 அல்லது 4 முறை கொடுக்க நாட்பட்ட புண், சிறுநீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, வெள்ளை, சீதக்கழிச்சல் முதலியன நீங்கும்.

5. ஈச்ச மரம்: சிற்றீச்சன் பிசினைச் சிறிய அளவில் நீரில் கலந்து உட்கொள்ள மூத்திர சம்பந்தமான நோய்கள், செரியாக் கழிச்சல் ஆகியவை போம்.

இதன் கள்ளைப் புளிப்பதற்கு முன்பு அதிகாலையில் அரை முதல் ஒரு ஆழாக்கு வரை உட்கொண்டு வர மூத்திரக் கிரிச்சரம், உள்ளழலை நீங்கும்.

6. உருத்திர சடை: நீர்க்கிரிச்சர நோய்களுக்கு இதன் விதையை ஊறவைத்து, சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். கொள்ளவேண்டிய அளவு ஒன்று முதல் இரண்டரை வராகன் எடையாகும்.

7. உழுந்து: உழுந்தை நீரில் ஊறவைத்து எடுத்த நீரை மறுநாள் அதிகாலையில் அருந்த மூத்திர சம்பந்தமான வியாதிகள் போம்.

8. காட்டு ஏலம்: காட்டு ஏலக்காய் 1 பங்கு, வெள்ளரி விதை 2 பங்கு சேர்த்துக் குடிநீரிட்டு 30 மிலி வீதம் உட்கொள்ள சிறுநீரைப் பெருக்கி, நீரடைப்பைப் போக்கும். வலப்பாட்டீரல் நோயைக் குணமாக்கும்.

9. மலை ஏலம் :1 இதனைக் குடிநீரிட்டோ, சூரணம் செய்தோ தக்க அளவில் உட்கொள்ள நீர்க்கடுப்பு நீங்கும்.

10. கக்கரிக்காய்: பந்தலில் காய்க்கின்ற கத்தரிக்காய்க்கு ஆகாய கக்கரிக்காய் என்ற பெயர் வழங்கும். இதனையே பெங்களூர் கத்திரிக்காய் என்றும் கூறுவர். இதன் இலையை வேகவைத்துச் சீரகம் சேர்த்து வறுத்துப் பொடித்து சர்க்கரை சேர்த்து வேளைக்கு 2 கிராம் எடை கொடுக்கச் சிறுநீர்ப் பெருக்கு உண்டாகும்.

11. கஞ்சா: கஞ்சா இலை 170 கிராம், துருசு 34 கிராம். இவ்விரண்டையும் வெண்ணெய் போலரைத்து அதற்குள் பலகறை 1 வைத்து 1, 2, 3 மண் சீலை செய்து 30 வறட்டியில் புடமிட்டு எடுத்துப் பொடித்து அதில் 8 கிராம் எடை எடுத்து எலுமிச்சம் பழ இரசம் 700 மிலி, 34 கிராம் சீனி சேர்த்துக் கலக்கிப் பொடியை அதில் போட்டு வாழைக் குருத்து இலையால் மூடி, ஓர் இரவு பனியில் வைத்து, மறுநாள் எடுத்துக் கொடுக்க நீரடைப்பு, சதையடைப்பு, சொட்டுநீர், நீரருகல், நீர்க்கட்டு முதலியன நீங்கும்.

12. கடலை: கடலையைக் வறுத்துப் பொடித்து உள்ளுக்குக் கொடுக்க நீரடைப்பு, வயிற்றுப் பொருமல் நீங்கும்.

13. கட்டுக் கொடி: இதன் இலைச் சாற்றைப் பிழிந்து நீரில் விட்டால் நீர் வெண்ணெய் போல் கட்டியாகும். இலைச்சாற்றோடு சர்க்கரை கலந்து கொடுக்க நீர் எரிச்சல், நீர்ப்பாயும் போது குத்தல் முதலியன நீங்கும்.

14. கரும்பு: கரும்பின் வேரை முறைப்படிக் குடிநீரிட்டு உள்ளுக்குக் கொடுக்கச் சிறுநீர் எரிச்சலைக் குறைக்கும்.

15. கலியாணப் பூசணிக்காய்: பூசணிக்காயைக் குடைந்து அதனுள் செம்பருத்திப் பூவைப் போட்டு ஊறவைத்து இரசம் எடுத்து அதனுடன் சர்க்கரை கூட்டிக் கொடுக்க நீர் எரிச்சல், வெள்ளை முதலியன தீரும்.

16. கலியாண முருக்கு: இதன் இலைச் சாற்றை 1 முதல் 2 தேக்கரண்டி வீதம் காலை மாலை 2 வேளையும் கொடுத்துவர மூத்திர எரிச்சல், மூத்திரத் தடை முதலிய நோய்கள் நீங்கும்.

17. கறிமுள்ளி: இச் செடிக்கு 10 பங்கு நீர் சேர்த்துக் குடி நீரிட்டு கால் முதல் அரை ஆழாக்கு வீதம் கொடுத்துவர நீர்க்கட்டு, நீர் எரிச்சல் முதலியன நீங்கும்.

18. கற்கோவை: இதன் இலையை அல்லது சமூலத்தை இடித்துப் பிழிந்த சாற்றை முறித்துத் தெளிவெடுத்து 30 மிலி முதல் 60 மிலி வீதம் நாளுக்கு 2 முறை கொடுத்துவர மூத்திரம் அதிகப்பட்டு இழியும். நீர்க்கட்டு, நீரடைப்பு, சோபை முதலியன நீங்கும்.

19. கற்பாசி: இதனைப் பற்கை செய்து அடிவயிற்றிலும், முள்ளந் தண்டின் அடிப்பாக எலும்பிலும் பூசச் சிறுநீரை மிகுதியும் இறங்கச் செய்யும்.

20. கற்றாழை: பேய்க் கற்றாழையின் சாற்றுடன் வெண்ணெய், கற்கண்டு, வால்மிளகுத்தூள் இவைகளைச் சேர்த்துண்ண நீர்ச்சுருக்கு, உள் சூடு நீங்கும்.

கற்றாழைச்சோறு 87 கிராம் எடுத்து சிற்றாமணக்கெண்ணெய் 340 கிராமில் ஊற வைத்து அரைத்து வெந்தயம் 8 1/2 கிராம், சிறுக அரிந்த வெள்ளை வெங்காயம் 1 சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டி, அதைக் காலையிலோ, இரவில் படுக்கைக்குப் போகுமுன்னரோ, ஓர் உச்சிக் கரண்டி சாப்பிட்டு வர, உடல் சூடு நீங்கும். நீர்க்கட்டு, நீர் எரிச்சல் முதலியன தீரும்.

21. காயாம்பூச் செடி அல்லது காசா: இலை பங்கு 1 க்கு 20 பங்கு நீர் விட்டு எட்டிலொன்றாய்க் குறுக்கி வடித்து அதில் 30 மிலி உள்ளுக்குக் கொடுக்க நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு, வெள்ளை நீங்கும்.

வேரை உலர்த்திச் சிதைத்து 10 பங்கு நீர்விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகக் குறுக்கி வடிகட்டி 15 மிலி முதல் 30 மிலி வீதம் தினம் 2 முறை அல்லது 3 முறை கொடுக்கப் பெண்களுக்கு உண்டாகும் மிதமிஞ்சிய வெள்ளை, நீர்க்கடுப்பு, பெரும்பாடு ஆகியவை நீங்கும்.

22. காட்டுக்கிராம்பு: இதனை அரைத்து மோரில் கலந்து கொடுக்கச் சிறுநீர் அதிகரித்து இழியும்.

23. காட்டுக் கொள்ளு: காட்டுக் கொள்ளுத் தோல் 12 கிராம் எடை எடுத்து நீர் விட்டரைத்து உருட்டி உள்ளுக்குக் கொடுக்க, நீரைப் பெருக்கித் தள்ளும்.

விதையைப் பொடித்து 130 மிகி. முதல் 325 மிகி. எடை வீதம் தினம் 2,3, வேளை கொடுத்துவர நீரடைப்பு நீங்கும்.

24. காட்டு முள்ளங்கி: இலையை உலர்த்திப் பொடித்து 8 கிராம் எடை வீதம் வெண்ணெயில் கொடுக்க நீரடைப்பு, மார்பு நோய் நீங்கும்.

25. காட்டு வெங்காயம் அல்லது நரிவெங்காயம்: இதனைக் குடிநீரிட்டு பெருவயிறு முதலிய நீரேற்ற நோய்களுக்குக் கொடுக்க நீரை இறக்கும்.

நரிவெங்காயம் 1 குன்றி, மிளகு 130 மிகி, பொட்டிலுப்பு 210 மிகி. மூன்றையும் உலர்த்திப் பொடி செய்து நீரில் கரைத்துக் கொடுக்கலாம்.

26. சிறுகீரை: சிறுகீரையைச் சமையல் செய்து சாப்பிட்டு வர நீர் எரிச்சல், வீக்கம், இரசநஞ்சு, காசம், படலம், நஞ்சு, புண் முதலியன நீங்கும்.

27. பசலைக்கீரை: இக் கீரையைச் சமைத்துண்ண நீர்க்கட்டு, நீரடைப்பு, வெள்ளை முதலியன நீங்கும்.

பசலைக் கீரை, கத்தரியிலை இவ்விரண்டையும் ஓரளவில் எடுத்துக் கலந்து குடிநீராகச் செய்து, அதில் வெங்காரப்பற்பம் சேர்த்துண்ண நீரடைப்பு என்னும் நோய் நீங்கும்.

28. பருப்புக் கீரை: இதன் இலைச்சாற்றை 1/4 முதல் 1/2 ஆழாக்கு வரையில தினம் 2 வேளை உள்ளுக்குக் கொடுத்துவர நீர்ச்சுருக்கு, மூத்திரவெப்பநோய், சீதபேதி, இரத்தபேதி முதலிய நோய்கள் நீங்கும்.

29. புண்ணாக்கு கீரை: இதனை வேகவைத்து உட்கொள்ள எருவும் நீரும் நன்றாய் இழியும். அனல் வெட்டை நீங்கும்.

30 புதினா: இதனையும் கற்பூரப் புல்லையும் ஓரெடையாக எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கும். தலைவலி, வாந்தி முதலியன நிற்கும். சுரம் தணியும்.நல்ல தூக்கம் உண்டாகும்.

31. முள்ளிக் கீரை: இதன் வேர் 70 கிராம் எடுத்து முறைப்படி குடிநீர் செய்து 30 மிலி வீதம் கொடுத்து வர நீரடைப்பு, வெள்ளை தீரும்.

இதன் இலையையும் வேரையும் குடிநீரிட்டுக் கொடுத்தாலும் நீர்க்கட்டை உடைத்து நீரை வெளியாக்கும்.

32. கீரைத் தண்டு: குடிநீர் செய்து அல்லது சமையல் செய்து சாப்பிட்டுவர நீர் எரிச்சல், நீர்க் கடுப்பு, வெள்ளை நீங்கும்.

33. சங்கன் வேர்ப்பட்டையின் பாலுக்கு வீக்கம், நீரேற்றம், சுரவேகம் ஆகியன நீங்கும்.

வேர்ப்பட்டையை இடித்துப் பிழிந்து பாலை 1 அல்ல 1 1/2 பலம் எடுத்து அதற்கு 2 மடங்கு வெள்ளாட்டுப்பால் சேர்த்துக் கொடுத்துவரச் சிறுநீரைப் பெருக்கி வெளிப்படுத்துவதுடன் ட டல் வீக்கம், சுர வெப்பம் இவைகளைப் போக்கும்.

34. சண்பகப்பூ: பூவைக் குடிநீரிட்டு அல்லது ஊறல் நீர் செய்து 30 முதல் 60 மிலி வீதம் கொடுக்க நீர்ச் சுருக்கையும், மேக நோய்களையும் போக்கும்.

35. சத்திச்சாறணை: நான்குபலம் நிறையுள்ள காய்ச்சாத பசுவின்பாலில் அரைப்பங்கு சாற்றைக் கலந்து கொடுக்க, கட்டுப்பட்ட நீரை உடனே இறக்கும்.

36. சந்தனம்: குடிநீர், தீநீர், தைலம் இவற்றால் உட்சூடு, நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், வெள்ளை தீரும்.

சந்தனத்தூள் 2பங்கு, நீர் 16 பங்கு. இதை 4 இல் ஒன்றாக வற்ற வைத்துக் குடிநீராக்கி, இதன் எடைக்கு 3 பங்கு கற்கண்டு கூட்டிக் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு தேவையான அளவு பன்னீர் சேர்த்து உட்கொள்ள உட்சூடு, நீர் எரிச்சல், மூலச்சூடு, நீர்க்கடுப்பு, வெள்ளை நீங்கும்.

சந்தன ஊறல் நீர் செய்தும் மேற்கண்ட நோய்களுக்குக் கொடுக்கலாம்.

37. சாலாமிசிரி: சாலாமிசிரி, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, சிங்காரக்கிழங்கு, இசப்புக்கோல் விதைத்தோல் என்கிற இந்நான்கினையும் தனித்தனியே பொடித்து ஓரெடையாகக் கொண்டு அதில் இரண்டு கரண்டியளவு ஓர் ஆழாக்குப் பாலுடன் கலந்து சிறுதீயில் காய்ச்சிக் கஞ்சிபோலச் சர்க்கரைக் கூட்டிக் குடித்து வர உடல் வலுக்கும். சிறுநீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு நீங்கும்.

38. சுரைக் கீரையை உள்ளிப்பூண்டு சேர்த்து சமைத்து ஒரு மண்டலம் புசித்துவரினும் அல்லது கொடியை மட்டும் குடிநீர் செய்து குடிப்பினும் நீரேற்றம் என்னும் பைசாசத் தன்மை வாய்ந்த பிணிகள் நீங்கும்.

39. செப்பு நெருஞ்சில்: முள்ளை வெந்நீரில் ஊறவைத்துக் கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கித் தள்ளும். நீர்க் கிரிச்சர நோய்கள் யாவும் தீரும்.

40. செம்பரத்தை: இதன் வேர்ப்பொடி, தாமரைக் கிழங்குப் பொடி, முள்ளிலவுப் பட்டைப் பொடி இம்மூன்றையும் ஓரெடையாக எடுத்து 4 கிராம் முதல் 6 கிராம் எடை வரை நீரில் கலந்து உட்கொள்ளச் சிறுநீரைப் பெருக்கும். பெரும் பாட்டை நிறுத்தும்.

பூவின் மொக்கை உலர்த்திப் பொடித்துச் சிறுநீர் எரிச்சல் நீங்கவும், ஆண்மை பெருகவும் வழங்கலாம்.

41. மணத்தக்காளி: இதன் வற்றல் 126 கிராம் கொதிக்கிற 700 மிலி வெந்நீரில் சேர்த்து ஒரு மணிநேரம் மூடி வைத்திருந்து வடிகட்டி நீர்ச்சுருக்கு போன்ற நோய்களுக்கு 35 முதல் 80 மிலி அளவு கொடுக்கலாம்.

42. துத்தி: இதன் வேர் 35 கிராம், திராட்சைப்பழம் 17 கிராம், நீர் 700 மிலி சேர்த்துக் காய்ச்சி 170 மிலி ஆகச் சுண்ட வைத்து வடிகட்டிக் கொண்டு காலை

மாலை இருவேளையும் உட்கொண்டுவர நீர்ச்சுருக்கு, மேகச் சூடு முதலியன நீங்கும்.

43. தென்னை: இளநீர் சிறுநீர் பெருக்கி மருந்துகளுடன் சேர்த்து வழங்கச் சிறுநீர் அதிகமாக இறங்கும். தனியாக வழங்க நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு நீங்கும். உட்சூடு குறையும்.

44. நன்னாரி: வேரை உலர்த்திப் பொடித்துப் பசுவின்பால் சேர்த்து, நீர்ச்சுருக்கு முதலிய நோய்கட்குக் கொடுக்கலாம். மேற்கண்ட நோய்கட்கு நன்னாரி வேர், சீரகம் சேர்த்துக் குடிநீரிட்டும் வழங்கலாம்.

நன்னாரி வேரை இடித்து 136 கிராம் எடை எடுத்து அத்துடன் 700 மிலி வெந்நீர் விட்டு 4 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி அதில் 952 கிராம் சீரகம் சேர்த்துச் சிறு தீயிட்டு எரித்து இறக்கி வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் நீரில் கலந்து உட்கொள்ளலாம். வெப்பம் தணியும்.

நன்னாரியை வாழையிலையில் சுற்றிக் கட்டி, கும்பிச் சாம்பலுள் புதைத்து வைத்து எடுத்து நரம்பு நீக்கி அத்துடன் வெல்லம், சீரகம் சேர்த்து அரைத்துக் கொடுக்க நீர் எரிச்சல் நீங்கும்.

45. நாயுருவி: செந்நாயுருவிச் செடியைக் குடிநீரிட்டு 19 மிலி முதல் 35 மிலி வரையிலும் கொடுத்து வரச் சிறுநீரைப் பெருக்கித் தள்ளும்.

46. நிலக்கடம்பு: இதனைக் குடிநீரிட்டு 70 முதல் 140 மிலி அளவிலேனும் அல்லது பொடி செய்து 1 முதல் 2 கிராம் எடையிலேனும் சிறுநீரைப் பெருக்கச் செய்வதற்காக வழங்கலாம். இது வாயுக்களைக் கண்டித்துச் சிறுநீரைப் பெருக்கும்.

47. நீர்ப் பிரமி: இது சிறுநீரைப் பெருக்கும். மலத்தை இளக்கி கழிச்சலை உண்டாக்கும். இலையைச் சாறு பிழிந்து நெய் சேர்த்துக் காய்சியோ சாற்றுடன் (2 வராகன் எடை) 8 கிராம் கோட்டத்தைப் பொடித்துச் சேர்த்துத் தேன் கலந்தோ வழங்கலாம்.

48. நீர்ப்பூலா: இலைச்சாறு ஒரு தேக்கரண்டி எடுத்துச் சர்க்கரை அல்லது கற்கண்டு சேர்த்து நாள் ஒன்றுக்கு 3 முறை சாப்பிடச் சிறுநீர் நன்றாய் இறங்கும். உடலில் எழும் அனல் தணியும்.

49. நீர்முள்ளி: நீர்முள்ளி சமூலம், நெருஞ்சில், சுரைக்கொடி, வெள்ளரிவித்து, பறங்கிச் சக்கை, மணத்தக்காளி வற்றல், சோம்பு, கடுக்காய்த்தோல், நெல்லிக்காய், தான்றிக்காய், சரக்கொன்றைப் புளி வகைக்கு பலம் ஒன்றாகக் கொண்டு, ஒன்றிரண்டாக இடித்ததில் ஒரு கையளவு எடுத்து 1400

மிலி நீரிட்டு எட்டில் ஒன்றாக்கிக் காலை மாலை கொடுக்கச் சிறுநீர் நன்கு இறங்கும். நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, பெருவயிறு, சோபை ஆகிய நோய்களில் நல்ல பலன் உண்டாகும்.

நீர்முள்ளியை வேறு நீர்ப்போக்கி மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்க நீர் நன்கு இறங்கி, மூத்திரவியாதிகள் நீங்கி, தேகத்தில் உள்ள கெட்ட நீரும் வற்றும்.

நீர்முள்ளி விதையைப் பாலில் ஊற வைத்துச் சர்க்கரை கலந்து கொடுக்க நீர் எரிச்சல் நீங்கும். உடல் வன்மை உண்டாகும். ஆண்மை பெருகும்.

50. சிறு நெருஞ்சில்: இதன் காயையும் வேரையும் பச்சரிசியோடு வேகவைத்துக் கஞ்சியை வடித்துச் சர்க்கரை கூட்டி நீர்க்கடுப்பு,வெள்ளை ஆகியவைகளுக்குக் கொடுப்பது வழக்கம்.

நசுக்கிய நெருஞ்சிக்காய் 68 கிராம், கொத்துமல்லி விதை 8 கிராம், நீர் 680 கிராம். இவற்றை நேர்பாதியாகச் சுண்ட வைத்து வடிகட்டி 40 மிலி வீதம் தினம் 2 வேளை கொடுத்துவர நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர் எரிச்சல் முதலியன நீங்கும்.

விதை 103 கிராம், வால்மிளகு, சிறுநாகப்பூ, இரேவல் சின்னி, வெடியுப்பு வகைக்கு 35 கிராம் இவைகளை நன்றாய்ப் பொடித்துச் சேர்த்து வைத்துக்கொண்டு இதில் 1 முதல் 2 கிராம் கொடுத்து வர நீர் நன்கு இறங்கும். தமரக நோயோடு கூடிய வீக்கங்கள் நீங்கும்.

விதையுடன் சிலாசத்தும் சேர்த்துச் சிறுநீர்க்கட்டு நோய்க்குக் கொடுக்கலாம்.

நெருஞ்சில் இலேகியம்: நெருஞ்சில் 12 1/2 சேர், நீர் 64 சேர்- இவற்றில் நாலிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி 6 1/4 சேர் சர்க்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகாக்கி அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கருவாப்பட்டை, ஏலம், சிறுநாகப்பூ, சாதிக்காய், வெள்ளரிவிதை வகைக்கு 16 தோலா; மூங்கிலரிசி 1/2 சேர் இவைகளை நன்றாய்ப் பொடித்து மேற்கூறிய பாகுடன் சேர்த்துக் கிளறி இலேகியமாகக் கொள்ளவும். இதில் 24 கிராம் வீதம் கொடுக்கச் சிறுநீர் எரிச்சல், நீரடைப்பு, சதையடைப்பு முதலியன நீங்கும்.

நெருஞ்சி சமூலம் 10, திரிகடுகு வகைக்கு 5, இலவங்கம் 4, ஏலம் 4, குங்குமப்பூ 1, சாதிக்காய் 3, கச்சக்காய் 4, மூங்கிலரிசி 5 பங்குகளாகச் சேர்த்துக் குடிநீரிட்டு வேளைக்கு 1/2 முதல் 1 பலம் வரை கொடுக்க நீர் எரிச்சலோடு கூடிய வெள்ளை நோயின் சார்பாக உண்டாகின்ற ஆண்மையின்மையை நீக்கி, ஆண் தன்மையை உண்டு பண்ணும். அனலை மாற்றும்.

51. நெல்லிக்காய்: நெல்லிக்காய் இலேகியம் செய்து சாப்பிட நீர்ச்சுருக்கு, வாந்தி, குன்மம், பாண்டு, காமாலை, சோகை, திமிர்வாயு, வறட்சி, உடம்பெரிவு முதலியன தீரும். செய்முறை: 2100 கிராம் நெல்லிவற்றலை 45 லிட்டர் தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து இறுத்ததில் 855 கிராம் சர்க்கரை கூட்டிப் பாகு செய்து அதில் அதிமதுரம், கூகைநீறு, முந்திரிப்பழம் வகைக்கு 70 கிராம்; பேரீச்சம்பழம், திப்பிலி வகைக்கு 105 கிராம் இவைகளை அரைத்து நெய் விட்டுக் கிண்டி மெழுகுப்பதத்தில் தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குப் புன்னைக் காயளவு கொள்ள மேற்சொன்ன நோய்கள் நீங்கும்.

52. செம்பருத்தி: இதன் இலையை அரைத்துப் பாலில் கலக்கி நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், நீரடைப்பு முதலிய நோய்களுக்கு வழங்கலாம்.

53. பலாசு: இதன் பூவை வேகவைத்துக் குடிநீரை வடித்து, சிறிது வெடியுப்பு சேர்த்துக் கொடுக்கச் சிறுநீர் நன்றாக இழியும். அளவு 40 முதல் 80 மிலி.

54. பூசணி: பூசணி விதையை 16 முதல் 32கிராம் எடுத்துக் குடிநீரிட்டுச் சாப்பிடச் சிறுநீரைப் பெருக்கும். வெள்ளை, நீர் எரிச்சல் முதலான நோய்களைப் போக்கும்.

55. பனை: ஆனங்காயைச் (ஆண்பனைப்பூ) சுட்டு நீரில் கலக்கித் தெளிந்த நீரைக் காய்ச்சில் உப்பு உரையும். இதனை மூன்று முறை காய்ச்சி எடுத்த உப்பைச் சிறு அளவில் கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கும். வலப்பாட்டீரல், இடப்பாட்டீல் நோய்கள் நீங்கும்.

பூவைச் சுட்ட சாம்பலை உள்ளுக்குக் கொடுக்கச் சிறுநீர் பெருக்கை உண்டாக்கும். கழியச் செய்யும். புண்களைப் போக்கும்.

இதன் காயை முதிர்வதற்கு முன்பு வெட்டி உள்ளிருக்கும் நுங்கையும் நீரையும் சாப்பிடக் குளிர்ச்சி உண்டாகும். நீர் வேட்கை, நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு நீங்கும்.

56. பார்லி: பார்லி அரிசியைக் கஞ்சி காய்ச்சிஅருந்த நீர் பெருகி இழியும். நீர் எரிச்சல் நீங்கும்.

57. ஊசிப்பாலை: இதன் கீரையைக் கடைந்து உண்டாலும் குடிநீர் செய்து உட்கொண்டாலும் நீர் எரிச்சல், வெள்ளை முதலியன நீங்கும்.

58. பாவட்டை: இதன் வேர்ப்பொடி, சுக்குத்தூள் இவ்விரண்டையும் ஓரெடை சேர்த்துக் கழுநீரில் கலக்கி நீர்ச்சுருக்கு, நீர்ப்பெருவயிறு நோய்களில் வழங்க நீரைப் பெருக்கி இழியச் செய்யும். உடம்பின் நீர்ப்பெருக்கை வற்றச் செய்யும். வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல் வீக்கம் நீங்கும்.

59. பிடங்கு நாறி: பிடங்கு நாறியிலை 3 அல்லது 4 எடுத்து, கடுக்காய்த் தோல் 1 வராகன் எடை, கறிமஞ்சள் 1/2 வராகன் எடை இவைகளுடன் சேர்த்துக் குடிநீர் செய்து 1/4 முதல் 1/2 ஆழாக்குத் தர, பிலீக விருத்தி நீங்கும். அதனால் உண்டாகும் பெரு வயிறு தீரும். நீர்ச்சுரப்பு நீங்கும்.

60. பிரமி: இதன் இலையைத் தண்டுடன் இடித்துச் சாறு பிழிந்து ஒரு மேசைக் கரண்டியளவு கொடுக்க எரிச்சலோடு கூடிய நீர்ச்சுருக்கு நீங்கும்.

61. சிறுபீளை: இதன் இலைச்சாற்றில் 1/8 முதல் 1/4 ஆழாக்கு வீதம் குடித்துவர கல்லடைப்பு, நீரடைப்பு, நீர் எரிச்சல் போம்.

சிறுபீளை வேர்ப்பட்டை, பனைவெல்லம் வகைக்குப் பலம் ஒன்று எடுத்துக் கூட்டி மைபோல் அரைத்து, 1/2 ஆழாக்குப் பசும்பாலில் கலந்து காலை மாலைகளில் உட்கொண்டுவரக் கல்லடைப்பு, நீரடைப்பு நீங்கும்.

சிறுபீளைச் சமூலம், சிறுநெருஞ்சி, மாவிலிங்கம் வேர், பேராமுட்டி வேர் இவைகளை ஓரெடை எடுத்துப் போதிய நீர் விட்டு எட்டில் ஒன்றாய்க் குறுக்கிப் பருகக் கல்லடைப்பு நீங்கும். நீரிழியும்.

மேற்சொன்ன குடிநீரை வெங்காரம், சீனாக்காரம், வெடியுப்பு, சிலாசத்து, கல்நார், நண்டுக்கல், விரால்மீன், தலைக்கல் இவற்றின் பற்பத்திற்குத் துணை மருந்தாகக் கூட்டினால் கல்லடைப்பு முதலியன போம்.

வேரைப் பஞ்சு போல் தட்டிக் குடிநீர்செய்து வழங்க நீர்க்கட்டு நீங்கும்.

62. பெரும்பீளை: சிறுபீளை போன்றே இதனையும் வழங்கலாம்.

63. புகையிலை: புகையிலை உப்பு: புகையிலையின் காம்புகளை அல்லது இலையுடன் காம்புகளையாவது நன்றாய் ஈரமின்றி உலர்த்திச் சுட்ட சாம்பல் ஒரு பங்குக்கு 4 பங்கு சுத்தநீர் விட்டு 3 நாள் கலக்கி வெயிலில் வைத்து 4ஆம் நாள் தெளிவிறுத்துக் கொண்டு, சிறு தீயிட்டுக் குழம்பு போல வரும்வரையில் காய்ச்சி, சூரிய வெப்பத்தில் வைக்க உப்பாகும். இது வெண்ணிறம் பொருந்தியது. நிறம் வேறுபட்டிருப்பின் மறுபடியும் நீர் விட்டுக் கரைத்துத் தெளிவிறுத்து முன்போலச் செய்து கொள்ளவும்.

இவ்வுப்பைத் தனித்தாவது அல்லது மற்ற நீரை உடைக்கும் உப்புடன் அல்லது வேறு மருந்துகளுடன் கூட்டியாவது அளவுப்படி கொடுக்க நீர்க்கட்டுடையும். பெருவயிறு போன்ற நோய்கள் தீரும்.

வெடியுப்பு சுண்ணம்: வெடியுப்பு 1 பங்கு, புகையிலை 2 பங்கு எடுத்து புகையிலையைத் துண்டு துண்டாக வெட்டிக் கத்தரித்து ஒரு சட்டியில்

கொஞ்சம்பரப்பி, அதன்மீது வெடியுப்பை பரப்பி, இவ்விதமாகவே அடுக்கடுக்காகப் பரப்பி, கடைசியில் புகையிலையைக் கொஞ்சம் அதிகமாகப் பரப்பி வெளியில் வைத்துக் கொளுத்திவிட வெடியுப்பு ஒருவகை சுண்ணமாகும். இச்சுண்ணத்துக்கு நேர்பாதி நவாச்சாரம் கூட்டிப் பீங்கானில் பரப்பிப் பனியில் வைக்க நீர்றிறங்கும். இந்நீரில் நாலில் ஒரு பங்கு பொரித்த வெங்காரமும் படிகாரமும் கூட்டி எரிக்கச் சுண்ணமாகும்.

இதில் ஒரு குன்றியளவு தக்க அனுபானத்தில் கொடுக்க நீர்க்கட்டு உடையும்.

64. புளி: புளியங் கொட்டையின் மேல் தோலைக் காயவைத்து இடித்த தூள் 260 மிகி முதல் 300 மிகி. சர்க்கரை அல்லது தேன் சேர்த்து தினம் 2,3 தடவை கொடுத்து வர நீர்க்கடுப்பு, வெள்ளை, கழிச்சல் முதலியன தீரும்.

65. சிறுபுள்ளடி: இதன் வேரைக் குடிநீரிட்டுக் கொடுக்க நீர்க்கட்டை உடைக்கும். பசியைத் தூண்டி உணவைச் செரிப்பிக்கும். உடற்கு வன்மை ஊட்டும்.

66. மாவிலிங்கு: மாவிலிங்கம் பட்டைக் குடிநீர் அல்லது பட்டை கலந்த வெண்ணெய் கொள்ள வளி நோய்கள், முப்பிணி, கல்லடைப்பு நீங்கும்.

67. வால்மிளகு: வால்மிளகு எண்ணெய் 136 கிராம், வெள்ளைக் குங்கிலியம் 136 கிராம், பறங்கிச் சக்கைத்தூள் 137 கிராம் கூட்டி இவற்றை நீர்முள்ளிச் சாறு விட்டு அரைத்துச் சுண்டையளவு உருட்டி வேளைக்கு 2,3 மாத்திரை காலை மாலை கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, வெள்ளை தீரும்.

68. முசுட்டைக் கொடியைக் குடிநீரிட்டாவது, பொடி செய்து இதர மருந்துகளுடன் சேர்த்தாவது கொடுக்க நீர்த்தாரையின் எரிச்சலைப் போக்கும்.

69. முந்திரிப் பழத்தின் சாற்றிலிருந்து சாராயம் காய்ச்சுவதுண்டு. இதனைத் தக்க அளவாய் உட்கொள்ளின் சிறுநீரைப் பெருக்கும்.

70. முருங்கை: முருங்கை இலைச்சாற்றுடன் சிறிது வெடியுப்பு சேர்த்துக் கொடுக்க சிறுநீர் பெருகும்.

71. முள்ளங்கி: முள்ளங்கி நட்டு இரண்டு மூன்று இலைகள் வந்தவுடன் அவ்விலைகளில் ஒருபிடி எடுத்து 2 முதல் 4 கிராம் சோற்றுப்பைச் சேர்த்துக் காலை மாலை 2 வேளை சாப்பிட்டு வர நீரடைப்பு நீங்கும். வெள்ளை தீரும்.

கிழங்கை நசுக்கிச் சாறு பிழிந்து 34 முதல் 100 கிராம் வரையிலும் குடித்து வரச் சிறுநீரை நன்றாய்ப் போக்கும்.

72. மூக்கிரட்டை: இதன் வேரைக் குடிநீர் செய்து குடித்துவர நீர்க்கட்டு, பெருவயிறு, சோபை ஆகிய நோய்கள் தீரும். நீர் நன்கு இழியும்.

73. வாழை: வாழைக்கிழங்கில் ஊறுகின்ற நீரைக் காலை மாலை 80 முதல் 160 மிலி வரை சாப்பிட்டு வர, குளிரிச்சியையும் வன்மையையும் உண்டாக்கும். நீர் நன்கு இழியும். பெருவயிறு, நீர் எரிச்சல், சிறுநீரில் குருதி வீழல் முதலியன தீரும்.

வாழைப்பட்டை, சருகு முதலியவற்றை உலர்த்தி எரித்து எடுத்த சாம்பலை நீரிலிட்டுத் தெளிவு இறுத்த நீரைக் காய்ச்சின் உப்பாம். இவ்வுப்பு சிறுநீரைப் பெருக்கும் தன்மை உடையதாகும்.

வாழைச் சருகு, எள்ளுச் செடி, பனைவேர், புகையிலை, நாயுருவி இவைகளின் சாம்பல் ஓர் நிறையாகக் கொண்டு அதன் அளவிற்கு நான்கு பங்கு நீர் விட்டுக் கலக்கித் தெளிவிறுத்த நீரை வடிகட்டிச் சிறு தீயால் காய்த்து, சுண்டி வரும்போது சூரியனில் வைக்க உப்பு உறையும். இதனை மீண்டும் ஒன்றுக்கு 4 பங்கு நீர்விட்டு முன்கூறியதுபோலவே எரித்து உப்பாக்கவும். ஆக 5 முறை இப்படி செய்த உப்பை எடுத்து வைத்துக் கொள்ளவும். இதனில் ஒன்று முதல் இரண்டு குன்றி அளவு தக்க துணை மருந்தோடு கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கி இழியச் செய்யும். வாழைத் தண்டு அல்லது கிழங்கினை இடித்துப் பிழிந்த இரசத்திற்கு மூத்திரத்தைப் பெருக்கும் செய்கை இருப்பதாலும், இதில் வெடியுப்பின் சத்து சேர்ந்திருப்பதாலும் நீர்க்கட்டு, நீர் எரிவு, இரத்தக் கிரிச்சரம் ஆகியவைகளைப் போக்க இதனை உபயோகிக்கலாம். நோய் கடினமாயிருப்பின் இச்சாற்றுடன் வெடியுப்பு, வெங்காரம், படிகாரப்பற்பம் அல்லது சுண்ணம் சேர்த்துக் கொடுக்கலாம்.

74. வெங்காயம்: வெங்காயத்தைக் குடிநீரிட்டுக் குடிக்க நீரெரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு நீங்கும்.

பச்சைக் கிழங்கைத் தின்ன பெண்களுக்குண்டான சூதகத்தடையை நீக்கும். குருதிச் சிக்கலை அறுக்கும். நீரைப் பெருக்கும்.

75. வெண்டைக்காய்: வெண்டைக்காய்ப் பிஞ்சைத் துண்டு துண்டாக வெட்டி 160 கிராம் எடுத்து 700 மிலி நீரில் சேர்த்து 300 மிலியாகக் குறுக்கி வடித்துச் சர்க்கரை 4 கிராம் கூட்டி நீர்க்கடுப்பு, வெள்ளை, இருமல், கழிச்சல் இவற்றுக்கு 35 முதல் 70மிலி வரை 3,4 மணிக்கு ஒரு முறை கொடுக்கலாம்.

76. வெள்ளரி: வெள்ளரி இலையைச் சீரகத்துடன் கலந்து வறுத்துப் பொடி செய்து சர்க்கரை சேர்த்துண்ண சிறுநீரைப் பெருக்கும்.

34 கிராம் விதையை அரைத்து 175 மிலி நீரில் அரைத்து வடிகட்டி, சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்ப்புழை வெடிப்பு, சதையடைப்பு, வெள்ளை, நீர் எரிச்சல் முதலியன நீங்கும்.

விதை நீரைப் போக்கும் குடிநீர், பொடி இவற்றில் சேரும். பிஞ்சு, காய் இவற்றைப் பச்சையாக உண்டாலும் உடல் சூடு குறையும்.

## இந்நோயில் பயன்படும் தாது, சீவப்பொருள் மருந்துகள்

1. அயப்பற்பம்: வேங்கை வேர்ப்பட்டைச்சாறு, செங்கரும்பின் சாறு, புளிமா வேர்ப்பட்டைச் சாறு, கற்றாழை வேர்ச்சாறு இவற்றால் அரைத்துப் புடமிட்டெடுக்கப்பட்ட அயபற்பத்தைச் சாமையரிசி அளவில் தாய்ப்பாலில் உட்கொண்டு வர நீர்க்கட்டு நோய் நீங்கும். மிளகுத் தைலம் அல்லது அதன் இரசத்தில் உட்கொண்டு வர பெருவயிறு நீங்கும். 32 நாட்கள் அருந்துதல் உத்தமம்.

பெண்போகம் நீக்கவேண்டும் களிப்பாக்கு, வெங்காயம், கஞ்சா, அபின், கள், சாராயவகைகள், அகத்திக்கீரை, மோர், காடி, புளி, நெல்லிக்காய் நீக்குதல் வேண்டும்.

2. நாகப்பற்பம்: நாகத்தை வெண்சாலி நெற்கதிர்பசுங்காய்ச்சாறு, நெல்லியிலைச்சாறு, கருப்பஞ்சாறு, குறுசூல் வேர்ப்பட்டைச்சாறு, வெள்ளல்லிச்சமூலச் சாறு, காந்தள் சமூலச்சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு இவற்றால் அரைத்துப் புடமிட்டெடுக்க நாகம் பற்பமாகும்.

அவரைக் கொட்டையில் ஆறில் ஒரு கூறு அளவில் உமிழ் நீரில் கலக்குமாறு கொடுக்க நீர்க்கட்டு, வல்லை, மகோதரம், வெட்டை முதலியன நீங்கும்.

3. பித்தளைப் பற்பம் : பித்தளையைப் பொடி செய்து பொன்நிமிளை, வீரம் இவற்றை எட்டில் ஒரு பங்கு வீதம் கூட்டி சங்கத்திராவகம் விட்டு அரைத்துப்புடமிடின் பற்பமாகும்.

இதனை 2 முதல் 4 உழுந்தெடை வரை பாலில் அனுபானித்துக் கொடுக்கச் சிறுநீர் பெருக்கியாக வேலை செய்யும்.

4. மண்டூரச் செந்தூரம்: நாட்சென்ற 4 பலம் மண்டூரத்தை இடித்து 4 படி வெள்ளாட்டு நீரில் ஒரு நாள் ஊற வைத்து, நீர் சுண்டக் காய்ச்சிப் பிறகு நெருப்பிலிட்டுப் பழுக்கக்காய்ச்சி, பசுநீரில் 10 முறை தோய்த்துக் கழுவி எடுத்து, கல்வத்திலிட்டு சோற்றுக் கற்றாழைச் சாற்றால் ஒரு நாளரைத்து வில்லைதட்டி உலர்ந்தபின் ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து, 2 முழ உயரப் புடம் போடவும்.

இவ்விதமாக சோற்றுக் கற்றாழைச் சாற்றில் 10 புடமும், நீர்முள்ளி, கரிசிலாங்கண்ணி, வீழி, வேலிப் பருத்தி, மாதுளம்பழம் இவைகளின் சாற்றினால் வகைக்கு 10 புடமும் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு இதில் வேளைக்குப் பணவெடை வீதம் கரிசாலைச் சாற்றில் தினம் காலை மாலை 2 வேளையும் கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, மகோதரம், நீர்க்கடுப்பு, சோகை முதலியன நீங்கும்.

5. வெள்வங்கப்பற்பம்: பெரும்பீர்க்கு, வெள்ளரி, கோவை. இவற்றின் சமூலச் சாறு கொண்டு, வெள்வங்கத்தை முறைப்படி அரைத்துப் புடமிடப் பற்பமாகும். இப்பற்பத்தைத் துவரை அளவு கையான் சாற்றில் 15 நாட்கள் வழங்கச் சிறுநீர்ப் பிணிகளும், மகோதரமும் நீங்கும்.

6. இலிங்கப்பற்பம்: சுத்தி செய்த இலிங்கத்தைச் சரக்கொன்றை சமூலச்சாறு, நாட்டெட்டிக்கனி இரசம், சுரபுன்னை சமூலச்சாறு, வாட்கோரை சமூலச்சாறு, திருவாத்தி சமூலச்சாறு, நறுமாமரச் சமூலச் சாறு, இவற்றால் முறைப்படி தனித்தனியே அரைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

துவரையில் எட்டில் ஒரு கூறு என்ற அளவில் ஆம்பல் மலர்ச்சாற்றில் கொடுக்க நீர்க்கட்டு நோய்கள் நீங்கும்.

7. சண்டரசப்பற்பம்: இலிங்கத்திற்குச் சங்கத்திராவகம் விட்டரைத்து எரித்து பதங்கித்து எடுக்கப்பட்டுப் பின் மேலும் 4 முறை இவ்வாறு செய்து இலிங்கம் பதங்கிக்காமல் கீழேயே நீறாகிவிடும் பக்குவத்தில் எடுப்பதே சண்டரசப்பற்பம். இதனை நல்லவெல்லத்தில் பணவெடை கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, பெருவயிறு, சூலை, கிரந்தி, கைகால் முடக்கல், அண்டவாயு முதலியன நீங்கும்.

8. கந்தகச் செந்தூரம்: சுத்தி செய்த கந்தி பலம் 10 க்குக் கற்றாழைச்சாறு விட்டு தினம் அரைத்து எடுத்துக் கொண்டு அயத்தூள் பலம் 4க்குப் புரசம் இலைச் சாறு விட்டு 7 தினம் அரைத்து, சிறு வில்லையாகச் செய்து உலர்த்திக் குகையிலிட்டு, அதன் மேல் மேற்படி கந்தியை வைத்துக் குகைக்குச் சில்லிட்டுச் சீலை ஏழு அழுத்தமாகச் செய்து உலர்த்தி உலையிலிட்டுச் சிவக்க ஊதி ஆறவிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

2முதல் 4 உளுந்தெடை தேன் அல்லது இஞ்சிச்சாற்றில் வழங்க நீர்ப் பெருவயிறு, நீரடைப்பு, சோபை, காமாலை, பாண்டு முதலியன நீங்கும்.

9. கந்தக இரசாயனம்: கந்தகம் 10 பலம், அமுக்கராக் கிழங்கு பலம் 5, பறங்கிச் சக்கை பலம் 2, திரிபலா, திரிகடுகு, வாய்விடங்கம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடலைப்பருப்பு, சேராங்கொட்டை, சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்கு

பலம்1. இவைகளைத் தனித்தனியே சூரணம் செய்து, பிறகு எல்லாவற்றையும் ஒன்றுபடக் கலந்து சர்க்கரை, தேன், நெய் சேர்க்கவும்.

10 முதல் 15 குன்றி வரை கொடுக்க மூத்திரக் கிரிச்சர நோய்கள் நீங்கும். மேகநோய்கள், குன்மம், வளிநோய்கள், மூலம் ஆகியனவும் நீங்கும்.

10. தாளகப்பற்பம்: தாளகத்தைப் பனங்கள், பொற்கொன்றைச் சாறு, கருடக் கொடி கிழங்கின் சாறு, வன்னியிலைச்சாறு இவற்றால் முறைப்படி தனித்தனியே அரைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பம் ஆகும். ஓமத்தில் எட்டில் ஒரு கூறு அளவில் வழங்கலாம். நீர் ஏற்றத்தால் உடலில் மூவகை நீர்கள் உண்டாகின்றன. அவை உண்ணு நீர், நண்ணுநீர், புண்ணுநீர் என்பன. உண்ணு நீர் என்பது தாகத்துக்கு அதிகமாகக் குடிக்கும் நீர். நண்ணுநீர் என்பது சுபாவமாய் சிறுநீரை அடக்கியதால் பந்தப்பட்டநீர். புண்ணுநீர் என்பது சுபாவமாய் இருக்கப்பட்ட இரத்த நீர். இம்மூவகை நீர்களும் முறையே தலை உச்சிப் பள்ளத்திலும், மார்புப்பள்ளத்திலும், நாபிப்பள்ளத்திலும் கூடும்.

இதனால் தலை உச்சிப்பள்ளத்தில் சேட்பத்தினது சார்பு தோன்றிய சேட்பசீதச் சுரப்பொல்லாப் பிணி தோன்றும். இதற்குத் தாளகப்பற்பத்தைக் கார் அவலில் காய்ச்சிய சாராயத்தில் அனுபானித்து வழங்கத் தீரும்.

மார்பின் பள்ளத்தில் பித்தத்தினது சார்புதோன்றிய பித்தசீதச் சுரப் பொல்லாப் பிணி தோன்றும். இதற்குத் தாளகப் பற்பத்தைக் காரரிசியில் காய்ச்சிய சாராயத்தில் அனுபானித்து வழங்க வேண்டும்..

தொப்பூள் பள்ளத்தில் வாதத்தினது சார்பு தோன்றிய வாதசீதச் சுரப் பொல்லாப் பிணி தோன்றும். இதற்குத் தாளகப் பற்பத்தைக் காரரிசிச் சோற்றில் காய்ச்சிய சாராயத்தில் அனுபானித்தும் கொடுக்க வேண்டும்.

11. தாளகச் செந்தூரம்: மூக்கிரட்டைச் சாரணையை அரைத்து இரண்டு அடையாகத் தட்டி ஒரு சட்டிக்குள் ஒரு அடையை வைத்து, அதன்மேல் தாளகத்தை வைத்து மேலும் மற்றோர் அடையை வைத்து மேற்சட்டி கொண்டு மூடி 7 சீலைமண் செய்து அடுப்பேற்றி 8 சாமம் எரிக்கச் செந்தூரம் ஆகும்.

1முதல் 2 குன்றியளவில் வெள்ளரிக்காய்ச் சாற்றில் வழங்க நீரடைப்பு நோய் நீங்கும்.

எலிப்புழுக்கை, கோழிக்காரம், கோழிக்கரு இவற்றின் பொடி, வெதுப்பிய வெள்ளரிக்காய் இவைகளை நீரில் கலந்து கொடுக்கக் கல்லடைப்பு நோய் நீங்கும்.

12. மனோசிலை: நளிர்சுரம், காசம், கபநோய், கண்ணோய் இவற்றுடன் மூத்திரக்கிரிச்சர நோயையும் நீக்கும் என்று இதன் குணத்தில் கூறப்பட்டுள்ளது.

மனோசிலை சேர்த்துச் செய்யப்படும் சிவனார் அமிர்தம் என்னும் மருந்து எல்லாவித வளி, அழல், ஐய நோய்க்கும் வழங்கப்படும் மருந்தாகும். எனவே நீர் வெளியாகாமல் இருக்கும் நீர்க்கட்டு, நீரடைப்பு, பெருவயிறு நோய்களிலும் இதனைத் தக்க அனுபானத்தில் வழங்கத் தீரும்.

13. கறியுப்புப் பற்பம்: ஒரு பலம் உப்பைக் காணான் சமூலச்சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, அத்திப்பால், கொட்டியிலைச்சாறு இவற்றைத் தக்க அளவு எடுத்து முறைப்படி தனித்தனியே அரைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

இதனில் துவரையில் கால் பங்கு என்ற அளவில், குளிர்ந்த நீருடன் சேர்ந்த பேரரத்தைக் குடிநீரில் கொள்ள நீர்க்கட்டு, நீரருகல், நீர்ச்சுருக்கு போன்ற நோய்கள் நீங்கும்.

14. படிகாரப் பற்பம்: படிகாரத்தை நீரில் கரைத்துக் கனத்த சீலையில் வடிகட்டி, பீங்கான் பாத்திரத்தில் கொட்டித் தூசுபடாமல் சீலையால் மூடி இரவிபுடத்தில வைக்கப் படிகாரம் மலினமற்றுக் கட்டியாய் நிற்கும். இதனைக் கோழிமுட்டை வெண்கருவினால் அரைத்துச் சுத்த வெண்மையடையும் மட்டும் குக்குடப்புடம் இட்டு நீர்க்கட்டு, சதையடைப்பு, நீர் எரிவு முதலிய நோய்களுக்குப் பசுவெண்ணெய், நெய் முள்ளிச்சாறு, சிறுபீளைச்சாறு, சிறுநெருஞ்சில் சாறு இவைகளில் கொடுக்கக் குணமாகும்.

அளவு: 2முதல் 4 குன்றியளவு வழங்கலாம்.

15. நவாச்சாரம்: நவாச்சாரத்தை நீர்முள்ளிக் குடிநீரில் கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கி, மஞ்சள் காமாலை, ஊதுகாமாலை, கல்லீரல் கட்டி, வீக்கம் ஆகியவற்றைக் குணமடையச் செய்யும்.

16. நவாச்சாரக் குழம்பு: 1 பலம் நவாச்சாரத்தைக் கல்வத்திலிட்டுக் கொடிக் கள்ளிப்பால் விட்டு நன்றாய் மைபோலரைத்துச் சிமிழில் பதனம் பண்ணிக் கொள்ள வேண்டும். குன்றியளவு மட்டும் வழங்க மலக்கட்டு, நீர்க்கட்டு, பெருவயிறு, நீராம்பல் முதலியன நீங்கும். வயிற்றுப்போக்கு நிற்க முரிவாக எலுமிச்சம்பழம் நல்கலாம்.

17 நவாச்சார எண்ணெய்: எண்ணெயில் நவாச்சாரத்தையும், நீர்முள்ளி சாற்றையும் கூட்டி அருந்த வேண்டும். மகோதரம், நீராம்பல், நீர்க்கட்டு, நீர் எரிச்சல், நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, குன்மம், புழு, கிருமி இவை நீங்கும்.

18. பச்சைக் கற்பூர வைப்பு: சூடன் 1 பலம், வெடியுப்பு 4 1/2 பலம், உவர் உப்பு 1/2 பலம், புனுகு, ஏலம், கஸ்தூரி இவைகள் வகைக்கு அரைக்கழஞ்சு. இவற்றை எடுத்துக் கொண்டு, கல்வத்தில் போட்டரைத்து சந்தனத்தைலம் விட்டுப் பிசறி ஒரு குப்பியில் அரைப்பங்கு இட்டு, மாக்கல்லால் வாயை மூடி, 7 சீலைசெய்து தாளியில் அரைவாசி மணலிட்டு, அதில் குப்பியை வைத்து மேலும் மணலிட்டு ஓடு கொண்டு மூடி சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி ஒரு சாமம் தீபம் போல் எரித்து ஆறவைத்துக் கொள்ளவும். இது சிறு பொடியாய்த் தகடு போலிருக்கும். இது தாமரைப்பூ செங்கழுநீர்ப்பூ போல வாசனையுடன் காணும். இதனால் நீர்க்கடுப்பு, கல்லடைப்பு ஆகியன நீங்கும்.

19. பஞ்சலவணச் சூரணம்: பிடாலவணம், சோற்றுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு இவற்றைச் சம எடையக நிறுத்தெடுத்துச் சூரணம் செய்து கொள்ளவும். 10 முதல் 20 குன்றியளவில் வெந்நீரில் கொடுக்க மூத்திரக்கிரிச்சரம், மலபந்தம் முதலியன தீரும்.

20. வெங்காரம்: பொரித்த வெங்காரத்தை 5 முதல் 10 குன்றி எடை வரை இளநீரில் போட்டுக் கொடுக்க நீர்க்கட்டு குணமாகும்.

21. வெங்காரப் பற்பம்: வெங்காரத்தைக் கோழி முட்டை வெண்கருவால் சுத்த வெண்மை நிறமடையுமட்டும் அரைத்துக் குக்குடப்புமிட்டுப் பதமாக எடுத்துத் தக்க அளவில் நீரினைப் போக்கும் குடிநீருடன் கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, கல்லடைப்பு, சொட்டு நீர், நீர்ச்சுருக்கு ஆகிய நீர்க்கிரிச்சர நோய்கள் நீங்கும்.

22. வெடியுப்பு: வெடியுப்பு 2 வராகன் எடை எடுத்து ஒரு சேர் கஞ்சியில் கலந்து சுவைக்காகத் தேன் அல்லது கற்கண்டு கூட்டி அடிக்கடி அருந்தலாம். இதனால் நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு, தோல்வறட்சி, தாகம் முதலியன நீங்கும்.

23. வெடியுப்புச் சுண்ணம்: 10 பலம் ஆமை ஓட்டைத் தூள் செய்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கை ஒரு குடுவையிலிட்டு அதன் மேல் 2 பலம் எடையுள்ள ஒரு வெடியுப்புக் கட்டியை வைத்து மேலே மற்றொரு பாதி ஆமைவோட்டுத்தூள் கொண்டு மூடி, குடுவைக்கு மேல் ஓடிட்டுச் சீலைமண் செய்து ஒரு இலகுபுடம் இட்டெடுக்கச் சுண்ணமாகும்.

இச்சுண்ணத்தை முள்ளங்கிச்சாறு, இளநீர் அல்லது சிறுபீளைச் சாற்றில் கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, நீர்எரிச்சல் முதலியன நீங்கும்.

24. பவழப் பற்பம்: பவழத்தைக் கீழா நெல்லிக் கற்கத்தினுள் வைத்துப்புடமிட்டெடுத்த பற்பத்தை நிசிநீரில் உண்ண நீர்க்கடுப்பு நீங்கும்.

பவழத்தையும் கற்பூரசிலாசத்தையும் சரியெடை கூட்டி வச்சிரவல்லிச் சாற்றால் நான்கு சாமங்கள் ஆட்டி, கஜபுடமிட்டு மறுபடியும் அங்ஙனமே புளியாரைச் சாற்றாலும் செய்யின் பற்பமாகும். இதனை வெண்ணெயில் உண்ண நீர்க்கடுப்பு, மேகம், நீர்க்கட்டு ஆகியன நீங்கும்.

25. புட்பராகப் பற்பம்: புட்பராகத்தைச் சிறுபீளைச் சாற்றிலிட்டு 2 சாமம் வெயிலில் வைத்து எடுத்து மூசையிலிட்டு ஊத நீறும்.

பற்பம் ஒரு அரிசி எடையளவில் முள்ளங்கிக் கிழங்குச்சாறு, தேன் இவையிரண்டும் தனித்தனியே 1 வராகன் எடை சேர்த்த கலவையில் கொடுக்க நீரருகல் நீங்கும்.

26. முத்துப்பற்பம்: வெள்ளைச் சாறுவேளைச் சமூலச்சாறு, எருக்கு சமூலச்சாறு, அகத்தியிலைச் சாறு, மருதம்பட்டைச்சாறு ஆகிய சாறுகளினால் முத்தினை முறைப்படி தனித்தனியே அரைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

இதனை அவரைக் கொட்டையின் ஆறில் ஒரு கூறு தேனில் கலந்து கொடுக்க, நீரருகல், நீர்க்கட்டு, பொருமல், நீர் எரிச்சல், நீர்ப்பீனிசம், நீரொழுக்குச் சோபை, இலிங்கப்புண், யோனிப்புற்று முதலியன தீரும்.

27. வெடி அன்னபேதி செந்தூரம்: சுத்தி செய்த அன்னபேதி 1 பங்கு, சுத்தி செய்த வெடியுப்பு கால்பங்கு. இவ்விரண்டையும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு அல்லது மூன்று புடமிடச் செந்தூரமாகும். இதனை ஒரு குன்றி முதல் இரண்டு குன்றியளவில் தக்க துணை மருந்துடன் கொள்ள நீர் வெளியாகாமல் துன்புறுத்தும் நீர்க்கட்டு, நீரடைப்பு, பெருவயிறு, பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்களுக்கு வழங்கலாம். இரத்தக் குறைவால் வரும் நோய்களுக்கும் நீரை வெளியேற்றப்பட வேண்டிய நோய்களுக்கும் இது சிறந்த மருந்தாகும்.

28. கற்பூர சிலாசத்துப் பற்பம்: சுத்தி செய்த சிலசாத்தைக் கல்வத்திலிட்டு சிறு செருப்படையின் சாற்றால் அரைத்து இலேசாக வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டுசீலைமண் பலமாகச் செய்து காயவைத்து, 50 எருவில் புடமிட்டு ஆறவிட்டு எடுத்த பிறகு முன்போல 3 புடமிட்டெடுக்க வெண்மையான பற்பமாகும்.

இதனைப் பசுவெண்ணெயில் கொடுக்க நீர்க்கடுப்பு, பித்த வெட்டை நீங்கும்.

மேற்கண்ட பற்பம் இரண்டு கழஞ்சை அகலிலிட்டு அதன்மேல் சுத்தி செய்த வெங்காரம் இரண்டு கழஞ்சிட்டு மேலே பற்பத்தையிட்டு அகல்மூடிச் சீலை செய்து 3 கன வறட்டி கொண்டு புடமிட்டு ஆறியபின் எடுக்கவும்.

இதனை வெண்ணெயில் கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, நீர்க்கடுப்பு நீங்கும்.

கல்லடைப்பு நீங்க விரால்மீனின் தலைக்கல் பொடியை வெள்ளரிவிதைச் சாற்றில் கூட்டிப் பற்பத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது முள்ளங்கிச் சாறு கால்படியில் கால்பணவெடை பற்பம் கூட்டிக் கொடுக்கக் கல் வீழும்.

29. கல்நார்: பசுவின் நீரில் சுத்தி செய்த கல்நாருக்கு ஆடுதின்னாப் பாளைச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்திச் சில்லிட்டுச் சீலை செய்து கஜபுடம் இட்டெடுக்கப் பற்பமாகும். இதனை 2 முதல் 4 குன்றி எடை நெய் அல்லது வெண்ணெயில் அனுபானித்துக் கொடுக்க நீர்க்குறி எரிச்சல், நீரடைப்பு, விந்து நட்டம் முதலியன நீங்கும்.

30. கற்சுண்ணம்: கற்சுண்ணத்தைக் குழைத்துப் புறவளையமாக உந்தியைச் சுற்றிப் போட வயிற்றுவலி, நீர்ச்சுருக்கு, நீர் அடைப்பு முதலியன நீங்கும்.

மூத்திரக் கிரிச்சரம், மூத்திர எரிச்சல் ஆகியவற்றில் சுண்ணாம்புத் தெளிநீரைப் பசுவின்பாலில் கூட்டிக் கொடுக்கக் குணம் உண்டாகும்.

31. கோமூத்திர சிலாசத்து: நெல்லெடை கோமூத்திர சிலாசத்தைக் கோதுமை மாவுடன் கலந்து வர்த்தி செய்து மூத்திர துவாரத்தில் சொருக எரிச்சலோடு கூடிய நீர்ச்சுருக்கு குணமாகும்.

மூத்திரநாளப் புண்களுக்குப் பசுவின் காய்ச்சாத பாலில் நெல்லெடை மருந்தை அனுபானித்துக் கொடுக்கத் தீரும்.

32. நண்டுக்கல் பற்பம்: சுத்தி செய்த கல்நண்டை முள்ளங்கிச்சாற்றால் மைபோலரைத்து உலர்த்திப் பிறகு சிறுபீளைச் சாற்றால் அரைத்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

1 முதல் 2 குன்றியளவில் நீரைத்தள்ளும் மூலிகைச் சாற்றில் வழங்க நீர்க்கட்டு, நீரடைப்பு, கல்லடைப்பு முதலியன தீரும்.

இரண்டு வராகனெடை பொரிகாரத்தை 1 படி நீரிலிட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி அதில் நண்டுக்கல் குன்றியளவு கரைத்துக்கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்க்குத்து, துன்மாங்கிச அடைப்பு, கிரிச்சரம் முதலிய பிணிகள் நீங்கும்.

33. கிளிஞ்சல் பற்பம்: ஒரு பலம் சுத்தி செய்த பெருங்கிளிஞ்சலுக்கு மாவிலிங்கம் வேர்ப்பட்டைச்சாறு, ஊசிமல்லிகைச் சாறு, வெள்ளெருக்கஞ்சாறு

புளிமாச மூலச்சாறு இவற்றால் தனித்தனியே தக்க முறையில் கரைத்து வில்லைதட்டி உலர்த்திப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

குன்றிமணியில் எட்டில் ஒரு பங்கு பலத்தைச் சுக்கில் கலந்து கொடுக்க வாதநீர்க்கட்டு நோயும், இஞ்சியில் கொடுக்கப் பித்த நீர்க்கட்டு நோயும், பேரரைத்தையில் கலந்து கொடுக்கக் கப நீர்க்கட்டு நோயும் தீரும்.

34 பசு நீர் : பசுவின் சிறுநீரை வடிகட்டி ஒன்று முதல் இரண்டு அவுன்சு வரை கொடுத்துவர மகோதரம், நீர்க்கட்டு, மலக்கட்டு, தோல் பிணிகள் தீரும்.

எட்டு அவுன்சு பசுவின் நீரில் ஒரு கடுக்காய்த் தோலிட்டு ஊறவைத்துக் கலந்து வடிகட்டி ஒரு அவுன்சு நீரைக் கொடுக்க மலசலக் கட்டு நீங்கும்.

35. வெள்ளாட்டு நீர்: வெள்ளாட்டு மூத்திரத்தை வெதுப்பி வடிகட்டி வேளைக்கு ஒன்று முதல் ஒன்றரை அவுன்சு வீதம் சடாமாஞ்சில் அல்லது தசமூல்க் குடிநீருடன் கொடுக்கக் காக்கைவலி குணமாகும். இதற்குச் சிறுநீர் பெருக்கிச் செய்கையும் மலமிளக்கிச் செய்கையும் உண்டு.

36. பசுவின்பால்: பசுவின் பாலுடன் சோடா சேர்த்து அருந்த நீர்க்கட்டு, நீர் எரிவு, வாந்தி, வயிற்று வலி தீரும். நல்ல பசி உண்டாகும்.

37. வெண்ணெய்: எருமை வெண்ணெயினால் பித்த மூத்திரக் கிரிச்சரம் நீங்கும்.

நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, வெள்ளை முதலிய நோய்களுக்குக் கல்நார் பற்பம், சிலாசத்துப் பற்பம், குக்கில் பற்பம் முதலியவற்றை உள்ளுக்குக் கொடுக்கும்போது பசுவெண்ணெயை அனுபானமாகக் கொண்டால் விசேஷ நன்மை உண்டாகும்.

38. பூநாகம்: பூநாகத்தைச் சுத்தி செய்து உலர்த்திச் சூரணித்து கொடி முந்திரிகைப் பழச் சாற்றில் 3 வராகன் எடை சேர்த்துக் குடிக்க கல்லடைப்பு, நீரடைப்பு உடனே நீங்கும்.

39. மான் கொம்புப் பற்பம்: மான் கொம்பை நான்காய் பிளந்து சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு நாள் குப்பைமேனிச் சாற்றில் ஊறவைத்து, மேற்படி இலையை அரைத்துக் கவசம் செய்து காயவைத்து ஓட்டில் பரப்பி மேலோடு கொண்டு மூடிச் சீலைமண் செய்து, 50 எருவில் புடம் போட்டெடுத்து ஆவின்பால் விட்டரைத்து, வில்லை தட்டிக் காயவைத்து முன்போல் புடமிட்டெடுக்கவும்.

இப்பற்பத்துடன் பவழப்பற்பம் சேர்த்துத் தக்க துணைமருந்துகளுடன் வழங்க நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர் எரிச்சல், சயம், ஈளை, இருமல், மேக காங்கை முதலியன தீரும்.

கலைமான் கொம்பை இழைத்துக் கோவைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் நன்கு காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து 50 வறட்டியில் புடமிடப் பற்பமாகும்.

தேன், பசுநெய், பசுவெண்ணெய் இவைகளில் ஒன்றில் கொடுக்க மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

# I

"ஆத்மரட்சாமிர்தம்" என்னும் "வைத்திய சாரசங்கிரக" நூலில் கூறப்படும் சில மருத்துவ முறைகள் வருமாறு:

***நீர்ச் சுருக்கு தீர***

1. ஈருள்ளிச் சாறு அரைக்கால் நாழியில் வெங்காரம் 1 வராகன் எடை பொரித்துப்போட்டு 3 நாள், 6 வேளை சாப்பிடத் தீரும்.

2. இளநீரைக் கண் திறந்து அதில் சீரகம், சீனி, பாசிப்பயறு வகைக்கு 1 வராகன் எடைப்போட்டு ஓரிரவு வைத்துக் காலையில் மருந்தை எடுத்து அரைத்து இளநீரில் கரைத்துச் சாப்பிடவும். இவ்வாறு 3 நாள் 6 வேளை சாப்பிடத் தீரும்.

3. கீழாநெல்லியிலை 1 படி, சீரகம் 1 வராகன் எடை அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3 நாள் கொடுக்கத் தீரும்.

4. கடுக்காய், சுக்கு, சீரகம் 1 வராகன் எடை எடுத்து அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3 நாள் கொடுக்கத் தீரும்.

5. கடுக்காய், சுக்கு, சீரகம் 1 வராகன் எடை; ஈருள்ளிப்பூண்டு 1, கீழாநெல்லி சமூலம் 1 பிடி- இவைகளைக் குடிநீர் செய்து உண்ணலாம்.

6. அரைக்கால்படி வெந்நீரில் சந்தனம், பசுவெண்ணெய் வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு போட்டுச் சாப்பிட உடனே நிற்கும்.

7. வெந்நீரில் எலுமிச்சம்பழம் பிழிந்து கற்கண்டு கலந்து சாப்பிடத் தீரும்.

8. எலுமிச்சம்பழச் சாறும் நல்லெண்ணெயும் கலந்து சாப்பிடத் தீரும்.

9. முத்தக்காசு, ஆவாரம் விதை, புளியம்கொட்டை மேல்தோல் இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்துப் பொடித்து ஒருபடி இளநீரில் ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் மூன்று நாள் சாப்பிடத் தீரும்.

10. 1 வராகனெடை நீர்முள்ளி விரையை பசுநெய் விட்டு வெதுப்பிப் பொடித்து அரைக்கால்படி தேங்காய்ப் பாலில் கலந்து 3 நாள் சாப்பிடத் தீரும்

11. ஒரு சிரங்கை பசும்பாலில் ஒரு கொட்டைப் பாக்களவு புத்தான் சோற்றை அரைத்துக் கலக்கிச் சாப்பிட நீர்க்கடுப்பு தீரும்.

12. எலுமிச்சங்காயளவு கட்டுக் கொடியிலையை அரைத்துக் கால்படி நீரில் கலக்கி அதில் சீரகம், ஏலம் வகைக்கு 1 வராகன் எடைப் பொடித்துப் போட்டு ஒரு துட்டெடை சீனி கலந்துண்ணத் தீரும்.

## கல்லடைப்பு தீர

1. சங்கிலை, ஈருள்ளி, பச்சை நெல்லுமி இவைகளை ஓர்நிறையிடித்துச் சாறு பிழிந்து நாளொன்றுக்குக் கால்படி சாறு கொடுக்க உடனே கல்தெறித்து நீரிறங்கும்.

2. ஒருபலம் வெடியுப்பைச் சட்டியில் இறக்கி, ஒருபடி நீர்விட்டு அரைப்படியாய் வற்ற வைத்து அதில் கோவைத் தண்டையிடித்துப் போட்டு நாளொன்றுக்குக் கால்படியாக இரு நேரம் கொள்ள, கல் உடைந்து நீரிறங்கும்.

3. நெருஞ்சில் வேர், சிறுபீளைவேர், சிறுகீரைவேர், சீரகம் வகைக்குப் பலம் 1 சிதைத்துப் போட்டுக் குடிநீர் செய்துண்ணத் தீரும்.

4. கோவைத் தண்டை இடித்துப் பிழிந்த சாறு 1/4 படியில் பொரித்த சீனாக்காரம், சுண்ணாம்பு வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டுக் கொடுக்க கல் உடைந்து நீர் நன்கு இறங்கும்.

5. நெருஞ்சில், சிறுபீளை, மாவிலங்கு, பேராமுட்டி இவற்றின் வேர்கள் வகைக்குப் பலம் 10 நசுக்கி, 10 படி நீரில் போட்டு 1 படியாய் வற்ற வைத்து, நாளொன்றுக்கு 1/4 படி வீதம் கொடுக்கத் தீரும்.

## சதையடைப்பு தீர

1. முள்ளிலவு, நாவல், பூலா, வெட்பூலா, முத்தக்காசு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை, சிற்றாமுட்டி, சீதேவி செங்கழுநீர், சிறுகீரை, விராலி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், பொன்னாங்காணி வகைக்கு 1 பலம் எடுத்து 1 படி இளநீரில் அரைப்படியளவுக்குக் குறுக்கிய குடிநீரைக் கொடுக்கத் தீரும்.

2. முற்றின கோழிக் கல்லீரலில் இருக்கும் சிறுகல்லும் வெள்ளரி விரையும், பூநாகமும் வெல்லமும் வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து பசுவின் பாலில் கலக்கி 3 நாள் கொடுக்கத் தீரும்.

3. நாயுருவி, நெருஞ்சில், வாழைச் சருகு, ஈருள்ளி, சிறுபீளை இவைகளின் சாறு வகைக்கு 1/8 படி கலக்கி, தெளிவினை இறுத்து அதில் பொரிகாரம்,

அதிமதுரம் வகைக்கு 1/2 வராகன் எடை பொடித்துப் போட்டு நாள் ஒன்றுக்கு 1/4 படி வீதம் 3 நாள் கொடுக்க நீரடைப்பு, சதையடைப்பு நீங்கும்.

4. பசுநெய் 1 படி, மூக்கு வெட்டிச் சுத்தி செய்த சேராங்கொட்டை 15 நறுக்கிப் போட்டுக் காய்ச்சி கறுப்பாய் வருகிற பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு ஒரு காசெடை வீதம் 5 நாட்கள் கொடுக்கத் தீரும்.

## நீரடைப்பு தீர

1. கற்றாழஞ் சோற்றில் கடுக்காயைப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் நேரம் வைத்திருந்துப் பிழிந்து வடிகட்டின தண்ணீர் 1/4 படியில் பொரித்த வெங்காரம் 1 வராகன் எடை பனைவெல்லம் 1/4 பலம் சிதைத்துப் போட்டுக் கொடுக்க மலம் கழிந்து நீரும் இறங்கும்.

2. பசலி, நீலக்கத்திரியிலை வகைக்குப் பலம் 10 இடித்துக் குடிநீர் செய்து 1/4படி வீதம் கொடுக்கத் தீரும்.

3. குறிஞ்சா இலை, கல்லத்திப்பட்டை, கடுகுரோகணி, திரிகடுகு, நாயுருவி, கொழுஞ்சி வேர் வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து, 1 படி நீரில் போட்டு 1/4 படியாய் வற்ற வைத்துக் கொடுக்கவும். இவ்வாறு 3 வேளையும் கொடுக்கத் தீரும்.

4. சுறாமீன் தலைக்கல் இரண்டு எடுத்து இளவெந்நீரில் உரைத்துக் கொடுக்க உடனே நீரிறங்கும்.

5. கோவைத் தண்டுச் சாறு, தேங்காய்ப் பால் வகைக்கு 1/8படி எடுத்து ஒன்றாய்க் கலந்து நற்சீரகம் 1 வராகன் எடை பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

6. நீராகாரத்தில் பழங்கூரை வைக்கோலை ஊறவைத்துப் பிசைந்திறுத்துக் கால்படி சாப்பிட நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு தீரும்.

7. வெங்காரம், கற்பூரசிலாசத்து, வகைக்குப் பலம் 1, எலுமிச்சம்பழச் சாற்றாலாட்டி வில்லை தட்டி, சுண்ணாம்புக் குகையில் வைத்துச் சிறுபுடம் போட்டு ஒரு வராகன் எடை வீதம் தேனில் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்ச்சுருக்கு முதலின தீரும்.

8. வெடியுப்பு, பொரிகாரம், அண்டஓடு, பலகறை, கற்பூரசிலாசத்து, சீனாக்காரம் வகைக்கு 1 பலம் எலுமிச்சம்பழச் சாற்றினால் மைபோலரைத்து வில்லை தட்டிக் காயவைத்துக் கற்சுண்ணக் குகையில் வைத்துச் சில்லிட்டு மூடி, கவுதாரிப் புடம் போட்டு எடுத்த பற்பத்தை 1 வராகன் எடை இளநீரிலோ, ஈருள்ளிச்

சாற்றிலோ, எலுமிச்சம்பழச் சாற்றிலோ கொள்ள நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்ச்சுருக்கு முதலியன தீரும்.

9. வெள்ளரிக்காய்ச் சாறு 1 படி, பெரும்பூசணிக் காய், தண்ணீர்விட்டான் கிழங்கு, வாழைக் கிழங்கு, சீந்தில் தண்டு, கோவைத் தண்டு, நிலப்பனைக்கிழங்கு இவற்றின் சாறு வகைக்கு 1/2 படி; பசுவின்பால் 5படி, நெய் 1 படி, இளநீர் 3/4 படி - இவைகளை ஒன்றாய்க் கலந்து, அதில் சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், பொன்னாங்காணி, நன்னாரி, நெருஞ்சில், சிறுபீளை இவற்றின் வேர்; அதிமதுரம், சாத்திரபேதி, கூகைநீறு, முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், ஏலம், கிராம்பு, சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், செவ்வல்லிக் கொடி, அரத்தை வகைக்கு 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கற்பூரம் 1 வராகன் எடை, கற்கண்டு 1 பலம் பொடித்துப் போட்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, மேகம் ஆகிய நோய்கள் தீரும்.

10. தேங்காய்ப் பால், பொடுதலைச் சாறு, வகைக்கு 1 படி எடுத்து ஒன்றாகக் கலந்து காய்ச்சி வடித்து 3 நாள், 6 வேளை கொள்ள நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு தீரும்.

11. 1/8 படி எலுமிச்சம் பழச் சாற்றில் 5 சோகி சுட்ட சாம்பலையும் ஒரு கழஞ்சு பொரித்த வெங்காரத்தையும், ஒரு பாக்களவு பசுவெண்ணெயும் கலந்து 5 வேளை சாப்பிடச் சிறுநீரில் இரத்தம் கலந்து இறங்குவதும், கல்லடைப்பும் தீரும்.

12. வெள்ளரி விதை, விரால் மீன் தலைக் கல், அதன் பற்பம் ஆகியவற்றை அரைத்துக் கால்படி வெள்ளரிக் காய்ச் சாற்றில் ஒரு வேளையும், முள்ளங்கியை இடித்துப் பிழிந்த சாற்றில் ஒரு வேளையும் கொடுக்கக் கல்லடைப்பு தீரும்.

13. வெங்காரம், சிலாசத்து, மான்கொம்பு, கல்நார் இவைகளை ஓர் எடை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பருத்திச் செடி சமூலம் சுட்ட சாம்பல் 1 படியை 4 படி நீரில் போட்டுக் கலக்கி நான்கு நாள் ஊறவைத்து 4ஆம் நாள் தெளிவிறுத்து அத்தெளிவினால் 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து 30 எருவில் புடமிட்டு எடுக்கவும்.

பின் அதில் நவாச்சாரம், சூடன், பூநீறு, வீரம் வகைக்கு 1 கழஞ்சு சேர்த்து மேற்படி நீரால் 1 சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்துச் சுண்ணாம்புப் பொடிக்குள் வைத்து முழுப்புடம் போடக் கறுத்திருந்தால் முட்டை வெள்ளைக் கருவினால் அரைத்து மீண்டும் ஒரு புடம் போட வெளுத்து நீறும். அதற்குப் பாதி அளவு சுத்தி செய்த இலிங்கம் சேர்த்துப் பொடித்து இரண்டு பணவெடை இளநீரில் கொள்ளப் பெருவயிறு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, நீர்க்கட்டு யாவும் தீரும்.

14. காளமேக நாராயணச் செந்தூரத்தை நெற்பொரி, ஓமம், சுக்கு, மிளகு இவைகளை வெதுப்பிப் பொடித்த சூரணம் திரிகடி அளவும் அரைப்பணவெடை செந்தூரமும், முருங்கைப்பட்டைச் சாற்றில் கலந்து கொடுக்கப் பல்வித வாத நோய்கள் நீங்குவதோடு, நீர்க்கட்டு, நீரடைப்பு, சதையடைப்பு ஆகியனவும் நீங்கும்.

15. சலமஞ்சரி: கந்தகம், காந்தம், அயம், வெங்காரம், சீனம், சங்குப்பொடி, சிலாசத்து, சாத்திரபேதி, கல்நார் வகைக்கு 1 வராகனெடை. வெடியுப்பு 1 பலம்; இவைகளை மைபோலரைத்து அனலில் வைத்து உருகினவுடன் ஆற்றியெடுத்துப் பணவெடை வீதம் இளநீர், பழச்சாறு, வெந்நீர், கரிப்பான் குடிநீர் ஆகியவற்றில் அனுபானித்து வழங்க நீர்க்கட்டு, நீரடைப்பு, மகோதரம், பாண்டு, சோபை முதலியன தீரும்.

16. நீரடைப்புக்கு எண்ணெய்: விளக் கெண்ணெய் 1/4 படியில் ஈருள்ளி 1 பலம் சிதைத்துப் போட்டு பொன்னிறமாய்க் காய்ச்சி வடித்துப் பொரித்த வெங்காரம், கடுக்காய்த் தூள் வகைக்கு 1 கழஞ்சு போட்டுக் கலக்கிக் கொடுக்கத் துன்மாங்கிசம், நீரடைப்பு, கல்லடைப்பு ஆகியன தீரும்.

17. சதாவேரி நெய்: சதாவேரிக் கிழங்குச் சாறு 12 படி, குழிமீட்டான் கிழங்குச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பெரும்பூசணிக்காய்ச் சாறு, கரும்புச் சாறு வகைக்குப் படி 1; பசுநெய் 4 படி. ஒன்றாகக் கலந்து திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, கொத்துமல்லி, ஏலம், சீரகம், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம்வேர், அதிமதுரம், கூகைநீறு, முந்திரிகை, பேரீச்சு, இந்துப்பு, ஓமம், கோரைக் கிழங்கு, சிறுதேக்கு, கோஷ்டம், சந்தனம் வகைக்கு 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர மூத்திரப்பாளை, நீர்க்கடுப்பு, குத்து, கைகாலெரிவு நீங்கும். தேகபுஷ்டி உண்டாகும்.

18. கூழ்பாண்டச் சூரணம்: ஒரு பெரும்பூசணிக் காயைக் கீறி குடல், மேல் தோல் நீக்கி, அறிந்துப் பிட்டவியலாய் அவித்துப் பிழிந்துச் சட்டியிலிட்டுப் பசுநெய் தெளித்துச் சிவக்க வறுத்து இடித்து எடுத்த சூரணத்துடன் கடுக்காய், தான்றிக்காய், திரிகடுகு, அதிமதுரம், ஏலம், இலவங்கம், சண்பகப்பூ, கல்மதம், சீரகம் வகைக்கு, ஒரு கழஞ்சு எடுத்து வெதுப்பிப் பொடித்த சூரணத்தையும் ஒன்றாகக் கலந்து அதற்கு நேரெடை சீனி கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடிப்பிரமாணம் கொள்ள மூத்திரப்பாளை, மூத்திரக்கிரிச்சரம், கல்லடைப்பு, நீரடைப்பு, வெள்ளை, பெரும்பாடு முதலியன தீரும்.

19. பெரும்பூசணி நெய்: பெரும்பூசணிக்காய்ச் சாறு படி 8, வெள்ளரிக்காய்ச் சாறு படி 4, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு படி 2, பசுநெய் படி 1, இளநீர் படி 2 இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், சந்தனம், இலவங்கம், இலுப்பைப்பூ, கூகைநீறு, மெருகன் கிழங்கு, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கோஷ்டம், சிறுநாகப்பூ, முத்தக்காசு, செங்கழுநீர்க்கிழங்கு, திப்பிலி, கார்கோலரிசி, அதிமதுரம், மிளகு வகைக்கு கழஞ்சு 3 அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தேன் படி 1/2 சர்க்கரை படி 1/4 கலந்து கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர நீர்க்கிரிச்சரம், தேக எரிவு, வறட்சி தீரும்.

பத்தியம்: கைப்பு, புளிப்பு தள்ளவும்.

## II

"சித்த வைத்தியத் திரட்டு" என்ற நூலில் கூறப்பட்டுள்ள சிகிச்சை முறைகள் வருமாறு.

### 1. மகா ஏலாதிக்குளிகை

ஏலம், இலவங்கம், வால்மிளகு, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், அகில்கட்டை, தாமரை மகரந்தம், தாமரை வளையம், அதிமதுரம், அக்கரகாரம், அமுக்கரா, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, மான்கொம்பு, சடாமாஞ்சில், உருத்திராக்கம், கோரோசனை, அம்பர் இவைகள் வகைக்கு 2 1/2 வரான் எடை; அப்பிரகப் பற்பம், வெள்ளிப் பற்பம், முத்துப் பற்பம், பவழப்பற்பம் இவைகள் வகைக்கு 11/4 வராகன் எடை. சுத்தி செய்ய வேண்டியவைகளைச் சுத்தித்து, பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்துக் குழிக்கல்லில் சேர்த்து மாதுளம்பூச்சாறு, இளநீர், தாய்ப்பால் இவைகளில் தனித்தனியே நன்றாக அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும்.

இளநீர், பால், சர்க்கரை, தேன் ஆகியன அனுபானங்களாம். இதனை 1மண்டலம் கொள்ள மன்மதனை ஒத்த அழகும் நீண்ட ஆயுளும் உண்டாகும். கண்காசம், கல்லடைப்பு, நீரிழிவு, சோபை, உழலை, வாந்தி, தாபசுரம் முதலியன நீங்கும்.

### 2. வசந்த குசுமாகர மாத்திரை

இலிங்கம், வெங்காரம், இலவங்கம், திப்பிலி, கோஷ்டம், அக்கரகாரம், அதிமதுரம் வகைக்கு 1/4 பலம்; கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் வகைக்கு 1 வராகன் எடை- இவைகளை முறைப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டுப் பொடித்து, இஞ்சிச் சாற்றில் 2 நாளும் முலைப்பாலில் 2 நாளுமாக நன்றாக அரைத்துப் பாசிப்பயறளவு உருட்டி நிழலில் உலர்த்தவும். தக்க அனுபானத்தில்

கொடுக்கச் சிறுநீர் நோய்கள், சுரங்கள், கபகாசம், தும்மல், தாகம், ஏப்பம் முதலியன தீரும்.

### 3. மகா வசந்த குசுமாகர மாத்திரை

பொன், அயம், முத்து, பவழம், அப்பிரகம், காந்தம், வங்கம், நிமிளை, கந்தகம், செம்பு- இவற்றின் பற்பங்கள், நாபி சமஅளவு - இவற்றைக் கல்வத்திலிட்டு குமரிச்சாற்றால் 3 நாள் அரைத்துத் திரண்ட பிறகு, முத்துச் சிப்பியினில் வைத்து மற்றொரு முத்துச் சிப்பியால் பொருந்துமாறு மூடி வெங்காரத்தையும் குன்றிமணிப் பருப்பையும் பழச்சாற்றால் அரைத்து மேற்படி முத்துச் சிப்பிக்குக் கவசம் இட்டு உலர்ந்தபின் மேலும் கவசித்து உலர்த்தவும். இவ்வாறாக நன்றாக இறுகி உலரும் வரை மேற்படியாகக் கவசம் இடவும். இதை மணல் மறைவில் எரித்துப் பதம் வந்த பிறகு ஆறவிட்டெடுத்துச் சீலையை நீக்கிச் சிப்பியுடன் கல்வத்திலிட்டுப் பொடித்துச் செங்கழுநீர்ப்பூச்சாறு, கோங்கிலவம்பூச்சாறு, தாமரைப்பூச்சாறு, மாதுளம் பூச்சாறு, இவைகளில் தனித்தனியாக நன்றாக அரைத்தபிறகு, வெட்டிவேர்க் குடிநீர், விலாமிச்சம் வேர்க் குடிநீர் இவைகளில் முறையே ஒவ்வொரு நாள் அரைத்து, மருந்து எடைக்கு 1/8 பங்கு கஸ்தூரி, 1/8 பங்கு குங்குமப்பூ, 1/16 பங்கு பச்சைக் கற்பூரம் சேர்த்து வெட்டிவேர் கியாழத்தினால் 3 நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும்.

பல்வேறு அனுபானங்களில் கொடுக்கப் பலவித நோய்கள் தீரும். வெள்ளரி விதை, சிலாசத்துபற்பம், சர்க்கரை சேர்ந்த அனுபானத்தில் கொடுக்க நீர்க்கட்டு நோய் நீங்கும்.

### 4. குங்கிலியப் பற்பம்

மட்டை போக்காத இளநீரின் மேற்புறத்தைச் சீவித் துவாரமிட்டு அதில் வெண்குங்கிலியத்தைப் பொடித்துப் போட்டு, ஒருவாயகன்ற பாத்திரத்தில் சுத்த நீர் விட்டு அதில் மேற்படி காய் முக்கால் திட்டம் மறையும்படி வைத்து எரிக்கவும். எரிக்கும்போது ஒரு குச்சிகொண்டு துவாரத்தில் செலுத்திப் பார்க்கக் குங்கிலியம் உருகியிருக்கும்.

அதையெடுத்து இளநீர் அடங்கிய வேறொரு பாத்திரத்தில் கொட்டி, ஆறினபின்னர் அதையெடுத்து முன்போலவே மேலும் 9 முறை செய்து நுண்ணிய துகளாகப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதுவே முடிவுபெற்ற பற்பம்.

ஆயினும் இதைக் கோழிமுட்டை வெண்கருவிலேனும் சோற்றுக் கற்றாழைச் சாற்றிலேனும் அரைத்துக் குக்கிடப் புடமிட்டும் உபயோகிக்கலாம்.

ஒன்று முதல் 4 குனறிமணி அளவு நோய் பலம் நோயாளி பலம் அறிந்து சீதவீரிய மூலிகைகள் ஒன்றில் அனுபானித்துக் கொடுக்க நீர் எரிச்சல், நீர்க்கட்டு, வெள்ளை, வெட்டை முதலியன தீரும்.

### 5. படிக வெங்காரப் பற்பம்

படிகாரத்தை நீரில் கரைத்துக் கனத்த சீலையில் வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் கொட்டி, தூசு படாமல் சீலையில் மூடி, இரவிபுடத்தில் வைக்க, படிகாரம் மலினமற்றுக் கட்டியாய் நிற்கும். இதைக் கோழிமுட்டை வெண்கருவினால் அரைத்து வெண்மையடையுமட்டும் குக்குடப்புடமிடவும். நீர்க்கட்டு, சதையடைப்பு, நீரெரிவு முதலிய நோய்களுக்குப் பசுவின் வெண்ணெய், நெய், முள்ளிச்சாறு, சிறுபீளைச்சாறு, சிறுநெருஞ்சில் சாறு ஆகியவைகளில் கொடுக்கக் குணம் உண்டாகும். அளவு ஒன்று முதல் நான்கு குன்றிமணி அள்வு ஆகும்.

வெங்காரத்தையும் மேற்கண்ட முறையிலேயே பற்பமாக்கி, மேற்கண்ட நோய்களில் வழங்கலாம்.

### 6. கௌரிசிந்தாமணி செந்தூரம்

சுத்தித்த இரசம் 1 பலம், கந்தகம் 1பலம், பொரிகாரம் 1 பலம். இவைகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி பொடித்து, பொடியை ரெட்டினால் கொட்டைப் பாக்களவாய் கிழிகட்டி மணல் மறைவில் வரிசையாக வைத்து 10 வறட்டி மணல்மேல் அடுக்கி எரித்துக் குளிர்ந்தபின் ரெட்டுக்களை நீக்கி மருந்தை எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். மருந்துப் பூலாம்பழம்போல் கறுப்பாக இருக்கும்.

அவரைத் தைலத்தில் ஒரு குன்றிமணி அளவு கொடுக்க சதையடைப்பு, மூத்திர அடைப்பு, உஷ்ணம் முதலியன நீங்கும். வேறு பல அனுபானங்களில் மற்ற நோய்களும் தீரும்.

### 7. மண்டூரச் செந்தூரம்

1000 வருடம் சென்ற இரும்புக்கிட்டத்தை நெருப்பிலிட்டுக் காய்ச்சிப் பசுவின் நீரில் 10 முறைத் தோய்க்கச் சுத்தியாகும். ஒவ்வொரு முறையும் புதிதாக மூத்திரத்தை உபயோகிக்கவும்.

இவ்வாறு சுத்தி செய்த மண்டூரம் 1 பங்கு, கந்தகம் 1/10 பங்கு, இரசம் 1/10 பங்கு, இலிங்கம் 1/10 பங்கு, உப்பு 1/10 பங்கு, வெங்காரம் 1/10 பங்கு. இவைகளைக்

கல்வத்திலிட்டுப் பொடித்துப் பழச்சாற்றால் 10 புடமும், கரிசாலைச் சாற்றால் 10 புடமும், செருப்படையில் 10 புடமும் , செம்பைச் சாற்றில் 10 புடமும், அரசம்பட்டைச் சாற்றில் 5 புடமும் போட்டுப் பொடித்துக் கொள்ளவும்.

குன்றியளவு திரிகடுத்தூள் தேனில் கொள்ள விஷப்பாண்டு, காமாலை, கபநோய்களுடன், நீர் நோய்கள் யாவும் தீரும். காமம் சுரக்கும், தேகம் மின்னும், உடல் இறுகும்.

## 8. தாளிசாதி சூரணம்

தாளிசம், இலவங்கப்பட்டை, ஏலம், சுக்கு, அதிமதுரம், பெருங்காயம், நெல்லிமுள்ளி, கோஷ்டம், திப்பிலி, சீரகம், சதகுப்பை, ஓமம், நற்சீரகம், திப்பிலிக்கட்டை, கிராம்பு, சாதிப்பத்திரி, கற்கடகசிங்கி, சாதிக்காய், தான்றிக்காய், கடுக்காய், சடாமாஞ்சில், மிளகு, சிறுநாகப்பூ, சண்பகமொக்கு, வாய்விடங்கம், இலவங்கப்பத்திரி வகைக்கு 8 வராகனெடை; கொத்துமல்லி 18 வராகன் எடை; இவைகளைச் சுத்தித்து நன்றாக வெயிலில் உலர்த்த வேண்டியவைகளை உலர்த்தி பொன்வறுவலாக வறுக்க வேண்டியவகைகளை வறுத்துப் பொரிக்க வேண்டியவைகளைப் பொரித்து, பொடித்து வடிகட்டி சீனி 46 வராகனெடை சேர்த்துக் கலந்து அளவுப்படி 2 நேரம் கொள்ள நீர்க்கட்டு, நீரடைப்பு முதலான கிரிச்சர நோய்களும் மற்றும் பல வாத, கப நோய்களும் தீரும்.

## 9. வெண்பூசணி இலேகியம்

வெண்பூசணிக் காய்ச் சாறு 4 படி, தாழை விழுதுச்சாறு, தென்னம்பூச்சாறு, பழச்சாறு இவை வகைக்கு 1 படி; பசுவின்பால், உப்பு, சர்க்கரை 10 பலம். இவற்றை ஒன்றாய்ச் சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பிலிட்டுக் காய்ச்சிப் பாகுபதம் வரும்பொழுது சீரகம், கொத்துமல்லி, கோஷ்டம், மிளகு, மாசிக்காய், ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிமதுரம், தாளிசம் இவை வகைக்கு 1 பலம் இடித்துப் பொடித்துச் சூரணித்து மேற்படி பாகில் தூவிக் கிண்டி 1/2 படி நெய்யும், தேன் 1/4 படியும் சேர்த்துக் கிண்டவும். இதனால் வெள்ளை, வெட்டை, அத்திசுரம் முதலிய நோய்களுடன் நீர்ச் சுருக்கு, நீர் எரிவு முதலியனவும் தீரும்.

## 10. புளியாரை நெய்

புளியாரைச் சாறு 1 படி, வன்னிச் சாறு 1 படி, பொன்னாங்காணிச்சாறு 2 படி; செவ்விளநீர் உப்பு, ஆவின் நெய், காராம் பசு பால் 5 சேர்; சீரகம், மாசிக் காய், அதிமதுரம் வகைக்கு 5 வராகன் எடை. இம்மூன்று சரக்குகளையும் பசும்பால்விட்டு அரைத்துப் பாலில் கரைத்து, சாறுகள், நெய், பால் எல்லாம் ஒன்றாகக் கலந்து

ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மெழுகுபதத்தில் வடித்து அதில் சாதிப் பத்திரி, ஏலம், வகைக்கு 2 1/2 வராகன் எடை, கற்கண்டு 1 பலம் இவைகளைப் பொடித்துத் தூவிக் கலந்து விடவும்.

பொட்டுக் கரண்டியளவு 2 வேளை 1 மண்டலம் உட்கொள்ள நீர் எரிச்சல், நீர்ச் சுருக்கு இவற்றுடன் பித்த வெட்டை, வாய்வு, மயக்கம் முதலியன தீரும்.

## 11. வெண்பூசணி கிருதம்

வெண்பூசணிக்காய்ச்சாறு 2 படி, தாழை விழுதுச் சாறு 1 படி, தென்னம்பூச்சாறு 1 படி, கற்றாழைச் சாறு 1 படி, செவ்விளநீர் 1 படி, ஆவின் நெய் 2 படி. இவைகளைப் பாத்திரத்தில் சேர்த்து, அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், திரிபலை, சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டாத்திப்பூ, கற்கடக சிங்கி, கொத்துமல்லி விதை, குரோசாணி ஓமம் இவை வகைக்கு 3 3/4 வராகன் எடை. இவைகளைப் பொடித்துப் பசும்பாலால் நன்றாக அரைத்து 2 படி பாலில் கலந்து மேற்படியில் ஊற்றி அடுப்பிலிட்டுப் பக்குவத்தில் எரித்து வடிகட்டி அதில் சீனிக்கற்கண்டு 2 பலம் பொடித்து போட்டுக் கலந்து விடவும்.

பொட்டுக் கரண்டியளவில் 2 வேளை உட்கொள்ள நீர் எரிச்சல், வலி, வெள்ளை, வெட்டை முதலியன தீரும்.

## 12 குங்கிலிய வெண்ணெய்

வெள்ளைக் குங்கிலியம் 5 பலம் நன்றாகப் பொடித்துக் கொள்ளவும். ஒரு சட்டியை அடுப்பிலேற்றி அதில் எண்ணெய் உழக்கு ஊற்றி, சிறு தீயில் இலேசாக எரித்துப் புகையாமல் கொதித்து வரும்பொழுது மேற்படி பொடியைத் தூவி நன்றாகக் கிண்டிப் பாகாக வரும்பொழுது, ஒரு சட்டியில் படி தண்ணீர் ஊற்றி அதில் குங்கிலியப் பாகை ஊற்றிக் கையினால் நன்றாகப் பிசைய வெண்ணெய் போலாகும். இதைத் திரட்டி எடுத்து வேறொரு பாத்திரத்தில் இளநீர் வைத்திருந்து அதில் போட்டுக் கையினால் பிசையத் தூய்மையுள்ள வெண்ணெய் போலாகும்.

இதனை வழித்து, ஏலரிசியைப் பொடித்துப் போட்டுப் புன்னைக் காயளவு 2 வேளை கொடுக்க நீர்க்கடுப்பு, மேக வெள்ளை, உட்காங்கை முதலியன தீரும்.

## 13. சகதேவித் தைலம்

தேவகந்தச்சாறு 1 படி, பசுநெய் 1 படி, எள் நெய் 1 படி, இவைகளை ஒன்றாகக் கலந்து அதில் அதிமதுரம், சந்தனம், நன்னாரி வேர், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், திப்பிலி மூலம், இலவங்கம், கடுகுரோகணி, நெய்தல் கிழங்கு இவை வகைக்கு 1

வராகன் எடை. பசுவின்பால் விட்டரைத்து, மேற்படிச் சாற்றில் கலந்து, அடுப்பிலிட்டு எரித்து, பதத்தில் வடித்து, காலை மாலை பொட்டுக் கரண்டி வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டுக் கொண்டும், 4 நாட்களுக்கு ஒரு முறை தலை முழுகிக் கொண்டும் வர கண் புகைச்சல், உடல் எரிச்சல், நீர் எரிச்சல், நீர்க்கடுப்பு, ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டாகின்ற வெள்ளை ஒழுக்கு முதலியன தீரும்.

### 14. மேகநாதத் தைலம்

பூவரசம்பட்டைச்சாறு, சோற்றுக் கற்றாழைச் சாறு, வெள்ளறுகுச்சாறு, பிரம்மதண்டுச் சாறு, வெள்ளை வெங்காயச்சாறு, சிற்றாமணக்கு நெய் இவை வகைக்கு 1 படி. இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து அதில் இரசக்கற்பூரம் 1 பலம் நன்றாகப் பொடித்துக் கலக்கவும். சிலாசத்து பற்பம் 1 பலம், கல்நார் பற்பம் 1 பலம் இவைகளையும் சேர்த்துக் கலக்கவும்.

அளவு: கால் முதல் 1 அவுன்சு. மூத்திரக்கிரிச்சர நோய்கள், மேகம், வெள்ளை, வெட்டை யாவும் தீரும். இச்சாபத்தியம்.

### 15. நீர்முள்ளிக் குடிநீர்

நெருஞ்சி, நெல்லிவற்றல், நீர்முள்ளி, பறங்கிச் சக்கை, மணத்தக்காளி வற்றல், சரக்கொன்றைப்புளி, சோம்பு, வெள்ளரிவித்து, சுரைக்கொடி, கடுக்காய், தான்றிக்காய்- இவை வகைக்கு ஒரு வராகன் எடை எடுத்துக் குடிநீர் விதிப்படி நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி, காலைமாலை 2 வேளையும் 1/2 ஆழாக்கு வீதம் தர நீரைப் பெருக்கிக் கழித்து நீர்க்கட்டு, நீரடைப்பு, சோபை முதலிய நோய்களை நீக்கும்.

## III

"அகத்தியர் வைத்திய சிந்தாமணி" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள சில சிகிச்சை முறைகளை இனிக் காணலாம்:

### 1. மகா ஏலாதிச் சூரணம்

ஏலரிசி, அதிமதுரம், தாமரைவளையம், நிலவேம்பு, முத்தக்காசு, கொத்துமல்லி, அகில், வெட்டிவேர், கோஷ்டம், சந்தனம், சடாமாஞ்சில், தண்ணீர் விட்டான் கிழங்கு, அமுக்கரா, நிலப்பனைக் கிழங்கு, சிற்றேலம், நன்னாரி, முந்திரிகை, இலவங்கம், நெருஞ்சில் வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசப்பத்திரி, நெய்தல் கிழங்கு, கறுஞ்சீரகம், சீரகம், சாதிக்காய், நெல்லிப்பருப்பு, கச்சோலம், எவச்சாரம், தக்கோலம் வகைக்கு 1/2 பலம்.

கஸ்தூரி, குங்குமப்பூ, கற்பூரம்-வகைக்கு 1/2 நிடகம்.

செய்முறை: சரக்குகளைச் சுத்திசெய்து காயவைத்து இடித்துச் சூரணித்துக் கடைச்சரக்குகளையும் சேர்த்து இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம்: சர்க்கரை.

தீரும் நோய்: மூத்திரக் கிரிச்சரம், பாண்டு, கை கால் எரிவு, மேகம், வாந்தி, என்புசுரம், பீனிசம் முதலியன.

## 2. யோகராச குக்குலு

மைசாட்சி குங்கிலியம் 100 பலம்

கற்கண்டு 5 பலம்

ஓமம், அசமதா ஓமம், செவ்வியம், வசம்பு சுட்ட சாம்பல், வாய்விடங்கம், சுக்கு, சிறுதேக்கு, சீரகம், கறுஞ்சீரகம், அதிவிடயம், கொடிவேலி, பெருங்காயம், கடுகு, யானைத் திப்பிலி, திப்பிலிமூலம், மருட் கிழங்கு, ஆடுதீண்டாப்பாளை வேர், கடுகுரோகணி வகைக்கு 1/8 பலம்.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு 3/4 பலம்.

செய்முறை: மேற்கண்ட சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து இடித்துச் சலித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: மூத்திரக் கிரிச்சரம், சூலை, நடுக்குவாதம், திமிர்வாதம், சோணிதவாதம் முதலியன.

## 3. கந்தகச் சூரணம்

கந்தகம் 6 பலம், சித்திரமூலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வாய்விடங்கம், ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சேராங்கொட்டை, சம எடை.

அனைத்தையும் சுத்தி செய்து தனித்தனியே இடித்துப் பொடித்துப் பின் அனைத்தையும் ஒன்று கலந்து துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

அனுபானம்: நெய், தேன், வெண்ணெய், சர்க்கரை.

தீரும் நோய்: மூத்திரக் கிரிச்சரத்துடன் குன்மம், குட்டம், மகோதரம், மலக்கட்டு இவை தீரும். உடல் பலம் உண்டாகும். தாது விருத்தியும் காயசித்தியும் உண்டாகும்.

## 4. கற்சூராதி சூரணம்

பேரீந்து, இந்துப்பு, சடாமாஞ்சில், மஞ்சள், சீரகம், கோஷ்டம், சந்தனம், தக்கோலம், குங்குமப்பூ, நெல்லிமுள்ளி, கொத்துமல்லி, சாதிக்காய், இலுப்பைப்பூ, அதிமதுரம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், தாளிசப்பத்திரி, அதிவிடயம், சிலாசத்து, கிரந்தி தகரம், திராட்சை, அமுக்கரா, கருங்காலிப்பட்டை, கூகைநீறு, மிளகு, வாழைப்பூ, அத்திப்பிஞ்சு, முத்தக்காசு, சீந்தில், ஆடாதோடை, வேப்பீர்க்கு, பறங்கிப்பட்டை, பொன்னாங்காணி, சிறுபீளைவேர், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், சிறுகீரை, நெருஞ்சில்வேர், குமிழ்வேர், செங்கழுநீர்க் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு- சம அளவு.

செய்முறை: சரக்குகளைச் சுத்தித்து இடித்துப் பொடியாக்கிச் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம்: நெருஞ்சில் குடிநீர், தாழை விழுது நீர், பச்சையரிசி கழுவியநீர்.

தீரும் நோய்: நீர்க்கட்டு, மூத்திரக் கிரிச்சரம், மேகம், யோனிச்சூலை, ஆண்குறி நோய்கள், கைகால் எரிச்சல் முதலியன.

## 5. பூசணிக்காய் நெய்

பூசணிக்காய் நீர், முசுமுசுக்கைச்சாறு, தாமரை வளையச் சாறு, தண்ணீர் விட்டான் சாறு, கரும்புச்சாறு, ஓரிலைத் தாமரைச் சாறு, நெய், பால் வகைக்கு 1 குறுணி.

கற்கச்சரக்குகள்: சிறுதேக்கு, சுக்கு, இலுப்பைப்பூ, அரத்தை, சந்தனம், நன்னாரி, சண்பகப்பூ, கடுக்காய், இலவங்கம், சிறுநாகப்பூ, ஏலம், கொத்துமல்லி, வெட்டிவேர், சாதிக்காய், விலாமிச்சம் வேர், அதிமதுரம், தாமரைத்தாது, கொட்டிக் கிழங்கு, சாத்திரபேதி, வெட்பாலையரிசி, சீந்தில் கிழங்கு, முந்திரிகை, கோஷ்டம், மஞ்சிட்டி வகைக்கு 3 கழஞ்சு.

செய்முறை: கற்கமாக மேற்படிச் சரக்குகளை அரைத்துச் சாறுகளுடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

அனுபானம்: சர்க்கரை.

தீரும் நோய்: மூத்திரக்கிரிச்சரம், உடல் இளைப்பு, தாது நட்டம், உள்வரட்சி, இரத்த மேகம்.

### 6. கதலிக்கந்த கிருதம்

வாழைக்கிழங்கு நீர், பசுநெய், பால், சந்தனம், மரமஞ்சள், திப்பிலி மூலம், முந்திரிகை, ஏலம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, விளாவரிசி, அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், அகில் -வகைக்கு 1 பலம்.

செய்முறை: கடைச்சரக்குகளைச் சூரணித்து வாழைக் கிழங்கு நீர் விட்டுக் கற்கமாக அரைத்து மற்ற சரக்குகளுடன் கலந்து 3 நாட்கள் காய்ச்சிவைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்: மூத்திரக் கிரிச்சரம், தலைசுற்றல், மேகம், கை கால் எரிவு இவை தீரும். பசி உண்டாகும். நல்ல பலம் உண்டாகும்.

### 7. சித்தபலாதித் தைலம்

சிற்றா முட்டி வேர்த்தோல், சிறுகீரை, கற்றாழை, சிறுபீளை, முடக்கறுத்தான் வகைக்கு 5 பலம்.

தண்ணீர், வெங்காயச் சாறு வகைக்கு 12 படி.

விளக்கெண்ணெய் 1 படி.

செய்முறை: இவற்றை ஒன்றாகக் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். இதுவே சித்த பலாதித் தைலம்.

சிலாசத்து, வெங்காரம், ஏலக்காய், கடுகுரோகணி, சீரகம், படிகாரம், வெள்ளரிவிதை- வகைக்கு ஒரு நிடகம். இவற்றைப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி சித்தபலாதித் தைலம் பொட்டுக் கரண்டி அளவும் தூள் செய்து வைக்கப்பட்டுள்ள பொடி வெருகடியளவும், அதே அளவு சர்க்கரையும் கலந்து உண்ணவேண்டும்.

தீரும் நோய்: மூத்திரக் கிரிச்சரம், மேகம், கழிச்சல் நோயில் உண்டாகும் நீர்ச்சுருக்கு இவை நீங்கும்.

### 8. மகா ஏலாதித் தைலம்

அத்தி, மகிழ், இலந்தை, ஆவாரை, மா, நெல்லி, கருவேல், நாவல், மருது, ஓதி, வெட்பாலை, குன்றி, வெள்வேல், புலித்துடக்கி, கடலழிஞ்சில், புரசு, அரளி, வறட்பூலா, கடம்பு, ஆல், அரசு, நீர்ப்பலா, ஏரழிஞ்சில், ஆத்தி ஆகிய பட்டைகள் வகைக்கு 50 பலம்.

வெட்டிவேர், கோரைக் கிழங்கு, அமுக்கரா, நிலப்பனைக் கிழங்கு, கோவை, வல்லாரை, நன்னாரி, சீந்தில், ஆவாரை, நெருஞ்சி இவ்வேர்கள் வகைக்கு- 20 பலம்.

தாமரை வளையம் 20 பலம்.

பட்டைகளை ஐந்தில் ஒரு பாகமாகவும் வேர்களை எட்டில் ஒரு பாகமாகவும் சுருக்கிக் குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

இத்துடன் நல்லெண்ணெய் 20 படி, பால் 40 படி சேர்த்துக் கொண்டு, அத்துடன் சந்தனம் 40 பலத்தைக் குடிநீரிட்டுச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கற்கச் சரக்குகள்: சாதிக்காய், ஏலம், சடாமாஞ்சில், இலவங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, மஞ்சள், செவ்வல்லிக் கொடி, அதிமதுரம், குக்கில், சந்தனம், செஞ்சந்தனம், சதகுப்பை, சிறுநாகப்பூ, கிரந்தி தகரம், மரமஞ்சள், சீரகம், கறுஞ்சீரகம், கோஷ்டம், வெள்ளை போளம், அகில்பட்டை, கடுக்காய், ஏறழிஞ்சில், செண்பகப்பூ, சரள தேவதாரு, தாளிசப் பத்திரி, மஞ்சிட்டி, பெருங்குரும்பை, சாதிப்பத்திரி, தேத்தாங் கொட்டை, சிறுகுமிழ் வேர், கஸ்தூரிமஞ்சள், சாம்பிராணி, தக்கோலம், கல்நார். கல்மதம், கோரோசனை வகைக்கு-5 பலம்.

இலவு, முள்ளிலவு, கருங்காலி, இலந்தை, வேம்பு, வில்வம், கருவேல், கொன்றை, வெள்வேல், ஆவாரை-பிசின்கள் வகைக்கு 2 பலம்.

சந்தனம், சீரகம் வகைக்கு 100 பலம்.

செங்கழுநீர், நெய்தல் கிழங்கு, வகைக்கு 2 பலம்.

தாமரை வளையம் 2 பலம்.

கற்கச் சரக்குகளை அரைத்து முன் மருந்துடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

பயன்படுத்தும் முறை: பாலில் கலந்து உள்ளுக்குச் சாப்பிடவும், தலை முழுகவும் உடலில் பூசவும் பயன்படும் .

தீரும் நோய்: நீரடைப்பு முதலிய நீர்நோய்கள், மூத்திரப்பாதையில் ஏற்படும் நோய்கள், மேகம் முதலியன தீரும்.

## 9. நீர்க்கட்டு நோய்க்குச் சில எளிய மருந்துகள்

1. பச்சைப்புனுகை 1 பணத்தளவு எடுத்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்க நீர்க்கட்டு நோய் நீங்கும்.

2. கற்பூரசிலாசத்து 1பலம் எடுத்து அனலில் வாட்டிப் பொடி செய்து எலுமிச்சம் பழச்சாற்றில் உண்ண நீர்க்கட்டு விடும்.

3. வெங்காரம், சங்கு, கருவங்கம், கற்பூரம் சம அளவு எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் குன்றிமணியளவு உருண்டை செய்து உண்ண நீர்க்கட்டு நீங்கும்.

4. செப்பு நெருஞ்சில், சிறு புள்ளடி, சிறு நெருஞ்சில், கண்டங்கத்தரி, தூதுவளை, மாவிலங்கு, சிறுபீளை வேர்- சம அளவு ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் சீரகம், ஏலம், மிளகு இவற்றைத் துணியில் முடிந்து போட்டுக் கொதிக்க வைத்துக் குடிநீரில் வெங்காரம் மற்றும் துணியில் உள்ள சரக்குகளையும் சேர்த்து அரைத்துக் குடிக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, கல்லடைப்பு நீங்கும்.

5. வெங்காரத்தைப் பொடித்து முருங்கையிலைச் சாற்றில் உண்ண நீர்க்கட்டு நீங்கும்.

6. பெரும்பீளை வேரை எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து எலுமிச்சம்பழ அளவு உண்ண நீர்க்கட்டு, கல்லடைப்பு தீரும்.

7. கோவைக் கிழங்கை உலர்த்திப் பொடி செய்து, நெய்யில் குழைத்துத் தின்ன நீர்க்கடுப்பு, மேகம், பெரும்பாடு தீரும்.

# IV

"தேரையர் மகா கரிசலில்" கூறப்பட்டுள்ள சில சிகிச்சை முறைகள்:

## 1. கொன்றைக் கிருதம்

கொன்றை வேர் 2 பங்கு; வெட்டிவேர், மறுவேர், கொழுஞ்சி வேர், பலாவேர், வேங்கைவேர், மாவேர், நாரத்தை வேர், கொங்குவேர், சிவகரந்தை வேர், கொல்லிவேர், சங்கம்வேர், கொட்டைக் கரந்தை வேர், உத்தாமணிவேர், கோவைவேர், புன்னைவேர், ஆடுதீண்டாப்பாளை வேர், கொடிவேலிவேர், மயிற்கொன்றைவேர் ஆகிய இவ்வேர்களையெல்லாம் கொன்றை வேருக்குச் சம எடை எடுத்துக் கொண்டு, நன்றாக உலர வைத்து இடித்துப் பொடியாக்கித் தேவையான அளவு நீர்விட்டுக் குடிநீர் செய்து கொப்பரைத் தேங்காய், மிளகு, திப்பிலி, சுக்கு, ஏலம், சித்திரமூலம், கோங்கு, கிராம்பு, இலவங்கப்பட்டை ஆகிய கற்கத் திரவியங்களை அரைத்துக் கலந்து இரு பங்கு நெய் சேர்த்துக் கடுகு பதத்தில் காய்ச்சி எடுக்க வேண்டும்.

தீரும் நோய்: நீர்ச்சுருக்கு நோய், மேகப்பிணி, சொறி நோய், கபநோய், கொங்கையைப் பற்றிய நோய்கள் முதலியன.

**2. கோடாசலக் குளிகை**

திரிகடுகு, திரிபலா, கோஷ்டம், தாளகம், பவழம், கோவை, நிலப்பனை, இலந்தை, தும்பை, பிச்சிப்பூ, கஞ்சா இவற்றின் வேர்கள் சம அளவு எடுத்து அவற்றில் சாணிநீர் விட்டு ஊறி உலர்ந்தபின் முறைதவறாமல் அரைத்துப், பின் கோங்கு இரசத்தில் 2 நாள் அரைத்து, பின் கோபுரந்தாங்கி இலைச் சாற்றினால் 2 நாள் அரைத்து, பின் அழிஞ்சில் இரசத்தால் 2 நாள் அரைத்துப் பின் பன்றியின் சிறுநீரால் 2 நாள் அரைத்துப் பின் கோழி முட்டைக் கருவால் 2 நாள் அரைத்து, குயில் முட்டைக் கருவினால் 2 நாள் அரைத்து மாத்திரையாக உருட்டிக் காயவைத்து, அதனைக் கோவை இலைச் சாற்றில் தக்க அளவில் சாப்பிட நீர்க்கட்டு நோய் நீங்கும்.

**3. நீர்க்கடம்பு குடிநீர்**

நீர்க்கடம்பு, கற்றாழஞ்சோறு, மிளகு- இவைகளைச் சேர்த்துக் குடிநீர் செய்து உட்கொள்ள நீர்க்கட்டு நோய் நீங்கும்.

நீர்க்கடம்பு, கற்றாழஞ்சோறு, சுக்கு, திப்பிலி -இவற்றைக் குடிநீர் செய்து உட்கொள்ள நீரிழிவு, நீர்க்கட்டு என்னும் இருநோயும் நீங்கும்.

**நீர் நோய்களில் அனுசரிக்க வேண்டிய யோகாசன முறைகள்**

சொட்டு மூத்திரம் அல்லது அதி மூத்திர நோய்களில் கீழ்க்கண்ட யோகா முறைகள் பயன்தரும்.

1. சிரசாசனம், 2. சர்வாங்காசனம், 3. சப்த வீராசனம், 4. மத்ஸ்யாசனம், 5. சிம்மாசனம், 6. மகா முத்ரா, 7. பத்ரகோணாசனம், 8. உத்தியானா, 9. நாடி சோதனா பிராணாயாமம் (அந்தர கும்பகம் மற்றும் பாகிய கும்பகத்துடன்).

சிறுநீரில் சுக்கிலம் கலந்து இழியும் காலங்களில் கீழ்க்காணும் யோகாசன முறைகளைச் செய்யலாம்.

1. சிரசாசனம், 2. சர்வாங்காசனம் 3. பட்சிமோத்தாசனம், 4. பத்ர கோணாசனம், 5. மூலபந்தாசனம், 6. கண்டாசனம், 7. கும்பகமில்லாத உச்சயினி மற்றும் நாடி சோதனா பிராணாயமம் முதலியன.

## உணவு முறைகள்

கல்லடைப்பு நோயில் நீரைப்பெருக்கி நீர்ப்பையைக் கழுவுவது போன்று அங்கு சேர்ந்துள்ள சிறு கற்களை வெளியாக்கிச் சிறு நீரைப் பெருக்கக் கூடியதான உணவுகளைக் கொடுத்தல் வேண்டும்.

கற்களை உண்டாக்கக்கூடிய உப்புவகைகளைப் பெருக்கும் காய்கறிகளான தக்காளி, முட்டைகோஸ், வெள்ளைக் காலி பிளவர், முதலியவற்றை நீக்கவேண்டும். உப்பு கலந்த நீர்களை அருந்தாதிருத்தல் வேண்டும்.

நீரடைப்பு நோயில் எளிதில் செரிக்கும் உணவுகளையே உட்கொள்ளல் வேண்டும். மிகுந்த கார்ப்பு, புளிப்பு நீக்குதல் நன்று. குறுவை, கார் அல்லது மணக்கத்தை அரிசியிலான சோறும், வெண்டை, பீர்க்கு, புடல், வாழைப்பூ, அத்திப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முள்ளங்கி, சிறுகீரை, தாளிக்கீரை, பசலைக் கீரை, காசினி, வெந்தயக் கீரை ஆகியவற்றையும் உண்ணலாம். மீன், நண்டு வகைகள் ஆகாது. கொதிநீரில் பனங் கற்கண்டு கூட்டிக் கொள்ள நற்பலன் தரும். காபி,டீ அருந்துதல் ஆகாது.

நீர்க்கட்டு நோயில் நீரைப்பெருக்கும் உணவு வகைகளைக் கொடுத்தல் வேண்டும். பொரிக்கஞ்சி, பார்லி அரிசிக் கஞ்சி, இரண்டு முறை வடித்த சோற்றை நன்றாய்க் கடைந்து வடித்த கஞ்சி முதலியவைகளைக் கொடுக்கலாம். அத்துடன் சிறிது சோம்பு, நெருஞ்சில் கூட்டிக் காய்த்து வடித்துக் கொடுத்தல் நலம்.

நோய் வன்மை குறைந்து வரும்பொழுது உணவுப் பொருட்களைச் சிறுகச் சிறுக ஏற்றிக் கொண்டே வருதல் நன்று. நீரைப் பெருக்கும் உணவுப் பொருட்களையும் உடற்கு ஊட்டம் தரும் பொருட்களையும் படிப்படியே சேர்க்க வேண்டும். மிகுந்த காரம், புளிப்பு, உப்பு சேர்ந்த பொருட்கள் ஆகாது.

# 6

# பெருவயிறு நோய்

## முன்னுரை

இதனைப் பெரும்பண்டி, மகோதரம் என்றும் அழைப்பர். மேலும் நீராம்பல், பிறநீர்க்கோவை, வெப்புப்பாவை, கவுசி, கெண்டை, நீராமை, பிலீகை ஆகிய சொற்களும் பெருவயிற்று நோயின் தன்மைகளையே உணர்த்தும்.

"சதகநாடியில்" கூறப்பட்டவாறு பெருவயிறு நோய் வாதநாடி தன்னிலையில் பிறழ்ந்து நடப்பதாலும், வாதம் என்னும் தாது உடலில் தன்னிலை மீறி நடப்பதாலும் உண்டாகும் நோய் என்று உணரப்படுகிறது. எனவேதான் அந்நோய் பற்றி இங்கு விளக்க முற்பட்டுள்ளோம்.

## நோய் இயல்

வயிறு நாளுக்குநாள் இயற்கைக்கு மாறாகப் பெருத்துக் கொண்டே வந்து அதனுள் நீர் சுரந்து வருவதும், வயிற்றினுள் உள்ள உறுப்புகளாகிய ஈரல்கள், குடல், கருப்பையின் கழலை ஆகியவற்றில் யாதேனுமொன்று பெருத்து வருதலுமான இயல்புடையது இந்நோய் ஆகும்.

இந்நோயைப் பற்றி விளக்கமுற்பட்ட "ஆத்மரட்சாமிர்தம்" என்னும் நூல் இந்நோயை உதர ரோகம் என்னும் தலைப்பின் கீழ் கொண்டுவந்துள்ளது. அந்நூலின் கூற்று பின்வருமாறு:

❖ தேகம் வெளுத்து வற்றிக் கருவிகள் மந்தித்து வயிறு பெருக்கும். அன்னம் செல்லாது; மலம் தீயும். இது பெருவயிறு எனப்படும்.

❖ அக்கினி அதிகரித்து நீருண்டாகித் தேகம் கனத்து வயிற்றில் வாயுவும் சலமும் கோர்த்துப் பெருக்கும். இராக்காலத்தில் வாயு கலைந்து துன்பம்

மிகச் செய்யும். நெஞ்சுவரண்டு தாகம் மிகும், ஆயாசம் களைப்பு உண்டாகும். இதனை மகோதரம் என்பர்.

- ❖ தேகம் வெளுத்து வற்றி மார்பின் கீழ் வயிறும் காலும் வீங்கிப் புளிப்பிலும் பல தின்பண்டங்களிலும் இச்சையுண்டானால் நீராம்பல் எனப்படும்.
- ❖ தேகத்தில் அக்கினி அதிகப்பட்டு நீர்க்கோர்த்துக் கண்டவர்கள் யாவரும் பயப்படும்படி வீக்கம் கண்டால் பிற நீர்க்கோவை எனப் பெயர்பெறும்.
- ❖ சுரம், வாயு அதிகரித்து, உடல் காயம் வற்றிக் கனல் போல வெதும்பி வயிற்றில் கட்டியுண்டாகி இடது புறத்தில் புரண்டு ஈரலை முட்டி உதரம் பொருமிச் சோர்வு, மயக்கம், நித்திரைபங்கம், அன்னத் துவேஷங்கள் கண்டு கைப்பு, புளிப்பு மிக விரும்பினால் வெப்புப்பாவை என்று அழைக்கப்படும்.
- ❖ நடுவயிற்றிலாவது, வலது பக்கத்திலாவது கட்டி போல் திரண்டு நலிந்து வயிறு ஊதி வலித்தால் கவுசி என்று பெயர் பெறும்.
- ❖ இடது பக்கத்தில் அதுபோல் கண்டால் கெண்டை எனப்படும்.
- ❖ வயிற்றில் ஆமைபோல் கட்டி உண்டாகி, உடல் மருகி, அக்கினி சுவாலையாயிருந்து அன்னம் செல்லாதிருந்தால் நீராமை எனப்படும்.
- ❖ வயிற்றில் ஈரலைப் பற்றிக் குழவிபோல் திரண்டு குறுக்கே கிடந்து புரளும்; மேல் நோக்கி ஏறும்; ஓக்காளிக்கும்; அன்னத்தைத் தள்ளும்; உடல் வற்றிப் பலம் கெடும்; பந்தமுறும்; புளித்தேப்பம் இடும், இது பிலீகை என்று சொல்லப்படும்.

**நோய்க் காரணங்கள்**

- ❖ உமி,கல், மண், மலர், முள் இவைகள் கலந்த உணவை உட்கொள்ளுதல்
- ❖ சுனைநீர், குற்றமுள்ள நீர், வண்டு மொய்த்த நீர், தேரை தங்கிய நீர், கள், காராயம் இவைகளை அடிக்கடி பருகல்
- ❖ மருந்தீட்டாலும்
- ❖ மேக நோயாலும்
- ❖ செம்பின் களிம்பாலும்
- ❖ ரச, கந்தப் பாடாணங்களினால் ஆன மருந்துகளை உடல் வன்மையறியாமல் அளவு கடந்து உண்பதாலும்

- செறியாமையாலும் இந்நோய் உண்டாகும் என்பர்.
- வயிற்றில் கட்டி தோன்றல் வயிற்றினுள் நீர், சீழ், இரத்தம், மாமிசம், சதை ஆகியன அதிகரித்துப்பெருத்துக் காணப்படுவதாலும் இந்நோய் உண்டாகும்.
- வயிற்றில் கல்லீரல், மண்ணீரல் ஆகியன பெருத்து வளர்வதாலும் இந்நோய் தோன்றும்.
- சிறுநீரக நோய்கள், தமரக நோய்கள் இவற்றாலும் இந்நோய் தோன்றும்.
- மேலும் பலரும் வீற்றிருக்கும் உயர் சபையில் உண்மையை விடுத்துப் பலவாறாகத் திரித்துப் பேசுபவர்களுக்கும், அற்பப் பொருள்களுக்காக அநியாயம் செய்பவர்களுக்கும், ஆலயத்தில் மோசம் செய்தவர்களுக்கும்,மற்றவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளைக் கிடைக்காமல் செய்து தான் அதைப் பறித்துக் கொள்ள முயல்பவர்களுக்கும், பலரும் உணவருந்தும் பந்திகளில் கெடுதல் விளைவிப்போருக்கும், அற்பப் பலத்தினை உடையவர்களை வஞ்சனை செய்பவர்களுக்கும் இந்நோய் வந்து சேரும் என்று நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**நோய் வகை**

"யூகி வைத்திய சிந்தாமணி 800" என்னும் நூலில் இந்நோய் 32வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1.வளிப் பெருவயிறு
2. அழல் பெருவயிறு
3. ஐயப் பெருவயிறு
4. வளிஜயப் பெருவயிறு
5. பித்தக் கபப் பெருவயிறு
6. முக்குற்றப் பெருவயிறு
7. கல் பெருவயிறு
8. வில் பெருவயிறு
9. வழுவைப் பெருவயிறு
10. நழுவைப் பெருவயிறு

11. நீராம்பல் பெருவயிறு
12. ஊராம்பல் பெருவயிறு
13. வெப்புப்பாவைப் பெருவயிறு
14. குலைமுட்டிப் பெருவயிறு
15. கீழ்க் கவிசைப் பெருவயிறு
16. மேல் கவிசைப் பெருவயிறு
17. பக்ககவிசைப் பெருவயிறு
18. பழுக் கவிசைப் பெருவயிறு
19. மாப்பெருவயிறு
20. சூல் பெருவயிறு
21. வல்லைப் பெருவயிறு
22. நச்சுப் பெருவயிறு
23. பாண்டுப் பெருவயிறு
24. சோபைப் பெருவயிறு
25. காமாலைப் பெருவயிறு
26. குன்மப் பெருவயிறு
27. உதரப் பெருவயிறு
28. கூர்மப் பெருவயிறு
29. பிலீகைப் பெருவயிறு
30. சுரப் பெருவயிறு
31. நீர்ப் பெருவயிறு
32. மாங்கிசப் பெருவயிறு

**நோய்க் குறிகுணங்கள்**

**1. வளிப் பெருவயிறு**

- ❖ இந்நோயில் கண்கள் ஆகாயத்தின் நிறத்தைப் போன்று கருமையாகக் காணும்
- ❖ சுரம் காய்ந்து அதிக நீர் வேட்கை உண்டாகும்
- ❖ அதிசாரம் போன்று வயிறு கழியும்

- உடல் வெதும்பி மிகுந்த வியர்வை உண்டாகும்
- உடல் முழுவதும் மஞ்சள் நிறமடையும்
- தோல் சுறசுறப்புடன் காணும்
- வயிறு துருத்தி போலாகி நரம்புகள் புடைத்து மயிற்கண் போல் பல நிறங்களை உடையதாகும்.
- உண்ட உணவு செரிக்காமல் மலம் கழியும்.

## 2. அழல் பெருவயிறு

- உடல் வெளுத்துக் காணும்.
- உடல் மெலிந்து வற்றிப் பலமிழந்து காணும்.
- உணவில் விருப்பமில்லாதிருக்கும்.
- அடி வயிற்றில் இரைச்சலும் உப்புசமுமாகக் காணப்படும்.
- முகம் பிணத்தின் முகத்தைப் போல் காணப்படும்.
- புளியேப்பம் உண்டாவதுடன் பசியும் எடுக்கும்.
- அடிவயிற்றில் வீக்கம் காணும்.
- மனச் சஞ்சலம் உண்டாகும்.

## 3. ஐயப் பெருவயிறு

- உடல் நடுக்கல் ஏற்படும்
- உணவில் உருசியின்மை காணும்.
- உறக்கமின்மை உண்டாகும்.
- குளிர்க் காய்ச்சல் தோன்றும்.
- இரைப்பு உண்டாகும்.
- மிக்க சினம் கொள்வர்.
- வயிறு உப்புசம் காணும்.
- உடல் பஞ்சுபோல் மிக வெளுக்கும்.
- சிறுநீரும் மலமும் கடுத்து இழியும்.
- இருமலும் கோழைகக்கலும் காணும்.

## 4. வளி ஐயப் பெருவயிறு

- உடல் வெளுத்து, நொந்து கடுப்புடன் காணும்

- வயிற்று மடிப்புகள் மறையும்படி வயிறு வீங்கிக் காணும்.
- வயிற்றின் நரம்புகள் புடைத்து விம்மி மேலெழுந்து காணும்.
- வாயில் மிகவும் துர்நாற்றம் வீசும்.
- அடிவயிறு பேரொலி செய்யும். எனினும் மலம் வெளியாகாது.
- விதைகள் பெரிதும் வீங்கிக் காணும்.

## 5. அழல் ஐயப் பெருவயிறு

- இந்நோயில் நாடி முதல் மார்பு வரை வயிறு பிதுங்கலாக மிகவும் புடைத்துக் காணும்.
- வயிற்றின் உள்ளே உள்ள காற்று வெளியே செல்லாமல் தம்பித்துக் காணும்.
- மலம் கட்டும்.
- சிறுநீர் குறைந்து இழியும்.
- மார்பில் வலிக்கும்.
- மூளையில் பாதிப்பை உண்டாக்கிக் கண்ணின் ஒளியைக் கெடச் செய்யும்.
- உடல், கை கால்கள் வீங்கிக் காணும்.

## 6. முக்குற்றப் பெருவயிறு

- உடல் மஞ்சளித்துக் காணும்.
- வாத நாடி படபடத்து நடக்கும்.
- கண் பஞ்சுபோல் வெளுத்துக் கண்ணீர் வடிந்து கொண்டே இருக்கும்.
- உடல் முழுதும் பெருத்து, மிகவும் வீங்கிக் காணும்.
- கை, கால்கள் மிக மெலிந்து வற்றிக் காணும்.
- உடல் வற்றி வயிறு வீங்கிக் காணும்.
- தலை சுற்றல், மயக்கம் காணும்.

## 7. கல் பெருவயிறு

- மேல் வயிறு கல்போல் கடினப் பட்டு வீங்கும்.
- உடல் மஞ்சளித்து வீங்கும்.
- உணவு செல்லாது.

- இருமல், இளைப்புக் காணும்.
- முகம் கறுத்து இறுகிக் காணும்.
- வயிற்று நரம்பு புடைத்துப் பசுமை நிறமடையும்.
- உடல் நாளுக்கு நாள் வெளுக்கும்.
- சிறுநீரும், மலமும் சரியாக இழியாமல் சுருங்கும்.

## 8. வில் பெருவயிறு

- வானத்தின் வில்போல வயிறானது குவிந்து வளைந்து அழுத்தாமாயிருக்கும்.
- மேல் வயிறு வலித்துக் கடுத்து உப்புசத்துடன் இரையும்.
- விரை வீங்கிக் காணும்.
- சிறுநீரும் மலமும் அளவில் சுருங்கி, மிகவும் தாங்க முடியாத வலியோடு கழியும்.
- நீர் வேட்கை அதிகம் உண்டாகும்.
- மனக் கலக்கம் காணும்.
- மயக்கம் உண்டாகும்.

## 9. வழுவைப் பெருவயிறு

- நீர் ஊற்று போல் வயிற்றில் தண்ணீர் பெருகித் தோல்பை போலத் தளதளத்து வீங்கிக் காணும்.
- அந்நீர் நாளுக்கு நாள் சுரந்து மேல்நோக்கி, கை, கால்களை மரம்போல் திமிர்க்க செய்யும்
- வயிற்றினுள் சோற்றுக்குப் பதில் மாமிசத்தை அடைத்தாற்போலக் காணும்.
- பசியைக் கெடுத்துப் படுக்கையில் தங்காது வருந்தச் செய்யும்.
- சோற்றைக் காணும் போது வெறுப்புண்டாகும்.

## 10. நழுவைப் பெருவயிறு

- அடிவயிற்றில் பந்தைப்போல் உருண்டு திரண்டு ஒரு கட்டி காணும்.
- அதை அழுத்திப் பார்க்க ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நழுவிப் போகும்.

- மேல் வயிற்றில் தீயைப் போல அனலையும் எரிச்சலையும் உண்டாக்கும்.
- வன்மை குறைந்து மேல்மூச்சு வாங்கும்.
- சரியாக நடக்க முடியாது.
- தாபமும், தளர்ச்சியும் காணும்.
- தாங்க முடியாத உடல் எரிச்சல், தளர்ச்சி, நா வறட்சி, நெஞ்சு புண்ணாதல் முதலியன தோன்றும்.

## 11. நீராம்பல் பெருவயிறு

- நாவறட்சியுடன் இருமல் காணும்.
- அடிவயிறு கதித்து விம்மிக் காணும்.
- கடைக்கண் மிகவும் வெளுத்துக் காணும்.
- புறங்கால் அதைத்து வீங்கிக் காணும்.
- மூச்சு விடுவதற்குச் சிரமம் ஏற்படுவதுடன் மயக்கமும் உண்டாகும்.
- மலம் மிகவும் இளகிக் கழிச்சல் போலாகும்.
- கால் கைகள் நீட்டமடக்க முடியாதிருக்கும்.
- உடல் தளர்ச்சி, வடிவு வேறாதல் முதலிய குறிகுணங்கள் காணும்.

## 12. ஊராம்பல் பெருவயிறு

- மேல் வயிறு பொருமிக் கொண்டு மிக்கத் துன்பம் விளைவிக்கும்.
- உடல் குன்றி, மனத் துயரத்தை ஏற்படுத்தும்.
- மயக்கமும் தியக்கமும் உண்டாகும்.
- முகம் வியர்த்து வெளுத்து நொந்து காணும்
- உடல் வெப்பத்தினால் வற்றிப் போகும்.
- தலை கனத்துக் காணும்.
- அடிக்கடி சினம் கொள்ளல் முதலிய குறிகுணங்களை ஏற்படுத்தும்.

## 13. வெப்புப்பாவைப் பெருவயிறு

- அடிக்கடி சினத்துடன் பேசச் செய்யும்.
- வயிற்றுள் காற்று சேர்ந்து வயிறு மிக உப்பிக் காணும்.
- உடல் அதிர்ந்து காணும்.
- கைப்பும், புளிப்பும் உள்ள பொருட்களில் வெறுப்புண்டாகும்.

- நாவில் உப்புச் சுவை உள்ளதுபோல் தோன்றும்.
- கல்போல உடம்பெங்கும் கனத்துக் காணும்.
- வயிறு புரண்டு வெதும்பும்.
- விலாப் பக்கங்களில் கட்டி போல் எழும்.

## 14. குலைமுட்டிப் பெருவயிறு

- அம்மிக் குழவி போல் கழலை அடிவயிற்றின் பக்கத்தில் தோன்றிப் பாய்ந்து வலிக்கும்.
- உணவு செல்லாது.
- அபானத்தை இறுக்கி, மலத்தைக் கட்டச் செய்யும்.
- உடல் முழுதும் வற்றிக் கருகிக் காணும்.
- தலை, முகம், கை, கால் வீக்கம் உண்டாகும்.
- மூச்சு, குரல் கம்மும்.

## 15. கீழ்க் கவிசைப் பெருவயிறு

- அடிவயிற்றில் வில்லைப் போலக் கட்டி உண்டாகி வயிறு வீங்கிக் காணும்.
- மேல் வயிறு வில்போலக் கனத்து வலி ஏற்படும்.
- மூட்டுகள் தோறும் குடைச்சல் உண்டாகும்.
- மனம் மிகவும் நொந்து, பெருமூச்சு அடையச் செய்யும்.
- வாய் பிதற்றல், மனதில் தோன்றியபடியெல்லாம் பேசுதல்.
- மலம், சிறுநீர்ச் சுருங்கல் முதலிய குறிகுணங்கள் காணும்.

## 16. மேல் கவிசைப் பெருவயிறு

- இந்நோயில் வயிற்றுப் பக்கம் உள்ள ஊன் திரட்சிகள் எல்லாம் திரண்டு மேல் வயிற்றை வில்லைப் போல் வளையச் செய்யும்.
- வயிற்றின் நரம்பு, தோல் யாவும் சுருங்கிக் காணும்.
- படபடப்பு, பெருமூச்சு முதலியன உண்டாகும்.
- மார்பில் அடைப்பதுடன், குத்தல் வலி காணும்.
- வாய் குமட்டி, உமிழ் நீர் மிகுதியாக வடியும்.
- உணவில் வெறுப்புண்டாகும் ஆகிய இக்குறிகுணங்கள் காணும்.

## 17. பக்கக் கவிசைப் பெருவயிறு

- பக்கங்களில் கவிசை (கட்டி) போல் பற்றிக் காணும்
- வயிறு கனத்துக் கல்போல் காணும்.
- அடிவயிற்றில் குமுறல் உண்டாகும்.
- மிகுந்த தாகமும், உடல் எரிச்சலும் காணும்.
- வயிறு பொருமி உப்பும்.
- புளித்தேப்பம், நெஞ்சில் எரிச்சல் உண்டாகும்.
- மலமும் சிறுநீரும் சுருங்கிக் காணும்.

## 18. பழுக் கவிசைப் பெருவயிறு

- இந்நோயில் உடலின்கண் அமைந்த பழுவென்பு முள்ளைப் போல் வயிற்றுள் எழும்பி, வயிறு முழுமையும் கனத்து விம்மும்.
- அதனால் உப்புசமும் மேல் மூச்சம் உண்டாகும்.
- அதிக தாபத்தையும் உறக்கத்தையும் ஏற்படுத்தும்.
- அன்னம் ஏற்றுக் கொள்ளாது.
- வயிற்றுள் அடிக்கடி காற்றுக் கூடி வீங்கும்.
- உண்ட சிறு உணவும் செரியாமல், உடல் ஊதி மூச்சுத் திணறச் செய்யும்.

## 19. மாப்பெருவயிறு

- இந்நோயில் மந்தம் உண்டாகி, உணவு கொள்ள முடியாமல் செய்வதன்றி, சிறிது உண்ணினும் அது செரியாமல், உடலின் குருதி வன்மை குறைந்து, உடல் வற்றிக் காணும்.
- வயிற்றின் நரம்புகள் புடைத்து வெளியாகி, வயிறு முழுவதும் நாளுக்கு நாள் பெரிதும் வீங்கிக் கொண்டேவரும்.
- வீக்கம் எளிதில் வாடாது, மூச்சுத் திணறலும் உண்டாகும்.
- மலம் கட்டும்.
- அடிக்கடி மயக்கம் உண்டாகும்.
- வயிற்றில் சுரந்து வீங்கிய நீரை வெளிப்படுத்துவதற்குச் செய்யப்படும் எந்த மருத்துவத்திற்கும் அது குறையாமல் கிணற்று நீர் சுரப்பது போல் சுரந்து கொண்டே இருக்கும்.

## 20. சூல் பெருவயிறு

- ❖ பெண்கள் சூல் கொண்ட பொழுது வரும் நோயாகும்.
- ❖ மனவருத்தம் மிகவும் உண்டாகி மயக்கம் ஏற்படும்.
- ❖ உடல் முழுதும் அழன்று காணும்.
- ❖ உணவு செல்லாது.
- ❖ மிகு நீர்வேட்கை உண்டாகும்.
- ❖ கை, கால் மூட்டுகள் வீங்கும்.
- ❖ உடலில் சுரம் தோன்றி,
- ❖ உருசியின்மை உண்டாகும்.
- ❖ உடல் முழுதும் உளைச்சலுடன் நோகும் என்னும் குறிகுணங்களைக் காட்டி வயிறு ஊதி நீர் சுரக்கும்.

## 21. வல்லைப் பெருவயிறு

- ❖ இந்நோயில் உந்திக்கும் மார்பு என்புக்கும் நடுவில் உள்ளங்கை அகலமுள்ள கட்டி தமர்கொண்டு அடைத்தாற் போல் அடைத்துக் கொண்டு, கருங்கல்லைப் போலக் கடினமாகக் காணும்.
- ❖ அதனால் உணவு செல்லாமை
- ❖ சுடுநீரின்மேல் இச்சைகொள்ளல்
- ❖ கால் கைகள் வெளுத்துச் சத்தற்றுப் போதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

## 22. நச்சுப் பெருவயிறு

- ❖ உடல் மெலிந்து விதைகள் வீங்கித் தளர்ந்து காணும்.
- ❖ பிறரோடு துடுக்காகவும் படபடத்தும் பேசச் செய்யும்.
- ❖ எப்போதும் மனத்துயரத்துடன் காணப்படும்.
- ❖ உடல் மிக நலிந்து திமிர்த்தலும் காணும்.
- ❖ உடல் நடுக்கலும் தோன்றும்.

## 23. பாண்டுப் பெருவயிறு

- ❖ இந்நோயில் உடலின் குருதிவன்மை குறைந்து, உடல் முழுதும் வீங்கி, முகத்தின் நிறம் வேறுபாடடைந்து, நாடி சரியாக நடைபெறாது.

- ❖ மயிர் சிவந்திருக்கும்.
- ❖ இரத்தமில்லாமல் உடல் மெலிந்து என்புக்கூடாகி நடக்கவும் முடியாதிருக்கும்.
- ❖ பெருமூச்சு விடுதல், புறங்கால் வீங்குதல் முதலியன காணும்.
- ❖ மயிலைப் போன்று கண்களை மூடிக் கொண்டேயிருப்பர்.
- ❖ முகம் குளுப்பை போல் வீங்கும்.
- ❖ வயிறு பெருத்துக் கொண்டே வரும்.

## 24. சோபைப் பெருவயிறு

- ❖ இந்நோயில் மேல் வயிறு அழுத்தமாயும் அடிவயிறு குழைந்து உப்பியும் காணும்.
- ❖ கை, கால்கள், விரை இவையாவும் வீங்கும்.
- ❖ மேல்மூச்சு, இருமல், தாகம், உடம்பெல்லாம் குளிர்தல் முதலியன காணும்.
- ❖ சிறுநீரும் மலமும் சுருங்கிப்போகும்.

## 25. காமாலைப் பெருவயிறு

- ❖ இந்நோயில் காமாலை நோய் போல உடல் முழுதும் மஞ்சளித்து, உடல் நடுக்கத்தோடு, குளிர்ச்சி உண்டாகும்.
- ❖ மூக்கு, முகம், மார்பு இவைகளில் வியர்வை உண்டாகும்.
- ❖ உடல் முழுவதும் வீங்குவதோடு, புறங்காலும் வீங்கிக் காணும்.
- ❖ அடிவயிறு மிகவும் சுருங்கி உளைந்து காணும்.
- ❖ சுரமும், கோழையும் தோன்றும்.
- ❖ சுகமான உறக்கமிராது.
- ❖ தலை வலிக்கும்.
- ❖ மனம் மிகச் சலித்துக் காணும்.

## 26. குன்மப் பெருவயிறு

- ❖ உண்ட உணவு செரியாமல் வயிற்றில் குத்துதல்
- ❖ குடலைப் புரட்டி வலித்தல்
- ❖ வாந்தி உண்டாதல்

- அசீரணத்துடன் பேதி உண்டாதல்
- விலாப்பக்கம், இடுப்பு, வயிறு ஆகிய இடங்கள் வீங்கிக் கல்லைப் போலக் கடினப்பட்டு காணப்படுதல்.
- சிறுநீர் பசுவின் நீர்போல் இறங்கல் என்பன குன்மப் பெருவயிற்றின் குணங்களாகும்.

## 27. உதரப் பெருவயிறு

- நா வறட்சி
- கண் சிவத்தல்
- வயிற்றுள் காற்றுக் கூடி வயிறு உப்புதல்
- நீர்வேட்கை
- பசியின்றி வயிறு கனத்திருத்தல்
- மலம் போகாதிருத்தல்
- அடிவயிற்றிலிருந்து மார்பு, கழுத்து வரையிலும் வயிறு ஒரே வீக்கமாகக் காணப்படுதல் எனும் குறிகுணங்கள் காணும்.

## 28. கூர்மப் பெருவயிறு

- இந்நோயில் கண்களின் பசை உலர்ந்து வறட்சியடைந்து, இருகண்களும் சிவந்து சுருங்கிக் காணும்.
- இருமல், இளைப்பு, நீர்வேட்கை முதலியன உண்டாகும்
- வயிற்றில் ஆமை போலக் கட்டி உண்டாகும்.
- உணவு செல்லாது.
- பலம் குன்றிக் காணும்.
- வயிற்றில் இரைச்சலுடன் குமுறலும் உண்டாகும்.

## 29. பிலீகைப் பெருவயிறு

- இந்நோயில் உடலைத் தொட்டுப் பார்க்க ஆமைஓடு போன்று சுரசுரத்துக் காணும்.
- அடிக்கடி மலமும் சிறுநீரும் இழியும்.
- அபான வாயு மிகுந்து காணும்.
- உடல் முழுதும் வீங்காமல் சில இடங்களில் மட்டும் வீங்கும்.

- உணவை மிகுதியாக உண்ணச் செய்யும்.
- சிறுநீர் மிகுதியாகப் போனாலும் மயக்கம் ஏதும் ஏற்படுவதில்லை.
- கண்களில் இரத்தம் காணும்.

### 30. சுரப் பெருவயிறு

- காலோடு வயிறு பொதிந்து புறங்காலும் கணுக்காலும் வீங்கத் தொடங்கும்.
- அதற்கு மேல் மார்பு, பிடரி, இவற்றில் பச்சை நரம்பு, புடைத்துத் தோன்றி, வயிறு மிகப் பொருமி வீங்கும்.
- சுரமும் அசதியும் உண்டாகும்.
- உடல் முழுதும் மிகுந்த தாபத்துடன் எரிச்சலும் உண்டாகும்.
- மிகுதியான எரிச்சலினால் கண் வீங்கிக் காணும்.

### 31. நீர்ப் பெருவயிறு

- உடல் முற்றும் நீர் கோர்த்து வீங்கும்.
- உடல் மஞ்சள் நிறத்துடன் தோன்றும்
- வயிறு உப்புசத்துடன் உழலையும் காணும்.
- ஆண்குறி தளர்ச்சியுற்று இருக்கும்.
- முதுகுடன் சேர்ந்து வயிற்றில் நீர்கோர்த்து வீங்கும்.
- உடல் தாதுக்கள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகக் குறைந்து, ஐம் பொறிகளையும் கலங்கச் செய்யும்.

### 32. மாங்கிசப் பெருவயிறு

- இதில் வயிற்றில் உள்ள சதைகள் அளவிற்கு விஞ்சி வளர்தலும், வயிறு பொருமி அடிவயிற்றில் கல்லைப்போல் அழுத்தமும் காணும்.
- உடல் வெப்பம் கொண்டு உலர்ந்து வற்றிப்போய், அடிக்கடி தண்ணீரைப் பருகச் செய்யும்.
- சொற்கள் குழறும்.
- மேல் நோக்குக் கால் மிகுந்து அடிக்கடி ஏப்பம் விடச் செய்யும்.
- சிறுநீரிலும், மலத்திலும் இற்றுப்போன சதை காணப்படும்.

**பொதுக் குறிகுணங்கள்**

- வாய் நீர் ஊறல்
- வாய் கைப்பது போல் தோன்றல்
- பசியின்மை
- சிறிது உண்ணினும் எளிதில் செரியாமை
- வாய் குமட்டி வாந்தியாதல் அதில் சிறிது பித்தநீர் கலந்திருத்தல்
- நாளுக்கு நாள் உணவை வெறுத்தல்
- உடல் வன்மை குறைந்து கொண்டே வருதல்
- பெருமூச்செறிதல்
- சிலவேளை அடிக்கடி கழிதல்
- சில வேளை வயிறு கழியாமலே இருத்தல்
- நாளுக்குநாள் கையும் காலும் சூம்பிக் கொண்டே வருதல்
- முகத்தில் மங்குண்டாதல்
- முக எலும்பு மோடிட்டுக் கண், தாடை உதடு இவைகள் வறண்டு சுருங்கல்
- கணுக்கால் சிறிது வீங்கிக்காணல்
- உடல் வெளுத்தல்
- சிறுநீர்ச் சுருங்கல் என்பவற்றோடு
- வயிற்றின் தோல் சுருக்கமடைந்து மினுமினுத்துக் குருதிநாளங்கள் புடைத்து விம்மித் தோலில் நீல நிறத்தோடு கொடி கொடியாகத் தோன்றி வயிறு வீங்கிக் கொண்டு வரும்.
- வயிறு முன்புறமாகப் பெருத்துக் கொண்டே வந்து, நீர் பெருகப் பெருக மேல்நோக்கி மார்புவரையிலும், வயிற்றின் இருபக்கங்களிலும் முட்டிப் பெருகும்.
- வயிற்றின் பெருக்குக்கேற்ப வயிற்றின் இயற்கை மடிப்புகள் போய், வயிற்றின் சதை சத்தற்றுத் தோல் விரிந்த அளவிற்கு வெளுத்துக் கோடு கோடாகக் காணப்படும்.
- தொப்புளும் குவிந்து மெலிந்து தோலோடு தளதளத்து வெளிக்காணும்.
- வயிற்றில் நீர் பெருகப் பெருக வயிறு தளதளப்போடு, உடல் அசையும்போதெல்லாம் தோல் பையிலுள்ள நீர் அலைதல் போல வயிற்றிலுள்ள நீர் மோதும்.

- ❖ அன்றியும் தொடை, கால், விதை, ஆண்குறி இவைகளிலும் நீர் சுரந்து தளதளத்துக் காணப்படும்.
- ❖ மேலும் நீர்க்கட்டு, மேல்மூச்சு, மார்பு துடிதுடித்துப் படபடத்தல், மயக்கம், முதுகு வீங்கல் என்னும் குறிகளைக் காட்டும்.

### மருத்துவம் செய்யும் முறை

இந்நோய் வளித்தாது தன்னளவில் கூடி உதானன் என்னும் மேல் நோக்குக் காலைத் தூண்டி புளித்தேப்பம், வாந்தி, வாய்குமட்டல், சுவையின்மை ஆகியவற்றை உண்டாக்கும். சமானன் அல்லது நடுக்காலின் தூண்டுதலால் உண்ட உணவினைச் செரியாமல் செய்யும். வியானன் என்னும் பரவுகாலின் தூண்டுதலால் உணவின் சாரத்தையும், குருதியையும் உறிஞ்சி உடலில் பரவவொட்டாதவாறும் செய்யும். உடல் வன்மையையும், குருதியின் நிறம், எடை முதலியவற்றையும் கெடுத்து, உடலையும் வெளுக்கச் செய்யும்.அபானன் என்னும் கீழ்நோக்குக்கால் கட்டுப்படுத்தப் படுவதால் சிறுநீரும் மலமும் வெளியாகாமல் உடலில் நீர் கோத்து வீங்கும்.

எனவே தன்னளவில் மிகுந்த உயிர்த்தாதுக்களையும், கால்களையும் தன்னிலைப் படுத்தவும், அவைகளால் கட்டுப்பட்ட மலம், சிறுநீர் ஆகியவற்றை வெளியாக்கவும் செய்யவேண்டும். பின்னர்க் கேடடைந்த குருதியின் வன்மை, நிறம் முதலியவைகளைப் பெறவும் மருத்துவம் செய்தல் வேண்டும்.

கல்லீரல், மண்ணீரல் ஆகிய உள்உறுப்புகள் பாதிக்கப்பட்டு அதனாலும் இந்நோய் உண்டாகக்கூடிய வாய்ப்பு இருப்பதால், அச்சமயங்களில் அவ்வுறுப்புகளின் பாதிப்புகளை நீக்குவதற்குண்டான மருத்துவம் செய்யவேண்டும்.

இந்நோய் முற்றிய நிலையில் இருதயம் பாதிக்கப்படும் நிலையில் அதை பலப்படுத்துவதற்குண்டான மருத்துவமும் செய்தல் வேண்டும்.

உணவுப் பழக்கவழக்கங்களிலும் தேவையான மாறுதல் செய்து கொள்வது அவசியம்.

### கழிச்சலுக்கும் நீர்ப் பெருக்கிற்கும் குடிநீர்

#### 1. நீர்முள்ளிக் குடிநீர்

நெருஞ்சில், நீர்முள்ளி, நெல்லிவற்றல், மணத்தக்காளி வற்றல், சரக்கொன்றைப்புளி, சோம்பு, வெள்ளரிவித்து, சுரைக்கொடி, கடுக்காய்,

தான்றிக்காய்-இவை வகைக்கு ஒரு வராகன் எடை எடுத்துக் குடிநீர் விதிப்படி நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் காலைமாலை 2 வேளையும் 1/2 ஆழாக்கு வீதம் தர, நீரைப் பெருக்கிக் கழித்துப் பெருவயிறு நோயையும், நீர்க்கட்டு, சோபை நோய்களையும் நீக்கும்.

## 2. மண்டூராதி அடைக்குடிநீர்

மண்டூரம், செங்கல் கிட்டம், சங்கன்வேர், நெருஞ்சி சமூலம், சாறு வேளை வேர், கோவைத் தண்டு, நீர்முள்ளி சமூலம், தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், புளியிலை, வேப்பம்பட்டை, பிரமியிலை, கறிமஞ்சள், மணலிக் கீரை, நன்னாரி, வழுதுணை, கொன்றைப்பட்டை, கற்றாழை, ஆடுதீண்டாப்பாளை, செங்கந்தாரி, சிறுகுறிஞ்சான், சுரைக்கொடி, பாதிரிவேர், புறங்கை நாறி- இவை வகைக்குப் பலம் 1. இவைகளை இடிந்து ஒரு பானையில் இட்டு வெள்ளாட்டு நீர் 2 படி, பசுநீர் 2 படி அதில் சேர்த்து அடுப்பிலிட்டு நன்றாகக் கொதிக்க வைத்துப் பிறகு தணலிலேயே வைத்திருக்க வேண்டும். வேண்டும்பொழுது வேண்டிய அளவை வடித்துக் கொள்ளவேண்டும்.

அளவு: 1/4 ஆழாக்கு வீதம் நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வேளையாகக் கொடுக்கப் பாண்டு, சோபை, காமாலை, பல்வகைப்பட்ட பெருவயிறு நோய்கள் தீரும். உப்பில்லா பத்தியம் தேவை. கஞ்சி வடிவான உணவையே தரவேண்டும்.

## 3. காக்கட்டான் வேராதிக் குடிநீர்

காக்கட்டான் வேர்ப் பலம் ஒன்று, நெருஞ்சிமுள், நீர்முள்ளி, காசினி விரை, வகைக்குப் பலம் 1/2- இவற்றை முறைப்படிக் குடிநீரிட்டுக் காலை, மாலை 2 வேளை கொடுக்கலாம்.

## 4. சிறுகீரையாதிக் குடிநீர்

சிறுகீரை பலம் 1/2, மூக்கிரட்டை பலம் 1/2, சுரைக்கொடி பலம் 1/2, அவுரிவேர் பலம் 1/2 , இவைகளை ஒன்றாகச் சேர்த்து 1/2 படி நீர்விட்டு ஆழாக்காகக் காய்த்து, அரையாழாக்கு வீதம் காலை மாலைகளில் கொடுக்கவும்.

பசுநீர் ஆழாக்கில் ஒரு பெருங்கடுக்காயை விரைநீக்கித் தட்டிப்போட்டு ஊறவைத்து வடித்துக் காலை 5 மணிக்குத் தரலாம்.

காலை 7.30 மணிக்கு வெடியுப்புச் செந்தூரம் ஒரு குன்றி எடை, நவாச்சாரம் 10 குன்றி எடை, அயவீரச் செந்தூரம் 2 குன்றி எடை, உலோக மணடூரம் ஒரு குன்றி எடை கூட்டித் தேனில் இழைத்துக் கொடுத்துப்பின் நீர் முள்ளிக் குடிநீர் ஒரு ஆழாக்காகக் கொடுக்கவும்.

காலை 6 மணிக்குக் கொடுக்கும் இஞ்சிச்சாற்றை நாள் ஒன்றுக்கு 1/8 ஆழாக்காகப் பெருக்கிக் கொண்டே வந்து ஒரு ஆழாக்குஅளவு வந்ததும் அந்த அளவிலேயே நோய் நீங்குமட்டும் கொடுக்கவும்.

வயிற்றின் வீக்கம் பெரிதாக இருப்பின் மேலுக்குச் சரக்கொன்றைப் புளி, வெடியுப்பு, எலிப்புழுக்கை, ஆகிய மூன்றையும் சேர்த்து, நீர்விட்டு அரைத்து வயிற்றின்மேல் பற்றிடவும். அல்லது

சரக்கொன்றைப்புளி, எலிப் புழுக்கை, கடுகுரோகணி, இவற்றைக் கூட்டி அரைத்து வயிற்றுக்குப் பற்றிடவும். இதனால் சிறுநீரும் மலமும் கழிந்து வயிற்றில் தங்கிய காற்றும் வெளியாகும்.

பாண்டுப் பெருவயிறு, சோபைப் பெருவயிறு நோய்களில் சிறுநீரைப் பெருக்கச் செய்யும் மருந்துகளை வழங்குவதுடன் கேடடைந்த இரத்தத் தாதுவைச் சரிசெய்யவும், அதனை உடலில் விருத்தி செய்யவும் தேவையான மருந்துப் பொருட்களையும். உணவுப் பொருட்களையும் வழங்க வேண்டும்.

இரத்தத்தை விருத்தி செய்ய அயப்பற்பம், காந்தப்பற்பம், வெள்ளிப் பற்பம், அயநாகப்பற்பம் முதலியனவும் செந்தூரங்களில் அயச்செந்தூரம், காந்தச் செந்தூரம், எ.்.கு செந்தூரம், மண்டூரச் செந்தூரம், ஆறுமுகச் செந்தூரம், அயவீரச் செந்தூரம், வெள்ளிச் செந்தூரம், தங்கச் செந்தூரம் முதலியனவும் பயன்படும்.

மேலும் அயச்சம்பீர கற்பம், அய பிருங்கராஜ கற்பம் முதலிய மருந்துகளும் பாண்டு, சோபை நோய்களில் பெரிதும் பயன்படும்.

காமாலைப் பெருவயிறு, பிலீகைப் பெருவயிறு நோய்களில் கல்லீரல், மண்ணீரல் போன்ற உள்ளுறுப்புக்கள் பாதிக்கப்பட்டிருக்கும். இச்சமயங்களில் அவற்றை வன்மைப் படுத்துவதற்கான சிறப்பு மருத்துவம் கையாள வேண்டும்.

வழுவைப் பெருவயிறு, நழுவைப் பெருவயிறு, பக்கப் பெருவயிறு, வில் பெருவயிறு போன்ற நோய்களில் வயிற்றில் கட்டி இருப்பது போன்ற நிலை உணரப்படுகின்றன. எனவே இந்நிலையில் இரசம், கந்தகம் சேர்ந்த இரசகந்தி மெழுகு, வான்மெழுகு, சண்டரசப் பற்பம் போன்ற பெரிய மருந்துகளையும், சேராங் கொட்டை சேர்ந்த நந்தி மை, சேராங் கொட்டை நெய், இடிவல்லாதி மெழுகு, போன்ற உயர்ந்த மருந்துகளையும் நோய்க்குத் தக்கவாறு வழங்க வேண்டும்.

வளி, அழல், ஐயப் பெருவயிறு நோய்களுக்குச் சிறப்புச் சிகிச்சை முறைகள் "சித்த மருத்துவம்" நூலில் கண்டபடி:

1. வெள்ளிப் பற்பம் தக்க அளவில் மிளகு இரசம், மிளகுக்குடிநீர், மிளகுத்தைலம் தேன் முதலிய ஏதேனும் ஒன்றில் கலந்து காலை, மாலை கொடுக்கலாம்.

2. அயநாகப் பற்பத்தைத் தக்க அளவில் வெள்ளாட்டுப்பால் அல்லது முலைப் பாலில் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

3. வங்கச் செந்தூரத்தைத் தக்க அளவில் காலை, மாலை வெந்நீரில் கொடுக்கலாம்.

4. காந்தச்செந்தூரத்தைத் தக்க அளவில் காலை, மாலை வெற்றிலைச் சாற்றில் கொடுக்கக் குணமாகும்.

5. தங்கச் செந்தூரத்தை அதேபோல் காலை, மாலை வெற்றிலைச் சாற்றில் கொடுக்கக் குணமாகும்.

6. வளிப் பெருவயிறு நோயில் உண்டாகும் விக்கலுக்குத் தாளகச் செந்தூரத்தைத் திப்பிலிப் பொடியுடன் கூட்டிக் காலை மாலை கொடுக்கக் குணமாகும்.

7. இரசச் செந்தூரத்தை எருக்கம் பழுப்பிலைச் சாற்றிலும், தங்கச் செந்தூரத்தைக் கற்றாழைச் சாற்றிலும் தக்க அளவில் அனுபானித்துக் காலை, மாலை கொடுத்து வர அழல் பெருவயிறு குணமாகும்.

8. தங்கச் செந்தூரத்தைத் துளசிச் சாற்றிலும், அப்பிரகப் பற்பத்தைப் பசுவின் பாலிலும், வெள்ளிச் செந்தூரத்தைக் கற்றாழைச் சாற்றிலும், நாகச் செந்தூரத்தை நெய்தல் பூச்சாற்றிலும், பலகறைச் செந்தூரத்தை வெள்ளைப்பூண்டுச் சாற்றிலும் தக்க அளவில் காலை மாலைக் கொடுத்துவர குணமாகும்.

# I

"சித்த வைத்தியத் திரட்டு" என்ற நூலில் கூறப்படும் பெருவயிறு நோய்க்கான மருந்துகள் வருமாறு:

### ஐயப் பெருவயிறு

### 1. கோடா சூரி மாத்திரை

இதில் ஒரு மாத்திரை இரு வேளையாகக் குமட்டிக்காய்ச் சாற்றில் கொடுத்துவரப் பிலீகம், நீராம்பல், கவிசை என்று கூறப்படும் பெருவயிறு நோய்கள் நீங்கும்.

### 2. வெங்கார மாத்திரை

வெங்காரம், திப்பிலி, மிளகு, இந்துப்பு, சுக்கு, நேர்வாளம், காந்தப்பொடி, பெருங்காயம், கழற்சிப்பருப்பு இவைகளைச் சம அளவில் முறைப்படி சுத்தித்து கல்வத்திலிட்டுப் பொடித்து, நீர்விட்டு அரைத்து உருட்டி எருக்கம் பழுப்பினால் மூடி, ஒரு குடைவுப் பானையில் வைத்து மேல்மூடிச் சீலை செய்து கோழிப்புடம்போட்டு எடுத்து, கல்வத்திலிட்டுக் கடுக்காய்க் குடிநீரினால் அரைத்துச் சிறுதேற்றான் விதைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும்.

இம்மாத்திரையை எண்ணெயில் தோய்த்து அருந்த மலம் கழியும். நல்ல தண்ணீரில் அனுபானித்து வழங்க நீராம்பல், மகோதரம், எண்வகைக் குன்மம், அண்ட வாதம் முதலியன நீங்கும்.

இதற்குப் பத்தியம் காடை, கவுதாரி, மீன், சம்மங்கிக் கோழி.

### 3. சலோதாரி மணி

வெங்காரம், திரிகடுகு, படிகாரம், கடல்நுரை, சூரைவித்து, இந்துப்பு, காயம்; வகைக்குப் பலம் ஒன்று; நேர்வாளம் பலம் இரண்டு; முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து 3 சாமம் இளநீரால் அரைத்து, இலவம் விதை அளவு உருட்டி நிழலில் உலர்த்தவும். இதனைத் தேன், பால் இவைகளில் அனுபானித்துக் கொடுக்கப் பெருவயிறு, நீர்க்கட்டு, நீரடைப்பு, சதையடைப்பு, அந்தரவாயு, இருமல் முதலியன தீரும்.

### 4. நவக்கிரகப் பூபதி

மனோசிலை, அரிதாரம், இரசம், கந்தகம், வெங்காரம் இவைகளைச் சம அளவு தனித்தனியாக நன்றாகச் சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் செருப்படைச் சாற்றால் அரைத்து, குப்பிவாயை அடைத்து, வாலுகா இயந்திரத்தில் 45 நாழிகை முத்தீயால் எரித்து ஆறவிட்டு மருந்தினை எடுத்து, இஞ்சிச் சாற்றால் நன்றாக அரைத்துக் கடலை அளவு மாத்திரைகளாக உலர்த்தி, ஒரு மாத்திரையை இஞ்சிச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்க நீராம்பல், வல்லை, நாட்பட்ட வயிற்றுநோய், முறைக்காய்ச்சல், விடாவியர்வை ஆகியவை நீங்கும்.

### 5. வெள்ளீயப் பற்பம் அல்லது வெள்வங்க பற்பம்

ஒரு மண்பாண்டத்தில் ஈண்டு என்று சொல்லப்படும் ஈயத்தண்டின் சமூலம் ஒரு வீசை எடுத்து நறுக்கிச் சிதைத்து நான்கு வீசை தண்ணீர் விட்டு அதில் 1 பலம் வெள்ளீயத்தைப் போட்டு மேல் சட்டிமூடி அடுப்பிலிட்டு 7 நாள் வரைக்கும்

தீபாக்கினியாய் எரித்து, எட்டாவது நாள் காலையில் அவ்வெள்ளீயத்தை எடுத்து அலம்பி உடனே வெள்ளைப்பூண்டுச் சாறு 6 பலம் விட்டு அரைத்து அன்றைய நாள் முடிவில் வில்லை செய்யவும். இதைக் கோவைப்பழவிதை 5 பலமும், பீர்க்கம்பழவிதை 5 பலமும் எடுத்து அம்மியில் மிருதுவாகப் பொடித்துப் பின் கல்வத்திலிட்டு அதில் குப்பைமேனிச் சாறு 6 பலம் விட்டு ஒரு நாளும், செங்கழுநீர்ப் பூச்சாறு 6 பலம் விட்டு ஒரு நாளும் வெற்றிலைச் சாறு 6 பலம் விட்டு ஒரு நாளுமாக அரைத்து மூசை செய்ததில் 9வது நாள் காலையில் வெற்பேந்தி எண்ணெய் அரைபலம் விட்டு மேல் மூசை மூடி 5 நாழிகைக்குள் குடசப்பாலையிலையை அரைத்துக் கனக்கப்பூசி மறு 5 நாழிகைக்குள் சீலைமண் செய்து 20 நாழிகை வெயிலில் உலர்த்தி 10-ம் நாள் காலையில் 64 வறட்டியில் புடம் போட்டு ஆறவிட்டு எடுத்தால் வெண்ணிறமடைந்த பற்பம் கிடைக்கும்.

வெற்பேந்தி எண்ணெய் செய்முறை: ஒரு மண்பானையின் அடியில் நான்கைந்து துவாரமிட்டு அந்தப் பானைக்குள் மலைதாங்கிப் பூண்டின் சமூலம் துணித்து உலர்த்திப்போட்டு மேல் மூடிச் சீலை செய்யவும். பின் ஒரு பள்ளந்தோண்டி, அதில் ஒரு சட்டியைப் புதைத்து அந்தச் சட்டியின் மேல் சரக்கு போட்ட பானையை வைத்து மேலே வறட்டியடுக்கிப் புடம் போட்டால் உள் சரக்கினின்றும் தைலம் அச்சட்டியில் இறங்கும். இதுவே வெற்பேந்தி எண்ணெயாம்.

வெற்பேந்தி எண்ணெயால் முடிக்கப்பட்ட வெள்ளீயப்பற்பத்தைச் சர்க்கரை, நெய், குளிர்ந்த நீர், சீரகம், பசுவின்பால், மஞ்சள் என்ற அனுபானங்களில் கொள்ள பித்தச்சுரம், கபசுரம், உன்மாதம், மகோதரம், மேகஉஷ்ணம், வாத உஷ்ணம் இவை நீங்கும்.

### 6. காரீயப் பற்பம் அல்லது கருவங்கப்பற்பம்

சுத்தி செய்த காரீயம்ஒரு பலத்தைக் கல்வத்திலிட்டு சிறுபூனைக்காலிச்சாறு, மூன்றுபலம் விட்டு ஒரு நாளரைத்து, மறுநாள் குப்பைமேனிச்சாறு 3 பலம் விட்டரைத்து, மூன்றாம் நாள் ஓரிதழ் தாமரைச் சாறு 3 பலம் விட்டரைத்து, 4-ஆம் நாள் கோவைச்சாற்றால் அரைத்து, 5-ஆம் நாள் காலையில் அதை உருட்டி வில்லை செய்து 6 -ஆம் நாள் நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். பச்சையாயிருக்கின்ற நாட்டு நிலாவாரையிலை 4 பலத்தை 1 பலம் துளசிச் சாற்றால் அரைத்து மூசை செய்து ஒரு நாள் உலர்த்தி முன் வில்லை செய்த காரீயத்தை 7-ஆம் நாள் காலையில் மூசையில் வைத்து வரனைத் தைலம் 1 பலம் அந்த மூசையில் வார்த்து மேல் மூசையால் மூடி, அரைத்த மண்ணை அந்த

மூசையின் மேலே பூசி எட்டாவது நாள் ஒரு மண் சீலையும் 9-ஆம் நாள் ஒரு மண்சீலையும் செய்து உலர்த்தி 10-ஆம் நாள் காலையில் 90 வலிய வறட்டியில் புடமிட்டு ஒரு நாள் ஆறவிட்டு எடுத்துப் பார்க்க வெண்மையான பற்பமாகும்.

தினையளவு பற்பத்தைத் தேன், குளிர்ந்த நீர், பசுநெய், பசும்பால், இளநீர், மோர் ஆகியவற்றில் வழங்க வல்லை, மகோதரம், ஈளை, இருமல், காசம், பாண்டு, விடசுரம், மேகம், பைத்தியம், சன்னி, பல்வலி, காதிரைச்சல், தலையிடிப்பு, சூலை ஆகியவை தீரும்.

தினை, வரகு, அபினி, கொள்ளு, புளி, அகத்திக்கீரை, கலியாணப் பூசணிக்காய், பெண்போகம் இவைகளை நீக்குவது அவசியம்.

வரனனைத் தைலம் செய்முறை: வாய்விடங்கம் ஒரு வீசை, மயிலிறகு 1/4 வீசை இரண்டையும் கல்வத்திலிட்டு நொச்சியிலைச்சாறு 25 பலம் விட்டு ஒரு நாள் அரைத்து, மறுநாள் நெல்லிக்காய்ச் சாற்றால் அரைத்து ஒரு மொத்தையாயுருட்டி, 2 நாள் நிழலில் உலர்த்தி, 5-ஆம் நாள் அடியில் துவாரம் இட்ட ஒரு பானையிலிட்டு மேல் மூடிச் சீலை செய்து, பூமியில் ஒரு குழி தோண்டி, அதில் ஒரு சட்டி பதிய வைத்து, அதன் மேலே சரக்குப் போட்டிருக்கும் பானையை வைத்து மேலே எருவடுக்கிப் புடம் போட அச்சட்டியில் தைலம் இறங்கும்.

## 7. அப்பிரகப் பற்பம்

சுத்தி செய்த கிருஷ்ணா அப்பிரகம் ஒரு பலத்தை ஒரு பாத்திரத்திலிட்டுக் கொண்டு, மருதோன்றி வேர் 15 பலத்தை இடித்து வேறொரு பாண்டத்திலிட்டு 64 பலம் தண்ணீர் விட்டு அடுப்பேற்றிச் சிறுக எரித்து 4-இல் ஒரு பங்கான 16 பலமாக சுண்டக் காய்ச்சி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு 2 பலம் வீதம் அந்த அப்பிரகத்தில் 8 நாள் வார்த்து ஊறவைத்து நிழலில் உலர்த்தி, அது நன்றாக உலர்ந்த பிறகு அந்த அப்பிரகத்தை நிறுத்து, அப்போதிருக்கும் எடைக்கு 2 பங்கு கடப்பம் பிசினை அதில் சேர்த்து அந்த இரண்டுபங்கு பிசின் ஆறி ஒரு பங்காய் குறைந்த பிறகு, முன்போல நாள் ஒன்றுக்கு 2 பலம் வீதம் குப்பைமேனிச்சாறு 8 நாள் வரைக்கும் விட்டு ஊற வைத்து நிழலில் உலர்த்த வேண்டும்.

உலர்ந்தபின் அந்த அப்பிரகத்தைக் கல்வத்திலிட்டு அப்பிரகம் இருக்கும் எடைக்கு 2 பங்கு வேப்பெண்ணெய் தினமும் விட்டு 6 நாள் அரைத்து வில்லை செய்து வெயிலில் உலர்த்தும்போது வில்லையை நிறுத்துக் கொண்டு, அந்த எடைக்குச் சரியெடை ஏறும்படி 3 நாள் வரைக்கும் அத்திப்பாலை அந்த வில்லைக்கு அடித்து, உலர்ந்த பின் அதை அகலிலிட்டுச் சீலைமண் செய்து 60

வறட்டியில் புடமிட்டு நன்றாயாறினபின் எடுத்தால் வெண்மை நிறமான பற்பம் காணப்படும்.

இப்பற்பத்தை 1 அல்லது 2 குன்றியளவு சர்க்கரையிலாவது நெய்யிலாவது வெற்றிலைச் சாற்றிலாவது அனுபானித்துக் கொடுக்க மகோதரம், நீரிழிவு, பித்தமேகப்பிரமியம், விரைவாதம், உன்மாதம், பிளவை, சுரம் முதலியன நீங்கும்.

புளி, புகையிலை, பெண்போகம், கடுகு, மதுபானம், அகத்திக்கீரை இவைகளை நீக்கி, 1 மண்டலம் வரை சாப்பிடலாம்.

## 8. சாதிலிங்கப் பற்பம்

சாதிலிங்கத்தைச் சங்கத்திராவகத்தால் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து, அடிகனத்த மட்சட்டியிலிட்டு வாய்பொருத்தமான மற்றொரு சட்டியால் மூடி 7 சீலை வன்மையாகச் செய்து எரிக்கப் பதங்கம் ஏறும். மறுபடியும் அப்பதங்கத்தை மேற்கண்ட சங்கத் திராவகத்தால் அரைத்து முன் போலவே எரிக்க வேண்டும். பதங்கம் மேல் ஏறாமல் அடிச்சட்டியில் தங்கி நிற்கும் வரை எரித்து எடுத்த பற்பத்திற்குச் சண்டரசப் பற்பம் என்று பெயர்.

பனைவெல்லத்தில் கடுகளவு கொடுக்க மகோதரம், சோபை, பாண்டு, குன்மங்கள், நீரடைப்பு, கீல்வாயு, சுரம், சன்னி, மூலம் முதலியன தீரும்.

## 9. உலோக மண்டூரச் செந்தூரம்

இரும்புக் கிட்டப்பொடி 1/2 பலம், கரியுப்பு, வெடியுப்பு, அட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, ரசம், கந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 1/2 வராகன் எடை. இவற்றைக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து கையான்சாற்றால் அரைத்து 2 புடமிடச் செந்தூரம் ஆகும்.

2 குன்றியளவில் தேனில் கலந்து கொடுக்க மகோதரம், சோபை, பாண்டு, காமாலை ஆகியன தீரும்.

## 10. காந்தச் செந்தூரம்

காந்தம் 1 பலம், கந்தகம் 10 பலம். இவைகளை முறைப்படிச் சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கரிசாலைச் சாற்றால் நன்றாக அரைத்து வில்லைதட்டிக் காய வைத்து, ஓட்டிலிட்டுச் சீலை செய்து கஜபுடமிடவும். அந்த எடைக்குக் கந்தகம் சேர்த்து முன்போல் அரைத்துப் புடமிட்டு எடுத்த எடைக்குக் கந்தகம் சேர்த்துப்பழச் சாற்றால் அரைத்துக் கஜபுடமிடவும்.

வந்த எடைக்குக் கந்தி கூட்டி இவ்விரண்டும் சேர்ந்த எடைக்குச் சித்திரமூல வேர்ப்பட்டைசேர்த்து, தாய்ப்பாலால் அரைத்து வில்லை தட்டி முன்போலவே புடமிடவும்.

மேலும் வந்த எடைக்குக் கந்தகமும் சித்திர மூல வேர்ப்பட்டையும் சேர்த்துக் கோழி முட்டை வெண் கருவினால் அரைத்து, முன்போல வில்லை செய்து புடமிடவும்.

பிறகு எருக்கம்பாலால் 4 சாமம் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி முன்போலப் புடமிடவும்.

மருந்தை எடுத்துப் பார்க்கச் செங்கறுப்பு நிறமாயிருக்கும். இதனைப் பொடித்துக் கொள்ளவும்.

ஒரு குன்றிமணி அளவு 2 வேளை தேனில் ஒரு மண்டலம் உண்ண கவிசைக்கட்டி, நீராம்பல், பாண்டு, சோகை ஆகிய நோய்கள் நீங்கும்.

## 11. கௌரி சிந்தாமணி செந்தூரம்

சுத்தித்த இரசம் 1 பலம் , கந்தகம் 1 பலம், பொரிகாரம் 1 பலம். இவைகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி பொடித்து, பொடியை ரெட்டினால் கொட்டைப் பாக்களவாய் கிழிகட்டி மணல் மறைவில் வரிசையாக வைத்து 10 வறட்டிகளை மணல்மேல் அடுக்கி எரித்துக் குளிர்ந்தபின் எடுத்து ரெட்டுக்களை நீக்கி மருந்தை எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். மருந்து பூலாம்பழம் போல் கறுப்பாக இருக்கும்.

திரிகடுகுத்தூள் வெருகடி, மருந்து ஒரு குன்றி மணி அளவு தேனில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் கொடுக்கப் பெருவயிறு, சோபை, காமாலை, பயித்தியம், பாண்டு ஆகியன தீரும். பத்தியம்: வெள்ளாட்டுப் பாலும் சோறும். மறுபத்தியம்: சிறு உப்பும் வெள்ளாட்டுக் கண்டமும் ஆகும்.

## 12. சுயமாக்கினி செந்தூரம்

அயப்பொடி 4 பங்கு, காந்தம் 8 பங்கு, இரசம் 16 பங்கு, கந்தகம் 32 பங்கு. இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் குமரிச்சாற்றால் 2 சாமம் நன்றாக அரைத்து தாம்பாளத்தில் வில்லையாகத் தட்டி வெயிலில் வைக்கக் காய்ந்து தீபம் போல் எரிந்து அடங்கும். பொடித்துக் குப்பியில் அடைக்கவும். இதனைக் குன்றிமணியளவாக இஞ்சிச் சாற்றில் ஈய மகோதரம், கவிசை, குன்மம், கிராணி, அண்டவாதம், சன்னி முதலியன தீரும்.

### 13. தாம்பிரச் செந்தூரம்

தாம்பிரத் தகட்டை எட்டிப்பழச் சாற்றில் 15 நாள் ஊறப்போட்டு எடுக்க சுத்தியாகும், நாளும் புதுச் சாற்றை உபயோகிக்கவும்.

கந்தகத்தை நல்வேளைச் சாற்றில் மூன்றுதினம் மைபோல் அரைத்துக் குகை செய்து அதை மற்றொரு குகைக்குள் வைத்து படிகாரத்தைத் தண்ணீரில் அரைத்து மேற்படி சுத்தித்த தாம்பிரத் தகட்டிற்குப் பூசிக் குகைக்குள் வைத்து மேல்மூடி, 7 சீலை மண் செய்து கஜபுடமிடத் தாம்பிரம் நீறிப்போகும்.

நீறினத் தாம்பிர எடைக்குச் சமம் இலிங்கம் சேர்த்து எருக்கம்பாலால் அரைத்து வில்லை தட்டி ஓட்டிலிட்டுச் சீலை செய்து கஜபுடமிட முருக்கம்பூப் போல் சிவந்த செந்தூரமாகும்.

இதனை 1/2 முதல் 1 குன்றிமணியளவு திரிகடுகுத்தூள் சேர்த்து அனுபானிக்கப் பெருவயிறு, நீராம்பல், மகோதரம், குன்மம், உதரவாய்வு, பிறநீர்க்கோவை, வீக்கம் தீரும்.

### 14. நாகச் செந்தூரம்

சுத்தித்த நாகத்தை 4 பலம் ஒரு சட்டியில் இட்டு உருகும்போது வெடியுப்பு, ஓமம், சுக்கு, மஞ்சள், இந்நான்கும் சேர்ந்த பொடி ஒரு படியைச் சிறிது சிறிதாக நாகத்திலிட்டு வறுக்கத் தூளாகும். பிறகு நாயுருவியை இடித்துப் போட்டு மேலும் வறுக்கவும். பொடியைப் பழச் சாற்றால் அரைத்து மாதுளம்பூ நிறம் வரும்வரை புடமிட்டு எடுக்கவும்.

குன்றிமணியளவு திரிகடுகுச் சூரணத்தில் கொடுக்கக் குன்மம், பெருவயிறு, கவிசை, மூலம், கை, காலெரிவு, வெள்ளை, விந்து நட்டம் ஆகியவை தீரும்.

### 15. துருசுச் செந்தூரம்

துருசு 1 பலம், வேப்பிலை 2 பலம், இவற்றை நீர் விடாமல் கல்வத்திலிட்டு அரைத்து வில்லை செய்யவும். பிறகு பிரண்டையை அரைத்து அதற்குள் இவ்வில்லையைப் பொதிந்து முற்றும் காய்வதற்குள் 10 வறட்டியில் புடமிடவும். இவ்வாறே செந்தூரமாகுமட்டும் புடம் இடவும்.

இதில் 1/4 முதல் 1/2 குன்றிமணியளவு தக்க அனுபானத்தில் கொடுக்கக் குன்மம், மகோதரம், சூலை ஆகியன தீரும்.

## 16. கோரோசனைத் துகள்

திப்பிலி, வெந்தயம், சீரகம், ஏலம் வகைக்கு 1 பங்கு; கோரோசனை 1/4 பங்கு, வெள்ளைச் சத்திச் சாறணைவேர் 1 பங்கு, வாளம் 3/8 பங்கு. இவைகளைத் தனித்தனியே பொடித்துச் சூரணித்து ஒன்று கூட்டி வெருகடியளவு குடிநீரில் கொடுக்க வாந்தியாகும்.

தீரும் நோய்: பெருவயிறு, நீராம்பல், பிறநீர்க்கோவை, பாண்டு, விடபாகம், சுரம் முதலியன.

## 17. சாம்பிராணிப்பூ பதங்கம்

சாம்பிராணி 3 பங்கு, சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், வால்மிளகு, ஏலரிசி, சாரைப்பருப்பு, கிராம்பு, புனுகுச்சட்டம் இவைகள் வகைக்கு 1 பங்கு எடுத்துக் கொள்க.

இவைகளில் புனுகு நீக்கி மற்றவற்றை நன்றாக இடித்துக் கலந்து, புனுகைச் சேர்த்து, ஒரு பெரிய மட்பாண்டத்திலிட்டு, அதற்கு வாய் பொருந்தும்படியான மற்றோர் சட்டிக்குச் சாமந்தி இலை, கொடிவேலி இலை, தும்பையிலை, இவைகளின் சாற்றின் கூட்டுத்தொகை 10 பங்கைக் கொண்டு மேற்சட்டியின் உட்புறம் பூசிப்பூசி உலர்த்தியபின் பெரிய சட்டிக்குப் பொருத்தி, பொருந்து வாய்க்கு வன்மையாய்ச் சீலை செய்து அடுப்பிலிட்டு, அடுப்பினுள் உலர்ந்த ஆட்டுப்புழுக்கை, காட்டெரு, உமி, வேர்ப் பட்டைகள் இவைகளுள் ஏதேனும் ஒன்றைப் போட்டுத் தீயிட்டு எரிந்து அடங்கி ஒருநாள் ஆனபின் சட்டி அசையாமல் படி சீலையை நீக்கி, மேற்சட்டியைச் சரிவாகச் சாய்த்து எடுத்துப் பார்க்க, அதனில் சாம்பிராணிப்பூ படிந்து இருக்கும்.

இதனை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுத் தேனில் கலந்து கொடுக்க வல்லை நோயும், பெருவயிறும் நீங்கும்.

## 18. அகத்தியர் குழம்பு

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, இரசம், வெங்காரம், நாபி, மனோசிலை, ஓமம், அரிதாரம், கறுஞ்சீரகம் வகைக்கு 1 கழஞ்சு, வாளம் 10 கழஞ்சு. இவைகளை முறைப்படி சுத்தித்து வாளம் நீங்கலாக மற்றவைகளைத் தனித்தனியே பொடித்து ஒன்று கூட்டி அரைத்துக் கல்வத்தில் ஒரு பக்கமாகச் சேர்த்து வைத்து வாளத்தில் பாதியைப் பச்சையாகவும் (சுத்தித்தது), பாதியை ஆமணக்கு நெய்யில் வறுத்தும், கல்வத்தில் அரைத்தும் தூள்களாகச் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்றாக அரைத்து மைபோல் செய்து கொள்ளவும்.

குன்றிமணியளவு மிளகுத்தூள், வெள்ளை வெங்காயச் சாற்றில் வழங்க வெப்புப்பாவை, பாண்டு, நீராம்பல், சோகை முதலியன தீரும். வேறுபல அனுபானங்களில் மற்றைய பல நோய்கள் நீங்கும்.

## 19. குமட்டிக் குழம்பு

குமட்டிக் காய்ச்சாறு, பழச்சாறு, வெள்ளுள்ளிச்சாறு, நொச்சிச்சாறு, இஞ்சிச்சாறு இவை வகைக்கு 1படி. இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்து, சிறுதீயில் எரித்துக் குழம்பு பக்குவத்தில் இரசம், இலிங்கம், பெருங்காயம், இந்துப்பு வெங்காரம், கடுகு, மஞ்சள், வெந்தயம், மிளகு, காந்தம், நேர்வாளம் வகைக்கு 1 1/4 வராகன் எடை எடுத்துப் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும், அரைக்க வேண்டியவைகளை அரைத்தும், மேற்படி குழம்பில் சேர்த்து அரைத்துச் சிறுதீயில் கிண்டி பழம் புளி பாகத்தில் இறக்கி, தூதுளங்காய் பிரமாணம் பனை வெல்லத்தில் பொதிந்து கொடுக்கப் பெருவயிறு, குன்மம், நீராமை, மகோதரம், வெப்புப்பாவை, பாண்டு, கவிசை, விடபாகம், வாய்வு தீரும்.

மருந்தினை உடல் வன்மைக்குத் தக்கவாறு நாள் அளவையும், மருந்தின் அளவையும் அளவு படுத்திக் கொடுக்கவும். இதனை ஒருவேளை காலையில் மாத்திரம் கொடுக்கவும்.

## 20. நவ உப்பு மெழுகு

கறியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு, அமுரியுப்பு, மூங்கிலுப்பு, கல்லுப்பு, பாறையுப்பு, பூநீறு இவைகள் வகைக்கு 1/4 பலம் எடுத்து ஒரு பாண்டத்திலிட்டுத் தும்மட்டிச் சாறும், ஆவின் பாலும் கலந்து ஒருபடி ஊற்றித் துத்தி வேர்க் கற்றையால் நன்றாகச் சுழற்றிக் கலக்கி மணல் போக்கித் தெளிவு இறுத்து வடித்துக் காய்ச்சினால் குழம்பாகச் சுண்டி வெண்மையாக இருக்கும். அதனைக் கல்வத்தில் ஊற்றி அதில் வீரம் 1 பலம், கற்பூரம் 1/2 பலம், திரிகடுகு 3 வராகன் எடை, வாளம் 1/4 பலம்-இவற்றைத் தனித்தனியாகப் பொடித்துச் சேர்த்து, திரிபலைக் குடிநீரால் 1 சாமம் அரைத்துப் பிறகு தாய்ப்பாலால் ஒரு சாமம் அரைத்து, மெழுகு பதம் வந்தவுடன் கொம்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

மிளகளவு, கருப்பட்டியில் காலையில் மாத்திரம் ஒன்று முதல் மூன்று நாள் உடல் வன்மைக்குத் தக்கவாறு கொடுக்க மலம் கழிவதன்றி மகோதரம், சூலை, பிறநீர்க்கோவை, குன்மம், மேகம் முதலியன தீரும்.

வெந்நீரும் சோறும் மட்டும் சேர்க்கவேண்டும். மறுபத்தியத்தில் வறுத்த உப்பு, பசும்பால், நீர்மோர், சிறுகீரை, பிஞ்சு முருங்கை, கத்தரி, அவரை, பாசிப்பயறு, துவரை, பிஞ்சுக்கோழி, காடை முதலியன ஆகும்.

## 21. நவாச்சாரக் குழம்பு

நாட்டு நவாச்சாரம் பலம் ஒன்றை எடுத்து அதில் கொடிக்கள்ளிப்பால் ஊற்றி ஊறவைத்துக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து வழித்தெடுத்துச் சிமிழில் பதனம் பண்ணவும்.

ஒரு குன்றிமணியளவு காலையில் கொடுக்க மகோதரம், நீராம்பல், பெருவயிறு, வாய்வு கட்டி நீங்கும்.

## 22. வான் மெழுகு

இரசம், இரச்செந்தூரம், கந்தகம், கௌரி, வீரம், வெள்ளைப்பாடாணம், மிருதார்சிங்கி, பூரம், இலிங்கம், அபின், காந்தம், சாம்பிராணி, கற்பூரம், தாளகம், இவை சமஅளவு பிரித்துத் தனித்தனியாகப் பொடித்து வரிசைப்படி ஒவ்வொன்றாகக் கூட்டியரைத்து, கோழி முட்டையின் மஞ்சள் கருவினால் நான்கு சாமம் அரைத்தெடுத்துக் கொம்புச் சிமிழில் அடைக்கவும்.

உளுந்தளவு பனை வெல்லத்தில் 2 வேளை, முறை ஒன்றுக்கு 5 அல்லது 8 நாட்கள் கொடுக்கலாம். இவ்வாறு விட்டு விட்டு நோய்க்குத் தக்கவாறு வழங்க வேண்டும். மகோதரம், குன்ம வகைகள், காமாலை வளிநோய்கள் போன்ற பல்வித நோய்கள் நீங்கும்.

## 23. கௌசிகர் குழம்பு

கடுக்காய், கடுகு, இந்துப்பு, பெருங்காயம், வெங்காரம், இரசம், மனோசிலை, திப்பிலி, அரிதாரம், சீரகம், கடுகுரோகணி, நாபி-இவைகள் சமஅளவு. இவை சேர்ந்த தொகையளவு நேர்வாளம். வாளம் தவிர மற்றவைகளைத் தனித்தனியே பொடித்துக் கல்வத்திலிட்டுச் சேர்த்தரைத்து, நேர்வாளத்தைச் சுத்தி செய்து இளவறுப்பாய் வறுத்து மெழுகு போல் நன்றாக அரைத்துப் பிறகு வேலிபருத்திச் சாற்றால் ஒரு நாள் அரைத்து அதில் தென்னங்குடுக்கைக்கரி, வெல்லம் இவையிரண்டும் வகைக்கு வராகன் எடை 5 சேர்த்துத் தேங்காய்ப் பாலால் அரைத்துச் சிமிழில் அடைக்கவும்.

குன்றியளவு மருந்தை ஆமணக்கெண்ணெய், ஆட்டுக் கோமியம் சேர்ந்த கலவையில் கொடுக்க மகோதரம், சோபை, காமாலை தீரும். பல்வேறுபட்ட மற்ற அனுபானங்களில் பல்வகையான நோய்களும் தீரும்.

## 24. அமுக்கராச் சூரணம்

கிராம்பு 1 பங்கு, சிறுநாகப்பூ 2 பங்கு, ஏலம் 4 பங்கு, மிளகு 8 பங்கு, திப்பிலி 16 பங்கு, சுக்கு 32 பங்கு, அமுக்கரா 64 பங்கு, சர்க்கரை 128 பங்கு. சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை முறைப்படி சுத்தித்து, தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்று கலந்து, பிறகு சர்க்கரையும் சேர்த்துக் கலந்து இதனை அளவுப்படி கொடுக்க இடப்பாட்டீரல் நோய், அதனால் தோன்றும் பெருவயிறு, குன்மம், கைகால் எரிவு, வெள்ளை, வெட்டை, பாண்டு, இரைப்பு, சயம் முதலியன தீரும்.

## 25. மூக்கிரட்டைச் சூரணம்

மூக்கிரட்டை வேர், வெண்குன்றிவேர், கொன்றைவேர் வகைக்கு 1 பங்கு; கடுக்காய்த் தோல் 3 பங்கு. இவைகளைப் பொடித்து அளவுப்படி கொடுக்க வல்லை நோய், மலக்கட்டு, வயிற்று வலி, திமிர்வாதம் முதலியன நீங்கும்.

## 26. பாகற்கடுக்காய்

பச்சைக் கடுக்காய் 100 கொண்டு வந்து அரிசிகழுவிய நீரில் போட்டு 3 நாள் ஊற வைத்து, நீரை நீக்கவும். இவ்விதம் மும்முறை செய்யவும். பிறகு ஒவ்வொரு காயையும் இரண்டிரண்டாக வெட்டிக் கொட்டையை நீக்கவும். பிறகு இதை ஒரு பானையில் சேர்த்து, கடைந்த மோரை வேண்டிய அளவு ஊற்றி அதில் கடலுப்பு காய்க்கு நான்கில் ஒரு பங்கு சேர்த்து அடுப்பினில் வைத்து மெல்ல எரித்து வறண்டபின் சுக்கு, அட்டுப்பு, இந்துப்பு, ஓமம் வகைக்கு 1/2 பலம்; செவ்வியம், சித்திரமூல வேர்ப்பட்டை, திப்பிலி வகைக்கு 11/2 பலம்எல்லாவற்றையும் பொடித்து அதில் தூவி, பழச்சாறு ஊற்றிக் குலுக்கி வெயிலில் வைத்து உலர்த்தி எடுக்கவும். ஒரு துண்டு உணவுக்கு முன்னும் பின்னும் உண்ண பிலீக நோய், பீனிசம், குன்மம், சுவையின்மை, பாண்டு, இரத்தப் பித்தம் முதலியன நீங்கும்.

## 27. சித்தாதி எண்ணெய்

பெருங்காயம், வெங்காரம், சதுரக் கள்ளிப்பால், இந்துப்பு, கறுஞ்சீரகம், திப்பிலி; இவை வகைக்கு 1 1/4 வராகன் எடை; நேர்வாளம் 1 பலம், வெள்ளைப் பூண்டு 1 சேர், கடுக்காய் 1 சேர், சிற்றாமணக்கு நெய், தேங்காய்ப்பால் வேலிப்பருத்திச் சாறு இவை வகைக்கு 8 சேர். சரக்குகளைக் கல்வத்திலிட்டு மேற்படிச் சாற்றில் நன்றாக அரைத்துக் கலக்கிச் சிறுதீயினால் காய்ச்சி இறக்கவும்.

3 முதல் 5 துளி நிசித் தண்ணீரிலோ, சோம்புக் குடிநீரிலோ கொடுக்கலாம். பேதியாகும். கவிசை, நீராம்பல், தலைநோய்கள் முதலாக பல்வேறுபட்ட நோய்கள் தீரும்.

## 28. மேகநாதத் தைலம்

புங்கம்பட்டை, பிராயம்பட்டை, மாம்பட்டை, இலுப்பைப்பட்டை, புரசம்பட்டை, அழிஞ்சிப்பட்டை, எட்டிப்பட்டை, ஓதியம்பட்டை, சங்கம்பட்டை, சுரபுன்னைப்பட்டை, ஊழலாத்திப் பட்டை, நூறாண்டு வேம்பின்பட்டை, முதிர்ந்த பூவரசம்பட்டை, நிலவிளாப்பட்டை, சிவன் வேம்புப்பட்டை இவை வகைக்கு 10 பலம். நன்றாக இடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து ஒரு குறுணி நீர் விட்டு அடுப்பிலிட்டுக் குழம்பாகக் காய்ச்சிய பின்பு வடித்து ஒரு பாண்டத்திலிட்டு அதில்

ஆடுதீண்டாப்பாளைச் சாறு, கழற்கொடிச் சாறு, வெள்ளறுகுச்சாறு, சங்கன்குப்பிச்சாறு, செருப்படைச்சாறு, கொட்டைக் கரந்தைச் சாறு, பொடுதலைச்சாறு இவை வகைக்கு படி 1/4 சேர்த்து அடுப்பில் வைத்துச் சுண்டிக் குழம்பாக அடையும்பொழுது நல்லெண்ணெய் 2 படி சேர்த்து, பறங்கிப்பட்டை 2 பலம் பொடித்துப் போட்டு, சுத்தித்த சேராங்கொட்டை 1 பலம் இடித்துப் போட்டு மெல்ல எரித்து அடிபற்றாமல் மெழுகு பதத்தில் இறக்கி வைக்கவும்.

முட்டைக் கரண்டியளவு 2 வேளை கற்கத்துடன் கொடுக்க நீராம்பல் பெருவயிறு, பாண்டு தீரும்.

உப்பு, மொச்சை, பாசிப்பயறு, துவரை, முளைக்கீரை இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். 5 நாள் மருந்துண்டு பின்னர் பசுமோர் கூட்டலாம். 15 நாள் சென்றபின்னர் எண்ணெயிட்டு மூழ்கலாம்.

## 29. பிடங்கு நாறிக் குடிநீர்

புறங்கை நாறியிலை மூன்று அல்லது நான்கு எடுத்துக் கடுக்காயின்தோல் 1 வராகன் எடை, கறிமஞ்சள் 1/2 வராகன் எடை இவைகளுடன் சேர்த்துக் குடிநீர் செய்து 1/4 முதல் 1/2 ஆழாக்குத் தர, பிலீக விருத்தி நீங்கும்.

## 30. மாமணி மந்திர வெற்றி மாத்திரை

உளுந்து, சுக்கு, மிளகு, திப்பிலி, உப்பு, ஏலரிசி, யானைப்பல், யானைத்தந்தம், தங்கம், கோஷ்டம், பவழம், முத்து, சடாமாஞ்சில் - ஆகிய இச்சரக்குகளையெல்லாம் வகைக்கு வீசம் எடுத்து மாதுளம்பழச்சாற்றால் அரைத்துப் பின்பு தமரத்தம்பழச் சாற்றாலும் அரைத்துப் பின் அரைக்குன்றியளவு மாத்திரை உருட்டி வெயிலில் நன்றாக உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

இம்மாத்திரையை மழைத் தண்ணீரில் இழைத்துண்டால் பெருவயிறு நீங்கும்.

# II

"அகத்தியர் வைத்திய சிந்தாமணி" என்னும் நூலில் கூறப்படும் சில மருந்துகள் வருமாறு:

## 1. சூரணராசன்

மிளகு, மஞ்சள், முட்காவேளை,

நேர்வாளம், நொச்சிவேர், பொன்முசுட்டைவேர், ஓமம், சீரகம், கறுஞ்சீரகம், சாறணைவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், நிலவேம்பு, எவச்சாரம், இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, வறட்சுண்டி, யானைத்திப்பிலி, புங்குவேர், கருணைக்கிழங்கு, இலவங்கம், ஆமணக்குவேர், மரமஞ்சள், சத்திச்சாரம், அதிவிடயம், குறிஞ்சாவேர் - சம அளவு.

முறைப்படி சரக்குகளைச் சுத்தம் செய்து சூரணித்துக் கொள்ள வேண்டும்.

தக்க அளவில் தக்க அனுபானங்களில் வழங்க மகோதரம், கவிசை, பிலீகம், பாண்டு, குன்மம், தலைநோய், சூலை, அசீரணம் முதலியன தீரும்.

## 2. கந்தகச் சூரணம்

கந்தகம்- 6 பலம்

சித்திரமூலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வாய்விடங்கம், ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, சேராங்கொட்டை வகைக்கு 1 பலம்.

சரக்குகளைத் தூய்மைசெய்து இடித்துச் சலித்து சூரணித்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம்: நெய், தேன், வெண்ணெய், சர்க்கரை.

மகோதரம், மூத்திரக் கிரிச்சரம், குன்மம், குட்டம், முதலியன தீரும். உடல்பலம் உண்டாகும். தாது விருத்தியும் காய சித்தியும் உண்டாகும்.

### 3. சாறணைவேர்ச் சூரணம்

முற்றிய சாறணைவேரைக் கரணைகளாக நறுக்கிப் பசுவின்பால், வெள்ளாட்டுப் பாலில் தனித்தனியே மூழ்கும்படி விட்டு வேகவைத்து எடுக்க வேண்டும். இவ்விதம் 7 முறை செய்யச் சுத்தியாகும். பின் இதனை உலர்த்தி இடித்துச் சூரணித்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம்: வெல்லம், நெய்.

மகோதரம், பாண்டு, குன்மம், காசம், குட்டம், துன்மாங்கிசம் ஆகியவை நீங்கும்.

### 4. திப்பிலியாதிச் சூரணம்

திப்பிலி, மிளகு, சுக்கு, கடுகு, முத்தக்காசு, நெல்லிவற்றல், மஞ்சள், செவ்வியம் - சமஅளவு.

இவற்றை முறைப்படி சுத்தித்து சூரணித்துக் கொள்ளவேண்டும்.

அனுபானம்; நெய்.

கவிசை, பிலீகை, நீராமை, வெப்புப்பாவை, மகோதரம், குட்டம், காசம், சயம், குளிர் சுரம், சோகை, விக்கல், வாந்தி முதலியன தீரும்

### 5. இலசுனப்புட்டி

வெள்ளுள்ளி- 100 பலம் தோல் நீக்கி விழுதாய் அரைத்துக்கொள்ள வேண்டும். முள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், திப்பிலிமூலம், சதகுப்பை, சித்திரமூலம், எவச்சாரம், சத்திச்சாரம், ஓமம், கழற்சி விரை, கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு வகைக்கு 1 பலம்; கடுகு 1 உழக்கு, கறுப்பு எள் 1 உழக்கு, விளக்கெண்ணெய் 2 நாழி, நெய் 1/2 நாழி.

சரக்குகளைச் சுத்தித்துச் சூரணித்து விளக்கெண்ணெய், நெய், உள்ளி கற்கம் ஆகியவற்றுடன் கலந்து எரித்துக் கடுகு திரளும் பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

பெருவயிறு, குன்மம், சுவாசம், காசம் முதலியன தீரும்.

### 6. மகா இலசுனப்புட்டி

தோல் உரித்த வெள்ளுள்ளி 100 பலம் அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நொச்சி, முட்காவேளை, பிரமி, முடக்கற்றான், விழுதி, குப்பைமேனி, பாவட்டை, சாறணை, ஆடாதோடை, அமுக்கரா, முருங்கை, ஆடுதீண்டாப்பாளை, பொன்னாவாரை, கொட்டைக் கரந்தை, சாறுவேளை, ஆட்டுப்பால் வகைக்கு 1 நாழி.

விளக்கெண்ணெய், பசுவின் நெய், எள்நெய் வகைக்கு 1 படி.

பசுநீர், தேங்காய்ப்பால், நாரத்தம்பழச்சாறு வகைக்கு 1 நாழி.

இவை அனைத்தையும் ஒன்று கலந்து பாகுபதத்தில் எரிக்க வேண்டும்.

வெங்காரம், வெண்கடுகு, கறுங்கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை, பேரரத்தை, படிகாரம், சதகுப்பை, செவ்வியம், கறியுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, சத்திச்சாரம், கோஷ்டம்- வகைக்கு 1 பலம்.

இச்சரக்குகளைச் சுத்தித்துச் சூரணித்து மேற்படி பாலில் கலந்து கிளறி இறக்கிக் கொள்ள வேண்டும். இதனை ஒரு மண்டலம் தானியபுடம் வைத்து எடுக்க வேண்டும்.

அளவு: சிறு கடுக்காயளவு உருட்டிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: வல்லை, நீராமை, மகோதரம்,சூலை, குன்மம், குட்டம், வாதம், கண்டமாலை, மூலம் முதலியன.

## 7. சூலைப் பிடாரம்

இஞ்சி, எலுமிச்சை, தும்மட்டிக்காய், நொச்சிச் சாறு வகைக்கு 1 படி.

இவற்றை எரித்துக் கால்பாகமாக வற்றச் செய்யவும். விளக்கெண்ணெய் 1/4 படி, சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலிவேர், எவச்சாரம், வாய்விடங்கம், ஓமம், வெங்காரம், வளையலுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, யானைத்திப்பிலி- வகைக்கு 1 பலம்.

இவற்றைச் சூரணித்துச் சாறு, எண்ணெய் இவற்றில் தூவி எரித்துப் பதத்தில் இறக்கி, அதில் சுத்தி செய்த நேர்வாளம் 1 பலம் சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: மகோதரம், நீராமை, பிலீகை, குன்மம், சூலை முதலியன.

## 8. மகாபிரசாத இலேகியம்

நவாச்சாரம், எவச்சாரம், கல்லுப்பு, சவுக்காரம், படிகாரம்- வகைக்கு 2 கழஞ்சு இந்துப்பு, கறுஞ்சீரகம், கடுகு, திப்பிலிமூலம், மிளகு, ஓமம், வாய்விடங்கம், விழலரிசி, வெட்பாலை அரிசி வகைக்கு 2 பலம்.

கற்கடகசிங்கி, சாதிக்காய், திப்பிலி, சிறுநாகப்பூ, தக்கோலம், சாறணைவேர், சிறுதேக்கு, மிளகரணை, கடுகுரோகணி, யானைத்திப்பிலி, வேலிப்பருத்தி வேர், நரிவிளா வேர்- வகைக்கு 1 பலம்.

நரளைவேர், அவுரி, நற்பாலைவேர், பேரரத்தை, நேர்வாளம், சாதிப்பத்திரி, பெருமரப் பட்டை, கஸ்தூரி மஞ்சள்- வகைக்கு 1./2 பலம் .

சுக்கு 5 பலம், கொடிவேலி 3 பலம், பெருங்காயம் 5 பலம்.

இவற்றை நன்றாக இடித்துப் பால் விட்டு அரைத்து வழித்துக் கொள்ள வேண்டும்.

நத்தைச் சதை, கிளிஞ்சல் சதை, கறுங்கோழி சதை- வகைக்கு 2 படி.

இவற்றை ஒரு பாண்டத்தில் போட்டு அதில் நொச்சிக் குடிநீர் 6 படி, விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், எள்நெய்- வகைக்கு 1 நாழி விட்டு, 1 நாள் முழுதும் வெயிலில் வைக்க வேண்டும். பின் கற்கம் சேர்த்து நீர்வற்றும் வரை அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். பின் இறக்கி ஆறவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: கவிசை, வெப்புப்பாவை, பிலீகை, குன்மம் நீங்கும்.

## 9. பஞ்சகவ்விய கிருதம்

கோமூத்திரம், தயிர், நெய், சாணநீர், பால் வகைக்கு 4 படி.

சதுரக் கள்ளி வேர்ப்பட்டை, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.

இச் சரக்குகளைப் பாலில் கற்கமாக அரைத்துக்கொண்டு பஞ்சகவ்வியத்தில் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்: மகோதரம், வெப்புப் பாவை, சோபை, காமாலை, பாண்டு, உள்மாந்தம், மலக்கட்டு முதலியன.

## 10. கோடாகுளிகை

அரிதாரம், கௌரி, கந்தகம், இரசம், சாதிலிங்கம், நாபி, திப்பிலி, வெங்காரம், காந்தம், அதிவிடயம், நிர்விடம், சாத்திரபேதி, தான்றிக்காய், கொத்துமல்லி, சாதிக்காய், சாதிப்பத்திரி, இருவி, நெல்லிமுள்ளி, இலவங்கம், கடுக்காய், வாய்விடங்கம், கோஷ்டம், கஸ்தூரி மஞ்சள், மிளகு, ஏலம், கடுகுரோகணி, அதிமதுரம், கடுகு, ஓமம், சீரகம், கறுஞ்சீரகம் -சம அளவு.

இவற்றைச் சுத்தி செய்து சூரணித்துக் கல்வத்தில் போட்டுக் கையான் சாற்றில் அரைத்து மிளகளவு உருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

வெல்லத்தில் வழங்கக் கவிசை என்னும் பெருவயிறு நீங்கும்.

### 11. கிருபையாதூரசம்

சுத்தித்த கந்தகம் 2 பலம்

சுத்தித்த இரசம் 1 பலம்

அயப்பற்பம் 1 1/2 பலம்

தாமிரப்பற்பம் 1 1/2 பலம்

இவற்றைக் கல்வத்திலிட்டுக் கொடிவேலிக்குடிநீரில் அரைத்து மொத்தையாகத் திரட்டி ஓர் இரும்புக் கிண்ணத்தில் கொட்டைக் கரந்தை இலை ஐந்தைப் பரப்பி அதன்மேல் வைத்து மேலும் அதே இலையை மேல்மூடி, 1 சாமம் சூரியபுடம் வைத்து எடுத்து, அவ்விலைகளுடனே கல்வத்தில் போட்டுக் கொடிவேலிக்குடிநீரால் அரைத்து வெயிலில் வைத்தெடுக்க வேண்டும்.

இவ்விதம் மூன்று முறை செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறே பஞ்சலோகக் குடிநீரில் 5 முறை செய்ய வேண்டும்.

வெங்காரத்தைப் பொரித்துச் சுத்தி செய்து மேல் மருந்துக்குச் சமனாக 6 பலம் சேர்த்து ஆம்பல் சாறு விட்டு 50 தடவை ஓட்டி அரைத்துக் கொள்ள வேண்டும்.

திப்பிலி, வளையலுப்பு வகைக்கு 8 பலம், கொடிவேலிப்பட்டை, விதை நீக்கிய கடுக்காய் வகைக்கு 12 பலம், மிளகு 16 பலம்- இவற்றைப் பொடித்துச் சூரணமாக்கி எலுமிச்சம் பழச் சாறு கலந்து இலேகியமாகக் காய்ச்சி இம்மருந்தையும் மேல் மருந்தையும் மீண்டும் 50 தடவை அரைத்துக் கொள்ள வேண்டும்.

இதனை மேலும் கடலைத் தண்ணீர் விட்டு 7 தடவை கெட்டியாக அரைத்து வெயிலில் காயவைத்து உலர்ந்தபின் எடுத்துப் பத்திரப் படுத்த வேண்டும்.

அளவு: பணவெடை.

அனுபானம்: புளித்தமோர் 2 பணவெடை.

பத்தியம்: நெய் சாதம்.

தீரும் நோய்: பிலீகை, மகோதரம், தொண்டை நோய்கள், தலை நோய், குன்மம், கிராணி, வாயுக்கட்டி முதலியன.

## 12. சுயமாக்கினி

இரசம் 1 பங்கு, நாபி 2 பங்கு, காந்தம் 6 பங்கு, கந்தகம் 8 பங்கு, அயப்பொடி 8 பங்கு.

இவற்றை முறைப்படி சுத்தி செய்து கற்றாழைச் சாற்றில் ஒரு நாள் அரைத்து வெண்கலப் பாத்திரத்தில் வைத்து வாயைப் மூடி வெயிலில் வைக்கப் புகைந்து பற்பமாகும்.

அளவு: பணவெடை.

அனுபானம்: தேன்.

தீரும் நோய்கள்: மகோதரம், வயிற்றில் உண்டாகும் கட்டி, வாய்வு, குன்மம், குட்டம், கிராணி, காமாலை முதலியன.

## 13. இலசுன ஏரண்டத் தைலம்

கற்றாழை, சித்திரமூலம், திருகுக்கள்ளி, ஆல், சிவதை, வேலிப்பருத்தி, நல்வேளை, காக்கணம் வேர், முடக்கற்றான் 10 பலம். தண்ணீர் 2 தூணி.

இவைகளை இடித்துச் சேர்த்துக் காய்ச்சி 1/8 ஆக வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

சாறணைவேர் 100 பலம் இடித்துத் தண்ணீர் 2 தூணி சேர்த்துக் காய்ச்சி 1 குறுணியாக ஆனதும் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

வெள்ளுள்ளி 100 பலம், தண்ணீர் 1 தூணி சேர்த்துக் காய்ச்சி 1 குறுணியானதும் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

பின் 3 வகைக் குடிநீரையும் ஒன்று கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் விளக்கெண்ணெய் 1 குறுணி, கள்ளிப்பால், தேங்காய்ப்பால் வகைக்கு 4 படி.

கற்கச் சரக்குகள்: நேர்வாளம் விதை 250, வெட்பாலையரிசி, செவ்வல்லிக் கொடி, சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்துமல்லி, சிறுதேக்கு, சதகுப்பை, விளாவரிசி, கற்கடகசிங்கி, கடுகுரோகணி, இந்துப்பு, எவச்சாரம், கல்லுப்பு, பொட்டிலுப்பு, செவ்வியம், யானைத்திப்பிலி, வெங்காரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கறுஞ்சீரகம், படிகாரம், சத்திச்சாரம், வளையலுப்பு வகைக்கு 4 கழஞ்சு.

இவற்றைக் கற்கமாக அரைத்து முன் மருந்துகளுடன் கலந்து அடுப்பிலிட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். ஆறியபின் தானியப்புடத்தில் வைத்து 40 நாள் சென்றபின் எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

தீரும் நோய்கள்: 3 கழஞ்சளவுக்கு உள்ளுக்கு அருந்த பெருவயிறு, மூல வாய்வு, பிலீகை, வெப்புப்பாவை, சூலைநோய், குன்மம், மலக்கட்டு, குடல் வாதம் ஆகியவை நீங்கும்.

## மேற்பூச்சு மருந்துகள்

- ❖ வயிறு வீங்கிப் பெரிதாக இருப்பின் சரக்கொன்றைப்புளி, வெடியுப்பு, எலிப்புழுக்கை ஆகிய மூன்றையும் கூட்டி நீர்விட்டரைத்து வயிற்றின்மேல் பற்றிடலாம்.
- ❖ சரக்கொன்றைப்புளி, கடுகுரோகணி, எலிப்புழுக்கை ஆகியவற்றைக் கூட்டியரைத்து வயிற்றின் மேல் பற்றிடலாம். இதனால் மலமும் நீரும் கழிந்து, வயிற்றில் நிறைந்த காற்றும் வெளியாகும்.
- ❖ காரீயம் 1 பலம், இரசம் 1 பலம். இவ்விரண்டையும் முறைப்படித் தொந்தித்து அதனைக் கல்வத்தில் இட்டு வெடியுப்புத் திராவகம் விட்டரைத்து வில்லை தட்டி ஓட்டிலிட்டு மேலகல் மூடிச் சீலைமண் செய்து 50 வறட்டியில் புடமிட்டெடுக்க நல்ல சுண்ணமாகும். இதனைத் தண்ணீரில் குழப்பி வீக்கமாயுள்ள வயிறு, கை, கால்கள் இவற்றின் மேல் பூசிவர நீர்வடியும். சோபைப் பெருவயிறு, நீர்ப் பெருவயிறு நோய்களில் மேல்பூச்சாகப் பூசக் குணமாகும்.
- ❖ வெள்வங்கம் 1 பலம் எடுத்து உருக்கு முகத்தில் வெடியுப்பு 2 பலம் பொடித்துக் கிராசம் கொடுத்து வரச் சுண்ணமாகும். இதனைச் சிறுநீரில் குழப்பி வீக்கத்தில் பற்றிட நீர் வடிந்து, வீக்கம் வற்றும்.
- ❖ நீர்முள்ளி சுட்ட சாம்பல் 2 தோலா, வெடியுப்பு 1 தோலா, சரக்கொன்றைப்புளி 2 தோலா, வெள்ளரிவிதை 1 தோலா, வெங்காரம் 1/2 தோலா இவற்றை நீர்முள்ளி அல்லது நெருஞ்சில் சாறு தெளித்து, அரைத்துச் சிறிது சூடு செய்து பற்றிட நீர்ப்பெருவயிறு, கை, கால் வீக்கம் குணமாகும்.

## உணவு

நீரைப் பெருக்கி, மலத்தை இளக்கிக் கழியச் செய்யும் உணவாதிகளைக் கொடுக்க வேண்டும். பார்லிக் கஞ்சி, நெற்பொரிக்கஞ்சி கொடுப்பது நன்று. வேண்டுமாயின் மணக்கத்தை அரிசி, அல்லது செங்குறுவை அரிசி இவற்றின் பொரிக் கஞ்சிகளைக் கொடுக்கலாம்.

வெள்ளரி வித்து, சுரை வித்து,முலாம்பழ வித்து, தர்ப்பூசணி வித்து இந்நான்கையும் ஓரளவாகக் கூட்டி அதில் ஒரு சிரங்கை அளவு நீரிலிட்டு ஊறியபின்னர் அம்மியிலிட்டு நெகிழ அரைத்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கலாம்.

கீரை வகையில் முள்ளங்கிக் கீரை, தாளிக் கீரை, சோகிக் கீரை, மணத்தக்காளிக் கீரை, சீமைக் காசினிக் கீரை ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை மாற்றிமாற்றிக் கடைந்து கொடுக்கலாம்.

நோய் வன்மை குறைந்த பிறகு இருமுறை வடித்த சோற்றுடன் காய்கறி வகைகளும், மேற்கூறிய கீரை வகைகளும், முள்ளங்கி, வெண்டைப் பிஞ்சு, கத்தரி, பீர்க்கு, புடலை, முருங்கை போன்ற பிஞ்சுக் காய்களையும் கொடுக்கலாம்.

**ஆதார நூல்கள்**

1. யூகி முனிவர் வைத்திய சிந்தாமணி 800.
2. சித்த மருத்துவம் - பாகம் 1.
3. நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு-பாகம் 1 & 2.
4. சித்த மருத்துவாங்க சுருக்கம்.
5. குணபாடம்-மூலிகை வகுப்பு.
6. சித்த வைத்தியத் திரட்டு.
7. அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம்.
8. தேரையர் மகா கரிசல்.
9. அகத்தியர் வைத்திய சிந்தாமணி - பாகம் 1 & 2.
10. ஆத்மரட்சாமிர்தம் என்னும் வைத்திய சார சங்கிரகம்.
11. வாத ரோக சிகிச்சை (சரபேந்திரர் வைத்திய முறை).
12. குன்ம ரோக சிகிச்சை (சரபேந்திரர் வைத்திய முறை).
13. மேகரோக நிவாரணி (சரபேந்திரர் வைத்திய முறை).
14. அனுபவ வைத்திய நவநீதம்.
15. தேரையர் யமக வெண்பா.
16. நோய்களுக்கு சித்த பரிகாரம் பகுதி 1 & 2.
17. புலிப்பாணி வைத்தியம் - 500.
18. சத சுலோகம்.
19. சதகநாடி.
20. அகத்தியர் குணவாகடம்.
21. சபாபதி கையேடு.
22. தேரன் சேகரப்பா.
23. பதினெண் சித்தர் அருளிய வைத்தியத்திறவுகோல்.

# சொல்லடைவு


அக்கரகாரம் 36,73,104,253,291
அக்கரம் 179
அக்கினிச் சூரணம் 79
அக்குள் நாற்றம் 115
அகத்திக்கீரை 176
அகத்தியர் குழம்பு 12,52,178,330
அகத்தியர் வைத்திய சிந்தாமணி 71,296,335
அகத்தியர் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000 22
அகத்தியிலைச்சாறு 183,283
அகில் 296
அகில் கட்டை 126,291
அகில்பட்டை 300
அங்கூர் திராட்சை 12
அச்மரி 258
அசதி 227
அசமதா ஓமம் 297
அசீரணம் 16,75,335
அசுவகந்தி 234
அசோகு 111
அசோகுப் பட்டை 44
அட்ட சூரணம் 16,73
அட்டபைரவ மாத்திரை 11
அட்டாதி சூரணம் 15
அட்டுப்பு, 59,60,327
அடைக் குடிநீர் 266
அண்ட இளகம் 71
அண்ட ஓடு 17,184,288
அண்ட வாதம் 324,328
அண்டவாயு 279
அத்தி 111,248,299
அத்திசுரம் 294
அத்திப் பட்டை 74,126,210
அத்திப்பட்டைச்சாறு 233
அத்திப்பால் 121,281
அத்திப்பிஞ்சு 150,199,244,298
அத்திப்பூ 125
அத்தி மரப்பட்டை 131
அத்தியாதிக் குடிநீர் 131
அத்தியிலைச் சாறு 122
அதிதாகம் 152
அதிமதுரம் 12,36,37,104,123, 205,222,244,274,298,338
அதிமூத்திரம் 116,302
அதிவிடயச் சூரணம் 72
அதிவிடயம் 66,126,216,297,335
அந்தர கும்பகம் 302
அந்தரவாயு 324
அந்திமந்தி இலை 159
அப்பர் 1
அப்பிய மேகம் 91
அப்பிரகச் செந்தூரப் பாவனை 139
அப்பிரகச் செந்தூரம் 107
அப்பிரக நவநீதம் 117,
அப்பிரக லவணம் 142
அப்பிரகப்பற்பம் 106,115,122,291,323,326
அப்பிரகம் 48,199,292
அப்பைக் கிழங்கு 247
அபானன் 34
அபின் 46,112,332
அபினி 227
அம்பர் 291
அம்மான் பச்சரிசி 200,
அமளையரிசி 129
அமிர்தச் சர்க்கரை 244

அமிர்த சஞ்சீவி சூரணம் 250
அமிர்தாதி இலேகியம் 151
அமுக்கரா 36,111,291,337
அமுக்கரா இலேகியம் 17,219
அமுக்கராக் கிழங்கு 43,79,104,
107,192,218,232,279
அமுக்கரா சூரணம் 55,179,185,218,333
அமுக்கராத் தூள் 219
அமுக்கரா நெய் 219
அமுக்கரா விழுது 218
அமுக்கராக் கிழங்கு அமுக்கராச் சூரணம்
218
அமுக்கராவேர்ச்சாறு 57
அமுக்காரக் கிழங்கு 79,218
அமுத சர்க்கரை இலேகியம் 115
அமுரியுப்பு 54,331
அயக்காந்தச் செந்தூரம் 16,118,127
அயக்காந்தம் 20
அயச் செந்தூரம் 75,137
அயச்சம்பீர கற்பம் 322
அயத்தூள் 68
அயநாகப்பற்பம் 322,323
அயப் பற்பம் 176,278,322
அயப்பொடி 50,145,181,328
அய பிருங்கராஜ கற்பம் 322
அயம் 119,290
அயமெழுகு 181
அயவீரச் செந்தூரம் 15,75,321
அர்க்கட்சிரத் தைலம் 18
அரசம்பட்டை 126
அரசு 126,299
அரத்தை 250,289
அரத்தைக் குடிநீர் 19
அரப்பொடி 253
அரம் 115
அரளி 299
அரிகிரந்தி 212
அரிசி 81
அரிசி கழுவிய நீர் 44
அரிசித் திப்பிலி 51,202,215
அரிசித்திப்பிலிச் சூரணம் 204
அரிசி மா 132
அரித்திராப் பிரமியம் 169
அரிதாரம் 46,111,226,324
அருகன் தைலம் 20
அரையாப்பு 111,174
அரையாப்பு எண்ணெய் 214
அரையாப்புக் கட்டி 228
அரையாப்பு நெய் 213
அரையாப்புப் புண் 253
அரோசகம் 70,131
அல்குல் புற்று 215,224
அல்லிக்கிழங்கு 125
அல்லிவிரை 242
அவரைப்பிஞ்சு 161,303
அவுரி 253,338
அவுரியிலை 247
அவுரிவேர் 60,321
அழல் ஐயக் குன்மம் 27
அழல் ஐயப் பெருவயிறு 310
அழல் குன்ம எண்ணெய் 66
அழல் குன்மம் 26,66
அழல்சூலை 4,17
அழல் பெருவயிறு 309
அழவணவேர் 35
அழிகிரந்தி 178,189
அழிஞ்சிப்பட்டை 334
அழிஞ்சியாதிக் குடிநீர் 131
அழிஞ்சில் பட்டை 253
அழிஞ்சில் விதை 187
அழிஞ்சில் வேர்ப்பட்டை 41
அளகாதி இலேகியம் 206
அறுகம்புல் 266
அறுகன் வேர்க் குடிநீர் 175
அறுகன் வேர்ச் சாறு 252
அறுகன் வேர் நெய் 252
அறுகீரை 161
அறுகு 156
அன்னபேதி 20,53,239
அனல் நோய் 228
அனல் வெட்டை 270
அனுபோக வைத்திய நவநீதம் 215
அஸ்திசுரம் 250
அஸ்தி வெட்டை 251
ஆகாயத்தாமரைச் சாறு 119
ஆச்சிய கந்தி மேகம் 90
ஆசன கிரந்தி 120
ஆசன முறை 160

ஆட்டுக்கறி 161
ஆடாதோடை 39,253,298,337
ஆடாதோடைக்குடிநீர் 19
ஆடாதோடைச் சாறு 83
ஆடாதோடைவேர் 216
ஆடுதீண்டாப்பாளை 40,62,147,235,253,321
ஆடுதீண்டாப்பாளைச் சாறு 82,334
ஆடுதீண்டாப்பாளை எண்ணெய் 159
ஆடுதீண்டாப்பாளை எரிப்புச் சூரணம் 62
ஆடுதீண்டாப்பாளை வேர் 297
ஆடுதீண்டாப்பாளை வேர்ப்பட்டை 217
ஆத்தி 156,299
ஆத்திச் சாறு 82
ஆத்தியிலைச்சாறு 81,183
ஆத்மரட்சாமிர்தம் 241,286,305
ஆத்மரட்சாமிர்த வைத்திய சார சங்கிரகம் 123
ஆதண்டை வேர்ப்பட்டை 213
ஆதளை வேர் 247
ஆதிக்க மேகம் 94
ஆம்பல் சாறு 339
ஆமச்சூலை 5,15
ஆமணக்கிலைச்சாறு 85,183
ஆமணக்கு வேர் 43,335
ஆமலகத்தைலம் 54,178
ஆயில்பட்டை 216
ஆயில் மரப்பட்டை 64
ஆயில்யப் பட்டை 22
ஆரைக் கீரைச்சாறு 210
ஆரையிலை 128
ஆரையிலைச்சாறு 84
ஆல் 112,299,340
ஆலங்கொழுந்து 139
ஆலங்கொழுந்துச் சாறு 186
ஆலம்பால் 253
ஆலம் விழுது 83
ஆலம் விழுதுச்சாறு 144
ஆவரை 300
ஆவாரங் கொழுந்து 129
ஆவாரப் பஞ்சாங்கம் 107
ஆவாரம் செடி 134
ஆவாரம் இலைச் சாறு 148
ஆவாரம் கொழுந்து 128,
ஆவாரம் துளிர் 134
ஆவாரம் பட்டை 53,126,149,210
ஆவாரம் பூ 104,135
ஆவாரம் விதை 125,286
ஆவாரம் விதைச் சூரணம் 137
ஆவாரம் வேர் 151
ஆவாரம் வேர்ப்பட்டை 129,208
ஆவாரை 112,299
ஆவாரை இலை 71
ஆவாரை இலைச்சாறு 210
ஆவாரைக் குடிநீர் 147
ஆவாரைக் குடிநீரை 146
ஆவாரைக் கொழுந்து 207
ஆவாரைத் துளிர் 103
ஆவாரைப்பஞ்சகம் 141
ஆவாரைப் பஞ்சாங்கம் 112
ஆவாரைப்பட்டை 147
ஆவாரைப்பூ 147
ஆவாரையரிசி 127,242
ஆவாரையாதி உருண்டை 137
ஆவாரையாதிக் குடிநீர் 130
ஆவாரையிலை 135
ஆவாரை வித்து 103
ஆவாரை விரை 125
ஆவாரை வேர் 103
ஆவாரைவேர்ப் பட்டை 126,147,242
ஆவாரை வேர்ப்பட்டைச் சூரணம் 137
ஆவிரைக் கொழுந்து 136
ஆற்றுக் குமட்டிக் காய் 55
ஆற்றுத் தும்மட்டிக் காய் 40
ஆற்றுத் தும்மட்டிக் காய்ச் சாறு 76
ஆறுமுகச் செந்தூரம் 16,177,322
ஆனைக்கற்றாழை 266
இங்குலாதிச் சூரணம் 61
இசப்புக் கோல் விதை 231,267
இசப்புக்கோல் விதைத்தோல் 271
இஞ்சி 42,59,216,337
இஞ்சி இரசாயனம் 73
இஞ்சி இலேகியம் 17,81
இஞ்சி இளகம் 57
இஞ்சிச்சாறு 43,57,109,331
இடப்பாட்டீரல் நோய் 333
இடியாவாரை இலேகியம் 141
இடிவல்லாதி 15,53,178
இடிவல்லாதி மெழுகு 21,322

இந்துப்பாதி எண்ணெய் 65
இந்துப்பு 23,36,217,249,282,324
இந்துப்பு எவச்சாரம் 340
இந்துப்பு வெங்காரம் 331
இம்பூறல் 52
இம்பூறல்வேர் 109
இரசக் கந்தி மெழுகு 109
இரசக் கற்பூரம் 86,121,190,221,227,296
இரசக்கெந்தி மெழுகு 14,21,178
இரசச் செந்தூரம் 84,177,323,332
இரசத்தைல்ம் 175,189
இரசநஞ்சு 270
இரசப் பதங்கம் 84,118
இரசப் பற்பம் 15,45,120,186,224
இரசம் 45,119,174,189,293,322
இரசமெழுகு 14,78
இரசவங்கப் பற்பம் 138
இரசவேக்காடு 266
இரணமேகம் 178
இரத்த நீர் 280
இரத்தக் கிரிச்சரம் 277
இரத்தக் குன்மம் 27,
இரத்தப் பித்தம் 333
இரத்தப் பிரமியம் 172,213
இரத்த வாந்தி 155
இரத்த வெட்டை 230
இரத்தபேதி 111,270
இரத்தமேகம் 222,298
இரத்தவாதக் குன்மம் 27
இரத்தவாதப் பித்தக் குன்மம் 27
இராசசிலந்தி 195
இராசப்பிளவை 111,
இரும்புக் கிட்டப்பொடி 327
இரும்புக் கிட்டம் 266
இரும்புப் பொடி 104
இருமல் 9,56,122,180,285,324
இருவி 46,338
இருவேலி 126
இருவேலிவேர் 123
இரேணுகம் 104
இரேவல் சின்னி 273
இரைப்பு 180,333
இலகு வல்லாதி 226
இலசுன ஏரண்டத் தைலம் 340
இலசுனப்புட்டி 336
இலந்தை 157,248,299
இலந்தைப்பட்டை 126
இலவங்க இலேகியம் 104
இலவங்கச் சூரணம் 72
இலவங்கப் பட்டை
37,123,205,206,223,294,299,301,335
இலவங்கப்பட்டை 37,123,205,294,301,335
இலவங்கப்பத்திரி
43,123,202,205,290,297,335
இலவங்கம் 37,41,103,188,220,273,296,335
இலவங்காதி மாத்திரை 176
இலவு 300
இலிங்கக் கட்டுச் செந்தூரம் 76
இலிங்கச் செந்தூரம் 177
இலிங்கப்பற்பம் 279
இலிங்கப்புண் 283
இலிங்கப்புற்று 120,190,190
இலிங்கம் 44,127,189,279,329
இலிங்க மாத்திரை 148
இலுப்பை 22
இலுப்பை இலைச்சாறு 22
இலுப்பை நெய் 254
இலுப்பைக் கொழுந்து 198
இலுப்பைப்பட்டை 334
இலுப்பைப் பிண்ணாக்கு 182
இலுப்பைப்பூ 222,291
இள நீர் 94,208,282,291
இளநீராதி நெய் 230
இளைப்பு 8
இனிப்பு நீர் 87
இனிப்பு நீர்க் கட்டிகள் 97
இனிப்பு மேக நீர் 92
ஈச்ச மரம் 267
ஈசல் சூரணம் 155
ஈயத்தண்டின் சமூலம் 324
ஈரல்நோய்கள் 154
ஈருள்ளி 245,287
ஈருள்ளிச் சாறு 191,242,286
ஈருள்ளிப்பூண்டு 286
ஈளை 180,187,285,326
உக்காரச் சூலை 5,13,15
உகாவேர் 65
உச்சிப்பிளவை 120

உசிலம்பிசின் 208
உட்காங்கை 295
உட்சூடு 115,271
உட்டிணம் 180
உடம்பு எரிவு 252,274
உடல் இளைப்பு 298
உடல் எரிச்சல் 296
உடல் எரிவு 177
உடல் பலவீனம் 111
உடல் வீக்கம் 270
உண்ணு நீர் 280
உத்தமமா மேகம் 93
உத்தாமணிச்சாறு 12,212,215
உத்தாமணிவேர் 301
உத்தியானா 302
உதகமேகம் 95
உதரப் பெருவயிறு 317
உதர ரோகம் 305
உதரவாய்வு 329
உப்பில்லா பத்தியம் 14
உப்பிலாங்கொடிச் சாறு 119
உப்பு 56,113,334
உப்புச் சூரணம் 78
உப்புச் செந்தூரம் 49,
உப்புசம் 16
உப்பு நீர் 95
உருத்திர சடை 267
உருத்திராக்கம் 291
உலர்த்தின வெள்ளறுகு 220
உலர்த்துச்சூலை 6,10
உலர்ந்த ஆலிலை 132
உலர்ந்த திராட்சை 104
உலோக மண்டூரச் செந்தூரம் 327
உவர் உப்பு 282
உவர்மண் உப்பு 59,60
உழலை 291
உள் சூடு 269
உள்மாந்தம் 338
உள்வரட்சி 298
உள்ளழலை 267
உள்ளிப்பூண்டு 65,271
உள்ளுருக்கி 108,208
உளுந்தின் மா 120,191
உளுந்து 56,334
உளுந்துமா 44
உன்மாதம் 107,325
உஷ்ணவாயு 155
ஊசிக் கந்தகம் 68
ஊசிப்பாலை 274
ஊசிமல்லிகைச் சாறு 284
ஊதுகாமாலை 281
ஊமத்தைச் சாறு 49
ஊமத்தை விதை 127,137,224
ஊராம்பல் பெருவயிறு 312
ஊழலாற்றிப் பட்டை 37,234,334
எ.்குச் செந்தூரம் 81,322
எ.்குப் பொடி 81
எட்டிக்கனி இரசம் 85
எட்டிப்பட்டை 334
எட்டிவிதை 187
எரி குன்ம நெய் 66
எரிகுன்மம் 26,71,155
எரி குன்ம வாயுக் குடிநீர் 64
எரிவு 124
எருக்கஞ்சமூலச் சாறு 122
எருக்கம் பழுப்புச் சாறு 71
எருக்கம்பால் 53,121
எருக்கம் பிஞ்சு 247
எருக்கம்பூச்சாறு 69
எருக்கன்சாறு 49
எருக்கன் வேர் 113
எருக்கிலை 159
எருக்கிலைச்சாறு 85
எருமைத்தயிர் 208
எலிப்புழுக்கை 280,322
எலும்புருக்கி 205
எலுமிச்சம் பழச்சாறு 41,42,81,118,181,203,245,283,301
எலுமிச்சம் பழத் தோல் 237
எலுமிச்சம்பழம் 57,251,286
எலுமிச்சை 337
எவாச்சாரம் 55,71,216,296,335
எள் 56,223,232
எள்ளுச் செடி 277
எள்ளுப் பிண்ணாக்கு 124,135
எள்ளுப்பிண்ணாக்கு இலேகியம் 149
என்பு சுரம் 108,219,297
என்புருக்கி நோய் 115,121,204,219

என்புவெட்டை 220
ஏகமூலிகைச் சூரணம் 58
ஏப்பம் 292
ஏரங்கலரிசி 129
ஏரண்டத் தைலம் 65
ஏரண்டத்தெண்ணெய் 246
ஏரழிஞ்சில் 265,299
ஏலக்காய் 38,299
ஏலக்காய் வித்து 232
ஏலம் 47,104,175,192,273,297,330
ஏலரிசி 51,109,190,222,296,330
ஏலாதி குடிநீர் 76
ஏலாதி சூரணம் 16
ஏலாதி மாத்திரை 136
ஐந்துப்பு 55
ஐய அழல் சூலை 10
ஐயக் குன்மம் 26,
ஐயச்சூலை 5
ஐய நீர் 93
ஐயப் பெருவயிறு 309
ஐய வளி சூலை 10
ஒழுக்குப் பிரமியம் 169
ஓதி 127,248,299
ஓதியம்பட்டை 146,210,334
ஓமத்தூள் 230
ஓமம் 23,36,83,128,211,217,290,297329
ஓரிலைத் தாமரைச்சாறு 230,243,298,325
கக்கரிக்காய் 268
கச்சக்காய் 273
கச்சோலம் 208,296
கசகசா 150,189
கஞ்சா 157,253,268
கஞ்சா இலைச் சூரணம் 205
கட்டி 9,234
கட்டிப் பிரமியம் 167
கட்டு 180
கட்டுக் கொடி 129,268
கட்டுக் கொடி இலைச் சாறு 117
கட்டுக் கொடிக் கொழுந்து 134
கடம்பிலைச்சாறு 84
கடம்பு 299
கடல் தேங்காய்க் குடிநீர் 150
கடல்நுரை 324
கடலழிஞ்சில் 103,112
கடலழிஞ்சில் சத்து 149
கடலழிஞ்சில் பட்டை 130,131,208
கடலழிஞ்சில் பட்டை இலேகியம் 150
கடலிராஞ்சி 126
கடலிராஞ்சிப் பட்டை 124,126
கடலுப்பு 60,333
கடலை 268
கடலைப்பருப்பு 86,192,279
கடிவிடம் 116
கடுக்காய் 36,37,109,232,265,320,338
கடுக்காய்ச் சாறு 82
கடுக்காய்த் தூள் 290
கடுக்காய்த்தோல்
54,55,103,131,190,217,272,290,333,334
கடுக்காய்ப் பிஞ்சு 72
கடுக்காய்ப்பூ 232
கடுக்காய்ப்பூச் சூரணம் 72
கடுகு 35,127,297,330
கடுகுரோகணி 12,36,37,216,217,288,322,332
கடுகுரோகணி வடகம் 17
கடுப்பு 124,180
கண் புகைச்சல் 296
கண்காசம் 291
கண்டங்கத்தரி 62,192,301
கண்டங்கத்தரி இலேகியம் 16
கண்டங்கத்தரிச்சாறு 57
கண்டங்கத்தரிவேர் 43,175,250
கண்டத்திப்பிலி 59,62,202,217,219
கண்டமாலை 80,120,180,223,337
கண்டாசனம் 302
கண்டுபாரங்கி 55,232
கண்ணுசாமியம் 13,141,232
கண்ணோய் 281
கணப்பூண்டு 113
கணைச்சூடு 229
கத்தரி 156,342
கத்தரிக்காய் 67,228
கத்தரிப் பெருங்காய மருந்து 67
கத்தரிப்பிஞ்சு 161
கத்தரியிலை 270
கதலிக்கந்த கிருதம் 299
கதலி பழச்சாறு 246
கந்தக இரசாயனம் 86,179,192,279
கந்தகச் சுடர்த் தைலம் 58,180

கந்தகச் சூரணம் 297,335
கந்தகச் செந்தூரம் 85,279
கந்தகத் தைலம் 66,191
கந்தகப் பற்பம் 177,224
கந்தகம் 46,108,174,279,322,332
கந்தக மெழுகு 120,191,253
கந்தகரசாயனம் 250
கந்தி 279
கந்தி மெழுகு 109
கபக் கடின விரணத்தில் 182
கபக் கல்லடைப்பு 258,
கபகாசம் 292
கபசுரம் 325
கபநோய் 281
கப நீர்க்கட்டு 285
கபப் பிரமியம் 166
கப மூத்திரக் கிரிச்சரம் 261
கபமேக உஷ்ணத்திற்குக் 194
கபமேகப்பிணி 195
கப மேகம் 197
கபலலித விரணம் 182
கம்பிப்பிசின் 211
கம்மாறு வெற்றிலைச் சாறு 186
கமலாக்கினி 76
கமுகம் பாளைச் சாறு 81
கர்க்கடகசிங்கி 136
கர்ச்சாலையாதி இலேகியம் 205
கர்ச்சூரக்காய் 151
கர்ப்ப மேகநோய் 224
கரந்தைச் சூரணம் 249
கரந்தையிலைச் சாறு 181
கரப்பான் பண்டம் 183
கரப்பான் பிரமியம் 170
கரபாதச் சூலை 8,20
கரபாதசன்னி 122
கரளை 228
கரிசாலை 75,234
கரிசாலைக் குடிநீர் 13
கரிசாலைச் சாறு 83
கரிசிலாங்கண்ணி 232,279
கரிப்பான் குடிநீர் 290
கரியசீரகம் 198
கரியபோளம் 112
கரியுப்பு 36,327
கருங்காலி 113,300
கருங்காலிப்பட்டை 126,208,298
கருங்காலிப் பிசின் 113
கருடப்பச்சை 208
கருடன் கிழங்கு எண்ணெய் 13
கருடன் கிழங்குத் தைலம் 180
கருணைக்கிழங்கு 335
கருணையிலைச் சாறு 119
கருநாபி 46
கருப்பஞ்சாறு 82,230,278
கருப்பு 217,268
கரும்புச் சாறு 290,298
கருமேகம் 142,180
கருவங்கச் செந்தூரம் 118
கருவங்கப் பற்பம் 119
கருவங்கம் 301
கருவாப்பட்டை 273
கருவேல் 299
கல் பிரமியம் 170
கல் பெருவயிறு 310
கல்நார் 104,127,208,275
கல்நார் பற்பம் 196,236,285
கல்மதம் 103,208,290
கல்லடைப்பு 154,196,258
கல்லத்திப்பட்டை 288
கல்லால் சமூலச் சாறு 85,196
கல்லீரல் கட்டி 281
கல்லுப்பு 23,49,216,282,331,335
கல்லுப்புச் சுண்ணம் 76
கல்லுருவி இலைச் சாறு 155,158
கலியாண முருக்கு 268
கலியாணப் பூசணிக்காய் 176,268
கலைக்கொம்பு 243,244
கவிச்சி நீர் 95
கவிசை 183,323
கவிசைக்கட்டி 328
கவுசி 305
கவுதாரி 161
கவுரித்தும்பை 80
கவுரிவால் புல்சாறு 186
கவுஸ்பான் 121
கழற்கொடி 65
கழற்கொடிச் சாறு 334
கழற்சி 336

கழற்சி எண்ணெய் 12
கழற்சிக்காய் பருப்பு 64
கழற்சிக்கொடிக் கொழுந்து 64
கழற்சிப் பருப்பு 38,324
கழற்சி விரை 336
கழற்சி வேர் 12
கழிச்சல் 133,276
கழுநீர் 94
கள்ளிப்பால் 40,53,340
கள்ளிவேர்ப்பட்டை 37,38
களா இலைச்சாறு 84
களிப்பாக்கு 214
கற்கடகசிங்கி 73,208,220,294,295
கற்கோவை 269
கற்சுண்ணம் 284
கற்சூராதி சூரணம் 298
கற்பச்சூலை 7,15
கற்பாசி 269
கற்பூர சிலாசத்து 195,121,238,288
கற்பூர சிலாசத்துப் பற்பம் 15,195,196, 283
கற்பூரப் புல் 270
கற்பூரம் 104,249,297,331
கற்பூரவள்ளி 246
கற்பூரவள்ளிச் சாறு 85,210
கற்றாழஞ்சோறு 243,302
கற்றாழை 269,321
கற்றாழைக் கிழங்கு 252
கற்றாழைச்சாறு 48,279,295
கற்றாழைச்சோறு 269
கற்றாழை மணநீர் 91
கற்றாழை வேர் 266
கற்றாழை வேர்ச்சாறு 278
கறிமஞ்சள் 136,321
கறிமுள்ளி 268
கறியுப்பு 42,215,331
கறியுப்புச் செந்தூரம் 80
கறியுப்புப் பற்பம் 121,281
கறிவேப்பிலை 56,250
கறிவேப்பிலை இளகம் 72
கறிவேப்பிலைக் குடிநீர் 63
கறிவேப்பிலை சூரணம் 16
கறிவேப்பிலை வடகம் 17,56
கறிவேம்பு 113
கறுங்கடுகு 337
கறுங்காஞ்சொறி 113
கறுங்காலிப்பட்டை 129
கறுங்குட்டம், 223
கறுங்குறுவை அரிசிமா 134,
கறுங்குறுவையரிசி 124
கறுங்கொடி வேலிவேர் 12
கறுங்கோழிச் சூரணம் 76
கறுங்கோழி சதை 338
கறுஞ்சீரகம் 43,123,204,296,330,338
கறுநொச்சி 63,252
கறுநொச்சிக் குடிநீர் 63
கறுப்பு அப்பிரகம் 107
கறுப்பு ஊமத்தங்காய் விதை 187
கறுப்பு ஊமத்தங்காய் விதைக் குழித் தைலம் 186,
கறுப்பு எள் 336
கறுமேகம் 180
கறுவங்கச் சுண்ணம் 18,235
கறுவங்கச் செந்தூரம் 153
கறுவங்கப்பற்பம் 45,141,176
கறுவங்கம் 235,239,253
கறுவாப்பட்டை 228
கறுவேல் 126,248
கறுவேலம் பட்டை 116,131,216
கறுவேலம் பிசின் 116,127,208
கறுவேலம்பூ 132
கறைச்சூலை 6
கன்னப்புற்று 249
கஸ்தூரி 48,129,282
கஸ்தூரி கருப்பு 19
கஸ்தூரி மஞ்சள் 54,56,136,227,248,300,338
கஸ்தூரி மான்கொம்பு 291
கஸ்தூரிமஞ்சள் 56,248,300
காக்கட்டான் மாத்திரை 11
காக்கட்டான் வேராதிக் குடிநீர் 321
காக்கண வேர் 12,266,340
காக்கை வலி 155,285
காங்கை 195
காசம் 180,270,326
காசிரத்னம் 113
காசினி 303
காசினிவிரை 266,321
காசுக்கட்டி 125,127,242,248
காஞ்சொறி 113

காஞ்சொறிவேர் 265
காட்டாத்திப்பூ 83,202,295
காட்டாமணக்கு 253
காட்டாமணக்கு வேர் 12,47
காட்டு எள்ளு 36,268
காட்டுக் கொள்ளு 269
காட்டுக்கிராம்பு 269
காட்டு மல்லிகைச் சமூலச்சாறு 196
காட்டுமல்லிவேர் 103,116
காட்டு மிளகு 56
காட்டு முருங்கைப் பட்டை 40
காட்டு முள்ளங்கி 269
காட்டு வெங்காயம் 269
காட்டெருமைப்பால் 56
காடாக்கினி 76
காடி 43
காடை 161
காணான் சமூலச் சாறு 121,281
காதிரைச்சல் 326
காந்தச் செந்தூரம் 181,152,327,323
காந்தட்கிழங்கின் சாறு 45
காந்தப் பற்பம் 158,224,322
காந்தப் பொடி 47,324
காந்தம் 48,119,181,290,327
காந்தள் சமூலச்சாறு 278
காமாலை 84,109,181,274,321
காமாலைப் பெருவயிறு 316
காய்ச்சுக்கட்டி 190
காயம் 38,126,324
காயாம்பூச் செடி 269
கார்கோலரிசி 291
கார்போகரிசி 189
காரீயச் செந்தூரம் 137
காரீயப் பற்பம் 325
காரீயம் 125,341
காரையிலை 199
காரை விதை 187
கால்பிடிப்பு 156
காவிக்கல் 243
காவிக்கல் செந்தூரம் 80
காளமேகச் செந்தூரம் 80
காளமேக நாராயணச் செந்தூரம் 16,290
கிச்சிலிக் கிழங்கு 56,222
கிட்டம் அரப்பொடி 127
கிரந்தி 174,178,279
கிரந்திசூலை 175
கிரந்தி தகரம் 151,298
கிரந்தி நாயகம் 234,252
கிரந்திப்புண் 214
கிரந்தி விரணம் 221
கிராணி 79,155,208,328
கிராம்பு 52,109,224,289,330
கிரிச்சரப் பிரமியம் 169
கிருபையாதரசம் 339
கிருஷ்ணா அப்பிரகச் செந்தூரம் 136
கிருஷ்ணா அப்பிரகம் 106,144,326
கிளிஞ்சல் சதை 338
கிளிஞ்சல் பற்பம் 284
கிறுகிறுப்பு 78
கீடவேர் 157
கீரைத்தண்டு 187,270
கீல்வாயு 327
கீழ்க் கவிசைப் பெருவயிறு 313
கீழ்க்காய் நெல்லி 128
கீழ்நோக்குக் கால் 11,34,88,100
கீழாநெல்லி 14,113,157,193,266
கீழாநெல்லிக் கிருதம் 157
கீழாநெல்லிச்சாறு 210
கீழாநெல்லியிலை 286
கீழாநெல்லிவேர் 244
குக்கில் 215,300
குக்கில் தைலம் 18,21
குக்கில் நெய் 216
குக்கில் பற்பம் 22,285
குக்கில் வல்லாதி 216
குக்கில் வல்லாதி இலேகியம் 232
குக்கிலாதிச் சூரணம் 215
குக்குலாதி மாத்திரை 69
குங்கிலியச் சூரணம் 78
குங்கிலியத் தைலம் 20
குங்கிலியப் பற்பம் 15,177,292
குங்கிலியம் 69,104,292
குங்கிலிய வெண்ணெய் 110,180,295
குங்குமப்பூ 47,114,219,249,253,273
குங்குமப்பூ மாத்திரை 47
குட்டம் 109,177,297,335
குடசப்பாலை 114
குடைச்சல் 239

குணபாடம் தாது சீவ வகுப்பு 117,181
குணபாடம்-மூலிகை 111
குத்து 290
குந்தனத் தங்கத்தகடு 118
குந்திரிக்கம் 114
குப்பைமேனி 86,192,337
குப்பைமேனிச் சாறு 49,84,245,325,326
குப்பைமேனியிலை 245
கும்பகமில்லாத உச்சயினி 302
குமட்டி உப்பு 21
குமட்டி எண்ணெய் 37
குமட்டிக்காய் 83
குமட்டிக் காய்ச்சாறு 53,331
குமட்டிக் குழம்பு 12,53,331
குமட்டிக்காய் எண்ணெய் 65
குமட்டி சூரணம் 55
குமட்டி மெழுகு 15
குமரி 80,119
குமரிச்சாறு 80,121
குமரித்தைலம் 54,178
குமிழ்வேர் 298
குமிழாதிக் குடிநீர் 132
குருதிக் கழிச்சல் 113
குருதியழல் 115
குருவேர் 114
குரோசாணிஓமம் 42,54,123,175,250,252,265
குரோசாணிச் சூரணம் 203
குலமுட்டிப் பெருவயிறு 313
குழிகிரந்தி 178
குழிப்பட்ட விரணம் 190
குழிமீட்டான் கிழங்குச் சாறு 290
குளிர் சுரம் 336
குறட்டை 114
குறிஞ்சா இலை 288
குறிஞ்சாவேர் 335
குறுக்கத்திப்பூச்சாறு 176
குறுசுல் வேர்ப்பட்டைச்சாறு 278
குறுவேர் 208
குறை நோய் 116
குன்ம அனல் புண் 85
குன்மக் குடோரி இலேகியம் 16
குன்மக் குடோரி இளகம் 74
குன்மக் குடோரிக் கற்கம் 37
குன்மக் குடோரிப் பூண்டு 37,38
குன்மகுடோரி மெழுகு 21,55
குன்மச் சூலை 6,11,17
குன்மப் பெருவயிறு 316
குன்மம் 9,25,37,109,192,274,324
குன்றி 299
குன்றிமணி இலை 132
சூகைநீறு 56,123,230,232,246,274
கூர்மப் பெருவயிறு 317
கூழ்ப்பாண்ட இலேகியம் 251
கூழ்ப்பாண்டச் சாறு 251
கூழ்பாண்டக் கிருதம் 208
கூழ்ப்பாண்டச் சூரணம் 249,290
கெண்டை 305,
கெந்தி 121,192
கெருடப்பச்சை 127
கேசரி இலேகியம் 16,57
கேழ்வரகு 114
கைகால் காந்தல் 180
கைகாலெரிவு 177
கையாந்தகரை 39
கையான் 217,
கையான் இலை 198
கையான் சமூலம் 205
கையான்சாறு 198,208
கொங்குவேர் 301
கொங்கைக் குத்து 217
கொட்டிக்கிழங்கு 133
கொட்டியிலைச் சாறு 121,281
கொட்டைக் கரந்தை 40,205,242,337
கொட்டைக் கரந்தை இலை 339
கொட்டைக் கரந்தைச் சமூலம் 79
கொட்டைக் கரந்தைச் சாறு 46,334
கொட்டைக் கரந்தை வேர் 301
கொட்டைத் திராட்சை 36
கொட்டை முந்திரிகை 37
கொடிக்கள்ளி 232
கொடிக்கள்ளிச் சாறு 240
கொடிக்கள்ளிப்பால் 229,332
கொடி நாரத்தைச் சாறு 45
கொடி நாரத்தைப் பழச்சாறு 42
கொடி வேலிவேர் 65
கொடிப்பிரண்டைச் சாறு 66
கொடிவேலி 59,112,232,297,338
கொடிவேலி இலை 330

கொடிவேலி எண்ணெய் 252
கொடிவேலிச்சாறு 45
கொடிவேலிப்பட்டை 339
கொடிவேலியாதி சூரணம் 61
கொடிவேலி வேர்ச் சூரணம் 68
கொடிவேலி வேர்த்தோல் 62
கொடிவேலி வேர்ப்பட்டை 36,38,136,213
கொடிவேலிவேர் 59,61,250,301
கொடிவேலிவேர்ப் பட்டை 40,202,217
கொடுப்பைச்சாறு 45
கொத்தவரைச் சாறு 117
கொத்துமல்லி 42,131,202,290,294,338
கொத்துமல்லி விதை 217,219,273
கொப்பரைத் தேங்காய் 187
கொம்புக் கள்ளி 36
கொம்புப்பாகலிலைச் சாறு 117
கொமண் வேர் 157
கொல்லன் கோவைக் கிழங்கு 247
கொல்லிவேர் 301
கொமுஞ்சிப் பட்டை 38
கொழுஞ்சி விதை 208
கொழுஞ்சி வேர் 288,
கொள்ளு 56
கொள்ளுக்காய்வேளை 232
கொள்ளுமா 44
கொறுக்குப்புண் 190
கொன்றை 112,300
கொன்றைக் கிருதம் 301
கொன்றைப் பட்டை 126,321
கொன்றைப்பூ 104
கொன்றையிலைச் சூரணம் 133
கொன்றைவேர் 55,65,103,301,333
கோங்கிலவம் பட்டை 255
கோங்கிலவம்பூச்சாறு 108,292
கோங்கு 301
கோடாசலக் குளிகை 157,302
கோடாசூரி மாத்திரை 11,46,175,323
கோதுமை 114
கோதுமைமா 44
கோபுரந்தாங்கி இலை 302
கோமூத்திரச் சிலாசத்து 122,284
கோரைக் கிழங்கு 37,103,131,201,216,290
கோரோசனை 47,122,219,291,330
கோரோசனைத் துகள் 330
கோரோசனை மாத்திரை 122
கோவை 114,184,279
கோவை இலை 302
கோவைச் சர்க்கரை 140
கோவைச் சாறு 195
கோவைத் தண்டு 289,321
கோவைத் தண்டுச் சாறு 121,288
கோவைத் தண்டு சூரணம் 133
கோவைப்பழவிதை 325
கோவையாதிக் கிருதம் 209
கோவையிலை 189,
கோவையிலைச் சாறு 200,
கோவைவேர் 301
கோழிக்கரு 280
கோழிக்காரம் 280
கோழிமுட்டை 71,244
கோழை கக்கல் 9
கோஷ்டம் 35,41,103,112,217,234,290,334
கௌசிகர் குழம்பு 12,53,110,179,332
கௌரி 332
கௌரி சிந்தாமணி 49
கௌரி சிந்தாமணி செந்தூரம் 108,177,293,328
சகதேவி 266
சகதேவித் தைலம் 295
சகல மேக ரசாயனம் 250
சங்கங்குப்பிச்சாறு 220
சங்கத்திராவகம் 189,278
சங்கம் வேர்ப்பட்டை 220
சங்கம்பட்டை 334
சங்கம்வேர் 233,301
சங்கன் 270
சங்கன் குப்பி 253
சங்கன்குப்பிச்சாறு 334
சங்கன் குப்பியிலை 220,234
சங்கன் வேர் 250,321
சங்கன் வேர்ப்பட்டை 202
சங்கனாதி இலேகியம் 205
சங்கனாதிச் சூரணம் 202
சங்கிலை 287
சங்கு 68,252,301
சங்குநீர் 75
சங்குப்பொடி 290
சங்கு பற்பம் 15, 53, 73

சங்கு பாடாணம் 80
சஞ்சீவி மாத்திரை 11,35
சடாமாஞ்சில் 150,217,285,334
சடாமாஞ்சில் தைலம் 18
சண்டமாருதக் குழம்பு 12
சண்டமாருதச் செந்தூரம் 6, 21
சண்டரசப் பற்பம் 48,177,327
சண்பகத் தைலம் 54,178
சண்பகத்தின் சாறு 181
சண்பகப்பூ 123,243,270
சண்பகமொக்கு 294
சத்தி (வாந்தி) குன்மம் 26,63
சத்திச் சாறணை 213,271
சத்திச் சாறணைக் கிழங்கு 77
சத்திச்சாரம் 53,217,335
சதக நாடி 10,257, 305
சதகுப்பை 36,123,175,294,336
சதாவேரி இரசாயனம் 203
சதாவேரிக் கிழங்கு 203,206
சதாவேரிக் கிழங்குச் சாறு 290
சதாவேரி நெய் 290
சதுரக் கள்ளி 60
சதுரக் கள்ளி வேர்ப்பட்டை 338
சதுரக் கள்ளிப்பால் 333
சதை நீர் 90
சதையடைப்பு 108,198,268,324
சந்தன அத்தர் 222
சந்தன ஊறல் நீர் 271
சந்தனக் குழம்பு 82
சந்தனக் குழம்புத் தெளிநீர் 196
சந்தனச் சூரணம் 249
சந்தனத்தூள் 56,104,202
சந்தனத்தைலம் 282
சந்தன நெய் 222
சந்தனப் பொடி 104
சந்தனம் 46,126,192,271
சந்தனாதிச் சூரணம் 222
சந்தனாதித்தைலம் 54,178
சந்நிபாதக் குன்மம் 34
சப்த வீராசனம் 302
சப்ஜாவிதை 231
சம்பாகோதுமை 161
சம்பா புழுங்கலரிசி 133
சயகுலாந்தகச் செந்தூரம் 16
சயகுலாந்தகம் 19
சயம் 56,177,180,285,333
சர்க்கரா 258
சர்வாங்க வாய்வு 239
சர்வாங்காசனம் 302
சரக்கொன்றைக் கொழுந்து 207
சரக்கொன்றை சமூலச்சாறு 279
சரக்கொன்றைப் பட்டை 130,216
சரக்கொன்றைப் புளி 265, 272,296,320, 322
சரக்கொன்றைப்பூ 140
சரக்கொன்றைப்பூக் குடிநீர் 151
சரக்கொன்றையிலை 133
சரபங்க வில்வாதி இலேகியம் 57
சரபேந்திரர் வைத்திய முறை 32
சரள தேவதாரு 300
சலப் பிரமியம் 168
சலப்பிரமேகம் 125,196
சலமஞ்சரி 13,290
சலோதாரி மணி 13,
சவ்வீரம் 17,75
சவர்க்காரம் 55
சவிரண மேகம் 92
சவுக்காரம் 59,217,337
சவுட்டுப்பு 70
சன்ன இலவங்கப் பட்டை 210,232,252
சன்னலவங்கம் 125
சன்னி 74,109,240,326
சன்னி (முக்குற்றக்) குன்மம் 26,28
சாணநீர் 338
சாணிநீர் 302
சாத்திரபேதி 66,198,289,298,338
சாத்திரபேதி 66,298
சாதிக்காய்
37,38,57,109,204,219,273,294,330,338
சாதிக்காய் இலேகியம் 185
சாதிப்பத்திரி
37,41,104,123,206,210,232,234,294,295,330
சாதிலிங்கப் பற்பம் 327
சாதிலிங்கம் 80,121,226,338
சாதுர்சாதம் 253
சாந்தர மேகம் 92
சாம்பிராணி 51,109,300,330
சாம்பிராணிப்பூ 47,330
சாம்பிராணிப்பூ பதங்கம் 51,109,330

சாமந்தி இலை 330
சாமந்திச் சாறு 117
சாமானிய அழல் குன்மம் 27
சாமானிய ஐயக் குன்மம் 27
சாமானிய வளி குன்மம் 27
சாமை 132
சாமையரிசி 129
சாயவேர்ப்பட்டை 213
சாரப் பருப்பு 52,109,228,230,330
சாலாமிசிரி 231,271
சாறணை 337
சாறணைக் கிழங்கு 217
சாறணை வேர் 23,36,38,61,83,335
சாறணை வேர்ச் சூரணம் 61,336
சாறுவேளை 337
சாறு வேளை வேர் 321
சிகிச்சா இரத்தின தீபம் 148
சிங்காரக்கிழங்கு 271
சிங்கி 81
சிங்கிச் செந்தூரம் 239
சித்த மருத்துவம் 103,322
சித்த வைத்தியத் திரட்டு 106,175,291,323
சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம் 149
சித்தபலாதித் தைலம் 299
சித்தாதி எண்ணெய் 12,37,333
சித்தாதித் தைலம் 180
சித்திரமூலச்சாறு 84,119,185
சித்திரமூலப் பட்டை 253
சித்திரப்பாலாடை 128,129
சித்திரமூலம் 81,250,297,335
சித்திரமூலவேர் 36
சித்திரமூலவேர்ப்பட்டை 43,192,212,279,333
சிம்மாசனம் 302
சிரங்கு 109,234
சிரசாசனம் 302
சில்லிக் கீரை 38
சிலாசத்து 206,275
சிலாசத்துப் பற்பம் 15,73,177,285,292
சிவகரந்தை வேர் 301
சிவதை 340
சிவதைச் சூரணம் 59
சிவந்திப்பூ 65
சிவதை வேர் 12,23,36,37,47,175,266
சிவப்புச் சந்தனம் 104
சிவப்பு நாயுருவி 145
சிவன் வேம்புப்பட்டை 334
சிவனார் அமிர்தம் 51,281
சிவனார் வேம்பு 148,220,212, 233,252
சிவனார்வேம்புக் குழித்தைலம் 233
சிவனார்வேம்புச் சமூலம் 202,220
சிற்றரத்தை 42,151,232,337
சிற்றரத்தையிலைச் சாறு 184
சிற்றாமணக்கிலை 18
சிற்றாமுட்டி 37,36,56,126,287
சிற்றாமுட்டிக் குடிநீர் 21
சிற்றாமுட்டிவேர் 43,252
சிற்றாமுட்டி வேர்த்தோல் 299
சிற்றிலைப்பாலாடை 241
சிற்றீச்சன் 267
சிற்றேலம் 296
சிறிய சீரகம் 157
சிறுகட்டுக்கொடியிலைச் சாறு 130
சிறுகண் நாகம் 83,183
சிறுகாஞ்சொறி 113
சிறுகாஞ்சொறி வேர்ப்பட்டை 220
சிறுகீரை 124,242,270,321
சிறுகீரையாதிக் குடிநீர் 321
சிறுகீரைவேர் 131,157,199,210,287
சிறுகுமிழ் வேர் 300
சிறுகுறிஞ்சான் 321
சிறு கூழ்ப்பாண்ட இலேகியம் 251
சிறுசெருப்படை 119
சிறுசெருப்படைச்சாறு 195
சிறுதும்பைச் சாறு 77
சிறுதேக்கு 36,37,125,151, 216,290,338
சிறுநாகப்பூ 55,104,149, 206,273,333
சிறுநீர் எரிச்சல் 112,255,255
சிறுநெருஞ்சி 275,273
சிறுநெருஞ்சிச் சாறு 193,281
சிறுபாவட்டைவேர் 201
சிறுபீளை 155,265
சிறுபீளைச் சமூலம் 275
சிறுபீளைச்சாறு 193,281,282
சிறுபீளைவேர் 266,287
சிறுபீளை வேர்ப்பட்டை 230,275
சிறுபுள்ளடி 129,244,276,301
சிறுபுள்ளடிச் சாறு 195

சிறுபூனைக்காலிச்சாறு 325
சிறுமுள் கத்தரி 67
சின்னி 253
சீத்தா இலை 159
சீதக்கழிச்சல் 267
சீதப் பிரமியம் 168,199
சீதபேதி 270
சீதவீரிய மூலிகை 177
சீதாப்பழ மரவிலைச் சாறு 184
சீதேவி 126
சீதேவி செங்கழுநீர் 287
சீதேவிச் செங்கழுநீர்ப் பூண்டு 183
சீதேவி செங்கழுநீர் வேர் 22
சீந்தில் 36,37, 112,287
சீந்தில் கிழங்கு 136,298
சீந்தில் குடிநீர் 230
சீந்தில் கொடி 145,216
சீந்தில் கொடிக் குடிநீர் 151
சீந்தில் கொடிவேர் 65
சீந்தில் சர்க்கரை 56,104,222
சீந்தில் தண்டு 36, 43,129,201,289
சீந்தில் பொடி 104
சீமைக் கல்நார் 237
சீமைக் காசினிக் கீரை 342
சீமைச் சதாவரிக் கிழங்கு 223
சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு 228,271
சீமைநீர்முள்ளி விதை 231
சீரக இளகம் 70
சீரகச் சூரணம் 203
சீரகம் 36,37,104,202,230,272
சீரகாதி இலேகியம் 16
சீரகாதி சூரணம் 16
சீராசெங்கழுநீர் 246
சீழ் இரத்தம் 125
சீழ் நீர் 90
சீழ்மேகம் 124,222
சீனம் 73,290
சீனாக் கற்கண்டு 129,203
சீனாக்காரம் 17,42,217,275
சுக்கிரம் 258
சுக்கிலப் பிரமியம் 200
சுக்கிலமேகம் 80,94,207,230
சுக்கு 12,35,61,253,104,183,273,324
சுக்குக் குடிநீர் 181
சுடர் தைலம் 85,191
சுடுதுரத்தி வேர் 252
சுண்டை வற்றல் 37
சுண்டைவேர் 216
சுண்ண மணநீர் 91
சுண்ணநீர் 234
சுண்ணாம்பு 111,190,287
சுத்த மேகம் 90
சுயமாக்கினி 340
சுயமாக்கினிச் செந்தூரம் 16,50,328
சுரச்சூலை 7
சுரப் பெருவயிறு 318
சுரப்புன்னை சமூலச்சாறு 279
சுரபுன்னைப்பட்டை 334
சுரபுன்னையிலைச் சாறு 85,196
சுரம் 9,107,187,327
சுர வெப்பம் 270
சுரவேகம் 270
சுரை 187
சுரைக் கீரை 271
சுரைக்கொடி 175,265,266,320
சுரையிலைச் சாறு 84
சுரை வித்து 342
சுரை விதைப்பருப்பு 228
சுவையின்மை 320
சுறாமீன் தலைக்கல் 288
சுனை நீர் 258
சூட்சும மேகத்தெண்ணெய் 211
சூடம் 74
சூடன் 282
சூதக்கருப்பு 84
சூதகக் கட்டு 15
சூதகச் சூலை 15
சூதகத்தடை 277
சூதகவாயு 15,75
சூதப்பற்பம் 236,237
சூதம் 143,234,235
சூரணராசன் 335
சூரத்துக் கடுக்காய் 40
சூரத்துக் கற்பூரம் 80
சூரைவித்து 324
சூரைவேர் 265
சூல் பெருவயிறு 315
சூலை 1,85,109,191,212,279,297,326,331

சூலைக் குடாரம் 13,46
சூலை குன்மம் 27,38
சூலை பூபதி மாத்திரை 13
சூலைநோய் 341
சூலைப் பிடாரம் 337
செங்கடுக்காய்த் தோல் 217
செங்கந்தாரி 321
செங்கந்தாரிப் பட்டை 220
செங்கந்தாரி வேர்ப்பட்டை 213
செங்கரும்பின் சாறு 278
செங்கல் கிட்டம் 321
செங்கழுநீர் 300
செங்கழுநீர்க் கிழங்கு 41, 79,291,298
செங்கழுநீர்ப்பூச்சாறு 108,292
செங்கிலுப்பைப் பட்டை 126
செங்கிளுவை 127
செங்கிளுவைப்பட்டை 128
செங்குறுவை 341
செஞ்சந்தனம் 208,300
செண்பகப்பூ 66,155,206,300
செண்பக மொக்கு 221
செந்தாமரை 287
செந்தொட்டி 126
செந்நாயுருவி 67
செப்பு நெருஞ்சில் 271
செப்பு நெருஞ்சில் இலைச்சாறு 239
செப்பு வன்னியிலைச் சாறு 119
செம்பணாத்தி 127
செம்பரத்தம் பூச்சாறு 213
செம்பரத்தை 271
செம்பருத்தி 274
செம்பருத்தி விரை 104
செம்பருத்திச் சாறு 80
செம்பருத்திப்பூ 51,268
செம்பருத்திப்பூச் சாறு 48
செம்பு 48,292
செம்புச் செந்தூரம் 181
செம்புப் பற்பம் 15,44,45
செம்பைச் சாறு 82
செம்முள்ளி 65
செரியாமை 179
செருப்படை 234
செருப்படைச்சாறு 334
செவ்வகத்திப்பூ 145
செவ்வந்தியிதழ் 104
செவ்வல்லிக் கொடி 289,300
செவ்வியம் 38,69,216,232,297,335
செவ்விளநீர் 295
செவ்விளநீர் உப்பு 294
சேங்கொட்டை 54,192
சேங்கொட்டை இளகம் 15
சேராங்கொட்டை 156,174,212,279,334
சேராங்கொட்டை இலேகியம் 206
சேராங்கொட்டைக் குழித்தைலம் 203
சேராங் கொட்டை நெய் 322
சொட்டு நீர் 258
சொட்டு மூத்திரம் 302
சொட்டுநீர் 268
சொர்ணவங்கச் செந்தூரம் 239
சொர்ணாப்பிரகச் செந்தூரம் 118
சொறி 109,192,302
சொறிகிரந்தி 190,177
சோகி 289
சோகிக் கீரை 342
சோகை 251,274,328
சோணிதவாதம் 297
சோபம் 132
சோபனுப்பு 73
சோபை 83,153,181,269,321
சோபைப் பெருவயிறு 316
சோம்பு 37,42,175,219,265,320
சோம்புக் குடிநீர் 58,181
சோம்புச் சூரணம் 203
சோற்றுக் கற்றாழை 156,279
சோற்றுக் கற்றாழைச் சாறு 296
சோற்றுப்பு 55,59,156,282
சோற்றுப்புச் செந்தூரம் 49
சௌபாக்கிய சுண்டி 75
தக்காளி 303
தக்கோலம் 72,104,232,296,338
தங்க உரம் 184
தங்கச் செந்தூரம் 119,322,323
தங்கப் பற்பம் 224
தங்கம் 119,174,334
தங்கம் அரப்பொடி 237
தங்கரேக்கு 48,50,239
தசையடைப்பு 193
தடிப்புப் புண்கள் 189

தண்ணீர் விட்டான் கிழங்கு
59,83,104,115,230,250,298
தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு,
230,245,278,291
தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம் 203
தண்ணீர் விட்டான் நெய் 175
தந்திப் பிரமியம் 213
தந்திமேகம் 80,163,203,222
தமரகவாயு 174
தர்ப்பூசணி வித்து 342
தரைக்கொடி 272
தலைச்சுருளி 248
தலைச்சுருளி வேர்ப்பட்டை 220
தலைசுற்றல் 299
தலைநோய் 334,339
தலையிடிப்பு 326
தலைவலி 270
தழுதாழை 156
தழுதாழை இலைச் சாறு 200
தனியா 75,232
தாகம் 102,292
தாது இழப்பு 231
தாதுக்குறைவு 111
தாது நட்டம் 298
தாதுவலிமை 228
தாதுவிருத்தி 227
தாபச்சுரம் 291
தாம்பிர அரப்பொடி 237
தாம்பிரச் செந்தூரம் 50,329
தாம்பிரப் பற்பம் 46,176
தாம்பிரப்பொடி 69
தாமரை 156
தாமரைக் கிழங்கு 249
தாமரைக் கிழங்குப் பொடி 271
தாமரைக்கிழங்கு 250
தாமரைத்தாது 298
தாமரைப் பூச்சாறு 108,292
தாமரைப்பூமொட்டு 104
தாமரை மகரந்தம் 291
தாமரையிலைச்சாறு 181
தாமரை வளையச் சாறு 210,298
தாமரைவளையம் 123,208,291,296
தாமிரச் செந்தூரம் 15
தாமிரப் பற்பம் 73,339
தாய்ப்பால் 243,291
தாழம் விழுதுச் சாறு 153
தாழை 156
தாழை விழுது 251
தாழை விழுதுச்சாறு 294,295
தாழை விழுது நீர் 298
தாழையுப்பு 53,156
தாளகக் கருப்பு 19
தாளகச் செந்தூரம் 280
தாளகப்பற்பம் 280
தாளகம் 23,44,215,302,332
தாளிக்கீரை 303,342
தாளிசச் சூரணம் 156
தாளிசப்பத்திரி 73,123,219,232,250,296,300
தாளிசம் 57,294
தாளிசாதி சூரணம் 19,56,179,294
தாளிசாதி வடகம் 17,19
தான்றி 156
தான்றிக்காய் 36,41,109,232,234,265,294,321
தான்றிக்காய்த் தோல் 201,131
தான்றித்தோல் 217
தான்றித் தோல் சூரணம் 225
திப்பிலி 23,36, 37,104,188,273,291,324
திப்பிலிக்கட்டை 294
திப்பிலி மூலம்
22,55,72,151,249,250,289,297,335
திப்பிலியாதிச் சூரணம் 336
திமிர் 197
திமிர்வாதம் 215,297,333
திமிர்வாயு 274
திராட்சாதி குடிநீர் 20
திராட்சாதி சூரணம் 56
திராட்சை 56,298
திராட்சைப்பழம் 222,271
திரிகடுகு 12,46,123,175, 192,273,279,324
திரிகடுகு சூரணம் 16,51
திரிகடுகுத்தூள் 50,328
திரிகண்ட முனிவர் 27
திரிசாதம் 128,246
திரிதோடக் குன்மம் 27
திரிபலா 132,192,279
திரிபலாதிக் குடிநீர் 132
திரிபலை 12,46,123,249,290
திரிலோகச் செந்தூரம் 119

திருகுக் கள்ளி வேர்ப்பட்டை 43,77
திருகுக்கள்ளிப் பால் 80
திருகுக்கள்ளி 340
திருநீற்றுப் பச்சை 147
திருமூலர் 28
திருமூலர் நாடி 10
திருவாத்தி சமூலச்சாறு 85,193,279
தில்லைச் செடி 112
தினையரிசி 133
தீபாக்கினி சூரணம் 55,59
துடரி 129
துத்தநாகம் 67
துத்தம் 221
துத்தி 126,271
துத்தி விதை 208,228
தும்பை 80,157,302
தும்பை இலை 199,330
தும்மட்டி 114
தும்மட்டிக்காய் 337
தும்மல் 292
துருசு 17,51,215,268,329
துருசு செந்தூரம் 51,329
துவரை இலைச்சாறு 84,183
துளசி 62,121,192,246
துளசி இலைச்சாறு 201
துளசிச் சாறு, 36,45,80
துளசியிலை 211
துளசி விதை 187
துன்மாங்கிச அடைப்பு 284
துன்மாங்கிசம் 290,336
தூது பிரமியம் 170
தூதுவளம்பூ 251
தூதுவளை 301
தூதுவளை இலேகியம் 251
தூதுவளை நெய் 180
தூதுளம்பூ, 206
தூதுளம்வேர் 126
தூதுளைச் சமூலச் சாறு 122
தூதுளைச் சமூலம் 202
தூதுளைச்சாறு 210
தூரச்சூலை 8,23
தெங்கம் பாளை 71
தெங்கினுப்பு 53
தென்னங்குடுக்கைக்கரி 332
தென்னம்பாளை 124
தென்னம்பூ 251
தென்னம்பூச்சாறு 294,295
தென்னை 156,272
தேக்கிலைச்சாறு 45
தேக்குப்பூச்சாறு 45
தேக எரிவு 291
தேக வெப்பம் 155
தேகவறட்சி 251
தேங்காய் உருண்டை 70
தேங்காய்க் குழம்பு 52
தேங்காய் தனிப்பால் 229
தேங்காய்ப் பால் 52,204,209,288,340
தேங்காய்ப்பால் இளகம் 228
தேங்காய்ப்பால் நெய் 229
தேங்காய்ப் புட்டடை 197
தேத்தாங் கொட்டை 300
தேமல் 197
தேரன் 106
தேரன் மருத்துவ பாரதம் 82
தேரையர் மகா கரிசல் 155
தேவகந்தச்சாறு 295
தேவதாரம் 126,208
தேவதாரு 104
தேவதாரு இலைச்சாறு 85
தேவாரம் 1
தேற்றான் 115,200
தேற்றான் இலேகியம் 17,104
தேற்றான் இளகம் 230
தேற்றான் கொட்டை 126,175
தேற்றான் கொட்டைச் சீவல் 131,136
தேற்றான் சீவல் 134
தேற்றான் மாத்திரை 207
தேற்றான் விதை 103,208,230
தேற்றான் விதைச் சீவல் 202
தேற்றான் விரை 129
தேன் நீர் 95
தைத்திய மேகம் 96
தைலக்கால் 275
தொட்டான் சிணுங்கி 115
தொடரியிலைக் கொழுந்து 135
தொடை வாழை 177,213,249
தொண்டை நோய்கள் 339
தொந்தப் பிரமியம் 167

தொற்று நோய் 157
தோடம் 179
தோல்வறட்சி 282
நச்சுப் பெருவயிறு 315
நடுக்குவாதம் 215,297
நண்டுக்கல் 275
நண்டுக்கல் பற்பம் 15,196,284
நண்ணுநீர் 280
நத்தைச் சதை 68,338
நத்தைச்சூரி வேர் 215
நந்தி மெழுகு 21
நந்தி மை 14,54,178,322
நரசிங்க இரசாயனம் 59
நரசிம்ம இளகம் 223
நரம்பு பலவீனம் 236
நரம்புத் தளர்ச்சி 111,263
நரளைவேர் 338
நரிவிளா வேர் 338
நரிவெங்காயம் 269
நல்வேளை 340
நல்வேளைச் சமூலம் 207
நவஉப்பு மெழுகு 12,54,178,331
நவக்கிரகப் பூபதி 48,324
நவமூலம் 254
நவலோகபூபதி 13
நவாச்சார எண்ணெய் 282
நவாச்சாரக் குழம்பு 12,281,332
நவாச்சாரச் சுண்ணம் 17
நவாச்சாரப் பற்பம் 67
நவாச்சாரம் 17,36,39,42,145,276,321
நவாச்சார மெழுகு 14
நழுவைப் பெருவயிறு 311
நற்சீரகம் 56,123,204,219,281,288
நற்பாலைவேர் 338
நறுந்தாளிக் கீரை 146
நறுமாமரச் சமூலச் சாறு 85,279
நறுவிலிக் கொழுந்து 134
நன்னாரி 115,266,321
நன்னாரி மணப்பாகு 110,180
நன்னாரி வேர் 78104,206,208,272
நன்னாரி வேர்ப் பட்டை 110
நன்னாரி வேர்ப்பட்டைச் சூரணம் 15
நாகச் செந்தூரம் 50,177,329
நாகப்பற்பம் 79,182,237,278
நாகம் 79,182,278
நாகமல்லியிலைச்சாறு 82,236
நாட்டுக் கல்நார் 236
நாட்டு நவாச்சாரம் 332
நாட்டு நீர்முள்ளி விதை 228
நாட்டு வெங்காரம் 227
நாட்டெட்டிக்கனி இரசம் 279
நாடி சோதனா பிராணாயாமம் 302
நாபி 46,148,292,330
நாபிக் கிழங்கு 112
நாயுருவி 50,272
நாயுருவி இலை 201
நாயுருவி உப்பாதிக் குழம்பு 53
நாயுருவி உப்பு 53
நாரத்தங்காய் 40
நாயுருவி வேர்ப்பட்டை 230
நாயுருவிவேர் 245
நாரத்தம் பழச்சாறு 41,44
நாரத்தை 199
நாரத்தை இலேகியம் 57
நாரத்தை வேர் 301
நாரத்தையிலை 246
நாராயண மண்டூரம் 83
நாவல் 112,248,287
நாவல் மரப்பட்டை 131
நாவல்பட்டை 126,
நாவல்பட்டைச் சாறு 145
நாவல் பொடி 104
நாவற்கொட்டை 103
நாவற்கொட்டை மாத்திரை 146
நாவற்பட்டை 130,210
நாவற்பட்டைச் சாறு 82
நாவறட்சி 102
நாறு தந்தப் பிரமியம் 168
நிதம்பச் சூலை 6,15,21
நிமிளை 48,292,338
நிலக்கடம்பின்வேர் 266
நிலக்கடம்பு 272
நிலக்குமிழ் சர்க்கரை 140
நிலக்குமிழ் பட்டை 210
நிலக்குமிழ் வேர் 56
நிலக்குமிழ் வேர்ப்பட்டை 132
நிலக்குமிழியிலை 246
நிலப்பனை 157,232,302

நிலப்பனைக் கிழங்கு
59,129,201,249,289,296
நிலப்பனைக் கிழங்குச் சாறு 84,185
நிலப்பனைக்கிழங்கு 59,249,289
நிலவாகைச் சூரணம் 59
நிலவாகைப்பட்டை 212
நிலவாகை வேர் 65,252
நிலவிளாப்பட்டை 334
நிலவேம்பு 83,296,335
நிலாவாரை 36
நிலாவாரையிலை 325
நிலாவாரை விதை 187
நீச்சப் பிரமியம் 171
நீர் எரிச்சல் 15,104,177,267,282
நீர் எரிவு 281
நீர்க்கட்டு 15,156,177,189,258,321
நீர்க்கடம்பின் வேர் 265
நீர்க்கடம்பு 156,266
நீர்க்கடம்பு குடிநீர் 302
நீர்க்கடுப்பு 110,177,222,260
நீர்க்கிரிச்சரங்கள் 163,257,271,291
நீர்க்குத்து 284
நீர்க்குறி எரிச்சல் 284
நீர்ச்சிறுப்பு 124,246
நீர்ச்சுண்டி கறுஞ்சூரை 129
நீர்ச் சுண்டியிலை 134
நீர்ச்சுரப்பு 275
நீர்ச்சுருக்கு 180,234,258,260,294,295
நீர்ப்பலா 299
நீர்ப்பிரமி 266,272
நீர்ப்பீனிசம் 283
நீர்ப்புழை எரிச்சல் 266
நீர்ப்புழை வெடிப்பு 278
நீர்ப்பூலா 129,272
நீர்ப்பூலா வேர் 199
நீர்ப்பூலாக் கொழுந்து 247
நீர்ப்பெருக்கல் நோய் 263
நீர்ப்பெருக்கு 115,121
நீர்ப்பெருவயிறு 274,318
நீர்ப்பை அழலை 222
நீர்ப்பைத் தாபிதம் 263
நீர்முள்ளி 62,124,250,265,296,320
நீர்முள்ளிக் குடிநீர் 296,320,321
நீர்முள்ளிச்சாறு 193,276
நீர்முள்ளி சமூலம் 321
நீர்முள்ளி சுட்ட சாம்பல் 341
நீர்முள்ளிப் பூ 103,104
நீர்முள்ளியிலை 124,247
நீர்முள்ளி விதை 208,
நீர்முள்ளி விரை 104
நீர்மேல்நெருப்பு 4,58,247
நீர்வேட்கை 10,104,113,274
நீரடங்கல் 261
நீரடிமுத்து 84,189
நீரடைப்பு 15,189,196,258,264,324
நீரருக்கல் 223,260,268
நீரருகல் நோய் 263
நீராகாரம் 198
நீராம்பல் 282,305
நீராம்பல் பெருவயிறு 312
நீராமை 305
நீரிழிவு 8,87,163,257,291,327
நீரிழிவுக் குடிநீர் 156
நீரிழிவுச் சூரணம் 141
நீரினை அருக்கல் நோய் 257
நீரினைச் சுருக்கல் 163
நீரினைப் பெருக்கல் நோய் 257
நீரெரிச்சல் 196
நீரெரிவு 193,293
நீரேற்றம் 270
நீலோற்பலச் சாறு 117
நுணா 22,252
நுணாக் காய் கிரந்தி 180,
நுணாவிலை 234
நுணா வேர்ப்பட்டை 212
நுனிமஞ்சள் 216
நெஞ்செரிச்சல் 78
நெஞ்செரிவு 73
நெட்டியிலை 137
நெய்ச்சுட்டி 266
நெய்ச்சுட்டிவேர் 131
நெய்தல் 222
நெய்தல் கிழங்கிலை 137
நெய்தல் கிழங்கு 56,116,222,296
நெய்மண நீர் 89
நெய் முள்ளிச்சாறு 281
நெருஞ்சி 296
நெருஞ்சிக்காய் 206

நெருஞ்சிச்சாறு 230
நெருஞ்சி சமூலம் 71,273,321
நெருஞ்சி முள் 223
நெருஞ்சில் 56, 59,175,265,320
நெருஞ்சில் இலேகியம் 273
நெருஞ்சில் சமன் 126
நெருஞ்சில் சமூலச்சாறு 119
நெருஞ்சில் சாறு 57
நெருஞ்சில் வேர் 287,298
நெருஞ்சி வேர் 124,199
நெல்லி 299
நெல்லிக்காய் 39,109,244,265,321
நெல்லிக்காய் இலேகியம் 17,274
நெல்லிக்காய் இளகம் 72
நெல்லிக்காய் கந்தகம் 66,136,215
நெல்லிக்காய், 232
நெல்லிக்காய்க் கந்தகம் 203,
நெல்லிக்காய்ச் சாறு 83,139,290
நெல்லிப்பருப்பு 77,128,296
நெல்லிமுள்ளி 76,123,201,222,294,338
நெல்லிமுள்ளிக் குடிநீர் 201
நெல்லியிலைச்சாறு 278
நெல்லிவற்றல், 36,38,232,249,296,320
நெல்லிவற்றல் சூரணம் 133
நெற்பொரி 38,63,104,244,290
நெற்பொரிக்கஞ்சி 341
நெற்பொரியாதிக் குடிநீர் 63
நேர்வாளப் பருப்பு 209
நேர்வாளம் 46,324
நொச்சி 40,337
நொச்சிக் குடிநீர் 338
நொச்சிச்சாறு 46,331,337
நொச்சியிலை 18
நொச்சியிலைச்சாறு 326
நொச்சிவேர் 335
நோய்களுக்குச் சித்த பரிகாரம் 71
பக்கக் கவிசைப் பெருவயிறு 314
பக்கச்சூலை 7,8,13,17,19,155
பக்கப் பிளவை 111,120
பக்கப் பெருவயிறு 322
பக்கவாதம் 239
பகந்திரம் 263
பங்கம்பாளை 126
பச்சிலை 104,208
பச்சை எருவை 111
பச்சைக் கடலை 219
பச்சைக் கடுக்காய் 333
பச்சைச் கற்பூரச் சூரணம் 75
பச்சைக் கற்பூரம் 48,75,108,219,291
பச்சைக் கற்பூர வைப்பு 282
பச்சைக் கொடிவேலி வேர்ப்பட்டை 247,
பச்சை நெல்லுமி 287
பச்சைப் புளியம் பட்டை 212
பச்சைப்பயறு 38, 63
பச்சைப்புனுகு 300
பச்சை விடதாரி 84
பசரையிலைச் சாறு 119
பசலைக்கீரை 270,303
பசியின்மை 197
பசு மூங்கில் 117
பசுமஞ்சள் சாறு 119,123
பசுமண நீர் 90
பஞ்சகவ்விய கிருதம் 338
பஞ்ச சர்க்கரை 140
பஞ்சசூத மெழுகு 15,239
பஞ்ச தீபாக்கினி இலேகியம் 16
பஞ்ச தீபாக்கினி சூரணம் 16,179
பஞ்சபாடாணச் செந்தூரம் 16,121
பஞ்சபாடாணச் செந்தூரம் 86,192
பஞ்சபாணச் செந்தூரம் 80
பஞ்சபாணப் பற்பம் 238
பஞ்சபாண மாத்திரை 77
பஞ்சபூதச் செந்தூரம் 238
பஞ்சலவணச் சூரணம் 60,282
பஞ்சலவணப் பற்பம் 15,49
பஞ்சலவணம் 79
பஞ்சலோகக் குடிநீர் 339
பட்சிமோத்தாசனம் 302
பட்டுக்கருப்பு 21
படிக வெங்காரப் பற்பம் 293
படிகாரப்பற்பம் 15,193,277,281
படிகாரம் 77,185,293,324
படை 234
பண்ணையிலைச்சாறு 84
பத்ரகோணாசனம் 302
பதார்த்த குண விளக்கம் (தாதுவர்க்கம்) 152
பதினெண் சித்தர் அருளிய வைத்தியத்

திறவு கோல் 78
பயித்தியம் 328
பருக்கட்டி 195
பருத்தி 121,192
பருத்திக்காய்ச் சாறு 208,213
பருத்திக் கொட்டை 150,200
பருத்திக் கொட்டைப் பருப்பு 130,
பருத்திக் கொட்டைப் பால் படி 244
பருத்திச் செடி சமூலம் 289
பருத்திப்பால் 204
பருத்தியிலைச் சாறு 210,
பருத்திவிதை 204
பருத்தி விதைப்பருப்பு 78,134
பருத்தி விதைப்பால் 245
பருப்புக் கீரை 270
பல்லிப்பூண்டு 155
பல்வலி 326
பலகறைச் செந்தூரம் 323
பலகறை 68,288
பலகறைப் பற்பம் 196, 197
பலாக்கொட்டை 187
பலாவேர் 301
பவழப் பற்பம் 118,127,194,195,246,283,285
பவழம் 48,143,157,174,292,334
பவுத்திரம், 223,238
பழம் பாசிச் சாறு 245
பழுக் கவிசைப் பெருவயிறு 314
பளிங்கு நீர் 92
பற்பாடகம் 37,266
பறங்கிச் சக்கை 86,151,175,192,232,272
பறங்கிச் சக்கைத்தூள் 276
பறங்கிச் சாம்பிராணி 114
பறங்கிப் பட்டை 54,78,116,174,188,298,334
பறங்கிப் பட்டை இலேகியம் 203
பறங்கிப்பட்டை இளகம் 220
பறங்கிப்பட்டைச் சூரணம் 179,203,204
பறங்கிப்பட்டைத்தூள் 22
பறங்கிப்பட்டைப் பதங்கம் 178, 221
பறங்கிப்புண் 180,190,223
பன்றிநெய் 200
பனங்கருப்பட்டி 242
பனங்கள் 142,144,280
பனங்கற்கண்டு 42
பனங் குருத்து 265
பனை 156,274
பனைமரவேர் 157
பனைவெல்லம் 204
பனைவேர் 277
பாகற்கடுக்காய் 333
பாகிய கும்பகம் 302
பாசிப்பயறு 76,286
பாடாண மாத்திரை 46
பாண்டக் குடிநீர் 266
பாண்டு 83,109,274,321
பாண்டுப் பெருவயிறு 315
பாதரசம் 69,189
பாதிரிச் சாறு 84,119,185
பாதிரிவேர் 141,321
பாதிரி வேர்ப்பட்டை 201
பாயுறு குன்மம் 27
பார்லி 274
பார்லி அரிசிக் கஞ்சி 303
பார்லிக் கஞ்சி 341
பாரிசவாயு 74,263
பால் இலேகியம் 204
பால் கருடக்கல் 128, 234,238, 246,
பால்துத்தம் 189
பால் வல்லாதி 226
பாலமுதுக்கனி கிழங்குத்தூள் 224
பாவட்டை 274,337
பாவட்டையிலை 189
பாறையுப்பு 54,331
பிச்சிப்பூ 157,302
பிஞ்சு கடுக்காய் 232
பிடங்கு நாறி 275
பிடங்கு நாறிக் குடிநீர் 334
பிடாலவணம் 282
பிடிப்பு 235
பித்த உன்மத்தம் 84
பித்த மேகம் 115,197
பித்தக் கபப் பிரமியம் 167
பித்தக் கடின விரணம் 182
பித்தக் கல்லடைப்பு 258
பித்தச்சுரம் 325
பித்தச் சூடு 228
பித்தச் சூலை 17
பித்த நீர்க்கட்டு 285
பித்தப் பிரமியம் 91,166

பித்தப்பிரமேகம் 126
பித்த மூத்திரக் கிரிச்சரம் 261
பித்த மேக உஷ்ணம் 194
பித்தமேகப்பிரமியம் 327
பித்தவெட்டை 177,195,283
பிரசமேகம் 95
பிரண்டை 42,329
பிரண்டைக் கடுகு 66
பிரண்டைக் கொடியின் வேர் 60
பிரண்டைச் சாறு 36
பிரண்டைச் சூரணம் 78
பிரண்டையாதிச் சூரணம் 60
பிரண்டை வடகம் 17,56
பிரண்டை வற்றல் 36
பிரண்டை விதை 187
பிரப்பங் கிழங்கு 22,220,243
பிரம்மதண்டி 266
பிரமி 40,275,337
பிரமியம் 177
பிரமிய மேகம் 90
பிரமியரோக நிதானம் 164
பிரமியிலை 234,321
பிரமேகம் 87,163
பிராயம்பட்டை 334
பிராயம்பட்டைச் சாறு 229
பிராயம்பட்டைப்பால் 159
பிராயனிலை 199
பிலீக நோய் 333
பிலீகம் 323
பிலீக விருத்தி 334
பிலீகை 305
பிலீகைப் பெருவயிறு 317
பிளவை 107,178,191,327
பிளவைக் கொல்லி 116
பிறநீர்க்கோவை 305,306
பீச்சங்கன் இலைச்சாறு 233
பீதரோகிணி 224
பீர்க்கங்காய் 161
பீர்க்கம்பழவிதை 325
பீர்க்கு 255,303,342
பீனிசம் 197,297,333
புகைநீர் 75
புகையிலை 275
புகையிலை உப்பு 275
புங்கம்பூ 23,245
புங்கம்பூ சூரணம் 179
புங்கம் பால் 253
புங்கம் பாலெண்ணெய் 209
புங்கம்பட்டை 64,216,334
புங்கம் வேர் 209
புங்கம் வேர்ப்பட்டை 175
புங்கன்வேர் 234
புங்கு எண்ணெய் 159
புங்குவேர் 335
புங்கு வேர்ப்பட்டை 44
புட்பராகப் பற்பம் 283
புட்பராகம் 121
புடல் 303
புடலங்காய் 161
புடலை 342
புண்ணாக்கு கீரை 270
புண்ணுநீர் 280
புணர்ச்சி வேட்கை 231
புதினா 270
புதினாச் சாறு 36
புரசம் இலைச் சாறு 279
புரசம்பட்டை 63,202,334
புரசம்பட்டைக் குடிநீர் 63
புரசம்பிசின் தூள் 231
புரசம்பூ 193
புரசம்வேர் 63
புரசு 299
புலித்துடக்கி 299
புலித்துடக்கியிலைச் சாறு 84
புளித்தகாடி 42
புளித்த தயிரின் நீர் 44
புளித்தேப்பம் 320
புளிப்பு மாதுளஞ்சாறு 43
புளிப்பு மாதுளை இரசம் 181
புளிப்பு மாதுளைச்சாறு 45
புளிமா மூலச்சாறு 285
புளியங் கொட்டை 229
புளியங்கொட்டைத் தோல் 136,208
புளியம் விதைத்தோல் 130
புளியம்கொட்டை மேல்தோல் ,286
புளியரணைவேர் 60
புளியாரை 234
புளியாரைச் சாறு 36,43,180,294

புளியிலை 200,321
புளிவஞ்சி 43
புற்றான் சூரணம் 202
புற்று 8,9,26,121,178,233
புற இசிவு 156
புறங்கை நாறி 321
புறங்கை நாறியிலை 334
புன்னைவேர் 301
புனுகு 52,109,282
புனுகுச் சட்டம் 52,109,330
பூங்காவி 80
பூசணி 274
பூசணிக்காய் 187,208
பூசணிக்காய் நீர் 298
பூசணிக்காய் நெய் 298
பூசணிக்காய்ச் சாறு 230
பூசணிவிதைப் பருப்பு 228
பூசுமஞ்சள் 83,183
பூண்டு 41,70,242
பூண்டுத்தைலம் 23
பூநாகம் 285
பூநீறு 17,52,74,289,331
பூமிச் சர்க்கரைக் கிழங்கு 151,217
பூரக் களிம்பு 190
பூரச் செந்தூரம் 240
பூரண சந்திரோதயச் செந்தூரம் 50
பூரண சந்திரோதயம் 16,48,177
பூரப்பற்பம் 159,189,190
பூரம் 53,125,189,332
பூலா 287
பூலாக்கிழங்கு 249
பூலாவிலை 138
பூலாவேர் 103,116
பூவரசங்காய் எண்ணெய் 234
பூவரசங்காய்ச் சாறு 234
பூவரசம்பட்டை 126,175,334
பூவரசம் பட்டை எண்ணெய் 233
பூவரசம்பட்டைச்சாறு 233,296
பூவரசின் விதை 187
பூவரசின் வேர்ப்பட்டை 43
பூவரசு 127,252
பூனைக்காலி 104,250
பூனைக் காலிவித்து 232
பூனைக்காலி விதை 104,228
பெங்களூர் கத்திரிக்காய் 268
பெண்போகம் 176,260
பெருங்காஞ்சொறி 113
பெருங்காயச் சூரணம் 62
பெருங்காயத் துளசி சூரணம் 62
பெருங்காயம் 23,36,217,227,294,324
பெருங்குமிழ் மர வேர் அரைப்பு 152
பெருங்குரும்பை 217,300
பெருஞ்சீரகம் 157,206
பெருந்தாகம் 197
பெரும்பாடு 80,111,269
பெரும்பீர்க்கு 184,279
பெரும்பீளை 275,
பெரும்பூசணிக்காய் 249,251,289
பெரும்பூசணிக்காய்ச் சாறு 290,291
பெரும்பூசணி நெய் 291
பெரும்பூசணிக்காய்ச் சாறு படி 291
பெருமரப்பட்டை 217,338
பெருமரவித்துச் சூரணம் 133
பெருமர வேர்ப்பட்டை 43
பெருலவங்கப்பட்டை 210
பெருவயிறு 153,177,269,275,305
பேதானா விதை 228
பேய்க் கரும்பு 175
பேய்க்குமட்டிக் காய் 65
பேய்க் குமட்டிச் சாறு 41
பேய்ப் பீர்க்கன் விதை 187
பேய் முசுட்டையிலைச் சாறு 130
பேய்ப்புடல் 126,201
பேய்ப்புடல் விதை 187
பேயன் வாழைப்பழம் 74
பேரண்ட ஓடு 17
பேரரத்தை 62,232,337
பேராமுட்டி 37,155,287
பேராமுட்டிவேர் 56,275
பேரீச்சங்காய் 36,56,230
பேரீச்சங்காய் கிருதம் 155
பேரீச்சம் சாறு 186
பேரீச்சம் பழம் 123,249,274,289
பேரீந்து 37,104,250,290,298
பைத்தியம் 155,326
பொட்டிலுப்பு 54,61,270,331
பொடுதலை 80,121,192,252,266
பொடுதலை இலை 199

பொடுதலைக் கீரை 266
பொடுதலைக் குடிநீர் 152
பொடுதலைச் சமூலம் 248
பொடுதலைச் சாறு 22,80,209,289
பொரிக்கஞ்சி 303
பொரிகாரம் 49,108,287,328
பொரித்த பெருங்காயம் 39
பொருமல் 79,283
பொற்கொன்றைச் சாறு 280
பொற்சீந்தில் 115
பொற்றலைக் கையான் 119,192
பொற்றலைக் கையான் சாறு 144
பொன் 48,292
பொன்நிமிளை 278
பொன்முசுட்டை 126,129,216
பொன்முசுட்டை வேர் 79,131,217,335
பொன்முசுட்டையிலை 137
பொன்மெழுகு 243
பொன்னாங்காணி 242,287
பொன்னாங்காணி இலை 198
பொன்னாங்காணிக்கீரை 38
பொன்னாங்காணிச்சாறு 210,294
பொன்னாங்காணி நெய் 251
பொன்னாங்காணிவேர் 129,199,230
பொன்னாவாரம் கொழுந்து 134
பொன்னாவாரை 337
பொன்னாவாரை விதை 187,230
போஸ்தக்காய்த் தோல் 147
மகரப்பூ 73,151
மகா இலசுனப்புட்டி 336
மகா ஏலாதிக்குளிகை 291
மகா ஏலாதிச் சூரணம் 296
மகா ஏலாதித் தைலம் 299
மகா முத்ரா 302
மகா வசந்த குசுமாகரம் 48
மகா வசந்த குசுமாகர மாத்திரை 108,292
மகாபிரசாத இலேகியம் 337
மகாலிங்க மாத்திரை 137
மகாவீர மெழுகு 179
மகிழ் 299
மகிழம் பட்டை 231
மகிழம்படடைச் சூரணம் 231
மகோதரம் 83,107,278,306
மஞ்சள் 50,124,189,222,298,329
மஞ்சள் கடுக்காய்த் தோல் 201,202
மஞ்சள் கடுக்காய்த் தோல் சூரணம் 226
மஞ்சள் காந்தப் பற்பம் 130
மஞ்சள் காமாலை 281
மஞ்சிட்டி 216,298
மடல் துத்தம் 46
மண்டூரச் செந்தூரம் 83,278,322
மண்டூரம் 83,293,321
மண்டூராதி அடைக்குடிநீர் 321
மணக்கத்தை அரிசி 341
மணத்தக்காளி 234,271
மணத்தக்காளிக் கீரை 342
மணத்தக்காளி வற்றல் 272,320
மணத்தக்காளி வித்து 105
மணப்பாகு 110
மணலிக் கீரை 321
மத்தன் எண்ணெய் 159
மத்ஸ்யாசனம் 302
மதுப்பிரமேகம் 124,171
மதுமேக இலேகியம் 149
மதுமேக நோய் 104,164
மதுமேகம் 80,87,165
மதுராதிச் சூரணம் 78
மந்தம் 79,113
மந்தாக்கினி 26
மந்தாரை 156
மயக்கம் 9,102,227,295
மயில்துத்தம் 189
மயிலிறகு சாம்பல் 83
மயிற்கொன்றைவேர் 301
மரகதப் பற்பம் 154
மரமஞ்சள் 52,109,130,202,299,335,
மருக்கொழுந்துச்சாறு, 195
மருங்கை 337
மருட் கிழங்கு 297
மருத்துவ பாரதம் 104
மருதம்பட்டை 80,103,198
மருதம் பட்டைக் குடிநீர் 131
மருதம்பட்டைச்சாறு 82,122,283
மருது 116,299
மருதோன்றி கற்கம் 20
மருதோன்றி வேர் 106,326
மருளூமத்தம் விரை 128
மல்லி 73,123,250

மலக்கட்டு 113,285,333
மலச்சிக்கல் 180
மலதோடம் 113
மலபந்தம் 282
மலாக்கா சந்தனம் 246
மலை ஏலம் 268
மலைதாங்கிப் பூண்டின் சமூலம் 325
மறுபத்தியம் 14
மறுவேர் 301
மனோகர இலேகியம் 204
மனோசிலை 46,121,191,221,281,324
மஜ்ஜை மேகம் 94
மாங்கிச சிராவக மேகம் 91
மாங்கிசப் பெருவயிறு 318
மாசிக்காய் 45,149,223,294
மாசிக்காய்த் தோல் 218
மாதுளம்பழம் 83,279
மாதுளம் பிஞ்சு 201,210
மாதுளம் பூ 201
மாதுளம் பூச்சாறு 108,292
மாதுளம் வேர் 79
மாதுளை 156
மாதுளைக்குடிநீர் 201
மாதுளை மரப்பட்டை 210
மாதுளையிலைச்சாறு 210
மாந்த எண்ணெய் 13
மாந்தம் 132,180
மாப்பண்டம் 260
மாப்பெருவயிறு 314
மாம்பட்டை 146,203,334
மாம்பட்டைச்சாறு 241
மாமணி மந்திர வெற்றி மாத்திரை 334
மாமாக்க மேகம் 92
மார்பு நோய் 155,269
மார்புவலி 227
மாவிலிங்கம் பட்டை 201,202
மாவிலிங்கம் பட்டைக் குடிநீர் 276
மாவிலிங்கம் வேர் 275
மாவிலிங்க வேர்ப்பட்டை 213
மாவிலிங்கம் வேர்ப்பட்டைச்சாறு 284
மாவிலிங்கு 248,276
மாவிலைச்சாறு 81
மாவேர் 301
மான் கொம்புப் பற்பம் 198,254,285
மான்கொம்பு 104,289
மிசிரி அபின் 231
மிருதார்சிங்கி 189,248,332
மிருதார்சிங்கிச் செந்தூரம் 192
மிளகரணை 338
மிளகரணை வேர்ப்பட்டை 213
மிளகாய் விதை 187
மிளகு 36,37,109,190,217,270,294,324
மிளகு இரசம் 323
மிளகுக்குடிநீர் 323
மிளகுக் கொடி 266
மிளகுத் தைலம் 278,323
முக்குற்றக் கல்லடைப்பு 258
முக்குற்றப் பெருவயிறு 310
முசுட்டைக் கொடி 276
முசுட்டைத் தண்டு 129
முசுட்டை வேர் 124
முசுமுசுக்கை 66
முசுமுசுக்கை இலைச்சாறு 210
முசுமுசுக்கைச்சாறு 298
முசுமுசுக்கை விதை 187
முட்காவேளை 335
முட்காவேளைக் குடிநீர் 13
முட்காவேளைவேர் 12,83,217,266
முட்டைகோஸ் 303
முடக்கத்தானிலை 18,247
முடக்கற்றான் 337
முடக்கற்றான் இலை 64
முடக்கறுத்தான் 299
முடக்கறுத்தான் இலைச்சாறு 200
முடக்கறுத்தான் சாறு 3.
முடக்கு 217
முத்தக்காக 78,112,245,286,336
முத் தாது வேறுபாடு குன்மம் 27
முத்து 48,174,292,334
முத்துச்சிப்பிப் பற்பம் 19,20
முத்துச் செந்தூரம் 195
முத்துப் பருப்பு 225
முத்துப் பற்பம் 195,283,191
முத்தெருக்கஞ்செவியிலைச் சாறு 227
முத்தெருக்கன் சமூலம் 202
முந்திரிகை 250,290,298
முந்திரிப்பழம் 123,249,274,276
முப்பட்டைக் கள்ளி வேர்ப்பட்டை 36

முப்பலை 158
முப்பிணி 276
முயற் குருதி நீர் 92
முருக்கன் விதை மாத்திரை 47
முருக்கிலை 124
முருங்கை 276,342
முருங்கைக்கீரை 161
முருங்கைப் பட்டை 38,65,202
முருங்கைப்பட்டைச் சாறு 181
முருங்கைப்பிசின் 208
முருங்கைப்பிஞ்சு 161
முருங்கைப்பூ 161,206,251.
முருங்கைப்பூச் சாறு 239,243
முல்லை 287
முல்லைச்சாறு 195
முல்லை வேர் 63,77
முலாம்பழ வித்து 342
முலைப்பால் 239,240
முள் இலவு 267,287
முள்ளங்கி 187,276,342
முள்ளங்கிக் கிழங்குச்சாறு 283
முள்ளங்கிக் கீரை 342
முள்ளங்கிச் சாறு 57,191,282
முள்ளி 336
முள்ளிக் கீரை 270
முள்ளிலவு 287
முள்ளிலவுப் பட்டைப் பொடி 271
முறிச்சூலை 4
முறைக்காய்ச்சல் 324
முன்னை 38
மூக்கரைச் சாறணை 254
மூக்கிரட்டை 40,277
மூக்கிரட்டைச் சூரணம் 55,333
மூக்கிரட்டைவேர் 12,55,266,333
மூங்கில்வேர் 157
மூங்கிலரிசி 125
மூங்கிலிலை 201
மூங்கிலுப்பு 54,331
மூசாம்பரம் 227
மூட்டு நோய் 1
மூட்டுவலி 22
மூட்டு வாத சூலை 184
மூட்டு வாத நோய் 8
மூத்திர அடைப்பு 108
மூத்திர எரிச்சல் 284
மூத்திரக் கிரிச்சர நோய்கள் 280
மூத்திரக்கிரிச்சரம்
192,204,208,249,260,282,335
மூத்திரப்பாளை 290
மூத்திரவெப்பநோய் 270
மூலக்கடுப்பு 266
மூலக்குடாரத்தைலம் 22
மூலச்சூடு 229,271
மூலபந்தாசனம் 302
மூலம் 79,109,177,280,329
மூலவாய்வு 179
மெருகன் கிழங்கு 291
மெருகன் கிழங்குத் தோல் 41
மெருகுள்ளி எண்ணெய் 37
மெருகுள்ளித் தைலம் 13
மெழுகு 189
மெழுகுத் தைலம் 18
மேக அழலை 234
மேக உஷ்ண சொறி 197
மேக உஷ்ணம் 197,325
மேக ஊறல் 180,195,221,250
மேக எரிவு 195
மேக ஒழுக்கு 200,223
மேக மூத்திரக் கிரிச்சரம் 261
மேகக் கசிவு 180
மேகக் கட்டி 235
மேகக் கடுப்பு 201
மேகக் காங்கை 110,180,196,236,252
மேகக் கிரந்தி 22,190,210
மேகக் குடிநீர் 201,
மேகக்காங்கை 110,180,236,252
மேகக்கிரந்தி 22,190,190,221
மேககாங்கை 180
மேகச் சூடு 195,200,272
மேகச் சூலை 3,8,127,174,185,189,221
மேகச்சொறி 233
மேகசிந்தாமணி செந்தூரத்தில் 143,144
மேகத்தடிப்பு 177,233
மேகத் தினவு 195
மேகத்தெண்ணெய் 211
மேகத்தேமல் 186
மேகநாத எண்ணெய் 12
மேகநாத மாத்திரை 11

மேகநாதக் குளிகை 47,176
மேகநாதத் தைலம் 20,110, 175,180,296,334
மேக நிவாரணி போதினி 130,198
மேகநீர் 87
மேக நீரிழிவு 113
மேகநோய் 8,86,104,183,280
மேகப்படை 234
மேகப்பிடிப்பு 221
மேகப்பிணி 302
மேகப் பிரமியம் 199
மேகப்புண் 157,176,186
மேகம் 127,177,283,326
மேகரணம் 220,
மேகராசாங்க சூரணம் 249
மேகராஜாங்கத்தெண்ணெய் 252
மேகரோக நிதானம் 164
மேக வல்லாதி 225
மேக வறட்சி 201
மேகவாய்வு 235
மேகவாய்வுக் குளிகை 232
மேகவாயு 189,190,203
மேகவிரணக் களிம்பு 189
மேகவிரணம் 113,180,235,240
மேகவெட்டை 113,176,201
மேகவெட்டைக் கடின வாத விரணம் 182
மேகவெட்டை வாத லலித விரணம் 182
மேகவெள்ளை 180,189,200,220,295
மேகாதிக் குழித்தைலம் 212
மேகாதிக் குளிகை 136
மேகாதிச் சூரணம் 203
மேகாதி மாத்திரை 208
மேகாதி வடகம் 130
மேல் கவிசைப் பெருவயிறு 313
மேலெறிவு 254
மேனியிலைச்சாறு 243
மைசாட்சி 225,227
மைசாட்சி குங்கிலியம் 297
மைசாட்சி வில்லை 227
மைலாலக்கடி 227
மோடி 44
யவச்சாரம் 62
யானைக் கொழுப்பு மணநீர் 91
யானைத் திப்பிலி 44,79,217,230,297,334,335
யானை நெருஞ்சில் 246
யானைப்பல் 334
யூகி சிந்தாமணி 800 164
யூகி முனிவர் 1,28,89
யூகி வைத்திய சிந்தாமணி - 800
1,26,262,307
யோகராச குக்குறு 297
யோகாசனம் 26
யோனிச்சூலை 298
யோனிப்புற்று 249,283
ரூபி மஸ்தகி 231
லிங்கப் புற்று 250
வங்கச் செந்தூரம் 82,323
வங்கப் பற்பம் 224
வங்கப் பொடி 82,213
வங்கம் 48,292
வங்கரசப் பற்பம் 234
வசந்த குசுமாகர மாத்திரை 291
வசந்த மல்லிகை 156
வசம்பு 23,35,36,211,217
வசம்பு சுட்ட சாம்பல் 297
வசம்புச் சாம்பல் 44
வசாமேகநீர் 93
வசுவாசி 127,137
வட்டத் திருப்பி 55,216
வட்டத் துத்தி 139
வட்டத்துத்தி வேர் 140
வட்டத் துத்தி வேர்ப்பட்டை 199
வயிற்றுநோய் 324
வயிற்றுப் பொருமல் 268
வயிற்றுவலி 284,285,333
வரகரிசி 129
வரகரிசி மாவு 235
வரனைத் தைலம் 325
வரிக்குமட்டி 252
வல்லத்துச் சிட்டம் 84
வல்லாதகி இளகம் 223
வல்லாதகி நெய் 209
வல்லாதி இலேகியம் 203
வல்லாரை 234,266
வல்லாரை நெய் 252
வல்லாரைக் கீரை 175
வல்லாரைச் சாறு 219
வல்லை 278,324
வல்லைப் பெருவயிறு 315

வலம்புரிக் காய் 253
வலி குன்மக் குடிநீர் 64
வலி குன்மக் குழம்பு 64
வலி குன்மம் 26,46
வலிப் பிரமியம் 171
வழுதுணை 321
வழுதுணைப்பழ மருந்து 67
வழுவைப் பெருவயிறு 311
வள்ளிச் சர்க்கரை 140
வளி அழல் குன்மம் 27
வளி அழல் சூலை 10
வளி ஐயக் குன்மம் 27
வளி ஐயப் பெருவயிறு 309
வளி குன்மம் 27
வளிசன்னி 157
வளிநோய் 86,224
வளிப்பெருக்கு 113
வளிப் பெருவயிறு 308
வளையலுப்பு 42,217,282,327
வறட்சுண்டி 335
வறட்பூலா 299
வன்னிச் சாறு 294
வன்னிப்பட்டை 38
வன்னியிலை 150
வன்னியிலைச் சாறு 110,280
வன்னிவேர்ப்பட்டை 221
வாகை 116
வாகை விதை 208
வாட்கோரை சமூலச்சாறு 85,279
வாத உஷ்ணம் 325
வாத மேக உஷ்ணம் 194
வாதக் கல்லடைப்பு 258
வாதக் குன்மம் 82
வாதகேசரித் தைலம் 18
வாதநாசத் தைலம் 13,20,58
வாத நாராயண இலைச் சாறு 58
வாதநீர்க்கட்டு 285
வாதப் பித்தப் பிரமியம் 167
வாதப்பிரமேகம் 126,166
வாதம் 337
வாதமடக்கியிலை 18
வாத மூத்திரக் கிரிச்சரம் 260
வாதராக்கத எண்ணெய் 37
வாதுமைப்பருப்பு 231,228
வாந்தி 75,180,270,320
வாந்தி (சத்தி) குன்மம் 27,85
வாய் குமட்டல் 104,320
வாய்நீர் ஊறல் 197
வாய்விடங்கம் 12,37,44,123,192,279,294,335
வாயு குன்மச் சூரணம் 61
வாயு குன்மம் 26,28,37,47,131
வால்மிளகு 47,109,206,222,267,273,330,
வால்மிளகுத்தூள் 269
வாலுளுவை 54,232
வாலுளுவை அரிசி 75,249,253
வாலை இரசம் 232
வாழை உப்பு 53
வாழைக் கிழங்கின்சாறு 82,230
வாழைக் கிழங்கு 51,244,289
வாழைக்கனி 183
வாழைக்கிழங்கு நீர் 299
வாழைச் சருகு 62,277
வாழைப்பழச் செயநீர் 74
வாழைப்பூ 298,
வாழைப்பூ இதழ் 203
வாழைப் பூச்சாறு 244
வாளப்பருப்பு 229
வாளம் 45,113,253,330
வான்மெழுகு 15,55,332
விக்கல் 75,102,156,197,336
விட்ணுசக்கர மாத்திரை 13,19
விடசுரம் 326
விடத்தலை 129
விடத்தேரின் கொழுந்து 134,243
விடத்தேரையிலை 135
விடத்தேரையிலைச் சூரணம் 138
விடபாகம் 330
விடமுட்டித் தைலம் 18
விந்து ஒழுக்கு 231
விந்து நட்டம் 177,284,389
விந்து நீர்த்திருத்தல் 231
விந்து வெளிப்பாடு 231
விப்புருதி 176
விப்புருதி எண்ணெய் 253
விப்புருதிப் புண் 253
வியர்வை 115
விரணப் பிரமியம் 172
விரணம் 180

விரலிமஞ்சள் 201
விராஞ்சிப் பட்டை 125
விரால்மீன் 275
விரால் மீன் தலைக் கல் 289
விரால் மீன் தலைக்கல் பற்பம் 22
விராலி 287
விரைவாதம் 327
வில் பெருவயிறு 311
வில்வக் கட்டை 38
வில்வம் 38,156,234,300
வில்வவேர் 43,129,216,244,265
வில்வவேர்க் குடிநீர் 77
வில்வவேர்ப்பட்டை 131
வில்வாதி இலேகியம் 16,104
வில்வாதி இளகம் 70
வில்வாதிக் குடிநீர் 131
விலாமிச்சம் வேர் 56,78,131,175,202,208,266,289
விலாமிச்சம் வேர்க் குடிநீர் 108,292
விலாமிச்சு 104
விலாமிச்சு வேர் 37,125
விழலரிசி 337
விழற்வில் வேர் 131
விழுதி 337
விழுதியிலை 135,134
விழுதியிலைச் சாறு 184
விளா 116
விளா வேர் 116
விளாம்பிசின் 103,208
விளாமரப் பட்டைச்சாறு 181
விளாவேர் 103,126,299,340
விஷ்ணுகாந்தி 244
விஷ்ணுகாந்தி சமூலம் 242
விஷப்பாண்டு 294
வீக்கம் 192,270
வீர' களிம்பு 190
வீரக் குழம்பு 191,240
வீரம் 46,120,189,278,331
வீரமெழுகு 74
வீரரசப்பதங்கம் 235
வீரரணச் சிங்கிக்கயிறு 191
வீரிய விருத்தி 194
வீரேசனப்பூபதி மாத்திரை 47
வீழி 83,279
வீழி சமூலம் 202
வெகு மூத்திரம் 120,143,155
வெங்காயச் சாறு 58,144,299
வெங்காயம் 201,277
வெங்காரச் சுண்ணம் 15
வெங்காரப்பற்பம் 270,282
வெங்காரம் 17,42,46,120,181,275,324,333
வெங்கார மாத்திரை 47,324
வெட்டிவேர் 37,104,114,175,266,299,
வெட்டிவேர்க் கியாழம் 108
வெட்டிவேர்க் குடிநீர் 108,292
வெட்டை 8,79,115,163,231,266,333
வெட்டை நோய் 224
வெட்டைச் சூடு 227,229
வெட்டையூறல் 195
வெட்பாலை 299
வெட்பாலை இலை 211
வெட்பாலை எண்ணெய் 211
வெட்பாலைப் பட்டை 126
வெட்பாலையரிசி 215,250,290,337,340
வெட்பூலா 287
வெடி அன்னபேதிச் செந்தூரம் 22,283
வெடி சூலை 226
வெடியுப்பு 17,39,74,78,183,217,273,322
வெடியுப்புச் சுண்ணம் 15,77,275,282
வெடியுப்புத் திராவகம் 75,236,321,341
வெண்கடுகிலை ரசம் 195
வெண்கடுகு 217,337
வெண் குன்றிப் பருப்பு 130
வெண்குன்றிவேர் 55,333
வெண்சாலி நெற்கதிர்பசுங்காய்ச்சாறு 278
வெண்டை 303
வெண்டைக் காய் 161,277
வெண்டைப் பிஞ்சு 342
வெண்ணாபி 53
வெண்ணாவல் 141
வெண்ணீர் 94
வெண்ணொச்சி மோர் தெளிவு 63
வெண்ணொச்சிப்பட்டை 202
வெண்ணொச்சி இலை 63
வெண்ணொச்சியிலை 205
வெண்பூசணி 255
வெண்பூசணி இலேகியம் 17,174,179,294
வெண்பூசணிக் காய்ச் சாறு 294,295

வெண்பூசணி கிருதம் 295
வெண்பூசணி நெய் 180
வெண்மிளகு 44,266
வெந்தயக் கீரை 303
வெந்தயச் சூரணம் 227
வெந்தயம் 53,131,205,269,330
வெப்புப்பாவை 305
வெப்புப்பாவைப் பெருவயிறு 312
வெள்வங்கச் சுண்ணம் 184
வெள்வங்கச் செந்தூரம் 184
வெள்வங்கப் பற்பம் 138,176,279
வெள்வங்கம் 138,184,212,341
வெள்வேல் 127,299
வெள்வேலாம் பிசின் 130,136
வெள்ளரி 184,277
வெள்ளரிக்காய் 280
வெள்ளரிப்பிஞ்சுச்சாறு 222,289
வெள்ளரிவித்து 266,272,273,320,341,342
வெள்ளரி விதைப்பால், 222
வெள்ளரிவிதைப் பருப்பு 228
வெள்ளரி விதை 268
வெள்ளல்லிச்சமூலச் சாறு 278
வெள்ளறுகு 86,121,175,266
வெள்ளறுகுச் சமூலம் 220
வெள்ளறுகுச்சாறு 296,334
வெள்ளறுகை 247
வெள்ளாட்டு நீர் 285
வெள்ளாட்டுச் சிறுநீர் 40
வெள்ளாட்டுப் பால் 40,241
வெள்ளி 174
வெள்ளி அரப்பொடி 238
வெள்ளி உரம் 185
வெள்ளிச் செந்தூரம் 51,108,185,322,323
வெள்ளிப் பற்பம் 105,185,291,322
வெள்ளிப் பொடி 119
வெள்ளியரப்பொடி 237
வெள்ளிலோத்திரப்பட்டை 44
வெள்ளிலோத்திரம் 126,202
வெள்ளீயப் பற்பம் 324
வெள்ளுள்ளி 39,130,336
வெள்ளுள்ளிச் சாறு 71,331
வெள்ளெருக்கஞ்சாறு 284
வெள்ளெருக்கன் சமூலச்சாறு 193
வெள்ளை 8,79,103,163,257,329
வெள்ளை அப்பிரகம் 143
வெள்ளை எண்ணெய் 13
வெள்ளை ஒழுக்கு 203
வெள்ளை போளம் 300
வெள்ளை மிளகு 202
வெள்ளை மெழுகு 110
வெள்ளை வீழ்தல் 230
வெள்ளை வெங்காயச் சாறு 109,120
வெள்ளைக் காக்கரட்டான் 147
வெள்ளைக் காட்டாமணக்குப் பால் 191
வெள்ளைக் காலி பிளவர் 303
வெள்ளைக் குங்கிலியத் தூள் 203
வெள்ளைக் குங்கிலியம்
78,123,187,242,276,295
வெள்ளைக் குன்றிமணி பருப்பு 136
வெள்ளைச் சத்திச் சாறணைவேர் 330
வெள்ளைச் சந்தனம் 104
வெள்ளைச் சாட்டரணை 232,239
வெள்ளைச் சாறணை 40
வெள்ளைச் சாறணைச் சமூலம் 202
வெள்ளைச் சாறணை வேர்ப்பட்டை 213
வெள்ளைச் சாறுவேளை 122
வெள்ளைச் சாறுவேளைச் சமூலச்சாறு 283
வெள்ளைப் பாடாணப் பற்பம் 45
வெள்ளைப் பாடாணம்
46,54,111,236,247,332
வெள்ளைப்பூண்டு 38,62,190,203,211,247
வெள்ளைப்பூண்டுச் சாறு 41,203,325
வெள்ளோக்காளம் 79
வெற்பேந்தி எண்ணெய் 325
வெற்றிலை 86,121,189
வெற்றிலைக் காம்பு 54
வெற்றிலைச்சாறு 23,325
வேங்கை 126
வேங்கை சமூலச் சாறு 193
வேங்கை மரவேர் 157
வேங்கைவேர் 301
வேங்கை வேர்ப்பட்டைச்சாறு 278
வேப்பம்பட்டை 126,150,201,216,321
வேப்பம்பிசின் 208
வேப்பன் பிசின் சூரணம் 132
வேப்பிலை 51,329
வேப்பீர்க்கு 298
வேம்பின் சாறு 82,181

வேம்பின்பட்டை 334
வேம்பு 126,300
வேல் 116
வேலம் பட்டை 38,253
வேலம்பிசின் 127
வேலம் பூவாதிச் சூரணம் 132
வேலிப்பருத்தி 64,192, 121,279,340
வேலிப்பருத்திச் சாறு 80
வேலிப்பருத்தி வேர் 338
வேளைக் கீரை 40
வேளை மாத்திரை 207
வேளைவேர் 212
வைத்திய சிந்தாமணி - 800 146,260
ஜெய வீரரண சிங்கிக் கயிறு 120

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

தமிழ் மொழியின் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு 1946ஆம் ஆண்டு, அந்நாள் கல்வியமைச்சர் திரு தி.சு. அவினாசிலிங்கம் அவர்களால் தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. தொடக்க காலம் முதல் 1982 ஆம் ஆண்டு வரை அவர் அதன் தலைவராக இருந்து சிறப்பாகத் தொண்டாற்றி வந்தார். பின்னர் 1982 ஆம் ஆண்டு முன்னாள் மாநில, மைய அமைச்சரான திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்றுச் சீரிய முறையில் தமிழ் வளர்ச்சிக்கு வழிகாட்டி வந்தார். அவரைத் தொடர்ந்து 1990-ஆம் ஆண்டு முதல் முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் சீரிய பணியாற்றி வருகிறார்.

1947ஆம் ஆண்டு முதல் திரு ம.ப. பெரியசாமித் தூரன் அவர்களைத் தலைமைப் பதிப்பு ஆசிரியராகக் கொண்டு, 'கலைக்களஞ்சியம்' 10 தொகுதிகள் வெளியிடப்பட்டன. இப்பணி 1968-இல் நிறைவு பெற்றது. இதுவே இந்திய மொழிக்ளில் முதல் முயற்சியாகத் திகழ்கிறது. பின்னர், அவரையே ஆசிரியராகக் கொண்டு 'குழந்தைகள் கலைக்களஞ்சியம்' 10 தொகுதிகள் 1968 முதல் தொடங்கி 1976 ஆம் ஆண்டிற்குள் வெளியிடப்பட்டன. இதன் இரண்டாவது திருத்திய பதிப்பும் (10 தொகுதிகள்) 1988 இல் முடிவுற்றது. அதன் பின்னர், தமிழ் வளர்ச்சிக் கழகம் அறிவியல் தொடர்பான நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டு, நான்கு நூல்களை வெளியிட்டது.

தமிழ் வளர்ச்சிக் கழகம் மருத்துவ அறிவியலைக் கருத்தில் கொண்டு, 'மருத்துவக் களஞ்சியம்' என்னும் தலைப்பில் 12 தொகுதிகளை வெளியிடும் பணியை மேற்கொண்டது. இதில் 'உடல் நலம்' என்னும் தலைப்பில் முதல் தொகுதியும், 'தாய் சேய் நலம்' எனும் தலைப்பில் இரண்டாவது தொகுதியும், 'புலனுறுப்புகள்' எனும் தலைப்பில் இரு நூல்களாக மூன்றாவது நான்காவது தொகுதிகளும், 'நரம்பு மண்டலம், மனநோய், நாளமில் சுரப்பிகள் ' ஆகியவை அடங்கிய ஐந்தாவது தொகுதியும், 'செரிமான மண்டலமும் மூச்சு மண்டலமும்' இடம்பெற்ற ஆறாவது தொகுதியும், 'தொற்று நோய்களும் பால்வினை நோய்களும்' எனும் தலைப்பில் ஏழாவது தொகுதியும், 'புற்று நோய், முதியோர் நலம்' அடங்கிய எட்டாவது தொகுதியும், 'இதய இரத்தநாள மண்டலம்' எனும் தலைப்பிலான ஒன்பதாம் தொகுதியும். 'சிறுநீரகம் மற்றும் இனவள உறுப்பு மண்டலம்' என்னும் பொருள் பற்றிய பத்தாம் தொகுதியும், 'எலும்பியல், மாற்றுறுப்பியல், ஒட்டறுவை மருத்துவம்' ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்ட பதினொன்றாம் தொகுதியும், 'மரபியல், விபத்து மருத்துவம், நோய் எதிர்ப்பாற்றல் மண்டலத்தின் அடிப்படைகள்' எனும் பகுதிகள் அடங்கிய பனிரண்டாம் தொகுதியும், 'மருத்துவக் களஞ்சியம்-கலைச்சொல் அடைவு' என்னும் நூலும் வெளியிடப்பட்டு இப்பணி நிறைவு பெற்றது.

அலோபதி மருத்துவமுறை நூல் வெளியீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து, தமிழகம் தரணிக்கு அளித்த மருத்துவ முறையாம் சித்த மருத்துவம் பற்றிய நூல் வெளியீட்டுத் திட்டத்தில் ஏழு தொகுதிகளை வெளியிடும் பணியைக் கழகம் மேற்கொண்டுள்ளது. இதில் 'சித்த மருத்துவம் தொகுதி-1: வரலாறு', 'சித்த மருத்துவம் தொகுதி-3: சிறப்பியல்', 'சித்த மருத்துவம் தொகுதி-5: பித்தம் தொடர்பான நோய்கள்', 'சித்த மருத்துவம் தொகுதி-6: கபம் தொடர்பான நோய்கள்','சித்த மருத்துவம் தொகுதி-4: வாதம் தொடர்பான நோய்கள், பகுதி-1' என்னும் தொகுதிகள் ஏற்கனவே வெளியிடப்பட்டன. இப்போது 'சித்த மருத்துவம் தொகுதி-4: வாதம் தொடர்பான நோய்கள், பகுதி-2' எனும் நூல் வெளிவந்துள்ளது. ஏனைய தொகுதிகளுக்கான தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.